உ

அம்பிகைதுணை.

சோதிட நிபுணராகிய

கீரனூர்

நடராசரால் இயற்றப்பெற்ற

சாதகாலங்காரம்

மூலமும் விசேட உரையும்.

இஃது

யாழ்ப்பாணம்

தமிழ்ப்பண்டிதரும், சோதிட நிபுணருமாகிய

ஸ்ரீலஸ்ரீ

அம்பலவாணபிள்ளை அவர்களால்

உரை எழுதப்பெற்று,

சென்னை

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

புத்தகம் ஒன்றின்] 1930. [விலை ரூபா 2

All Rights-reserved.

Tamil
6934

ப.34242
1983

புஸ்தக சாலை,
229. பேயர் வீதி,
ரெங்கோன்.

உ

முகவுரை.

உலகத்துள் தோன்றி யழியும் எல்லாவகை உயிர்வருக்கங்களிலும், சிறப்புற்றிலங்கும் மானிடவருக்கத்தார்; தங்கள் வாழ்நாளில் விதிவிலக்குகளையுணர்ந்து விலக்குவனவற்றை விலக்கி ஒழுகவேண்டிய விதிமுறைமையே ஒழுகி ஆன்மா உய்வுபெறும்பொருட்டு இறைவன் கருணையால் அருளப்பெற்றதாகக் கருதப்படும் வேதத்திற்கு சோதிடசாஸ்திரமே கண்ணென நினைக்கப்பெற்று வருகிறது.

இச்சோதிடத்தைப் பல காலங்களில் பல அறிஞர்கள் பல நூல்களாகச் செய்துள்ளார்கள். அவைகளிற் சாதக அலங்காரமுமொன்றும். இச்சாதக அலங்காரத்தைக் கீரனூர். நடராஜரேன்பவர் இற்றைக்கு சுமார் இருநூற்றெழுபது வருடத்திற்குமுன் வடமொழியினின்றும், தமிழில் மொழிபெயர்த்து விருத்தப்பாவாக்கினார், இச்செய்யுள் நடையுள்ள **சாதக அலங்காரமே** உரையில்லாது வெகுகாலத்திற்குமுன் அச்சில் வழங்கிவந்தது. செய்யுளாராய்ச்சி குறைந்த தற்காலத்தில்செய்யுளுருவாயிருப்பது பலருக்கும் பயனளிக்காதெனவறிந்து இதற்குமுன் ஒருவிதப் போக்கான உரை எழுதியுள்ளார். அவ்வுரையினால் சோதிட நுட்பமறிந்த சிலரே பயனடைவாரன்றி ஏனையோர் பயனடையாரெனக் கருதிய யாழ்ப்பாணம் - தமிழ்ப்பண்டிதரும்-சோதிட நிபுணருமாகிய ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண பிள்ளை யவர்கள் சகல பொருள்களையும் சுலபமாக அறியும்வண்ணம் பொருத்தமான அருத்தங்களை திருத்தமாக விளக்கியும், நுட்பா நுட்பங்களனைத்தையும் விரித்தும், இதுவரை ஒருவரும் எழுதாதவிதமாக சிறந்த உரையொன்று எழுதியதை சென்னை பி. நா. சிதம்பரமுதலியார் பிரதர்ஸ், வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்தாரால் உலகோபகாரமாக வெளியிடப்பெற்றிருக்கிறது. இவ்வுரையானது முந்தின உரைபோலல்லாது விரிவும் விளக்கமும்பெற்று சிறந்து இலங்குகிறதாகையால்ஜோதிட நிபுணர்களன்றி சகலருக்கும் எளிதில் உபயோகப்படுமென்பதில் சிறிதும் ஐயமில்லை, ஆகையால் சோதிடர்களும் மற்றோர்களும் இவ்வுரை நூலையேற்று பயனெய்துமாறு வேண்டுகிறேன்.

கு. ஜோ. கொண்டய்யங்கார்.

இராமநாதபுரம் பஞ்சாங்க கெணித ஜோதிடம்

அயக்காந்த திராவகம்.

மித்திரர்களே! இந்த அபூர்வ மருந்தானது அநேக கொடிய வியாதிகளை ஆச்சரியமாய் கண்டிக்கக்கூடியது. இதை அநேக ஆயிரக்கணக்கான ஜனங்கள் உபயோகித்துச் சந்தோஷிக்கின்றனர். வியாதியினாலாவது கெட்ட சகவாசத்தினாலாவது இளைத்துப்போயிருக்கும் தேகத்தைப் புஷ்டியாக்கி பலவிர்த்திதருவதில் இதுநிகரற்ற மருந்தாகும். ஆங்கிலமுறைப்படி தயாரிக்கப்பட்ட அருமையான மருந்து. இதை உட்கொண்ட இரண்டேவேளையில் ஆச்சரியமான சுகத்தையடைவார்கள். இத்திராவகத்தால் தீரும் வியாதிகளின் முக்கியமான சிலவற்றை இங்கே குறிப்பிடுகிறோம்.

நரைத்தமயிரைக் கறுப்பாக்கும் உஷ்ணத்தினாலாவது புழுவெட்டினாலாவது மயிர் உதிர்வதை நிறுத்தும் நீர்வியாதிகள் தீரும் கண்ணெரிச்சல் கைகால்காந்தல் இவைதீரும் முகவசீகரத்தை உண்டாக்கும் தேக அசதியையோட்டும் ஜீரணசக்தியையும் நல்ல பசியையும் உண்டாக்கும் மனதை அதிகஉற்சாகப்படுத்தும் நரம்புகளுக்கு அதிகவலுவைத்தரும் தேகத்தில் நல்ல ரத்தத்தைச் சுரப்பிக்கும் க்ஷயரோகத்தைத்தீர்க்கும் வாத பித்த சிலேத்துமத்தாலுண்டாகும் ரோகங்களை நிவர்த்திக்கும் சத்ததாதுகளுக்கும் நல்ல பலத்தைத் தரும் மூலச்சூடு மூலவாய்வு மலச்சிக்கல் இவைகள் தீரும்.

இந்தச் சஞ்சீவியை நல்லபோஜனத்துடன் 20-நாள் சாப்பிட்டால் இணையில்லாத ஆனந்தத்தைத்தரும். இழந்துபோன தேகதிடத்தைப் பழையபடி யடைவதற்கு இதைவிட வேறு மருந்தே கிடையாது 40-நாள்மருந்து உட்கொள்ளும்பக்ஷத்தில் வியாதி என்பதே அம்மனிதனின் நிழலைக்கூட அணுகாது தேகம் வஜ்ஜிரமேயாகும் இதற்கு யாதொரு பத்தியமுங் கிடையாது.

இந்த திராவகத்தை உட்கொள்ளவேண்டிய முறையும் இதைப்பற்றிய விவரங்கள் பார்சலோடு வைத்துவரும்.

அரைமண்டலம் 20-நாளைய மருந்தின் விலை ரூ. 1-4-0
டஜன் 1-க்கு ரூபா. 12-0-0
ஒருமண்டலம் 40-நாளைய மருந்தின் விலை ரூ. 2-0-0
டஜன் 1-க்கு ரூபா. 21-0-0.

பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்,
பிரம்பூர்பாரெக்ஸ் போஸ்டு, மதராஸ்.

உ

கடவுள் துணை.

சாதகாலங்காரம்

மூலமும் விசேட உரையும்.

பொதுப் பாயிரம்.

விநாயகர் துதி.

நீருலாவும் புவியினரர் சனனகாலையினில்
நின்றநவக் கிரகத்தா னிகழ்த்துபலன் புகலும்
ஏருலவும் வடமொழியைச் செந்தமிழ்ச்சா தகநூ
லெனத்தமியே னுரைசெய்ய வெழில்வேத முனிவன்
பாருலகிற் குருகுலபா ரதக்கதையை வழுத்தப்
பயிலும்வட கிரிமிசையிற் பரிந்துமருப் பதனல்
சீருலவ வரைந்தருளுந் தெய்வதவா ரணத்தின்
செழுங்கமலத் தாளிணையைச் சிரந்தனில்வைத் திடுவாம்.

இ-ள். ஆழிசூழ்ந்த உலகின்கண், (வாழுகின்ற) மனுஷியர்கள், பிறக்குங்காலம், நிலைபெற்றிருந்த, ஒன்பது கிரகங்களின் வரிசைக்கிரமத்தால், நடத்தப்படும்பலன் சொல்லுகின்ற, அழகுபொருந்திய வடமொழியிலிருந்த, சோதிடங்களைத் தமிழ்ப்பாஷையில், (மொழிபெயர்த்து) சாதகாலங்காரம், என்னும் பெயரால், கல்வியறிவில்லாத, எளிஞன் சொல்லுதற்பொருட்டு, பரந்த உலகத்தில், (குருகுலத்துப் பஞ்சபாண்டவர் துரியோதனுதிகளின்) பாரதக்கதையை, அழகிய வேதவியாசரானவர் முன்னர் சொல்ல, பின்னர் தங்கியிருக்கின்ற மேருமலையை ஏடாகவும், தன்மருப்பை எழுத்தாணியாகவும் கொண்டு சிறப்பாக எழுதியருளிய, தெய்வீக முதற்றன்மைபெற்ற, விநாயகக்கடவுளின், வளம்பொருந்திய தாமரைபோன்ற, இரண்டுபாதங்களையும், சிரசிற் சூடிக்கொள்வோம்—எ-று. 1

தத்தம் காரியங்கள் விக்கினமின்றி முடியும்பொருட்டு, விநாயகக்கடவுளை வணங்குதல் முறையாதலால், சாதகாலங்காரமாகிய இந்நூலும் நிறைவேறற்பொருட்டு, அக்கடவுளை, சிறப்பாக வணங்கினர்.

நடராஜர், சிவகாமசௌந்தரி, சத்திகணபதி, சண்முகன் இவர்கள் துதி.

வைத்தபல பூதபே தங்களெழு வகையின்
மன்னுமுயிர்க் குயிராகி மணியொளிக ளிலங்கு
பைத்தலைவா ளரவரசன் வியாக்கிரமா முனியும்
பணியநடம் புரிபரமன் பங்கயத்தா டொழுதே
கைத்திகிரி நெடுமாலோ டலர்விரிஞ்சன் மகவான்
கருணையுற வணங்குசிவ காமசௌந் தரியின்
சத்திகண பதியமர ருறுசிறைமீட் டருளுஞ்
சண்முகன்பொற் கமலமலர் தலைக்கணிவோ மன்பாய்.

இ-ள். பூமியிலுண்டாக்கப்பெற்ற பல பூத சம்பந்தத்தாலுண்டாகின்ற, எழுவகைத்தோற்றமாக நிலைத்திருக்கும் ஜீவர்களுக்குள், ஜீவனாகியும், ரத்தினங்கள் பிரகாசித்து விளங்காநின்ற படத்தலையையுடைய பதஞ்சலிமுனிவரும், வியாக்கிரபாதரும் பணிந்து நமஸ்காரஞ்செய்யும்படி, ஆனந்தத்தாண்டவஞ் செய்கின்றவருமாகிய, நடராஜப்பெருமானது திருச்சரணாரவிந்தங்களைத் தொழுதும், கையில் சக்கரத்தையுடைய விஷ்ணுவும், தாமரைமலரில் வசிக்கும் பிரம்மாவும், இந்திரனும், (இவர்கள்) கிருபையைப் பெரும்பொருட்டு வணங்குகின்ற, சிவகாமசௌந்தரியினுடைய பொன்போன்ற அரவிந்த பாதங்களையும், சத்திகணபதியின் சரோருகம்போன்ற, சரணாரவிந்தங்களையும், தேவர்களுடைய சிறையைமீட்டித் திருவருள்செய்த ஆறுமுகக்கடவுளுடைய அம்புயம்போன்ற சரணாரவிந்தங்களையும், (இந்நூல் இனிது முடிதற்பொருட்டு) மிகுந்த ஆசையோடு சிரசிற் சூடிக்கொள்வோம்—எ-று. 2

நால்வர் திருத்தொண்டர் இவர்கள் துதி.

அன்புருவாந் திருநாவுக் கரயர்வெண்ணெய் நல்லூ
ராதிசைவ குலதிலக ராகியவன் றொண்டர்
என்புருவாக் கியஞான சம்பந்த ரெழில்சே
ரேதமறு வேதமதை யின்றமிழா லுரைத்த
இன்புருவா கியவாத வூரரறு பானே
டியன்மூவர் முண்டகத்தா ளென்றலைமேற் கொண்டே
முன்புபெரி யோர்வகுத்த சாதகசா கரத்தின்
மொழிபொருளைச் சுருக்கிமுறை யேபுகலு வாமே.

இ-ள். அன்பே உருவாய்க்கொண்ட திருநாவுக்கரசென்னும், அப்பர் சுவாமிகள், திருவெண்ணெய்நல்லூரிலிருந்த ஆதிசைவ பிராமணகுல சிரேஷ்டராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள், எலும்பைப் பெண்ணுருவாக்கிய திரு

ஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள். சிறப்புப்பொருந்திய, குற்றமற்ற (இருக்கு, யஜுர், சாம, அதர்வண) வேதங்களை இனிய தமிழ் முறையாய்த் திருவாய்மலர்ந்தருளிய, சுகமே சொரூபராகிய மாணிக்கவாசக சுவாமிகள், இவர்களுடையவும், இன்னும், அறுபத்துமூன்று நாயன்மார்களின் பாத தாமரைகளை சிரசின்மேற் சூடியும், முன் சோதிடவல்லவர்களாற் சொல்லப்பட்ட சாதகமென்னும் சமுத்திரத்தில், நீதகமாசாற்றிய சோதிட அரும்பொருளைச் சுருக்கி வரிசைக்கிரமமாகக் கூறுவோம்—எ று. 3

ஆசிரிய வணக்கம்.

வாமமுதற் பலசமய வகைநூலா கமங்கள்
மன்னுசிவ சமயசாஸ் திரவுண்மை பலவும்
தாமுமிக வுணர்ந்தடியார் பரிபாக மறிந்து
தயவுடனே திருநோக்காற் சஞ்சிதங்க ளகற்றி
ஓமவிதி யுஞ்சமய பேதமுத வுரைத்தே
யோரெழுத்தி லைந்தெழுத்தி னுண்மையுமெய் யுயிர்க்குப்
பூமலிதன் சேவடியுங் காட்டியருள் வழங்கும்
புகழ்ஞானப் பிரகாசன் பொன்னடியைப் பணிவாம்.

இ-ள். வாமம், முதலிய உட்சமையம் ஆறின் நூல்களும், இருபத்தெட்டு ஆகமங்களும், சித்தாந்த வேதாந்த சாஸ்திரங்கள் ஆகிய எல்லாவற்றையும் நன்காராய்ந்தறிந்தும், தம்மிடமடைந்த சீடர்களுக்கு பரிபக்குவமறிந்து கிருபாகடாக்ஷத்தால் இரக்கத்துடன் வினைகளை அகற்றி, ஓமவிதியும் சமையவேறுபாடுகளையும், உபதேசித்தும், ஓர் எழுத்தில் பஞ்சாக்ஷரங்கள் கூடியிருக்கும் நிலைமையும், உண்மையை உணர்ந்த ஜீவர்களுக்கு, அழகுபொருந்தியதம், திருவடியையுங் காட்டித் திருவருள் செய்கின்ற கீர்த்தியையுடைய ஞானப்பிரகாசன் என்னும் திருப்பெயரினையுடைய எனது ஆசிரியனது பொன்போன்ற திருவடிகளைப் போற்றுவோம்—எ-று. 4

நூல்வரலாறு.

(இதுமுதல் நான்கு செய்யுட்கள் குளகம்.)

ஆதவன்புங் கவன்வேத வியாசன்பரா சரனு
மத்திரிரோ மசன்வசிட்ட னணிமரிசி தானும்
போதபௌ லகன்யவனன் சௌனன்மனு பிருகு
புகழ்சனக னங்கிரன் காசிபன்கார்க் கியனும்
ஓதியநா ரதன்முதலோ ரொன்பதின்மர் கூடி
யுரைசெய்த நான்கிலக்கத் தைம்பதினா யிரமாம்
நீதிபெறுஞ் சோதிடத்திற் றெரிந்தெடுத்த வுண்மை
நிறைந்தபொரு ளனைக்கருதி னிணைந்துமிகத் தானே.

இ-ள். ஆதவன் புங்கவன், வேதவியாசன் பராசரன் அத்திரி, உரோமசன், வசிஷ்டன், மரிசி, பௌலகன், யவனன், சௌனன், மனு, பிருகு, சனகன், ஆங்கிரன், காசிபன், கார்க்கியன், நாரதன், முதலிய பதினெண்மர்களும் சேர்ந்து உரைசெய்த நூலில் இலட்சத்தைம்பதினாயிரம் நீதிபெற்ற சுலோகத்தினுள் நிட்சயத்தெடுக்கப்பட்ட மெய்யே நிறைந்தபொருளைக் கருத்தில் மிகவுஞ் சிந்தனைசெய்து—எ-று. 5

தானசப தபசில லோகிதகோத் திரத்தான்
றழைவதிட்டைக் குடிமேவுஞ் சாமசமுத் திரமாம்
மானபரன் றிருமலையுங் கார்துணைவன் மேவு
மறைமுனியா ராவமுதின் வரமெனுநா ரணையன்
தேனுலவு பொழில்வெதிரி வனப்பரமா நந்தன்
றிருவருள்பெற் றிடுஞ்சிதா நந்தசிவ யோகி
ஞானபரன் றருவேதன் கீழமுத்தூர் மேவும்
நாரணைய ரிவர்மூவர் நவின்றவட மொழியும்.

இ-ள். தருமம், ஜெபதவம், ஆசாரம் முதலியன மிகுதியும், செய்து வராநின்ற லோகித கோத்திரத்தில் விரிவுபெற்ற வதிஷ்டையார் குலத்தில் பிறந்தும் சாமவேதத்தை அறக்கற்றுணர்ந்தவராயும், இருந்த திருமலையையங்காரும், அவரது சகோதராராகிய வேதவியாசரது வரப்பிரசாதமென்று புகழப்பெற்ற நாராயண ஐயங்காரும், தேன்பொருந்திய சோலைகள் சூழ்ந்த வெதிரிகாச்சிரமத்திற்குத் தலைவனது திருவருளைப்பெற்ற சிதானந்த யோகியாரளித்த பிரமகுலத்தவனான கீழமுத்தூரில் வசிக்கின்ற நாராயண ஐயர் இவர்கள் மூவரும் வடமொழியிற் சொல்லியருளிய கிரந்தங்களையும்-எ-று. 6

மொழிசுருதி யாகமசாஸ் திரங்களுஞ்சோ திடத்தின்
முறைகணித பலபாக முழுவதுங்கா வியமும்
ஒழியாத சமயசாஸ் திரதருக்க விதியு
முணருமத்தி யார்ச்சுனவே தியனுமுரைத் தருளும்
பழியாத பலபாகஞ் சாதகதீ பிகையும்
பயிலருட்ட நவநீதம் பகர்நாதர் சிகமும்
அழியாத வட்டவயிச்சு வரியவிதிப் படியோ
டலங்கார சாதகத்தி னடைவுமிக வோர்ந்தே.

இ-ள். வேதம், ஆகமம், சாஸ்திரம், இவைகளாற் சொல்லப்பட்டவைகளையும், சோதிடத்தில் வரிசைக்கிரமமாய்ச் சொல்லப்பட்ட கணிதசாஸ்திர முழுவதும் காவியங்களும் நீங்குதலில்லாத சித்தாந்த சாஸ்திரங்கள், தருக்க சாஸ்திரங்கள் முதலியவைகளையும் நன்குகற்றுணர்ந்த மத்தியார்ச்சுன வேதியன் என்போனாற் சொல்லிய பழிப்பில்லாத, பலபாகசாதக தீபி

கையும், அரிட்ட நவநீதமும், நாதர்ச்சிகமும் கெடாத எட்டுவித வைஸ்வரியங்களையும் எடுத்துக்காட்டும் விதியோடுள்ள சாதகாலங்காரத்தின் கிரமங்களையும் நன்றாயுணர்ந்தும். 7

ஓராசா ரஞ்சாரா வளிபாரா சரிய
முயருஞ்சந் தானதீபம் ப்ரகசா தகமும்
சீராருஞ் சருவார்த்தம் பெறுசிந்தா மணியுஞ்
செப்பியகே ரளஞ்சம்பு நாதமுதற் றெரிந்தே
பேராரும் பாவகங்க டொறும்பலனைப் பிரித்துப்
பிறைகதிர்செவ் வாய்புந்தி பிருகுசனி யரசன்
கூராரும் வாளரவு முதலோரைத் தொழுதே
கூறுகின்றே னவரருளைக் கொண்டுமிகத் தானே.

இ-ள். ஓர்ாசாரம், சாராவளி, பாராசாரியம், உயர்ந்த சந்தானதீபம், பிரகஜாதகம், சருவார்த்த சிந்தாமணி, மணிகண்டகேரளம், சம்புநாதம் முதலிய பலபாகங்களைத்தேர்ந்தும், பன்னிரண்டு பாவங்களின், தொகைகளால் வரும் பலன்களைப்பிரித்தும், சூரிய சந்தி (* ராதிய) நவக்கிரகங்களைத் தொழுது, அவர்களுடைய திருவருளைப்பெற்று மிக ஆசையுற்று இந்நூலைச் சொல்லுகின்றேன். 8

நூலின் பெயர்.

கொண்டுதமிழ்ச் சாதகா லங்கார மெனப்பேர்
குறித்தரிட்டஞ் சுபம்ராஜ யோகமுமங் கிசையும்
மண்டியநட் பாட்சியுச்சம் பகைநீசம் பலங்கண்
மருவுதிரேக் காணமுடன் மூலதிரி கோணம்
கண்டிடும்வே ளைக்குணங்க ளோரைமகா தெசையுங்
காலசக்கர முதலாவங் கிசையாஞ்சக் கரமும்
மிண்டியலக் கினமுதலாப் பன்னிருபா வகத்தில்
விரித்தபல னிவைதெரிந்து விளம்பலுற்ற வாறே.

இ-ள். மேற்சொல்லிய நூல்களையெல்லாம் ஆதாரமாகக்கொண்டும், சாதகாலங்காரமெனப் பெயர்பூண்டு, இவற்றுள், அரிட்டம், சுபம், இராஜயோகம், அங்கிஷம், நட்பு, ஆக்ஷி, உச்சம்-பகை, நீசம், (அதியுச்சம் அதிநீசம், மூலத்திரிகோணம்) இவற்றின் பலன்களும் திரேக்காணம், முக்குணவேளை. காலவோரை, மகாதிசை, காலசக்கரதிசை, (அங்கிசமும்) லக்கின முதல் பன்னிரண்டு ராசிகளின் விரிவாயுள்ள பலன்களையும் தெரிந்து சொல்லலுற்றேன்.

(*) ஆதிய உபக்கிரகங்களாகிய தூமாதியைவர் என்பது, (1) தூமன், (2) விதிபாதன், (3) பரிவேடம், (4) இந்திரதனுசு, (5) தூமகேது. குளிகாதி நால்வர் என்பது, (1) குளிகன், (2) எமகண்டன், (3) அர்த்தப்பிரகரன், (4) காலநேமி இவைகளுமாம்.

அவையடக்கம்.

உற்றதொகை நான்கிலக்கத் தைம்பதினா யிரமென்
றுரைத்தவட மொழிவெற்பி னொருகடுகி னளவிற்
பெற்றிடுமங் கிசநூற்றி லொருபங்கின் பொருளைப்
பேருலகிற் சாதகா லங்கார மென்றே
வெற்றிசெறி செந்தமிழை யுணர்ந்தருளும் பெரியோர்
வீற்றிருக்குஞ் சபைதனில்யான் விளம்பியபுன் மொழியிற்
குற்றமுரை யார்கருணை புரிவரறி யாத
குதலைமொழிக் குழவியின்சொற் குறித்தறிவார் போல.

இ-ள். ஜெயம்பெற்ற, இயற்றமிழ்க் கல்வியை, ஐயந்திரிபற அறிந்த பெரியோர்கள் சபையின்கண், உண்மையுற்ற நான்கிலக்ஷத்தைம்பதினாயிரம், வடமொழியின் சுலோகமாகக்கொண்ட ஒரு மலையினிடத்தில், ஒரு கடுகினளவில் நூற்றில் ஒருபங்கு பொருளமைந்த, இந்நூலைச் சாதகாலங்காரமென்றே, பெரிய பெயரை வைத்துச் சொல்லிய, அற்பச்சொற்களை, பகுப்பறியாது குழந்தைகள் பேசுங் குதலைச் சொற்களில், குற்றம் பாராது, குணங்கொள்பவர்கள்போல், யாதொரு குற்றத்தையும் பாராது கிருபை செய்வர்—எ-று. 10

சாதக மென்பதின்னதெனல்.

குறித்திடுசா தகமென்ப தவரவர்தம் வினையின்
குணங்களறிந் தயன்விதித்த கொள்கையுள தன்றோ
மறித்துமவ ரவர்தமக்கு வரும்பலபா வகத்தின்
வகையறிந்து பெரியோர்கள் வழுத்தியசொல் லதனைப்
பிறித்தறிந்து சுபம்வருமென் றுளமகிழ்ச்சி பொங்கப்
பின்னசுபம் வரிலதற்குப் பிரீதியென்கொ லென்று
நெறித்தரும சாஸ்திரத்தின் விதிசாந்தி செய்தே
நிறைந்தசுபம் பெறுவதற்கே நிகழ்த்தினர்சா தகமே.

இ-ள். குறிக்கப்பெற்ற ஜாதகமென்பது, அவரவர் தத்தம், வினையின் பயனையறிந்து, ஜீவர்கள், அவரவர்களுக்குத்தக்கவாறு, நன்மை, தீமைகளை, அனுபவிக்கும்படி பிரமதேவன், ஏற்படுத்திய, அளவேயாகும், மீண்டும், அச்சீவர்களுக்குவரும் பலபலன்களது, பாகங்களைப் பெரியோர்வழுத்தியசோதிடங்களைப்பிரித்தறிந்து, சுபம்வருமென்று சொல்லின், உளமகிழ்ச்சி, பொங்கவும், பின்னர் அசுபம், வருமென்றால், அதுதீரும்பொருட்டு, தர்மசாஸ்திரத்திற் சொல்லியபடியே, சாந்திசெய்து, நன்மையடையும், பொருட்டே பெரியோர்கள், சாதகமென்பதைச்சொன்னதாகும்—எ-று. 11

சாதகநற் பலன்வழுத்து முறைமையுக்கேண் மடவார்
தமக்குமணப் பொருத்தமதைத் தான்பார்க்கு மந்தப்

போதுதசப் பொருத்தம்பார்ப் பதற்குமுன்ன ரச்சுப்
பொருத்தம்பார்ப் பதுபோலு முகூர்த்தங்க டமக்கே
ஓதியசக் கரந்தீட்டி பிராணனெடு வேளை
உணர்வதற்கு முன்விதித்த வுடுவுணர்தல் போலும்
நீதியுடன் பலபாகம் பார்ப்பதற்கு முன்னே
நிறைசீவன் றனையறிந்து நிகழ்த்துகசா தகமே.

இ-ள். சாதகமானது அவரவர்களுக்குச் சொல்லுந் தன்மையைக்கேள். பெண்களுக்கு விவாகப்பொருத்தமும், அதைப்பார்க்கும்போது தசப்பொருத்தத்திற்கு முன்னராயுள்ள, (கழுத்துஎன்னும்) ரச்சுப்பொருத்தமும் ஒவ்வொரு முகூர்த்தங்களுக்கும், விவாகச்சக்கரங்கீறி, ஆயுட்காலமிவைகளையறிவதற்கு முன்னரே நட்சத்திரந் தெரிந்துகொள்வதுபோல, கிரமப்படி பலபாகங்களைப் பார்ப்பதற்கு முன்னரே, ஆயுட்கால நிர்ணயந்தெரிந்துபின் பலபாவகமாகிய ஜாதகம் எழுதக்கடவர்—எ-று. 12

மாணுக்கன் விதி.

சாதகவா ரிதியதனிற் சிறுதிவலை யளவுஞ்
சாற்றுபல பாகமுறுந் தமிழ்ப்பனுவ லதனில்
ஓதியநற் பலனறிந்து பகர்வதற்கே யுரிய
உத்தமசற் குணம்பொறுமை யறிவுமனு நீதி
ஈதல்பல கலைதெரிவோன் பெரியோர்க டம்மை
எதிர்த்துவா துரையாம விணக்கமுடை யனுமாய்
சீதநிறை மதிபோலு மமுதமிகு வார்த்தை
செறிந்திடுமா ணுக்கனுக்கே செப்புவது குணமே.

இ-ள். சமஸ்கிருத பாஷையிற் சொல்லிய, சாதக சமுத்திரத்திற் சிறுதிவலையின் பலபாகங்களிற் சிறிதளவாய்ச்சொல்லிய, தமிழ்ப்பாஷையிலுள்ளபாடல்களின், நற்பலன்களையறிந்து சொல்லுவதற்குரிய மேலான, நற்குணம், பொறுமை, நல்லறிவு, உடையவனும் தருமசாஸ்திரப்படி, நடத்தல், தானம் வழங்குதல், பலசாஸ்திரங்களை, ஆராய்தல், பெரியோர்சொற்களுக்கு இணங்கி நடத்தல், குளிர்ந்த, சந்திரன்போலும், இனியவாக்குப் பேசுதல் முதலிய நற்குணங்கள் நிறைந்த மாணுக்கருக்கே, சொல்வது நன்மையாகும்—எ-று. 13

செப்பியதோர் பலபாகம் பகர்வதற்கே யிரவி
தேசதே சத்தின்விழுச் சாயைதெரிந் தெண்ணித்
தப்பறவேகண் டருளுஞ் சரபிண்டத் தொகையின்
றகைமைபெற மருவியிலக்கி னங்கடமை யறிந்தே
ஒப்புடன்லக் கினசந்து கண்டாலக் காலை
யுயர்கடிகா லக்கினசுத்திக ளுணர்ந்து கண்டு

விப்பிரர்சோ திடவல்லோர் சரணமதைப் போற்றி
விளம்பினர்க்குப் பலபாகம் விளங்குமிகத் தானே.

இ-ள். சாதகம் சொல்லுவதற்கு முதற்காரணம், நாழிகையாதலால், அஃதிங்ஙனம் கூறியிருக்கிறுர். இச்சாதகாலங்காரத்திற்சொல்லிய பலன்களைச் சொல்லுவதற்கு, (முன்னரே அறியும் விவரம்) சூரிய சஞ்சாரதேசத்திற்குத் தக்கபடி, அவச்சாயை பதச்சாயை, அடிகளைக் கணக்கிட்டு, அதன்படி தப்பறக்கண்ட தொகையுடன் பெருதற்கு அரிதாகிய சரபிண்டத்தொகையிற் கலந்து, இராசியைநிட்சயித்து லக்கினசந்தி, ஏற்பட்டால், * துருவங்களாலறிந்து சோதிடவிற்பனர்களின் பாதபூஜைசெய்து சொல்லுவோர்களுக்கு, பலாபலன்கள் மிகவும் நன்ருய் விளங்கும்—எ-று. 14

ஆக்கியோன் பெயர்.

விளங்கியதோர் சகாத்தமா யிரத்தைஞ் ஞூற்றின்மேல்
மேலெண்பத் தேழுவிசு வாவசுவா மாண்டில்
களங்கமிலா வடமொழியைத் தான்றெளிந்து கண்டு
காசினியிற் சாதகா லங்கார மெனவே
வளங்குலவும் புகழ்பெறுநற் கீரனூர் வாழும்
வள்ளல்சே வடிநாதன் வரவுருவாய் வந்தோன்
உளங்களிகூர்ந் தருண்ஞான யோகநட ராச
னுரைத்தனனிப் பொருளுணர்ந்தோர்க் குண்மைதருந் தானே

இ-ள். சாலிவாகன சகாப்தம், (1587)ல் விசுவாவசு வருஷத்தில், குற்றமில்லாத, சமஸ்கிருதபாஷையில், இருந்ததைத்தெரிந்து, அதன்சார்பால், இவ்வுலகத்தில் இந்நூற்கு, சாதகாலங்காரமெனப் பெயரிட்டு, வளப்பந்தங்கிய கீரனூர்வாழும் வள்ளல் சேவடிநாதனுடைய வரப்பிரசாதமே ரூபமாய்வந்தவனும் மனச்சந்தோஷத்துடன் அருள்கின்றவனும், ஞானயோகமுடையவனுமாகிய, நடராஜன் சொன்ஞன். இதிற்சொல்லப்பட்ட விஷயங்களை முறைப்படி, அறிந்துகொண்டவர்களுக்கு, (இந்நூல்) உண்மையை நன்ருய் விளங்கிக்காட்டும்—எ-று. 15

பொதுப்பாயிரம் சம்பூர்ணம்.

---

* லக்கினதுருவம், நட்சத்திரதுருவம், அம்ஷதுருவம், வேளைதுருவம், பஞ்சபூதத்துருவம், வாரதுருவம் சூரியதுருவம்.

பொதுவிலட்சணம்.

பாவகவிவரம்.

1 - முதலாவது பாவகம் (கீர்த்தி.)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சீர்பெருஞ் சன்ம லக்கினத் ததிபர்
சேர்ந்தினி திருந்திடு மந்தப்
பேர்தரு பலன்கண் மெய்நிறஞ் சொரூபம்
பெருநிதி யுதரமத் தகமும்
ஏர்பெரு முபாங்கஞ் சிந்திதங் கிலேச
மிலக்கண கீர்த்திமூர்த் திகளும்
பார்தருஞ் சுபசந் தோஷமும் வயதும்
பகர்தனுத் தானமென் றுரைக்கும்.

இ-ள். சிறப்புற்ற ஜென்மலக்கினத்ததிபதியும், அவரோடு சேர்ந்திருக்கும், மற்றக்கிரகங்களாலும், கொடுக்கக்கூடிய பலன்களாவன, தேகத்தின் நிறம், ரூபம், செல்வம், வயிறு, சிரசு, அழகியமற்ற உறுப்புகள், சிந்தித்தல், கிலேசம், இலக்ஷணம், சிறப்பு, உபாசனமூர்த்தி, பெரியோர்களால், வரும், சுபசந்தோஷங்களும், ஆசுயும், ஆகிய இவைகள், இத்தன்மைத்தென்று, உரைப்பது, லக்கினமென்று, சுருதிகள் சொல்லும்—எ-று. 1

2 - இரண்டாவது பாவகம் (நேத்திரம்.)

உரைத்திடுஞ் சவுபாக் கியந்தனங் குடும்ப
மொழிசெறி நேத்திரம் வித்தை
தரைப்பெருஞ் செல்வ முடன்புகல் வாக்கு
சாத்திரக் கேள்விகண் முற்றும்
விரைத்தெழு கமன மனமுமுத் தேச
மேம்படவிரும்பு செம் பொன்னும்
நிரைத்திடு நவரத் தினமிரண் டிடத்தி
னிலைமைகண் டுரைசெய்வர் நின்றே.

இ-ள். இரண்டாமிடத்தின், அதிபதி, அத்துடன் சேர்ந்தவர்கள் இவர்களின் நிலையைக்கண்டு, சுபபாக்கியம், தனம், குடும்பம், பிரகாசம்பெற்ற நேத்திரம்,கல்வி, புதையற்செல்வம், வாக்கு,சாஸ்திரவிசாரணைகளில், பற்று

கின்றமனவியல்பு, மனசு, அதின்நினைப்பு, மேம்பாடுசெய்யும், பசும்பொன்னும், வரிசைப்படும், நவரத்தினம், (ஆகிய இவைகளை) நிதானித்தறிந்து, ஆன்றோர்கள் சொல்வார்கள்—எ-று. 2

3 - மூன்றுவது பாவகம் (சகோதரம்.)

நின்றிடு மூன்று மிடத்தினி னிற்கு
நிருபரா லுரைசெய்யும் பலன்கள்
வென்றிகொள் போக மடிமையாள் கானம்
வீரியஞ் சத்துவந் துணைவர்
பொன்றிடா தணிய காதுநோய் கன்ன
பூடணம் புசித்திடுங் கலன்கள்
துன்றுவிக் கிரமஞ் சேவகா விருத்தி
சூழ்தயி ரியங்களுஞ் சொல்வர்.

இ-ள். மூன்றுமிடத்தில் நிற்கும் கிரகங்களாலும், அதிபதியாலும், பார்த்தவர்களாலும், நிதானித்தறிந்து உரைக்கும், பலன்களாவன, வெற்றி ஏற்படும்போகம் அடிமையாட்கள் சங்கீதகானங்கள், தைரியம், பொறுமை, பிந்திய சகோதரர், நிலைத்தல், காதுநோய், கர்னபூஷணம், சாப்பிடக்கூடிய பாத்திரங்கள் நெருங்கி விலகூறுதல், சேவகத்தொழில், தன்னைச்சேர்ந்த தைரியத்தின் நிலைமை, ஆகிய இவைகளைப் பலனுகச் சொல்லுவார்கள். 3

4-நான்காவது பாவகம் (மாதுர்.)

சொல்லிய வித்தை வாகனஞ் சுபங்கள்
சூழும்வியா பாரமு மனையும்
வெல்லுமேம் பாடுஞ் சவுக்கிய மன்னை
விரும்புநல் லுறவின ராகும்
நல்லநிட் சேபம் பரவிஷ யங்க
ணறைகமழ் பாற்பசு கன்று
வல்லதோர் தேவ தானமிப் பலனை
வழுத்துநான் காமிடங் கொண்டே.

இ-ள். நான்காமிடத்தையும், அவ்வதிபனோடு சேர்ந்தவர்கள், பார்த்தவர்கள், இவர்களைக்கொண்டு அறியும்பலன்களாவன, சாஸ்திரக்கல்வி, வாகனம், சுபகாரியங்கள், ஏற்கனவேயுள்ள வியாபாரம்வீடு, மனை, வெற்றியாற்கீர்த்தி, சௌக்கியம், தாய், உறவினர், நன்மையானபூமி, அன்னியவிஷயங்கள் சுகந்தம், பால், பசு, கன்று, பலம்பொருந்திய தேவஸ்தானம், ஆகிய இவைகளைச் சொல்லுவார்கள்—எ-று. 4

5-ஐந்தாவது பாவகம் (புத்திரர்.)

கொண்டதோர் மாமன் பிதாப்பெறும் புதல்வர்
குலவுபூ ருவஞ்செய்புண் ணியமும்
தண்டமிழ் வாணர் புகல்பிர பந்தந்
தரித்திடுங் கர்ப்பமந் திரங்கள்
மிண்டிய வித்தை விதாணம்புத்தி விரும்புமிப்
பலனெலா மறிந்தே
கண்டுரைத் திடுவரைந் தாமிடங் கொண்டே
கற்றுணர்ந் தருளுமா தவரே.

இ-ள். ஐந்தாமிடத்தைக்கொண்டும், அவ்வதிபனோடு சேர்ந்தவர்கள், பார்த்தவர்கள்; இவர்களைக்கொண்டு, அறியும் பலன்களாவன, தாயோடு கொண்டமாமன், பிதாபெற்ற பிள்ளைகள், பூர்வத்திற்செய்த புண்ணியம், வித்வான்களாற் புகழப்பட்டபிரபந்தம், கெற்போற்பத்தி, மந்திரங்கள், ஜாலவித்தை, யூகித்தறியும் புத்திவிரும்பல், ஆகிய பலன்களை கற்றுணர்ந்தபெரியோர் தெரிந்துசொல்லுவர்—எ-று. 5

6-ஆறுவது பாவகம் (சத்துரு.)

மாதுகேள் வியாதி சத்துரு பீடை
மற்றுமா யுதங்களா விரணம்
ஓதிய ஞாதி யால்வரு துன்பம்
யுத்தமெய் வாதைபொன் கண்டம்
பேதமாங் கள்வர் புனல்மடந் தையரால்
பெருகுபாம் பாலுநோ யுளது
நீதிசேர் பிரதா னிக்கமுஞ் சிறையி
னிலைமையா றுமிடங் குறித்தே.

இ-ள். ஆறுமிடத்தையும் அவ்வதிபனையும் சேர்ந்தவர்கள் பார்த்தவர்களைக்கொண்டும், சொல்லும்பலன்களைப் பெண்ணே கேட்பாயாக, வியாதி சத்துருக்களால் ஏற்படும் சங்கடம், ஆயுதத்தாலுண்டாகும், காயங்கள், தாயாதிகளாலுண்டாகும், துக்கம், சண்டை அதனால் ஏற்படும் நோவு, பொன்சேதம், திருடர்களின்தொந்தரவு, நீர்த்தத்து, பெண்களால், ஏற்படும் நோய், பாம்பு, (விஷநீர்) சம்பந்தமாய் ஏற்படும் கண்டங்கள், நியாயமான பிரதானிக்கம், சிறைப்படுதல், ஆகியபலன்களைச் சொல்லுவர்—எ-று. 6

7-ஏழாவது பாவகம் (களத்திரம்.)

குறித்திடுங் கமன மணமடந் தையர்க்குங்
குமரர்க டமக்குநல் லின்பம்

நிறுத்திடு விபகா ரந்தமர் கூட்ட
நேமியோ ருதவுசன் மானம்
பிறித்தறி வியாபா ரம்மணம் புரிநாள்
பின்மனை யாள்வியம் பெறுதல்
மறிக்கயல் விழியா யேழிடங் கொண்டு
வழுத்துவர் மறைமொழிப் புலவர்.

இ-ள். மீனைப்போன்ற விழியையுடைய மானே கேட்பாயாக, ஏழாமிடத்தையும், அவ்வதிபனையும், அத்துடன் சேர்ந்தவர்கள், பார்த்தவர்களைக்கொண்டு, குறித்திடுங்கமனம், மணம், பெண்களுக்கும், ஆடவர்களுக்கும், ஏற்படும், இன்பம், வழக்குத்தீர்த்தல் முதலிய விவகாரம், பந்துக்கள் சேர்க்கை, பிரபுக்கள், சன்மானம், புதிதாய் ஏற்படுத்திய வியாபாரம், கல்யாண முடியுநாள், மனைவியின் தீர்க்கம், (ஆகிய இவைகளை) வேதமுணர்ந்த வித்துவான்கள் சொல்லுவார்கள்—எ-று. 7

8-எட்டாவது பாவகம் (ஆயுள்.)

புலவுறும் படையால் வாதைசேர் யுத்தம்
பொருப்பின்மே லேறிவீழ்ந் திடுதல்
நிலைபெறும் வியாதி விக்கினங் கிலேச
நீள்பல துன்பமோ டிரணம்
சிலவினு னட்ட மாம்விழுக் காடு
செறிபகை மரணமித் தனையும்
உலகினி லுயர்ந்தோ ரட்டம பலன்கண்
டுரைசெய்வா ருண்மைபெற் றிடவே.

இ-ள். எட்டாமிடத்ததிபன், அவனோடுசேர்ந்தவர்கள், பார்த்தவர்கள், இருந்தவர்கள், இவர்களைக்கொண்டு சொல்லும் பலன்களாவன, கூர்மையான ஆயுதங்களால் வாதை, சேர்ந்துசெய்யும் யுத்தம், மலையின்மேலேறி வீழ்ந்திடுதல், (தொழுநோய்) நீங்காத வியாதி, விக்கினம், விசாரம், நெடுநாள் துன்பம், புறப்பாடு முதலிய, ரணங்கள், செலவு, நஷ்டம், அவமானமுண்டாக்கும், பகை மரணகாலம், ஆகிய இவைகளை, உலகத்தில் உயர்ந்தோர், உண்மைபெறும்படி, சொல்லுவார்கள்—எ-று. 8

9-ஒன்பதாவது பாவகம் (பாக்கியம்.)

பெற்றிடுந் தந்தை மகப்பயிர் தருமம்
பெருமைசேர் பாக்கிய மடங்கள்
உற்றதோர் பரம புண்ணியங் குளமு
முயர்திருப் பணியுப தேசம்

வெற்றிசேர் நீர்க்கா வணம்புகழ் கூபம்
விரும்பிய செல்வமீ தெல்லாம்
கற்றறிந் தோர்க ளொன்பதா மிடத்தாற்
கருணையும் பெறமொழிந் திடுவார்.

இ-ள். ஒன்பதாமிடத்ததிபதி, அவனோடு சேர்ந்தவர்கள் பார்த்தவர்கள், இருந்தவர்கள், இவர்களைக்கொண்டு, பெற்றதகப்பன், வம்மிசவிருத்தி, தருமகாரியங்கள், பெருமையைத்தரத்தக்க, பாக்கியம், தர்மசத்திரங்கள், கட்டுதல், அன்னதானம், குளம், தடாகம் உண்டுபண்ணுதல், மேலான ஆலயத்திருப்பணி, குருஉபதேசம், சோலைகள், நந்தனவனம், பெருமை, கிணறு, நினைக்கப்பட்ட செல்வங்கள் ஆகிய இவைகளை, சோதிடவல்லவர்கள், கிருபையைப் பெரும்படி சொல்லுவார்கள்—எ-று. 9

10-பத்தாவது பாவகம் (கர்மம்.)

மொழிந்திடும் பலபுண் ணியம்புவி யாள்வன்
முயன்றுபட் டணங்கடா பித்தல்
பொழிந்திடுங் கரும மிரக்கமெஞ் ஞான
பூசனை மனைபிதாப் பவங்கள்
ஒழிந் திடு மினிய தேவதா பத்தி
யுயர்சவு ரியம்பிர தாபம்
இழிந்திடு மிரவு கருப்பமுண் புடைவை
யிவைபத்தா மிடப்பெய ரென்னே.

இ-ள். பத்தாமிடம், அவ்வதிபதி, இருந்தவர்கள், பார்த்தவர்கள், இவர்களைக்கொண்டு, சொல்லும் பலன்களாவன. பலவித புண்ணியங்கள், அரசாளுதல், பட்டணங்கள், உண்டாக்குதல், நெருங்கியமுயற்சி, கருணை, பூசனை, மனையுண்டாக்குதல், (பகீரதனைப்போல) பிதா பாவங்களை நீக்கக்கூடிய, தேவதா உபாசனை, மிகுந்த பராக்கிரமம், கீர்த்தி, இழிவாகியயாசிப்பு, கர்ப்பம் உண்டாகுதல், உணவு, வஸ்திரம், ஆகிய இவைகளைச் சொல்லுதலாம்.

11-பதினோராவது பாவகம் (லாபம்.)

என்னுமூத் தவர்சே வித்திடும் பேர்க
ளிளங்கொடி மனைவிபொன் வித்தை
மின்னிய லாபம் பயிர்பரி வேழம்
விளங்குநல் லறிவுதண் டிகையும்
முன்னிய மனத்திற் றுக்கமுந் தீரு
முத்தரீ யஞ்செறி வகையும்

பன்னிய பதினோ ராமிடங் கொண்டு
பரிந்தருள் புரிவர்பா வலரே.

இ-ள். பதினோராமிடம். அவ்வதிபதி, அத்துடன் சேர்ந்தவர்கள், பார்த்தவர்கள், இவர்களைக்கொண்டு, மூத்தசகோதரர், சேவைசெய்யத்தக்கவர்கள், பின்மனையாள், பொன்னாலும், வித்தையாலும், லாபம், பயிர்த்தொழில், குதிரை, யானை, பல்லக்கு, பிரகாசிக்கின்ற நல்லவிவேகம், துக்கநிவர்த்தி, அங்கவஸ்திரம், நீங்காது இருக்கப்படுதல், ஆகிய இவைகளைச் சோதிடவல்லவர்கள், இன்பமான கருணையுடன் சொல்லுவார்கள்—எ-று. 11

12-பன்னிரண்டாம் பாவகம் (விரயம்.)

பாவமந் நியதே சத்திலுத் யோகம்
பணச்செல வுடனுறும் போகம்
மேவிய சயன சவுக்கியம் விவாதம்
விளைந்திடுந் தொழில்புரி கன்மம்
ஆவதோர் தானம் புண்ணியந் தியாக
மருண்மகஞ் சர்வதோ விருத்தி
சேவலங் கொடியோ னருளினாற் பெரியோர்
செப்புவர் துவாதச பலனே.

இ-ள். பன்னிரண்டாமிடம், அவ்வதிபதி, அத்துடன் சேர்ந்தவர்கள், பார்த்தவர்கள், இவர்களைக்கொண்டு, அந்நியதேச சஞ்சாரத்தொழில், பொருள் விரயம், அதனால் போகம், அனுபவித்தல், சயனம், (புசித்தல்) (சௌக்கியம்,) அதாவது, (ஸ்திரீசம்போகம்) விவகாரம் உண்டாக்குந்தொழில், மறுமையிலடையுங்கதி, தரத்தக்கதொழில், மறுமையிலடையுமிடம், புண்ணியம், ஈகை, தயை, யாகம், நீங்காதவண்ணம், ஆகிய இவைகளை முருகக்கடவுளின் கிருபையால், இத்துவாதசப் பலன்களைப் பிரியமாய்ப் பெரியோர்கள் சொல்லுவார்கள்—எ-று. 12

பன்னிரண்டு பாவகங்களின்

பொது விலக்ஷணம்

சம்பூர்ணம்.

காரக கிரகங்கள்.

சாற்றிய பிதுர்கா ரகன்பகற் கிரவி
சனிபிதுர் காரக னிசிக்குப்
போற்றிய வன்னை காரகன் பகற்குப்
புகர்நிசிக் கிந்துகா ரகனும்
ஏற்றமாந் துணைவர் காரகன் செவ்வா
யெழிற்சுத காரக னரசன்
ஆற்றிய வாயுட் காரகன் சனியில்
லரடனக் கேபுக ராமே.

இ-ள். பிதுர்காரகன், பகலுக்குச் சூரியன். இரவுக்குச் சனியாம், மாதுர்காரகன், பகலுக்குச் சுக்கிரன், இரவுக்குச் சந்திரனும், அதிகமாய்ச் சொல்லிய, சகோதரகாரகன், பகலுக்கும், இரவுக்கும், செவ்வாயாம், அழகிய புத்திரகாரகன், பகலிரவுக்கு, வியாழனும், ஆயுட்காரகன், பகலிரவுக்குச் சனியாம், களத்திர காரகன் சுக்கிரனும்—எ-று. 13

ஆனதோர் சரீர காரகன் வெய்யோ
னங்கனை வாகன வகைக்கும்
தானுமே பிருகு காரகன் கன்மந்
தனக்கெழிற் காரக னரசன்
கானமும் வித்தியா காரகன் புந்தி
கனதன காரகன் வேந்தன்
தேனமர் மொழியா யிலக்கன தியைப்போற்
றெரிந்துகா ரகர்பலன் செப்பே.

இ-ள். உண்டாகி வளர்கின்ற, உடல் காரகன் சூரியனும், பெண்கள் வாகனவகைகள், இவைகளுக்குக் காரகன், சுக்கிரனும், அழகிய கர்மங்களுக்கு காரகன், வியாழனும், கானம், வித்தை, இவைகளுக்கு காரகன் புதனும், மேன்மையுற்றபொருள் காரகன், வியாழனும் ஆகிய, இவர்களைக்கொண்டும், லக்கினமுதற் பன்னிரண்டு பாவகங்களையும் கொண்டு சொல்வது போல் தேன்போன்ற வசனத்தையுடைய பெண்ணே, காரகபலமும் அறிந்து சொல்லக்கடவாய்—எ-று. 14

கிரகதேவதை.

(அதாவது நவக்கிரக தெய்வம்.)

வேறு.

ஆன வெள்ளி குருவய னுகுமே
வான விந்தும் புதனுநன் மாயனும்

பானுஞ் சேயுஞ் சிவனெனப் பன்னுவர்
மான வந்நிய தேவதை மந்தனே.

இ-ள். சுக்கிரனும் வியாழனும் பிரமன், சந்திரனும் புதனும், விஷ்ணு, சூரியனுஞ் செவ்வாயும், சிவன், சனிபகவானுக்கு அந்நியதேவதை, இப்படியாமென்று சோதிடவல்லவர்கள் சொல்லுவார்கள். (வேறுவிதம்.) சூரியனுக்கு சிவன், சந்திரனுக்கு, பார்வதி, செவ்வாய்க்கு, செவ்வேள், புதனுக்கு விஷ்ணு, வியாழனுக்கு, பிரமன், சுக்கிரனுக்கு, துர்க்கை, இலக்குமி, வள்ளியம்மை, சனிக்கு, மாடன், இருளன், கருப்பணன், சோணை, முனியாண்டி, சாத்தா, மாரி, காளி, பேச்சிமுதலிய, அந்நியதேவதை. இராகுவுக்குப் பத்திரகாளி, கேதுவுக்கு, விநாயகர், இந்திரன், அல்லது, இராகு கேதுகளுக்கு துஷ்டதேவதைகள் பசாசங்களென்பர் சிலர்—எ-று. 15

கிரகவலிவு.

(அதாவது இன்னகாலங்களில் இன்னகிரகங்களுக்குப்பலம் அதிகமெனல்.)

வேறு.

அடறக்க ணய னத்தி லசுபர்க்கே பலம தாகும்
வடதிக்கிற் பலனல் லோர்க்கு வளர்பக்கந் தனக்கு மீதே
திடமுறு மமர பக்கந் தீயோர்க்கே பலம தாகும்
படவர வல்குன் மாதே பலபாகம் விளம்புங் காலே.

இ-ள். அரவின் படம்போன்ற அல்குலையுடைய பெண்ணே நவக்கிரக பலன்களைப் பிரித்துச்சொல்லுமிடத்து மழைநெருங்கிய ஆடிமாதமுதல், மார்கழிமாதம் முடிய உள்ள தக்ஷணாயனமான ஆறுமாதங்கட்கும், பாபக்கிரகங்களுக்கும், உத்தராயணமாகிய. தைமாதமுதல், ஆனிமாதம்வரையுள்ள மற்ற, ஆறுமாதங்கட்கும், சுபர்களுக்கும், அமாவாசையையடுத்த பிரதமை முதல், (15) திதியாகிய, சுக்கிலபக்ஷத்தில், சுபர்களுக்கும், பௌரணமியை யடுத்த பிரதமை முதல் (15) திதியாகிய, கிருஷ்ணபக்ஷத்தில், பாபர்களுக்கும், பலன் அதிகமாம்—எ-று. 16

(இன்னகிரகம் இன்னஇடம் தன்மையிற் பலமெனல்.)

வேறு.

பொன்னும் புதனு முதயத்திற் பொருந்தில் வலிய ரேயாவர்
மன்னு சனியுங் கரும்பாம்பும் வலிய ரத்த மனமாகில்
மின்னுங் கதிருங் குசனுச்ச மேவில் வலியர் விளம்புங்கால்
துன்னு மதிசுக் கிரனீர்க்கீழ்ச் சூழ்ந்தால் வலிய ராவரே.

இ-ள். வியாழனும் புதனும், லக்கினத்தில் நிற்கில் பலம், சனியும், ராகுவும், அத்தமனத்தில் நிற்கில் பலம், பிரகாசம்பெற்ற, சூரியனும், செவ்வா

யும், உச்சத்தில் நிற்கில், பலம், குளிர்ந்த கிரணத்தையுடைய சந்திரனும், சுக்கிரனும், நாலாமிடம் நிற்கில், பலம், அதிகமென்று சொல்லுவார்கள்.

(இன்னகிரகத்திற்கு இன்னகிரகம் வலிவுடையதெனல்.)

செய்யும் புந்தி தனக்கதிகஞ் செவ்வாய் வலிது செவ்வாயில்
வெய்ய சனியும் வலிவதனை விடவே யரசன் மிகவலியன்
துய்ய வரசன் றனில்வெள்ளி வலிய னவனிற் சோமன்மிகும்
பைய சசிக்குக் கதிர்வலிது பானு விற்பாம் பேவலிதே.

இ-ள். புதன், செவ்வாய், சனி, வியாழன், சுக்கிரன், சந்திரன், ஆதித்தன், ராகு, கேது, ஆகிய, இவர்கள், முறையே ஒருவர்க்கொருவர் வலியராவார்கள்—எ-று. 18

கிரகங்கள் ஸ்தானம் சேர்க்கை உச்சம் அங்கிசம் இவைகளாற் பெறும்பலன்.

உச்ச முச்சாங் கிசைநல்லோ ருடனு நல்லோ ருடன்வீட்டும்
மெச்சு முறவோ ருடனுமவர் வீட்டு மித்தி ராங்கிசையில்
அச்ச மறவே யவரவருக் கனுச மான வங்கிசையில்
இச்சை யுடனே யுறிற்பலனு மிதனிற் பிழைத்தா லிலைப்பலனே.

இ-ள். ஒவ்வொருகிரகமும், உச்சம்பெற்றும், உச்சாங்கிஷம்பெற்றும், சுபருடன் சேர்ந்தும், சுபர்வீட்டில் நின்றும் மித்துருவுடன் சேர்ந்தும், மித்துருவீட்டில், நின்றும் மித்துருவீட்டின், அங்கிஷம்பெற்றும், நிலைத்தஆட்சிவீட்டின் அங்கிஷம்பெற்றும், விருப்பத்துடன் நின்றால், பலமுடையவர்களும், (மேற்சொன்னபடி) நிற்காவிட்டால், பலமில்லாதவர்களு மாகின்றார்கள்—எ-று. 19

இதிற்சொல்லியவற்றின் தன்மையறிந்து (க) (ஐ)
(இ) (வ) பலன்களை யூகித்தறிக.

(இன்னின்ன க்ஷேத்திரம் இவ்வளவுபல முடையதெனல்.)

வே று.

உச்ச மொன்றுடன் காலொன்று கேந்திரம்
அச்சு முக்கா லதிபதி யோர்பலம்
மெச்சு நட்புக் கரைப்பல மிக்ககால்
துச்ச நீசர் பலமெனச் சொல்லுமே.

இ-ள். உச்சக்கிரகத்திற்கு, ஒன்றேகால்பலமும், கேந்திரஸ்தானங்களில் நின்ற, கிரகத்திற்கு முக்காற்பலமும், பயமில்லாத ஆட்சிக்கிரகங்களுக்கு, ஒரு பலமும் நட்புஸ்தானத்தில் நின்ற கிரகங்களுக்கு, அரைப்பலமும், பகைநீச ஸ்தானங்களில் நின்ற கிரகங்களுக்கு, காலபலமுமாம்—எ-று. 20

(காலங்களின் வலிவு கிரகங்கள்.)

ஏந்து செவ்வாய் சனியிந்தி ராப்பலன்
வேந்த னுதவன் வெள்ளி பகற்பலன்
போந்து புந்திக்கெப் போதும் பலன்களாம்
கூந்தல் வேளிபக் குங்குமக் கொங்கையாய்.

இ-ள். கூந்தலையும், ஆசையைத் தரத்தக்கதாயும், யானைக்கொம்பு போன்றதாயும் குங்குமத்தையுமணிந்த ஸ்தனத்தையுமுடைய பெண்ணே, பூமனாகிய செவ்வாய், தீமனாகியசனி, சோமனாகிய சந்திரன், ஆகிய இவர்களுக்கு, இரவிற்பலமும், சீமனாகிய குரு, மீமனாகிய சூரியன், காமனாகிய சுக்கிரன், ஆகிய இவர்களுக்குப் பகலிற்பலமும், அறிவுள்ள சாமனாகிய புதனுக்கு இரவிலும், பகலிலும் பலமாம்—எ-று. 21

ஆய வோரைக் கதிபர்க் கதிற்பலன்
தூய வாரத் ததிபர்க் கதிற்பலன்
ஏய திங்கட் கதிபர்க் கதிற்பலன்
காயும் வில்லிற் கதிர்ச்சுப னுவனே.

இ-ள். அந்தந்த ஓரைக்கதிபர்களுக்கு, அந்தந்த ஓரை பலமாம், அந்தந்த வாரத்ததிபர்களுக்கு, அந்தந்த வாரங்களிற் பலமாம், அந்தந்தமாதத் ததிபதிகளுக்கு, அந்தந்தமாதத்திற் பலமாம், சத்துருநாசஞ்செய்யும் தனுசுராசியில், சூரியன், சுபனுவன்—எ-று. 22

புதனுக்குச் சிறப்புவிதி.

ஆன புந்தி சுபரோ டடுத்திடில்
தானு நற்சுப னுகுவன் ருழ்வுறும்
ஊன தீய ருடனிருந் தால்விழி
மான னுயவன் மன்னுவன் றீயனாய்.

இ-ள். மான்போன்ற கண்ணையுடையபெண்ணே! ஞானமுள்ளபுதன், சுபரோடு சேர்ந்தால், சுபனும், குறைவும், குற்றமுமுடைய பாவிகளோடு, சேர்ந்திருந்தால், பாபக்கிரகமாய்ப் பொருந்துவன்—எ-று. 23

கிரக சுபா சுபங்கள்.

நிறைமதியுந் தமனியனும் நிறைந்தசுபக் கிரகம்
நீள்சுங்க னூர்முக்காற் சுபக்கிரகம் புதனே
குறையுமரைச் சுபன்றேய்ந்த மதியுங்காற் சுபனுங்
கூறுசனி பாம்புமுழுப் பாவிகளே செவ்வாய்
அறையு முக்காற் பாவியரைப் பாதிகதி ரவனு
மணிபாவ ருடன்கூடும் புதன்பிறைகாற் பாவி
இறைசனிபாம் புடன்கூடிற் சனிபோலப் பாவி
யிந்தமவா சியிற்புதனே டிருக்கமுக்காற் சுபனே.

இ-ள். பூரணச்சந்திரனும், காணக்குருவும், முழுச்சுபக் கிரகங்கள், பிரகாசம்பொருந்திய, நீண்ட சுக்கிரன், முக்காற்சுபராம், புதன், அரைச்சுபராம், அமரபட்சச்சந்திரன், காற்சுபராம், துன்பந்தரத்தக்கதாகச் சொல்லுகின்ற, சனியும், ராகு கேதுவும், முழுப்பாபராம், செவ்வாய் முக்காற்பாபனும், சூரியனோ, அரைப்பாபனும் நெருங்கிய பாபருடன்கூடிய புதனும், சந்திரனும், காற்பாபராம், குரு சனியுடன், சேர்ந்திருந்தால், சனியைப் போலும் பாபராம், சந்திரன், அமாவாசைகாலத்தில் புதனோடு கூடினின்றால், முக்கால் சுபராம்—எ-று. 24

கிரக நட்பு.

ஆதவனுக் குறவுதிங்கள் செவ்வாயும் பொன்னு
மம்புலிக்குப் புதனுஞ்செங் கதிரிருவர் நேசம்
நீதிசெறி சேய்க்குறவு குருதிங்கள் வெய்யோன்
நின்றபுதன் றனக்குச்சுக் கிரனிரவி நேசம்
ஓதியபொன் றனக்குரவாங் கதிர்திங்கள் செவ்வா
யுயர்வெள்ளிக் குறவுசனி யுடன்புந்தி யிருவர்
பூதலமேற் சவுரிக்கே புதனுஞ்சுக் கிரனும்
பொருந்தியநல் லுறவென்றே போற்றிடுவர் புலவர்.

இ-ள். பிங்கலனாகிய, சூரியனுக்கு—சங்கலனென்னும் சந்திரன், மங்கலனென்னும், செவ்வாய், புங்கலனென்னும், குரு ஆகிய இம்மூவர்கள் நட்பாம், சங்கலனாகிய சந்திரனுக்கு தங்கலனென்னும், புதன், பிங்கலனென்னும் சூரியன், ஆகிய இவ்விருவர்கள் நட்பாம், நியாயம் நிறைந்த நிலமகனாகிய செவ்வாய்க்கு—புங்கலனென்னும் குரு, சங்கலனென்னும் சந்திரன், பிங்கலனென்னும், சூரியன், ஆகிய இம்மூவர்கள் நட்பாம், தங்கலனாகிய புதனுக்கு—நங்கலனென்னும் சுக்கிரன், பிங்கலனென்னும் சூரியன், ஆகிய இவ்விருவர்கள் நட்பாம், புங்கலனாகிய குருவுக்கு—பிங்கலனென்னும் சூரியன், சங்கலனென்னும் சந்திரன், மங்கலனென்னும் செவ்வாய். ஆகிய இம்மூவர்கள் நட்பாம், மேன்மையுற்ற நங்கலனாகிய சுக்கிரனுக்கு—முங்கலனென்னும் சனி, தங்கலனென்னும் புதன் ஆகிய இவ்விருவர்கள் நட்பாம், முங்கலனாகிய சனிக்கு, தங்கலனென்னும், புதன், நங்கலனென்னும் சுக்கிரன் ஆகிய இவ்விருவர்கள் நெருங்கிய நல்ல சிநேகர்களென்று, பூமியின்கண், சோதிடவல்லவர்கள், மாதிடமாய்ச்சொல்லுவார்கள்—எ-று. 25

கிரக சமம்.

போற்றியசெங் கதிர்தனக்குச் சமன்புந்தி யொருவன்
புனிதமதிக் கிணைசெவ்வாய் குருசனிசுக் கிரனே

ஏற்றசெவ்வாய்க் கிணைசனிசுக் கிரரிருவர் தாமே
யினியபுதற் குச்சமனுஞ் சனிசெவ்வா யரசன்
நாற்றிசையெண் ணரசனுக்கே சமன்சவுரி யொருவன்
நலந்திகழ்சுக் கிரற்கிணைபொன் னவில்செவ்வா யிருவர்
தோற்றியிடுஞ் சனிதனக்கே சமனதா கவுமே
துய்யவியா ழந்தனையே சொல்வர்மிகத் தானே.

இ-ள். துதிபொருந்திய கதிரோனாகிய சூரியனுக்கு—மதிமகனென்னும், புதன் ஒருவனே, சமனும், பூரணச்சந்திரனுக்கு=காரணச்செவ்வாய், ஆரணக்குரு, தீரணச்சனி, வீரணச்சுக்கிரன், (ஆகிய நால்வரும்) சமன், மேன்மையுற்ற பூமகனாகிய செவ்வாய்க்கு=தீமனென்னும் சனி, காமனென்னும், சுக்கிரன், ஆகிய இவ்விருவர்களும், சமன், கானமுடையசாமனாகிய புதனுக்கு=தீமனென்னும், சனி, பூமனென்னும் செவ்வாய், சீமனென்னும் குரு, (ஆகிய இம்மூவர்களும்) சமன், நான்குதிசையிலுள்ளவர்களும் நன்கு மதிக்கப்பெறும், அருமையுள்ள குருவுக்கு=மிருதியென்னும் சனி (ஒருவனே) சமன், போக நன்மைகளைப் பிரகாசிக்கச்செய்கின்ற, யோகமுடைய, சுக்கிரனுக்கு=வாகான குரு, பாகானசெவ்வாய், (ஆகிய இவ்விருவர்களும்) சமன், இடையூறுதோற்றிவைக்குஞ் சனிக்கு=படிமீது உயர்வாகிய குருவையே சமானமுள்ளவரென்று, (அறிவுள்ளவர்கள்) அதிகமாகச் சொல்லுவார்கள். பூரணச்சந்திரனுக்கு=காரணச்செவ்வாய், ஆரணக்குரு, தீரணச்சனி, வீரணச்சுக்கிரன், சமன் என்றமையால், அமரபக்ஷச் சந்திரனுக்கோ, மேற்சொன்ன நால்வரும், சமனுக்கு மேற்பட்டவர்கள் என்பதையறிக—எ-று. 26

கிரக பகை.

சொல்லிரவிக் குறுபகைசுக் கிரன்சனியோ டிருவர்
சோமனுக்குப் பகையில்லைச் சொல்லவுமெக் காலே
அல்லலறுஞ் செவ்வாய்க்குப் பகைபுந்தி யொருவ
னனபுந்திக் குற்றபகை யம்புலியொன் றுகும்
நல்லவியா ழந்தனக்குப் புதன்வெள்ளி பகையாம்
நாடியசுக் கிரற்கிரவி நவிறிங்கள் பகையே
வல்லசனி தனக்கிரவி திங்களுடன் செவ்வாய்
மட்டுமே பகையென்று வழுத்துவரெக் காலும்.

இ-ள். உலகத்தவர்கள், துதிசொல்லப்பட்ட, அலரியாகிய, சூரியனுக்கு,=லோலனென்னும் சுக்கிரன், நீலனென்னும் சனி (ஆகிய இவ்விருவர்களும்) பகையாம், எந்தக்காலத்தும் சந்திரனுக்கு=பகைமையே இல்லையாம், துன்பமற்ற வேலனாகிய செவ்வாய்க்கு=மாலனென்னும் புதன், (ஒருவனே) பகையாம், தெரிச்சிகனாகிய புதனுக்கு=அரிச்சிகனென்னும்

சந்திரனே பகையாம், நன்மையுற்ற வியாழனுக்கு=தன்மைபெற்ற புதன், சுக்கிரன் (ஆகிய இவ்விருவர்களும்) பகையாம், போகத்தைவிரும்பிய சுக்கிரனுக்கு=செக்கிரனென்னும், சூரியன், பக்கிரனென்னும் சந்திரன், (ஆகிய இவ்விருவர்களும்) பகையாம், வலியுற்ற மந்தனாகிய சனிக்கு=முந்தனென்னும் சூரியன், இந்தனென்னும், சந்திரன், கந்தனென்னும் செவ்வாய், (ஆகிய இம்மூவர்களும்) பகையென்று பெரியோர்கள் எந்தக்காலமும், சொல்லுவார்கள்—எ-று. 27

(இராசிகளில்நின்ற கிரகங்களின் நட்பு ஆட்சி உச்சம் பகை நீசம் இவைகளை அறிவது.)

1. மேஷ விராசிக்கு.

வெள்ளியும் புதனு நட்பு விளங்கிய செவ்வா யாட்சி
ஒள்ளிய கதிரோ னுச்ச முயர்சனி நீச மாகும்
தெள்ளிய மதியோன் பொன்னன் சீரிய ராகு கேது
உள்ளூறும் பகையா மென்றே யோதினர் மேடத் தோற்கே.

இ-ள். மேடவிராசியில் நின்ற, சுக்கிரனும், புதனும் நட்பாம், விளக்கமுற்றசெவ்வாய் ஆட்சியாம், ஒளிவுபொருந்திய, சூரியன், உச்சமாம், நீட்சிபொருந்தியசனி நீசமாம், தெளிவுபொருந்திய சந்திரன், வியாழன், சீற்றமுடைய ராகு, கேது, துன்பமுட்கொண்ட பகையாகுமென்று பெரியோர் சொன்னார்—எ-று. 28

2. இடப விராசிக்கு.

சேய்சனி புதன்பொன் னட்புச் சீறிய புகரோ னாட்சி
தூயதோர் மதியே யுச்சந் துயர்தரும் பாம்பு நீசம்
காய்கதிர் பகையே யாகுங் கண்டன ரிடபந் தன்னில்
ஓதிய பொருள்க ளெல்லா முண்மையா யுரைக்க லாமே.

இ-ள். இடபராசியில் நின்ற, செவ்வாய், சனி, புதன், குரு, (ஆகிய நால்வரும்) நட்புக்கிரகங்களாம், சிறப்புற்ற சுக்கிரன், ஆட்சிக்கிரகமாம், பரிசுத்தமாகிய சந்திரன், உச்சக்கிரகமாம், சங்கடம் தரத்தக்க, இராகு, கேது நீசக்கிரகமாம், சுடுகின்ற சூரியன் பகைக்கிரகமாம், என்று சொல்லப்பட்டவைகளானபொருள்களை, எல்லாம், உண்மையாய்க்கண்டு, பெரியோர்கள் சொல்லக்கூடியவைகளாகும்—எ-று. 29

3. மிதுன விராசிக்கு.

சந்திரன் சனியே சுங்கன் றருங்குரு செவ்வாய் பாம்பு
முந்திய நட்ப தாகு முனிவிலாப் புதனே யாட்சி
உந்திய பரிவே டந்தா னுச்சமாம் வில்லு நீசம்
தந்திடுங் கதிரோன் மாற்றான் றாழ்விலா மிதுனத் தோற்கே.

இ-ள். தாழ்வில்லாத வாழ்வைத்தரும். புகழான மிதுனவிராசிக்கு= ஆழ்கடலிற்பிறந்த, சந்திரன், சனி, சுக்கிரன், குரு, செவ்வாய், ராகு,கேது, (ஆகிய இவர்கள்) நட்புக்கிரகங்களாம், கோபமில்லாத புதன், ஆட்சிக்கிரகமாம், வளைவுபெற்ற பரிவேடம் உச்சக்கிரகமாம், இந்திரதனுசு நீசக்கிரகமாம், சூரியன் பகைக்கிரகமாம்—எ-று. 30

4. கடக விராசிக்கு.

மேதையே நட்பு திங்கள் விளங்கிய வாட்சி யாகும்
சீதையே பொன்னே னுச்சஞ் சிறந்திடுஞ் செவ்வாய் நீசம்
ஓதிய கதிரோன் சுங்க னேங்கிய ராகு மந்தன்
போதவே பகையா மென்று போற்றினர் கடகத் தோற்கே.

இ-ள். சீதாலட்சுமிபோன்ற மாதரசே கேட்பாயாக கடகவிராசிக்கு= புதன் நட்புக்கிரகமாம், சந்திரன் விளங்கப்பெறும், ஆட்சிக்கிரகமாம், குரு, உச்சக்கிரகமாம், சிறப்புற்ற செவ்வாய் நீசக்கிரகமாம், சூரியன், சுக்கிரன், நீண்ட ராகு, கேது, சனி, (ஆகிய இவர்கள்) பகைக்கிரகங்களென்று, பெரியோர்கள், விசேடித்துச்சொன்னார்கள்—எ-று. 31

5. சிங்க விராசிக்கு.

அந்தண னுறவ தாகு மருங்கதி ராட்சி யாகும்
முந்திய தூம னுச்ச முனிவிலா நீச நுட்பம்
மந்தனே புகரோ னதி வணிகனே யரவே திங்கள்
தந்திடும் பகையே சிங்கந் தனக்கெனச் சாற்றி னாரே.

இ-ள். சிங்கவிராசிக்கு=புங்கவனாகிய, குருநட்புக்கிரகமாம், உலகத்தில்,அருமையாய்த்தோற்றும்,உதயகாரகனாகிய, சூரியன், ஆட்சிக்கிரகமாம், (நவக்கிரகங்களுக்கும், உப கிரகங்களுக்கும், முதன்மைபெற்ற) தூமகேது உச்சக்கிரகமாம், கோபமற்ற காலநுட்பம் நீசக்கிரகமாம், சனி, சுக்கிரன், செவ்வாய், புதன், ராகு, கேது, சந்திரன், (ஆகிய இவர்கள்) பகைக்கிரகங்களாம், என்று பெரியோர்கள் தெரிந்துகொள்ளச் சொன்னார்கள்—எ-று.

6. கன்னி ராசிக்கு.

திங்களோ டரவு செவ்வாய் செம்பொன்னே மந்த னின்னோர்
தங்கிய வுறவ தாகுஞ் சாற்றிய புதனே யாட்சி
பொங்கிய புதனே யுச்சம் புகரவ னீச மாகும்
செங்கதிர் பகையே யாகுந் தெரிவையற் கென்று செப்பே.

இ-ள். கன்னியாவிராசிக்கு=தன்னவனாகிய சந்திரன், தின்னவனாகிய ராகு, நன்னவனாகிய கேது, சின்னவனாகிய செவ்வாய், பொன்னவனாகிய குரு, என்னவனாகிய சனி, (ஆகிய இவர்கள்) தங்கம்பெற்ற நட்புக்கிரகங்க

ளாம். அறிஞனென்று, சொல்லக்கூடிய, புதன், ஆட்சிக்கிரகமாம், அறிவு மிகுந்த அப்புதனே, உச்சக்கிரகமுமாம, சுக்கிரன் நீசக்கிரகமாம், செவ்விய சூரியன், பகைக்கிரகமென்று சொல்லுக—எ-று. 33

7. துலா விராசிக்கு.

பண்டிதன் பொன்ன னங்கி பாம்ட னிவர்க டாமும்,
தண்டிடா வுறவா மாட்சி தரும்புக ருச்சங் காரி
வண்டமிழ் கதிரோ னீசம் வாழ்மதி பகைய தென்று
கொண்டதோர் துலாத்தி னேற்குக் கூறலாங் கோதை மாதே.

இ-ள். வாசனைதங்கிய மலர்மாலையையணிந்த மாசற்றகூந்தலையுடைய பெண்ணே, நிறையைக்கொண்ட, துலாவிராசிக்கு=புதன், குரு, செவ்வாய், ராகு, கேது, (ஆகியஇவர்கள்) நட்புக்கிரகங்களாம், சுக்கிரன், ஆட்சிக்கிரகமாம், சனி, உச்சக்கிரகமாம், சொல்லுதற்கரிய 'இனியதமிழில் வல்லமையுள்ள சூரியன், நீசக்கிரகமாம், ஒளிபொருந்திய சந்திரன், பகைக்கிரகமாம், என்று (பெரியோர்கள்) எடுத்துக்கொண்டதாகச் சொல்லலாம்-எ-று.

8. விருச்சிக விராசிக்கு.

பனிமகன் சுங்க னட்புப் பார்மக னுட்சி பாம்பு
முனிவில்லா வுச்ச மாகு முழுமதி நீச மாகும்
இனியனே யருக்கன் பொன்னு நீலனும் பகைய தென்றே
முனிவிலாத் தேளி னுற்கே முறைமையாய் மொழிவர் மாதே.

இ-ள். பெண்ணே, விருச்சிகவிராசிக்கு=புதன், சுக்கிரன், நட்புக்கிரகங்களாம், செவ்வாய், ஆட்சிக்கிரகமாம், ராகு, கேது, கோபமில்லாத, உச்சக்கிரகங்களாம், பூரணசந்திரனும், நீசக்கிரகமாம், இவ்வுலகுக்கினியனுன, எல்லவனுன, சூரியன், நல்லவனுனகுரு, வல்லவனுனசனி, (ஆகியஇவர்கள்) பகைக்கிரகங்களாம் என்று, முறைமையாகப் பெரியோர்கள் அருமையாய்ச் சொல்லுவார்கள்—எ-று. 35

9. தனு விராசிக்கு.

பகலவன் புகரோன் காரி பாம்புநற் புதனை யிந்து
இகலிலா வுறவ தாகு மிறைவனே யாட்சி யாகும்
நவமிகு சிலையே யுச்ச நாட்டிய வட்ட நீசம்
நிலமகன் பகையே யாகு நெடியதோர் தனுவி னுற்கே.

இ-ள். நீட்சிபொருந்திய, தனு விராசிக்கு=சூரியன், சுக்கிரன், சனி, ராகு, கேது, புதன், சந்திரன், (ஆகியஇவர்கள்) பகையில்லாத) நட்புக்கிரகங்களாம், குரு, ஆட்சிக்கிரகமாம், நன்மைமிகுந்த, இந்திரதனுசு, உச்சக்

கிரகமாம், (வட்டமாய் நாட்டியிருக்கின்ற) பரிவேடம், நீசக்கிரகமாம், செவ்வாய், பகைக்கிரகமும், ஆகும்—எ-று. 36

10. மகர விராசிக்கு.

பண்டித னோடு சுங்கன் பாம்புட னுறவ தாகும்
மண்டிய சனியே யாட்சி மங்கல னுச்ச னாகும்
கொண்டதோர் குருவே நீசங் கூரிய கதிரோன் றிங்கள்
கண்டநற் பகையே யாகுங் காட்டிய மகரத் தோறகே.

இ-ள். இதிற்காட்டிய மகரவிராசிக்கு=புதன், சுக்கிரன், ராகு, கேது, (ஆகியஇவர்கள்) நட்புக்கிரகங்களாம், குற்றம் பொருந்தியசனி, ஆட்சிக்கிரகமாம், செவ்வாய் உச்சக்கிரகமாம், நன்மையைக்கொண்ட குரு, நீசக்கிரகமாம், கூர்மைதங்கிய நேர்மையுள்ள கிரணத்தையுடைய, சூரியன், சந்திரன், (ஆகியஇவர்கள்) பகைக்கிரகங்களுமாம்—எ-று. 37

11. கும்ப விராசிக்கு.

என்றுழாய் புதனும் வெள்ளி யிறைவனே யுறவ தாகும்
திண்டிறற் சனியே யாட்சி செப்பிய நுட்ப முச்சம்
கண்டதோர் தூம னீசங் கலைமதி புவிசேய் பாம்பு
கொண்டநற் பகையே யாகுங் குறித்திடுங் கும்பத் தோர்க்கே.

இ-ள். இதிற்குறித்துச் சொல்லப்பட்ட கும்பவிராசிக்கு=சூரியன், புதன், சுக்கிரன், குரு, (ஆகிய இவர்கள்) நட்புக் கிரகங்களாம், பலம்பொருந்திய சனி, ஆட்சிக்கிரகமாம், காலநுட்பம், உச்சக்கிரகமாம், பூமியின் கெடுதற்றன்மையைக்கண்ட தூமன் நீசக்கிரகமாம், சந்திரன், செவ்வாய், ராகு, கேது, (ஆகியஇவர்கள்) பகைக்கிரகங்களுமாம்—எ-று. 38

12. மீன விராசிக்கு.

அரவொடு சனியே திங்க ளருக்கனே யுறவ தாகும்
பரவிய குருவே யாட்சி பார்க்கவ னுச்ச னாகும்
தரைமகிழ் புதனே நீசன் றரைமகன் பகைய தாகும்
கரவிலாக் கயலி னுற்கே கனங்குழை மடந்தை கேண்மோ.

இ-ள். சாதனமான நூதனக் காதணிகளைக்கொண்ட பெண்ணேகேள், ஒளித்தலில்லாத மீனவிராசிக்கு=இராகு, கேது, சனி சந்திரன், சூரியன், (ஆகியஇவர்கள்) நட்புக்கிரகங்களாம், நன்மைபொருந்திய குரு, ஆட்சிக்கிரகமாம், சுக்கிரன், உச்சக்கிரகமாம். பூதலத்தோர் புகழ்ந்து சந்தோஷிக்கத்தகுந்த புதன், நீசக்கிரகமாம், செவ்வாய்பகைக்கிரகமுமாகும், (சொட்சேத்திரம். ஆட்சி யென்பது, சொந்தக்ஷேத்திரம் என்றறிக)—எ-று. 39

பகல் இரவு காலங்களிற் சாதக குளிகன் நிற்கும் நாழிகையறிய.

களிப்பான குளிகன்வகை பார்த்திடுவாய் மின்னே
கதிரவனுக் கிருபத்தா றுமிரவிற் பத்தாம்
மிளிர்திங்க ளிருபத்தி ரண்டிரவி லாறும்
மேற்செவ்வாய் பதினெட்டா நிசியினிலி ரண்டாம்
ஒளிர்புதனுக் கீரேழா மிரவிருபத் தாறு
மோதுகுரு பத்திரவி லுயரிருபான் ரெண்டாம்
குளிர்வெள்ளிக் கிருமூன்று மாலைபதி னெட்டாங்
கூறுசனிக் கோரிரண்டா மேழிரண்டா நிசிக்கே.

இ-ள். மின்னலிடை அன்னநடை. வன்னவுடை, பின்னல்சடையுடைய பெண்ணே, தனதாரகத்தைப் பொருந்தி சந்தோஷத்தைக் கொடுக்கின்ற சாதக குளிகன்நிற்கும் நாழிகைவிவரத்தை யறியுங்கால், ஞாயிற்றுக்கிழமை, பகலில் (26) இரவில், (10) திங்கட்கிழமை, பகலில் (22) இரவில் (6) செவ்வாய்க்கிழமை, பகலில் (18) இரவில் (2) விளங்காநின்ற புதன்கிழமை, பகலில் (14) இரவில், (26) உபதேசித்தல் பொருந்திய, வியாழக்கிழமை, பகலில் (10) இரவில், (22) குளிர்ச்சிபொருந்திய வெள்ளிக்கிழமை பகலில் (6) இரவில் (18) சனிக்கிழமைபகலில், (2) இரவில் (14) இப்படியாக மேலே சொல்லப்பட்ட வாரங்களில், அடியிற்கண்ட பாவின்படி, பகல், இரவில், குறித்த தொகையின் முகூர்த்தநாழிகைவரை குளிகன் நிற்பானென்று அறியக்கடவாய்—எ-று.

வேறு விதமாய்ச் சொல்வாறுமுளர் அவையாவன:—

பகற் குளிகன்.

"ஞாயிறு முகூர்த்த மேழாம் நன்மதிக் காறுஞ் செவ்வாய்க்
கேயவைந் தாகும் புந்திக் கீரிரண் டாம்பொன் மூன்றும்
தூயநற் புகர்க் கிரண்டாஞ் சுன்னினுக் கொன்ற தாகும்
ஆயவிம் முகூர்த்தத் தோடே யற்றிடுங் குளிக னெல்லில்."

இராக் குளிகன்.

"கதிரவன் றனக்கு மூன்றுங் கவின்மதிக் கிரண்ட தாகும்
சித்திபெறு செவ்வாய்க் கொன்றுஞ் சாற்றிய புகத்தே ழாகும்
மதிவளர் பொன்னுக் காறும் மன்புகர்க் கைந்தாம் நான்கு
கதிர்மகற் காமு கூர்த்தங் காட்டிய பகல்போற் கொள்ளே."
என்பதனு லறிக.

நவக்கிரக தேசம்.

(இன்ன கிரகத்திற்கு இன்னதேச மெனல்.)

வே று.

பாரெலாஞ் சசிகதிரோ னிருவர்க்கு மாகும்
பனிவரைகே கயத்தினடு பாம்புசனி நாடாம்
ஏருலவுங் கேகயங்தொட் டெழில்விந்த மட்டு
மிந்துசுதன் பூமியென்றே யியம்புவர்நல் லோர்கள்
கார்செறியும் விந்தமுதற் கௌதமைமட் டாகக்
கனகனுக்காங் கிருஷ்ணவரைக் காப்பியனு டாமே
சீருலவு கிருஷ்ணமுத லிலங்கைவரை யந்தச்
செவ்வாயின் றேயமென்றே செப்புவர்நல் லோரே.

இ-ள். உலகம்பூராவும், சந்திர சூரியர்களிருவருக்காம், இமயமலைக்கும், கேகயநாட்டுக்கும், இடையிலுள்ள தேசங்கள், ராகு, கேது, சனி, ஆகிய மூவர்களுக்கும், உரியநாடாம், அழகிய கேகய நாடுமுதல், விந்திய பர்வதம் வரையில் உள்ள தேசங்கள், புதனுடைய நாடாம், மேகம் நிறைந்த விந்திய பர்வதம், முதல் கௌதம நதிக்கரைவரைக்கு முள்ள, தேசம், குருவினது நாடாம், கௌதம நதி முதல், கிருஷ்ணாநதிவரைக்கு முள்ள தேசங்கள், சுக்கிரனது நாடாம், சிறப்புப்பொருந்திய, கிருஷ்ண நதிமுதல், இலங்கைவரையில், உள்ள தேசங்கள், செவ்வாயின், நாடாமென்று, நல்லவர்கள் சொல்லுவார்கள்—எ-று, (41)

மூலத் திரிகோணம்.

வே று.

குலவிய மூலத் திரிகோணந் தானே
கூறிடிற் சிங்கமே ரவிக்காம்
நிலவினுக் கிடப மாடுசேய்க் கென்ப
நிகழ்த்திடுங் கன்னியே புதற்காம்
விலகிய வில்லே பொன்னினுக் காகும்
வெள்ளிக்குக் கோலென விளம்பும்
நலமறு சனிக்கே மகரம தாகு
நறுமணங் கமழ்குழன் மாதே.

இ-ள். மல்லிகைமுல்லை மலரணிய நல்ல வாசனைவீசும் சேல்போன்ற கண்களையுடைய பெண்ணே, வல்லபம்பொருந்திய கிரகங்கள், சந்தோஷித்திருக்குமிடங்களாகிய, மூலத்திரிகோணத்தைக் கூறுமிடத்து, சூரியனுக்கு—சிம்மமும், சந்திரனுக்கு—ரிஷபமும், செவ்வாய்க்கு—மேஷமும், புதனுக்கு-

கன்னியும், குருவுக்கு—தனுசும், சுக்கிரனுக்கு—துலாமும், சனிக்கு—மகரமும், ஆகுமாம், என்று பெரியோர் தெரியச்சொல்லுவர்—எ-று. 42

ஆண் பெண்ணறிய.

வேறு.

பாரின் மந்தன் பரிந்தொற்றை ராசியில்
சேர நிற்கிலாண் பிள்ளைசெனித்திடும்
சீரு லாவிய செவ்வாயி ரட்டையில்
பேர வாவொடு நிற்கிற்பெண் பிள்ளையே.

இ-ள். உலகத்தில் நிலைபெற்ற, சனி பிரியத்தோடு, ஒற்றைராசி பற்றி நின்றால், ஆண்ஜெனனமும், சிறப்புப்பொருந்திய, செவ்வாய்; இரட்டை ராசிகளில், ஆசையுடன், நின்றால், பெண்பிள்ளை ஜெனனமுமாம்—எ-று.

ஒற்றைராசி=மேஷம், மிதுனம், சிம்மம், துலாம், தனுசு, கும்பம், ஆகிய ஆறும், ஆணிராசியாம்.

இரட்டைராசி=ரிஷபம், கற்கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம், ஆகிய ஆறும் பெண்ணிராசியாம்.

வேறு.

பிள்ளைமதி வெள்ளிசன்மத் திருக்கிலந்த வீடு
பெண்ணாகும் ராசியெனிற் பெண்ணாகப் பிறக்கும்
தெள்ளுமொற்றை ராசிபின்னும் ரெட்டைராசி முன்னும்
திங்களோரை யினிற்பெண்ணே செனித்திடுமே ரெட்டை
உள்ளரா சிகளொற்றை யங்கிசம்பெண் ணாகு
முயர்பெண்ணங் கிரகங்க ளூறுசன்மத் திருக்க
வெள்ளிமுதற் பெண்கிரகம் பார்க்கிற்பெண் பிறக்கும்
மேலிரவி குசன்பிந்தி யிரட்டையுறின் மின்னும்.

இ-ள். அமரபட்சச் சந்திரனும், சுக்கிரனும், லக்கினத்திலிருக்க அந்த வீடு, பெண்ராசியாகில், பெண்பிள்ளையே பிறக்கும், தெளிவுற்ற ஒற்றைராசியின் பிற்பாகமும், இரட்டைராசியின் முற்பாகமும், சந்திரன் தற்கால ஓரைகளில், பெண்ணே பிறக்கும், இரட்டைராசிகளில், ஒற்றை நவாங்கிசத்தில் பிறக்கில், பெண்ணேயாம், பெண் கிரகங்கள் பொருந்திய ஜென்மத்திலிருக்க, சுக்கிரன், சந்திரன், ராகு, ஆகிய பெண் கிரகங்கள் பார்க்க, பெண்ணே பிறக்கும், சூரியன், செவ்வாய், புதன், ஆகிய இவர்கள், இரட்டைராசிகளில் நின்றால், பெண்ணாம்—எ-று. 44

மின்னுகலை நிறைந்தமதி யேவிலாண் பிறக்கும்
விரவுமொற்றை முற்பாதி யிரட்டையும்பிற் பாதி

என்னிலாண் பிள்ளையொற்றை ராசிதனி லிரட்டை
யேற்றனவாங் கிசஞ்சனன மென்றிடிலா மாணே
மன்னவன்சூ ரியனொற்றை ராசியுறி லாணும்
வரும்புருட ராசிதனிற் புருஷக்கோண் மருவ
பின்னுமது சன்மமதாய்ப் புருஷக்கோ ணோக்கப்
பிறந்திடுவ தாண்பிள்ளை யெனப்பேச லாமே.

இ-ள். அவ்விரட்டைராசிகளிற், பூரண சந்திரன் நின்றால், ஆண் பிறக்கும், கலந்துள்ள ஒற்றைராசியின் முற்பாதியும், இரட்டைராசியின் பிற்பாதியுமானால், ஆண்பிறக்கும், ஒற்றைராசியில் ஜெனிக்க, இரட்டைராசி நவாங்கிஷம் பொருந்தினால், ஆண்பிறக்கும், குருவும், சூரியனும், ஒற்றைராசியில், நின்றால், ஆண் பிறக்கும், வருகின்ற, ஆண் ராசிகளில், ஆண்கோட்கள் நிற்க, ஆண்ராசியில், ஆண்கோட்கள் பார்க்கப் பிறப்பது, ஆண்பிள்ளை யென்றே சொல்லப்படும்—எ-று. 45

பேசும்பெண் புருஷக்கோ ளிரண்டுஞ் சன்மம்
பெற்றிருக்கத் தானபலன் பிரித்துப் பார்த்து
நேசமுட னுறைகிரகப் பலனும் பார்த்து
நிச்சயித்தாண் பெண்ணென்றே நிகழ்த்த வேண்டும்
தேசுபெறு புருஷலக் கினத்தா லாணே
சேயிழையிற் பெண்ணாகுந் திங்கள் வெய்யோன்
பாசமுடன் பெண்வீட்டி லிருக்கிற் பெண்ணும்
பார்த்திபனும் புருஷமனை பற்றி நிற்கில்.

இ-ள். சொல்லுகின்ற பெண் கிரகமும், ஆண் கிரகமுமாகிய, இரண்டும் ஜென்மத்தில் நிற்கில், இடத்தின் பலத்தையும், கிரகத்தின் பலத்தையும், பார்த்து, ஆண்ராசி, ஆண்கிரகம் பலத்தினால், ஆண்பிள்ளை யென்றும், பெண்ராசி கிரகபலத்தினால் பெண்பிள்ளை யென்றும், சொல்லவேண்டும், அழகுபெற்ற புருஷலக்கின முதித்தால், ஆண் குழந்தையென்றும், பெண் லக்கின முதித்தால், பெண்ணென்றும், சந்திரனும், சூரியனும், பிரியமுடன் பெண்வீட்டில் நின்றால், பெண்ணும், (அவ்விருவரும்) ஆண் வீட்டில் நின்றால், ஆணாகவும் பிறக்கும்—எ-று. 46

நிற்கின்ற வைந்தேழுக் கதிபர்சுப ராகி
நேர்ந்தசுப ரொடுகூடி நெடியசுபர் நோக்க
விற்கொண்ட நுதலாய்கேந் திரத்திருக்க வவர்கள்
மேவுதிசை தனிலிரட்டைப் பிள்ளைசெனித் திடுமால்
தற்கொண்டு மாட்சியுறிற் பிள்ளைரெட்டை யாகா
சந்திரலக் கினத்ததிபன் மூன்றிடத்தோன் கூடி

அற்கொண்ட வரவுறினு நோக்கினுமே யிரட்டை
யாமிவர்க ளாண்பெண்ணென் றறிந்துரைப்பர் பெரியோர்.

இ-ள். விற்போன்ற புருவத்தையுடைய பெண்ணே, நிலைபெற்ற, ஐந்தேழுக்குடையவர்கள், சுபக்கிரகங்களாகி, கூடுதற்குரித்தாகிய, சுபக்கிரகங்களுடன் சேர்ந்து நீடிய சுபக்கிரகங்களாற் பார்க்கப்பெற்று (1) (4) (7) (10) ஆகிய கேந்திரங்களில் நிற்க, அவர்களுடைய, திசாபுத்தியாகில், இரட்டைப் பிள்ளை பிறக்கும், ஏதாவது, ஒரு கிரகம், ஆட்சி பொருந்தினல், ஒரே பிள்ளைதான் பிறக்கும், சந்திரா லக்கினத்துக்குடையவனும் மூன்று மிடத்ததிபனும், கூடிநிற்க, அதோடு, இருள் நிறத்தைக்கொண்ட, இராகு, சேர்ந்தாலும் பார்த்தாலும், இரட்டைப் பிள்ளையாம், இவர்களில் ஆண் பெண் பலத்தையறிந்து, ஆணிரட்டை, பெண்ணிரட்டை, ஆண்பெண்ணிரட்டை, எனத்தேர்ந்து பெரியோர்கள் சொல்லுவார்கள்—எ-று. 47

வே று.

பெரிதுள கிழமை பெண்ணு ணறிந்து
பரிதி யுதயம் பார்க்குங் கடிகையைத்
துரிதமா யைங்காற் றுகையினிற் போக்கி
வருகுவ தாண்பெண் ணெனவகுத் திடுவாய்.

இ-ள். பெருமைபெற்ற அருமையுற்ற எழுகிழமைகளில், பெண்ணாள், ஆண்நாளறிந்து, சூரியோதயமுதல், எந்தநாழிகைக்குப் பார்க்கவேண்டுமோ, அந்த, நாழிகைவரை, ஒன்றேகால், நாழிகை, வீதம், கழித்துப்போக, மீதம், எந்தவேளையில் வருகிறதோ, அதைஅறிந்து, ஆண்பெண்ணென்று வகுத்துச் சொல்லக்கடவாய்—எ-று. 48

ஆண் பெண் நாட்களின் விபரம்.

வகுத்திடும் வார மதிபுகர் பெண்ணும்
தொகுத்தசேய் மந்தன் சூரியன் பொன்னும்
பகுத்திடு மாணும் பகர்புது னமிசம்
நிகழ்த்திலொன் றுண்பெண் ணுகிடு மிரண்டே.

இ-ள். திங்கட்கிழமையும், வெள்ளிக்கிழமையும். பெண்ணுட்களாம் வரிசையுற்ற, செவ்வாய், சனி, சூரியன், வியாழன், இந்தவாரங்கள், ஆண் நாட்களாம், புதவாரமானது, அப்புதன், ஒற்றைராசியில் நின்றல், ஆண், நாள், எனவும், இரட்டைராசியில் நிற்கில், பெண்நாளெனவுங்கொள்க-எ-று.

புதன், ஆணுகவும், பெண்ணுகவும், மாறுகிறபடியால் அலிக்கிரகமென்றும், சொல்லுதல் காண்க.

இலக்கின நிட்சயம்.

வேறு.

உதையாதி கடிகைதனை முந்நான்கி லீந்தே
யுற்றசே டந்தன்னை யாடாதி யெண்ணிச்
சிதையாமற் பார்க்கிலக் கினமாகு மந்தத்
திரிகோண மானாலு மாகுமே யின்னம்.
மூதற்காணும் லக்கினத்துக் கேழாகுந் தானம்
முதற்கொண்டு திரிகோண மானாலு மாகும்
மதயானை யிருமருப்புக் கனகவெற்பும் வாச
வனசமுகை போலுமுலை வஞ்சியரே கேளாய்.

இ-ள். மதங்கொண்ட யானையின் இரண்டு மருப்புப்போலும், பொற்கிரிபோலும்; வாசத்தையுடைய தாமரை அரும்புபோலும், தனத்தையுடைய பெண்ணே, கேட்பாயாக, அன்று சூரியோதயமுதல்; ஜெனனநாழிகைவரையில், உள்ள நாழிகையை, (12)ல் கழித்துவிட்டு, மிகுந்ததை, மேடமுதலாக, ஒவ்வொன்று யெண்ணிப்பார்க்க, வருவது லக்கினமாகும், அல்லது அதற்கு, (1) (5) (9) தாமிடமாகிய, திரிகோணராசி, ஆனாலும், ஆகும், மேலும், முதற்கண்ட லக்கினத்திற்கு, ஏழாமிடமானாலும், அவ்வேழாமிடத்திற்குத் திரிகோண விராசியிலும் பொருந்துமாம்—எ-று. 50

வேறு.

வஞ்சியே யொற்றை லக்கினமுற் பாதி
மார்த்தாண்ட னோரைபிற் பாதிமதி யோரை
மிஞ்சிநின்ற ரெட்டைக்கு முன்றிங்க ளோரை
மீந்திடும்பிற் பாதிக்கோ வெய்யோனோ ரையதாம்
செஞ்சொன்மதி யோரையதே காணுமா யின்னே
சேயிழையே பிறக்குமெனச் செப்ப லாகும்
கஞ்சமலர் நண்பிரவி யோரையதே யாகிற்
காளையே பிறக்குமென வேகருதல் வேண்டும்.

இ-ள். பெண்ணே, ஒற்றைராசியாகிய, ஆணிராசியின், முற்பாதி, சூரியவோரையாம், பிற்பாதி, சந்திரவோரையாம், இரட்டையிராசியாகிய பெண்ணிராசியின் முற்பாதி, சந்திரவோரையாம், பிற்பாதி. சூரியவோரையாம், இவற்றுள், சிறப்பித்துச் சொல்லப்பட்ட சந்திரவோரையில், பெண்பிறக்குமென்றும், தாமரைமலரின் நண்பனான, சூரியவோரையில், ஆண்பிறக்குமென்றும், எண்ணிச்சொல்லுதல் வேண்டும்—எ-று. 51

இராசி வடிவு நிறம் முதலியன.

வேறு.

செப்பிய ராசி வடிவுகண் டுரைக்கிற்
சிவந்திடுந் தகருரு மேடந்
தெரிந்திடு தவளப் பெற்றமே யிடபஞ்
செயம்பெறு மிதுனமென் பதுவும்
ஒப்பொடு வீணை கைமயி லுடனே
யோதுதண் டாயுதம் பச்சை
யொளிருரு வாண்பெண் கடகஞெண் டுருவ
முளைத்தபா திரிமலர் நிறமாம்
வெற்படர் சிங்கம் புகைநிற மடங்கன்
மின்கனி யோடமே நடத்தும்
மெல்லிய லழுக்கு வெள்ளைபொன் னிறத்தாள்
விரிதுலாம் புருடனுங் கரத்தில்
தப்பிலாத் துலக்கோ லவ்வண நிறைகற்
றுன்பயில் வலக்கையிற் பிடிப்போன்
தங்கிய விரிச்சி கங்கருந் தேளாந்
தக்கதே ஞெண்டிவை புழுவே.

இ-ள். பன்னிரண்டாய்ச் சொல்லப்படுகின்ற, இராசிகளின், வடிவுநிறம், முதலியவைகளைச் சொல்லுமிடத்து, மேடம், சிவப்புநிறமும், ஆட்டினுருவம், ரிஷபம், வெள்ளைநிறம், மாட்டினுருவம், மிதுனம், பச்சைநிறம், ஓர் பெண் கையில், மயிலும், வீணையும் வைத்துக்கொண்டும், ஓர் ஆண்கையில், தண்டாயுதம், வைத்துக்கொண்டும், இருவர்களும் கலந்துநிற்கும், உருவம். கடகம், பாதிரிமலரின் நிறம், நண்டினுருவம், சிம்மம், புகைநிறம், சிம்மத்தினுருவம், கன்னி, அழுக்கு வெள்ளை கலந்தநிறம், ஓடம் நடத்துகின்ற பெண்ணினுருவம், துலாம், அழகிய வெள்ளைகலந்த சிவப்புநிறம், வியாபாரஞ் செய்கிறவன்போல், வலக்கையில் தராசுபிடித்து நிறுத்துக்கொண்டிருக்கப்படும், மனிதனுருவம், விருச்சிகம், கருப்புநிறம், தேனினுருவம்-எ-று.

வேறு.

வேய்த்தனு புருடன் குதிரைபோ லரைக்கீழ்
மின்னிரு தாணிறம் பொன்னும்
ஆயமீன் மகரங் காலுநல் வதன
மானுமா மழுக்குவெண் ணிறமா

மேயதோர் கும்பம் புருடனுஞ் சிரத்தி
லெடுப்பதுங் குடங்கரு நிறத்தோன்
பாய்தலைக் கெண்டை யிரண்டுமீன் புழுவாம்
பகர்நிற மழுக்குறுஞ் சிவப்பே.

இ-ள். தனுசு பொன்னிறம், அரைக்குக்கீழ் இரண்டுபாதத்தோடு, நிற்கின்ற குதிரைபோன்ற புருடனுருவம், மகரம், அழுக்குற்ற வெள்ளைநிறம், பாதிபாகம், மீனுருவமும், பாதிபாகம் மானுருவமுமாம், கும்பம், கறுப்புநிறம், குடத்தைச் சிரசிலேந்திய புருடனுருவம், மீனம், அழுக்குக்கலந்த சிவப்புநிறம், ஒன்றுக்கொன்று பாய்தலைக்கொண்ட, இரண்டு கெண்டைமீனுருவம்—எ-று. 53

இராசி விழிப்பு.

வேறு.

சொல்லு மேடந் தனுமகரந் துலங்கு ஞெண்டுந் தண்டிடபம்
வெல்லு மிவைசந் திரற்குறவாய் விழிப்பாங் கங்குல் விடியளவும்
சொல்லுங் கும்பங் கோன்மீனஞ் சிங்கம் பெண்டே ளாறுக்கும்
எல்லிற் பொழுதே விழிதெரியு மிரவிக் குறவா யினிதாக.

இ-ள். சொல்லக்கூடிய மேஷம், தனுசு, மகரம், கடகம், மிதுனம், ரிஷபம், (ஆகிய இவ்வாறு ராசிகளும்) சந்திரனுக்குறவுபோலும், இராவிழிப்பாம். கும்பம், துலாம், மீனம், சிம்மம், கன்னி, விருச்சிகம், (ஆகிய இவ்வாறு ராசிகளும்) சூரியற்குறவுபோல பகல்விழிப்பாம்—எ-று. 54

இனிய சிங்க மெருந்தாடோ டிரவி யுதிக்கிற் குருடாகும்
கனியுந் தண்டு ஞெண்டுக்குங் கங்குற் பொழுதிற் கண்ணில்லை
தனுவு மகர மிராச்செவிடாந் தராசுந் தேளும் பகற்செவிடாம்
மனிதன் கும்பம் பகன்முடமா மருவு மீன மிராமுடமாம்.

இ-ள். சிம்மம், ரிஷபம், மேடம், (ஆகிய மூன்றுராசிகளும்) பகல் குருடாம், கன்னி, மிதுனம், கடகம், (ஆகிய மூன்றுராசிகளும்) இரவிற்குருடாம், தனுசு, மகரம், (ஆகிய இரண்டுராசிகளும், இராச்செவிடாம், துலாம், விருச்சிகம், (ஆகிய இரண்டுராசிகளும்) பகற்செவிடாம், கும்பராசி, பகல்முடமாம், மீனவிராசி இரவில் முடமாம்—எ-று. 55

கிரகங்களின் ஜாதி நிறங் கதிர்முதலியன.

வேறு.

ஆதவன் பவள நிறம்புரு டக்கோ
ளரசனுங் கிரணமைந் துடையோ

னம்புலி தவள நிறம்வைசி யப்பெண்
ணணிகிர ணம்மெழு மூன்றும்
ஓதிய சேயான் செந்நிற மரச
னுற்றநற் கிரணமே மூளனு
மோங்கிய பச்சை நிறம்புதன் வைசிய
னுயர்வலி யொன்பது கிரணன்
பீதகன் புருடன் குங்கும நிறத்தோன்
பிராமணன் றசகிர ணத்தோன்
பிருகுபெண் வெண்மை யந்தண னீரெண்
பெற்றநற் கிரணமே யுடையோன்
சூதனுங் காரி மைவண நபுஞ்சன்
சூத்திரன் சுருதியாங் கிரணன்
சூழ்கரும் பணிசெம் பாம்பிரு கோளுஞ்
சொல்வரீ னக்குல மென்றே.

இ-ள். பருதியாகிய, சூரியன், பவளநிறம், ஆண்கிரகம், க்ஷத்திரியஜாதி ஐந்துகிரணமுடையவன், இருதியாகிய, சந்திரன், வெண்மைநிறம், பெண் கிரகம், வைசியசாதி, யிருபத்தொருகிரணமுடையவன், குருதியாகிய, செவ் வாய்சிவப்புநிறம், ஆண்கிரகம், க்ஷத்திரியஜாதி, ஏழுகிரணமுடையவன், நி ருதியாகிய, புதன், பச்சைநிறம், அலிக்கிரகம், வைசியஜாதி, ஒன்பதுகிரண முடையவன், சுருதியாகிய, குரு, பொன்னிறம், ஆண்கிரகம், பிராமண ஜாதி, பத்துக்கதிருடையவன், பிருதியாகிய, சுக்கிரன், வெள்ளைநிறம், பெண்கிரகம், பிராமணஜாதி, பதினாறு கிரணமுடையவன், செங்கதிரோன் மகனாகிய,சனிகறுப்புநிறம், அலிக்கிரகம்,சூத்திரஜாதி,நான்குகிரணமுடைய வன், கருதியாகிய, ராகு, கறுப்புநிறம், பஞ்சமஜாதி, பொருதியாகிய,கேது, சிவப்புநிறம், பஞ்சமஜாதி, என்று சோதிடமுணர்ந்த பெரியோராற் சொல் லப்படும், சனிசேர்க்கைக்காரணத்தால், ஆண்கிரகமுமாகும், ராகு, கேது, பெண்கிரகம்,சிலவிடங்களில் (3) கதிர் உளதென்றும்,கூறியுள்ளார்—எ-று.

சொல்லிய ரவிக்குச் சிரசுமத் தியினிற்
றுலங்குகூ ரிலாமன்மே னேக்குந்
துய்யகொம் புளதாம் வெண்பிறை தனக்கே
சொற்றனர் கொம்பிலை யென்றே
வல்லசெவ் வாய்க்குச் சிரநடு மேலாய்
வளர்ந்தெழு கூரிய கொம்பாம்
மாலவன் றனக்கே சிரத்தொரு புறத்தின்
மருவிய கொம்புள தாகும்

நல்லபீ தகற்கே சென்னிமத் தியினி
நாடிடு கொம்பென நவில்வர்
நாடுசுக் கிரற்குச் சென்னியின் பக்க
நலமுடன் செறிந்திடு கொம்பாம்
அல்லல்சேர் காரி யிருவகைப் பாம்பு
மாகிடு மூவர்க டமக்கு
மறுத்திட மறுப்பட் டிருந்துகீழ் நோக்கு
மாகிய கொம்புள தாமால்.

இ-ள். மேலாகச்சொல்லிய, சூரியனுக்கு = தலையின் நடுவில்மேல், நோக்கமாகிய, கூர்மையில்லாத, சுத்தமுடைய, ஒருகொம்புண்டாம், சந்திரனுக்குக்=கொம்பேகிடையாது, வன்மைமிகுத்த, செவ்வாய்க்கு=தலைநடுவில், மேலாகவளர்ந்த, கூர்மையான,ஒரு கொம்புண்டாம்,புதனுக்கு=தலையின்பக்கத்தில்பொருந்திய ஒரு கொம்புண்டாம்,குருவுக்கு=தலையின் மத்தியில்,ஒருகொம்புண்டாம்,சுக்கிரனுக்கு=தலையின்பக்கத்தில்,பொருந்திய ஒரு கொம்புண்டாம், துன்பம்பொருந்திய சனி, ராகு, கேது, (ஆகியமூவர்களுக்கும்) அறுக்கப்பட்ட மருவோடுகூடிய கீழ்வளைந்துள்ள ஒவ்வொருகொம்புகளுண்டாம்—எ-று. 57

பஞ்ச பூதக்கிரகம்.

வே று.

கண்டபஞ்ச பூதமாய் நின்றவாறு
கருதுவாய் செவ்வாயே பிருதிவாகும்
மிண்டியசுக் கிரன்றனப் பானபூதம்
மேலான வக்கினியே குருவதாகும்
கொண்டிருந்த வாயுவே புந்தியாகுங்
குலவியநன் னுதன்மாதே கூறக்கேணீ
கொண்டலுறு மாகாய மானபூதங்
கோதுற்ற சனியென்றே குறித்தார்மேலோர்.

இ-ள். பிரகாசிக்கும் பிறைபோன்ற நெற்றியையுடையபெண்ணே,இங்ஙனம், கூறுகின்றதைக் கவனித்துக் கேட்பாயாக, தோன்றக்கூடிய, நிலம், நீர், தீ, காற்று, விசும்பு, என்கிற கிரகங்களெதுவென்னில், செவ்வாய், பிருதிவி, சுக்கிரன், அப்பு, குரு, தேயு,புதன்,வாயு,குற்றமுள்ளசனி, கொண்டலுலவும், அண்டமென்னும் ஆகாயம், (ஆகிய பஞ்சபூதங்களாகுமாம்) இதிற்சொல்லாதொழிந்த கிரகங்களாகிய, சந்திரனை, அப்புகிரகமென்றும், சூரியனை, தேயுக்கிரகமென்றும் ராகு, கேதுக்களை, ஆகாசக்கிரகமென்றும் சில சோதிட நூற்களுமுளது—எ-று. 58

இராசி மான சங்கிகை.

வேண்டியமே டம்நாலே காலென்றோதும்
மேன்மையிலங் கைக்ககசா மிருஞ்சோணாட்டில்
ஈண்டியதோர் சாயைரெண்டுங் கூட்டிக்கண்ட
விலக்கமா மதுரையெழிற் காஞ்சிகாசி
நீண்டதிக்கும் பெங்களூர் தனக்குஞ்சாயை
நின்றதுபார்த் தாற்குறைந்து நிற்குமேடம்
மாண்டகைசேர் விழுச்சாயை கண்டாற்சன்ம
மாகுமனை லக்கினசுத்தி யறிந்துசெப்பாய்.

இ-ள். மிக மேன்மைபொருந்திய, இலங்கைநாட்டிற்கு, அகசாகவேண்டியது, மேடம், நாலேகால் நாழிகையாம், சோழநாட்டிற்கு, அவச்சாயை, அடிகள், பதச்சாயை, அடிகள், ஆகிய இவைகளாற் கணக்கிட்டுக் கண்ட தொகையே நாழிகையாம், மதுரை, காஞ்சி, காசி, பெங்களூர், இந்நகரங்களுக்கு, சாயைப்படி, கணக்கிட்டுப்பார்த்தால், மேடம், குறைவுபடுமாம், பெருமைபொருந்திய சூரியன், விழுஞ்சாயையைத் தெரிந்தும், ஜென்மமாகும், மனையின்றன்மையையும், லக்கினசுத்தியும், ஆகிய இவைகளைத் திட்டமாயறிந்து சொல்லுக—எ-று. 59

இலக்கினத் தியாச்சியம்.

வேறு.

செப்பிடுமே டம்மிடபங் கன்னியுநற் றனுவும்
திகழவே முற்பாகத் தரைக்கடிகை தானும்
ஒப்பறுசிங் கக்கும்பங் கோன்மிதுன நான்கும்
உரைப்பரிடப் பாகத்தி லரைக்கடிகை யென்றே
தப்பறுதேண் மகரமுடன் கயல்கடகந் தனக்கே
சாற்றுவர்பிற் பாகத்தி லரைக்கடிகை யென்றே
மைப்பொருகண் ணிபமருப்புக் கொங்கைநல்லா யிதனை
வயங்குவிட காலமென மறையுணர்ந்த மேலோர்.

இ-ள். அஞ்சனந்தீட்டிய கண்ணும், யானைமருப்புகளையொத்த, தனபாரத்தையுடைய பெண்ணே, சொல்லப்படுகின்ற, மேடம், ரிஷபம், கன்னி, தனுசு, (ஆகிய நான்கு ராசிகட்கும்) முதலில் அரைநாழிகையும், உயர்வுற்ற, சிம்மம், கும்பம், துலாம், மிதுனம், (ஆகிய நான்கு ராசிகட்கும்) நடுவில், அரைநாழிகையும்) குற்றமில்லாத, விருச்சிகம், மகரம், மீனம், கற்கடகம், (ஆகிய நான்கு ராசிகட்கும்) கடைப்பாகத்தில், அரைநாழிகையும், விஷம் பொருந்தியகாலமென்று, வேதங்களைக் கண்டுணர்ந்த பெரியோர்கள் சொல்லுவார்கள்—எ-று. 60

பிரசவ வீடுமுதலியன வறிய.

சேயுதிக்கு மனையிருக்குந் திசைமகரஞ் சிங்கஞ்
செனமலக் கினமாயி னுந்தெற்கு மூலை
ஆயசிங்கங் கன்னிதனு சேன்மிதுனம் வடக்காம்
அன்புடனே யிடபமேற் காகுமதன் மேலே
வேயுதிக்குந் தோளணங்கே கும்பவிருச் சிகங்கோல்
விளங்கமரர் வேந்தனூர் திசையெனவே விளப்பாய்
தேய்பிறைக்கு நெய்தீபத் தில்லைவளர் பிறைக்கே
செப்பிடுவாய் நெய்விளக்கின் னிறையுமெனத் தேர்ந்தே.

இ-ள். பாங்காயுயர்ந்த, மூங்கிலையொத்த தோள்களையுடையபெண்ணே, மகரம், கடகம், லக்கினமானால், மனையில் 'தெற்குமூலையில், குழந்தை பிறக்குமென்றும், சிம்மம், கன்னி, தனுசு, மீனம், மிதுனம், (இவைகள்) லக்கினமானால், மனையில் வடபக்கமென்றும், ரிஷபலக்கினமாகில், மனையில் மேற்குப்பக்கமென்றும், கும்பம், விருச்சிகம், துலாம், (ஆகிய இவைகள்) லக்கினமாகில், இந்திரதிசையாகிய மனையில் கிழக்குப்பக்கமென்றும், குழந்தை பிறக்குங்காலத்தில், தேய்பிறைச்சந்திரனாகில், எண்ணெய்குறைந்த தீபம், பக்கத்திலுண்டென்றும், பூரணசந்திரனாகில், எண்ணெய், நிறைந்துள்ளதீபம், பக்கத்திலுண்டென்றும், தேர்ந்து சொல்லவேண்டு மென்பதாம்—எ-று. 61

நிறைந்த பெண்ணும் லக்கினத்தி னுதியேயாயின்
நீண்டிருக்குங் குறைந்திருக்கு மேலந்த மாயின்
பிறந்தருளும் லக்கினமே சரமாயிற் றீபம்
புறம்பாகு முபயமெனிற் பேரிருளா மென்ப
அறைந்தசனி யங்கிசவீ டாகிலதிற் காரி
யம்புலியைப் பார்க்கவிரு ளகமதே யாகும்
சிறந்தமதிக் குஞ்சேய்க்கு மங்கிசவீ டாயிற்
செய்யசனி பார்க்கிலோ சேர்வள்புலந் தெரிவை.

இ-ள். வரிசைபெற்ற, பெண்ணிராசியாகிய, இரட்டைராசியின் முற்பாகமாயிருந்தால், தீபம், நீண்டு வளர்ந்தெரியும், பிற்பாகமாயிருந்தால், குறைந்தெரியும், பிறந்தலக்கினம், சரராசியாகில், தீபம், பின்பக்கமிருக்கும், உபயராசியாகில், தீபமில்லாமல், பெரிய இருளாயிருக்கும், லக்கினம், சனி, அங்கிசவீடாயிருந்து சந்திரனைப்பார்க்க, இருள்வீடாயிருக்கும், சந்திராங்கிசமும், செவ்வாய், அங்கிசமும், அவ்விலக்கினத்திற் பொருந்தியிருக்க, அதைச்சனி, செவ்வாய், பார்க்கில். அப்பெண்ணனவள், வயற்காட்டிற்பிரசவிப்பாள்-எ-று.

தெரிவைக்குந் துன்பமில்லை லக்கினத் தாதிக்கே
திடமுடனே யந்தமெனிற் றேன்மொழிக்குத் துன்பம்

மருவியலக் கினமுதற்சந் திரனிருக்கு மட்டும்
மன்னுதொகை மடவார்கண் மருவியரு கிருப்பர்
சருவியநற் சுபர்காணிற் றுன்றோன்றும் விரவிற்
சனிகுசன்பார்த் திடிற்றுனே சஞ்சலமுற் றிடுமே
பெருமையுட னிருந்தகோ ணிறங்குழவி தனக்கே
பெறுமென்றே பெரியோர்க ளுரைப்பர்மிகத் தானே.

இ-ள். இந்தவுலகில் வந்துதித்த மாக்கள், எந்தலக்கினமாயிருந்தாலும், ஜென்மலக்கினம், முற்கூறிற், பிரசவித்தால், தாய்க்கு கஷ்டமில்லை, பிற்கூறுகிய, அந்தத்திற் பிரசவித்தால், கஷ்டப்பிரசவமாகும், ஜெனனமான லக்கினமுதல், சந்திரனிருக்கும், லக்கினம்வரையிலும்,உள்ளகிரகத்தொகை, எத்தனையோ, அத்தனைபெயர்கள் பிரசவிக்கும், ஸ்திரீக்குப்பக்கத்தில்,இருப்பார்கள், லக்கினத்தை, சுபர்கள் பார்த்தால், சீக்கிரத்தில், பிரசவமாகும்,சனி செவ்வாய், பார்த்தால், கஷ்டத்தோடு பிரசவிக்கும், பெருமையோடு, லக்கினத்திலிருந்ததுவும், பார்த்ததுவுமான,கிரகங்களின்,நிறத்தையும், அடையாளத்தைப்பொருந்தி, அக்குழந்தை பிறக்குமென்று, பெரியோர்கள் விசேஷமாகச் சொல்லுவார்கள்—எ-று. 63

தானருகே யிருந்தமட வார்பருவங் கூறில்
சனியிருந்து கண்டக்காற் றலைநரைத்த கறுப்பி
ஈனமில்லாக் குசனிருந்து காணின்முது வயதே
யிசையுநிறஞ் சிவப்பாக விருப்பளமங் கலையாம்
நானிலமேற் குருவெள்ளி சசியிருந்து கண்டால்
நாரிசுமங் கலைவாலை நற்புதன்மத் திமையாம்
மானிலமேற் பாம்பிருந்தா லனுசார மடந்தை
மகவுநூ லேதரித்து வந்திடுங்கண் டீரே.

இ-ள். ஜென்மலக்கினத்தில், சனியிருந்தாலும், பார்த்தாலும், பக்கத்தில், நரைத்த தலையையுடைய, கறுத்தநிறமான, பெண், இருப்பாள், செவ்வாய் இருந்தாலும், பார்த்தாலும், சிவப்புநிறமுள்ளவளும், அமங்கலையும், அதிகவயதுள்ளவளுமான, பெண்பக்கத்தில், இருப்பாள், குரு, சுக்கிரன், சந்திரன் (ஆகியஇவர்கள்) லக்கினத்தில் இருந்தாலும், பார்த்தாலும், சுமங்கலையும், வாலைப்பருவமுமுள்ளபெண், பக்கத்திலிருப்பாள், புதன், இருந்தாலும், பார்த்தாலும், மத்திபவயதுடையபெண், பக்கத்திலிருப்பாள், இப்புவியின்கண், லக்கினத்தில், ராகு, கேதுக்கள், இருந்தாலும், பார்த்தாலும், அநாசாரமுள்ளபெண், பக்கத்திலிருப்பாள், அல்லாமலும், மாலைசுற்றிக் குழந்தை பிரசவிக்குமென்றும் அறிக, இங்ஙனம், லக்கினத்தைப் பார்ப்பது போல், லக்கினாதிபதியையும், பார்த்துணர்க, சூரியன், உதயகாரகனுனபடியால், இங்ஙனம், சொல்லாதொழிந்தது ஆகையால், இப்பலன்களைக் கவனிக்கும்பொழுது சூரியனையும் ஒட்டிக்கொள்க, பல்லுப்போன கிழவியென்று, சொல்லுவாறுமுளர்—எ-று. 64

கண்டுமொழி மாதாவின் றன்பருவங் காரி
கதிர்குருமூ வருங்கண்டா லாம்விருத்தை யாகும்
மண்டுவெள்ளி சேய்பார்க்க வயதுநடு வாகும்
மதிபுதனுங் கண்டாக்கா லவள்வாலை யாவாள்
மீண்டுமுட வன்னிருந்தால் வீடுபுரா தனஞ்சேய்
மேவில்வெந்து கட்டினதோர் வீடாகு மென்னே
பண்டுசசி பார்க்கிலகம் புதியதே யாகும்
பரிதிக்கு மரந்திரண்ட பதியெனச்சொல் வாரே.

இ-ள். மாதாவின் வயதுகண்டு, சொல்லுமிடத்து தாய் தானத்தில், சனி, சூரியன், குரு, இவர்களிருந்தாலும், பார்த்தாலும், (விருத்தை) வயது சென்றவளாயிருப்பள், சுக்கிரன், செவ்வாய், பார்க்க நடுவயதுள்ளவளாம், சந்திரனும், புதனுமிருந்துகண்டால், வாலைப்பருவமாயிருப்பாள், நான்கா மிடத்தில், சனியிருந்தாலும், பார்த்தாலும், பூர்வீகவீடாம், செவ்வாயாகில், தீயில்வெந்து, மறுபடிகட்டிய வீடாகும், சந்திரனுகில், புதிதாய்க்கட்டிய வீடாகும், சூரியனுகில், மரம் நெருங்கும்படி கட்டியவீடென்றும் சொல்லு வார்கள்—எ-று. 65

சொல்லுபுதன் பார்த்திருந்தாற் சித்திரவீ டாகும்
சுக்கிரன்பார்த் திருந்தக்காற் சுசிவீட தாகும்
வில்லரச னிருந்துகண்டாற் கெட்டியக மாகும்
மின்னனையார் விரும்புசுவை வெய்யவென வுறைப்பாம்
நல்லமதிக் குப்பாகுஞ் சேய்துவர்ப்பை நாடும்
நாலுவகைச் சுவைபுதனே நல்குவிப்ப னிப்பால்
வல்லலறுங் குருமதுரம் வெள்ளிபுளிப் பாகும்
மணிகாரி கசப்புலக் கினத்திசைதொட் டெண்ணே.

இ-ள். அறிஞனென்று சொல்லப்பட்ட, புதன், இருந்தாலும், பார்த் தாலும், சித்திரவீடாம், சுக்கிரனிருந்துபார்த்தால், சுத்தமானவீடாம், ஒளி யுள்ள வியாழனிருந்துபார்த்தால், கற்காரையாற்கட்டிய வீடாகும், பிரசவ மான பெண்கள், விரும்பக்கூடிய, ருசிபாகங்களை, விரைவுடன் சொல்லு மிடத்து சூரியனிருந்தால்—காக்மும் சந்திரனிருந்தால், உப்பும், செவ்வா யிருந்தால், துவர்ப்பும், புதனிருந்தால், நால்வகைச் சுவையும், குருவிருந் தால், தித்திப்பும், சுக்கிரனிருந்தால், புளிப்பும், சனியிருந்தால், கசப்பும், ஆகிய ருசிகளை விரும்புவாள், (இதை லக்கினம் திசைபுத்தி சித்திரவிவரங் களைக் கவனித்துச்சொல்லுக.)—எ-று. 66

திரசரரா சியிற்சுங்க னிருக்கவிளக் கசையுந்
திங்களைப்பா வர்கள்பார்க்கிற் றீர்க்கமுறுந் தீப
முரைமருவம் லக்கினத்துக் கிருபாலு நான்கு
மோதுமனை தனிலிருந்தா ருடன்கூடி யிருப்பர்

இரவிபுந்தி பங்குகேந் திரத்திருக்கிற் கிழக்காம்
இரணியன்கேந் திரத்தேறி யிருந்திடினுத் தமரே
அரவுசெவ்வாய் சன்மத்தி லுறினுந்தெற் காகும்
அணியுமனைசேர்நாரிக் ககமேற்கு வாசல்.

இ-ள். திரவிராசியிலும், சரவிராசியிலும், சுக்கிரனிருக்க, விளக்கு அசைந்து, எரியும். சந்திரனைப் பாவர்கள் பார்த்தால், விளக்கணையுமாம், முறையாய்ச்செனித்த லக்கினத்திற்கு, இரண்டாமிடம், பனிரண்டாமிடம், நான்காமிடம், (ஆகிய இவ்விடங்களிலுள்ள) தொகைப்படி, பிரசவிக்கும் போது, பெண்கள் கூடவிருப்பார்கள், சூரியன், புதன், சனி, கேந்திரம் பெற்றிருந்தால், கிழக்குவாசலும், குரு, கேந்திரம்பெற்றிருந்தால், வடக்கு வாசலும், ராகு, கேது, செவ்வாய், ஜென்மத்திலிருந்தால், தெற்குவாசலுமாம், அழகியமனை ஸ்தானமாகிய, நான்காமிடத்தில், சனிநின்றால், மேற்கு வாசலாக, இருக்குமென வறிக—எ-று. 67

வாசமுறு மூன்ருறிற் பதினென்றிற் பாவர்
வந்திருக்கச் சனிபத்தா மனையதனிற் சார
நீசமடந் தையரிருந்து புரிவர்பரி காரம்
நீண்டசனி சுபர்மனையி னேரினல்லோர் காணில்
ஆசுறுமீ னத்தொழில்செய் நாரியரு கிருப்பர்
ஆமென்றே சுருதியறிந் துரைத்தநல்லோ ராய்ந்தே
தேசுறுநற் கலைநிறையுந் திங்கள்முக மயிலே
செப்பினரிப் பலபாகந் தெரிந்துகொளத் தானே.

இ-ள். அழகுபொருந்திய, சோடசகலைநிறைந்த, சந்திரன்போன்ற முகத்தையுடைய பெண்ணே, (3) மூன்று, (6) ஆறு, (11) பதினோராமிடம், பாவருடைய வீடாக, அதிற் பாவர்கள், இருக்க, சனி, (10) பத்தாமிடத்தில் இருக்க, கீழ்குலத்துப் பெண்களிருந்து, பரிகாரஞ் செய்வார்கள். சனி, சுபர்மனையிலிருந்து, நல்லோர்களால், பார்வைபெற்றால், குற்றமுள்ள, அற்பத்தொழிலையுடைய பெண்கள், பக்கத்தில் இருப்பார்கள், என்று சாஸ்திர மாராய்ச்சியுள்ள, பெரியோர்கள், இப்படி, பலபாகந்தெரிந்துகொள்ளும்படி சொல்லுவார்கள்—எ-று. 68

செப்பியதோர் பலபாகம் பகர வேண்டிச்
செங்கதிரோன் முதனவகோள் செறிபலங்க டெரிந்தே
ஒப்புடனே சனித்தநவக் கிரகபுடங் கண்டே
யுயர்தூமன் முதலைவர் குளிகாதி நால்வர்
தப்பறவே யெண்ணிலக் கினபுடமு மாகச்
சாற்றிடுபத் தொன்பதெனத் தகும்புடங்கள் வரைந்தே

இப்புவியி லுரைத்தவர்க்கே சித்திக்கும் பலன்கள்
எனச்சுருதி மொழிப்புலவ ரியம்பினர்க டாமே.

இ-ள். ஒருஜாதகனுக்கு, சொல்லுதற்கரிதாகிய, பலாபலன்களைச் சொல்லவிரும்பினுல், சூரியன், முதலாகிய, ஒன்பதுகிரகங்களின், பலன்களைத்தெரிந்தும், உயர்வான லக்கினமுதல், (மேலேசொன்ன) நவக்கிரகஸ்புடங்களைக்கண்டும், தூமாதிபஞ்சக்கிரகங்களையும், குளிகன்முதல், நான்குகிரகங்களையும், லக்கினமும் ஆகபத்தொன்பதின், ஸ்புடங்களையும், கணக்கிட்டு, வரைந்து, இவ்வுலகின்கண், சொல்லுகிறவர்களுக்கே, பலன்கள், சித்தியாகுமென்று, (6) ஆறு சாஸ்திரங்களையும் நேராயுணர்ந்த பெரியோர்கள் சொன்னுர்கள்—எ-று. 69

இயம்புசன்ம மனைநவாங் கிசபங்கைந் ததனில்
இனிதுதிக்கி னவக்கிரக மிருந்தபடி சரியே
நயம்பெறுவற் றங்கிசையி லுதித்திடினே யந்த
நவக்கிரக மிருக்குநக்ஷத் திரபதம றிந்தே
செயம்பெறவே நின்றமனை வீடடுத்த வீட்டிற்
செறிந்திருக்கும் விபரமெல்லாந் தெரிந்தெண்ணிக் கண்டே
பயன்பெறுஞ்சொற் பலபாகம் லக்கினமே முதலாய்ப்
பன்னிரண்டு வீட்டுக்கும் பலன்களறிந் துரைப்பாய்.

இ-ள். விக்கினமில்லாதுசொல்லும், லக்கினவீடானது நவாங்கிசத்தில், ஐந்தாவது பங்கில், உதித்தால், நவக்கிரகங்கள், இந்தவிதம், சரியாகவேஇருக்கும், நன்மைபெற்ற, மற்ற, அங்கிஷத்தில், வந்தால், அந்தந்தக்கிரகங்கள்கள் இருக்கும், நட்சத்திரங்களின், பாதத்தைத்தெரிந்து, செயம்பெறும்படி நிற்கின்ற வீடு, அடுத்தவீடுகளில், நெருங்கியிருக்கும், விவரங்களெல்லாம், கணிதமுறையாய், எண்ணித்தெரிந்து, பயன்பெறும்படி, சொல்லக்கூடிய, பலா, பலன்களை, லக்கினமுதற்கொண்டு பன்னிரண்டு வீட்டிற்கும்,தெரிந்து சொல்லக்கடவாய்—எ-று. 70

வேறு.

உரைசெறி கிரக நட்பாட்சியுச் சங்க
ளூறும்பகை நேசமுஞ் சமமும்
நிறைபெறு மனையும் பார்வையுந் தொழிலு
நிகழ்த்துகா ரகமுமா ரகமும்
வரவுறு மரபு திறமுமெய் வடிவும்
வலிசெறி பலங்கடுர்ப் பலமும்
புரவுறத் தேர்ந்து கண்டிடும் புலவர்
புகன்றுள பலன்கள்சித் திக்கும்.

இ-ள். நெருங்கியுறைகின்ற, கிரகங்களின், நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீசம், சமம், இருக்கும் வீட்டின் நிலைமை, பார்வை, தொழில், காரகங்கள்,

மாரகம், ஜாதி, நிறம், உருவம், வலிவுள்ளபலங்களும் துர்ப்பலங்களும், குற்றமறத்தேர்ந்து, கணக்கிட்டுக் காணக்கூடிய சோதிடப்புலவர்கள், சொல்லும் பலன்கள், சாதகர்களுக்கு, உண்மையாய்ச்சித்தியாகும், என்பதாம்—எ-று. 71

காரக கிரகங்கள்

சம்பூர்ணம்.

பாலாரிஷ்டம்.

வேறு.

லக்கினங்கேதெண் மூன்றாறிற் பாவ ரெல்லாம்
நண்ணிலுடனேமரணம் லக்கினத்தில்
திக்கெனச்செவ் வாய்நிற்கச் சேயெட் டாறில்
சேர்ந்துசனி கூடிலோ மரணமாஞ் சன்மத்
துக்காறெட்டிற் சசிதா னிருந்துசுபர் நோக்கத்
துலங்கியநான் காண்டென்றே சொல்லிடுவர் நல்லோர்
மிக்கசெவ்வா யேழிலெட்டின் மார்த்தாண்டன் மேவ
விளம்புவரற் பாயுளென மீன்புரைகண் மாதே.

இ-ள். கெண்டைமீனைப்போன்றகண்ணையுடைய, ஒண்டொடியேகேட்பாயாக, லக்கினம் விருச்சிகமாக, (3) மூன்று, (6) ஆறுமிடங்களிற்பாவர்கள் சேர்ந்துநிற்கில்உடனே அக்குழந்தை மரிக்கும்லக்கினத்திற்செவ்வாய்நின்றாலும், (7) (8) மிடத்தில், செவ்வாய்நிற்கச்சனிசேர்ந்தாலும், மரணமாம்லக்கினத்திற்கு, (6) (8) மிடங்களில், சந்திரனிருந்து, சுபர்கள்பார்த்தால்விளங்கிய நான்காம்வருஷத்தில் மரணமாம், (7) ஏழாமிடத்தில், செவ்வாயும், (8) எட்டாமிடத்தில், சூரியனுமிருக்க, அற்பாயுளென்று சொல்லுவார்கள்—எ-று72

அற்பாயுள் (30) வருடம்.

தேயுமதி லக்கினகேந் திரத்திலெட்டின் மேவிச்
சேய்முதற்பா வரைக்கூடின் மரிக்குஞ்சன் மத்தில்
ஏயசசிக் கிருபாலும் பாவர்நிற்கி லெட்டேழ்
நான்கிடத்திற் றீக்கோட்க ணிற்கிலுற்ற சேயும்
தாயுஞ்சா மெனவுரைப்பர் சுபக்கோள்பார்த் திடினே
தாயுடன்சீ விக்குமென வேசாற்ற லாகும்
மாயகதிர் பாக்கியத்திற் சுபர்நோக்கி லாமல்
மருவசசி சுபருடனே மன்னிலரிட்டமதாம்.

இ-ள். அமரபட்சச்சந்திரன், குமரன்பிறந்த, லக்கினகேந்திரத்தும் அல்லது, எட்டாமிடத்தும், செவ்வாய் முதலிய பாபர்களோடு கூடிநின்ருல், மரணமாம். ஜென்மலக்கினத்தில்நின்ற சந்திரனுக்கு, இரண்டுபக்கமும், (4) நாலு, (7) ஏழு, (8) எட்டாமிடங்களிலும் பாவக்கிரகங்கள், நின்ருல் பிறந்தசேயும், தாயும் மாயுமாம், சுபக்கிரகங்கள், பார்த்தால், தாயும், சேயும் புழைத்திருக்கு மென்று சொல்லப்படும், சூரியன், ஒன்பதாமிடத்தில், சுபக்கிரகங்களின் பார்வையில்லாதிருக்கச் சந்திரன் சுபரோடு கூடியிருந்தாலுய், குழந்தைக்குத் தோஷமுண்டாம்—எ-று. 73

பிறந்த நட்சத்திர வாரதுர்ப்பலம்.

வே று.

ஆயசித் திரையிற் றிங்க ளணிகுச னுத்தி ராடம்
ஞாயிறு பரணி கேட்டை நற்குரு வார மாகும்
ஏயறு புதன விட்ட மிரேவதி சனியே யாகும்
தூயபூ ராடம் வெள்ளி யிதிற்கன்மந் துபரஞ் செய்யும்.

இ-ள். கிழமைபிறந்த நாளாகிய, சித்திரை நட்சத்திரங் கூடிய, திங்கட்கிழமையிலும்,உத்திராட நட்சத்திரங்கூடிய,செவ்வாய்க்கிழமையிலும், பரணி நட்சத்திரங்கூடிய, ஞாயிற்றுக்கிழமையிலும், கேட்டை நட்சத்திரங்கூடிய, வியாழக்கிழமையிலும், அவிட்ட நட்சத்திரங்கூடிய, புதன்கிழமையிலும், இரேவதி நட்சத்திரங்கூடிய, சனிக்கிழமையிலும், பூராடநட்சத்திரங்கூடிய, வெள்ளிக்கிழமையிலும், குழந்தைபிறந்தால், நீங்காத துன்பத்தைக் கொடுக்குமாம்—எ-று. 74

செய்யுமட் டமத்திற் பாவர் சேர்ந்திடி னுளே யேழாம்
ஐயமாம் பிழைத்தி ருந்தா லவனுக்காங் கண்ணுக் கூனம்
மெய்யலக் கினத்திற் செவ்வாய் நிற்கினும் வியமா றெட்டில்
பையவே காரி செவ்வாய் பற்றின்மெய்க் கரிட்டம் பண்ணும்.

இ-ள். எட்டாமிடத்திற் கெட்ட பாவக்கிரகங்கள் சேர்ந்து நின்ருல், ஏழுநாள் தோஷஞ்செய்யும். துன்பமாம் குழந்தை பிழைத்திருந்தால், உபயோகந்தரத்தகுந்த கண்களுக்குக் குற்றஞ்செய்யும், உடலோடு, செவ்வாய், சேர்ந்து நின்ருலும், மறைவுஸ்தானமாகிய (6) ஆறு, (8) எட்டு, (12) பனிரண்டாமிடங்களில், சனி செவ்வாய் நின்ருலும், குழந்தையின்தேகத்துக்கு, தோஷஞ்செய்யும்—எ-று. 75

வே று.

பண்ணுஞ் சன்ம முடனேழிற் பாவ ரிருக்கப் பாவர்கடாம்
அண்ணின் மதிய முடன்கூட வணிய தாக வருமரிட்டம்

எண்ணுந் தேய்ந்த பிறைவியத்தி லேழி லொன்றிற் பாவர்களும்
நண்ணி லரிட்டங் கேந்திரத்தி னட்போ ரிருக்க வுயர்வாரே.

இ-ள். லக்கினத்திலும், ஏழாமிடத்திலும், பாவர்களிருக்க, அமரபட்சச் சந்திரனோடு, பாவர்கள் கூடியிருக்க, சீக்கிரத்தில், தோஷமுண்டாக்கும், தேய்ப்பிறைச்சந்திரன், ஜென்மம், (7) ஏழு, (12) பனிரண்டாமிடத்திற் பாவக்கிரகங்களோடிருக்கத் தோஷமுண்டாக்கும், ஆனால், இவர்களுக்குக் கேந்திரத்தில் மித்துருக்கிரகங்களிருக்கத் தோஷம் நீங்கிச் சுகமடைவார்களென்பதாம்—எ-று. 76

உய்யு மிரவி சனிசெவ்வா யுறுப்புக் குறைந்த மதிநான்கும்
மெய்யாம் வியம்பாக் கியமெட்டி லொன்றி யவர்கண் மேவிடவே
பைய விந்தப்பதிகடமைப் பண்பா யரசன் பாரானேல்
ஐய வரிட்டம் பொன்னேக்க மானு விருப்ப னணிமயிலே.

இ-ள். பெருமைபொருந்திய, மயிற்சாயலையுடைய பெண்ணே, சூரியன், சனி, செவ்வாய், தேய்பிறைச்சந்திரன் (ஆகிய பாவக்கிரகங்கள்) அட்டமம், பாக்கியம், வியஸ்த்தானமாகிய, இடங்களிற் பொருந்தியிருக்க, அந்த இடங்களைக், குருபார்க்காதிருந்தால், சந்தேகப்படக்கூடிய தோஷமாம், குரு பார்த்தால், ஜாதகன் பிழைத்திருப்பான்—எ- 77

அவனிமீ தெட்டைந் தோன்றி லான் வியத்திற் பாக்கியத்தில்
தபனன் செவ்வாய் சனிமதியந் தாமுங் கூடி நின்றாலும்
கவன முடனே தனித்தனியே கருது மிவற்றி னின்றாலும்
எவனும் பிறக்கி லிப்பாரின் மேவு மரிட்ட மெய்துவனே.

இ-ள். இந்நிலத்தில், நலத்தைத் தரக்கூடிய, அட்டம, பஞ்சம, ஜென்மம், வியம், பாக்கியஸ்தானமாகிய, இடங்களில், சூரியன், செவ்வாய், சனி, சந்திரன், இவர்கள் கூடிநின்றாலும், (அல்லது, மேற்கண்ட இடங்களில்) தனித்தனியே நின்றாலும், பிறந்தஜாதகன், யாரானாலும், பூமியில், தோஷத்தையடைவான்—எ-று. 78

வேறு.

எண்ணிய லக்கி னத்தோன் பிரமாலக் கினத்தி லேறில்
ஒண்ணியே பாவர் தானு முற்றிடி லுரோகி யாவன்
திண்ணமா யிவர்க டாமுந் திரிகோண கேந்தி ரத்தில்
நண்ணிடின் மூர்க்க னுவன் நறைமலர்க் குழலின் மானே.

இ-ள். பரிமள வாசனைவீசும், பன்மலர்மாலைகளைபணிந்த, கரியகூந்தலையுடைய பெண்ணே, ஜென்மலக்கினதிபன், பிரமஸ்தான லக்கினத்திலேறி, அவனோடு, பாவக்கிரகங்களும், சேர்ந்தால், ரோகியாயிருப்பன், (மேற்கண்ட

பாவக்கிரகங்கள்) திரிகோண கேந்திரங்களில் நின்றால், (ஜாதகன்) மூர்க்க னாக விருப்பான்—எ-று. 79

பிரமஸ்தான விபரம்.

பிரமஸ்தானமென்பது, சோடசாங்கிஷம் பிரிக்கும்போது, ஜென்ம லக்கினம், பெண்ராசியாயிருந்தால், இரவிமுதல் நாலாவதுபாகமும், ஆண் ராசியாயிருந்தால், மேடம், முதல், பதிமூன்ருவது பாகமுமாம்.

(ஆண் ராசிக்குச் சக்கரம்.)

12	1	2	3
11	பிர 13	விஷ 14	4
10	சூ 16	ருத் 15	5
9	8	7	6

(பெண் ராசிக்குச் சக்கரம்.)

5	16	15	14
6	பிர 4	விஷ் 3	13
7	சூ 1	ருத் 2	12
8	9	10	11

மானேகேள் குதிரை மூலம் மகமுதற் காலும் பின்னும்
ஈனரே வதியுங் கேட்டை யாயில்ய மிவைபிற் காலும்
ஊனநா ழிகையோர் நான்குட் டாதைமூன் றுய்ரெண் டுக்கும்
ஆனநற் றுணைவர் மூன்றி னன்கிற்சேய்க் குறும ரிட்டம்.

இ-ள். அன்ன நடையும், வன்னவுடையும், பின்னல் சடையும், கன் னல் மொழியுமுடைய பெண்ணே, கேட்பாயாக, அசுபதி, மகம், மூலம் (ஆகிய இந்த) நட்சத்திரங்களின், முதற்பாதத்தில், நான்கு நாழிகையிலும், ஆயிலியம், கேட்டை, ரேவதி, (ஆகிய இந்த) நட்சத்திரங்களில், கடைப்பா கத்தில், என்கு நாழிகையிலும், குழந்தைபிறந்தால், முதல் நாழிகையிற் பிதா வும், இரண்டாம் நாழிகையில், மாதாவும், மூன்றும் நாழிகையிற் சகோதர மும், நான்காம் நாழிகையிற் சாதகனும், தோஷமடைவார்கள்—எ-று. 80

உறுஞ்சன்ம லக்கி னதி யுடன்சோம னுறைவீட் டாதி
பெறும்பகை யென்னி லாண்டு பிறக்குஞ்சேய் பிழைத்தி டாது
குறுஞ்சன்ம லக்கி னதி குளிகனுஞ் சனியுங் கூடில்
அறைந்திடாய் கள்ள ராலே யடிபட்டே யிறப்பா னன்றே.

இ-ள். இக்குவலயத்தில்,எக்குலத்திற்பிறந்த மக்களாயிருந்தாலும்,ஜென் மலக்கினதிபதிக்கும், சந்திரனிருந்தவீட் டதிபதிக்கும், பெரியபகையானல்,

அங்குபிறந்த குழந்தை தங்காதிறந்துபோம், லக்கினாதிபனும், குளிகனும், சனியும், கூடிநின்றால், கள்ளுண்ட கள்ளர்களாலே, தள்ளுண்டு, அடிபட்டு, மாரணமடைவானென்று, சொல்லக்கடவாய்—எ-று. 81

அன்றவ னுதித்த நக்ஷத் திரந்திதி ராசி யந்தம்
ஒன்றிடி லுடனே துஞ்சு முற்றபொன் னோக்கெட் டேநாள்
வென்றிகொள் வெள்ளி நோக்க விரவுநாண் மூன்று பொன்னை
நன்றிலாப் பாவர் நோக்கின் வந்தநா ணலிந்து போமே.

இ-ள். ஜாதகன் பிறந்தநாளான நட்சத்திரம், திதி, லக்கினம், (ஆகிய இவைகளின்) கடைசிப்பாகமானால் ஒருநாளிலும், குருபார்த்தால், எட்டுநாளிலும், சுக்கிரன்பார்த்தால், மூன்றுநாளிலும், குருவைக் கொடியபாவர்கள் பார்த்தால், பிறந்தவுடனே, சிறந்த குழந்தை யிறந்துவிடுவாம்—எ-று. 82

நலிவுசெய் யட்ட மாதி லக்கினத் தாதி கூடி
வலியகேந் திரத்தி னிற்க மருவிய வெட்டிலா ரேனும்
பொலிவுற வொருவர் நிற்கப் பூமியிற் பிறந்த பாலன்
ஒலிகட லுலகி லெட்டாண் டுள்ளுயிர்க் கரிட்டஞ் சொல்வாய்.

இ-ள். கஷ்டத்தைச்செய்கின்ற, அஷ்டமாதிபதியும், லக்கினாதிபதியும், சேர்ந்து, வலிவுற்றகேந்திரத்தில், இருந்து எட்டாமிடத்தில், யாதாமொரு கிரகம், நிற்கப்பிறந்த குழந்தையானது, சப்திக்கின்ற சமுத்திரஞ்சூழ்ந்த,இப்பூவுலகில், எட்டுவருடத்திற்குள், சென்மதோக்ஷமென்று சொல்லக்கடவாய்.

உள்ளலக் கினமே யாதி யிருவர்லக் கினத்து னிற்க
மெள்ளவே யெட்டி லிந்து மேவிடக் காரி தானும்
தெள்ளுமட் டமஞ்சன் மங்க ளிரண்டையுஞ் செறிந்து நோக்க
பிள்ளைமெய்க் கரிட்ட மென்றே பேசினார் பெருமை யோரே.

இ-ள். ஜென்மலக்கினத்துக் குடையவர், இரண்டுக்குடையவர், இவர்களிருவரும், லக்கினத்தில் இருக்க' எட்டாமிடத்தில் இந்துவந்திருக்கச்சனியானவன், துட்பமான, அட்டமம், சென்மலக்கினம், இவ்விரண்டையும், பொருந்திப்பார்க்கப் பிறந்தகுழந்தைக்கு, சென்மதோஷமென்று, மா திடம் பொருந்திய சோதிடநிபுணர்கள், சொன்னார்கள்—எ-று. 84

வேறு.

பெருமை செறிதேள் சென்மமதாய்ப்
பெரும்பா வர்கண்மூன் னாறிலுற
இருமை செறிபின் னாறினல்லோ
ரிருக்கி னரிட்ட மிரவிலொன்றில்

உரிமை யுடனேன் பதியிருக்க
வொருவ ரிவரைப் பாராரேல்
அருமை யுடனே யுதித்திடுஞ்சேய்க்
கரிட்ட மென்றே யறைவாயே.

இ-ள். பூதலத்துதித்த சாதகனுக்கு, ஜென்மலக்கினம் விருச்சிகமாகி, கொடிய பாவக்கிரகங்கள், லக்கினமுதல், ஆறுவீட்டிலிருக்கவும், ஏழாம்வீடு முதல், பனிரண்டாம் வீடுவரை, சுபக்கிரகங்கள், நிற்கில், ஜாதகன், சென்மதோஷமடைவான், சூரியன், ஜென்மம், ஒன்பதாவிடத்தில், இருக்க, (அச்சூரியனை) ஒருகிரகமும், பார்க்காதிருந்தால், அம்புவியதனில், அருமையாய்ப் பிறந்தபாலன், நம்பக்கூடாத சென்மதோஷமடைவான், என்று சொல்லக்கடவாய்—எ-று. 85

அறையுந் தகர்தேள் சன்மமதாய்
அட்ட மத்தி லுறைசனியும்
நிறையுஞ் சுபர்கள் பார்வையின்றி
நிற்கி லரிட்டஞ் சென்மத்தில்
இறையாங் காரி பாம்பிருக்க
வேழிற் சோம னிருந்திடினும்
நறையார் கதிரோன் சேய்கூடி
ஞலீ ரைந்தி னலிந்திறுமே.

இ-ள். செப்புதற்கரிய ஜென்மலக்கினம், மேஷம், விருச்சிகமாகி, அதற்கட்டமஸ்தானத்தில், சனியிருந்து, (அச்சனியை) நிச்சயமாகச் சுபக்கிரகங்கள் பார்வையில்லாதிருந்தால், சென்மதோஷவாம், லக்கினத்தில், சனி ராகு, கேது, இவர்களிருக்க, ஏழாமிடத்திற் சந்திரனிருக்க, (இவர்களோடு) அரவிந்தநண்பனுன, ஆதித்தன், திரமான, செவ்வாய், சேர்ந்திருந்தாலும், பிறந்தஜாதகன் பத்துநாளில், மரணமடைவான்—எ-று. 86

இறுமாந் துறுவெண் மதிக்கொருபா
லியாவ ரேனு முறவொருபால்
கறைவா ழரவ மெதிர்த்துமதிக்
கலைமே னடக்குந் தடமாக
நிறைவாஞ் சசிவா ழரவிரண்டு
நில்லா ரன்றி யந்நேரம்
அறையா லையினிற் கரும்பென்ன
வவிர்கத் திரியா லறுஞ்சிறுவன்.

இ-ள். உறுப்புக்குறைந்த, உடுபதியாகிய, சந்திரனுக்கு, ஒருபக்கத்தில், * யாதாமொருகிரகம்நிற்ப, மற்றொருபக்கத்தில், எயிற்றில், விஷத்தைப்

* யாதாமொரு கிரகமென்பது பாவக்கிரக மென்றுபொருள்.

பொருக்திய, இராகு, ஆவது, கேதுவாவது, (சந்திரனுடைய) பாதசாரத்திற் பொருந்திநிற்கப் பிறந்தஜாதகன், ஆலைவாய்ப்பட்ட கரும்பைப்போல், அறையுண்டு, கத்தரியால், தரையில்மடிவான்—எ-று. 87

சிறுவ னுதித்த விலக்கினத்திற்
றேய்ந்த பிறையும் பாவிகளும்
அறிவாம் வியத்தி விரண்டிலெட்டி
லடைந்து பாவர் தானிருக்க
உறுகேந் திரத்தைச் சுபர்பாரா
தொழியிற் குழவிக் குறுமரிட்டம்
பெறுமீன் கர்க்கி தேளுமிதிற்
கேழிற் பாவர் பெறிற்பிணியாம்.

இ-ள். சேய்பிறந்த ஜென்மலக்கினத்தில், தேய்பிறைச்சந்திரனும், பாவிகளும், சேர்ந்திருக்க, (2) இரண்டு, (8) எட்டு, (12) பனிரண்டாமிடங்களிலும், பாவர்களிருக்க, கேந்திரஸ்தானங்களைச் சுபக்கிரகங்கள் பாராதிருக்கப்பிறந்த குழந்தைக்குத் தோஷமுண்டாம், மீனம், கற்கடகம், விருச்சிகம், (ஆகிய இவ்விராசிகள்) லக்கினமாக, இதற்கேழாமிடத்திற் பாவக்கிரகங்கள் நின்றால், பிறந்தபாலகன், பிணியுள்ளவனும்—எ-று. 88

பிணியா றேழிற் பாவருமாய்ப்
பெருஞ்சென் மத்தி விரவியுறத்
துணியா மெட்டா மிடத்திற்கேந்
திரத்திற் பாவர் சூழ்ந்திருக்க
அணியார் குழவி யுடன்றாய்க்கு
மரிட்டஞ் செவ்வாய் சனிகோணம்
பணியார் மதியைப் பொன்பாரா
திருக்க வரிட்டம் பாலனுக்கே.

இ-ள். ரோகஸ்தானமாகிய, ஆறாமிடத்திலும், ஜென்மலக்கினத்திற்கு, ஏழாமிடத்திலும், பாவக்கிரகங்களிலிருக்க, லக்கினத்திற் சூரியனிருக்க, எட்டாமிடத்திலும், கேந்திரஸ்தானங்களிலும், பாவர்கள்நெருங்கியிருக்க, அழகுள்ள குழந்தையுடன், தாயும்மரணமடைவள், சனிசெவ்வாய் திரிகோணராசியிலிருக்கப் பாம்புகளோடு சேர்ந்த சந்திரனைக் குருபாராதிருக்கப்பிறந்த குழந்தைமாத்திரம், இறந்துபோம்—எ-று. 89

பால வெள்ளி மதியமொடு
பயில்சன் மத்தும் பாவருறில்

ஆலுங் குழவிக் கரிட்டமதா
மிரவி யாறி லதற்கேழில்
சாலச் செவ்வாய் சனிநிற்கத்
தகப்பன் சிறுவ னுடனிருவர்
நாலுந் தேய்ந்த மதிபாவர்
நடுவா யிற்ருய்ச் சிவனும்போம்.

இ-ள். ஜென்மலக்கினத்திலும், தேய்பிறைச்சந்திரனோடும், தீயபாவக்கிரகங்கள், சேர்ந்திருக்கப்பிறந்த குழந்தை சென்மதோஷமடையும், ஜென்மலக்கினத்துக்கு, ஆருமிடத்திற் செஞ்சுடர்நிற்க, அதற்கு, ஏழாமிடத்திற் சனியும், செவ்வாயும்நிற்கத் தந்தையுந் தநயனும், தாணியைவிட்டு, மரணமடைவர், இருண்டசந்திரன், திரண்ட பாவக்கிரகங்களின் மத்தியில்நின்ருல், தாயும், கூடவேசாவள்—எ-று. 90

போமே யாரு மிடப்பிறைக்கேழ்
பொருந்திச் செவ்வாய் சனிநிற்க
ஆமே தாய்பிள் ளைக்கரிட்ட
மடர்சென் மத்திற் பாம்புசனி
தாமார் நான்கிற் சேயேழிற்
றபன னுறிற்சாற் றும்மரணம்
கோமார் சனிசெவ் வாயேழிற்
குழவிக் கரிட்டஞ் சொல்வாரே.

இ-ள். லக்கினத்திற்கு, ஆருமிடத்திற் சந்திரனிருக்க, அதற்கு, ஏழாமிடத்திற், செவ்வாயும், சனியும்நின்ருல், தாயும், சேயும் மரணமாம், சென்மலக்கினத்தில், ராகுவும், சனியும், (அல்லது) கேதுவும், சனியும், நாலாமிடத்திற் செவ்வாயும், ஏழாமிடத்திற், சூரியனும், நின்ருல் ,மாதாவும், மைந்தனும், மரணமாம், லக்கினத்திற்கு, ஏழாமிடத்திற்சனியும், செவ்வாயும், நின்ருல், குழந்தைக்குமரணமென்று, சொல்லுவார்கள், பெரியோர்கள்—எ-று. 91

வாரார் முலையாய் சன்மமெட்டா
மனைக்கா றேழெட் டொடுவியத்தில்
கூரார் பாவர் தேய்பிறையைக்
கூட வதற்கு நான்கெட்டில்
ஓரார் பாவ ருறிற்குழவிக்
கரிட்டம் பன்னென் றென்பதினில்
காரார் சனிசெவ் வாய்பாம்பு
கலந்துற் ருலுங் கடிதரிட்டம்.

இ-ள். மெச்சக்கூடிய பச்சைப்பட்டை கச்சணிந்த கனதனத்தை யுடைய பெண்ணே, இச்செகத்தில் ஜென்மலக்கினத்திற்காவது, அதற் கெட்டாமிடத்திற்காவது, (6) (7) (8) (12) ஆமிடங்களில், பாவக்கிரகங்கள் தேய்பிறை சந்திரனைக்கூட (அந்த இடங்களுக்கு) (4) (8) ஆமிடங்களிற் பாவக்கிரகஙகள், நின்ருல், பிறந்த குழந்தைக்குத் தோஷமாம், மேற்சொன்ன லக்கினம் (8) ஆமிடங்களுக்கு, (9) (11) ஆமிடங்களில், கொடுமையுள்ள, சனி, செவ்வாய், ராகு, அல்லது கேது, (ஆகிய இவர்கள் மூவரும்) கூடி நின்ருலும், குழந்தைக்கு, கடுமையான, சென்மதோஷமாம்—எ-று. 92

கடிய சன்மந் தனிற்பிறையுங்
கவின்சுக் கிரனுங் கலந்துநிற்க
நெடிய வேழிற் சனிநிற்க
விஃதல் லாம னீழ்சனியும்
கொடிய சசியு மொருகாலிற்
கூடி யிருக்கச் சன்மத்தில்
படியும் பிறையைச் சுபர்நோக்கா
திருக்கிற் பாலன் ருயுடன்சாம்.

இ-ள். ஜென்மலக்கினத்திற், சீதளுகிய, சந்திரனும், செழுமைதங்கிய சுக்கிரனும், பொருந்தியிருக்க, ஏழாமிடத்திற் சனியிருக்க, (அல்லாமலும்) நீண்ட சனியும், அமரசந்திரனும், ஒரேபாதசாரத்திற் கூடியிருக்க, லக்கி னத்தில் நின்ற சந்திரனைச் சுபக்கிரகங்கள் பார்க்காதிருந்தால், சேயும், தாயும், இறந்துபோவார்கள்—எ-று. 93

காணுங் கேதுங் கரும்பாம்புங்
கருது நான்கி லுற்றிடவே
மாணுங் குழவிக் குறுமரண
மாகு மொன்ப தாமிடத்தில்
பானும் வியத்திற் கோளுறினும்
பன்னுங் காரி கதிருடனே
பூணும் வியத்தி லுற்றிடினும்
புதல்வன் ருதை யுடன்மரணம்.

இ-ள். ஏதம் விளைக்கின்ற, கேதுவாவது, கருப்புநிறம்பொருந்தியராகு வர்வது, ஜென்மலக்கினத்துக்கு, நாலில் நின்ருல், பெருமையுள்ள, அரு மைக்குழந்தைக்கு மரணமுண்டாகும், ஒன்பதாமிடத்திற் சூரியனும், பனி ரண்டாமிடத்திற் பாவங்கிரகமிருந்தாலும், கொடுமைசெய்யுஞ்சனி, சூரிய னுடனே சேர்ந்திருந்தாலும், பனிரண்டாமிடத்திலிருந்தாலும், தகப்பனும் பிள்ளையும் மரணமாம்—எ-று. 94

மரண மைந்திற் கதிர்மதியு
மந்தன் செவ்வா யுடன்கூடி
கிரண முற்றே யிருந்தக்காற்
கேளாய் குழவி பிதாமரணம்
முரணு மசுர குருவெட்டின்
மூன்றிற் பாவ ருடனிருக்கத்
திரமாம் பாவர் நோக்கமுறச்
சேய்க்கு மரிட்டஞ் செய்திடுமே.

இ-ள். பெண்ணே கேட்பாயாக, லக்கினத்திற்கு அஞ்சாமிடத்திற் சூரியனும், சந்திரனும், சனியும், செவ்வாயும், ஒன்றாய்ச்சேர்ந்து, பலமாய் நிற்கில், குழந்தையும், பிதாவும், மரணமாம், பகை க்ஷேத்திரம்பெற்ற சுக்கிரன், எட்டாமிடத்திலாவது, மூன்றுமிடத்திலாவது, பாவக்கிரகங்களுடன், சேர்ந்திருக்க அல்லது பலம்பெற்ற பாவக்கிரகங்களாற்பார்க்க, குழந்தைக்குச் சென்மதோஷத்தையுண்டாக்கும்—எ-று. 95

செய்யும் பரிதிக் கெட்டதனிற்
செவ்வாய் மந்த னுடன்கூடி
உய்யுஞ் சுபர்க ணோக்கமிலா
துற்றூற் பிதாவோ ஒருமரணம்
பைய மதிக்கே ழெட்டினவ
பண்பா மிடத்திற் பாவர்களும்
ஐய மறவே யிருந்தக்கா
லாகுங் குழவி பிதாவிறுமே.

இ-ள். எல்லவன் நின்ற இடத்துக்கு, எட்டாமிடத்தில், வல்லமைதங்கிய, மந்தனுஞ் சேயுங், கூடிநிற்கப் பிழைத்தற்குரிய சுபக்கோட்கள் நோக்கவிட்டால் பிதாமரணமாம், குறைந்த சந்திரனுக்கு, (7) (8) (9) ஆமிடங்களில், சந்தேகத்துக்கிடமில்லா, முழுப்பாவக்கிரகங்கள், இருந்தால், குழந்தையும், தகப்பனும் மரணமாகுவர்—எ-று. 96

இறுமே பாவக் கிரகமுட
னிருந்த மதியின் கிராணமெனின்
உறுமே சென்ம மெட்டிற்கே
யுற்ற குழவி தான்மரணம்
பெறுமே பரிதி கிராணமிதிற்
பேசும் பாவ ருடன்கூடச்
சிறுவா னெட்டிற் சனிசெவ்வாய்
சேரிற் றகப்பன் றூய்மடிவர்.

இ-ள். ஜென்மலக்கினத்திலாவது, எட்டாமிடத்திலாவது, கொடும் பாவக்கிரகங்களுடன், கிராணத்தோடு கூடிய சந்திரன் நின்றால், பிறந்த குழந்தை மரணமடையும், சூரியன் கிராணமுற்றுப் பாவருடன் கூடிநிற்க, அதற்கெட்டாமிடத்திற், சனியும், செவ்வாயும், கூடிநிற்கக் கொஞ்சக்காலத் தில், தாயும், தகப்பனும், மாய்குவார்கள்—எ-று. 97

வெண்பா.

பூராடம் முக்காலும் பூசத் திடையிரண்டும்
சீராகச் சித்திரையிற் செல்லரையும்—ஊர்நாட
உத்திரத்துக் காலு முயிரிழப்பர் தந்தைதாய்
புத்திரனைப் பெற்றெடுத்த போது.

இ-ள். நீர்வளம், நிலவளம்பொருந்திய ஊரிலுள்ள நேரிழையே, பூரா டத்தின் மூன்றும் பாதமும், பூசத்தின், இரண்டு, மூன்றும்பாதங்களும், சிறப்புற்ற சித்திரையின், முதலிரண்டு பாதங்களும், உத்திரத்தின், முதற் பாதமும்,ஆகிய இந்நட்சத்திரபாதங்களில் புத்திரர்களைப் பெற்றெடுத்தால், தாய்தந்தையர், உயிரிழந்துபோவார்கள்—எ-று. 98

பாலாரிஷ்டம்

சம்பூர்ணம்.

நட்சேத்திரபலன்.

அச்சுவினி.

செய்கருமம் வழுவாமற் செய்வன்மட
வார்நேயன் றியாகி தீரன்
பொய்சொல்லா னபரணப் பிரியனற்ப
கோபிபெறும் புகழே யுள்ளான்
துய்யவிழி சிவந்திருப்பன் மார்பகல
முளன்சமர்த்தன் றாய னாகும்
ஐயமிலா நெற்றியுயர்ந் தேயிருப்பன்
சாந்தனசு பதியி னானே.

இ-ள். நீணிலத்தில் வாணிபிறந்து, அசுவனி நட்சத்திரத்தில், அவதார மானவன், செய்தொழில்களை வழுவாமற் செய்வான், பெண்கள்மேல் ஆசையுள்ளவன், தருமஞ்செய்பவன், தைரியன், மெய்சொல்பவன், சர்வா

பாண விருப்பமுள்ளவன், சொற்ப கோபமுள்ளவன், பெருங்கீர்த்தியுள்ளவன், சிவந்த கண்ணையுடையவன், விரிந்தமார்பையுடையவன், வல்லமை பொருந்தியவன், பரிசுத்தன், சந்தேக மில்லாதவன், உயர்ந்த நெற்றியையுடையவன், சாந்தகுணமுடையவனுமாவன்—எ-று. 99

பரணி.

அன்னைபிதா வுக்கினியன் ஞானியற்ப
நித்திரைய னற்ப கோபி
தன்மவா னைச்சுவரியன் மானபுகழ்க்
கோனுந்தாம் பூல நேயன்
மன்னுமுரைத் திடனுடம்பி னிடப்புறத்தின்
மறுவனருஞ் சமர்த்த னுதம்
பன்னியுரை யிற்பிரியன் மோவாய்க்கட்
டைச்சிறியன் பரணி யானே.

இ-ள். தரணியில் தர்க்கையுதித்த, பரணிநட்சத்திரத்திற்பிறந்த பாலன்; மாதாபிதாக்களுக்கு அன்புடையவன், ஞானமுடையவன், அற்பநித்திரையுடையவன், சொற்பகோபமுடையவன், தருமசிந்தையுடையவன், ஐஸ்வரியவான், பெருமையுங் கீர்த்தியுமுடையான், தாம்பூலப் பிரியமுடையவன், திடவாக்குடையவன், இடப்பக்கத்தில் மறுவுள்ளவன், சமர்த்துப் பொருந்தியவன், பெண்கள் சொற்களிற் பிரியன், சிறிய மோவாய்க்கட்டையுடையவனுமாவன்—எ-று. 100

கார்த்திகை.

கொள்ளும்ரச வர்க்கத்திற் பிரியனற்ப
நித்திரையன் கூறுஞ் செஞ்சொல்
தெள்ளியசா துரியன்பொய் சொல்லியுமே
பொருள்சேர்க்குந் திறத்தோன் புத்தி
உள்ளவன்மன் னர்கினியன் சன்மானன்
றேகபல முடைய கோமான்
கள்ளமன னுரத்தின்மறு வழக்குறைக்குந்
துணிவான் கார்த்திகையி னுனே.

இ-ள். தீர்த்த ஓமசாந்திகளுக்குப் பாத்திரமான அக்கினிபகவான் அவதரித்து, கார்த்திகை நட்சத்திரத்திற் பூர்த்தியாய்ப்பிறந்தவன், ரசவர்க்கத்திற் பிரியமுடையவன், அற்பநித்திரையுடையவன், சொற்சாதுரியன், பொய்சொல்லிப் பொருள் சம்பாதிப்பவன், புத்திசாலி, இராஜப்பிரியன், சன்மானம்பெறுபவன், தேகபலசாலியான பெரியவன், வஞ்சகமனத்தன் நெஞ்சில் மறுவுள்ளவன், துணிவாக வழக்குகளைச் சொல்பவனுமாவன். 101

உரோகணி.

நீரதிக தாகமுளன் சொன்னதுகேட்
பான்புலவ னிருப னுகம்
பாரிலன்ன மிடுஞ்சீமா னிரும்புவியா
பாரிநெய்பால் பட்ச முள்ளான்
நேருமிரு விழிபருத்துப் புருவமுஞ்சற்
றேநெருங்கும் நேய னென்றும்
ஓரமுரை யானுள்ளங் காலுரத்தன்
றிடநடைரோ கணியி னானே.

இ-ள். சரோருகத்தண்டில், திருமாலுந்திவந்தோனாகிய, மலரோனும், ஸ்ரீகண்ணபிரானும் திருவவதாரமாகிய, உரோகணி நட்சத்திரத்திலுதித்தவன், உண்ணீர் உண்ணீரெனத் தண்ணீர் குடிப்பவன், பிறர்சொற் கேட்பவன், வித்துவான், அன்னதானஞ்செய்பவன், இரும்புவியாபாரஞ் செய்பவன், பால் நெய்யிற் பிரியன், பருத்தகண்ணும், நெருங்கிய புருவமுமுடையவன், ஒரே சொல்லையுடையவன். உள்ளங்கால் பலமுடையவன், திடமுள்ள நடையை யுடையவனுமாவன்—எ-று. 102

மிருகசீரிடம்.

காலைமுழுக் குப்பிரியன் விசாலவிழி
மயிரழகன் கல்வி யுள்ளான்
கோலிய திண் டேகன்மன வன்மம்வெளி
விடானினிய கூத்திற் பாட்டிற்
சாலவுஞ்சஞ் சாரனுந் தாம்பூல
நேயநினைத் தது முடிப்பான்
வேலாருங் கரனெற்றி யுயர்ந்திருக்குஞ்
ஞானிமிருக சிரத்தி னானே.

இ-ள். வானுலாவுஞ் சந்திரன், தானுதித்த,மிருகசீரிடநட்சத்திரத்திற் பிறந்தவன், காலையில் ஸ்நானஞ் செய்ய விருப்பமுடையவன், விலாசம் பொருந்திய கண்ணையுடையவன், அழகிய ரோமமுடையவன், படிப்புள்ளவன், வலிமையுள்ள தேகமுடையவன், உட்கருத்தை வெளிவிடாதவன், நாட்டியக்கூத்திலும், பாட்டிலும், மேட்டிமைத் தாம்பூலத்திலும் பிரியமுடையவன், நினைத்த காரியத்தைச் செய்பவன், வேலாயுதத்தைக் கையிற் பிடிப்பவன், உயர்ந்த நெற்றியை யுடையவன், அறிவுள்ளவனுமாவான்.

திருவாதிரை.

பொய்யுரைசொல் பவன்கீர்த்தி மான்றரித்
திரனெடியன் பொருத்து நோயன்

வெய்யசிலு கன்சுத்த வான்குஞ்சி
யழகனிரு விழிசி வப்பன்
துய்யபல வான்கோபி யுலவுடைய
னுயர்ந்திருக்குந் துண்ட முள்ளான்
ஐயமற வுலகுதொழ வொருமணியாய்
விளங்கியவா திரையி னுனே.

இ-ள். ஐயமற வையகம்போற்றும், தெய்வ மணியாகிய சிவபெருமான், ஜெனித்த நாளாகிய, திருவாதிரை நட்சத்திரத்திற் பிறந்தவன், பொய் பேசுபவன், கீர்த்தியுடையவன், தரித்திரன், நீண்டவுருவத்தையுடையவன், பொருத்துகளில் நோயுடையவன், சிலுகுபேசுபவன், சுத்தவான், குடுமியழகுடையவன், சிவந்த விழியையுடையவன், பலமுடையவன், கோபவான் உறவுகொண்டாடுபவன், உயர்ந்த மூக்குள்ளவனுமாவன்.

புனர் பூசம்.

திருந்தியசொற் சாதுரிய னகங்காரி
விசாலபுயன் சிக்க னத்தன்
வருந்திநெடு வழிநடப்பன் கடினமொழி
யான்கள்ளன் மலர்போற் கையன்
பரிந்தகுண புத்திமான் பொய்சொல்லான்
பித்தமுடன் பலர்க்கு நேயன்
பொருந்தியவைந் தாம்வயதிற் கான்முடமா
வன்புநர்பூ சத்தி னுனே.

இ-ள். தசாதன் சுதனுகிய ஸ்ரீராமபிரான் திருவவதாரமான, புனர்பூச நட்சத்திரத்திற், பிறந்தவன் சாதுரியவசனன், சஞ்சல அகங்காரன், பரந்தபுயத்தையுடையவன், சிக்கனஞ் செய்பவன், கஷ்டப்பட்டு, நெடுந்தூரம் நடப்பவன், கடினவாக்கையுடையவன் திருடன் மிருதுவானகையையுடையவன் இரக்கமான குணத்தைப் பொருந்தியவன், புத்தியுடையவன், பொய் சொல்லாதவன், பித்ததேகி, பலபேருடனும் சிநேகமுடையவன், ஐந்தாம் வயதில், காலில்முடமுள்ளவனுமாவன்—எ-று. 105

பூசம்.

வாசியுடை யவன்வழக்கை யுரைத்திடுகள்
வன்குத்திர வசன முள்ளன்
நேசமுடன் மாதாவைத் தந்தையைரட்
சித்திடுவ னெடிய ரூபன்
தேசொழுக்கந் தனவான்கண் மூக்கழகன்
பசிபொறுன் றிகழுஞ் சாந்தம்

பூசிமுடிக் கப்பிரியன் குணவான்பாக்
கியமுளன்பூ சத்தி ஞனே.

இ-ள். ஆங்கிரீச மகாருஷியின்மைந்தன் பாங்குள்ள பிரகஸ்பதி திருவவதாரமான, பூசநட்சத்திரத்திற் பிறந்தவன், குதிரையுடையவன், கள்ள வழக்குரைப்பவன், குத்திரம்பேசுபவன், தாய்தகப்பனை போஷிப்பவன், நீண்ட தேகமுடையவன், அழகு ஒழுக்கமுள்ளவன் தனவான், அழகுள்ள கண்ணும் மூக்குமுள்ளவன் பசிபொறுக்காதவன், வாசனாலங்காரப் பிரியன் குணவான், பாக்கியமுள்ளவனு மாவன்—எ-று. 106

ஆயிலியம்.

செஞ்சொற்சா துரியன்சத் துருநேயன்
மனதுக்கன் றிரிவான் காட்டில்
பஞ்சைபோற் சிறுதின்றி தின்பனன்னை
பிதாக்கினியன் பத்தி யுள்ளான்
வஞ்சகமில் லாதெவர்க்கு மேளிதஞ்சொல்
வன்சுகவான் வலிமை யோருக்
கஞ்சிடான் விழிபுருவ முயர்ந்தொதுக்கி
யிருக்குமா யிலியத் தானே.

இ-ள். மேதினியைச் சுமந்து, காதுங்கண்ணும் ஒன்றான, ஆதிசேஷன் திருவவதாரமான, ஆயிலிய நட்சத்திரத்திற் பிறந்தவன், செவ்வையான சொற் சாதுரியவான், எதிரியை நேசமாக்குவோன், மனோதுக்கன், சிலநாள் காட்டிலலைவன், மிருதுவான சிற்றுண்டியிற்பிரியன், தாய்தகப்பனுக்குப் பிரியமுடையவன், தேவதா பக்தியுள்ளவன், வஞ்சகமில்லாமல், யாவர்க்கும், இதவார்த்தை பேசுவன், சுகமுடையவன், பலமுள்ளவர்களுக்கும் பயப்படாதவன், கண்ணும் புருவமும், உயர்ந் தொடுங்கியிருக்கப்பட்டவனுமாம்—எ-று. 107

மகம்.

இலவுமுருக் கலர்விழியுந் தொண்டைதூ
தளைபோற்செவ் விதழார் மாதே
பலதிசையிற் சஞ்சாரப் பிரியமுளன்
சௌந்தரியன் பாண்மி குந்த
புலவன்முழுக் குப்பிரியன் சுகந்தபரி
மளப்பிரியன் பொன்னு முள்ளான்
வலதுபுற மறுவுடைய னியாயனற்ப
நித்திரையன் மகத் தினனே.

இ-ள். இலவமலர், முருக்கமலர்போன்ற இருகண்களும், கோவைக்கனியும், தூதுளங்கனியும்போன்ற சிவந்த அதரபானத்தையுமுடைய பெண்

னை, பிருகு மகாருஷியின், அருமைமகவான, பிருகுவென்னும், சுக்கிரபகவான், திருவவதாரமான, மகநட்சத்திரத்திற் பிறந்தவன், பலதிசைகளிலும், சஞ்சரிக்கப் பிரியமுள்ளவன், அழகுடையவன், பண்ணிசைபாடும் பாவலன் ஸ்நானப்பிரியன், சுகந்தவாசனைப்பிரியன், செல்வமுள்ளவன், வலதுபக்க மறுவுள்ளவன், நியாயஸ்தன், அற்பநித்திரை செய்பவனுமாவன்—எ று.

பூ ர ம்.

இதமான வசனமுளான் கல்விமான்
சிவந்திருக்கு மிருக ணுளன்
நிதியதனை வருத்தமதாய்த் தேடிடுவன்
வருங்கரும நினைவிற் காண்பன்
விதமான வியாபாரி கடினமொழிப்
பலநினைவை விரும்பு நெஞ்சன்
பொதுமாதர் தனைவெல்வ னகைதந்த
வழகன்பூ ரத்தி னுனே.

இ-ள். பாருலகோர் கொண்டாடும், பார்வதிதேவி திருவவதாரமான, பூரநட்சத்திரத்திரத்திற் பிறந்தவன், பிரியவசனமுள்ளவன், கல்வி யறிந்தகனவான், சிவந்த நேத்திரங்களுடையவன், கஷ்டப்பட்டுச் சம்பாத்தியம் செய்பவன், பின்வருங் காரியகன்மங்களை யூகித்தறிபவன், விதவிதமான வியாபாரஞ் செய்பவன் கடினவசனத்தையுடையன், பலபல நினைவைக் கொண்ட மனதுடையவன், வேசைகளை வெல்பவன், கையும், பல்லும், அழகுடையவனுமாவான்—எ-று. 109

உத்திரம்.

கையாத வுரையன்முன் கைவலியன்
வித்தையுள னழகாங்கண் வாயுமுள்ளான்
மையார்கண் ணார்நேயன் முன்கோபி
மறுமுகமார் பதனி னுள்ளோன்
பொய்யாத சூரனீ ராடுவான்
சிறுபசியன் பொருந்தும் பத்தி
ஒய்யார நடைத்தருமன் ஞானவா
னுகுமுத்தி ரத்தி னுனே.

இ-ள். இத்தலத்தோர், மெத்தப் பிரியமாய்க் கொண்டாடும், சித்திர்பானுவாகிய, சூரியபகவான், திருவவதாரமான, உத்திரநட்சத்திரத்திலுதித்தவன், உபசாரமாக இதவசனம்பேசுபவன், முன்கைபலம் பொருந்தியவன் கல்விமான், அழகுள்ள, கண்களும், வாயுமுடையவன், பெண்கள் நேசமுள்ளவன், முற்கோபி, முகத்திலும், மார்பிலும், மறுவுள்ளவன், பொய்யில்லாத

சூரன், ஸ்கானப்பிரியன், அற்பபசியுடையவன், பக்தியுடையவன், நடையழகன், தருமவான், ஞானவானு மாவன்—எ-று. 110

அஸ்தம்.

வன்புறுதா மதன்கல்வி மானற்ப
பசியன்மனு வணங்க வாழ்வோன்
இன்பமுறுங் குறிப்புடையன் சூரனழ
கியன்கடின னினிய புத்தி
பின்வயதிற் றனமுடையன் சிலுகன்மார்
பகலன்பின் புறங்கா னல்லோன்
அன்புடனீ ராடல்குரு பத்தியுளன்
றருமனத் தத்தி னனே.

இ-ள். ஆத்திமாலையைத் தோளில், பூர்த்தியாயணிந்து பணிந்தோரைக் காத்தாளக்கூடிய சாத்தா திருவவதாரமான, அஸ்தநட்சத்திரத்திற் பிறந்தவன், கோபி, தாமதகுணமுடையவன், கல்விமான் சிறுபசியுள்ளவன், மனுக்கள் வணங்கும்படியான வாழ்வுள்ளவன், இன்பக் குறிப்புடையவன், வல்லவன், அழகன், கடினவசனமுள்ளவன், புத்தியுடையவன், பின்வயதிற் செல்வமுடையவன், சிலுகுபேசுபவன், விரிந்தமார்புடையவன், பின்னும் புறங்காலும், அழகுடையவன், தீர்த்தமாடல், குருபக்தியிற்சிறந்தவன், தருமவானுமாவன்—எ-று. 111

சித்திரை.

பலமான சரீரவான் மார்பகல
னடைகடியன் பரிந்து சொல்வான்
குலவியநற் குணனடைநற் பிரியன்ரு
மதபுத்திக் குரிசி னண்பன்
நிலைமைபெறுந் திடவசனன் முகத்துறுநன்
மறுவுளனித் திரையுமற்பன்
செலவுசெயான் சவுரியவான் றுக்கமுளான்
கோபிசித் திரையி னனே.

இ-ள். வீடாலயங்களை விசித்திரமாய் வகுக்கும், விஸ்வகர்மாயுதித்த, சித்திரைநட்சத்திரத்திற்பிறந்தவன், பலமானதேகமுடையவன், அகன்ற மார்பையுடையவன், கடினநடையுள்ளவன், பிரியவசனத்தையுடையவன், நற்குணம், நன்னடக்கையிற்பிரியன், தாமதபுத்தியுடையவன், ராஜப்பிரியன், நிலையுள்ள திடவாக்குடையவன், முகத்தில் மறுவுள்ளவன், அற்பநித்திரைசெய்வோன், செலவுசெய்யாதவன், சௌரியவான், துக்கமுடையவன், கோபியுமாவான்—எ-று. 112

சோதி.

பல்லவற்கும் வசியன்போ சனப்பிரியன்
மறுதுடையிற் பற்ற வாழ்வோன்
நல்லியல்சேர் தேவதா பத்தியுந்தன்
னிச்சையுளான் ராச சேவைக்
கல்வியுளான் றாய்தந்தைக் கினியன்விஸ்
வாசமுளன் கடின தேகன்
சொல்லுநெறி யுளன்கரத்தா யுதம்பிடிப்பன்
றியாகவான் சோதி யானே.

இ-ள். அவனியெங்கும், அநிலம்வீசும், வாயுபகவான், அவதாரமான, சோதிநட்சத்திரத்திற் பிறந்தவன், பலபேரிடத்தும்பிரியன், போசனவிருப்பமுடையவன், தொடையில் மறுவுள்ளவன், நன்மையுடையவன், தேவதா பக்தியும், சுயேச்சைப்படி நடப்பவன், ராஜசேவைக்குரியவன், கல்வியுள்ளவன், தாய்தகப்பனுக்கு அன்புள்ளவன், யாவரிடத்தும் விசுவாசமுள்ளவன், கடினதேகன், முறையாய்ப்பேசுபவன், கரத்தில் ஆயுதமுடையவன், தியாக மிடுபவனுமாவன்—எ-று. 113

விசாகம்.

வேறு.

சொல்முகத்தின் மறுநெடிய னீதிதுயிற் பிரியன்
சுற்றமர சர்க்கினியன் சொல்லடக்குங் குணத்தன்
நல்வசனன் பொறையுடைய னனநடையார் நேயன்
நாடியதோர் தலைமார்பி னரையின்மறு வுளனும்
செல்வமுளன் சதுர்வேதன் குணவான்முன் கோபி
சேவையுளான் விசாரமிலான் றெய்வபத்தி யுள்ளான்
வில்வாளு மேந்துகர ளுங்கயமு மாவும்
மிகநடத்துந் தியாகியாம் விசாகத்தி னானே.

இ-ள். அமரர்கள்போற்றும், குமரக்கடவுள் திருவவதாரமான, விசாக நட்சத்திரத்திற் பிறந்தவன்முகத்தில் மறுவுடையவன், வளர்ந்தவன், நீதிமான், நித்திரையில் மெத்தப்பிரியமுடையவன், சுற்றத்தார்க்கும், இராஜனுக்கும் பிரியமுடையவன், சொல்லையடக்குபவன், நல்லவசனன், பொறுமையுடையவன், பெண்கள்நேயன், தலை மார்பு, இடுப்பு இதுகளில் மறுவுடையவன் செல்வமுள்ளவன், நான்குவேதங்களைக்கற்றவன், குணமுடையவன், முற்கோபமுடையவன், மனிதர்களால் சேவைசெய்யப்படுவன், விசாரமில்லாதவன், தெய்வபக்தியுள்ளவன், வில், வாள், இவைகள் பிடித்தகையான், யானையேற்றம்,குதிரையேற்றங்கற்றவன்,தியாகியுமாவன்-எ-று.

அநுஷம்.

ஈனமில்லா நற்குணவான் றும்பூலப் பிரியன்
எவரெவரும் புகழ்சதுர னினியபத்தி யுளனுப்
நானிலமெ லாந்துதிக்கு நீதிமான் றாயன்
நயனங்கள் சிவந்திருக்கு நராதிபர்சன் மானி
மானனேயார்க் கினியன்மயி ரழகன்மார் பகலன்
மாதாவைத் தந்தைதனை மகிழ்ந்திரக்ஷித் திடுவன்
ஆனைபோல் வேகமுள னற்சொல்ல னல்லன்
ஐச்சுவரிய வான்லோபி யாமனுஷத் தானே.

இ-ள். ஜெகமெங்கும் போற்றும் மகலெட்சுமி திருவவதாரமான, அனுஷ நட்சத்திரத்திற் பிறந்தவன், குற்றமில்லாத நற்குணமுடையவன், தாம்பூலப்பிரியன், யாவராலும் புகழப்படுபவன், புத்தியுள்ளவன், நீணிலத்தோர் கொண்டாடப்படுகின்ற நீதியுள்ளவன், பரிசுத்தமுடையவன், சிவப்புநேத்திரம் பொருந்தியவன், ராஜசன்மானம் பெறுபவன், பெண்கள்மோகப்பிரியன், அழகிய உரோமமுள்ளவன், அகன்றமார்புடையவன், மாதா பிதா ரக்ஷகன், ரிஷபவேகமுள்ளவன், மிருதுவசனமுடையவன், ஐசுவரியவான், உலோபகுணமுடையவனுமாவான்—எ-று. 115

கேட்டை.

தாட்டிகன் றுஷ்டரிணக் கன்பொய்ய னுபாயன்
தகுபத்தி யுளனிரவான் குரூர கோபி
நாட்டியவுண் மூச்சுளனீ ராடிடவும் பிரியன்
நற்புத்தி யுளனெடியன் றமயனைரட் சிப்பன்
வாட்டமிலாச் சிற்றுண்டி தின்பன்மன் னர்க் கினியன்
மயிர்க்கடையும் விழிசிவப்பும் வலப்பாக மறுவன்
கேட்டமொழி திறங்கொள்ளான் பொய்யைமெய்யாக் கிடுவன்
கேள்வியுளன் கடினச்சொலான் கேட்டை யானே.

இ-ள். ஆகமெங்கும், ஆயிரங்கண் படைத்த பாகசாதனனாகிய, தேவேந்திரன், திருவவதாரமான, கேட்டைநட்சத்திரத்திற் பிறந்தவன், தாஷ்டிகன், துஷ்டசிநேகன், பொய்பேசுபவன், தந்திரமுள்ளவன், யாசிக்குந்தன்மையுடையவன், குரூரன், கோபி, உட்சுவாசம் விடுபவன், ஸ்நானப்பிரியன், நல்லபுத்தியுள்ளவன், உயரமானவன், தமயனை ரக்ஷிப்பவன், சிற்றுண்டிப்பிரியன், அரசர் மோகன், மயிர்நுனையும், கண்களும் சிவப்புள்ளவன், வலப்பாகம் மறுவுள்ளவன், காதாற் கேட்டசொல்லை உறுதி கொள்ளாதவன், பொய்யையும், மெய்யாக்குபவன், நற்கேள்வியுள்ளவன், கொரோவசனமுமுடையவனுமாவன்—எ-று, 116

மூலம்.

மண்டியநித் திரைப்பிரியன் புறந்தாளுன் னதனும்
வழுவாமற் செய்கருமஞ் செய்பத்தி மானும்
திண்டிறலா யுதந்தன்னாற் சீவனஞ்செய் திடுவன்
திகழ்தந்தை தாய்க்கினியன் சிறந்ததவ சீலன்
கண்டசிறு தின்றிதின்னப் பிரியவான் லோபி
கண்சிறுகிச் சிவந்திருக்குங் கல்விமா னாகும்
மிண்டுகளே செய்திடுவ னுறவினரைச் சேரான்
முன்கோபி கொடியனு கும்மூலத் தானே.

இ-ள். வானவர் பகைவரான தானவராகிய அசுரர்கள் ஜெனித்த,மூல நட்சத்திரத்திற் பிறந்தவன், நித்திரையிற் பிரியமுடையவன், பாதமேற்பக் கத் தழகுடையவன், செய்யக்கூடிய காரியங்களை வழுவாமற் செய்கின்ற வன், புத்தியுள்ளவன், வலிமைபொருந்திய ஆயுதத்தால், (வேலை செய்து) ஜீவனஞ்செய்பவன் தாய்தகப்பனுக்குப் பிரியமுள்ளவன், தவநெறியுடைய வன், பார்த்த சிற்றுண்டிகளை தின்னப் பிரியப்படுபவன், உலோபி, சிறுத் துச் சிவந்தகண்ணை யுடையவன், கல்வியுள்ளவன், சூதுசெய்பவன், பந்து க்களைச் சேராதவன், முன்கோபி. கொரேனுமாவான்—எ-று. 117

பூராடம்.

மெய்க்நெடியன் சிறுநெற்றி யான்வாசப் பிரியன்
விசாரமுள னரசர்நண்பன் மேற்கருமம் பார்ப்பன்
செய்யசிற்றுண் டிப்பிரியன் மாதாவுக் கினியன்
சேர்ந்தவரை ரக்ஷிப்பன் சிவந்த சிறு விழியன்
கைகானு நீட்சியுளன் சவுந்தரியன் விசாலன்
கள்வனும் வீரியவான் கரங்கள்புயம் வலியன்
பொய்சொல்லான் சஞ்சாரப் பிரியன் மின்னார்க்
கினியன் பொழிதான வானாகும் பூராடத்தானே.

இ-ள். பூவாழ்மாந்தர்க்கு ஜீவாதாரமாய் எப்போதும், ஒப்புயர்வாகத் தப்பாதிருக்கும், அப்புவென்னும், வருணபகவான் வந்துதித்த, பூராடநட் சத்திரத்திற் பிறந்தவன், உயர்ந்தவன், சிறிய நெற்றியுடையவன், வாச னைப்பிரியன், விசாரமுள்ளவன், ராஜசிநேகன், மேலான தொழிற்செய்ப வன், சிறப்பான சிற்றுண்டியிற்பிரியன், தாய்க்குப்பிரியமுள்ளவன், தன்னை வந்தடைந்தோரைக் காப்பாற்றுபவன், சிவப்பான சிறிய நேத்திரமுடைய வன், கைகால்கள் நீளமுள்ளவன், அழகுள்ளவன், விசாலம் பொருந்திய வன், கள்ளன், தைரியசாலி, கையும், புயமும், பலம்பொருந்தியவன், பொய் சொல்லாதவன், சஞ்சாரஞ் செய்வதிற் பிரியமுடையவன், பெண்கள் நேயன், தானங்கொடுப்பவனுமாவன்—எ-று. 118

உத்திராடம்.

வேறு.

தந்தைமார்க் கினியன் முகத்துறு மறுவன்
சரீரமுங் கெட்டியான் பலவான்
புத்திமா னுயர்ந்த நாசிநல் வசனன்
போசனப் பிரியனீர்க் கஞ்சான்
பத்திமா னுறவுக் கினியவன் வர்ம்மி
பார்பொருள் வேண்டிடாத் தூயன்
உத்தமர்க் கினிய னிறைந்தசொற் றியாகி
யுன்னுமுத் திராடத்தி னனே.

இ-ள். இத்தலத்தோர் பத்தியாய்ப்பணியுங் கத்தனுகிய கணபதியை சத்தியீன்ற, உத்திராட நட்சத்திரத்திற் பிறந்தவன், பெண்கள்பிரியன் முகத்தில்மறுவுடையவன், கெட்டியானதேகன், பலவான், புத்தியுள்ளவன், உயர்ந்த மூக்குள்ளவன், நல்வார்த்தைபேசுபவன், போசனப்பிரியன், தண்ணீரிற் பயமில்லாதவன், பக்தியுள்ளவன், சிநேகிதர்பிரியன், மர்மமுடையவன், பிறர்பொருளை விரும்பாதவன், பரிசுத்தவான் நல்லவர்களுக்குப்பிரியன்பெருமையான சொல்லுடையன், தியாகங்கொடுப்பவனுமாவன்—எ-று.

திருவோணம்.

தக்கதோர் கல்வி மானொரு போக்கன்
சற்றினிற் கோபமா றிடுவன்
பக்கமு முன்பின் பார்த்துமே நடப்பன்
பதிவுளங் காலுயர்ந் திருக்கும்
மைக்கணார்க் கினியன் பரிமளப் பிரியன்
மயிர்முடி யழகனுற் சாகன்
சிக்கன வானு மேற்பவர்க் கீயான்
றிகழ்திரு வோணநா ளானே.

இ-ள். இருநிலத்தில், திருமாலவதரித்த, திருவோண நட்சத்திரத்திற் பிறந்தவன், அதிகக்கல்விகற்றவன், ஒருபோக்கன், சீக்கிரத்தில், கோபமுண்டாகி சாந்தமடைவான், நாலாபக்கமும் பார்த்து நடப்பவன், உள்ளங்காலுயர்ந்தவன், பெண்கள்மோகன், வாசனைப்பிரியமுள்ளவன், மயிர்முடி அழகன் கெம்பீரமுடையவன், பொன்னைப்போற்றுபவன், பிச்சைகொடாதவனுமாவன்—எ-று. 120

அவிட்டம்.

நெருபெருங் கருமங் தன்சொன்மே லானே
னின்றவர்க் கஞ்சிடான் றியாகி

உறுபுற வடிநா சியுமுயர்ந் திருப்ப
ஞெருவர்சொற் பொறுன லூண் பிரியன்
பெறுமவர்க் கினியன் மடந்தையர்க் கன்பன்
பெரும்பொரு டேடுவ னழகன்
அறிவுட னடங்கிப் பிறர்பொருள் வவ்வா
னவிட்டநட் சத்திரத் தானே.

இ-ள். அட்டவசுங்கள் திட்டமாயுதித்த, அவிட்டநட்சத்திரத்திற் பிறந்தவன், முறையானதொழிற்செய்பவன், சொன்னசொல்லைச் சாதிப்பவன், எவருக்கும், அஞ்சாதவன், தியாகி, பாதமும் நாசியுமுயர்ந்தவன், ஒருவர் சொல்லைப்பொறுக்காதவன், ஆகாரப்பிரியமுடையவன், தாய்தகப்பனுக்குப் பிரியமானவன், பெண்களுக்குப்பிரியமுள்ளவன், அதிகப்பொருள் சம்பாதிப்பவன், அழகன், அறிவுடையவன், அடக்கமுள்ளவன், அந்நியர் பொருளை அபகரியாதவனுமாவன்—எ-று. 121

சதயம்.

பத்தியில் லாமல் வெகுண்டசொற் பொறுதான்
பழுதிலா ரோகவா னினியன்
புத்திமான் கைகால் வலியன்வா யழகன்
பொய்பெறுன் மன்னவர்க் கினியன்
வித்துவான் சூரன் மாதருக் கன்பன்
மிகுந்தநீ ராடவும் பிரியன்
சத்துரு சயன்பொன் னுளன்வழக் குரைப்பன்
சதயநட் சத்திரத் தானே.

இ-ள். தமர், நமர், குமர், நுமர், என்றும், பாராது சமர், செய்து கொண்டு போகும், எமதருமராஜன் வந்துதித்த சதயநட்சத்திரத்திற் பிறந்தவன், பிரியமில்லாத வெறியரைப்போற் கோபித்துச்சொல்லும், சொற்களைப் பொறுக்காதவன், அற்பச்சீக்குள்ளவன், இனியன், புத்திமான், கைகால் பலமுடையவன், வாயழகன், பொய்பேசாதவன், மன்னவர்க்கினியன், வித்துவான், வல்லபமுடையவன், பெண்களுக்கு நேயமுள்ளவன், அதிகமாய் நீராடுதலிற் பிரியமுள்ளவன், சத்துருவை நாசஞ்செய்பவன், செல்வமுள்ளவன், வழக்குரைப்பவனுமாவன்—எ-று. 122

பூரட்டாதி.

வேறு.

பூரட் டாதி பொறுன்பிறர் பொத்துச்சொல்
நேரிட் டார்வழக் கான்பானெய்க் கன்பினுன்

வாரிட் டார்முலை மாதருக் கீவிலான்
ஓரிட் டார்கல்வி மானுகி யுன்னதன்.

இ-ள். அளகாபுரிக்கரசனுகிய குபேரன்திருவவதாரமான, பூரட்டாதி நட்சத்திரத்திற் பிறந்தவன், பிறர்சொல்லும், குற்றச் சொற்களைப்பொறுக்காதவன், வழக்குத் தீர்ப்பவன், பால் நெய்யிற் பிரியமுடையவன் பெண்கள் விஷயத்திற் பொருள்களைச் செலவிடாதவன், பிரபலமான மிகுந்த கல்வியுடையவன், உயர்ந்த நாசியையுடையவனுமாவன்—எ-று. 123

உத்திரட்டாதி.

வேறு.

நித்தநீ ராடி தமருளன் கோள
    னீதிபொன் பிறர்க்குப காரி
வித்தைதாம் பூலப் பிரியன்சஞ் சாரன்
    விரிவுள காதுமார் புடையன்
புத்திமான் மாதர்க் கினியன்சா துரியன்
    பொய்யன்மற் றவர்தொழில் புரிவான்
உத்தமர்க் கினியன் வழக்கினிற் பலவா
    னுத்திரட் டாதிநா ளானே.

இ-ள். ஏமசாமத்தில், எதைநினைக்கினுந் தாமதமன்றித் தந்தருளுங் காமதேனுவந்துதித்த, உத்திரட்டாதி நட்சத்திரத்திற்பிறந்தவன், ஜலக்கிரீடையாடச் சந்தோஷப்படுபவன், சுற்றத்தாரையுடையவன், கோட்சொல்லுபவன், நீதியுடையவன், பொன்னுடையவன் எந்நேரமும்அந்நியர்களுக்கு உபகாரஞ்செய்பவன், கல்வியிலும், தாம்பூலத்திலும், பிரியமுடையவன், சஞ்சாரப் பிரியன், அகன்ற மார்பும், விரிந்த காதுமுடையவன், புத்தியுள்ளவன், பெண்களாற் பிரியப்படுவோன், சாதுரியவான், பொய்யுடையவன், அந்நியர் தொழிற் செய்பவன், விவேகிகளுக்கு அன்பன், பலமாக வழக்குச் செய்பவனுமாவன்—எ-று. 124

இரேவதி.

மெல்லிய ரிடத்திற் சாலவே பிரியன்
    மிகுசெல்வம் பாதிநாள் விளங்கும்
நல்லவன் பிறர்சொற் கேட்பனற் குணவா
    னயனசிங் காரசீ மானும்
சொல்லுரை யிற்சா துரியனந் தணரைத்
    தொழும்பத்தி யுள்ளபுத் தியினுன்
இல்லையென் றுரையான் பழிக்கிடங் கொடாத
    வியல்பினு னிரேவதி யானே.

இ-ள். பனிப்பகையான பாற்கான் மைந்தன், இனிப்பில்லாத சனிபக வான் ஜெனித்த, இரேவதி நட்சத்திரத்திற் பிறந்தவன், பெண்களிடத்தில் மிகப் பிரியமுள்ளவன், பாதிநாள் செல்வத்துடன் வாழ்வுள்ளவன், நல்ல தருமமுடையவன், பிறர்சொற் கேட்பவன், நற்குணமுடையவன், நேத்திர வழகுடையவன், சீமான், சொற்சாதுரியன், பிராமணர்களைத்தொழுகின்ற பக்தியுள்ளவன், புத்தியுள்ளவன், யாசிக்கிறவர்களுக்கு, இல்லை யென்னுத வன், பழிபாவங்களுக்கு, அஞ்சி நடப்பவனுமாவன்—எ-று. 125

நட்சேத்திரப் பொதுப்பலன்

சம்பூர்ணம்.

நட்சத்திர பாதபலன்.

அச்சுவினி.

சீர்பெறு கோளன் சஞ்சலன் பாவி
செறிந்திடும் ரூபமே யில்லான்
செப்பிய பிலுக்க னந்நியர்க் கன்பு
செய்குவ னசுபதி முதற்கால்
தார்செறி பிறரின் குணத்தினை யறிவான்
சவுந்தர வானலம் புரிவான்
சாத்திர முறைக்குஞ் ஞானத்திற் பார்வை
தருமிரு காலினிற் செனித்தோன்
ஏர்பெறு கணித வித்தையிற் பிரிய
னினிதுள புத்தியே புகல்வ
னிசைந்திடு மூல ரோகிநற் கரும
மெண்ணுவன் மூன்றதாங் காலான்
போர்செறி யுடம்பு வளைவதா மதிக
புத்திமான் சோதிட மறிவான்
புரந்தரன் காமி சத்திய வானும்
புகழுநாற் காலினி லுதித்தோன்.

இ-ள். சிறப்புப்பெற்ற, அசுவினி நட்சத்திரத்து (முதற்காலிற் பிறந்த வன்) கோட்சொல்பவன், மனச்சஞ்சலன், பாவி, நல்லரூபமில்லாதவன், பிலுக்கன், அந்நியர்களிடத்திற் பிரீதியுடையவனுமாவன். (இரண்டாங் காலிற் பிறந்தவன் அந்நியர்மனோபாவங்களை யறிபவன், அழகுள்ளவன், நன்மைசெய்

பவன், சாஸ்திரங்களைக்கற்றவன், ஞானியுமாவன். (மூன்ருங்காலிற் பிறந்தவன்), கணிதவித்தைப்பிரியன் நற்புத்திபுகட்டுபவன், மூலரோகத்தைப் பொருந்தியவன். நற்கரும சிந்தனையுடையவனுமாவன். (நாலாங்காலிற்பிறந்தவன்) உடம்பு சற்றுவளைவுள்ளவன், அதிகப்புத்தியுள்ளவன், சோதிடங் கற்றவன், ராஜன், காமமுடையவன், சத்தியவசனனுமாவன்—எ-று. 126

பரணி.

காலமாஞ் சிவப்பன் மிகுபராக் கிரமன்
கனபல நீதியு முள்ளான்
கருதலர் சிங்கஞ் செந்நிற மயிரான்
காணுமே பரணியின் முதற்கால்
கோலமா மானி நிபுணனு லசியன்
குணமுளன் புத்திமான் காமி
கூரிய தருமன் சாத்திர முரைப்பன்
குலவிய பரணிகா லிரண்டான்
சாலவுங் கோபி யுருட்சியாங் கண்ணன்
றன்னியன் மானிசந் தோஷி
சற்குண னெடியோ னருமூன் ருங்கால்
சாற்றிய பரணியா மதன்மேல்
தூலதே கத்தன் கோபியா மரசர்
துன்னுசே வகத்துவ முள்ளான்
துர்ச்சனன் கருவி யாகுமே பரணி
தோன்றுநாற் காலினுற் சொல்லே.

இ-ள். பரணிநட்சத்திரம், (முதற்காலிற்பிறந்தவன்) சிவப்புநிறமுடையவன், மிகுந்த பராக்கிரமசாலி, மேன்மையான பல நீதியுடையவன் சத்துருக்களைச் செயிக்குந் தன்மைபோன்றவன், சிவந்த உரோமமுள்ளவனுமாவன், (இரண்டாங்காலிற் பிறந்தவன்) அழகுடையவன், மானமுடையவன், நிபுணன், ஆலஸ்யமுள்ளவன், நற்குணமுள்ளவன், புத்திமான், காமமுடையவன், தருமஞ்செய்பவன், சாஸ்திரங்கள் சொல்லக்கூடியவனுமாவன், (மூன்ருங்காலிற் பிறந்தவன்) மிகவுங் கோபமுடையவன், திரண்ட நேத்திரமுடையவன், தடித்த நெஞ்சுடையவன், மானி, சந்தோஷமுடையவன், நற்குணமுடையவன், உயர்ந்தவனுமாவன், (நாலாங்காலிற் பிறந்தவன்) தூலதேகமுடையவன், கோபமுடையவன், ராஜசேவகஞ் செய்யப்படுபவன், துர்ச்சனன், கெர்வமுடையவனுமாவன்—எ-று. 127

கார்த்திகை.

சொல்லுமா சாரன் வித்துவான் பிரபு
தோன்றிய விலாபமுள் ளவனும்

சூரனு நேசன் புத்திமான் ரோகி
 தோன்றிடு மாரலின் முதற்கால்
வெல்லுமா சார வீனன்மா னிடர்கள்
 வெறுத்திடு கோபமுள் ளவனும்
வெற்றிசேர் பிறரைச் சேர்ப்பனூ றன்னை
 விரும்பிடான் கார்த்திகை யிருகால்
புல்லுவன் றுட்ட மடந்தையர் தன்னைப்
 புத்தியி லான்மிகு சூரன்
பொருந்திடாக் கோபி கருவிபோல் லாங்கைப்
 புரிகுவ னுமொரு மூன்றில்
அல்லுறு மிடியன் கலைபல வறியா
 னுமனத் தாபமே யுள்ளா
னடைந்திலான் பொறுமை துக்கவான் ரோகி
 யாகுநாற் காலதன் பொருளே.

இ-ள். கார்த்திகை நட்சத்திரத்து முதற்காலிற்பிறந்தவன், ஆசாரமுள்ளவன், வித்துவான், பிரபு, இலாபசேகரமுள்ளவன், (சூரன், சிநேகவிருப்பமுள்ளவன், புத்தியுள்ளவன், ரோகியுமாவான். (இரண்டாங்காலிற்பிறந்தவன்) ஆசாரமில்லாதவன், மனிதர் வெறுக்கத்தக்க கோபமுள்ளவனும், வெற்றியுள்ளவர்களைச் சிநேகஞ்செய்பவன், சாஸ்திரங்களை விரும்பாதவனுமாவன். (மூன்றாங்காலிற்பிறந்தவன்) துஷ்டப்பெண்களைச் சேருபவன், புத்தியில்லாதவன், மிகுந்தசூரன், பொல்லாதகோபி, கொர்வமுடையவன், தீமை செய்பவனுமாவான். (நான்காங்காலிற்பிறந்தவன்) கஷ்டமுள்ளதரித்திரன், பலசாஸ்திரங்களைக் கல்லாதவன், துக்கமுள்ளவன், ரோகியுமாவான்—எ-று. 128

உரோகணி.

பொருளழ குள்ள னலைச்சலான் காமி
 புறத்தியர்க் கியற்றுவன் துன்பம்
பொறையிலான் வர்ம்மி ரோஷவான் ரோகி
 பொருந்துரோ கிணிமுதற் காலான்
அருளுயர் சாந்த குணமுளான் ரோகி
 யாசாரன் சத்திய வாக்கி
யமர்ந்ததோர் பெண்ணை மணப்பன்வாய்ச் சால
 னன்புள னுமிரு காலான்
குருவருட் கணித வித்தைசங் கீதன்
 கூரிய மந்திரன் சுகவான்

குலவிய பஞ்ச காவிய மறியாக்
கொள்கையா னுகுமூன் ருங்கால்
இருளிலாத் தத்துவ னந்நிய ருடைமைக்
கிச்சைசெய் புத்தியா னினிய
வேந்திழை லோலன் ரோகணி நாற்கா
லினில்வரு வோன்பல முரைக்கில்.

இ-ள். உரோகணி நட்சத்திரத்தின் முதற்காலிற் பிறந்தவன், பொருளுள்ளவன், அழகுள்ளவன், சஞ்சாரமுள்ளவன், காமி, அந்நியர்களுக்குத் துன்பம் செய்பவன், பொறுமையில்லாதவன், வர்மமுடையவன், பெருமையுள்ளவன், ரோகியுமாவான். (இரண்டாங்காலிற் பிறந்தவன்.) கிருபையுடையவன், உயர்ந்தவன், சாந்தகுணமுள்ளவன், ரோகமுடையவன், ஆசாரமுள்ளவன், மெய்பேசுகிறவன், காதலித்து ஒருபெண்ணைக் கல்யாணஞ்செய்பவன், வாய்ச்சாலன், அன்புள்ளவனுமாவான், (மூன்ருங்காலிற் பிறந்தவன்) கிருபைபெற்றவன், கணிதவித்தை கற்றவன், சங்கீதவித்தையுடையவன், மந்திரங்கற்பவன், சுகவான், பஞ்சகாவியங்களைக் கல்லாதவனுமாவான். (நாலாங்காலிற் பிறந்தவன்.) ஞானதத்துவ முடையவனும், அந்நியர் பொருளை யிச்சிப்பவனும், பெண்போக விருப்பமுள்ளவனுமாவான்.

மிருக சீரிடம்.

உரைத்திடு தனவான் சத்துருசங் கார
னுறுதூல தேகனுங் கோபி
யுண்மையா சார வீனராட் சதனு
மோங்குமான் றலைமுதற் காலான்
தரைக்குநல் வழக்கே யுரைப்பனுத் தேசி
சாதும னேகரம் பெற்ருேன்
சத்திய வாக்கி யரிவையர் லோலன்
சாற்றிடு மிரண்டதாங் காலான்
உரைக்குநல் லுதார குணமுள னல்ல
னுத்தமன் சாதுசந் தோஷி
யுசிதவா சாரன் புத்திமான் சீமா
னுற்றமூன் ரும்பதத் துதித்தோன்
விரைத்துறி புத்தி சத்தியன் சாது
மேவிய தருமனற் காமி
வீரியன் கோபி வஞ்சக னென்றே
விளம்புநாற் பாதமா மினியே.

இ-ள். மிருகசீரிட நட்சத்திரத்தின் முதற்பாதத்திற் பிறந்தவன், தனவான், சத்துருவைச் செயிப்போன், தூலதேகத்தையுடையவன், கோபமுடையவன், உண்மையில்லாதவன், ஆசாரமில்லாதவன், ராட்சதகுணமுடையவனுமாவான், (இரண்டாங்காலிற்பிறந்தவன்) நல்வழக்குரைப்பவன், யோசனைசெய்பவன், சாது, மனோரம்மியமுடையவன், உண்மைபேசுபவன் காமுகனுமாவான், (மூன்றாங்காலிற் பிறந்தவன்.) உண்மைபேசுகிறவன், உதாரகுணமுள்ளவன், உத்தமன், சாது, சந்தோஷமுடையவன், சமயோசிதவாசாரன், புத்தியுள்ளவன், செல்வமுடையவனுமாவான், (நாலாங்காலிற்பிறந்தவன்) நட்பபுத்தியுடையவன், சத்தியவான், சாது, தானமிடுபவன், காமமுடையவன், தைரியமுடையவன், கோபமுடையவன், வஞ்சகமனமுடையவனுமாவான்—எ-று. 130

திருவாதிரை.

இனியநல் வசன குணமுளான் மகாத்துமா
யௌவன நாரியர்க் கினிய
னியலுறு நல்ல வாதிரை முதற்கா
லினில்வருங் குணத்தினு னென்ப
தனியுரை வாய்ச்சா லகனுநிட் டூரன்
றருக்கிய கருவிதிட் சையிலான்
தகுதியாய் மடவா ருடன்புணர்ந் திடுவன்
சாற்றிய பாதமோ ரிரண்டில்
குனியுநல் வாத ரோகமு முள்ளோன்
கோபிதன் கிருபையு மில்லான்
கோளனு மஞ்சு நாரியர் தனக்கே
குணமிலான் காலொரு மூன்றில்
துணியுநல் விவேகி வுறவினர் பகையான்
றூன்றிய வீனமா மனத்தன்
துர்ப்புத்தி யூத்தை யுடம்புளான் பொல்லாத்
துர்ச்சன னுகுநான் கென்றே.

இ-ள். திருவாதிரை நட்சத்திரத்தின் முதற்காலிற் பிறந்தவன், வாக்குச்சாதுரியனும், நற்குணமுள்ளவனும், மகாத்துமாவும், யௌவனப்பெண்களின்மோகனுமாவான், (இரண்டாங்காலிற் பிறந்தவன்.) பொய்யும்மெய்யுங் கலந்துபேசும் வாய்ச்சாலகன், நிட்டூர மனமுடையவன், தருக்கம்பேசுபவன், கருவியின் நுட்பமறியாதவன், ஸ்திரிசேர்க்கையிற் சாமர்த்தியமுடையவனுமாவான், (மூன்றாங்காலிற் பிறந்தவன்) வாதரோகமுடையவன், கோபமுடையவன், தாட்சண்யமில்லாதவன், கோட்சொல்பவன், பெண்களுக்குமின்பரசமில்லாதவன், (நாலாங்காலிற் பிறந்தவன்,) விவேக

முள்ளவன், பந்துக்கள், பகையுள்ளவன், அற்பபுத்தியுடையவன், துர்ப்புத்தியுடையவன், அழுக் குடம்புள்ளவன், துர்ச்சனனுமாவன்—எ-று.

புநர்பூசம்.

என்றுமெய் தூலப் பிலுக்கனற் போகி
    யிசைந்திடுஞ் செவிடனுங் காமி
ஏனமா மயிர னினிபுநர் பூச
    மாமுதற் காலினி லிசைந்தோன்
துன்றிய பித்த னுட்டின தேகி
    சோம்பலா சாரமு மில்லான்
துக்கமே நித்தம் பொருந்துவ னிருகா
    றேன்றிய நாட்பலன் மிகவே
அன்றிறுங் குட்ட ரோகியாஞ் சாதா
    மலைச்சலான் காவிய மறிவான்
மந்துறு தந்த ரோகவான் றீர்க்க
    வயதுளான் பாதமூன் றதனில்
நன்றினிற் பிரிய முள்ளவன் குள்ள
    னல்லவ் னழகுளா னென்றே
நாடிய பார்வை லக்ஷண மறிவ
    னற்பத மறிந்துரை தனக்கே.

இ-ள். புனர்பூச நட்சத்திரத்தின் முதற்காலிற்பிறந்தவன், தூலதேகமுள்ளவன், பிலுக்கன், போகந்துய்ப்பவன், செவிடன், காமி, பன்றிமயிரைப்போலும் ரோமமுடையவனுமாவன், (இரண்டாங்காலிற்பிறந்தவன்) பித்த உஷ்ணதேகி, சோம்பலில்லாதவன், ஆசாரமில்லாதவன், சதாதுக்கமுடையவனுமாவன்) மூன்றாங்காலிற்பிறந்தவன், குஷ்டரோகமுடையவன், அலைச்சலுடையவன், சாஸ்திரங் கல்லாதவன், தந்தரோகி, தீர்க்கவயதுள்ளவனுமாவான். (நாலாங்காலிற் பிறந்தவன்) நற்காரியங்களிற் பிரியமுள்ளவன், குட்டையன், நற்குணமுடையவன், அழகுள்ளவன், பார்வையிற் குறிப்பறிபவனுமாவான்—எ-று. 132

பூசம்.

தனக்கொடி மாதே சூலைநிட் டூரன்
    றருமவான் கோபிபுத் தியுளான்
தாழ்வறுந் தீர்க்க வாயுளான் றீயன்
    றருமினிப் பூசநாண் முதற்கால்
தினத்தினிற் பிரபு சர்வவிக் கினனுஞ்
    சனங்களைத் தாபரித் திடுவான்

செப்பிய நிதானி யந்நியர் சினேகி
சேர்ந்திடு மிரண்டதாம் பதத்தில்
இனத்தினற் கினியன் புத்திமான் ஞானி
யினியசந் தோஷியா நேச
னினத்தினு னல்ல காரிய முடிப்ப
னெழில்பெறு மூன்றதாங் காலான்
மனக்குறு சண்டை யுடையவன் கோபி
வாஞ்சையா னுரியர் தனக்கே
மகிழ்ந்திடு கமனன் பூசநன் னாற்கால்
வரும்பல னறிந்துணர் மின்னே.

இ-ள். தனபாரத்தைப் பொருமற் கொடிபோல்துவளுகின்ற இடையையுடைய பெண்ணே, பூசநட்சத்திரத்தின் முதற்காலிற்பிறந்தவன், சூலரோகி, கிட்ரேஞ்செய்பவன், தருமவான், கோபமுள்ளவள், புத்தியுள்ளவன் தீர்க்க வயதுள்ளவன், கொடியவனுமாவன் (இரண்டாங்காலிற் பிறந்தவன்) பிரபு, சர்வகாரிய விக்கினன், ஜனங்களை வருத்துகிறவன், நிதானமுள்ளவன், அந்நியர் சினேகமுள்ளவனுமாவன், (மூன்றுங்காலிற் பிறந்தவன்) பந்துஜனப்பிரியன், புத்தியுடையவன், ஞானி, சந்தோஷ முடையவன், ஆன்மநேசமுடையவன், கூட்டமுடையவன், நல்லகாரியங்கள் செய்பவனுமாவன் (நாலாங்காலிற் பிறந்தவன்) மனத்துக்கிடையூரான், சண்டைசெய்பவன், கோபமுடையவன், பிரியப்படுபவன், பெண்களிடத்தில் சந்தோஷகவனமுடையவனுமாவன்—எ-று. 133

ஆயிலியம்.

மின்னிய தனமும் பெண்வடி வுள்ளான்
மேன்புத்தி யுடையன்சந் தோஷி
மிகுநல நாநா தொழில்புரிந் திடுவன்
வேண்டுமா யிலியத்தின் முதற்கால்
அன்னிய ரேவற் றொழில்புரிந் திடுவ
னழகுள னேக்கமு முள்ளா
னுசாரன் றீய நடையன்றுர்ப் புத்தி
யுடையனுங் காலிரண் டதற்கே
நன்னியற் கோபி நாரியை வதைப்பன்
ஞானியா லசியனு னிபுணன்
நலமிலா வார்த்தை பற்றவே யுரைப்ப
னயமிகு பாதமூன் றதற்கே
பொன்கொலை நாசம் புரிபவன் சுபன்போல்
லாங்குசெய் பவர்களுக் கினியன்

புலேச்சியர் சங்கம் பண்ணுவ ேனையைப்
புணர்ந்திடு நான்கதாங் காலே.

இ-ள். ஆயிலிய நட்சத்திரம் முதற்காலிற் பிறந்தவன், திரண்டசெல்வ முடையவன், ஸ்திரி ரூபம் பொருந்தியவன், மேன்மையான புத்தியுடைய வன், சந்தோஷி, மிக்க நன்மையுடையவன், பலதொழில் செய்பவனுமா வான், (இரண்டாங்காலிற் பிறந்தவன்) அந்நியரின் ஏவற்றொழில் செய்ப வன், அழகுள்ளவன், ஏக்கமுள்ளவன், ஆசாரமுள்ளவன், கெட்டநடத்தை யுடையவன், துட்டப்புத்தி யுடையவனுமாவான். (மூன்றாங்காலிற்பிறந்த வன்) கோபி, பெண்வதை செய்பவன், ஞானியை அவமதிப்பவன், நிபு ணன், நன்மையில்லாதவார்த்தை பேசுபவனுமாவான், (நாலாங்காலிற்பிறந் தவன்) பொருளை அழிப்பவன், கொலைசெய்பவன், நாசஞ்செய்பவன், கெட்டவன், பொல்லாங்கு செய்கிறவர்களுக்குப் பிரியமுடையவன், நீச ஸ்திரி சேர்க்கையுள்ளவன், நோயோடு கூடியவனுமாம்—எ-று. 134

மகம்.

காலனைப் போலப் பயமுள சிவந்த
கண்ணன்பே ராசையான் யூகி
கருதிடு சிவந்த மெய்யினன் சேந்த
குஞ்சியான் மகமுதற் காலான்
போலியான் புத்தி யனல்வடு வுடையோன்
பொருட்செல வானசந் தோஷி
பொன்னிறக் கண்ணன் காதினே யுடையோன்
பொருந்திய காலிரண் டதற்கே
சாலவும் பலவான் மிக்கநோ யுள்ளான்
சாதுபொல் லாதவன் கடினன்
தாமிக வாசை யுடையவன் றாயன்
றகுதிகான் மூன்றினி லுதித்தோன்
சீலவ னரி பேச்சினைக் கேட்பன்
சிரங்குட நோயுமுற் றிடுவன்
சிந்தைநோ யுடையோன் மதுரவா சகனுந்
தெளிந்துரை நாற்பத மாமே.

இ-ள். மகநட்சத்திரத்தின் முதற்காலிற் பிறந்தவன் எமனைப்போல பயமுண்டுபண்ணுபவன், சிவந்தகண்ணையுடையவன், பேராசையுள்ளவன், யுக்தியுடையவன், சிவப்புள்ளதேகன், சிவந்த உரோமமுடையவன், (இரண் டாங்காலிற் பிறந்தவன்) அற்பன், புத்தியில்லாதவன், குற்றமுடையவன், பொருளைச் செலவிட்டு அதனால் சந்தோஷமடைபவன், மஞ்சளும் சிவப்

புங்கலந்த கண்ணையுடையவன், காதுநோயுள்ளவனுமாவன், (மூன்றாங் காலிற் பிறந்தவன்) மிகவும் பலமுடையவன், நோயுள்ளவன், சாது, பொல்லாதவன், கடினவார்த்தை பேசுபவன், அதிக ஆசையுடையவன், பரிசுத்தமானவனுமாவன், (நாலாங்காலிற் பிறந்தவன்,) குணமுடையவன், பெண்புத்தி கேட்கிறவன், சிரங்குநோயுடையவன், மனவியாகூலமுடையவன், இனிமையாய்ப் பேசுகிறவனுமாவன்—எ-று. 135

பூரம்.

ஆமெனுந் தீர னின்சொலன் கோபி
யாசாரன் சவுரியன் சிறுவீ
டாக்கமில் லாதான் வியாபாரஞ் செய்வா
னனபூ ரம்முதற் காலான்
தாமெனு முழவுத் தொழில்புரி குடிஞன்
றாகமுங் கிலேசமு முள்ளோன்
தானுறு சகாயம் பிரபல னில்லா
தவனென்ப விரண்டதாங் காற்கே
நாமனுங் குணவா னுகுமேன் பாட்டா
னல்லதோர் கீர்த்திமா னுகும்
நாடிய மூன்றும் பதமெனும் பொருளை
நாட்டினி லுரைப்பர்நல் லோரே
தோமுறுந் துக்கங் குருவடு வுள்ளான்
சொற்றிடு நிந்தையே புரிவன்
சோர்வறு மறையோர் தேவதூ ஷணத்தைச்
சொல்லுவன் னுன்கெனக் கருதே.

இ-ள். பூரநட்சத்திரத்தின் முதற்காலிற் பிறந்தவன், தீரன், இனிய வசனன், கோபி, ஆசாரமுடையவன், சவுரியமுடையவன், செல்வமில்லாதவன், சிறுவீடுடையவன், வியாபாரஞ் செய்பவனுமாவன், (இரண்டாங் காலிற் பிறந்தவன்) உழவுத்தொழில் செய்கின்றவன், தாகமுடையவன், கிலேசமுடையவன், அந்நியரால் உதவியடையாதவனுமாவன், (மூன்றாங் காலிற் பிறந்தவன்) ஏற்றுக்கொள்ளுங் குணமுடையவன், மேம்பாட்டையுடையவன், நல்ல கீர்த்தியுடையவனுமாவன், (நாலாங்காலிற் பிறந்தவன்) நீங்காத துக்கமுடையவன், வடுப்பொருந்தியவன், சொல்நிந்தனை செய்பவன், குற்றமற்ற பிராமணர், தெய்வம், இவர்களைத் தூஷிப்பவனுமாவன்.

உத்திரம்.

கண்டென மிருது வசனனுங் கீர்த்தி
கண்ணியன் தீரனிங் கிதனும்

கருதிய கிளைஞர் மேன்விருப் புடையான்
　　காணுமுத் திரமுதற் காலோன்
கொண்டிடுங் காமி தரித்திர னூணன்
　　கோதுறு சஞ்சல சித்தன்
கூறிய நித்த யாசக னுகுங்
　　குலவிய விருபதத் துதித்தோன்
அண்டிடும் பிலுக்கன் பழுதிலா யுரையா
　　ளுக்களை மேய்த்திடு மவனு
மானவா சார வானதா மூன்றி
　　லாகிய பிறப்பையு முடையன்
வண்டனு நன்றி மறந்திடான் பிறரை
　　மதித்திடான் றூஷண மறைவன்
வாலிபந் தன்னிற் றுய்மரித் திடுவள்
　　வழங்குவர் நான்கெனப் பெரியோர்.

இ-ள். உத்திர நட்சத்திரத்தின் முதற்காலிற் பிறந்தவன், எவரும் இன்பமாய்க்கேட்க, இனிய வசனமுரைப்பவன், கீர்த்தியுள்ளவன், பெருமையுள்ளவன், தீரமுடையவன், நல்லவன், சுற்றத்தார்மேல்விருப்பமுள்ளவனுமாவன், (இரண்டாங்காலிற் பிறந்தவன்) காமி, தரித்திரன், ஆகாரப் பிரியன், நெஞ்சில், எந்தநேரமுஞ் சஞ்சலமுடையவன், அன்றாடகம் யாசிக்கிறவனுமாவன், (மூன்றாங்காலிற் பிறந்தவன்.) பிலுக்கன், மெய்பேசுபவன் பசுமேய்க்கிறவன், ஆசாரமுள்ளவனுமாவன், (நாலாங்காலிற் பிறந்தவன்) நன்றிமறவாதவன், பிறரை மதியாதவன், துஷணை வார்த்தை பேசுபவன், வாலிபத்தில், தாயிழக்கப்படுபவனுமாவன்—எ-று. 137

அஸ்தம்.

பெரியதோர் கலகம் பண்ணுவித் திடுவன்
　　பேசிய பொய்யனுங் கர்வி
பிலுக்கனு சாரன் பசுக்கடம் மிடத்திற்
　　பிரியனு மத்தத்தின் முதற்கால்
அரியதோர் குணவான் செய்தொழி லறிவா
　　ளனதோர் வாலிபந் தன்னி
லன்னைபோம் பாட்டோ டாடலிற் பிரிய
　　னதியுரை யுடையனு மிரண்டில்
தரியலர் போலு மனத்தினுற் றந்தை
　　தானறுஞ் சிறுவய ததனில்
தந்திர வாதி ரோகிவியா பாரி
　　சாற்றிடு மூன்றதாங் காலான்

உரியநன் னடையா னீகையா னெடியோ
னேதுசங் தோஷவா னருகு
முசிதனு மன்னைக் கினியன்மெய்க் கீர்த்தி
யுடையனுற் காற்பல மறியே.

இ-ள். அஸ்த நட்சத்திரத்தின் முதற்காலிற் பிறந்தவன், பெரியகலகங்களைச் செய்கிறவன், பொய்யன், கெருவமுடையவன், பிலுக்குடையவன், ஆசாரமில்லாதவன், பசுக்களினிடத்திற்பிரியமுடையவனுமாவன், (இரண்டாங்காலிற் பிறந்தவன்,) அருமைவாய்ந்த நற்குணமுடையவன், தொழில்களை யறியுஞ் சாமர்த்தியன், வாலிபத்தில் தாயிழந்தவன், பாடுடையவன், விளையாட்டிற் பிரியமுடையவன், அதிகமாகப் பேசுபவனுமாவன், (மூன்றுங்காலிற் பிறந்தவன்) மாறுபட்ட சிந்தையுடையவன், சிறுவயதில் தகப்பனையிழந்தவன், தந்திரவான், ரோகி, வியாபாரஞ் செய்பவனுமாவன், (நாலாங்காலிற் பிறந்தவன்) நன்னடக்கையுள்ளவன், கொடையாளன்,உயர்ந்தவன், சந்தோஷவான், மேன்மையானவன், தாய்க்கிப்பிரியன், கீர்த்தியுள்ளவனுமாவன்—எ-று. 138

சித்திரை.

அறிந்திடாப் பொல்லாக் காரியம் பண்ண
வறிகுவ னேத்திர ரோகி
யாக்குவான் வியாக்கி யானசஞ் சாரி
யாகிடுஞ் சித்திரை முதற்கால்
பெறுந்தனி வசனன் றேகபோ ஷணையான்
பெருமிடி யானெடி யோனும்
பேணிய தபசி சஞ்சல னென்றே
பேசுவர் மாசிலா ரிரண்டால்
செறிந்திடுங் கீர்த்தி மான்பராக் கிரமன்
றிடமுறும் வித்துவான் ஞானி
செப்புநன் னடையோ னறிவுடை யாளன்
றிரிபத மதிலுதித் தோனும்
எறிந்திடும் பகைவர் தமைவணக் கிடுவ
னியல்புத்தி யான்சய முள்ளான்
னேதமற் றிடுநாற் காலினுக் கென்றே
யியம்புவர் மேன்மைபெற் றோரே.

இ-ள். சித்திரை நட்சத்திரத்தின் முதற்காலிற்பிறந்தவன், பொல்லாத காரியங்களைச் செய்பவன், கண்ணோயுடையவன், வியாக்கியானஞ் செய்பவன், சஞ்சாரியுமாவன், (இரண்டாங்காலிற் பிறந்தவன்) நல்லவார்த்தை பேசுகிறவன், தேகபோஷணை செய்து கொள்ளுபவன், தரித்திரன், உயர்ந்

தவன், தபசு செய்பவன், சஞ்சலமனத்தனுமாவன், (மூன்றாங்காலிற் பிறந்தவன்) கீர்த்தி பொருந்தியவன், தைரியசாலி, திட வித்தையுள்ளவன், ஞானி, நல்லநடத்தை, நல்லறிவுள்ளவனுமாவன், (நாலாங்காலிற்பிறந்தவன்) சத்துருக்களை வணங்கும்படி செய்பவன், சுபத்தியுடையவன், வெற்றியுள்ளவனுமாவன்—எ-று. 139

சோதி.

பெற்றிடு தீரன் சொற்பனன் ஞானி
பிரபுவை யடைந்தினி திருப்பன்
பெருமைசேர் வித்தைப் பிரசங்கி சாது
பேசிய சோதியின் முதற்கால்
உற்றநற் றிடவா னுகும்வாய்ச் சாலன்
புத்திமான் காரிய வாதி
யுண்மைய னந்த ரங்கவான் காமி
யோதுகா லிரண்டதாம் பலனே
வெற்றிவிற் றெழிலன் குரூரனுங் குடிலன்
மேவுநன் னடையிலான் கலக
மியற்றுவான் சோதி விளம்புமூன் றுகு
மெனும்பதத் துதித்திடு வோனே
சொற்றிறன் கோபி கலகமேற பிரியன்
றுர்ச்சனன் சீலவான் காமி
சோரனும் நான்காம் பதத்தினி லுதித்தோன்
றேற்றிய வடிவமைத் தோளாய்.

இ-ள். சோதிநட்சத்திரத்தின் முதற்காலிற் பிறந்தவன், தீரன், சொற்பனங்காண்கிறவன், ஞானி, பிரபுக்கள் நேசமுடையவன், வித்தையுள்ளவன், பிரசங்கஞ்செய்பவன், சாந்தகுணமுடையவனுமாவன், (இரண்டாங்காலிற்பிறந்தவன்) திடமுள்ளவன், வாய்ஜாலன், புத்திசாலி, காரியங்களை முடிப்பவன், உண்மைபேசுபவன், அடக்கமுள்ளவன், காமமுடையவனுமாவன், (மூன்றாங்காலிற்பிறந்தவன்,) வில்வித்தை கற்றவன், குரூரன், நன்னடக்கையில்லாதவனுமாவன் (நாலாங்காலிற் பிறந்தவன்) திடமானசொல்லுடையவன், கோபி, கலகப்பிரியன். துர்ச்சனன், காமமுள்ளவன், திருடனுமாவன்—எ-று. 140

விசாகம்.

அமைத்திடு வஞ்சன் கல்விமா னுகு
மறிவன்சோ திடஞ்சௌக் கியவா
னறிவுறும் புலவன் வாணிபம் புரிவா
னுகுமே விசாகத்தின் முதற்கால்

தழைப்புகழ்ந் திடுவன் மந்திரன் காமி
சத்தியன் நீதிமான் ரோகி
சரசவா னுஞ்சந் தோஷியிங் கிதவான்
சாற்றிரு காற்பல னென்பாய்
இமைத்திடு பலவான் சோரனுங் குள்ள
னினியகா ரியமறிந் திடுவன்
எழில்பெறும் பரஸ்திரி கமனன்வாய்ச் சால
னேதறு மூன்றதாங் காலான்
அமைப்பரும் புத்தி யுடையனும் யோகி
யருந்தன முடையவன் ஞானி
யழகுறுந் தார மொன்றுள னெடியோ
னுகும்வாய்ச் சாலனுற் பதமே.

இ-ள். விசாகநட்சத்திரத்தின் முதற்காலிற் பிறந்தவன், வஞ்சகன், கல்வியுள்ளவன், சோதிடமறிபவன், சௌக்கியமுள்ளவன், அறிவுள்ளவித்துவான், வியாபாரஞ்செய்பவனுமாவன், (இரண்டாங்காலிற் பிறந்தவன்) தற்புகழ்ச்சியுள்ளவன், மந்திரங்கற்றவன், காமமுள்ளவன்; சத்தியமுள்ளவன், சரசமுள்ளவன்நீதியுள்ளவன்; ரோகமுள்ளவன்சந்தோஷமுள்ளவன், இனிமையானவனுமாவன். (மூன்றாங்காலிற்பிறந்தவன்) பலமுள்ளவன், திருடன், குட்டையன்; காரியங்களையறிபவன், அழகுள்ளபரஸ்திரிகமனஞ்செய்பவன், வாய்ச்சாலம் பேசுகிறவனுமாவன், (நாலாங்காலிற் பிறந்தவன்) நற்புத்தியுடையவன், யோகசாதனமுடையவன், செல்வவான், ஞானி, அழகுள்ள, ஒருமனையாட்டியுள்ளவன்; நீண்டவடிவுள்ளவன்; வாய்ச்சாலகனுமாவன்—எ-று. 141

அநுஷம்.

பதமுள னீதி யிங்கித மறிவான்
பண்புறு சத்திய வானும்
பகருமா சாரன் மந்திர சீலன்
பற்றிய வனுஷத்தின் முதற்கால்
இதமுள புள்ளாங் குழலினிற் பிரிய
னிசைந்தவாய்ச் சாலனும் புத்தி
யெய்திய சிறப்பன் மானிகா மியனு
மிருபதப் பொருளென வுரைப்பர்
விதமுள புத்தி மான்சவுந் தரியன்
மென்குர லோசையா னெழுதும்
வித்தைசா துரிய னெடுப்புளா னென்றே
விளம்புமூன் றாம்பத மதற்கே

அதஞ்செயும் விஷவாக் கன்பரத் துரோகி
யன்னிய தமையர்க ளுள்ளா
னன்புறு மோசை நாணமு முடைய
னவிர்சிரங் குடையனுந் தெரியே.

இ-ள். அநுஷ நட்சத்திரத்தின் முதற்காலிற் பிறந்தவன், நற்பதமடைபவன், நற்குணமறிபவன், பொய்யில்லாதவன், ஆசாரமுள்ளவன், மந்திரவாதியுமாவன், (இரண்டாங்காலிற் பிறந்தவன்) இன்னிசைக்குமேலாகிய புள்ளாங்குழலூதப் பிரியமுடையவன், வாய்ச்சாலமுள்ளவன், சிறப்பைப் பொருந்தியவன், பெருமையுடையவன், காமியுமாவன் (மூன்றாங்காலிற் பிறந்தவன்) புத்திசாலி, அழகுடையவன், மெல்லிய சபதமுடையவன், சாதுரியவித்தை கற்றவனுமாவன், (நாலாங்காலிற் பிறந்தவன்) குற்றஞ் செறிகின்ற விஷவாக்குடையவன், பிறரைவஞ்சிப்போன், நெருங்கியதமையர்களுடையவன், அன்புள்ளகீதமுடையவன், வெட்கமுள்ளவன், சிரங்குரோகமுடையவனுமாவன்—எ-று. 142

கேட்டை.

தெரிந்துதா னெழுத வல்லவன் கர்வி
செயும்பரி காசியாங் காந்தி
செறிவிளை யாட்டு நடக்கைசந் தோஷி
சீர்மிகுங் கேட்டையின் முதற்கால்
பொருந்துசங் கீதப்பிரியன்வாய்ச் சாலி
புகழுநல் லீகையான் சுகவான்
போகிகன் மனத்தன் ரோகியா மென்றே
புகலுவ ரிரண்டதாங் காலே
திருந்துகண் ரோகி பசுவுளன் கலகன்
செப்பிய வீனபுத் தியினுன்
செய்குவன் பிறர்கா ரியந்தன தென்றே
சீர்பெறுஞ் சாதுமூன் றாங்கால்
வருந்திடுங் கலகப் பிரியன்முன் கோபி
வஞ்சகன் குரூரமே புரிவன்
வந்திடுங் குலத்தின் மேன்மைகூ றிடுவன்
வன்னிய வீரிரு தாளே.

இ-ள். கேட்டை நட்சத்திரத்தின் முதற்காலிற் பிறந்தவன், தெரிந்தெழுதவல்லவன், கெர்வமுடையவன், பரிகாசஞ்செய்பவன், விளையாட்டுக்குணமுடையவன், சந்தோஷமுள்ளவனுமாவன், (இரண்டாங்காலிற் பிறந்தவன்) சங்கீதத்தில் இங்கிதமுள்ளவன், வாய்ச்சாதுரியன், புகழ்பெற்றகொடையாளன், சுகமுள்ளவன், கோபமுள்ளவன், கன்மனத்தன், ரோக

முள்ளவனுமாவன், (மூன்ருங்காலிற் பிறந்தவன்) கண்ரோகமுள்ளவன், பசுக்களுள்ளவன், கலகப்பிரியன், அற்பபுத்தியுள்ளவன், பிறர் காரியங்களைத் தன்காரியமென்றே செய்யுங்கீர்த்தியுள்ளவன், சாதுவுமாவன், (நாலாங்காலிற் பிறந்தவன்) கலகப்பிரியன், முற்கோபி வஞ்சகமுடையவன் குரூரகாரியஞ்செய்பவன்! தன்னுடைய குலத்தின்பெருமை பேசுபவனுமாவன்—எ-று. 143

மூலம்.

தானுறுமுணவிற் கிழங்கின்மேற் பிரியன்
சாற்றிய பாபமே புரிவன்
தாழ்விலா ரோகி யுன்மத்த னென்றே
சாற்றுவர் மூலத்தின் முதற்கால்
வானுயர் புலவன் வயிற்றினோ யுடையோன்
சத்திய வான்புத்தி யுளனும்
வளமுடை மானி பக்ஷமுள் ளவனு
மருவுகா லிரண்டினில் வந்தோன்
ஈனமாம் பில்லி சூனிய மறிவா
னெழிலுளன் சோம்பலான் காமி
இனியநற் கனிமேற் பிரியனு மூன்றி
லெண்ணிய பலமிஃ தென்ப
கோனெனும் பலவா னிபுணனுஞ் சாது
கோபமே நீக்குவன் ஞானி
கூறுசத் துருவை யடக்குவன் கழுத்திற்
கொண்டநோ யுளன தனீறே.

இ-ள். மூலநட்சத்திரத்தின் முதற்பாதத்திற் பிறந்தவன், கிழங்குவகை புசித்தலிற் பிரியமுள்ளவன், பாபஞ்செய்கிறவன், ரோகமுவடயவன், மந்தச்செய்கையனுமானவன், (இரண்டாங்காலிற் பிறந்தவன்) மேலான வித்துவான், வயிற்றுவலியுள்ளவன், சத்தியமுள்ளவன், புத்தியுள்ளவன், மானமுடையவன், பட்சமுடையவனுமாவன், (மூன்ருங்காலிற் பிறந்தவன்) குற்றமுள்ள பில்லி சூனியங்களைக் கற்றறிபவன், அழகுள்ளவன், சோம்பலுள்ளவன், காமி, பண்டுபலாதிகளையுண்டு களிக்கப் பிரியமுள்ளவனுமாவன், (நாலாங்காலிற் பிறந்தவன்) ராஜபலமுடையவன், நிபுணத்துவமுடையவன், சாது, கோபத்தை நீக்குபவன், ஞானி, சத்துருக்களை அடக்குபவன் கழுத்திலே ரோகமுடையவனுமாவன்—எ-று. 144

பூராடம்.

ஈறிலா வணக்க முடையவன் சேபோ
விலாதவன் விகாதமே புரிவன்

இயம்பிடு சூரன் மத்திம வயதா
மென்பர்பூ ராடத்தின் முதற்கே
பேறுறும் யோகி சவுந்தரி யோனும்
பெட்புறுஞ் சிநேகித மில்லான்
பேதையாம் வேசை கமனனென் றுரைப்பர்
பெரியவ ரிரண்டதாங் காற்கே
மாறிலாச் சுகவான் பாக்யவான் மாதா
வாலிபந் தன்னிலே மரிப்பள்
வளர்பெரு ரோகியன் குணமுளன் றெளிவன்
மன்னிய மூன்றதாங் காலே
வீறிலான் முதுகி ரோயுளன் றிருடன்
விளம்பப வாதவான் பலவான்
மேவிய துரோகி சிறுவய திற்சாம்
விளம்பிய தந்தைநாற் காற்கே.

இ-ள். பூராட நட்சத்திரத்தின் முதற்பாதத்திற்பிறந்தவன், மிகவும் வணக்கமுடையவன், புத்திரப்பேரில்லாதவன், வழக்குச்செய்கிறவனும், வல்லமையுடையவனும், மத்திமவயதுவரை ஜீவித்திருப்பவனுமாவான், (இரண்டாங்காலிற்பிறந்தவன்) நிலைபெறும்யோகி, அழகுடையவன், சிநேகிதவாஞ்சையில்லாதவன், அறிவில்லாதவன், தாசிபரனுமாவன், (மூன்றாங் காலிற் பிறந்தவன்,) மாறாதசுகமுடையவன், செல்வமுடையவன், வாலிபத்தில் தாயையிழந்தவன், பெருரோகமுள்ளவன், குணமுள்ளவன், தெளிவுடையவனுமாவான், (நாலாங்காலிற் பிறந்தவன்) வல்லபமில்லாதவன், முதுகுநோயுள்ளவன், திருடன், அபவாதஞ்சொல்லுபவன், பலமுள்ளவன், துரோகஞ்செய்பவன், சிறுவயதில் தந்தையை இழக்கப்பட்டவனுமாவன்—எ-று. 145

உத்திராடம்.

ஏர்பெறு நல்ல புத்திமா னீகை
யான்றகு நூல்பல வறிவ
னேதிலா தாசான் றனையுப சரிப்ப
னெனப்புக லுத்திரா டத்தின்
ஓரதாங் காலி லுயர்பெரு வாக்கி
யுலோபியாம் பிலுக்கனற் றிடவா
னுசிதமாய்க் கருமம் ராசியத் தியற்று
முடனிரண் டாகிய காற்கே
கூரிய கர்வி பெருமொழி யாளன்
குரூரனுங் கலங்கின மனதான்

கோபியாந் தூல வடிவுள னென்றே
கூறுமூன் றென்றதோர் காற்கே
வீரிய னல்ல தன்மமே முடிப்பன்
விசேஷகா ரியமுளான் லோக
வியாபார முடையன் பந்துபட் சமுளன்
வேண்டிய நாற்பதம் வந்தோன்.

இ-ள். உத்திராட நட்சத்திரத்தின் முதற்காலிற் பிறந்தவன், நற்புத்தி யுடையவன், தயாளகுணமுடையவன், தகுந்த சாஸ்திரங்களைக் கற்றவன், ஆசானை உபசரிக்கிறவனுமாவன், (இரண்டாங்காலிற் பிறந்தவன்) நல்ல வாக்குச் சாதுரியன், உலோபகுணமுடையவன், பிலுக்கன், திடவான், முறைப்படி காரியங்களை ரகசியமாய்ச் செய்துமுடிப்பவனுமாவன், (மூன்றாங்காலிற் பிறந்தவன்) கெருவிதமான சொல்லுடையவன், குரூரன், கலக்கமான மனமுடையவன், கோபி, தூலதேகஸ்தனுமாவன், (நாலாங்காலிற் பிறந்தவன்) வீரியமுடையவன், நல்ல தருமங்கள் செய்பவன், விசேஷகாரியங்களுள்ளவன், வியாபாரஞ்செய்பவன், பந்துக்கள்மேற் பட்சமுள்ளவனுமாவன்—எ-று. 146

திருவோணம்.

வந்திடும் புத்தி மான்றூல தேகி
மைந்தரி லான்போக வானும்
மன்னுமுற் சாகி கலகவான் கர்வி
யாந்திரு வோணத்தின் முதற்கால்
சந்ததம் பிர்ம்ம ஞானியாங் காமி
தயவிலான் லோபியாஞ் சினேகந்
தானிலா னென்றே சாற்றுவ ரிரண்ட
தாகிய காலதாம் பலனே
தந்திடுங் காமி ரோகிநற் போகி
தனமுளன் மெத்தவே யுதாரன்
தயவிலா னென்றே யுரைத்திடு வார்க
டரும்பத மூன்றினும் பயனே
சிந்துர நுதல்வே சையர்விருப் புடையன்
சீலனுந் தருமவான் றியாகி
சிறப்புளன் றனவான் பயிரிடு வானுஞ்
செப்புநாற் காற்பல வகையே.

இ-ள். திருவோண நட்சத்திரத்தின் முதற்காலிற் பிறந்தவன், புத்திசாலி, தூலதேகி, பிள்ளைகளில்லாதவன், போகவான், உற்சாகமுள்ளவன் கலகஞ்செய்பவன், கெர்வமுடையவனுமாவன், (இரண்டாங்காலிற் பிறந்தவன்)

பிரமஞானி, காமியும், தாட்சண்யமில்லாதவன், உலோபி, சிநேகமில்லாதவனுமாவன், (மூன்ருங்காலிற் பிறந்தவன்) காமி, ரோகி, போகி, செல்வமுடையவன், மிகுந்த உதாரகுணமுடையவன் தயவில்லாதவனுமாவன், (நாலாங்காலிற் பிறந்தவன்,) வேசிமேல் விருப்பமுள்ளவன், குணவான், தருமகுணவான், தியாகஞ்செய்பவன், சீர்த்தியுள்ளவன், செல்வமுடையவன், பயிர்த்தொழில் செய்பவனுமாவன்—எ-று. 147

அவிட்டம்.

வகையிலான் காமி பசிபொருன் மனதில்
வசையுறு கிலேசனிட் டூரன்
வளம்பெறு தூல சரீரவான் கரியன்
மருவிய வவிட்டத்தின் முதற்கால்
தகையிலான் மனதிற் பேதக முடையான்
சத்தியன் புத்திமான் மிடியன்
சாத்திர வாதி யூக்கமுள் ளோனுந்
தருமவா னிருபத மென்ப
திகைசெறி குணவான் குறுகிய மெய்யன்
சேர்ந்திடு திடமுளன் மானி
செப்புநன் னடையான் செந்நிற வானுந்
தெரிந்திடு மூன்றதாங் காலில்
தொகைமிகு தனவான் குரூரனுந் தூல
தேகவான் கர்விபே தகனுந்
துலங்கிய வுரோம வழகுடை யோனுஞ்
சோர்வறு நாற்பதந் தொட்டோன்.

இ-ள். அவிட்ட நட்சத்திரத்தின் முதற்காலிற்பிறந்தவன், விவரமில்லாதவன், காமி, பசிபொறுக்காதவன், மனக்கிலேசமுள்ளவன், நிட்டூரகுணமுடையவன், தூலதேகமுடையவன், கருப்புநிறமுள்ளவனுமாவன், (இரண்டாங்காலிற் பிறந்தவன்,) துஷ்டன், கெட்டமனமுடையவன், சத்தியன், புத்தியுள்ளவன், தரித்திரன். சாஸ்திரவாதி, தைரியமுள்ளவன், தருமவானுமாவன், (மூன்ருங்காலிற் பிறந்தவன்) திகைப்புப்பொருந்திய குணவான், குட்டையான சரீரன், திடமுள்ளவன், பெருமையுடையவன், நன்னடக்கையுள்ளவன், சிவப்புநிறமுடையவனுமாவன், (நாலாங்காலிற் பிறந்தவன்,) அதிகச் செல்வமுடையவன், கொடுமையுள்ளவன், தூலதேகி, கர்வமுள்ளவன், வஞ்சகன், அழகுள்ள உரோமமுடையவனுமாவன்—எ-று. 148

சதயம்.

தொட்டநற் குணவா னழகுளா னுதாரன்
சுசியனும் விப்பிரர் மேலும்

துலங்கிய பசுக்கண் மேலுநற் பிரிய
னிதியுளான் சதயமொன் ருங்கால்
பொட்டெனக் கோப முடையவன் கிலேசி
பொருந்துநற் பேதகம் புரிவான்
புனிதம தில்லா னிழிகுலந் தன்னிற்
பொருந்துவ னிரண்டதாங் காலே
பட்டுநற் கருமம் பொறுத்துடன் முடிப்பன்
பசியுளன் வயிற்றினோ யுள்ளான்
பண்புடன் பித்தன் சேவகா விருத்தி
பண்ணுவன் மூன்றதாம் பதமே
நட்டணை யுணர்வா னுத்தேசி மானி
நாடிய காரிய முடிப்பன்
நல்லவன் சுகவா னாற்பத மென்றே
நவின்றனர் நான்மறை யோரே.

இ-ள், சதயநட்சத்திரத்தின் முதற்காலிற் பிறந்தவன், நற்குணமுள்ளவன், அழகுள்ளவன், உதாரகுணமுள்ளவன், சுத்தவான், பிராமணர், பசுக்களின்பேரிற் பிரியமுள்ளவன். செல்வமுள்ளவனுமாவன், (இரண்டாங் காலிற்பிறந்தவன்) முற்கோபமுடையவன், கிலேசமுடையவன், வஞ்சகஞ் செய்பவன், நற்புத்தியில்லாதவன், இழிகுலப்பெண் சேர்க்கையுள்ளவனுமாவன், (மூன்ருங்காலிற் பிறந்தவன்) கஷ்டப்பட்டு நற்காரியங்களை முடிப்பவன், பசியுள்ளவன், வயிற்றில் நோயுடையவன், பித்தகுணமுடையவன், சேவகாவிர்த்தித்தொழில் செய்பவனுமாவன், (நாலாங்காலிற் பிறந்தவன்) நட்டணைவார்த்தைகளையறிபவன், யோசனையுடையவன், பெருமையுடையவன், நினைத்தகாரியங்களை முடிக்கின்றவன், நல்லவன், சுகவானுமாவன்.

பூரட்டாதி.

மறையவன் பரந்த முகமுளன் பலவான்
மனைவிமேற் பிரியன்போர் புரிவான்
மனவுணர் வுடைய னுத்தேசி சுகவான்
மன்னுபூ ரட்டாதி முதற்கால்
இறையவன் சிரேஷ்ட மந்திர மறிவ
னிளைத்திடான் மனதுமே யொல்கி
யெவர்க்குமே வணங்கிக் காரிய முடிப்போ
னிருபதஞ் சந்தோஷ வானும்
பொறையுளா னல்ல நடையுடைப் புலவன்
பிறர்மனைப் போசனப் பிரியன்

போதஞ்செய் பித்த ரோகிய னாகும்
புத்திமான் பேசிடு மூன்றில்
தறைபுகழ் குணவான் சத்திய னழகன்
றாழ்வறு சினேகிதப் பிரியன்
சற்றொழிற் புரியுஞ் சுகமுளன் சீமான்
சாற்றுநாற் பதமுறு நாளே.

இ-ள். பூரட்டாதி நட்சத்திரத்தின் முதற்காலிற் பிறந்தவன், பிராமணன், பரந்தமுகமுடையவன், பலம்பொருந்தியவன், பெண்மேற்பிரியமுடையவன், யுத்தம்புரிபவன், நல்ல உணர்ச்சியுடையவன், யோசனையுடையவன், சுகவானுமாவன், (இரண்டாங்காலிற் பிறந்தவன்) முக்ய மந்திரங்களை அக்கரையாயறிபவன், மனமிளைக்காதவன், எவரிடத்தும் வணங்கித் தவறாமற் காரியங்களை முடிப்பவனுமாவன், (மூன்றாங்காலிற் பிறந்தவன்) சந்தோஷகரமுடையவன், பெருமையுள்ளவன், நன்னடக்கையுடையவன், வித்துவான், அந்நியர் அளிக்கும் போசனங்களிற் பிரியமுடையவன், பித்த ரோகமுடையவன், புத்தியுள்ளவனுமாவன், (நாலாங்காலிற் பிறந்தவன்) உலகிற் புகழத்தக்க குணவான், சத்தியவான், அழகுள்ளவன், சிநேகமுள்ளவன், நற்றொழிலுடையவன், செல்வமுடையவனுமாவன்—எ-று. 150

உத்திரட்டாதி.

நாடொறுங் கோபி சஞ்சலன் றாதா
நாடிய வுடம்பினின் மயிரன்
நவம்பெறு சிரேட்டன் பிரதான மென்றே
நவில்வருத் திரட்டாதி முதற்கால்
நீடுறும் ரோசக் காரனுஞ் சாது
நிறைந்திடு மிடியனற் குணவான்
நிலைத்தனன் னடையா னறிவுளா னென்றே
நிகழ்த்துவ ரிரண்டதாங் காற்கே
கோடுறு புத்தி யிலான்பத்தி மான்முன்
கோபிசந் தோஷிசெம் மயிரான்
கோளறு மூன்றாங் காற்பல மென்றே
கூறுவர் மறையுணர் புலவர்
பீடறுஞ் சொற்கேட் டான்மிக வாடும்
பேதியா னுதாரனற் பயிரைப்
பேணுவான் கோபி கிலேசவா னாகும்
பெட்புநாற் காற்பலன் றேனே.

இ-ள். உத்திரட்டாதி நட்சத்திரத்தின் முதற்காலிற் பிறந்தவன், கோபி, சஞ்சலமுடையவன், மீசையுள்ளவன், உடம்பில் உரோமமுடைய

வனுமாவன், (இரண்டாங்காலிற் பிறந்தவன்) ரோஷமுள்ளவன், சாது,தரித்திரன், நற்குணவான், நன்னடக்கையுள்ளவன், அறிவுள்ளவனுமாவன், (மூன்றாங்காலிற் பிறந்தவன்) நற்புத்தியுடையவன்,முற்கோபமுடையவன், தெய்வபக்தியுடையவன், சந்தோஷமுடையவன், சிவந்த மயிருடையவன், கோட்சொல்பவனுமாவன், (நாலாங்காலிற் பிறந்தவன்) புகழில்லாத சொல்லில், அகம்மிகவாடுவன், மனப்பேதமில்லாதவன், உதாரகுணமுள்ளவன், பயிர்களைக்காப்பாற்றுகிறவன், கோபி, கிலேச முடையவனுமாவன்—எ-று.

இரேவதி.

தேன்மொழி கலகப் பிரியனு நிபுணன்
செறிகுண வித்துவான் யாண்டுஞ்
செப்பிய கிலேசி சந்தோஷ முள்ளான்
றிடம்பெறு ரேவதி முதற்கால்
தானெனுஞ் சோரன் றீரமா மனத்தன்
சவுக்கியன் கோபிநற் காமி
சஞ்சலன் மிருது வாஞ்சரீ ரத்தன்
றுனிரு காற்பல னென்றே
பான்மொழி புத்தி யிலாதவன் பாவி
படிறனே தனமிலா னுகும்
பரிந்திடு முதாரன் குணமிலா னென்றே
பகருமூன் றும்பத மதற்கே
நானெனுந் தீரன் சத்திய வாக்கி
நவின்றிடுங் குலத்தினிற் கேடன்
நாடிய சுகவான் சத்ருசங் காரி
நலம்பெறுஞ் சூரனுற் பதமே.

இ-ள். இரேவதிநட்சத்திரத்தின் முதற்காலிற்பிறந்தவன்,ஸ்திரிகலகங்களிற் பிரியமுள்ளவன், நிபுணன், வித்துவான், சதா கிலேசமுடையவன், சந்தோஷமுடையவனுமாவன், (இரண்டாங்காலிற் பிறந்தவன்) திருடன், தீரம் பொருந்தியமனதுடையவன், சௌக்கியமுடையவன், கோபி, காமி, சஞ்சலமனதுடையவன், மெல்லிய சரீர முடையவனுமாவன், (மூன்றாங்காலிற் பிறந்தவன்) புத்தியில்லாதவன், பாவி, பொய்யுள்ளவன், பொருளில்லாதவன், உதாரன், குணமில்லாதவனுமாவன், (நாலாங்காலிற்பிறந்தவன்) சத்தியவசனன், குலக்கேடுடையவன் (அந்நியமதஞ்சேர்பவன்) சுகமுடையவன், சத்துருவை சங்கரிப்பவன், நன்மையுள்ள வல்லபனுமாவன்—எ-று.

நட்சத்திர பாத பலன்

சம்பூர்ணம்.

இராசிகளிற் சந்திரன் நின்ற பலன்.

சந்திரன் மேடத்தில் நின்ற பலன்.

வேறு.

பன்னிருரா சிகடோறுஞ் சந்திரன்றா னின்ற
பலன்பகர்வர் மேடத்தின் மதிநிற்கப் பிறந்தோன்
மின்னுவிழி யுருண்டுசெற்றே சிவந்திருக்குங் காமி
மிகுதூரம் நடந்திடுவன் சீக்கிரஞ்சந் தோஷி
பொன்னைமிகத் தேடியுட னேசெலவு புரிவான்
புயபலன்வீ ரியன்மடவார் கலவிக்கு வலியன்
சென்னிதனின் மறுவடுவோன் றுளன்சபல னாகுஞ்
செலங்கண்டஞ் சுவன்முழந்தாட்செறிபிணியுள்ளவனும்

இ-ள். மேடமுதலிய பன்னிரண்டு ராசிகளிலும், சந்திரன்நின்ற பலனைச் சொல்லுமிடத்து, மேடத்தில்நிற்கில், உருண்டசிவந்த விழியுள்ளவன் காமி, வெகுதூரம் நடப்பவன், சந்தோஷமுடையவன், செல்வத்தைச்சம்பாதித்து உடனே செலவுசெய்பவன், புயபலம்பொருந்தியவன், வெற்றியுடையவன், பெண்கள் கலவித்தொழிலில் வல்லவன், சிரசில் மறுவடுவுள்ளவன், சகலசித்தமுடையவன், தண்ணீரிற் பயமுடையவன், முழங்கால் ரோகமுள்ளவனுமாவன்—எ-று. 153

சந்திரன் ரிஷபத்தில் நின்ற பலன்.

உள்ளமகிழ்ந் தருளுமதி யிடபத்தி லிருக்க
வுற்பவித்தோன் குணங்கிருபை யுடையனல்ல ரூபன்
தெள்ளியநா சியின்முகத்திற் பக்கத்தின் மறுவான்
தியாகவான் றொடைவதனம் பருத்திரும லுளனும்
பிள்ளைகண்முந் தியுமுள்ளான் பெண்பெறுவன் பொறுமை
பெரும்பசிய னிருசொல்லன் பின்புசந்தோ ஷிப்பன்
கள்ளவிழி யார்க்கினிய னண்பருக்கு நண்பன்
கண்டிடுமத் திமவயதோன் சவுக்கியபாக் கியவான்.

இ-ள். சந்திரன் ரிஷபராசியில் நிற்கப்பிறந்தவன், சற்குணன், தயவுள்ளவன், அழகுடையவன், முகத்தில், மூக்கில், பக்கத்தில், மறுவுள்ளவன், பருத்த தொடையும், முகமுமுள்ளவன், இருமலுடையவன், ஆண், பெண், ஆகிய பிள்ளைகளைப் பெறுகின்றவன், பொறுமையுள்ளவன், பெரும்பசியுடையவன், இரண்டு அர்த்தங்கொண்ட பொருளாக ஒரு சொற்சொல்கிற

வன், பின்சந்தோஷ முடையவன், பெண்களுக்குப் பிரியமுள்ளவன், நேசருக்கு நேசன், மத்திபவயதுடையவன், பாக்கியவானுமாவன்—எ-று. 154

சந்திரன் மிதுனத்தில் நின்ற பலன்.

வான்மிதுன சசிபாலன்மின் னூர்மகிழுஞ் சுரதன்
மகிழ்தூதன் சிவந்தகண்ணன் மயிர்சுருண்டே யிருப்பன்
தான்மிகச்சூ துகள்பெறுவ னழகன்சத் தியவான்
சாப்பாட்டி னிற்பிரியன் றகும்புத்தி மானும்
பான்மைசெறி பட்டுடுக்கப் பிரியவான் முகத்தில்
பரிக்குமறு வுளன்பிரிய வாக்குமிகு ரசவான்
தேனனைய மொழிமடவார் கொண்டாடிப் புகழ்வர்
திடமாயுன் னதமாகச் செறிந்திருக்கு நாசி.

இ-ள். சந்திரன் மிதுனவிராசியிலிருக்கப் பிறந்தவன், பெண்சந்தோஷிக்கும் லீலாவிநோதன், தூதுசெல்கிறவன், சிவந்த கண்களுடையவன், சுருண்ட ரோமமுடையவன், சூதுள்ளவன், அழகுள்ளவன், சத்தியவான், போஜனப் பிரியன், தகுந்தபுத்தியுள்ளவன், பட்டுவஸ்திரந் தரிக்கப்பிரியமுடையவன், முகத்தில் மறுவுடையவன், எவரும்புகழ இனிமையான வார்த்தை பேசுகிறவன், பெண்கள் புகழ்ச்சியில் ஆசையுள்ளவன், பருத்துயர்ந்த மூக்குள்ளவனுமாவன். 155

சந்திரன் கடகத்தில் நின்ற பலன்.

நாசமிலாக் கடகத்தின் மதியுலவச் சனித்தோன்
நண்ணுபலன் மடவாரை நகைபுரிந்து சயிப்பன்
வீசிவளைந் தோடுவனன் புடையநண்ப ருடையோன்
வீடதிக மாய்க்கட்டி மேவுவன்மெய் குறளன்
நேசமுறு மனக்கள்ள னுத்தேச முள்ளான்
நிலையில்லாத் தனம்படைத்து நீணிலத்தி லிருப்பன்
பாசமுள னனைவருக்கும் பருத்தகழுத் துளனும்
பரவுசம வுபாயனென வேபகர வேண்டும்.

இ-ள். கெடுதலில்லாத கடகராசியில், உடுப்தியாகிய சந்திரனிருக்கப் பிறந்தவன், பலசாலியும், பெண்களை நடையினால் ஜெயிப்பவனும், வளைந்து ஓடி நடப்பவனும், பிரியமுள்ள சிநேகிதர்களையுடையவனும், அதிக வீடுகட்டிவாழ்பவனும், குட்டையான தேகமுள்ளவனும், மனக்கள்ளமுடையவனும் யோசனையுள்ளவனும், அதிகச் செல்வத்துடன் வாழ்பவனும், யாவருக்கும் அதிகப் பிரியமுடையவனும், பருத்த கழுத்துள்ளவனும், சமையோசித தந்திரமுள்ளவனுமாவன்—எ-று. 156

சந்திரன் சிங்கத்தில் நின்ற பலன்.

வேண்டிடுஞ்சிங் கத்தினிற்சந் திரனிருக்கும் பலன்கள்
மிகுகொடியன் நெடுங்கதுப்பன் மின்னூர்க்குப் பகைவன்
நீண்டமலை யிற்காட்டிற் சஞ்சரிக்கப் பிரியன்
நேயமிலான் பசிதாக முடையனூண் பிரியன்
தீண்டிடுதாம் பூலநேயன் மனோ துக்கன்
தியாகியெழில் பராக்கிரமன் றிரபுத்தி யுளனும்
ஆண்டகர் விதநடையான் விசாலமுள வதனன்
அற்பகா ரியகோபி யாவனெனச் சொல்லே.

இ-ள். சந்திரன் சிங்கவிராசியிலிருக்கப் பிறந்தவன், பொல்லாதவன், நீண்டகபோல கன்னமுடையவன், பெண்களுக்குப் பகைவன், நீண்டமலையில் காட்டில் சஞ்சரிக்கப் பிரியமுடையவன்,நேசாசையில்லாதவன், பசிதாகமுடையவன்,ஆகாரத்திற்பிரியமுடையவன், தாம்பூலப்பிரியன்,மனத்துக்கமுடையவன், தியாகி, பராக்கிரமமுடையவன், உறுதியான புத்தியுடையவன், கெர்வமான நடையுடையவன், விசாலமான முகமுடையவன், அற்பகாரியத்திற் கோபமுடையவனுமாவன்—எ-று. 157

சந்திரன் கன்னியில் நின்ற பலன்.

சொல்லுங்கன் னியிற்சோமன் சூழ்பலன்கள் பகரில்
சுகவான்சத் தியவாக்கி சுரதத்திற் பிரியன்
கல்வியிற்சாத் திரவகையில் வல்லவன்மெய் யிளைத்தோன்
காயமுமுன் னதன்லச்சை யுடன்படுநற் கருமன்
வெல்லுமேம் பாடுடையான் றர்மசிந்தை யாளன்
விதேசத்திற் சஞ்சாரி மிருதுவாக்கு முளனும்
நல்லவர்கள் பலராலே பூசிதம்பெற் றிடுவன்
நாரியரே பிள்ளைகொஞ்ச மாநவிலுங் காலே.

இ-ள். கண்மணியிற் சிறந்தபெண்மணியே, உண்மையாய்க் கேட்பாயாக, சந்திரன் கன்னியா, ராசியிலிருக்கப் பிறந்தவனுடைய பலன்களைச் சொல்லுமிடத்து, சுகமுடையவன், சத்தியவசனி,காமக்கலவியிற் பிரியன், கல்வியிலும், சாஸ்திரவிசாரணையிலும், வல்லவன், இளைத்ததேகமுடையவன், முதன்மையானவன், லட்சையோடு முயற்சிசெய்பவன், எதையும் வெல்லுகின்ற மேம்பாடு பெற்றவன், தர்மசிந்தையுடையவன், அந்நியதேசசஞ்சாரி, இனிமைபேசுகிறவன், நல்லவர்கள் பலரால் பூசிக்கப்படுபவன், அற்ப புத்திரருடையவனுமாவன்—எ-று. 158

சந்திரன் துலாத்தில் நின்றபலன்.

காலேகோ லிடத்தினிற்சந் திரனிருக்கும் பலன்கள்
கன்னியரைச் சயித்திடுவன் கல்வியிற்பண் டிதனும்

மேலேகிஞ் சிதரோகி சுகநிதிய முடையோன்
விப்பிரர்தே வர்களிடத்திற் பிரியன்வெகு சாந்தன்
கோலேபோ லிளைத்தசையாய்ப் பிரகிருதி யிலையான்
கொள்ளவும்விற் கவும்வல்லன் குலமாத ருடையன்
மாலேகே டமர்பகைவ னமங்க வீனன்
மனதிற்சந் தோஷமிலான் வன்மனுங் கண்டீர்.

இ-ள். சந்திரன் துலாவிராசியிலிருக்கப் பிறந்தவன், பெண்போகத்தில் வெற்றியுள்ளவன், கல்வியில் வித்வான், கொஞ்ச ரோகமுடையவன், பொருளுடையவன், சுகவான், பிராமணர், தேவதைகளிடத்திற் பிரியமுடையவன், சாந்தகுணமுடையவன், சமமான இளைத்ததேகமுடையவன் மாடுகொள்ளவும், விற்கவும் வல்லவன், குலப்பெண்களைச் சேரப்பிரியமுடையவன், பந்துக்களுக்குப் பகைவன், அங்கவீனன், மனச் சந்தோஷமில்லாதவன், மர்மவானுமாவன்—எ-று. 159

சந்திரன் விருச்சிகத்தில் நின்ற பலன்.

கண்டீர்சந் திரபகவான் விருச்சிகத்தின் பலன்கள்
கருதுங்காற் றிரண்டமுழங் காலுடைய னவன்
கொண்டாடும் வாலிபத்திற் பிதாவையிழந் திடுவன்
கொடியசேஷ் டையனச்சங் கொள்வானே யாளன்
செண்டாடுஞ் செங்கைமன்னர் பூசிதனு யிடுவன்
செனங்களறி யாதொழித்துச் செய்குவன்பா பத்தை
மிண்டாரும் பக்ஷிமிரு கம்பிடிக்குங் கையன்
விழிமார்பும் பருத்திருக்கு மெனப்பலன்கள் கூறே.

இ-ள். சந்திரன் விருச்சிக விராசியிலிருக்கப் பிறந்தவன் பலன்களைச் சொல்லுமிடத்து, திரண்ட முழங்காலுடையவன், தக்க சமையத்தில் தகப்பனை யிழந்தவன், கொடியவம்பன், பயமுடையவன், ரோகமுடையவன், அரசர்களால் ஆதரித்துப் புஷ்பங்களாற் பூசிக்கப்பெற்றவன், பிறருக்குத் தெரியாமல் பாதகம் செய்பவன், பக்ஷி மிருகங்களைப் பிடிப்பவன், கண்ணும் மார்பும் பருத்திருக்கக் கூடியவனுமாவன்—எ-று. 160

சந்திரன் தனுசில் நின்ற பலன்.

கூறுதனு ராசியிற்சந் திரனின்ற பலன்கள்
கூன்முதுகுள் ளன்பலவான் குலவியகம் பீரன்
வீறுநிதிக் கினியவனுற் சாகிசிற்ப மறிவன்
மிகுமாசை யுளன்வெல்லுஞ் சொல்லன்வீ ரியவான்
தேறுபிதா நிதியதனைச் செலவுசெயுந் தியாகி
செய்யபுயந் திரண்டிருக்குந் திண்கவிதை யறிவான்

மாறு செய்தே தமரைத்தூ ஷிப்பன்வசி கரனும்
மணிகளணிந் திடுகழுத்தும் வதனமுநீண் டிருப்பன்.

இ-ள். சந்திரன் தனுவிராசியிலிருக்கப் பிறந்தவன், கூன்முதுகுள்ளவன், பலவான், கம்பீரமுள்ளவன், செல்வமிகவுள்ளவன், உற்சாகமுடையவன், சிற்பமறிபவன், அதிக ஆசையுள்ளவன், சொல் வெற்றியுடையவன், தைரியமுள்ளவன், பிதா சம்பாத்தியத்தைத் தியாகமிடுபவன், திரண்டபுயங்களுடையவன், கவியறிபவன், பந்துக்களைத் தூஷிப்பவன், வசீகரமுடையவன், ஆபரணமுடையவன், கழுத்தும், முகமும், நீண்டிருப்பவனுமாவன்.

சந்திரன் மகரத்தில் நின்ற பலன்.

நீண்டமக ரச்சசிக்குப் பலன்தனமு மில்லான்
நிறைந்தகா வியந்தெளிவா னிதியுதவா வுலுத்தன்
பூண்டசவு பாக்கியவான் கேடான சொல்லே
புகலுங்கா மியகமனன் புயபலவா னவன்
வேண்டியவிச் சைகளுடையன் சோம்பனிங் கிதனும்
மின்னனையார் புகழழகன் மெய்க்கிருபை யில்லான்
ஆண்டகையை மனைவியைத்தன் மைந்தரைக்கொண் டாடி
யவனிமிசை யிருப்பனென வறிந்துரைகள் செய்வாய்.

இ-ள். சந்திரன் மகரவிராசியிலிருக்கப் பிறந்தவன், செல்வ மில்லாதவன், காவியங்களையறிபவன், பொருட்செலவிடா வுலுத்தன், சுயசம்பாத்தியமுடையவன், கெட்ட வார்த்தைகள் பேசுபவன், கர்ம சிந்தனையுடையவன், பலத்தபுயமுடையவன், ஆசையுடையவன், சோம்பலுள்ளவன், இங்கிதமுடையவன், பெண்கள் புகழப்பெற்ற அழகுள்ளவன், உண்மையான கருணையில்லாதவன், தன்னையும், மனைவியையும், பிள்ளைகளையும், கொண்டாடிக் கொண்டிருப்பவனுமாவன்—எ-று. 162

சந்திரன் கும்பத்தில் நின்ற பலன்.

செய்யகும்பச் சசிபலன்க ளிடுப்பின்மறு வுளனும்
சிலகரும மழிக்கவுமாக் கவும்வளியன் சில்லோர்
தையலுக்கு மகட்குமிச்சை யுறும்பாவி கொடியன்
சரீரமது நீண்டிருப்பன் காறுடையும் பெரியன்
துய்யகழுத் தும்நெடியன் பெருமுதுகன் வழிகள்
துலைவாக நடக்கவலன் சார்ந்தமலர்ப் பிரியன்
மெய்யினரம் புயர்ந்துசிக் கென்றமயி ருள்ளான்
விரவுபெருங் குறியனென வேவிளம்ப வேண்டும்.

இ-ள். சந்திரன்கும்பவிராசியிலிருக்கப்பிறந்தவன், இடுப்பில்மறுவுள்ளவன், சிலகாரியங்களை உண்டாக்கவும், அழிக்கவும், வல்லமையுடையவன்,

அந்நியர்கள் பெண்டு பிள்ளைகளின்மேலாசையுள்ளவன், பாவி, கொடியவன் நீண்டதேகமுடையவன், காலும், துடையும் பருத்தவன், கழுத்து நீண்டவன், விரிந்த முதுகுடையவன், நெடுவழி நடக்கவல்லவன், சந்தனம் புஷ்பங்களிற் பிரியமுடையவன், நரம்பு மேலுயர்ந்தவன், சிக்குள்ள உரோமமுடையவன், ஆண்குறி பருத்தவனுமாவன்—எ-று. 163

சந்திரன் மீனத்தில் நின்ற பலன்.

விளம்பியமீ னச்சசிக்குப் பலனீரிற் பிறக்கும்
மீன்முதற்செந் துக்களின்மேன் மிகப்பிரிய னுவன்
வளம்பெரிய போகபோக் கியவஸ்துக் களினும்
மருவுகிர கங்களினு மனமுடைய னுவன்
உளமதனிற் பாதார விருப்புடைய னழக
னுற்றகுல மகளிடத்து முறவுடையன் சமவான்
இளம்பிறைநேர் நுதலதனிற் சிந்தூர திலத
மெழுதியிளை யோர்மனதை யிழுக்குமட மானே.

இ-ள். சிற்றிளம்பிறை போன்ற நெற்றியிற் சிந்தூரப் பொட்டிட்டு, அதனுல் பற்றிளைஞரின் மனதை முற்றுந் தன்வயமாக்கும் பெண்ணே, சந்திரன் மீனவிராசியிலிருக்கப் பிறந்தவன், நீரில் வசிக்கும், ஜெந்துக்களின் மேற் பிரியமுள்ளவன், வளம்பெற்ற போகபோக்கிய வஸ்துக்களிலும், வீடுகளிலும் பிரியமுள்ளவனுவன், அந்நியமாதரின்மேலாசையுள்ளவன், வேல் போன்ற அழகுடையவன், பாரியின்மேற் பற்றுதலுடையவன், சமவளர்ச்சியுள்ளவனுமாவன்—எ-று. 164

இராசிகளிற் சந்திரனின்ற பலன்
சம்பூர்ணம்.

இராசிகளிற் சனிநின்ற பலன்.

சனி மேடவிருச்சிகத்தில் நின்ற பலன்.

வேறு.

மேடத்திற் காரிநிற்கின் மிகுமாய ரூபிமூர்க்கன்
தேடிடா னுறவுசற்றும் பிர்ம்மிக்கச் சிறிதுசொல்வன்
ஓடுதேள் காரிக்கேகட் டுண்டுமெய்க் கீறதாவன்
நீடிய தனமுமில்லான் கொலைசெய்தே நிற்பன்ருனே.

இ-ள். மேடவிராசியிற் சனி நிற்கப்பிறந்தவன் மாயாரூபமுடையவன் மூர்க்கன், சிநேகமில்லாதவன், பிறத்தியார் பிரமிக்கும்படி பேசுகிறவனுமா

வன், விருச்சிக விராசியிற் சனி நிற்கப்பிறந்தவன், கட்டுப்பட்டு அதனல் தேகத்தில் தழும்புள்ளவனுவன், சிறையிருப்பன், செல்வமில்லாதவன், ஈகை யிரக்கமற்றவன், கொலை செய்கிறவனுமாவன்—எ-று. 165

சனி இடப துலாத்தில் நின்ற பலன்.

நிற்குமோ ரிடபந் தன்னி னிற்கிற்பெண் கட்கு லோலன்
நற்குணன் மறதி யில்லா ணரியர் பலரைச்சேர்வன்
முற்கோலிற் சவுரி நிற்கின் முற்றிய தனவா னுவன்
சற்குணன் கியாதி யுள்ளான் றகுவனூர் மணியமாவன்.

இ-ள். இடபவிராசியிற் சனியிருக்கப் பிறந்தவன், பெண்களுக்கு லோலன், நற்குணமுள்ளவன், மறதியில்லாதவன், பலபெண்களைச் சேருபவனுமாவன் துலாவிராசியிற் சனிதோன்றப் பிறந்தவன், மிகுந்த செல்வமுள்ளவன், சற்குணமுள்ளவன், கீர்த்திமான், ஊர்மணியக்காரனுமாவன்—எ-று.

சனி மிதுன கற்கடக கன்னியிராசிகளில் நின்ற பலன்.

ஆனதோர் மிதுனங் கன்னி தனிற்சனி யமர்ந்த காலை
தானமாம் புதல்வ ரற்பந் தகைமையில் லார்க்கு மாண்பன்
வானுறு நண்டிற் காரி மருவிற்றாய் மகன்பொன் னில்லான்
ஈனவான் ஞான வீனன் மக்கின பல்லன் மூர்க்கன்.

இ-ள். மிதுனத்திலாவது கன்னியிலாவது சனியிருக்கப் பிறந்தவன், அற்பபுத்திரருடையவன், தீயோர் சேர்க்கையிற் சிந்தையுள்ளவனுமாவன், கடகவிராசியிற் சனியிருக்கப்பிறந்தவன், தாயும், சேயும், இல்லாதவன், பொருளில்லாதவன், கேவலமானவன், ஞாயமில்லாதவன், ஊத்தைப்பல்லு டையவன், மூர்க்கவானுமாவன்—எ-று. 167

சனி சிங்க விராசியில் நின்ற பலன்.

மூலமாஞ் சிங்க வீட்டின் முனிவுறுஞ் சனிதா னிற்கில்
சாலவா சார மில்லான் சுகமிலான் ருட்சி யுள்ளான்
சீலமாங் குலம்வி ளங்கப் பெற்றிடுஞ் சேயு மில்லான்
வேலைவா ரிதியை வண்டை முனிந்திடு விழியி னுளே.

இ-ள். வேலாயுதத்தையும், ஆலாலந்தந்த ஆழியையும், வண்டையும் வெற்றிகொள்ளும்படியான கண்களையுடைய பெண்ணரசே கேட்பாயாக, சிங்கவிராசியிற் பங்குபாதனுகிய சனியிருக்கப் பிறந்தவன், ஆசாரமில்லாதவன், சுகமில்லாதவன், குறையுடையவன், சந்ததியதிகமில்லாதவனுமாவன்.

சனி தனுசு மீன விராசிகளில் நின்ற பலன்.

விழிமீன தனுவிற் காரி வேவின்மன் னவருக் கன்பன்
மொழிசுக முடையன் மைந்தர் திரவிய முள்ளனுவன்

வழிவச மான பெண்டீ ருள்ளவன் மலர்க்க ணோயான்
கழியபெண் டீர்மேற் பக்ஷங் காட்டிடுஞ் சிந்தை யானே.

இ-ள். மீனத்தினும், தனுசிலும், ஈனத்தனென்னுங் கீழ்மகனாகியசனி யிருக்கப்பிறந்தவன் இராஜப்பிரியன், சுகமுள்ளவன், பொன்னும்புத்திராளு முள்ளவன், நல்வழிவசமான பெண்ணையுடையவன், மலர்போன்றகண்ணில் நோயுள்ளவன், பெண்களின்மேற் பட்சமுள்ள மனதுடையவனுமாவன்.

சனி மகர கும்பவிராசிகளில் நின்ற பலன்.

சிந்துவாழ் மகர கும்பஞ் செறிந்துதுன் காரி நிற்கில்
உந்திய நகரம் பட்ண முடையவ னுறுக ணோயன்
சந்ததந் தனங்கள் சேர்ப்பன் செலவுளன் சரீர சுட்கன்
சுந்தரப் பரத்தை நண்பன் பலனுளன் சோர னாவான்.

இ-ள். மகரகும்பராசிகளில் அகர்பதிமைந்தன் சுகபதியானசனியிருக்கப் பிறந்தவன், நகரத்தையும் பட்டணத்தையு முடையவன், கண்ணோயுள்ள வன், திரவியம் சம்பாதிப்பவன், செலவுசெய்பவன், உஷ்ண தேகமுடைய வன், பரத்தையாசையுள்ளவன், பலமுள்ளவன், சோரனுமாவன்—எ-று.

இராசிகளிற் சனிநின்ற பலன்

சம்பூர்ணம்.

12-இராசிகளிலுள்ள
சந்திரனைக் கிரகங்கள் பார்த்த பலன்.

மேடம்.

ஆட்டில்வேள் குடையைப் புந்தி யார்க்காணி லதிக வித்தை
பூட்டிய பொன்சேய் காணிற் புரவல னாகி வாழ்வன்
கூட்டிய பிருகு காணிற் குணவானாங் காரி கள்ளன்
நீட்டிய பதங்கன் காணி லிரணிய மில்லை யென்னே.

இ-ள். மேடவிராசியிலுள்ள சந்திரனைப் புதன்பார்த்தால், அதிகவித் தையுடையவன், வியாழன் செவ்வாய் பார்த்தால், அரசனாவன், சுக்கிரன் பார்த்தால் மிக்க குணவானாவன், சனிபார்த்தால் திருடனாவன், நீண்டசூரி யன்பார்த்தால் தரித்திரவானாவன்—எ-று.

இடபம்.

என்னரன் விடையி லேறு மிராமனைச் செவ்வாய் காணில்
பொன்னிலான் புந்தி கள்ளன் பொன்காணிற் புகழு ளோனும்
பன்னிய பளிங்கு வேந்தன் பங்குபா தன்பொன் னுள்ளான்
துன்னிய கதிரோன் காணி லேவிய தொழில்செய் வானும்.

இ-ள். இடபவிராசியிலுள்ள சந்திரனைச் செவ்வாய் பார்க்கில், தரித்திரன், புதன்பார்க்கில் திருடன், குருபார்க்கில் கீர்த்தியுள்ளவன், சுக்கிரன் பார்க்கில், இராஜன், சனிபார்க்கில் திரவியமுள்ளவன், சூரியன்பார்க்கில், ஏவற்றொழில் செய்பவனுமாவன்—எ-று. 172

மிதுனம்.

வான்றண்ட லோனை யாரால் காணவல் விரும்பு விற்பன்
கான்முடப் புந்தி காணின் மன்னனுங் கனகன் காணின்
மேன்மைப்பண் டிதனுஞ் சுங்கன் காணினல் லச்ச மில்லான்
மான்சனி தனினூல் விற்பன் மார்த்தாண்டன் மிடியே தங்கும்.

இ-ள். மேலான மிதுனராசியிலிருந்த ஆலோனுகிய சந்திரனைச்செவ்வாய் பார்த்தால் இரும்புவியாபாரி, புதன்பார்த்தால், இராஜனுவன், குரு பார்த்தால், மேன்மையான வித்துவானுவன், சுக்கிரன்பார்த்தால், பயமில்லாதவன், சனி பார்த்தால், நூல்வியாபாரியாவன், சூரியன்பார்த்தால் தரித்திரவானுவன்—எ-று. 173

கர்க்கடகம்.

தங்கிய நண்டி லிந்து தன்னைவக் கிரன்றான் காணில்
பொங்கிய குசலே செய்து பொரும்படை புதனில் வித்தை
துங்கமன் பார்க்கு ஞானி சுங்கன்பார் வைக்கு மன்னன்
செங்கதிர் நோக்கக் கண்ணோய் திறல்சனி யிரும லுய்ப்பான்.

இ-ள். கர்க்கடகவிராசியிலிருந்த கலாநிதியாகிய சந்திரனை செவ்வாய் பார்த்தால், படையைவெல்லுபவன், புதன்பார்த்தால், வித்தையுள்ளவன், குருபார்த்தால் புலவன், அல்லது ஞானி, சுக்கிரன் பார்த்தால் இராஜன். சூரியன் பார்த்தால் கண்ணோயுடையவன், சனிபார்த்தால் இருமல்நோயுடையவனுமாவன்—எ-று. 174

சிம்மம்.

உய்யரி யிந்தைப் புந்தி பார்க்கச்சோ திடனூ லோதும்
செய்யபொன் றனவான் வெள்ளி திருஷ்டிமன் னவனுங்காரி
மெய்யுற நோக்கினுநா விதத்தொழில் விளைப்பன் வெய்யோன்
பையவே காணின் மன்னும் பயில்குசன் பாராள்விப்பன்.

இ-ள். சிங்கவிராசியிலிருந்த கங்குற்கிறைவனென்னும் சந்திரனைப் புதன்பார்த்தால், சோதிடஞ்சொல்பவன், குருபார்த்தால், செல்வமுடையவன், சுக்கிரன் பார்த்தால் தக்கமன்னவனுவன், சனிபார்த்தால் நானுவிதத் தொழில் செய்பவன், சூரியன்பார்த்தால் பார்வேந்தனுவன், செவ்வாய் பார்த்தால், உலகாளுபவனுமாவன்—எ-று. 175

கன்னி.

விற்பன மடந்தை யிந்தை வேண்டியே கணக்கன் காணின்
நற்புவி புரப்பன் பொன்னேக் கதிற்சேனு பதியே நாட்டும்
முற்பகர் சுங்கன் சால நிபுணன்சேய் முடவன் வெய்யோன்
பொற்புறக் காணிற் கன்னி யாற்பிழைப் புண்டாவானே.

இ-ள். விவேகமுள்ள கன்னியாராசியிலிருந்த விதுவென்னும் சந்திரனைப் புதன் பார்த்தால் அரசாளுவன், குருபார்த்தால் சேனுதிபதியாவன், சுக்கிரன் பார்த்தால் மிகவும் நிபுணனுவன், செவ்வாய், சனி, சூரியன் (ஆகிய இவர்கள்) பார்த்தால், பெண்கள் சகாயத்தாற் பிழைக்கின்றவனுமாவன்—எ-று. 176

துலாம்.

ஆவன்கோ விடத்தலோனை மால்காணி னரச னுவன்
மேவிய பொன்னின் பார்வை மிகுசொர்ன வேலை செய்வன்
தாவிய பிருகு காணில் வியாபாரி சனிசேய் வெய்யோன்
மூவர்கண் டிடில்வஞ் சிப்பன் பலரையு முறைமைபோல.

இ-ள். துலாவிராசியிலிருந்த கலாநிதியாகிய சந்திரனைப் புதன் பார்த்தால், அரசனுவன், குருபார்த்தால் சொர்னவேலை செய்பவன், சுக்கிரன் பார்த்தால் வியாபாரஞ் செய்வன். சனி, செவ்வாய், சூரியன், (ஆகிய இவர்கள்) பார்த்தால், பலரையும் வஞ்சித்து வாழ்பவனுமாவன்—எ-று. 177

விருச்சிகம்.

போலுஞ்தே ளிந்தைக் கண்ட புதனுக்குத் தாதை ரெண்டாம்
மேலுமே குருதிஷ் டிக்குப் பிராமண சீலன் வெள்ளி
சாலவே காண வண்ணன் பணிசனி வெய்யோன் செவ்வாய்
கோலமா மங்கவீனன் றரித்திரன் குணவேந் தாமே.

இ-ள். விருச்சிக விராசியிலிருந்த அரிச்சிகனுகிய சந்திரனைப் புதன் பார்த்தால் இரண்டு தகப்பனுள்ளவன், குரு பார்த்தால் சிறப்புற்ற பிராமணன், சுக்கிரன் பார்த்தால், வண்ணன், சனி பார்த்தால் அங்கவீனன், சூரியன் பார்த்தால் தரித்திரன், செவ்வாய்பார்த்தால் அரசனுமாவன்—எ-று.

த னு சு.

ஆந்தனு விராமன் றன்னைப் புதன்காண வறிஞன் ஞானி
போந்தபொன் காண மன்னும் பொருந்துசுக் கிரன் திஷ் டிக்குச்
சேர்ந்துநின் ருசரிப்பர் பலர்கூடிச் செவ்வாய் வெய்யோன்
ஏந்திய சனியுங்காண விருமலா யிருப்பன் கண்டீர்.

இ-ள். தனு விராசியிலிருந்த பனிக்கதிராகிய சந்திரனைப் புதன்பார்த்தால் விவேகி, ஞானியுமாவன், குருபார்த்தால், ராஜனுவன், சுக்கிரன் பார்த்தால் பலரால்| ஆசரிக்கப்படுபவன், செவ்வாய், சூரியன், சனி (ஆகிய இவர்கள்) பார்த்தால் இருமலுடையவனுமாவன்—எ-று. 179

ம க ர ம்.

கண்டிடு மகரத்திந்தைக் கணக்கனு மரசன் காணப்
பண்டிதன் சுக்கிரற்குப் பயில்குரு நரேந்திர னுவான்
மொண்டிக்குத் தனவா னுவன் மூனிரவி தரித்திரந்தான்
மண்டிய குசனும் பார்க்கிற் பூபதி யாகி வாழ்வான்.

இ-ள். மகரவிராசியிலிருந்த சுதாகரனென்னும் சந்திரனைப் புதன் குரு (இவர்கள்) பார்த்தால், வித்துவான், சுக்கிரன்பார்த்தால் மனிதரில் முதன்மைபெற்ற ஆசிரியனுவன், சனிபார்த்தால் செல்வமுடையவன், சூரியன்பார்த்தால் தரித்திரன், செவ்வாய் பார்த்தால் இராஜனுக வாழ்வான்—எ-று. 180

கு ம் ப ம்.

வாழ்கும்பச் சசியைப் புந்தி காணப்பூ பதியுமாவன்
நீள்குரு நோக்கிற்பூமி நிருபர்போ னீடி வாழ்வன்
சூழ்குச னிரவி காரி சுக்கிர னல்வர் காணில்
தாழ்விலாப் பரதா ரத்திற் ருற்பரி யங்க னுள்ளான்.

இ-ள். கும்பவிராசியிலிருந்த அம்புலியாகிய சந்திரனைப்புதன்பார்த்தால் பூபாலனுவன், குருபார்த்தால், கோமானுகி நெடுநாள் வாழ்ந்திருப்பன், சுக்கிரன் செவ்வாய், சூரியன், சனி (ஆகிய இவர்கள்) பார்த்தால், அன்னியமாதர்மே லதிகப் பிரியமுள்ளவனுவன்—எ-று. 181

மீ ன ம்.

உள்ளமீ னத்தி லிந்தை யுறும்புந்தி கண்ட காலை
மெள்ளவே பிரியவாக்கி வேந்தற்கு வேந்தே யாகும்
தெள்ளிய வெள்ளிகாணப் பண்டிதன் செவ்வாய் வெய்யோன்
கள்ளமாங் காரி மூவர் காணவே பாவி யாவன்.

இ-ள். மீனவிராசியிலிருந்த தானவனுகிய சந்திரனைப் புதன் பார்த்தால் புகழும்படியான வாக்குடையவன், குரு பார்த்தால் கோமானுவன், சுக்கிரன் பார்த்தால், தக்கபண்டிதனுவன், செவ்வாய், சூரியன், சனி (ஆகிய இவர்கள்) பார்த்தால் பாவியுமாவன்—எ-று.

பார்த்தாலென்று பகர்ந்தமையால் சந்திரனேடு பொருந்தியிருந்தாலும், அந்தப் பலனடைய ரெனவறிக, இராகு கேதுக்களைச் சொல்லாதொழிந்தமையால், இவர்கள் சேர்ந்தாலும், பார்த்தாலும் பாவிகளுக்கேற்பட்ட பலனென்றே சொல்லவேண்டும். 182

சந்திரனைக் கிரகங்கள் பார்த்த பலன்

சம்பூர்ணம்.

அங்கிஷபலன்.

அங்கிஷமறியும் விபரம்.

அங்கிசை யறியுந் தன்மை யசுபதி முதன்மும் மூன்றுப்
பங்குமொன் பதுவோர் பாங்கிற் பாதமுங் நான்கு தன்னில்
தங்கிய மேட ராசி தான்முதன் மீன மட்டும்
பொங்கிய பதியுள் ளோரைப் பொருளெனக் கண்டுகூறே.

இ-ள். அங்கிஷையறியவேண்டிய சங்கையாவது, அசுபதி முதல் கார்த்திகை நட்சத்திரம்முடிய, (12) பாதங்களாகின்றன, இவற்றில் எத்தனையாவது பாதத்தில், எந்தக்கிரகமிருக்கிறதோ, அத்தனையாவது, இராசியில், மேடமுதற்கொண்டு, கிரகத்தைநாட்டி, அக்கிரகங்கள்நின்ற இடத்தைக் கண்டு, பலன்சொல்லுவதாம், (அசுபதி முதற்பார்ப்பதுபோல, உரோகணி நட்சத்திரம்முதற் றிருவாதிரைநட்சத்திரம் முடிய (12) பாதங்களும் அப்படியே, இதுபோல், புனர்பூசம், மகம், அஸ்தம், விசாகம், மூலம், திருவோணம், பூரட்டாதி, ஆகிய நட்சத்திரங்கள்முதல் மும்மூன்று நட்சத்திரங்களுக்கும், பனிரண்டு பனிரண்டு மாதமாகப் பார்க்கவும்—எ-று. 183

சூரியாங்கிஷம்.

வே று.

கூறியதோ ரிரவியங்கி சன்றனக்குக் கோபி
கோலவிழி மெய்சிவப்பன் குலவுசுசி யாளன்
வீறுடனே சுருண்டுநீண் டிருக்குமயி ருடலும்
மிகவயிறு பருத்திருக்குஞ் சத்தியமொழி யுடையன்

ஆறில்யாத் திரைப்பிரியன் மோவாய்நீண் டிருப்பன்
அழகன்மிகு சினேகிதவா னவிர்புந்தி யுளனும்
தேறுதலே யுணர்ஞானி தியாகியாஞ் சாந்தன்
சீமானு கும்பித்த தேகமுளன் றானே.

இ-ள். சூரியாங்கிஷத்திற் பிறந்தவன், கோபமுடையவன், செவ்விய கண்களையுடையவன், சிவந்த மேனியுடையவன், சித்தவான், சுருண்டு நீண்ட மயிருள்ளவன், வளர்ந்த தேகமுடையவன், பருத்தவயிறுடையவன் சத்திய வார்த்தை பேசுபவன், யாத்திரைப்பிரியன், மோவாய் நீண்டிருப்பவன், அழகுடையவன், சிநேகமுடையவன், மிகுந்த நற்புத்தியுள்ளவன், ஆற்றல்பொருந்திய ஞானி, தியாகங்கொடுப்பன், சாந்தகுண முடையவன், செல்வவான், பித்ததேகமுள்ளவனுமாவன்—எ-று. 184

சந்தி ராங்கிஷம்.

உள்ளமதி வித்தைசெல்வ னுமுகத்தின் மறுவான்
உறுந்தீர்க்கா யுளன்சிறிய விழியனென வரையே
தெள்ளியநற் குணனழக னுஞ்சூரன் றியாகி
சினேகிதன்மந் தன்னறிவு குன்றாதான் றீரன்
கள்ளமிலான் வாதசேத் துமரோக தேகன்
கருத்துளன்பின் னிரக்கமுள னீராடப் பிரியன்
எள்ளலிலான் மோவாய்நீண் டேயிருப்ப னழகன்
இனியசிர ரோமனீண் டிருந்திடுவன் கண்டாய்.

இ-ள். சந்திராங்கிஷத்திற் பிறந்தவன், வித்தையுள்ளவன், செல்வவான், முகத்தில் மறுவுடையவன், தீர்க்காயுசுள்ளவன், சிறியகண்களுள்ளவன், நற்குணமுள்ளவன், அழகுள்ளவன், வல்லமையுள்ளவன், தியாகமிடுபவன், சிநேகிதன், மந்தகுணமுள்ளவன், தெளிந்த அறிவுடையவன், தைரியவான், கள்ளமில்லாதவன், வாதசிலேஷ்டுமம் பொருந்திய தேகமுடையவன், கருத்துள்ளவன், பின்னிரக்கமுள்ளவன், நீராடப் பிரியன், பிறரை மதிக்காதவன், நீண்டமோவாயுடையவன், அழகன், தலையில் உரோமம் வளர்ந்தவனுமாவன்—எ-று. 185

செவ்வா யங்கிஷம்.

கண்டசெவ்வாய் கடுஞ்சொல்லன் பேடியாம் ரூபன்
கழறுவாய் திக்குடையன் மெய்சிவப்பன் கோபி
சண்டைவிருப் புடையனற்ப நிதிபித்த ரோகி
தரணிதிரிந் திடுவன்சிற் றுண்டிவிருப் பினனும்
மிண்டியவஞ் சகன்லோபி முதுகின்மறு வினனும்
வீரதத்து வன்கிலேசி தீரன்பிர காசி

கண்டுமொழி மானேகே டுக்கமுள்ளா னிழிசொல்
கழறிற்பொ ருன்பொய்யன் கனவான்கீர்த் தியினன்.

இ-ள். செவ்வாய் அங்கிஷத்திற் பிறந்தவன், கடுஞ்சொல்லன், பேடிரூபன், வாய்குழறல், சிவந்தமேனியன், கோபமுள்ளவன், சண்டையில் விருப்பன், வஞ்சகம் லோபமுடையவன் முதுகில் மறுவுள்ளவன், வீரதத்துவமுள்ளவன், கிலேசம் துக்கமுள்ளவன், இழி சொற் பொருதவன், பொய்யுடையவன், கனவான், கீர்த்தியுடையவனுமாவன்—எ-று. 186

புத னங்கிஷம்.

ஆனபுந்தி யங்கிசத்த னுந்தரும சீலன்
ஐச்சுவரியன் வித்தையுள னரிவையருக் கன்பன்
ஞானியிசைத் தமிழோன்பொய் யாதமொழி யாளன்
நன்றிமற வான்கயம்போ னடையுடைய னழகன்
கானவித்தை யுளன்சூரன் பசியநரம் புடையன்
காரியஞ்சற் றும்வழுவான் கதித்தகுண முள்ளான்
மானமுளன் றேவர்களைச் சந்ததமும் பணிவன்
வன்மனத்த னச்சமிலான் மகிழ்ச்சியுள னுகும்.

இ-ள். புதனங்கிஷத்திற் பிறந்தவன், தருமசீலன், செல்வமுள்ளவன், வித்தையுள்ளவன், பெண்களுக்கன்பன், ஞானி, தமிழிசைபாடுகிறவன், பொய்பேசாதவன், நன்மைமறவாதவன், யானைபோன்ற நடையுடையவன் அழகன், கானவித்தையுள்ளவன், வல்லபன், பசியநரம்புடையவன், காரியாகாரியத்தில், சற்றும் நழுவாதவன், நற்குணமுள்ளவன், பெருமையுள்ளவன் தேவர்களைப் பணிபவன், வலியமனமுள்ளவன், பயமில்லாதவன், மகிழ்ச்சியுள்ளவனுமாவன்—எ-று. 187

குருவி னங்கிஷம்.

ஆகியநல் வித்தையுளன் பொன்போலு மெய்பன்
ஆண்பெறுவன் செவ்விழிய னமைச்சனுமா குவனுப்
வாகுசெறி ரோமமுளன் மேனேக்கன் செல்வன்
மகிழ்வுடையன் சுசியுடையன் றவன்றால தேகி
மோகமுட னீராடு வன்மோவாய் நீண்டோன்
மொழிமதுரன் விசிட்டமுள னுயர்ஞானி யழகன்
போகமிகு சுகவானல் லறிவுடையன் விசயன்
புகழுடையன் புத்தியுடன் பொன்னங்கி சத்தோன்.

இ-ள். குருவினங்கிக்ஷத்திற் பிறந்தவன், வித்தையில் மெத்தவல்லவன் மெய்பொன்னிறம் போன்றவன், அதிக ஆண்பிள்ளைகளையுடையவன், சிவ

ந்த கண்ணுள்ளவன், மந்திரியாகுவன், நெருங்கிய உரோமமுள்ளவன்,மேற்பார்வையுடையவன், செல்வமுடையவன், மகிழ்ச்சியுள்ளவன், சுத்தமுள்ளவன், தூலதேகன், ஆசையுடன் நீராடுபவன், நீண்ட மோவாயுடையவன், அமிர்தவசனி, உயர்ந்தஞானி, அழகுள்ளவன், சுகவான், நல்லறிவுடையவன், வெற்றியுள்ளவன், புகழுள்ளவன், புத்தியுள்ளவனுமாவன்—எ-று.

சுக்கிர னங்கிஷம்.

பிரபலனு கியசுங்க னங்கிசத்திற் பிறந்தோன்
பெருந்தூல சரீரனெழிற் பெருஞ்செல்வ முடையோன்
திரமாகச் செய்நன்றி யுணர்ந்திடுவன் றருமன்
செப்பியவுத் தமன்சூரன் கல்வியுளன் சுகவான்
கருமயிர்தான் சுருண்டிருப்பன் காந்தியுளன் சிநேகன்
கதிர்வடிவன் கால்வளமை யுடையன்கிளைக் குறவன்
அரன்பெருமை யோதவிருப் புளனுமன் புடைடன்
ஆகுமென்றே யுரைத்திடுவ ரறிந்திடுநல் லோரே.

இ-ள். சுக்கிரனங்கிஷத்திற் பிறந்தவன், பெரிய தூலசரீரன், பெருஞ்செல்வமுடையவன், ஒருவர்செய்த நன்றியையுணர்பவன், தருமஞ் செய்பவன், உத்தமகுணமுள்ளவன், வெற்றியுள்ளவன் கல்வியுள்ளவன் சுகவான், இருண்டு சுருண்டமயிருள்ளவன், காந்தியுள்ளவன், நேசரிடத்தில் அன்புள்ளவன், கதிர்வடிவுள்ளவன், கால்வலுவுடையவன், வந்தபந்துக்கள்மீது வாஞ்சையுள்ளவன், சிவநாமங்களைத் தியானிப்பவன், அன்புள்ளவனுமாவன், என்று அறிவுள்ளவர்கள் விரிவாயெடுத்துச் சொல்லுவார்கள்—எ-று. 189

சனி யங்கிஷம்.

நல்லசனி யங்கிசத்தோன் கீர்த்தியிலா னுகும்
நவில்வன்பொய் தள்ளாடி நடப்பன்கை வீசி
சொல்லியமெய்க் குறளன்ராட் சதரூப னுவன்
தொடைபுறந்தாள் பருத்திருக்குந் தூயகரு நிறத்தோன்
அல்லலுறுந் தரித்திரவா னிரக்கமிலா னுகும்
அன்னமெத்த வேபுசிப்ப னரும்பொருளான் லோபி
வல்லபெருந் தனனீலதேகனஞ்சா மனத்தன்
மன்னுதய வினைச்சற்று மனத்தினில்லை யானே.

இ-ள். சனியங்கிஷத்திற் பிறந்தவன், இனிமைகீர்த்தியில்லாதவன், பொய்பேசுபவன், தள்ளாடிக்கைவீசிநடப்பவன், குறியதேக முடையவன், இராட்சசொரூபன், பாதமும்தொடையும், பருத்தவன்,சுத்தக்கறுப்புநிறமு

டையவன் வருத்தப்படுகின்ற தரித்திரமுடையவன் இரக்கமில்லாதவன், அதிக ஆகாரம் புசிப்பவன், பொருளற்றவன், லோபி, வலிமையோடுசம்பாதிப்பவன், நீலமேனியன், பயமில்லாமனத்துடையவன், தயவில்லாதவனுமாவன்—எ-று. 190

அங்கிசபலன்

சம்பூர்ணம்.

இலக்கின பலன்.

மேடம்.

வேறு.

நாடிய மேட லக்கின பலன்றான்
　　ராசபூச் சியன்றிர புத்தி
நகைசெய்வ னடிமை யுளனுயர் தந்த
　　நலிந்தமெய் தனமுளன் சமர்த்தன்
நீடிய தரும சாத்திரங் கேட்ப
　　னீள்கழுத் தோனெறி வசனன்
நிறைந்திடு கோபி யிளைத்திடு முழந்தா
　　ணோர்படு மிருகத்தை வதைப்பன்
வீடிய வைந்திற் றீப்பய மேழிற்
　　பத்தினிற் சுரமிரு பதிலோ
மேவுபா லவன்வாய் காதினோ யிரண்டு
　　வீறுபத் திரண்டினிற் பாம்பால்
தேடிய வையைந் தினிற்சல கண்டஞ்
　　செழித்தநா லேழினிற் பிளவை
சென்மலக் கினந்தான் சுபக்கிர கங்க
　　டெரிசனை வயதுநா றுண்டே.

இ-ள். மேடலக்கினத்திற் பிறந்தவன், நாடாளும், அரசாபிமானமுள்ளவன், திரமான புத்தியுடையவன், புன்சிரிப்புடையவன், அடிமையுள்ளவன், நீண்டபல்லும், மெலிவுபூண்ட தேகமுமுடையவன், செல்வமுடையவன், சமர்த்தன், தருமசாஸ்திரவிசாரணைசெய்பவன், நீள்கழுத்துள்ளவன்சத்தியவசனன்கோபமுள்ளவன், முழங்கால் பலமில்லாதவன், மிருகவதைசெய்பவன், (5) வயதில் தீயினாலும், (7) (10) வது வயதிற் சுரத்தினாலும் (20) வது

வயதில், வாய்நோய் காதுநோயாலும் பயம் (22) வயதில், பாம்பாற்பயம், (25) வயதிற் சலத்தாற் கண்டம், (28) வயதில், பிளவையாற் கண்டம், ஜென்மலக்கினத்தைச் சுபர்கள் பார்த்தால் நூறுவயதளவும் ஜீவிப்பவனு வன்—எ-று. 191

மார்கழி பூரணை மன்னிய வியாழம்
ஏர்பெறு ரோகணி யிரவொரு பத்தாம்
சீர்பெரு கடிகையிற் சேர்தலை நோயால்
நேர்பெறப் புகலுவர் நிரியாண மென்றே.

இ-ள், (100) நூறுவயதின்பின், மார்கழிமாசத்தில், வியாழக்கிழமையும், பூரணைதிதியும், ரோகணி நட்சத்திரமுங் கூடியதினத்தில், இரவு (10) நாழிகைக்குத் தலைநோயால் மரணமாவனென்று பெரியோர்கள் தெரியச் சொல்லுவார்கள்—எ-று. 192

இடபம்.

ஆண்டிடி மிடப லக்கினம் பரமர்க்
கன்புறு பூசைசத் தியவா
னற்பபோ சனவான் றூலதே கத்தி
னடிமையா ளன்புளிப் பிரியன்
வேண்டிய கணிதன் வஸ்திரா பரணன்
மெல்லிய செவியினன் புத்தி
விரும்பிய குழவி போல்விளை யாடி
வெற்றியாய்ப் பிறர்பொருள் கொள்வன்
தூண்டிடு மிரும லுளன்பெரு மைந்தர்
சொல்விருப் பன்வய தைந்தில்
சுசிபயங் கழுத்திற் பிணிபதி னாறிற்
றுலங்குபத் தொன்பதி லிருமல்
தாண்டிய விருப துடனிரு பத்தேழ்
தன்னிலே சுரஞ்சுபக் கிரகம்
தானுமே பார்க்க வயதெழு பத்தேழ்
தரையினில் வாழ்ந்திருப் பானே.

இ-ள், ரிஷபலக்கினத்திற் பிறந்தவன், பரமன் பூசைசெய்பவன், சத்தியவான், அற்பபோஜனம்புசிப்பவன், தூலதேகத்தன், அடிமையாளன், புளிப்பிற்பிரியன், கணிதங்கற்றவன், வஸ்திராபரணமுடையவன், மெல்லிய காதுடையவன், குழந்தைபோல் விளையாடுபவன் வெற்றியுடன் பிறர் பொருளையபகரிப்பவன், இருமல்நோயுள்ளவன், பெற்றபிள்ளைகளின், சொற்களில் விருப்பமுள்ளவன், (5) வயதில் அக்கினியாலும், (16) வயதில் கண்டமாலையாலும், (19) வயதில், இருமலாலும், (20) (27) வயதில் சுர

நோயாலும் வருந்திப்பின் சுகப்படும், சுபக்கிரகங்கள் பார்வையுற்றால் (77) வருஷம் ஜீவித்திருப்பன்—எ-று. 103

ஆவணி முற்பக் கத்திர யோதசி
மேவுநல் லுத்தி ராடமுந் திங்கள்
தாவறு சாயங் காலவே ளையினில்
ஓவறு சுரத்தால் நிரியாண முறுமே.

இ-ள். (77) வயதிருந்து, ஆவணிமாதம், சுக்கிலபட்சத் திரயோதசியும், உத்திராட நட்சத்திரங்கூடிய, திங்கட்கிழமையன்று சாயங்காலத்தில், சுர நோயால் மரணமாவனென்க—எ-று. 194

மி து ன ம்.

இனியதோர் மிதுன பலன்புக முடையோ
னிலச்சையு முளன்வெகு கபடி
இயலுமாசார பரனிரு சொல்ல
னியற்றுவன் விரதநல் வசனன்
புனிதமாய்த் தனது காரியம் பார்ப்பன்
போந்திடு பித்தரோ கியுமாம்
பொருந்திய சாம வண்ணமெய் யாளன்
புகலுமூன் றினிலப மிருத்தாம்
நனியுமோ ரைந்தினி லக்கினி பயமா
நாலிரண் டாயுத பீடை
நண்ணிய பத்திற் சத்துரு பயமா
நாடுமீ ரொன்பதில் வாதம்
தனிமையா யிருபத் தெட்டினிற் கண்ணோய்
தருஞ்சுபக் கிரகமே பார்க்கில்
தக்கதோர் வருஷ மறுபது மைந்துந்
தரையினி லிருப்பனென் றுரைப்பார்.

இ-ள். மிதுனலக்கினத்திற் பிறந்தவன், புகழுடையவன், இலச்சையுள்ளவன், மிகக்கபடன், ஆசாரமுள்ளவன், ஒரு சொல்லை யிருசொல்லாகச் சொல்பவன், விரதமுள்ளவன், நல்வாக்குடையவன், தனதுகாரியஞ் செய்பவன், பித்தரோகி, பச்சைமேனியன், (3) வயதில், அபமிருத்து (5) வயதில் அக்கினிபயம், (8) வயதில் ஆயுதபீடை, (10) வயதில் சத்துரு பயம், (1०) வயதில் வாதநோய், (28) வயதில் கண்ணோய்வரும், சுபக்கோள் பார்த்தால், (65) வயதுவரை சுகஜீவியாயிருப்பவனுமாவன்—எ-று. 195

சிங்கமதி முற்பக்கச் சதுர்த்தசி
பொங்கு வெள்ளி புணருமோ ணத்தில்

மங்குல்பன் ஞன்கின் மார்புநோ யாலே
தங்கு நிரியா ணம்மெனச் சாற்றே.

இ-ள். (65) வயதிருந்து, ஆவணிமாதம், சுக்கிலபட்சம், சதுர்த்தசியும், திருவோண நட்சத்திரமும், வெள்ளிக்கிழமையும், கூடியதினத்தில், இரவு (14) நாழிகையில், மார்புநோயால் மரணமாவன் என்று சொல்லுக—எ-று.

கர்க்கடகம்.

உரைசெறி கடக லக்கின பலன்க
ளுடன்மிகச் சிவப்புளன் சமர்த்தன்
உரமொடு நடப்பன் வேசையர் கமன
னுயர்நப தானியன் றனவான்
குருவிசு வாசன் பிதாவினுக் கிசையான்
குறிமறு கண்டிடா விடத்தில்
கூறுவர் சிலநா டரித்திரன் வயதுங்
குலவிய வைந்திலீ ரெட்டில்
இருபதி லிருபத் தைந்திலங் நாளி
லெய்திடு மவமிருத் துவமே
தினியகோல் சன்ம லக்கினம் பார்க்கி
லிருந்துதொண் ணூறுமட் டுலகில்
பரவிய மாசி சுக்கில பக்ஷப்
பஞ்சமி புந்திவா ரத்தில்
பண்பொடு மிருக சிரநடு வதனிற்
பரன்பத மடைந்திடு வானே.

இ-ள். கர்க்கடக லக்கினத்திற் பிறந்தவன், சிவந்ததேகன், சமர்த்தன், வேகமாய் நடப்பவன், வேசையாசையுள்ளவன், நவதானியமுள்ளவன், செல்வ முள்ளவன், குருபக்தியுள்ளவன், பிதாசொற் கேளாதாவன், மாண்புடைய ஆண்குறியில் மறுவுடையவன், சிலநாள் தரித்திரன், (5) (16) (20) (25) இந்த வயதுகளில், அவமிருத்துவாம். சுபக்கோட்கள், லக்கனத்தைப் பார்த்தால், (90) வயதுவரை பூமியிலிருந்து, மாசிமாதம், சுக்கிலபட்சம் பஞ்சமிதிதியும், புதன்கிழமையும், மிருகசீரிட நட்சத்திரமுங் கூடியதினத் 197
தில், நடுப்பகலில் மரணமடைவானென்க—எ-று.

சிம்மம்.

அடைவொடு சிங்க லக்கின பலன்க
ளமுதுசா லவும்புசித் திடுவன்
அருச்சனை புரிவன் றருமசிந் தையினு
னனுதினம் பெரும்பசி யாளன்

திடமுறும் புத்தி மான்பிணி வந்து
தீர்த்டு முடன்றொழிற் பிரியன்
செப்புமோ ரைந்து பத்திரு பத்தேழ்
செறிவய திற்சுரம் வந்து
உடறனின் மருவி முப்பது நாளும்
போனபின் றீரும்லக் கினத்தை
யுத்தமர் காணி லெண்பது வயதும்
பூமியிலிருந்துபங் குனியில்
வடிவுறு மமா பக்கபாட் டிமையின்
மன்னுமங் தத்திற் சுன்பகலில்
மதிநதி முடித்த சடையன்பொற் பதத்தில்
வாழ்வனென் றுரைப்பர்மா தவரே.

இ-ள், சிம்மலக்கினத்திற்பிறந்தவன், போஜனப்பிரியன், தேவார்ச் சனைசெய்பவன், தருமசிந்தையுள்ளவன், பெரும்பசியுடையவன், உதார மான புத்தியுடையவன், பிணிவர நீக்குபவன், தொழிலிற் பிரியமுள்ளவன். (5) (10) (27) வயதுகளிற் சுரம்வந்து, (30) நாளிருந்து பின்தீரும், லக்கி னத்தை சுபர்கள் பார்த்தால், (80) வருஷம் பூமியிலிருந்து, பங்குனிமாதம் மந்தவாரம், அமரபக்கப் பிரதமையும், அஸ்தநட்சத்திரமுங்கூடிய சுபதினத் தில், பகற்காலத்தில், சிவபதமடைவன்—எ-று. 198

கன்னி.

மாதெனுங் கன்னி லக்கின பலன்கண்
மகிழ்தரு மன்றரித் திரவான்
மாசிலா சார முளன்பல கரும
வகையறிந் திடுவன்பின் வயதில்
மீதெனுந் தனங்க டேடுவ னைந்தில்
மேவிய வக்கினி பயமாம்
விளங்கிய பத்திற் சுரம்பதி னெட்டில்
மேவிடு மம்மைநோ யென்ப
மேதரு நல்லோர் காணினல் வயதோ
வியைந்திடு மேழுபத் தேழாம்
மேன்மைவை காசி குறைபக்கப் பன்னுன்
கெனுந்திதி யிசைந்தசித் திரையில்
கோதுறு குன்ம வியாதிவா தையினுற்
குறிநிரி யாணமே யாகும்

குலவுசர்க் கரைகற் கண்டுதேன் பால்போற்
கூறுசொற் கொவ்வைவாய்க் கொடியே.

இ-ள். சர்க்கரை, பழம், கற்கண்டு, தேன், பால் இவைகளைப்போன்ற சொல்லும், கொவ்வைக்கனிபோன் றவாயும், கொடிபோன்ற, இடையும், பிடிபோன்ற நடையுமுடைய பெண்ணே கேட்பாயாக, கன்னியாலக்கினத்திற் பிறந்தவன், தருமசிந்தையுடையவன், தரித்திரன், ஆசாரமுள்ளவன், பலதொழில்களின், தன்மைகளை யறிபவன், பின்வயதில் பொருள்களைத் தேடவல்லவன், (5) வயதில் அக்கினிபயமும், (10) வயதில் சுரநோயும், (18) வயதில் வைசூரியும், உண்டாகும், சுபர்பார்வையிருந்தால், (77)வயது வரையும். வாழ்ந்திருந்து வைகாசிமாதம் அமரபக்கம், சதுர்த்தசியும், சித்திரைநட்சத்திரமுங்கூடிய சுபதினத்தில்,கு மவியாதியால்மரணவாகுவன்.

துலாம்.

கொடியனுங் காரிக் குச்சமாந் துலாத்தோன்
குறித்திடு மனைவிய ரிருவர்
குமரர்க டிரண்டகுலனபி மானி
கூறுசம் பத்துளன் றனவான்
படியில்வாழ் மன்னர்க் கினியநற் சுகவான்
பரிமள கந்தபூப் பிரியன்
பற்றுள தமரோன் றருமசிந் தையினன்
பரவுமே ழாண்டினோய் தீயால்
கடியவீ ரூராறுண் டதனில்வை சூரி
காணுபத் தொன்பதிற் பகையால்
கண்டமோ ரிருபத் தெட்டில்வேற் புனலாற்
கண்டநாற் பத்திரண் டினியர்
நெடியபார் வையினு லெண்பதோ டைந்து
நின்றுதேள் குறைதிதி யாறில்
நிறைகதிர் வாரம் விருத்தியோ கத்தி
னிளுதய த்தினீங் குவனே.

இ-ள். கஷ்டப்படுத்துந் துஷ்டனுகிய, காரியென்னும், சனீஸ்வரபகவானுக்கு உச்சவீடாகிய, துலாலக்கினத்திற் பிறந்தவன், இரண்டுமனையாளுள்ளவன், ஆண்சந்ததி யதிகமுள்ளவன், குடும்பஸ்தன், அபிமானமுடையவன், சம்பத்துள்ளவன், பொருளுள்ளவன், இராஜப்பிரியன், நற்சுகமுள்ளவன், வாசனைப்புஷ்பங்களிற் பிரியமுடையவன், பந்துக்கள் பிரியமுள்ளவன், தருமசிந்தனையுள்ளவன், (7) வயதில், நோய், தீயாலும், (12) வயதில், வைசூரியாலும், (19) வயதிற் பகைவராலும், (28) வயதில் வேலாலும்

(48) வயதில், ஜலத்தாலும், கண்டமாம், சுபர்பார்வைபெற்றால், (85) வருஷம்வரை வாழ்ந்திருந்து, கார்த்திகைமாதம், அமரபட்சச் சஷ்டிதிதியும் விருத்திநாமயோகமும், ஞாயிற்றுக்கிழமையும் கூடியசுபதினத்தில், உதைய காலத்தில், மரணமாவன்—எ-று. 200

விருச்சிகம்.

நீங்கருந் தேளாம் லக்கின பலன்க
ணேசனுந் தந்தைதா யிடத்தில்
நித்தமாய் மனைவி யிடத்தினிற் பிரிய
னிரந்தர மினியசொற் பகர்வன்
பாங்குடன் றெடுத்த காரிய முடிப்பன்
பறவுநா லாண்டினிற் கழுத்தில்
பயிலுநோ யைந்திற் சுரங்களீ ரைந்திற்
பன்னிரண் டிற்பதி னெட்டில்
ஓங்குமக் கினியாற் பயமதா நாற்பா
னுறுசன்னி வாதமுஞ் சுரமும்
உத்தமர் சென்ம லக்கினங் காணி
னொருபது குறையநா றுண்டாம்
தீங்கறு மானி சுக்கில பக்ஷத்
துவாதசி யுஞ்சனிக் கிழமை
திகழ்விசா கத்தி லந்திவே ளையினிற்
றிண்ணமாய் வருநிரி யாணம்.

இ-ள். விருச்சிகலக்கினத்திற் பிறந்தவன், தாய்தகப்பனுக்குப் பிரியமுடையவன், மனைவியிடத்தில், நேசமுள்ளவன், இனிமையான வார்த்தை பேசுபவன், எடுத்தகாரியங்களைத் தொடுத்துமுடிப்பவன், (4) வயதிற் கழுத்து நோயாலும், (5) வயதிற் சுரபீடையாலும், (12) (18) வயதில், அக்கினியாலும், (40) வயதில், சன்னிவாத சுரத்தினாலுங் கண்டமாம், உத்தமக்கிரகங்கள், லக்கினத்தைப்பார்த்தால், (90) வயதிருந்து, ஆனிமாதம், சுக்கிலபக்ஷத்தில், துவாதசிதிதியும், சனிக்கிழமையும், விசாகநட்சத்திரமுங் கூடிய சுபதினத்தில், சாயரட்சை வேளையில், மரணமாவன்—எ-று. 201

தனுசு.

ஆணியெனுந் தனுசிலக் கினபலன்மூத் தானுக்
கண்ணுமிளை யோர்க்கஞ்சுவான் வண்மை புகழோன்
பேணியநற் போகவான் சத்துருவை யரிவன்
பெரியவித்தை யிளவயதிற் பெற்றிடுவ னிதியம்

நாணியலேச் சற்படுவ னடுவயதி லேதான்
நான்மூன்றிற் பதினைந்தி னுமெலட்டி னுற்பான்
காணுநேத் திரரோகஞ் சுபரெழுபத் தேழாம்
கருதிநிரி யாணந்தேட் கானபடி கண்டாய்.

இ-ள். தனுசுலக்கினத்திற் பிறந்தவன், மூத்தவனுக்கன்றி இளையவனுக்குப் பயப்படுபவன், பலம்பொருந்திய கீர்த்தியையுடையவன், போகமுள்ளவன், சத்துருவைச் செயிப்பவன், பெரியவித்தையுள்ளவன், சிறுவயதிற் செல்வமுள்ளவன், நடுவயதில், கஷ்டமடைவன், (12) (15)(32)(40) வயதுகளில், நேத்திர ரோகங்காணும், சுபர்பார்வைபெற்றால், (77) வயதிருந்து விருச்சிகலக்கினத்துக்குச் சொல்லியதுபோல், ஆனிமாதம், சுக்கிலபக்ஷத்தில், துவாதசியும், விசாகநட்சத்திரமுங், சனிக்கிழமையுங்கூடிய சுபதினத்தில் சாயங்காலவேளையில், மரணமாவன்—எ-று. 202

மகரம்.

கண்டசுறு லக்கினங்கா ணுவிடத்தின் மறுவாம்
கண்கணீன் டிருண்டிருக்குங் கமழ்புஷ்பப் பிரியன்
மண்டுதிர புத்தியபி மானிசுக சரீரன்
வருஞ்சிவந்த மெய்யுனடயன் மனையாளுக் கினியன்
மிண்டுபக்ஷி கொன்றிடுவன் மேவுமொரு பத்தில்
விளம்புசுர நாலெட்டில் விதேசமுப்பத் தேழில்
உண்டுசர்ப்ப பயஞ்சுபக்கோ ணோக்கதறு பத்தேழ்
உயர்பாரில் வந்திடுவ னெனவுரை செய்வாரே.

இ-ள். மகரலக்கினத்திற் பிறந்தவன், மறைந்த இடத்தில் மறுவுள்ளவன், நீண்ட கண்களையுடையவன், சந்தன புஷ்பங்களிற் சதாபிரியமுள்ளவன், திரபுத்தியுள்ளவன், அபிமானமுடையவன், சுகசரீரமுள்ளவன், சிவந்த தேகமுடையவன், மனைவிக்கினியன், பட்சிகளை ரட்சிக்காமல், அச்சணங்கொல்லுங் குணமுடையவன், (10) வயதில், சுரத்தாலும், (32) வயதில் அன்னியதேசப் பிரயாணத்தாலும், (37) வயதில் சர்ப்பத்தாலும் கண்டம், லக்கினத்தைச் சுபக்கிரகம் பார்த்தால், (67) வயதுவரையில் பூமியிலிருந்து—எ-று. 203

பூச மாதங் குறைபக்கப் பஞ்சமி
ஆசினுத்திரட் டாதிய ருக்கனுள்
வீசுகாளையின் மென்கொன்றை சூடிய
தேசிகன்னடி சேர்வது திண்ணமே.

இ-ள். தைமாதத்தில், அமரபக்கப் பஞ்சமிதிதியும், உத்திரட்டாதி நட்சத்திரமும், ஞாயிற்றுக்கிழமையுங்கூடிய சுபதினத்தில், காலைநேரத்தில் கொன்றைமாலைசூடிய பரமன்பத மடைகுவன்—எ-று. 204

கும்பம்.

பரிந்தகும்ப லக்கினத்தான் றன்னையே புகழ்வன்
பழிப்பன்மற் றோர்தம்மைக் குள்ளனற்ப வித்தை
தெரிந்தபித்த சரீரவான் செய்ந்நன்றி மறப்பன்
செங்கண்ணன் சுகமுள்ளான் ஸ்திரீகளுக்கு நண்பன்
பொருந்துபதி னோராண்டிற் சுரமாம்பத் தொன்பான்
புரிந்தசன்னி வாதசுரம் புண்ணியபார்த் திடினே
திருந்துவய தெண்பதுசித் திரையைந்தாந் திதியில்
திகழ்செங்கை பொன்வாரத் தந்தியிலந் தியமே.

இ-ள். கும்பலக்கினத்திற் பிறந்தவன், தன்னையேபுகழ்வன், மற்றோரை நிந்திப்பவன், குட்டையன், அற்பவித்தையுள்ளவன், பித்தசரீரன், நன்றிமறப்பவன், சிவந்தகண்ணுள்ளவன், சுகமுள்ளவன், ஸ்திரீகளுக்கு நண்பன், (11) வயதில், சுரநோயாலும், (19) வயதில், சன்னிநோயாலும், வாதசுரத்தாலும் கண்டமாம், சுபக்கிரகங்கள் பார்த்தால், (80) வமதிருந்து சித்திரைமாதம், பஞ்சமிதிதியும், திருவாதிரை நட்சத்திரமும், வியாழக்கிழமையும், பொருந்தியநாளில், சாயரட்சை, அந்திநேரத்தில், மரணமாகுவன்.

மீனம்.

அந்தமுறு மீனலக் கினந்தனவான் சூரன்
அழகியமெய் யன்ஞானிய கோரியிரு தாரன்
கந்தமலர்ப் பிரியன்றண் கண்கிருபை யாளன்
காதுநோய் பிறருடைமைக் காசிப்பன் கண்டே
முந்துசமை யத்தன்பல் லூணருந்து மூர்க்கன்
முந்நான்கி லிருபதினின் மூளுமிகச் சுரமே
நொந்திரும லெழுநான்கிற் சுபக்கோணோக் கிடினே
நூறுண்டு நிரியாண நுவல்கும்பத் தடைவே.

இ-ள். மீனலக்கினத்திற் பிறந்தவன், சூரத்துவமுள்ளவன், அழகிய தேகன், ஞானி, அகோரன், இரண்டு மனைவியுள்ளவன், வாசனைமலர்களிற் பிரியமுடையவன், குளிர்ச்சிபொருந்திய கண்ணுங் கிருபையுமுடையவன், காதுநோயன், பிறர்பொருளை விரும்புபவன், காரியாகாரியங்களில் சபையங் கண்டு முந்துபவன், பலவுணவு, உண்பதிற்பிரியமுள்ளவன், மூர்க்கன், (12) வயதில், (20) வயதில் சுரகண்டமும், (28) வயதில், இருமல்நோயால், கண்டமுமாம், சுபக்கோள் பார்த்தால் (100) வருஷம்வரை ஜீவித்திருந்து கும்ப லக்கினத்திற்குச் சொல்லியபடி, சித்திரைமாசம், பஞ்சமிதிதி திருவாதிரை

நட்சத்திரம், வியாழக்கிழமைபொருந்திய, நாளில், அந்திவேளையில், மரண மடைகுவன்—எ-று. 206

இவ்விலக்கினபலன் சொல்லியதில் சுபக்கிரகங்கள் பார்வையுற்றால், கண்டங்கள் விலகி, தீர்க்கவயதிருப்பன், என்றமையால், பாவர்கள் பார்வை யுறில், அதிற்சொல்லிய கண்டங்களில் நிரியாணஞ் சம்பவிக்குமெனவறிக.

இலக்கின பலன்

சம்பூர்ணம்.

இலக்கினத்திற் கிரகங்கள் நின்ற பலன்.

சூரியன், சந்திரன், லக்கினத்தில் நின்றபலன்.

வேறு.

லக்கினத் திரவி நிற்கி னுடிய சிவப்ப னுவன்
தொக்கவே நீண்ட மெய்ய னுடன்பித்த ரோக வானும்
மிக்கவே சசிக்கி ளைத்த மெய்யன்மூச் சதிகன் றாயன்
தக்கனல் வசனன் புத்தி தகுவன்பாக் கியவா னுவன்.

இ-ள். சென்மலக்கினத்திற் செங்கதிரோனிருந்தால், சிவப்பன், உயர்ந்தவன், பித்தரோகியுமாவன், சந்திரனிருந்தால், மெலிந்ததேகமும், மூச்சதிகமுள்ளவனும், பரிசுத்தவானும், நல்லவார்த்தை பேசுபவனும், புத்திமானும் செல்வமுள்ளவனுமாவன்—ஏ-று. 207

செவ்வாய் லக்கினத்தில் நின்ற பலன்.

குசனுறிற் பித்ததேகன் கூறுமுன் கோபி நல்ல
வசனமுஞ் சிட்ட னுவன் வாயீச்சற் கொட்ட லொத்த
வசனநல் லுதரந் தூல மாகுமெய் யிளைத்தி ருப்பன்
இசையெவ ரையும் நகைப்ப னிதயசஞ் சலனு வானே.

இ-ள். லக்கினத்திற் செவ்வாய் நின்றால், பித்ததேகி, முற்கோபி, செட்டான சொல்லுடையவன், வாயில் எச்சில் சிதறும்படியாக வார்த்தை பேசுபவன், வயிறுபருத்தவன், தேகமிளைத்தவன், எவரையும்பார்த்துச் சிரிப்பவன், சஞ்சலமனதுடையவனுமாவன்—எ-று. 208

புதன், வியாழன், லக்கினத்தில் நின்ற பலன்.

பண்புடன் புந்திநிற்கப் பரியாச வசனஞ் சொல்வன்
நண்புடன் பிரியவாக்கி நாடியே ரோக மெய்யன்

விண்குரு தூல தேகி மெய்யிற்சேத் துமரோ கத்தன்
கண்டலை மயிர்மே னோக்குங் காட்சியன் சிவப்பு மெய்யன்.

இ-ள். லக்கினத்திற் புதனிருந்தால், பரிகாசஞ்செய்பவன், பிரியமாய்ப் பேசுபவன், ரோகவானுமாவன், குருவிருந்தால், தூலதேகி, சிலேத்தும ரோகமுடையவன், கண்ணும், உரோமமும், மேல்நோக்கியுள்ளவன் சிவந்த தேகமுள்ளவனுமாவன்—எ-று. 209

சுக்கிரன், சனி, லக்கினத்தில் நின்ற பலன்.

சுக்கிரன் நிற்கிற் காந்தி சரீரவான் சுகவான் பித்தம்
பொக்கவே வாத ரோகி யுறுமயிர்க் கருஞ்சு ருட்டை
மிக்கதோர் சனிக்கு நீண்டு மெலிந்திடு மெய்யன் கையைத்
தக்கவீச் சிடுவ னீலக் கண்ணன்றள் ளாடி யாமே.

இ-று. லக்கினத்தில், சுக்கிரன்நின்றால், பிரகாசிக்குஞ் சரீரமுடையவன் சுகமுடையவன் பித்தவாதங் கலந்தரோகமுள்ளவன், உரோமம், கறுப்புற்றுச் சுருண்டிருப்பவனுமாவன், சனிநின்றால், உயர்ந்து நீண்டு மெலிந்த தேகமுடையவன், கையை வீசிநடப்பவன், நீலம்பொருந்திய கண்ணையுடையவன், தள்ளாடி நடப்பவனுமாவன்—எ-று. 210

சந்திர லக்கின பலன்.

வேறு.

சந்திரலக் கினபலன்க ளானுணருங் காலைச்
சந்திரன்மெய்ப் பலனறியுந் தகைமைதனைக் கேளீர்:
எந்தநா ளினுஞ்தசிபெண் கலைநிறைந்தா லாணும்
எழினிறைந்த மதிபார்க்க விருப்பவர்தம் மிடத்தில்
வந்தகுற்றந் தீருமவை யெப்படியோ வென்னில்
மனுநீதியரசனுந்தன் மாநிலத்துற் றவரைச்
சிந்தைமகிழ்ந் தருள்புரியும் வாறுபோல் வந்த
தீதகலுங் கொற்றந்திப் பார்வைசிறந் தார்க்கே.

இ-ள். சந்திரலக்கினத்தைக்கொண்டு பலாபலன், அறியவிரும்பினால் சந்திரனுடைய, உண்மையானபலனை, அறியக்கூடிய விதமெப்படியெனிற் கேட்பாயாக, எக்காலத்தும் சந்திரன், பெண்கிரகமேயாம், ஆனால் கலை நிறைந்தவிடத்து, ஆண்கிரகமாம், இப்படி ஆண்தன்மைபெற்ற, கலைநிறைந்த சந்திரன் லக்கினத்தைப்பார்த்தால் மனுநெறிதவராத மன்னவன்தன் ஆளுகையின் கீழுள்ளவர்களை, அகமகிழ்ந்து காப்பதுபோல, ஜாதகனுக்கு வந்த குற்றங்கள்நீங்கிச் சுகமடைவான் என்பதாம்—எ-று. 210

உள்ளபடி கலைகுறைந்த மதியேயா னாலும்
ஒன்னார்வீட் டினும்வியமெட் டெனாரு மிடத்தும்
மெள்ளெனநின் றிடிற்பொன்கேந் திரத்தினிலுற் றாலும்
வெண்மதிகுற் றந்தீரும் அஃதெவ்வா றென்னின்
கள்ளவிழும் பசுங்கொன்றைப் பரன்றன்னன் பர்க்குக்
கனபாவந் தவிர்த்தின்பங் காட்டுதல்போ லாகும்
தெள்ளியநல் லோர்பார்வை பெற்றசசி குற்றம்
தினகரனைக் கண்டபனி போற்றீரு மென்னே.

இ-ள். உண்டானஅளவு, தேய்பிறைச் சந்திரனாயிருந்தாலும், பகை க்ஷேத்திரம் பெற்றாலும், (6) (8) (12) ஆமிடத்து நின்றாலும், வியாழன் கேந்திரம்பெற்றால், தேனொழுகப்பெற்ற கொன்றைமலர்தரித்த, பரமசிவ மூர்த்தியானவர் தன்னைவந்தடைந்த அன்பர்களுக்குப் பாவங்களைத் தவிர்த்துச் சுகங்காட்டுதல்போலும்- மற்றசுபக்கிரகங்கள் பார்த்தால், சூரியனைக் கண்ட பனியைப்போலும், சந்திரன்குற்றங்கள் நீங்கிச் சுகமுள்ளவனாவன் என்பதாம்—எ-று. 212

தீர்ந்துகுற்ற மில்லாத மதியுளதாய்ப் பிறந்தோன்
சீவனுடன் வாழ்ந்திருக்கச் செய்குவனென் னென்னில்
நேர்ந்தவிடை மாதின்பக் கொழுநன்மேல் வாஞ்சை
நிறைதல்போற் குழவிமே னேசமதிக் குண்டே
கூர்ந்துகலை நிறைந்தமதி மேடத்தி னிற்கில்
குற்றமிலா ரம்மதியைக் கூசாமற் பார்க்கின்
ஆர்ந்தசிறு வன்றனக்கே யாறெட்டாண் டென்றே
யறைவர்சோ திடத்துண்மை யறிந்தபெரி யோரே.

இ-ள், குற்றமில்லாத வளர்பிறைச்சந்திரனாயிருக்கப் பிறந்தவனை, ஜீவனோடு வாழ்ந்திருக்கும்படியாய் (நூலிடைபோன்ற நுண்ணிடையுள்ள பெண்ணானவள், தனக்கு இன்பந்தரக்கூடிய நாயகன்மேல் ஆசைநிறைதல் போல) ஜாதகன்மேல், சந்திரனுக்கு[illegible]சமுண்டாகுமாம், பூரணச்சந்திரன் மேடவிராசியில் நின்று, அந்தச்சந்திரனைச் சுபர்கள்பார்க்க, அச்சாதகனுக்கு (48) வயதுவரை ஜீவித்திருப்பானென்று சோதிடசாஸ்திரங்களின் உண்மையறிந்த பெரியோர்கள் சொல்லுவார்கள்—எ-று. 213

சந்திரலக்கினம் பார்க்கும் வகை.

வேறு.

சந்திர னிருந்த வீடு சந்திரா லக்ன மென்பர்
அந்தமான் சில்லோர் சென்ற கன்னலை யிராசி யொன்றில்

குந்தியே யைந்தைந் தாகக் கொடுத்துவந் திட்ட பேற்றை
முந்திய மேட மாதி யெண்ணியே மொழிவர் சில்லோர்.

இ-ள், சந்திரன், எந்தராசியில் நிற்கின்றனோ, அந்தராசியைச் சந்திர லக்கினமென்று சொல்லுவார்கள், சிலபேர், ஜாதகன் பிறக்கும்போது, எத்தனை நாழிகையாகிறதோ அந்தநாழிகையை ஐந்தைந்து நாழிகையாய்க் கழிக்க மேடமுதல் எந்தராசி யொட்டுகிறதோ, அதே சந்திரலக்கினமென்று சிலபேர் கூறுவர்—எ-று.

இலக்கினத்திற் கிரகங்கள் நின்றபலன்
சம்பூர்ணம்.

கரணபலன்.

பவகரணம்.

அஞ்சிடான் சுகவான் மெத்த வரசரா லாக்க முள்ளான்
துஞ்சிடா நவகோள் பார்க்குந் துறையினிற் பிரிய னுவன்
எஞ்சிடா மிடியன் புத்தி யாளனு மெழிலு லோனும்
பஞ்சுபோன் மயிரு முள்ளான் பவகர ணத்தி னுனே.

இ-ள். பவகரணத்திற் பிறந்தவன், பயப்படாதவன், சுகவான், தேசராஜரால் செல்வமுடையவன், சோதிடம்பார்ப்பதிற் பிரியமுள்ளவன், தரித்திரன், புத்திசாலி, அழகுள்ளவன், மிருதுவான. உரோமமுடையவனுமாவன்—எ-று. 215

பாலவ கரணம்.

இந்திர கோப முள்ளா னிருந்தன முடைய னுவன்
சுந்தர முடைய னுவன் றொழின்மிகு மற்ப முள்ளான்
சந்ததந் தியாகி மோகி தாழ்விலாக் குணவா னுகும்
பந்துமேற் பிரிய னுவான் பாலவ கரணத் தானே.

இ-ள். தேவேந்திரனைப்போல போகமுள்ளவன், பெருஞ்செல்வமுடையவன், அழகுள்ளவன், அற்பத்தொழிலுள்ளவன், தியாகமிடுபவன், மோகமுள்ளவன், நற்குணம்பொருந்தியவன், பந்துக்கள்மேற் பிரியமுள்ளவனுமாவன்—எ-று. 216

கௌலவா கரணம்.

அரசராற் பிரிய னுவ னுசார முடைய னுவன்
விரைசெறி யன்னை தந்தை மேல்விருப் புடைய னுவன்

தரைமிகத் தேட வல்லன் சாலதாஷ் டீக ளுகும்
கரிபரி யுடைய ளுவன் கவுலவ கரணத் தானே.

இ-ள். கௌலவாகரணத்திற் பிறந்தவன், அரசராற் பிரியமுள்ளவன், ஆசாரமுள்ளவன்தாய்தகப்பன்மேல் ஆசையுள்ளவன், பூமிசம்பாதிப்பவன், மிகுந்த தாஷ்டீகமுள்ளவன், யானை குதிரைகளையுடையவனுமாவன்-எ-று.

தைதுலவா கரணம்.

திடமிகு மிராச சேவை யுள்ளவன் செல்வ முள்ளான்
விடமிகு வேசை மீதில் வெகுசிந்தை யுடைய ளுவன்
அடன்மிகு விழியி ளுளே யறமிலான் கடிய ளுவன்
தடமெனுஞ் சுகவா ளுகுந் தைதுலே கரணத் தானே.

இ-ள். வெற்றிபொருந்திய வேல்போன்ற கண்ணையுடையபெண்ணே, தைதுலேகரணத்திற் பிறந்தவன், இராஜசேவை செய்பவன், செல்வமுள்ளவன் வேசைமேற் பிரியமுடையவன், தருமசிந்தையில்லாதவன், மனவன்மை யுடையவன், சுகவானுமாவன்—எ-று. 218

கரசவா கரணம்.

தீர்க்கமாம் வேசை மீதிற் சிந்தைதா னுடைய ளுவன்
பார்த்திப ராலே மெத்தப் பாக்கிய முடைய ளுவன்
கார்க்குழ லாயொன் ளுரைக் கலக்கிடும் வீர முள்ளான்
கார்த்தரு மீகை யாளன் கரசவா கரணத் தானே.

இ-ள். மேகம்போன்ற மெல்லிய கூந்தலுடைய பெண்ணே, கரசவா கரணத்திற் பிறந்தவன், வேசைமேலாசையுள்ளவன், வேந்தராற் பாக்கிய முள்ளவன், வெற்றிகொள்ளவரும் சத்துருக்களைச் சொற்றிறமையாலும், நற்றிறமையாலும் ஜெயிப்பவன், ஈகையுள்ளவனுமாவன்—எ-று. 219

வணிசவா கரணம்.

உக்கிர குணத்த ளுகு முற்றவர்க் கொன்று மீயான்
இக்கென வார்த்தை சொல்வ னேந்திழை யார்கண் மீதின்
மிக்கநன் மோக வானும் விளம்புவன் கட்டு வார்த்தை
வக்கிரன் பங்க முள்ளான் வணிகர ணத்தி ளுனே.

இ-ள். வணிசவாகரணத்திற் பிறந்தவன், உக்கிரகுணமுள்ளவன், ஈகையில்லாதவன், இனிமையாய்ப் பேசுகிறவன், பெண்கள்மீது எண்ணிலா மோகன், கட்டுவார்த்தை வெகுதிட்டமாயுரைப்பன், கொடுமையுள்ளவன், குற்றமுள்ளவனுமாவன்—எ-று. 220

பத்திரவா கரணம்.

திர்மிகு பாவி பொல்லான் சீர்கேடன் றீய செய்வன்
தரமறு புருஷ வீனன் சலிப்புளான் றிரமை யில்லான்
உரமிகு மழகன் வார்த்தை யுசிதமா யுரைப்ப னல்ல
விரைசெறி குழலி ளுளே மிகுபத்திர கரணத் தானே.

இ-ள். வாசனையுள்ள மலர்மாலையணிந்த கூந்தலுடைய பெண்ணே, பத்திரவாகரணத்திற் பிறந்தவன், சிறப்பில்லாதவன், கெட்டசெய்கையுடையவன், திறமைக்குறையுள்ளவன், சஞ்சலமனதுடையவன், வல்லபமில்லாதவன், நெஞ்சழகுள்ளவன், சமையோசிதமாய்ப் பேசுபவனுமாவன்—எ-று.

சகுனி கரணம்.

கனமிக வுடைய னுவன் கருதிய வடிவ முள்ளான்
தனமிக வுடைய னுவன் றனிய முடைய னுவன்
அனநடை மாதே கேளா யறிவுளன் கல்வி மானும்
சனமிக வுடைய னுவன் சகுனியாங் கரணத் தானே.

இ-ள். அன்னம்போன்ற நடையையுடைய மின்னரசே கேட்பாயாக, சகுனிவாகரணத்திற் பிறந்தவன், பெருமையையுடையவன், ரூபவான், செல்வவான், கல்விமான், தானியமுள்ளவன், அறிவுள்ளவன், பந்துக்களுடையவனுமாவன்—எ-று. 222

சதுஷ்பாத கரணம்.

வார்த்தையோ நிலைமை யில்லான் வருமையுள் ளவனே யாவன்
தீர்க்கமாய் வேசை மீது சிந்தையுள் ளவனே யாவன்
தூர்த்தனுங் கோப வானுந் தூர்ச்சன னுவான் றத்துவ
சாத்திரப் பிரிய னுவன் சதுஷ்பாத கரணத் தானே.

இ-ள். சதுஷ்பாத கரணத்திற் பிறந்தவன், உறுதிமொழியில்லாதவன், தரித்திரன், வேசைமீது அதிகப்பிரியமுள்ளவன், தூர்ச்சனன், கோபவான், அவதூறுள்ளவன், தத்துவசாஸ்திரப் பிரியமுள்ளவனுமாவன்—எ-று. 223

நாகவ கரணம்.

அல்லல்சே ரங்க முள்ளா னற்பவான் கோப முள்ளான்
நல்லமா னியுமே யுள்ளா னுரிமேற் பிரிய னுவன்
மல்லல்சேர் குழலி னுளே மருளுற்ற குணமே யுள்ளான்
நல்லதோர் புசிப்பு முள்ளா னுகவ கரணத் தானே.

இ-ள். இருள்போன்ற கரிய கூந்தலையுடைய பெண்ணே, நாகவகரணத்திற் பிறந்தவன், அற்பப்புத்தியுள்ளவன், கோபமுள்ளவன், பெருமையுடையவன், பெண்கள்மேற்பிரியமுடையவன், மருண்டகுணமுடையவன், நன்மையான ஆகாரம் புசிப்பவனுமாவன்—எ-று. 224

கிமஸ்துக்கின கரணம்.

கலகவான் கடிய மோகி கருதுதாய் தந்தை மூத்தோர்
இலகிய வேசை மீது மின்பமுற் றிடுவ னென்ப
உலகிய லறிவான் யோகி யுயர்வுளா னுகு நல்ல
சிலைநுதன் மாதே கீட கரணத்தா னென்று செப்பே.

இ-ள். வில்லைப்போன்ற மெல்லிய நெற்றியையுடைய பெண்ணே, கிமஸ்துக்கினகரணத்திற் பிறந்தவன், கலகப்பிரியன், கன்னியர்மோகன், தாய்தந்தை தமையன், வேசையர் (ஆகிய இவர்கள்)மேற் பிரியமுள்ளவன், உலகவியல்பறிந்தவன், யோகமுள்ளவன், உயர்ந்ததேகமுள்ளவனுமாவன்.

முக்குணவேளை.

நாழிகை.	ஞாயிறு புதன்	திங்கள் வியாழன்	செவ்வாய் வெள்ளி	நாழிகை.	சனி
௩ஜ	தாமதம்	சாத்வீகம்	ராசதம்	௪	தாமதம்
௭இ	சாத்வீகம்	ராசதம்	தாமதம்	௮	சாத்வீகம்
௧௧வ	ராசதம்	தாமதம்	சாத்வீகம்	௧௨	ராசதம்
௧௫	தாமதம்	சாத்வீகம்	ராசதம்	௧௬	தாமதம்
௧௮ஜ	சாத்வீகம்	ராசதம்	தாமதம்	௨0	சாத்வீகம்
௨௨இ	ராசதம்	தாமதம்	சாத்வீகம்	௨௪	ராசதம்
௨௬வ	தாமதம்	சாத்வீகம்	ராசதம்	௨௮	தாமதம்
௩0	சாத்வீகம்	ராசதம்	தாமதம்	௩௨	சாத்வீகம்
௩௩ஜ	ராசதம்	தாமதம்	சாத்வீகம்	௩௬	ராசதம்
௩௭இ	தாமதம்	சாத்வீகம்	ராசதம்	௪0	தாமதம்
௪௧வ	சாத்வீகம்	ராசதம்	தாமதம்	௪௪	சாத்வீகம்
௪௫	ராசதம்	தாமதம்	சாத்வீகம்	௪௮	ராசதம்
௪௮ஜ	தாமதம்	சாத்வீகம்	ராசதம்	௫௨	தாமதம்
௫௨இ	சாத்வீகம்	ராசதம்	தாமதம்	௫௬	சாத்வீகம்
௫௬வ	ராசதம்	தாமதம்	சாத்வீகம்	௬0	ராசதம்
௬0	தாமதம்	சாத்வீகம்	ராசதம்		

முக்குணவேளை யறிய.

வேளைக ளறியத் திங்கள் வியாழஞ்சாத் விக மாகும்
நீளஞ்சுக் கிரன்செவ் வாய்க்கு நீண்டிரா சதமே யாகும்
வாளைநேர் கண்ணாய் புந்தி மந்தன்செங் கதிர்வா ரத்தின்
நாளுந்தா மதமாங் காலை நாழிகை நான்க தாமே.

இ-ள். திங்கள் வியாழன், சாத்வீகமும், வெள்ளி, செவ்வாய், ராசதமும், புதன், சனி, ஞாயிறு, தாமதமுமாக, ஒவ்வொருவாரத்திலும், ஒவ்வொரு முகூர்த்தநேரம்வரை, மாறிமாறி வருமென்றறிய—எ-று. 226

முகூர்த்தகாலமென்பது சனிவாரமட்டும் நாலுநாழிகை, மற்ற ஆறு வாரத்திற்கும் மூன்றேமுக்கால் நாழிகையாகு மெனக்கொள்க.

சாத்வீக வேளையின் குணம்.

பரவுசாத் திகவே ளைக்குப் பளிங்கொளி நிறமு முள்ளான்
விரவுநல் லறிவு பத்தி விதரண ஞான முள்ளான்
குரவர்மேற் பத்தி யுள்ளான் கொடுமைசேர் துன்ப மில்லான்
வரவுறு மின்ப மெல்லாம் வருமவன் றனக்கு மாதே.

இ-ள். பெண்மணிக்குள் நன்மணியாகிய கண்மணியே கேட்பாயாக, சாற்றுதற்கரிய சாத்வீகவேளையிற் பிறந்தவன், பளிங்குபோன்ற நிறமுள்ளவன், நல்லறிவு, பக்தியுள்ளவன், பகுத்தறியும் ஞானமுள்ளவன், ஆசிரியர் மேற் பக்தியுள்ளவன் கடுமையாகிய துக்கமில்லாதவன், தகுந்த இன்பமனுபவிப்பவனுமாவன்—எ-று. 227

இராசத வேளையின் குணம்.

அன்பிரா சதவே ளைக்கே சனித்தவ னறிவு முள்ளான்
இன்பத்தி லாசை பற்று மியலுநல் லுரைகற் பாளன்
பொன்புவி கலைக ளிந்தப் புவிக்குப கார முள்ளான்
துன்பமற் றரசாய் நீதி செலுத்துவான் சுகமு முள்ளான்.

இ-ள். அன்புபொருந்திய இராசதவேளையிற் பிறந்தவன், அறிவுள்ளவன், இன்பத்திலாசையுள்ளவன், இனிமையாய்ப்பேசுபவன், செல்வம்பூமி, சாஸ்திரமுள்ளவன், பூமியிலுள்ளவர்களுக்கு, உபகாரமுள்ளவன், ராஜன், நீதிசெலுத்தியவன், சுகமுள்ளவனுமாவன்—எ-று. 228

தாமிதவேளையின் குணம்.

வலியதா மதவேளை க்குள் வந்துசன் மித்தோன் செய்கை [ன்
பொலியநித் திரையெப் போதும் புரிந்துளான் பொய்யே சொல்வ

நலியவே மயக்கஞ் சோம்பு நண்ணிடு மந்த னுவான்
பலகலை யறிவு மில்லான் பாவசிந் தையனே யாவன்.

இ-ள். தாமதவேளையிற் பிறந்தவன், எக்காலத்தும், நித்திரைசெய்து கொண்டிருப்பவன், பொய்பேசுபவன், மயக்கம்போல சோம்பேரியாவன், மந்தகுணமுள்ளவன், பாவம்பொருந்திய மனமுள்ளவனுமாவன்—எ-று.

சாத்வீகத்திற் சாத்வீகம்.

இருந்துசாத் வீகந் தன்னிற் சாத்வீகந் துறவு சாந்தி
வருந்திடா வகையுற் சாகி மற்றதில் ராச தந்தான்
திருந்திய தான சிந்தை சிறந்திடுஞ் சாந்த முள்ளான்
பொருந்திய தாம தந்தான் போதவே மந்த னுவான்

இ-ள். சாத்வீகத்திற் சாத்வீகவேளையிற் பிறந்தவன், துறவியும், சாந்தனும் உற்சாகமுள்ளவனுமாம், சாத்வீகத்தில், ராசதவேளையிற் பிறந்தவன், தருமசிந்தையும், சாந்தகுணமுள்ளவன் சாத்வீகத்தில் தாமதவேளையிற் பிறந்தவன் மந்தனுவன்—எ-று. 230

ராசதத்தில் ராசதம்.

தக்கரா சதத்தில் ராச தம்பெறிற் றரும ராகும்
ஒக்கவே யதனிற் றமை தம்பெறி லிகழ்ச்சியுள்ளான்
திக்கெனப் பாவஞ் செய்யுஞ் சிந்தைய னுவன் கண்டீர்
மிக்கசாத் வீக மாயின் மெஞ்ஞானி யிரக்க வானும்.

இ-ள். ராசதத்தில் ராசதவேளையிற் பிறந்தவன், தருமவான், ராசதத்தில், தாமதவேளையிற் பிறந்தவன், இகழ்ச்சியுடையவனும், பாவியுமாவன், ராசதத்தில் சாத்வீகவேளையிற் பிறந்தவன், மெஞ்ஞானியும், இரக்கமுள்ளவனுமாவன்—எ-று. 231

தாமதத்தில் தாமதம்.

ஈறுதா மதத்திற் றமை தம்பய மிகழ்ச்சி பாவம்
கூறுநித் திரைம யக்கங் குறித்ததி லாசை யுள்ளான்
வேறுரா சதங்க ளிப்பு வெகுளியுண் ணுத லுண்டல்
சீரிலாச் சாத்து வீகஞ் செவ்விபோய் வருத்தஞ் செய்யும்.

இ-ள். தாமதத்தில், தாமதவேளையிற்பிறந்தவன், பயம், இகழ்ச்சி, பாவம், நித்திரை, மயக்கம், நினைத்ததில் ஆசை (ஆகிய இவைக) ளுள்ளவனும், தாமதத்தில், ராசதவேளையிற்பிறந்தவன், சந்தோஷம், கோபம், உண்ணுதலுண்ணல் (ஆகிய இவைக) ளுள்ளவனும், தாமதத்தில் சாத்வீகவேளையிற் பிறந்தவன், வருத்தமுள்ளவனுவன்—எ-று. 232

முக்குணவேளையறிவது
சம்பூர்ணம்.

காலவோரை அறியும்படி.

நாழிகை	ஞாயிறு	திங்கள்	செவ்	புதன்	வியா	வெள்	சனி
௨½	சூரியன்	சந்திர	குஜன்	புதன்	குரு	சுக்கிர	சனி
௫	சுக்கிர	சனி	சூரியன்	சந்திர	குஜன்	புதன்	குரு
௭½	புதன்	குரு	சுக்கிர	சனி	சூரியன்	சந்திர	குஜன்
௧0	சந்திர	குஜன்	புதன்	குரு	சுக்கிர	சனி	சூரிய
௧௨½	சனி	சூரிய	சந்திர	குஜன்	புதன்	குரு	சுக்கிர
௧௫	குரு	சுக்கிர	சனி	சூரியன்	சந்திர	குஜன்	புதன்
௧௭½	குஜன்	புதன்	குரு	சுக்கிர	சனி	சூரியன்	சந்திர
௨0	சூரியன்	சந்திர	குஜன்	புதன்	குரு	சுக்கிர	சனி
௨௨½	சுக்கிர	சனி	சூரியன்	சந்திர	குஜன்	புதன்	குரு
௨௫	புதன்	குரு	சுக்கிர	சனி	சூரியன்	சந்திர	குஜன்
௨௭½	சந்திர	குஜன்	புதன்	குரு	சுக்கிர	சனி	சூரிய
௩0	சனி	சூரிய	சந்திர	குஜன்	புதன்	குரு	சுக்கிர
௩௨½	குரு	சுக்கிர	சனி	சூரியன்	சந்திர	குஜன்	புதன்
௩௫	குஜன்	புதன்	குரு	சுக்கிர	சனி	சூரியன்	சந்திர
௩௭½	சூரியன்	சந்திர	குஜன்	புதன்	குரு	சுக்கிர	சனி
௪0	சுக்கிர	சனி	சூரிய	சந்திர	குஜன்	புதன்	குரு
௪௨½	புதன்	குரு	சுக்கிர	சனி	சூரியன்	சந்திர	குஜன்
௪௫	சந்திர	குஜன்	புதன்	குரு	சுக்கிர	சனி	சூரியன்
௪௭½	சனி	சூரிய	சந்திர	குஜன்	புதன்	குரு	சுக்கிர
௫0	குரு	சுக்கிர	சனி	சூரிய	சந்திர	குஜன்	புதன்
௫௨½	குஜன்	புதன்	குரு	சுக்கிர	சனி	சூரிய	சந்திர
௫௫	சூரிய	சந்திர	குஜன்	புதன்	குரு	சுக்கிர	சனி
௫௭½	சுக்கிர	சனி	சூரிய	சந்தி	குஜன்	புதன்	குரு
௬0	புதன்	குரு	சுக்கிர	சனி	சூரியன்	சந்திர	குஜன்

காலவோரை.

அருக்கன் புகர்புந்தி யிந்துதுன் மந்தனோ டந்தணன் சேய்
இருக்குங் கடிகை யிரண்டரையா மிந்த வோரை களில்
மரிக்கு மணஞ்செயு மக்களைப் பெற்று மகிழ்ந்திருக்கும் [ளே
சிரிக்குஞ் சிறைப்படுஞ் செல்வமும் போரேனத் தேர்ந்துகொள்

இ-ள், தற்கால ஓரையென்பது, சூரியன், சுக்கிரன், புதன், சந்திரன், சனி, வியாழன், செவ்வாய், இவர்களின்வாரங்களில், அந்தந்த வாராதிபன்

முதல்மேற்சொன்ன வரிசைப்படி, (2இ) நாழிகையாக ஒவ்வொருவரும் நடத்துகிற பலனுவது, மரணம், விவாகம், பிள்ளைப்பெற்று மகிழ்தல், சிரித்தல், சிறைப்படல், செல்வமுண்டாதல், போர்புரிதல், ஆகிய பலன்களை, வரிசைக்கிரமமாய்க் கொடுப்பார்கள் என அறிந்துகொள்க—எ-று. 233

காலவோரையின் பலன்.

அருக்கன்	சூரியன்	மரிக்கும்
புகர்	சுக்கிரன்	மணஞ்செய்யும்
புந்தி	புதன்	மக்களைப்பெற்றுமகிழும்
இந்து	சந்திரன்	சிரிக்கும்
மந்தன்	சனி	சிறைப்படும்
அந்தணன்	வியாழன்	செல்வமுண்டாகும்
சேய்	செவ்வாய்	போர்புரியும்

கா ல வோ ரை

சம்பூர்ணம்.

திதித்தியாச்சியம்.

வேறு.

செப்புதிதித் தியாச்சியத்தின் வகையுரைக்கக் கேணீ
திகழுகின்ற பிரதமைக்கே நாலாற தாகும்
ஒப்பரிய துதியைக்கீ ராறுதிரி திகைக்கே
உயரைம்ப துடனைந்தா மோதிடுபஞ் சமிக்கும்
தப்பறுசட் டிக்குமைம்பா னுடனே நான்காம்
தக்கசதுர்த் திக்குநவ மிக்குதகு மைந்தாம்
முப்பானே டொன்றென்றே மொழிந்திடுசத் தமிக்கே
உன்னுமண வட்டமிக்கே நாலைந்தா யுரைப்பர்.

இ-ள். சொல்லக்கூடிய திதிகளின் விஷநாழிகைகளைக் கூறுமிடத்து, பிரதமைக்கு (24) துதியைக்கு, (12) திரிதிகைக்கு (55) சதுர்த்திக்கு (5) பஞ்சமிக்கு (54) சஷ்டிக்கு, (54) சப்தமிக்கு (31) அஷ்டமிக்கு, (20) நவமிக்கு, (5) உரைத்திடுவர்—எ-று. 234

உரைத்திடுவர் தசமிக்கு முப்பதுடன் மூன்று
மொன்றுமே காதசிக்கே யோதுதுவா தசிக்கே

விரைக்குழலா யொருபதோ டைந்தாகு மேழாம்
மேவுசதுர்த் தசிக்காகும் விளம்பிருபத் தாறும்
திருத்ததிர யோதசிக்கே யிருபானே டொன்பான்
திகழ்கின்ற பூரணைக்காஞ் செப்பிடுமோ ராறே
புரைத்தவிரு ளூற்றிடுமோ ரமாவாசைக் கென்றே
புகலுவர்நாற் கடிகைவிட மெனப்புலவர் புகழ்ந்தே.

இ-ள், தசமிக்கு, (33) ஏகாதசிக்கு, (15) துவாதசிக்கு (15) திரயோதசிக்கு, (26) சதுர்த்தசிக்கு, (7) பௌர்ணமிக்கு, (29) இருள்நிறைந்த அமாவாசைக்கு, (6) (ஆகிய இந்த) பக்கங்களுக்குச்சொன்ன தொகையுள்ள நாழிகைக்குமேல் (4) நாழிகைவரை விஷகடிகைகளாம்—எ-று. 235

திதிச்சியாச்சியம்.

பிரதமை	....	24	நவமி	....	5
துதியை	....	12	தசமி	....	33
திரிதிகை	....	55	ஏகாதசி	....	15
சதுர்த்தி	....	5	துவாதசி	....	15
பஞ்சமி	....	54	திரயோதசி	....	26
சஷ்டி	....	54	சதுர்த்தசி	....	7
சப்தமி	....	31	பௌர்ணமி	....	29
அஷ்டமி	....	20	அமாவாசை	....	6

இந்த நாழிகைக்குமேல் விஷகடிகையென்னும்
நாலுநாழிகை தியாச்சியமாம்.

திதிச்சியாச்சியம்
சம்பூர்ணம்.

நட்சத்திரத் தியாச்சியம்.

புகலுவர்பூ ராடமுடன் பரணியுத்திரட் டாதி
பொருந்திருபா னுடனுன்காம் புநர்தமகந் தோணி
இகலுமங்கி தனக்காறைந் தாஞ்சோதி விசாகம்
இயம்புமக சிரங்கேட்டை யிவைக்கிரே ழாகும்
தகைபெண்ணே யோணமவிட் டம்மொருப தாகும்
சாற்றுகுறு நாள்பூரஞ் சித்திரையுத்தி ராடம்
நகைதருநா லேந்தாகும் நாலெட்டா யிலியம்
நாலேந்தோ ரிரண்டென்றே நாட்டிடுநவ் விக்கே.

இ-ள். பூராடம், பரணி, உத்திரட்டாதி (இவைமூன்றுக்கு) (24)·புனர் பூசம், மகம், இரேவதி, கார்த்திகை (ஆகிய நான்குக்கும்) (30) சுவாதி விசாகம் மிருகசீரிடம், கேட்டை, (ஆகியநான்குக்கும்) (14) அனுஷம், திருவோணம், அவிட்டம், (ஆகியமூன்றுக்கும்) (10) பூசம், பூரம், சித்திரை, உத்திராடம், (ஆகியநான்குக்கும்) (20) ஆயிலியம், (32) அஸ்தம், (22)—எ-று.

நவ்விவிழி யாய்சதய முத்திரமீ ரொன்பான்
நல்லபரி நாடனக்கே நவிலுவதைம் பானே
திவ்வியமாம் ரோகணிக்கே நாற்பானு மென்ப
திருந்தியநல் லாதிரைக்கே செப்புபதி னொன்றும்
கவ்வுமிரு பத்தொன்று மாமென்ப மூலம்
கருதுமிரு பானுடனைம் பத்தாறும் பத்தோ
டொவ்வியவா றும்பூரட் டாதியிவற் றின்மேல்
உறுகடிகை நான்குவிட மெனவுரைப்ப ருயர்ந்தோர்.

இ-ள். மான்போன்ற கண்ணையுடையவளே, சதையம், உத்திரம் (ஆகிய இரண்டுக்கும்) (18) அசுபதி (50) உரோகணிக்கு, (40) திருவாதிரை, (11-21) மூலம் (20-56) பூரட்டாதி (16) இப்படி நட்சத்திரங்களுக்குச் சொன்ன தொகைநாழிகைக்குமேல், (4) நாழிகைவரையில், நட்சத்திரவிஷ கடிகா காலமாம்—எ-று. 237

நட்சத்திரத் தியாச்சியம்.

அசுவனி	50 - பரிநாள்	சுவாதி	14
பரணி	24	விசாகம்	14
கார்த்திகை	30 - அங்கி	அனுஷம்	10 - பெண்ணை
ரோகணி	40	கேட்டை	14
மிருகசீரிடம்	14	மூலம்	20 - 56
திருவாதிரை	11 - 21	பூராடம்	24
புனர்பூசம்	30	உத்திராடம்	20
பூசம்	20 - குருநாள்	திருவோணம்	10
ஆயிலியம்	32	அவிட்டம்	10
மகம்	30	சதயம்	18
பூரம்	20	பூரட்டாதி	16
உத்திரம்	18	உத்திரட்டாதி	24
அஸ்தம்	22 - நவ்வி	ரேவதி	30 - தோணி
சித்திரை	20	ஆக நக்ஷத்திரம் 27.	

இந்தநாழிகைக்குமேல் நாலுநாழிகை தியாச்சியம்.

நட்சத்திரத்தியாச்சியம்

சம்பூர்ணம்.

வாரத்தியாச்சியம்.

வேறு.

வெய்யவ னுலெட்டாகும் வெண்மதிக் காறே ழாகும்
செய்யநற் புதனு மொப்பாஞ் சேயவன் முப்பத்தொன்றும்
துய்யபொன் னவனுமொப்பாஞ் சூழ்புகர் மூவே ழாகும்
மையுறு சனியு மீரேழ் வாரத்யாச் சியமே ஞன்கே.

இ-ள். ஞாயிற்றுக்கிழமை, (32) திங்கட்கிழமை (42) செவ்வாய்க்கிழமை (31) புதன்கிழமை, (42) வியாழக்கிழமை, (31) வெள்ளிக்கிழமை, (21) சனிக்கிழமை, (14) இதிற்சொன்னதொகைநாழிகைக்குமேல் (4) நாழிகை, வாரத்தில், விஷகடிகையாம்—எ-று. 238

வாரத் தியாச்சியம்.

ஞாயிற்றுக்கிழமை	32
திங்கட்கிழமை	42
செவ்வாய்க்கிழமை	31
புதன்கிழமை	42
வியாழக்கிழமை	31
வெள்ளிக்கிழமை	21
சனிக்கிழமை	14

இவ்வேழு வாரங்களுக்கும், இதிற்சொன்ன நாழிகைக்குமேல் நாலுநாழிகை விஷகடிகையாம்.

நாட்கண்டம்.

இரவிசே யிருந்த நாளுக் கேழுபத் தியன்மூ வைந்தும்
பரவிய மதிமாற் கெட்டும் பதினெட்டு மிருபா னுன்கும்
விரவிய புகர்பொன் னுக்கு மேவுமொன் பானு மேழும்
கரியவன் றனக்கோ ரைந்து பன்னொன் று மிருபத் தாறே.

இ-ள். அரவபடம்போன்ற அல்குலும் சாளமானஇனிய வசனமுமுள்ள பெண்ணே, சூரியன், செவ்வாய், நின்ற நக்ஷத்திரங்களுக்கு (7-10-15) வது நக்ஷத்திரங்களும், சந்திரன், புதன்நின்ற நட்சத்திரங்களுக்கு (8-18-24) வது நக்ஷத்திரங்களும், சுக்கிரன், வியாழன்நின்ற நக்ஷத்திரங்களுக்கு, (7-9) வது நட்சத்திரங்களும், சனிநின்ற நட்சத்திரங்களுக்கு 5-11-26, நட்சத்திரங்களும் நாட்கண்டமாம்—எ-று. 239

ஆறதா மரவுக் கேழு மாகுமே கண்ட மென்ப
வீறதாஞ் செவ்வா யோரை மேவிடிற் சனிகண் டத்தில்
பேறதாம் பிள்ளை தானும் பெருஞ்சிறைப் படுவ னென்றே
சீறிய வரவே ரல்குற் றேமொழி மாதே செப்பாய்.

இ-ள். இராகு, கேது, நிற்கும் நட்சத்திரங்களுக்கு (7) வது நட்சத்திரமும், நாட்கண்டங்களாம், சனிகண்டத்தில், செவ்வாய், ஓரையில்ஜெனித்த ஜாதகன், சிறைவாசஞ்செய்பவன் என்றுசொல்லுவாய்—எ-று. 240

வாரத்தியாச்சியம்

சம்பூர்ணம்.

திரேக்காண சக்கரம் போட.

			ராசி.	பாகை.	
அசுபதி	மகம்	மூலம்	1	3	
,,	,,	,,	2	6	மேஷம்
,,	,,	,,	3	10	
,,	,,	,,	4	13	
பரணி	பூரம்	பூராடம்	1	16	சிங்கம்
,,	,,	,,	2	20	
,,	,,	,,	3	23	
,,	,,	,,	4	26	தனுசு
கார்த்திகை	உத்திரம்	உத்ராட	1	30	
,,	,,	,,	2	3	
,,	,,	,,	3	6	மகரம்
,,	,,	,,	4	10	
ரோகணி	அஸ்தம்	திருவோ	1	13	
,,	,,	,,	2	16	ரிஷபம்
,,	,,	,,	3	20	
,,	,,	,,	4	23	
மிருகசீரிடம்	சித்திரை	அவிட்டம்	1	26	கன்னி
,,	,,	,,	2	30	
,,	,,	,,	3	3	
,,	,,	,,	4	6	துலாம்
திருவாதிரை	சுவாதி	சதயம்	1	10	
,,	,,	,,	2	13	
,,	,,	,,	3	16	கும்பம்
,,	,,	,,	4	20	
புனர்பூசம்	விசாகம்	பூரட்டா	1	23	
,,	,,	,,	2	26	மிதுனம்
,,	,,	,,	3	30	
,,	,,	,,	4	3	
பூசம்	அனுஷம்	உத்திரட்	1	6	கடகம்
,,	,,	,,	2	10	
,,	,,	,,	3	13	
,,	,,	,,	4	16	விருச்சிகம்
ஆயிலியம்	கேட்டை	தி	1	20	
,,	,,	,,	2	23	
,,	,,	,,	3	26	மீனம்
,,	,,	,,	4	30	
சரம் 1-5-9	திரம் 9-1-5	உபயம் 5-9-1			

திரேக்காணம்.

வேறு.

பரவுதிரேக் காணமது லக்கினத்தை மூன்றுப்
பகுத்திடுநன் மேடமுதற் கோவதுவே யாகும்
விரவிரண்டிற் கைந்தாகு மூன்றினுக் கொன் பானும்
மிளிரிடப முதற்கொன்பா னிரண்டிற்கவ் வீட்டோன்
பொருமூன்றிற் கைந்தாகு மிதுனமுதற் கைந்தாம்
புகலிரண்டிற் கொன்பானு மூன்றினுக்கவ் வீட்டோன்
வரும்ராசி மும்மூன்றிற் கிவ்வாறே யாகும்
வகையுடனே யுணர்ந்துநன்றாய் வசனிப்பாய் நனிநீ

இ-ள். திரேக்காணம் என்பது, ஜென்மலக்கினத்தை மூன்றாய்ப்பிரித்துக் காணப்படுவதாம், மேடம், முதற்பாகத்துக்கு, அதுவும், (2)ம், பாகத்துக்கு, (5)ம், (3)ம், பாகத்துக்கு, (9)ம், இராசிகள்-திரேக்காணலக்கினமாம், ரிஷபம் முதற்பாகத்திற்கு (9)ம், 2ம் பாகத்திற்கு (1)ம், (3)ம், பாகத்திற்கு (5)ம், இராசிகள் திரேக்காண லக்கனமாம், மிதுனம் முதற்பாகத்திற்கு(5)ம் (2)ம், பாகத்திற்கு (9)ம், (3)ம் பாகத்திற்கு, (1)ம் இராசிகளும் திரேக்காண லக்கினமாம், மற்ற, கடகசிம்ம, கன்னிக்கும், துலா, விருச்சிகதனுசுக்கும், மகாகும்பமீனத்திற்கும் மேற்கண்டபடியே காட்டுக—எ-று. 241

இதன்சுருக்கம், சரவிராசிக்கு, (1-5-9) திரவிராசிக்கு, (9-1-5) உபய ராசிக்கு, (5-9-1) இந்தமுறையே பாகப்படிசெய்துக்கொள்ளவும், (காணம்-ஓரளவு) காணம்என்றது காண்டம், எனமருவி, கண்டம் என்று பொருள் பட்டது.

நனிதிரய முதற்காணங் கண்டமட்டே யாகும்
நாபியளவா மிரண்டுமூன் றப்பா ளுட்டும்
வினவியதோ ரிவ்விடத்திற் பாவர்களே நின்றால்
விரணமுண் டாஞ் சுபக்கிரக மேவின்மறு வாகும்
புனிதமுறு சுபர்பார்வை யுறினுமறு வாகும்
பொருந்துநிறந் தெரிந்ததனைப் புகன்றிடவேண் டிடினே
இனிமையுட னிருந்தகிரக த்தின்வணந் தானே
யிருந்தபடி யேயிருக்கு மெனவியம்பு வீரே.

இ-ள். இதிற்சொன்ன மூன்றுபாகங்களில், முதற்காணம், கழுத்துவரையும், (2)ங் காணம், நாபிவரையும், மூன்றாங்காணம், பாதம்வரையும், என்க, இத்திரேக்காண லக்கினங்களில், பாவக்கிரகங்கள் நின்றால், ரண முதலிய வியாதிகளுண்டாம், சுபக்கிரகங்கள் நின்றால் மறுவாகும், சுபர் பார்வைபெறினும், மறுவாகும், இந்தாணமறுவின், விவரத்தையறியவேண்

டின். இருந்த பார்த்த,கிரகங்களின், நிறம், உருவம் எப்படியோ, அப்படியே மறுவடுக்களிருக்குமென்று அறிந்துசொல்லுக—எ று. 242

வீரமுறுங் கதிரிருந்தால் விலங்கினத்தி னுலும்
விளங்குசசி யிருந்தக்கான் மெய்விரணங் கொம்பால்
பார்மகனுற் றிடிலங்கி யாற்படையி னுலும்
பாகனுறிற் பூமிதமித் தம்விரணம் பற்றும்
ஆரியனுங் குருசுங்க ருறின்விரண மில்லை
யாங்காரி யுறிற்கல்லால் வாதசேத்து மத்தால்
சூரியதோ ரிரணமுண்டாம் நல்லோர்கள் கண்டால்
கூறுமிர ணந்தீர்ந்தே குலவும் வடு வாமே.

இ-ள். அந்தந்த திரேக்காணமுள்ள இடங்களில், சூரியனிருந்தால், மிருகங்களினுலும், சந்திரனிருந்தால், கொம்புகளாலும், செவ்வாயிருந்தால் அக்கினியாலும், ஆயுதத்தாலும், புதனிருந்தால் பூமிகாரணத்தாலும், விரணமுண்டாகும், குரு, சுக்கிரனிருந்தால், விரணமில்லை, சனியிருந்தால், கல்லாலும், வாத சிலேட்டுமரோகத்தாலும், விரணங்களுண்டாம், சுபக்கிரகங்கள் பார்த்தால் விரணந்தீர்ந்து, வடுவாகமாறிநிற்கும்,என்பதாம்—எ-று.243

வடிவிலார் சிரத்திரவி முகத்தின்மதி யாகும்
மார்பிற்சே யுறின்மருவு மின்னுமிர ணந்தான்
முடியரச னுதரத்திற் புந்தியிடை தனிலே
மூரிநெடுங் காரியிரு துடைதனிலே யாகும்
கடுவுறையுங் கருநாகங் கரந்தனிலே யாகும்
காலிரண்டிற் செம்பாம்பு தான்கலந்து நிற்கும்
நடுமுதுகிற் சுக்கிரனு மாம்விரணம் பாவர்
நண்ணுமிடந் தன்னிலென்றே நாட்டுவர்நல் லோரே.

இ-ள். சூரியனுக்கு, சிரசு, சந்திரனுக்கு முகம், செவ்வாய்க்கு மார்பு, குருவுக்கு வயிறு, புதனுக்கு இடுப்பு, பலம்பொருந்திய சனிக்கு, இருதுடைகளிலும், இராகுவுக்கு கைகளிலும், கேதுவுக்கு கால்களிலும், சுக்கிரனுக்கு முதுகிலும், விரணமாம், பாவர்பலத்திருந்தால், விரணமும், சுபர்பலத்திருந்தால், வடுவுமாம், என்று சோதிடமுணர்ந்த நல்லோர்கள்சொல்லுவார்கள்.

திரேக்காணம்

சம்பூர்ணம்.

நவாங்கிஷ சக்கரம்போட.

சூரியனங்கிஷம்.	அசுவனி	புதனங்கிஷம்.	மகம்	சனியங்கிஷம்.	மூலம்	1	மேஷம்
	”		”		”	2	ரிஷபம்
	”		”		”	3	மிதுனம்
	”		”		”	4	கடகம்
	பரணி		பூரம்		பூராடம்	1	சிம்மம்
	”		”		”	2	கன்னி
	”		”		”	3	துலாம்
	”		”		”	4	விருச்சிக
	கார்த்தி		உத்திரம்		உத்திராட	1	தனுசு
	”		”		”	2	மகரம்
	”		”		”	3	கும்பம்
	”		”		”	4	மீனம்
சந்திரனங்கிஷம்.	ரோகணி	குரு அங்கிஷம்.	அஸ்தம்	இராகு அங்கிஷம்.	திருவோண	1	மேஷம்
	”		”		”	2	ரிஷபம்
	”		”		”	3	மிதுனம்
	”		”		”	4	கடகம்
	மிருகசீரிட		சித்திரை		அவிட்டம்	1	சிம்மம்
	”		”		”	2	கன்னி
	”		”		”	3	துலாம்
	”		”		”	4	விருச்சிக
	திருவாதி		சுவாதி		சதயம்	1	தனுசு
	”		”		”	2	மகரம்
	”		”		”	3	கும்பம்
	”		”		”	4	மீனம்
செவ்வாயங்கிஷம்.	புனர்பூசம்	சுக்கிரனங்கிஷம்.	விசாகம்	கேது அங்கிஷம்.	பூரட்டாதி	1	மேஷம்
	”		”		”	2	ரிஷபம்
	”		”		”	3	மிதுனம்
	”		”		”	4	கடகம்
	பூசம்		அனுஷம்		உத்திரட்	1	சிம்மம்
	”		”		”	2	கன்னி
	”		”		”	3	துலாம்
	”		”		”	4	விருச்சிக
	ஆயிலியம்		கேட்டை		ரேவதி	1	தனுசு
	”		”			2	மகரம்
	”		”			3	கும்பம்
	”		”			4	மீனம்

நவாங்கிஷ லக்கினமறிய.

உதித்திடுநற் சன்மலக் கினங்கடமைக் கண்டே
வொன்பதுபங் காக்கியிவ னுதித்திடும்பங் கினுக்கே
விதித்தநவாங் கிசமேடந் தனக்குமே மேடம்
மேவிடப ராசிக்கு மகரமுத லாகக்
கதித்தமிது னந்தனக்குத் துலாமுதலாக் கொண்டு
கணக்கிடுவா யிவ்வாறே கடகமுதற் றொட்டுப்
பதித்தமற்ற ராசிக்கு முன்புசொன்ன முறையே
பார்த்துரைப்பாய் பான்மொழியே பன்னுநவாங்கிசமே.

இ-ள்· ஜாதகன் ஜென்மித்தலக்கினத்தை, ஒன்பதுபங்காக்கி, எந்தப் பங்கில் ஜாதகன் ஜெனிக்கின்றனோ, அந்தப்பங்கை, மேடலக்கினத்திற்கு, அதேமுதலாகவும், ரிஷபலக்கினத்திற்கு, மகரமுதலாகவும் -மிதுனத்திற்கு துலாமுதலாகவும், எண்ணிப்போடுவது நவாங்கிஷமாம், இம்முறையே கடக சிங்க, கன்னிக்கும், துலாவிருச்சிக, தனுசுக்கும் மகரகும்ப மீனத்திற்கும், எண்ணிப்போடவும்—எ-று· 245

இதன்சுருக்கம், சரராசிக்கு, (1) முதலாகவும், திரவிராசிக்கு, (9) முதலாகவும், உபயவிராசிக்கு, (5) முதலாகவும் ஜென்மலக்கினத்திற்சென்ற பங்கை எண்ணிப்போடுவதாம்.

துவாத சாங்கிசம்.

வேறு.

கருது பன்னிரண் டங்குசங் காணவே
மருவு லக்கினத் தைவகுத் தப்படி
வருவ தாகிய பங்கை வருடைதொட்
டொருவி லாததோ ரோரை கணித்திடே.

இ-ள்· துவாதசாங்கிஷங்காணும் விவரமாவது ஜென்ம லக்கினத்தை (12) பாகஞ்செய்ய, எந்தபாகத்தில், ஜென்மமாகிறதோ, அந்த பாகத்தை மேடமுதலாக, எண்ணிக்காணுவதாம், கிரகங்களுக்கு மிப்படியே, நந்திவாக் கியத்தில் அந்தந்தக்கிரகங்களிருந்த, இடந்தொட்டெண்ணிக் காணுவதெனக் கூறியுள்ளார்.

திரிம் சாங்கிஷம்

வேறு.

செய்யலக் கினந்தன்னை முப்பதாய்ப் பிரித்துச்
செவ்வாய்க்கோரைந்துபங்காஞ் சனிக்குப்பங் கைந்தாம்

துய்யகுரு வுக்கெட்டு புதனுக்கே ழாகும்
சுக்கிரனுக் கைந்துபங்காய்ச் சொல்லொற்றை தனக்கே
யையவந்த ரெட்டைலக் கினந்தனக்குப் பங்கு
பகர்சுக்கி ரன்றனக்கே யைந்துபுதற் கேழாம்
தையலேகே ளரசற்கெட் டுசனிக் கைந்தாம்
சாற்றுகுசற் கைந்துபங்காந் தான்சாற்றுங் காலே.

இ-ள். ஜென்மலக்கினத்தை முப்பதுபாகஞ்செய்து ஆண்ராசியானால், (5) பங்குவரை, செவ்வாய்க்கும் (10) பங்குவரை, சனிக்கும், (18) பங்குவரை, குருவுக்கும் (25) பங்குவரை, புதனுக்கும், (30) பங்குவரை சுக்கிரனுக்கு மாகையால், இவர்களுடைய ஒற்றைவீட்டிலும், பெண்ணிராசியானால், (5) பங்குவரை சுக்கிரனுக்கும் (12) பங்குவரைபுதனுக்கும் (20) பங்குவரைகுருவுக்கும், (25) பங்குவரை சனிக்கும் (30) பங்குவரை, செவ்வாய்க்குமாகையால் இவர்களுடைய இரட்டைவீட்டிலும் லக்கினமாமெனவறிக, கிரகங்களுக்கு மிவ்வாறேயறிக—எ-று. 247

உச்சபலன்.

உச்சமென நவக்கிரக மிருக்கும்வண் மையதா
முணர்ந்தறியும் படிமேடத் துறையும்வெய் யோனும்
மெச்சுமிட பத்திற்சந் திரன்மகரச் செவ்வாய்
விரவியதோர் கன்னிதனின் மேவியநற் புதனும்
அச்சமறக் கடகத்தி லரசனும்வந் திருக்க
அணிமீன ராசிதனி லமர்ந்திடுஞ்சுக் கிரனும்
வச்சிரமாந் துலாமதனிற் காரியெனுங் கோளும்
வந்திருந்தா லுச்சமென வேவழுத்த லாமே.

இ-ள். நவக்கிரக உச்சங்களை, அறியவேண்டின் மேடத்திற்சூரியனும், ரிஷபத்திற் சந்திரனும், மகரத்திற் செவ்வாயும், கன்னியிற் புதனும், கடகத்திற் குருவும், மீனத்திற் சுக்கிரனும், துலாத்திற் சனியும், உச்சக்கிரகங்களாமென்று சொல்லுக இராகுவுக்கு, ரிஷபமும், கேதுவுக்குவிருச்சிகமும், குளிகனுக்கு மகரமும், தூமனுக்கும், தூமகேதுவுக்கும், சிங்கமும், இந்திரதனுசுக்கு விருச்சிகமும், தனுசும் பரிவேடத்துக்கும், மிதுனமும், விதிபாதனுக்கும், நுட்பத்துக்கும், கும்பமும், உச்சவீடாமென்று கூறியுள்ளார்பெரியோர்—எ-று. 248

வழுத்தியசெங் கதிருச்சம் பெறவுதித்தோன் றனும்
மன்னவனும் பிரதாப சாலிமகா பலவான்
பழித்திடுபுன் னோயில்லான் றனதான்ய முள்ளான்
பலவிதவா கனனுடலிற் பழுதொன்று மில்லான்

செழித்திடுசந் திரனுச்சஞ் சகலசனப் பிரியன்
செல்வகுணம் புத்திநவ தானியமுஞ் சேரும்
விழித்துமய லளித்துமன முருக்குமட மாதே
வெகுபேரைப் புணருகின்ற மிகுபோகி யாவான்.

இ-ள். கண்ணேக்கைக்காட்டி, காதலைமூட்டி காளையர் மனத்தைக் கவரக்கருக்கி, உருக்கும்படியான, இளமைபொருந்தியபெண்ணே, சூரியனுச்சமாகப் பிறந்தவன், அரசனும், பிரதாபியும், பலவானும் நோயில்லாதவனும், தனதானிய முள்ளவனும், பலவிதவாகனங்களை யுடையவனும், யாதொரு குற்றமில்லாதவனு மாயிருப்பவனுமாவன். சந்திரனுச்ச மாகப்பிறந்தவன், சகலஜனப்பிரியனும், செல்வமுள்ளவனும், குணமணமுள்ளவனும், நவதானியமுள்ளவனும், ஸ்திரிலோலனுமாவன்—எ-று. 249

ஆகுஞ்செவ் வாயுச்சங் கீர்த்திபிறர்க் கினியா
னவனிதனி னெடுங்கால மாயுளுடை யவனும்
வாகுடையன் பித்தன்பிதிர்த் திரவியங்க ளுள்ளான்
மருவுமிகு புத்திமான் மன்னவனு யிருப்பன்
மோகமுறும் புதனுச்சஞ் சகலகலை வல்லன்
முறைமையுறு சங்கீதப் பிரியன்வெகு குணவான்
சேகரமாம் புத்திமான் கணிதவகை தெரிவோன்
திண்புவிக்கோ ரரசனு முண்டிருக்குஞ் சீமான்.

இ-ள். செவ்வாய், உச்சமாகப் பிறந்தவன், கீர்த்தியும், பிறருக்கினிமையுடையவனும், நீண்ட ஆயுளுடையவனும், அழகுடையவனும், அதிகப்புத்திமானும், இராஜனுகவுமிருப்பான், புதனுச்சமாகப்பிறந்தவன், சகலகலை வல்லவனும், சங்கீதப்பிரியனும், அதிககுணமுள்ளவனும், கூடுதலாதபுத்தியுடையவனும், கணிதவகைகளைத்தெரிந்தவனும், புவிக்குராஜனும், தீர்க்காயுசுடையவனுமாவன்—எ-று. 250

ஆமரச னுச்சத்தில் வெகுசம்பத் துள்ளா
னரசன்மிகு போகவா னணிதனமு முளனும்
காமரச வனிதைவா கனம்வித்தை புதல்வர்
கனமாக மருவுமுப காரனு யிருப்பன்
பூமலிசுக் கிரனுச்சந் தனம்வித்தை புதல்வர்
போகமிக வுளன்காரி யுச்சமதிற் பலவான்
ஏமமா ரோக்கியந்தீர்க் காயுணண்மை யுடனே
யிரணியங்கிரா மஞ்சேனை யிவைகளுள னமே.

இ-ள். குரு, உச்சமாகப்பிறந்தவன், வெகுசம்பத்துள்ளவனும், இராஜனும், போகமுள்ளவனும், செல்வமுள்ளவனும், காமரசமுள்ளபெண்களை

யுடையவனும், வித்தையுள்ளவனும், பெருமையுள்ளவனும், குழந்தைகளை யுடையவனும், பிறருக்கு உபகாரஞ்செய்பவனுமா யிருப்பான். சுக்கிரனுச்சமாகப் பிறந்தவன், தனம், வித்தை, புதல்வர், போகமுள்ளவனுமாவன் சனி உச்சமாகப்பிறந்தவன், பலமுள்ளவனும் ஆரோக்கியமுள்ளவனும் தீர்க்காயுசுடையவனும் நன்மையுடையவனும், பொன், கிராமம், சேனைகளுள்ள வனுமாவன்—எ-று. 251

உள்ளதொரு கிரகமுச்ச மேவிற்கிரா மணியா
முபயமுச்சம் பெறிற்பலவூர்க் கிராமணியு மாவன்
தெள்ளியதோ ரொருமூன்று கிரகமுச்ச மானாற்
செங்கோன்மன் னவனாகிச் சிறிதவனி புரப்பன்
நள்ளியதோ ரீரண்டு கிரகமுச்ச மானால்
நவிலொருமண் டலந்தனக்கு நாயகனே யாவன்
புள்ளிசெறி யோரைந்து கிரகமுச்ச மானால்
பூலோக நாயகனா மெனப்பலன்கள் புகல்வர்.

இ-ள். ஒருகிரகமுச்சமாகப்பிறந்தவன், கிராமாதிகாரியாவன், இருகிரகமுச்சமாகப்பிறந்தவன், பலகிராமாதிகாரியாவன், மூன்றுகிரக முச்சமாகப்பிறந்தவன், ராசநீதியுள்ள மன்னவனாகி, கொஞ்சகாலம் அரசாளுவன், நான்குகிரகமுச்சமாகப்பிறந்தவன், ஒருதேசத்தையாளுகின்ற ராஜனாவன், ஐந்துகிரகமுச்சமாகப்பிறந்தவன், பூலோகநாயகனாவனென்றும் வல்லமையுள்ள நல்லோர்களெல்லோருஞ் சொல்லுவார்கள்—எ-று. 252

புகல்சனன காலையினிற் சுபக்கிரக மெல்லாம்
பொருந்துநீ சஞ்சத்துரு ராசிதனிற் சேர்ந்தே
இகலறநின் றிடுபலன்க ளுரைத்திடவுங் கேளாய்
இருந்ததலந் தன்னைவிட்டே யேகுவிக்குந் தூரம்
விகலுற்ற நாசமிக வுற்பவிக்கு மென்றே
மெய்யதனிற் குரூரமாம் வியாதிகளுண் டாகும்
அகன்மரண துக்கசோ கங்களிவை செறியும்
அனங்கண்டு சரநடைசொல் லானவிழி யாளே.

இ-ள். ஜாதகன் ஜெனனகாலத்தில் சுபக்கிரகங்களெல்லாம், சத்துரு, நீசவிராசிகளிற் சேர்ந்து பலமில்லாமல் நிற்கில், பலன்களைக் கேட்பாயாக, இருந்த இடத்தைவிட்டு நெடுந்தூரம், அலைச்சலும், பகையும், நாசங்களும் சம்பவிக்கும், தேகத்தில் மோசமான வியாதிகளுண்டாக்கும், அகஸ்மாத்தான மரணங்கள், துக்கசோகமுமுண்டாம்—எ-று. 253

ஆரேனு மூவருச்ச மாகிலமைத் தோளி
யணுகுமர சன்கூட மூவருச்ச மாயின்

வாரேறு மூலமடவாய் மந்திரியு மாவன்
மற்றுமொரு மூவர்நீ சத்தானம் மருவில்
பாரேறுந் தனிலொருவர்க் கேயடிமை யாவன்
பகர்மூவ ரத்தமனம் பாலனுயிர்க் கரிட்டம்
சீரான சசிக்கிருபால் பாவர்கடாம் வந்து
சேரிற்கத் திரியோகஞ் சேயுடனே மரிக்கும்.

இ-ள். இச்செகத்தோர் மெச்சக்கூடிய பச்சிளநீரை, அச்சணமறைக்க வச்சிருக்கும், கச்சையணிந்த கொங்கையுடையபெண்ணே, எந்தக்கிரகமாவது, மூன்று கிரகமுச்சமானல், அரசன், (அல்லது) அமைச்சனுவன், மூன்று கிரகங்கள் நீசமானல், ஒருவரிடத்தில் அடிமைத்தொழிற் செய்வன், மூன்று கிரகங்கள் அஸ்தமனமானல், ஜாதகனுக்குத் தோஷமுண்டாம், சந்திரனுக்கு இருபக்கமும், பாபக்கிரகங்களிருந்தால், கத்தரியோகமாம், இப்படிச்செனன மான ஜாதகன், உடனே இறந்துவிடுவானென்று சொல்லக்கடவாய்—எ-று. 254

மரியாதி யுடனிரண்டு கிரகமுச்ச மாகி
மன்னியோ காங்கிசையில் வந்திருக்கின் மன்னும்
பிரியாத விவரிருவர் மித்துருவே யானல்
பெருமைசெறி முழுராஜ யோகமெனப் பேசு
பரிவேயில் லாதபகை யானலற் பமதாம்
பாக்கியவா னுமுச்ச மேபடைத்த சுபக்கோள்
தரியாத நீசாங்கி சத்திலற்ப யோகம்
தாழ்வான நீசருச்சந் தானேறிற் பலனே.

இ-ள். இரண்டு கிரகங்களுச்சமாகி யோகாங்கிஷமும்பெற்று நின்றல், இராஜனுவன், உச்சவீட்டதிபதியும், அங்கிசவீட்டதிபதியும், மித்துருகிரகங்களாயின், பெருமையுள்ள, நிறைந்த ராஜயோகமென்றும், பகைபெற்று நிற்கில், அற்பபாக்கிய முள்ளவனுமாவன், உச்சங்களான இருசுபக்கிரகங்களும் நீசாங்கிஷம்பெற்றல், சொற்பயோகமாம், தாழ்வான நீசக்கிரகங்கள், உச்சாங்கிஷமேறிநிற்கில் யோகபலன் சித்திக்குமென்று சொல்லுக.

கிரகமாலிகா யோகபலன்.

வேறு.

எண்ணியலக் கினங்கண்முத லேழு வீட்டி
லிடைவிடா மற்கிரக மாலே யென்ன
நண்ணிடில்வல் லகியோகம் பலன்கள் கூறி
னலமுளனுச் சாகிபர னீதி யாளன்

புண்ணியசம் பன்னனறி வுடைய கோமான்
புகழ்செறியும் பிரசங்கி வித்து வானும்
திண்ணியநற் குலமுடைய னிபுணன் சீலன்
றிரள்யோக வானென்றே செப்பு வாரே.

இ-ள். கெணித்துக்கண்ட ஜென்மலக்கினமுதல் ஏழிராசிகளில், கிரகங்கள் வரிசையாய்நிற்கில் வல்லகியோகமாம், இதன்பலன்கள், நல்லவன் உற்சாக முடையவன், நீதியுடையவன், புண்ணியசம்பாத்தியமுள்ளவன், அறிவுடையவன், இராஜன், புகழோங்கப் பிரசங்கஞ்செய்பவன், வித்துவான், நற்குலத்திற்பிறந்தவன், நிபுணன், சிறப்புடையவன், யோகவானுமாவனென்று, விவேகிகள் சொல்லுவார்கள்—எ-று. 256

வேறு.

வாருலவு முலையாய்கேள் லக்கினங்கண் முதலா
மாறுமலேயாறு வீட்டிற்கோ ணிற்கப்
பாருலவு சக்கிரதர யோகங்க ளென்னப்
பகருபலன் றனைத்தெரிந்து பார்த்திடும் போது
சீருலவு மன்னவனுஞ் சுகதேகன் சீமான்
சினமிலான் கிருபையுளன் சேர்ந்தபிர தாபன்
ஏருளவாக் கியன்ஞான வான்புத்தி மானு
மினியதா தாவென்றே யியம்பிடுவர் கண்டீர்.

இ-ள். கச்சிறுக்கிய தனபாரத்தையுடைய பெண்ணே, லக்கினமுதலாக ஆறுவீட்டிலும், வரிசையாய்க் கிரகங்கள், நின்றால், சக்கிரதரயோகமாம், அதன்பலன், சிறப்புற்றராஜனும், சுகதேகமுள்ளவன், செல்வமுள்ளவன், கோபமில்லாதவன், கிருபையுள்ளவன், கீர்த்தியுள்ளவன், நல்ல வசனமுடையவன், ஞானமுள்ளவன், புத்தியுள்ளவன், மிக்க கொடையாளனுமாவன் என்று பெரியோர்கள் சொல்லுவார்கள்—எ-று 257

கண்டிலக் கினங்கண்முத லைந்து வீட்டிற்
கருணையுட னேகிரகஞ் சேர்ந்து நிற்கில்
ஒண்டொடிநற் பாசயோ கங்களென் றதனை
யுரைப்பர்பலன் மேதாவி யுச்சாகி யாகும்
தண்டமிழின் பலகலையுந் தெரிந்துரைகள் பகர்வன்
சகலசனங் களும்புகழத் தான்மிகவே வாழ்வன்
எண்டிசைகள் புரந்திடுமன் னவராற்பூச் சியவா
னினியதன வான்வீட்டிற் கருமமெல்லாம் பார்ப்பன்.

இ-ள். ஒளிபொருந்திய வளையல்களையணிந்த கையையுடைய பெண்ணே, ஜென்மலக்கினமுதல், ஐந்துவீட்டிற் கிரகங்கள் வரிசையாய் நின்றால்,

பாசயோகமாம், அதன்பலன், வல்லமையுடையவன், உற்சாகமுடையவன் தமிழ்சாஸ்திரங்களையறிந்து பேசும் வல்லவன், சகலஜனங்களும் புகழும்படி வாழ்வான், பெரிய ராஜாக்களாற் பூஜிதையுடையவன், செல்வமுள்ளவன், இல்லறத்தை வழுவாது நடத்துபவனுமாவன்—எ-று. 258

வே று.

பார்க்கிலக் கினந்தன் னேடு பயினுன்கு மனைக்குள் ளாக
ஏற்கவே கிரகம் நின்று லிதுவேகே தார யோகம்
தீர்க்கமாய் கிருஷி பண்ணித் தனந்தேடுந் திடவான் சுற்றத்
தார்க்கன்பன் சுகவான் ராச பூச்சியன் றகைமை யுள்ளான்.

இ-ள். இலக்கினமுதல், (4) வீட்டில் கிரகங்கள் வரிசையாய் நின்றால் கேதாரயோகமாம், அதன்பலன், உழுது பணந்தேடுபவன், உறமுள்ளவன், சுற்றத்தாருக்கு அன்பனும், சுகதேகியும் இராஜப்பிரியனும், நல்லகுண முடையவனுமாவன்—எ-று. 259

உள்ளதோர் மூன்று வீட்டி லுற்றிடிற் சூல யோகம்
மெள்ளவே பலனநேக வித்தையுள் ளவனுச் சாகி
தெள்ளிய போக வானுந் திரவியந் தேடுஞ் செல்வன்
கொள்ளவும் விலைகள் கூறி விற்கவுங் குறிப்பு ளாளன்.

இ-ள். இலக்கினமுதல் மூன்றுவீடுகளில் கிரகங்கள், வரிசையாய் நின்றால், சூலயோகமாம், அதன்பலன், அதிகவித்தையுள்ளவன், ஊக்கமுள்ளவன், போகமுடையவன், திரவியஞ் சம்பாதிப்பவன், செல்வமுள்ளவன், சாமார்த்தியமாய் வியாபாரமுஞ் செய்பவனுமாவன்—எ-று. 260

ஆள்சன்ம மிரண்டி லேழு கிரகமு மமர்ந்து நிற்கில்
கீளக யோக மென்ப ரிதன்பல னிதிமான் மிக்கோர்
தாள்தொழு திறைஞ்சி நிற்குஞ் சரசவான் றீர்க்க சீவி
கேள்சுப கருமன் சென்மத் தேழுறிற் கவுள யோகம்.

இ-ள். இலக்கினமுதல் (2) வீட்டிலே, ஏழுகிரகங்களும் நின்றால், அகயோகமாம், அதின்பலன், செல்வமுள்ளவன், பெரியோரைத் தொழுபவன், சரசகுணமுடையவன், தீர்க்காயுசுள்ளவன், சுபகாரியஞ்செய்யப்படுவேன்.

யோகமாங் கவுள யோக முறுதனஞ் சற்றுமில்லான்
பாகமா யிளைத்தி ருப்பன் சிலவுளான் பகரிற் சோம்பன்
தோகைகேள் பொல்லான் சிற்ப காரியத் தொழிற்கு வல்லன்
வாகுடன் புவிசஞ் சார வல்லமை யுள்ள னுமே.

இ-ள். லக்கினத்தில், ஏழுகிரகங்கள் நின்றால், கவுளயோகமாம், அதன் பலன், தரித்திரன், இளைத்த சரீரமுள்ளவன், செலவுசெய்பவன், சோம்பலுள்ளவன், பொல்லாதவன், சிற்பிசாஸ்திரங் கற்றவன், தேசயாத்திரை செய்ய வல்லவனுமாயிருப்பன்—எ-று, 262

உச்சபலன்

சம்பூர்ணம்.

சகடயோக பலன்.

வேறு.

அகடின் மன்னனுக் காறெட் டொடுவியத்
திகடி லாமதி யெய்தி யிருந்திடின்
சகட யோக மிதிற்பிறந் தார்க்கெலாம்
விகட துன்பம் விளையு மரிட்டமே.

இ-ள். குருவுக்கு, ஆறு, எட்டு, பன்னிரண்டுஆகிய, இம்மூன்று,இடங்களில், சந்திரனிருந்தால், சகடயோகமாம், இந்தயோகத்திற்பிறந்தவர்களுக்கெல்லாம், கஷ்டமாகிய துன்பமும், அரிட்டமும் உண்டாகும்—எ-று.

யோகபலன்.

வேறு.

விளையும் புதனுஞ் சூரியனும்
விரும்பி யெட்டி னன்கொன்றில்
வளையக் கூடின் மன்னவனும்
மதியுங் கதிரு முடன்கூடி
இளையா தன்ம கன்மத்தி
லிரண்டி லிருக்கக் கீர்த்தியுளன்
கிளையா ரவிபொன் பன்னொன்றிற்
கேடில் சன்மத் துறிலரசே.

இ-ள். புதனும், சூரியனும், இதமாகிய லக்கினம், எட்டு, நான்கு, ஆகிய, இவ்விடங்களிற் கூடியிருந்தால், அரசனுவன், சந்திரனும், சூரிய

னும், (9) (10) (2) ஆகிய தன்ம கன்ம தனஸ்தானங்களிலிருக்கக் கீர்த்தி யுள்ளவன், சூரியனும், குருவும், கூடி, லக்கினம், லாபமாகிய, (1) (11)ல் இருந்தால், அரசனுவன்—எ-று. 264

அரசே யெட்டொன் பதுபத்தி
லணிசன் மத்தி விரவிபுகர்
சிரசா யிருக்கப் பூபதியாஞ்
சேருஞ் சனியுஞ் சூரியனும்
நிரைசேர்ந் தொன்ருய் நவமாறி
னிற்கிற் கீர்த்தி மானுவன்
உரைசேர் மற்ருே ரிடத்திவர்க
ளுறையிற் கூத்தா டியுமாவான்.

இ-ள். சூரியனும், சந்திரனும், கூடி, (8) (9) (10) லக்கினம் ஆகிய இவ்விடங்களில், கூடியிருந்தால், அரசனுவன், சனியும், சூரியனும், (6) (9) இவ்விடங்களிலிருந்தால், கீர்த்திமானுவன், மற்றஇடங்களில் கூடியிருந் தால், கூத்தாடியாக இருப்பன்—எ-று. 265

ஆமாம் வெள்ளி யிரவிசெவ்வா
யணுகிற் பத்திற் பன்னென்றில்
தாமே யைந்தொன் பதுரெண்டிற்
றரிக்கி லரசா திபனுவன்
தோமார் செவ்வா யிரவிபுந்தி
யெங்கே யேனுந் தொடர்ந்துநிற்கில்
ஓமே செல்வம் படைத்திருப்ப
னுதவான் றமருக் கொருகாசும்.

இ-ள். சுக்கிரன், சூரியன், செவ்வாய், இவர்கள்கூடி, (2), (5), (9), (10), (11), ஆகிய இவ்விடங்களில் கூடியிருந்தால், அரசனுவன்,செவ்வாய், சூரியன் புதன், இவர்கள்கூடி, எவ்விடத்திலிருந்தாலும், செல்வமுள்ளவன், சுற்றத்தாருக்கு, ஒருகாசுஞ்செலவு செய்யாதவனுமாவன்—எ-று. 266

காசம் பொதிந்த யிரவிகுரு
கலைவெண் மதியங் காரிகுசன்
நேச முடனே யொருவீட்டி
னிற்கி லசாரு ரனுமாகி
தேசந் தன்னி லிருந்தமன்னர்
தேடு பொருளிற் சிந்தைவைத்துப்
பூசல் புரிந்தே கைக்கொண்டு
பூமிக் கரசா யிருந்திடுவன்.

இ-ள். சூரியன், குரு, பூரணச்சந்திரன், சனி, செவ்வாய், ஆகிய இவர்கள், ஒரேவீட்டிற் கூடியிருந்தால் மிகுந்தவல்லமை யுடையவனய், தேசங்களில் அரசர்கள்தேடும் பொருளிலாசைவைத்து, சண்டைசெய்து, செலித்து, அப்பொருளினுதவியால், அரசுசெலுத்துவோனவன்—எ-று.

இருந்த கதிர்சந் திரனுச்ச
மெய்தக் குருநண் டினிலிருக்கத்
திருந்து குடத்திற் சனியிருக்கச்
செவ்வாய் மேதை யேழிலுறப்
பொருந்தில் ராச யோகமதாம்
பொன்னும் பிருகு முச்சமதாய்
இருந்தாற் பூவிற் கரசாகி
யிப்பார் புரப்ப னெனச்சொல்லும்.

இ-ள். சந்திரன், சூரியன், உச்சத்திலிருக்க, குருகற்கடகத்திலிருக்க, கும்பத்திற் சனியிருக்க, செவ்வாயும் புதனும், (7)ல் இருக்கப்பிறந்தவனுக்கு, ராஜயோகமாம், சுக்கிரனும், வியாழனும், உச்சமாயிருக்கப்பிறந்தவன், பூமிக்கரசனகிவாழ்வன்—எ-று. 268

சொல்லு மூன்று கிரகங்கள்
சுகமா யுச்ச மாஞலும்
வில்லி லரசன் மேஷத்தில்
வெய்யோ னுச்ச மாயிடினும்
நல்ல பிருகு பொன்மதியும்
நயந்தே கூடி யேழிலுற
அல்ல லறவே புவிபுரக்கு
மரச னகுங் கண்டீரே.

இ-ள், மூன்று கிரகங்கள் பங்கமில்லாதுச்சம்பெற்றாலும், தனுசிற்குருவும், மேஷத்திற்சூரியனும், உச்சமாய் நின்றாலும், சுக்கிரன், வியாழன், சந்திரன், இவர்கள்கூடி, (7) மிடத்திலிருக்கப்பிறந்தாலும், புவியாளுகின்ற அரசனவன்—எ-று. (269)

கண்ட பாக்கி யாதிபனுங்
கருதும் வெள்ளி யிருவோரும்
மிண்டு சன்மத் திருந்திடினும்
வேந்தன் பாக்கி யாதிபத்தில்
அண்டி யுறினும் பிறர்தேசத்
தரசாய்த் தனவா னகியுமே

பெண்ட தொன்றை மணம்புரிந்து
பிரதா பங்கள் பெறுங்குணவான்.

இ-ள். பாக்கியாதிபதியும், சுக்கிரனுங்கூடி, ஜென்மலக்கினத்தி லிருந்தாலும், குருபாக்கியத்தானத்திலிருந்தாலும், அன்னியதேசத்தி லரசனாகி, செல்வமுள்ளவனுமாய், ஒருபெண்ணை விவாகஞ்செய்து, பிரதாபம்பெற்று குணவானாகி வாழ்வன்—எ-று. 270

குணமார் தன்ம கன்மாதி
கூறுஞ் சுபக்கோ ளுடன்கூடி
மணமார் தன்ம கன்மத்தின்
மருவி யிருக்கின் மன்னவனும்
உணர்வா யிவர்க ளிருவருட
னோரைந் தாதி யுடன்கூடிப்
புணர்வா ரெங்கே யிருந்தாலும்
பூமி புரக்கும் புரவலனும்.

இ-ள். தருமகருமாதிபதிகள் பெருமைபொருந்திய, சுபக்கிரகங்களுடன், சேர்ந்து, மேற்கண்டபாக்கிய பலபுண்ணியஸ்தானமாகிய, ஒன்பது பத்தாமிடங்களிலிருந்தால், அரசனவன், ஒன்பதாமிடமாகிய, திருப்பணி சீவனத்ததிபரோடு, ஐந்தாமிடத்ததிபனுங்கூடி, எந்தராசியிலிருந்தாலும், அரசனவன்—எ-று. 271

புரக்கும் வாயு யோகத்தைப்
புகலும் புகர்க்குங் காரிக்கும்
நிரைக்குந் திரிகோ ணங்கடனி
னிருப னிருக்க வவற்கைந்தில்
பரக்கு மதியந் தானிருக்கப்
பரிதி மதிகேந் திரத்திருக்க
விரைக்குங் குமமார் முலையாளே
வினவா யிதற்குப் பலன்சொல்வாம்.

இ-ள். குங்குமமணிந்த கொங்கையையுடைய பெண்ணே, சுங்கனாகிய சுக்கிரனுக்கும், பங்குபாதனாகிய சனிக்கும், திரிகோணகேந்திரங்களிற் குருவிருக்க, இவர்களுக்கு, ஐந்தாமிடத்திற், சந்திரனிருக்க, சூரியனும், சந்திரனும், கேந்திரத்திலிருக்கப்பிறந்தவனுக்கு, வாயுயோகமாம், இதற்குப்பலனை வினவு வாயாகிற் சொல்லுகின்றேன்—எ-று. 272

சொல்லும் விசால நேத்திரமுந்
துலங்குன் னதமா சொரூபனுமாய்க்

கல்வி யுளனுய்த் தனவானுய்க்
கதித்த கீர்த்திப் பிரபலனும்
நல்ல குணமுந் தருமனுமாய்
நாடுங் கிரய விக்கிரய
வல்ல வனுமாய்ப் பரதாரம்
வாஞ்சித் திருக்கும் வஞ்சனுமாம்.

இ-ள். விசாலம்பொருந்திய நேத்திரமும், பிரகாசிக்கின்ற உன்னதமான அழகுடையவனும், கல்வியுடையவனும், செல்வமுடையவனும், பலமான கீர்த்தியுடையவனும், நற்குணமுடையவனும், தருமசிந்தனையுடையவனும், வியாபாரஞ்செய்யவல்லவனும், பரதாரத்தை விரும்புகின்றவஞ்சகனுமாயிருப்பானென்று, அறியக்கடவாய்—எ-று. 273

வேறு.

வஞ்சமற்ற புதயோகஞ் சன்மத்தி லிறையும்
மன்னவன்கேந் திரத்தின்மதி மதிக்கிரண்டிற் குசனும்
விஞ்சுகுசற் கொருமூன்றிற் சனியிருக்கும் பலன்கள்
மிகுபலசாத் திரமறிவன் விரவுபராக் கிரமன்
செஞ்சொல்பெறு புத்திசா துரியன்மிகு சமர்த்தன்
செய்யநக ரம்புரக்குஞ் சீமானு மாவன்
கஞ்சமுகை தமனியவெற் பும்மிகக்கோ டென்னக்
கதித்துவிம்மும் புளகமுலைக் கன்னியரே கேளாய்.

இ-ள். தாமரைமொட்டையும், தமனியக்குன்றையும், யானைமருப்பையும் போன்று விம்மி, மயிர்க்குச்செறிந்த தனத்தையுடையபெண்ணே, ஜென்மலக்கினத்திற் குருவும், அதற்குக்கேந்திரத்திற் சந்திரனும், அச்சந்திரனுக்கு, (2)ல் செவ்வாயும், அச்செவ்வாய்க்கு மூன்றிற், சனியும்நின்றால், புதயோகமாம், அதன்பலன்கள், மிகுந்த பலசாஸ்திரங்களை அறிபவன் வெற்றியுடையவன், நல்லவாக்குடையவன், புத்திசாதுரியன், மிகுந்தசமர்த்துடையவன், பட்டணங்களை அரசாக்ஷி செய்கின்றவனுமாவன்—எ-று. 274

சந்திரன்செவ் வாய்கூடிச் சத்தமத்தி லிருக்கச்
சந்திரமங் களயோகந் தரணியர சாள்வான்
இந்திருக்கும் லக்கினகேந் திரத்திற்பொன் னிருக்க
விருங்கசகே சரியோக மெழினிறைந்த மதிக்குச்
சுந்தரஞ்சேர் லக்கினத்தா றேழெட்டா மிடத்தில்
சுபக்கிரகம் பார்க்கினிற்கிற் சொலுராஜ யோகம்
பந்தமுறு லக்கினத்திற் சசிசெவ்வா யிருக்கப்
பானுகுரு பத்தொன்ப துறில்ராஜ யோகம்.

இ-ள். சந்திரன்செவ்வாய் கூடிச்சென்மலக்கினத்திற்கு ஏழாமிடத்தில் இருக்கச்சந்திர மங்களயோகமாம், அதன்பலன், அரசன், சந்திரகேந்திரத்தில், வியாழனிருக்க, கெசகேசரியோகமாம், பூரணசந்திரனுக்கு (6) (7) (8) ஆமிடங்களில், சுபக்கிரகங்கள் நின்றாலும், அல்லது பார்த்தாலும், இராஜயோகமாம், லக்கினத்தில், சந்திரன், செவ்வாய், இருக்க, சூரியன், குரு, பத்து, ஒன்பதில் இருந்தாலும், இராஜயோகமாம்—எ-று. 275

வே று.

சோமனுர் தனக்கி ரண்டிற் சனியுறிற் சுனபா யோகம்
தாமித மாமுன் றந்தை யார்ச்சிதத் தனங்க ளில்லை
காமுறு சிறுவன் ருனும் காசினிக் கரச ளுகித்
தாமிகு தனங்க டேடித் தகுதிபெற் றிடுவன் ருனே.

இ-ள். சந்திரனுக்கு, இரண்டாமிடத்திற் சனிதனியாயிருக்கில்,சுனபா யோகமாகும், அதன்பலன், பிதிரார்ச்சிதச் செல்வமும், பொருளுமில்லை, இந்தச்சாதகன், பூமிக்கு அரசனுகித்தனங்கள்,சம்பாதித்து, அதனுல்மிகுந்த வாழ்வடைவன்—எ-று. 276

வருசசி கேந்தி ரத்தின் மன்னவ னிற்க வந்த
அரசன்றன் கேந்தி ரத்தி லம்புலி தானும் நிற்கில்
விரவுமற் றிடத்தின் மற்ருேர் மேவிய தோஷம் யானை
ஒருசிங்கங் கண்ட வாறு மோதுகே சரியாம் யோகம்.

இ-ள். வரும் உடல்காரகனுகிய சந்திரனுக்குக் கேந்திரத்திற் குருவிருக்க, அந்தக்குருவுக்கு கேந்திரத்தில், சந்திரன்நிற்கப்பிறந்த ஜாதகனுக்கு, கேசரியோகமாம், அதன்பலன், மற்றகிரகங்களால் வருகின்ற தோஷங்களெல்லாம், யானையானது, சிம்மத்தைக்கண்டால், எப்படி செயலற்று நிற்குமோ அவ்வாருகும்—எ-று. 277

வே று.

இரவிக்குப் பன்னிரண்டிற் சுக்கிரன்ருன் கூடி
யிருந்தக்கா லதுவேசி யோகமென விசைப்பர்
புரவலராற் பூச்சியமும் நால்வகையோ சனைக்கும்
புத்தியுநல் லோரெல்லாம் புகழ்ந்திடுநற் புகழும்
பரவியநற் பூமிவெகு பரப்புகளைப் புரப்பான்
பயிலுஞ்சுக் கிரன்லாபப் பதியுறினும் நன்மை
விரிவுதிரி கோணங்க ளாமைந்தோன் பானில்
வெள்ளிபுதன் குருவிருக்கில் வெகுபல னுண்டாமே.

இ-ள். சூரியனுக்குப் பன்னிரண்டில், சுக்கிரனிருந்தால், அதுவேசி யோகமாம், அதன்பலன், ராஜபூஜிதையும், நால்வகை யோசனைக்கும்

பொருந்திய புத்தியும், நல்லோர்களாற் புகழக்கூடிய நற்புகழ்ச்சியும், விரி வானபூமியை ஆளும் அரசனுகுவான், (11)ல் சுக்கிரனிருக்கின், நன்மை யான பலனும், திரிகோணஸ்தானமாகிய, (5) (9) ஆமிடங்களில் சுக்கிரன் புதன், குருவிவர்கள்நிற்கில், வெகுபலன்களை அடைவன், என்பதாம்.எ-று.

வடிவுடன்கர்க் கடகத்திற் பொன்னவன்ரு னிருந்து
வண்மையுடன் லக்கினத்தின் வான்சசியைப் பார்க்கப்
படிமிசையோர் காண்பர்களாங் கிசயோக மென்றே
பலனிதற்கு வெகுபலனும் பாக்கியமு முரித்தாய்த்
துடியிடைமா தர்கள்பலரைத் தூயமணம் புரிந்தே
தொண் ணூற்ரு ருப்வயது தொடங்கவரு மளவும்
கடிகமழு மலரணேமே லனுராகம் புரிந்தே
காசினியி லிருப்பனெனக் கருதிடுமிந் நூலே.

இ-ள். குரு கற்கடகராசியில்நின்று, அவ்விலக்கிஞதியாகிய பூரணச் சந்திரனைப்பார்த்தால் அங்கிஷயோகமாம், அதன்பலன், பற்பலயோக பலன்களை யனுபவிப்பதோடு, பாக்கியமும் பெற்று, உடுக்கைபோன்ற இடையையுடைய பலமாதரை, இடுக்கமில்லாது, விவாகஞ்செய்து (90) வயதளவும் பூமியிலிருந்து, வாசனைகமழுகின்ற, மலரணேமேல், மங்கையர் கள், தங்க அங்கவர்களோடு அநுராகமாகிய கேளிக்கைகளாகக் கூடிச் சுகித் திருப்பான், என்று, இந்நூல், சொல்லும்—எ-று. 279

உறுசன்மத் தாரகையிற் சென்றநா ழிகையை
ஓரைந்திற் கழித்தபல னுதயமுத லாகப்
பெறுஞ்சசியின் லக்கினமா மோராலக் கினமும்
பிறந்தசன்ம லக்கினமும் பிறையிருந்த வீடும்
மறுவிலா விந்நான்கு மனேயுச்ச வீடாய்
வயங்கவிறை யோகமென வேவழுத்த வேண்டும்
கறையகலக் கலைநிறைந்த நன்மதியம் போலும்
கமலமலர் போலுமுகக் கன்னியரே கேளாய்.

இ-ள். களங்கமில்லாமல் விளங்காநின்ற, பூரணச் சந்திரன்போலும், தாமரைமலர்போலும், முகத்தையுடைய, பெண்ணே கேட்பாயாக, ஜென்ம நட்சத்திரத்திற்சென்ற நாழிகையை உதயமுதலாக, இராசியொன் றுக்கு, ஐந்தைந்தாகக் கழிக்க மிச்சம் எந்தராசியிலொட்டுகிறதோ, அது சந் திராலக்கினமாம், அந்தச்சந்திராலக்கினமும், ஓராலக்கினமும், ஜென்மலக் கினமும், சந்திரனிருந்த வீடும், ஆகிய இந்நான்குராசியிலும், உச்சக்கிரகங் கள் நின்ருல், இராஜயோகமென்று சொல்லவேண்டும், (இந்தமனேக்கதிபர் கள் உச்சமானுலும் யோகமுண்டென்பது கருத்து)—எ-று. 280

வேறு.

ஓராலக் கினங் கடிகா லக்கின முதித்த சன்மம்
நேராயிம் மூன்று வீடு முச்சமாய் நின்றோர் காணப்
பாராளும் ராஜ யோக மிருமனை பார்க்கின் மன்னும்
பேராயோர் மனையைக் காணிற் றனவானாய்ப் பேசுங் காலே.

இ-ள். ஓராலக்கினம், கடிகாலக்கினம், ஜென்மலக்கினம், ஆகிய இம் மூன்று ராசிகளையும், உச்சக்கிரகங்கள் பார்க்க, இராஜயோகமாம், இரண்டு ராசிகளைப்பார்த்தாலும் இராஜனும், ஓரிராசியைப்பார்க்கத் தனவானும்.

கடிகாலக்கினமென்பது முற்செய்யுளில் நட்சத்திரநாழிகை, ஐந்தைந் தாக எண்ணிக்கண்ட லக்கினமாம்.

சோமனுக் காறேழெட்டிற் சுபக்கிர கங்கணின்றால்
பூமலி யதிகயோக மிதன்பலன் புகலுங்காலை
நேமியோன் சவுரியங்க ணிறைசிவன் பலமுமுள்ளான்
தீமையாம் பகையை வெல்லுஞ் சேனாதி பதியுமாவன்.

இ-ள். சந்திரனுக்கு, (6) (7) (8) ஆமிடங்களில், சுபக்கிரகங்களிருந் தால், அதிகயோகமாம், இதன்பலன், சக்கிரிபோன்ற சவுரியங்களைப்பெற்ற வனும், பலம்பெற்றவனும், கொடிதான பகைவர்களைச் செயிக்கின்ற சேனாதிபதியுமாவன்—எ-று. 282

இந்துவுக் கிரண்டாம்வீட்டி னியகோ ளிருந்தகாலை
முந்திய சுனபாயோக மிதன்பலன் மொழியுங்காலை
சந்ததந் தனவான்ராஜ சன்மானன் புத்தியுள்ளான்
சுந்தரப் புவிகளெங்குந் துதித்திடுங் கீர்த்திமானாம்.

இ-ள். சோமனுக்கு இரண்டாம்வீட்டில் வாமமாகிய சுபக்கிரகங்களிரு ந்தால், முன் (276) வது செய்யுளிற் சொல்லிய சுனபாயோகமாம், அதன் பலன், நீங்காத செல்வமுடையவனும், நிருபர்சன்மானம் பெறுபவனும், நற்புத்தியுடையவனும், நாட்டிலுள்ளோர் யாவரும், அவரவர் பாட்டிற்றுதிக் கப்பெற்ற கீர்த்தியுடையவனுமாவன்—எ-று. 283

விஞ்சு புந்தி குருவுச்ச மெய்திடச்
செஞ்சொற் சுக்கிரன் கோலிடைச் சேர்ந்திட
இன்சொன் மேஷங் குசனுற வெய்தினோன்
அஞ்சி டானவ னம்புவி யாள்வனே.

இ-ள். புலவனும், பொன்னனும், உச்சவீட்டிலிருக்க, நிலமகனாகிய செவ்வாயும் மேஷத்தில்நிற்க, கலவிக்குரிய காமசுக்கிரனும் துலாத்திலிருக் கப்பிறந்த ஜாதகன், சத்துருக்களால் யாதொரு பயமுமில்லாமல், அரசாளு வன்—எ-று. 284

ஆளும் லக்கினத் தொன்பதி லானநற்
கோளு றிற்சிங்க டாடவி யோகமாம்
தூளி காற்றெனக் கோபன்சுக முளான்
நீளு மற்ப நிதியுளன் பாவனே.

இ-ள். லக்கினத்திலும், பாக்கியத்திலும் நல்லசுபக்கோளிருக்கில், சிங்க டாடவியோகமாம், அதன்பலன், பெருங்காற்றைப்போல, வருங்கோபனும், பாபனும், சொற்பத்திரவியவானும்; அற்பசுகவானுமாவன்—எ-று. 285

பாவ மற்றிடு லக்கினப் பார்த்திபற்
கேவும் ரெண்டிற் சுபர்மூன் றி லெய்திடில்
தாவு நான்கெனுந் தானநற் கோளுறில்
கோவு மாகிக் குலாவி யிருப்பனே.

இ-ள். குற்றமில்லாத நற்றிரம் வாய்ந்தலக்கினாதிபதி நின்ற வீட்டிற்கு (2) (3) (4) ஆமிடங்களில் சுபக்கிரகங்கள் நின்றால், இராஜனாகிச் சந்தோஷமாய் வாழ்வன்—எ-று. 286

வே று.

குலவுமிரண் டாம்ராசி யுச்சமா னாலும்
குளிர்மதிபொன் புகரிவரி லெவர்நின் றாலும்
இலவிதழா யிரண்டதா மிடஞ்சரமே யாயின்
இராஜயோ கத்திற்கா லாந்திரம தாயின்
உலவுமறை யுபயம்பூ ரணராஜ யோகம்
உரைசெய்யு மிவர்லாபத் துறினுமினி தாகும்
புலவகல நெய்குளித்த வடிவேலை நிகராய்
புவியிலிளை யோர்மயங்கப் புரிகயற்கண் ணாளே.

இ-ள். நேர்மையில்லாத சத்துருக்களைப் போர்முகத்திற், சீர்மைத் தசைநிணங்களை, நீங்கும்படி நெய்யிற்குளித்த கூர்மைதங்கிய வேலாயுதம் நிகராய், காமப்பாலியரைத் தாமே மயங்கச் செய்யும் நீமக்கயல்போன்ற கண்களையுடைய பெண்ணே, ஜாதகன் சென்மலக்கினத்திற்கு, இரண்டாம் இராசிக்கதிபதி, உச்சக்கிரகமானாலும், (அல்லது) இரண்டாமிடத்தில், பூரணச்சந்திரன், சுக்கிரன், குரு, ஆகிய இவர்கள், மூவர்களில் யாதாமொருவர் நின்றாலும், இரண்டாமிடம், சரவிராசியாகில், காற்பாகம், 'இராஜயோகமாம், அவ்விரண்டாமிடம், திரவிராசியாகில், அரைப்பாகம், இராஜயோகமாம், உபயவிராசியாகில், பூரண ராஜயோகமாம், இதிற்சொல்லியதுபோல லாபஸ்தானமாகிய, பதினோராமிடத்தில், நின்றாலும், அதேசரமானால், காலும் திரமானால் அரையும், உபயமானால், பூரணயோகமாம்—எ-று. 287

ஆமூன்றிற் பத்தாறிற் பன்னொன்றிற் பாவர்
அமரிலோ வுபசயமா மானதிரி கோணத்
தாமூன்று கேந்திரத்தி லுச்சங்க டன்னில்
தன்மனையிற் சுபர்நிற்கத் தகுராஜ யோகம்
தேமூன்று மமுதசசி யிருந்த ராசிக்குள்
செறியுமதி பதிதனையுன் சென்ம ராசிக்குள்
பாமூன்றி னதிபதியு மற்றோர் பாராமல்
பகைத்தசனி பார்க்கிற்சன் னியாசியெனப் பகரே.

இ-ள். ஜென்மலக்கினத்திற்கு, (3) (6) (10) (11) ஆமிடங்களில், பாவக்கிரகங்களிருந்தால், உபஜெயமாம், திரிகோணமாகிய, (1) (5) (9) ஆமிடங்களிலும், கேந்திரஸ்தானமாகிய, (1) (4) (7) (10) ஆமிடங்களிலும் உச்சம்பெற்றாவது, ஆட்சிபெற்றாவது, சுபக்கிரகங்களிருந்தால், இராஜ யோகமாம், சந்திரனிருந்தவீட்டதிபதியையும், லக்கினாதிபனிருந்தவீட்டதி பதியையும் மற்றைய சுபர்கள் பார்க்காமல், பகைபெற்ற சனிபார்த்தால், சன்னியாசியென்று சொல்லவேண்டும்—எ-று. 288

பகருமந்த னுக்குமிரண் டாமிடத்தி லிந்து
பண்புடன்மூன் றாமிடத்தி லரசன் றானும்
சகமறிய வேயிருந்தால் ராஜ யோகம்
சன்மலக்கி னங்கள்விருச் சிகமே யாகி
நிகரிலந்த மனையைச்சேய் நின்று பார்க்கில்
நிலமெலாம் புறந்தருளும் ராஜ யோகம்
நகர்கடக லக்கினத்திற் சசிக்கேழ் செவ்வாய்
நண்ணில்மக ராஜயோக மென்பார் நல்லோரே.

இ-ள். மந்தனுக்கு இரண்டாமிடத்தில், இந்துவும், மூன்றாமிடத்தில், மந்திரியும், வந்திருக்கில் மண்டலத்தோரறிய, ராஜயோகமாம், ஜென்மலக் கினம், விருச்சிகமாகி, அந்தவிராசியை செவ்வாய் பார்த்தாலும், நின்றா லும், பூமியை எல்லாங்காக்கின்ற இராஜயோகமாம், கற்கடகலக்கினமாக அதில் அம்புலியிருக்க, அதற்கேழாமிடத்தில், செவ்வாய்நின்றாலும், இராஜ யோகமாமென்று, நல்லோர்கள் சொல்லுவார்கள்—எ-று. 289

வேறு.

நல்லதோர் கன்னி சென்ம லக்கின மாகச் சுங்கன்
மெல்லவே யுச்சமாக வில்லிடை வேந்தன் மேவச்
சொல்லிய பாவர் கூடிச் சூழ்ந்திடா திருக்கின் மன்னும்
வல்லதன் புவியுமற்ற மன்னர்க ளாடு மாள்வன்.

இ-ள். கன்னியாராசி ஜென்மலக்கினமாக, அதற்கேழாமிடமாகிய மீனத்திற், சுக்கிரன் உச்சமாக, தனுசிற்குருவிருக்கப் பாவக்கிரகங்கள் பார்க்காமலும், சேராமலும், இருக்கப்பிறந்தவன், தன்னுட்டையும், மற்றமன்னர்நாட்டையும், ஆளும், அரசனுவன்—எ-று. 290

ஆளுங்கர்க் கடகஞ் சன்ம மாகவே யிரவி பொன்னும்
கோளுமே யுச்ச மாகக் குளிர்புதன் வெள்ளி தாமும்
நீளுந்தன் வீட்டினிற்க நீண்டபாக் கியாதி தாமும்
மீளுங்கேந் திரத்தி னிற்க வேணராச் சியம்பு ரப்பான்.

இ-ள். நண்டாகிய கடகவிராசியே கொண்டாடும் ஜென்மலக்கினமாக, அதில், வியாழனும், வெய்யவன்மேடத்திலும், உச்சமாகி, புதனும், சுக்கிரனும், தன் தன்வீட்டில் ஆட்சிபெற்றிருக்க, அநேகராச்சியங்களை ஆளுவான் (பாக்கியாதிபதி கேந்திரமென்பது குருவுச்சமென்றமையால் ஏற்கனவே' அமையப்பெற்றது)—எ-று. 291

வே று.

புரக்கும் புதனுந் தானுச்சம்
பொருந்தி யிரண்டா மிடம்வெள்ளி
இருக்க வளரும் பிறையரச
னிருவர் கூடிப் பலவானுய்த்
தருக்கி யிருக்க வெகுபூமி
தனக்கு மன்னன் ருனுகிப்
பெருக்கும் வித்தை பிரபலமே
பிரசங் கிக்குந் துரையாவான்.

இ-ள். சாமன், உச்சமாகி, அதற்கிரண்டிற் காமனும் பூரணச்சோமனும், சுரர்குருவுங்கூடி பலம்பெற்றிருக்கில், பேருலகுக் கரசனுகிப்பின்னும் பெரியவித்தைகற்றுப், பிரபலனுகிப், பிரசங்கஞ்செய்யக்கூடிய பெம்மானுகவுமிருப்பான்—எ-று. 292

துரையாஞ் சனிக்குஞ் சுக்கிரர்க்கு
நடுவே சோமன் ருனிருந்தால்
உரையா யனபா யோகமிதிற்
பலன்க ணீதி யுளன்போகி
தரையாண் மன்னர் கைப்பொருளைத்
தான்கைக் கொள்வன் குலசிரேட்டன்
புரையா சார பாவன்ரு
னியவான் புரக்கிரா மணியாமே.

இ-ள். நீலனுக்கும், காமலோலனுக்கும் நடுவே, நிசாபதிநின்றால், அனபாயோகமாம், அதன்பலன், நீதியுள்ளவன், போகமுள்ளவன், நிருபர்கள் பொருள்களைப்பெறுபவன், குலசிரேஷ்டன், ஆசாரமுள்ளவன், தானியமுள்ளவன், கிராமாதிகாரியுமாவன்—எ-று. 293

வேறு.

உதித்தருளுஞ் சென்மாதி பதிலா பாதி
ஒருமித்தைந் தாமிடத்தி லுகந்து நிற்க
விதித்தருள்வா கனத்தாதி மூன்றாம் வீட்டில்
மேவிடவவ் வீட்டுக்குப் பத்தா மாதி
துதித்தசன்மா திபனுடனே யந்தின் மேவத்
தோன்றியிம சேதளவுஞ் சூழ்புவிக்குள்
கதித்ததுரை யாய்ச்செங்கோல் செலுத்தி யிந்தக்
காசினியெல் லாம்புரப்பன் காணுங் கண்டாய்.

இ-ள். அன்றுதித்தலக்கினாதியும், நின்றுதித்தலாபாதிபதியும், ஒன்றுசேர்ந்து, என்றும் ஐந்தாமிடத்தில், பலத்துநிற்க, நான்காம்வீட்டதிபன், மூன்றாம்வீட்டில் இருக்க, அவ்வீட்டுக்குப் பத்தாமிடத்ததிபன், லக்கினாதிபதியுடன் சேர்ந்து, ஐந்தாமிடத்தில் நிற்கப்பிறந்த ஜாதகன், இமயமலைமுதல், இராமேஸ்வரம் வரையிலும், உண்டாகிய பூமியைக் கண்டோர் கொண்டாடும்படி செங்கோல் செலுத்தியெங்கும் தன்னாணைசெல்ல அரசாளுவன்—எ-று. 294

கண்டருளும் நீசபங்க ராச யோகம்
காணும்வகை நீசத்தா னத்து வேந்தும்
திண்டிறல் சேர்ந் திடுமந்த மனையுச்ச வேந்தும்
திங்கள் கேந் திரந்தன்னிற் சேர்ந்தா னாகில்
மண்டியிடு நீசபல னொழிந்து கீர்த்தி
மகராஜ ராஜனென வாழ்ந்திடுவன் பூவில்
கொண்டபலர் நீசத்தி லிருந்தாலு மொருகோள்
குறிநீசங் கெடிலெல்லாக் கோளும்நன் றாமே.

இ-ள். நீசபங்க ராஜயோகமாவது, நீசன் இருந்த வீட்டுக் கதிபனும், அந்தவீட்டுக்கு உச்சநாதனும், சந்திரகேந்திரம்பெற்றால் நீசபலன் நீங்கி, கீர்த்தியுள்ளராஜனாய் வாழ்வன், பலகிரகங்கள் நீசம்பெற்று, அதில் ஒருவர் நீசபங்கமானாலும், எல்லாக்கிரகங்களும் நன்றாகும்—எ-று. 295

வேறு.

கோலேலக் கினமா யந்தக் கோலிற்சுக் கிரனு மேவ
மாலைவெண் மதிய மாறா மிடத்தினின் மருவி நிற்கச்

சாலவே குருவுச் சத்திற் றங்கியே மதியைப் பார்க்கில்
சீலமெய்ஞ் ஞானி யாகச் செகமெலாம் புறப்பன் றூனே.

இ-ள். லக்கினம் துலாமாய்ச், சுக்கிரனிருக்க அதற்காறாமிடத்தில், ஆலோனிருக்க, அச்சேலோனுகிய குரு உச்சமாகி, உடுபதியைப் பார்க்கப் பிறந்த ஜாதகன், ஒழுக்கமுள்ள மெய்ஞ்ஞானியாய், உலகத்தையாளுவான்.

வே று.

தானமெனு மாதுருத் தானத்தா னந்தத்
    தானத்தி லேயிருக்குந் தகைமை கேளீர்
வானசெவ்வாய் ருசியோகம் புதன்பத்திர யோகம்
    மகிழ்குருவங் கிசயோகஞ் சுக்கிரனே யாகில்
மானமுள மாளுவயோ கஞ்சனித னக்கே
    வருசகர யோகமென வேவழுத்த லாகும்
ஈனமற விவர்தம்மி லேயொருவர் நிற்கில்
    இதுராச யோகமென வேயியம்ப லாமே.

இ-ள். சுகசவுக்கிய மாதுர்ஸ்தானுதிபதி, அந்தச்சுப மாதுர்ஸ்தானத்திலிருந்தால், அதன்பெருமையைக், கேட்பாயாக ஜென்மலக்கினத்துக்குநான்காமிடம், மேடவிருச்சிகமாயிருந்து அதிற் செவ்வாயிருந்தால், அது ருசியோகம், மிதுனம், கன்னியாயிருந்து, அதிற்புதனிருந்தால், பத்திரயோகம், தனுசு மீனவிராசியாயிருந்து, அதிற்குருவிருந்தால், அங்கிஷயோகம்,ரிஷப துலாமாயிருந்து அதிற்சுக்கிரனிருந்தால், மாளுவயோகம், மகரகும்ப விராசியாயிருந்து, அதிற் சனியிருந்தால், சகரயோகமென்று சொல்லவேண்டும் இவர்களில் எவரொருவர் நின்றாலும், இராஜயோகமெனச் சோதிடநூலுணர்ந்த முன்னோர்கள் சொன்னார்கள்—எ-று. 297

ஆமேட மெருதுசுரு நண்டு கன்னி
    யைந்திடத்துங் கருநாக மமர்ந்து நிற்கில்
பூமேடை தனிற் றுயிலும் ராச யோகம்
    போற்றிடுவர் வேறின்னம் புகலக் கேளாய்
ஏமாறு தோனான்கு கேந்தி ரத்தும்
    இடைவிடா மற்கிரக மிருந்த தாகில்
தேமேவு பர்வதமாம் யோக மாகும்
    சீமானு குவன்ராச யோகஞ் செப்பே.

இ-ள். மேடம், இடபம், கற்கடகம், மகரம், கன்னி, ஆகிய இவ்வைந்து, இடங்களில், எவ்விராசியிலாவது, ராகுவிருந்தால், அதன்பலன், மாடமாளிகைகட்டி, கூடத்தில் பூப்பஞ்சணைமீது துயிலும், இராஜயோகமாம், லக்கினகேந்திரமாகிய, (1) (4) (7) (10) ம் இடமாகிய இத்தானங்கள் நான்

கிலும், இடைவிடாமற் கிரகமிருக்கில், பர்வதயோகமாம், இப்படியிருந்தால் செப்புதற்கரிய சீமானுகுவன், இராஜயோகமுடையனுமாம்—எ-று. 298

வேறு.

செப்பிய திரிகோ ணத்திற் றிரிகோணத் தானத் தாதி
தப்பற வுச்ச மாயத் தலத்துறில் ராஜ யோகம்
ஒப்புட னிரவி பக்க மிரண்டினு முயர்கோ ளூற்றால்
அப்படி யுபய வெண்சா மரையுடை யரச னுமே.

இ-ள். திரிகோணவிராசிக் கதிபதி திரிகோணத்தில் உச்சமாய்ப் பலத்து நிற்கில், இராஜயோகமாம், சூரியனுக்கு, இரண்டுபக்கமும், சுபக்கிரகங்களிருந்தால், இருபுறமும் வெண்கவரி வீசக்கூடிய வேந்தனுமாகுவன்-எ-று.

அரசனு ரேழிற் செவ்வா யாறிற்பன் னொன்றிற் காரி
இரவியு மூன்றி னான்கி லிராகுவு மிவரா ரேனும்
பரவியே நிற்பா ராகிற் பாஸ்கர யோக மென்பாம்
இரவிமுன் பனிபோற் குரூர மிராதென வியம்பு மானே.

இ-ள். பெண்ணே, பொன்னவனேழிலும், பூமகன் ஆறிலும், பங்குபாதன் பதினொன்றிலும் மூளரிநண்பன், மூன்றிலும், இராகு, நான்கிலுமாக, இவர்களில், எவர்களேனும், ஒருகிரகம், நின்றால், பாஸ்கரயோகமாம், இதன் பலன், இந்த ஜாதகனுக்கு எந்தப்பிணிவந்தாலும் அந்தநேரமே, சூரியனைக் கண்ட பனிபோல் விலகிவிடும், குரூரஞ் செய்யமாட்டாதென்று கூறுக—எ-று. 300

ஏயலக் கினமீ னத்தோற் கெழிற்றண்டி னண்டே ருத்தில்
நேயமாய்க் கருங்கோ ளொன்று நின்றிடில் ராஜ யோகம்
ஆயலக் கினமே கும்ப மதனிற்பொன் னணுகப் புந்தி
தூயநல் லுச்ச மாகத் துரைநல்வாக் கரசாய்ச் சொல்லாய்.

இ-ள். மீனலக்கினத்திற் பிறந்தவனுக்கு, மிதுனம், கடகம், ரிஷபம், இவைகளில், ராகுநிற்கில், இராஜயோகமாம், லக்கினம், கும்பமாய், அதில் வியாழனிருக்க புதன் உச்சமாயிருந்தால், நல்லவசனத்தையுடைய ராஜனென்று சொல்லவேண்டும்—எ-று. 301

சொல்லிய சென்மந் தன்னிற் சோமனுங் குருவுங் கூடி
நல்லதோர் பத்தி னுவிற் சுக்கிர னயந்து நிற்க
அல்லலற் றிவரை யுச்ச மானதோர் சனியுங் காண
வல்லமை யரசர்க் கொப்பாய் வாழ்வன்மா னிலத்தின்மாதே.

இ-ள். மண்ணிலும், விண்ணிலும், எண்ணிலடங்காப்பெண்களிற்சிறந்த, பெண்ணே, ஜென்மலக்கினத்திற் சீதனும், சீவனும், சேர்ந்திருக்கப் பத்தாமிடத்திலாவது நான்காமிடத்திலாவது, பளிங்குளன்னும் சுக்கிரனிருக்க,

துன்பமற்றசனி உச்சமாகிப் பார்க்கப்பிறந்தவன், வல்லமையுடைய, அரச னுக்கொப்பாய்த் தொல்லுலகில் வாழ்ந்திருப்பன்—எ-று. 302

மாதேகே டன்ம யோக வகைகன்ம மன்ன னோடு
தாதையுங் கூடி யெந்தத் தலத்தினி லிருந்த போதும்
ஓதிய வொருவர் வீட்டி லொருவர்மா றுயி ருந்த
போதுமா றுத செல்வம் பொருந்திடும் ராஜ யோகம்.

இ-ள். பூதலத்தோர்களுக் காதரவாகுங் காதலையுண்டாக்கும்மாதரசே, கேட்பாயாக, பிரபலயோகம், பத்தாமிடத்ததிபதியோடு, ஒன்பதாமிடத்ததி பதி ஒன்றுகூடி, எந்த இராசியிலிருந்தாலும், (அல்லது) ஒன்பதுபத்துக்கதி பதிகள், கிரகமாறிநின்றாலும், மாறுதசெல்வம் பொருந்துவதோடு ராஜ யோகமு முண்டாம்—எ-று. 303

யோகமா மிலக்கி னாதி யிருந்தவீ டுடையோ னுச்சம்
ஆகக்கேந் திரத்துற் றாலும் பர்வத யோக மாமே
ஏகமா மனையோன் றானு மிருந்தவங் கிசத்தோன் றானும்
வாகுகேந் திரகோ ணத்தில் வரின்மன்னர் மன்ன னாமே.

இ-ள். ஜென்மலக்கினாதிபதி யிருந்தவீட்டுக்குடையவன், உச்சமாகிக் கேந்திரம்பெற்றாலும், பர்வதயோகமாம், லக்கினாதிபதியும், அங்கிசாதிபதி யும், கேந்திரகோணங்களிலிருந்தால், ராஜாதிராஜனவன்—எ-று. 304

மன்னிய சன்ம முன்பின் மனைக்கிறை யிருவர் கூடிப்
பன்னுகேந் திரத்தி ருக்கிற் பர்வத யோக மென்ப
மின்னனை யார்க்கு நேயன் வெகுசவுக் கியவான் வேந்தன்
துன்னிய கீர்த்தி யுள்ளான் றுரகாதி பதியு மாவன்.

இ-ள். ஜென்மலக்கினத்திற்கு, முன்பின்வீட்டுக்கதிபர்கள், இருவருஞ் சேர்ந்து, கேந்திரங்களிலிருந்தால், பர்வதயோகமாம், அதன்பலன், ஸ்திரி லோலனும், சௌக்கியமுள்ளவனும், கோமானும், சீமானும், குணவானும், கீர்த்திமானும், குதிரைகளுக்கதிபதியுமாவன்—எ-று. 305

ஆனதோர் பணப ரத்தி லடுத்தலக் கினத்திற் சோமன்
தானுறக் கேந்தி ரத்திற் றமனியன் றானும் மேவ
வானவர்க் கரச யோக மதிமக னுச்ச மாகக்
கூனவில் லங்கி சத்திற் றேன்றிடிற் செங்கோல் வேந்தாம்.

இ-ள். பணபரத்திலாவது, லக்கினத்திலாவது, சந்திரனிருக்க, அச்சந் திரனுக்குக் கேந்திரத்தில் மந்திரியாகிய, குருநிற்கப்பிறந்த ஜாதகனுக்கு, இந் திரயோகமாம், புதன்உச்சமாகி, தனுசாங்கிஷத்திலிருக்க, நீதிசெலுத்தும், கிருபனவன்—எ-று. 306

வேறு.

ஆகிய மகத்தின் முதற்பதத் திரவி
யசுபதி முதலினிற் செவ்வாய்
அத்தமூன் ருங்கா லிடத்தினிற் புந்தி
யவிட்டமாந் திரயபா தத்தில்
வாகுசேர் சோதி யுபயதா ளிடத்து
மருவியே மந்தனு ரிருக்க
வண்மைசேர் மூல முதலடிக் கரசன்
மருவுரோ கணியிரு காலும்
பாகுசேர் மொழியாய் சித்திரை மூன்ரும்
பதத்தினுஞ் சுக்கிர னுறையும்
பலந்திர யக்கா ணங்நவாங் கிசையும்
பரவிய துவாதசாங் கிசையும்
மோகமாந் திரிங்கிசர வைங்கிசை ராசி
முதலிந்த வகைக்கெலாங் காணும்
முறையினி லுதித்தோ னரசனு மென்றே
மொழிவர்முன் னூலுணர்ந் தவரே.

இ-ள் கெண்டையொத்த விழியும், நண்டையொத்த முழந்தாளும், கண்டையொத்த மொழியுமுடைய, பெண்ணே, மகம்முதற்பாதத்திற்சூரிய னும் அசுபதிமுதற்பாதத்திற் செவ்வாயும், அஸ்தம், மூன்ரும்பாதத்திற்புத னும், அவிட்டம் மூன்ரும் பாதத்தில், (அல்லது) சுவாதி இரண்டாம்பாதத் திற் சனியும், மூலமுதற்பாதத்திற் குருவும், உரோகணி இரண்டாம்பாதத் தில், (அல்லது) சித்திரைமூன்ரும்பர்தத்திற் சுக்கிரனுமிருக்கவும், இவர்கள் நின்ற விராசிகள் லக்கினம், திரேக்காணம், நவாங்கிஷம் துவாதசாங்கிசம், திரிதாங்கிசம், சப்தமாங்கிச லக்கினமாகப் பிறந்தஜாதகன், வேந்தனு மென்று வேதங்களைக்கற்ற சாந்த குணப்பெரியோர் தெரியச்சொல்லுவர்.

(முதலிய என்னும்மொழிவந்ததால், சப்தமாங்கிசம், சோடசாங்கிசம், தசாங்கிஷம், சஷ்டியாங்கிஷங்களையும், விரித்துச் சொல்லப்பட்டது.)

மொழிந்திடுஞ் சிங்கத் தரசனு மிருக்க
முறையினில் வெள்ளிகும் பத்தில்
முயன்றுமா விந்து முச்சமா யிருக்க
முதலிவர் நால்வரு மடைவே
ஒழிந்துறு முச்ச மெய்திட ராஜ
யோகமாங் கடகரா சியினில்

ஒண்மதி யரசன் கூடவு மரச
　　னொருவனு யேழினி லிருக்கக்
கழிந்தவல் லகத்து ளொருவரைக் காணக்
　　கழறுவ ரிராஜயோ கமதாம்
கருதிடு மொருகோ ளுச்சமாய் மற்றோர்
　　காணுநட் பாட்சியி லிருக்க
வழிந்திடுங் கருணை வெள்ளிமீ னத்தின்
　　மன்னவன் காரிவில் லிடத்தில்
மதிநுதற் கன்னி யிடத்தின்மா லிருக்க
　　வந்தவன் மன்னனு குவனே.

இ-ள். கூறிடுஞ் சிம்மவிராசியிற் குருவிருக்க, கோலாட்சியென்னும், சுக்கிரன்கும்பவிராசியிலிருக்க, பச்சையோனும், சந்திரனும்உச்சமாயிருக்க, (அல்லது) பொன், புகர், புந்தி, இந்துவாகிய இந்நால்வரும், உச்சமாயிருக்கப்பிறந்த ஜாதகனுக்கு இராஜயோகமாம், கடகவிராசியில், கலைநிறைந்த கலாநிதியும், குருவும் கூடினாலும், (அல்லது) குரு ஏழாமிடத்திலிருந்தும், லக்கினத்திலிருக்கிறகிரகம், ஏதாவதொரு கிரகத்தைப்பார்க்க, இராஜயோகமாம், ஏதாவதொருகிரகம் உச்சமாகியும், மற்றவர்கள், நட்பு, ஆட்சிகளிலும், சுக்கிரன் மீனத்திலும், குருவும், சனியும், தனுசிலும், புதன் கன்னியிலும், இருக்கப்பிறந்தவன், அரசனுவன்—எ-று. 308

ஆகுவா கனத்தோ னருளினுற் கடகத்
　　தரசனு மிரவிமே ஷத்தில்
அம்புலி மகன்சுக் கிரனொரு தேற
　　வரசர்கள் யோகமென் றுரைப்பார்
வாகுசேர் வெள்ளி லக்கினத் திருக்க
　　மாமதி யுச்சமா யிருக்க
மன்னவன் கதிரோன் றன்னகத் திருக்க
　　மருவுநல் லரசயோ கமதாம்
ஏகமா மதிக்கா றேழுட னெட்டி
　　லெழிற்புதன் பிருகரு கிருக்க
இராஜயோ கமதாம் பாம்பலா தெழுவ
　　ரினியதன் னகத்துறின் முன்போல்
மோகமால் வெள்ளி யுச்சமாய்த் தனுசின்
　　முனிவிலா சசிகுரு விருக்க
முந்துதே ளிடத்தங் காரக னிருக்க
　　முறையிறை யோகமென் றுரைப்பார்.

இ-ள். ஆருவாகனமேறும், ஏகதந்தன் அருளால் ஏகமாகிய கடகவி ராசியில், யோகமாகிய குருவும், சாகமாகியமேடத்திற் சவிதாவென்னும் சூரியனும், சாமனும், காமனும், இடபத்திலிருக்க, ராஜயோகமென்றுசொல் லுவார்கள், சுக்கிரன் லக்கினத்திலிருக்கச் சந்திரன் உச்சமாயிருக்க, குரு சூரியன், ஆட்சியிலிருக்க, இராஜயோகமுள்ளவனும், சந்திரனுக்கு, (6) (7) (8) ல், புதன், சுக்கிரனிருக்க, இராஜயோகமாம், பாம்பல்லாத, ஏழுகிரகங் களும், சொட்சேத்திரம் பெற்றுநிற்கில், இராஜயோகமாம். சுக்கிரன், உச்சமாகி, தனுசிற் குருவும், விருச்சிகத்திற் செவ்வாயும், இராஜயோக மென்று பெரியோர் சொல்லுவர்—எ-று. 309

உரைசெறி குருவம் புலிகதி ருச்ச
முயர்குசன் புந்தியே ழிடத்தில்
உறைந்திடச் சனியுஞ் சுறுவுற ராஜ
யோகமுச் சங்கதிர் பெறவும்
அரசனுந் தனுசி லுறினுமே ஷத்தி
லம்புலி பொன்புக ரிருக்க
அரசயோ கமதா மேறிலக் கினமா
யம்புலி கிறையுநண் டேறப்
பரவிய வாறு கோளுமம் மதியைப்
பார்க்கவந் தியத்தின்மன் னவனும்
பாக்கியந் தனலா பாதிசந் திரனும்
பண்பொடுங் கேந்திரத் திருக்கப்
பிருகுலா பத்தி லாட்சியா யிருக்கப்
பிரபல ராஜயோக மதாம்
பெருகுமால் வெள்ளி சனியுமே கூடிற்
பெறுமுக சவுந்தர முளனும்.

இ-ள். வியாழனும், சந்திரனும், வெய்யவனும், உச்சத்திலிருக்க, செவ் வாயும், புதனும் ஏழாமிடத்திலிருக்க, சனி மகரத்திலிருக்க இராஜயோக மாம், சூரியன், உச்சம்பெற்று குரு, தனுசிலிருந்தாலும், மேஷத்தில், சந் திரன், வியாழன், சுக்கிரன், ஆகிய இவர்கள் இருக்க, இராஜயோகமாம், ரிஷபலக்கினமாக, கடகத்தில் சந்திரனிருக்க, மற்ற ஆறுகிரகங்கள், சந்திர னைப்பார்க்க, கடைசிகாலத்தில், இந்நிலமதனில், மன்னவனுகி வாழ்வான். பாக்கியம், தனம், லாபாதிபதிகளும், சந்திரனும், கேந்திரஸ்தானங்களில் இருக்க, சுக்கிரன், லாபஸ்தானத்தி லாட்சியாயிருக்க, பிரபலமான ராஜ யோகமாம், புதன், சுக்கிரன், சனி, இவர்கள் கூடியிருக்கப்பிறந்தஜாதகன், யாவருங் கொண்டாடக்கூடிய முகவசீகரத்தை யுடையவனுவன்—எ-று.

உள்ளதோர் கடக லக்கின மாக
வுயர்குசன் குருவிரு வருமாய்

உற்றதோர் மேஷ நண்டிடத் தேனு
முறைந்திடப் பாவரை யொழித்து
தெள்ளிரை யாக வுரைந்திடிற் றீர்க்க
சீவியாந் துரகாதி பதியாம்
செய்யலக் கினமா றேழுட னெட்டுஞ்
செப்புமித் தலங்கணான் கினிலும்
கள்ளமாய்ப் பாவ ரன்றிநல் லோர்கள்
காதலிற் றிடைவிடா திருக்கில்
கருதிய நாபி யோகமா மிதற்குக்
கனபலன் மந்திரி யாகி
வள்ளலாய்ச் சேனைத் தலைவராய்க் கலவி
மாதர்கள் பலர்க்குநா யகனாய்
வாலிப முதலாய் வெகுதனம் படைத்து
வாழ்வனென் றுரைப்பர்மா தவரே.

இ-ள். கடகலக்கினமாக, செவ்வாயும், குருவும், மேஷத்திலாவது, கடகத்திலாவது, இருக்கப் பாவர்கள், சேராதிருந்தால், தீர்க்கஜீவனும், குதிரைக்கதிபதியுமாவன், லக்கினம், (6) (7) (8) ஆகிய இந்நான்கிடத்திலும், பாவர்களல்லாத சுபர்கள் வரிசையாயிருக்கில், நாபியோகமாம், இதன்பலன் மந்திரியும், வள்ளலும், சேனைத்தலைவருமாய், எவ்வன பலமாதருக்கு நாயகனாகி, வாலிபமுதற்கொண்டு, பெருஞ்செல்வந்தனாக வாழ்வானென்று அரிய தவசுடைய பெரியோர்கள் சொல்லுவார்கள்—எ-று. 311

மாதுகேண் மாலா யோகமம் புலிக்கு
மன்னிய பத்தினிற் குருவும்
வந்துதா னிருக்கிற் றனபதி யாகி
மருவுசே னைக்கதி பனுமாம்
ஓதிய விரண்டி லிருவரு மைந்தி
லுபயருங் கூடியே யிருக்கி
லுரைப்பர்கத் திரியோ கம்பலன் கரும
மொன்றையு மாகவொட் டாது
தீதற வொன்றி னான்குபத் தேழிற்
சேரவொன் பதின்மரு மிருக்கில்
செப்பிடு மரச கேந்திர யோகந்
தெரிபலன் மகம்புரிந் திடுவன்
நீதியாய்த் தனங்க டேடிவாழ்ந் திருப்ப
னேமியிற் றமர்முதற் பலரும்

நேயமாய்த் துதிக்கத் தனிமானு ஷனுமாய்
நிருபர்கொண் டாடவே யிருப்பன்.

இ-ள். பூதலத்தில், காதலுக்கு ஆதாரமாகிய மாதரசே கேட்பாயாக, ஆலோனுக்குபத்தில் ஆண்டளப்பானிருக்க, மாலாயோகம், இதன்பலன், தனமுள்ளவனும், சேனாதிபதியுமாம், இரண்டாமிடத்திலிருவரும், ஐந்தாமிடத்திலிருவருமாகி நின்றால், கத்தரியோகமாம், இதன்பலன், செய்யுங் காரியங்கள் ஒன்றுங்கைகூடாது, (1) (4) (7) (10) ஆகிய கேந்திரத்தில், ஒன்பது கிரகங்களும், இருக்க, அரசகேந்திரயோகமாம், இதன்பலன், யாகஞ் செய்தல், நல்வழியாய்த் தனஞ்சம்பாதித்து, வாழ்ந்திருத்தல், பந்துக்கள், மித்திரர்கள் பலரும், அன்போடு துதிக்கும்படி, ஒப்பற்றவனாகி, இல்லறதருமம் வழுவாது இராஜர்கள் புகழும்படி வாழ்ந்திருப்பன்—எ-று. 312

இருமைசேர் பத்தினான்கினிற் கிரக
மிருந்திடில் விக்கயோ கமதாம்
திரபலன் றுது நடந்து தான்றிரிந்தே
யின்னலாற் கலகமிட் டிடுவன்
ஒருமைசேர் சன்மந் தன்னிலே பாவ
ரோரேழி லுத்தம ரிருக்க
ஓதிடு மவையோ கங்கள்பொய் யுரைப்ப
னுறுசிறை வெகுதின மிருப்பன்
பருமைசே ருச்ச கேந்திரந் தன்னிற்
பாவர்கண் மேவியே யிருக்கில்
பாவியாங் குரூர மன்னவ னாகிப்
பார்தனக் கரசனா யிருப்பன்
அருமைசே ரொன்றைந் தொன்பதிற் கிரக
மணுகிற்சிங் கடாடவி யோகம்
அதன்பலன் றீர்க்க வாயுளுண்டாகி
யம்புவி தன்னிலுற் றிடுவான்.

இ-ள். பத்தாமிடத்திலும், நான்காமிடத்திலும், கிரகமிருந்தால், விக்கயோகமாம், இதன்பலன், தூதுநடத்தல், துன்பத்தோடு கலகஞ்செய்தலுமாம், ஜென்மலக்கினத்தில், பாபக்கிரகங்களும், ஏழாமிடத்திற் சுபக்கிரகங்களும் இருக்கில், அவயோகமாம், இதன்பலன், பொய்சொல்லுதல், வெகுதினங்களாய் சிறைப்படுத்தலுமாம், பாவக்கிரகங்கள், உச்சம்பெற்று, கேந்திரங்களில் நின்றால், குரூரமுள்ளவனாகி, அரசனாயிருப்பன், (1) (5) (9) ஆமிடங்களில் கிரகங்கள் நிற்கிற் சிங்கடாடவியோகமாம், இதன்பலன் தீர்க்காயுடன் ஜீவித்திருப்பான்.

உற்றமெய் லாப மதிற்கிர கங்க
ளுறிலிலே யோகமா முழவன்

ஒருமைநல் லோரோன் றேழினி லிருக்க
உண்மைசேர் வச்சிர யோகம்
மற்றநற் பலன்றீர்க் காயுளுங் கீர்த்தி
மன்னிய கிருபையுள் ளவனும்
மன்னவன் சனிசெவ் வாய்கதிர் நால்வர்
மருவிமூன் றுமிடத் திருக்கப்
பெற்றிடு முச்சாங் கிசஞ்சுயாங் கிசங்கள்
பெறின்மக ராஜயோ கந்தான்
பெருமையிந் நால்வர் சென்மமீ திருக்கப்
பிறைதன தகத்துறிற் புவியில்
குற்றமி லாத மகாராஜன் மெய்யிற்
குறைவற நிறைமதி யிருக்க
கோளொரு நால்வர் மதிதனைக் காணக்
கொற்றவ னமெனக் கூறாய்.

இ-ள். இல்க்கின லாபஸ்தானத்தில், கிரகங்கள் நின்றால், இலையோக மாம், அதன்பலன், உழவுசெய்பவனும், சுபக்கிரகங்கள், ஜென்மம், ஏழா மிடங்களில் நின்றால், வச்சிரயோகமாம், இதன்பலன், தீர்க்காயுளுங் கீர்த் தியுங் கிருபையுமுடையவனும், குரு, சனி, செவ்வாய் சூரியன், ஆகிய இந் நால்வர் மூன்றுமிடத்திருக்கினும் உச்சாங்கிஷம், சொட்சேத்திராங்கிஷம் பெற்றாலும், மகாராஜயோகமாம், மேற்சொன்ன நால்வர்களும், ஜென்ம லக்கினத்திலிருந்து, சந்திரன் ஆட்சியாயிருக்கக் குற்றமற்ற, மகாராஜனும், பூரணச்சந்திரனுகி நான்கு கிரகங்கள், அச்சந்திரனைப்பார்த்தால், அரச னென்று நீ சொல்லக்கடவாய்—எ-று.

கூறறி மதிசே யுச்சமாய்ச் சன்மங்
குலவுவின் மிதுனமேற் பாரில்
கொற்றவன் சென்மத் திங்தொடு சனியுங்
குசனுமே கூடவில் லதனில்
ஏறிடக் கதிர்மே ஷத்துற மன்ன
மிசைந்தமுன் புராதன பூமி
யிழந்துபோய் விடுவ னிடபலக் கினமா
யிதிற்பிறை சனிகுரு வெய்யோன்
பேறுடனிருக்கில் ராஜயோ கமதாம்
பின்னுமே கன்னிலக் கினமாய்ப்
பிறைமக னுச்ச மாகநா லிடத்திற்
பிருகுசந் திரன்குரு விருக்க

வீறுடனேந்தா மிடத்தினிற் சனிசேய்
மேவியே யிருவரு மிருக்க
வெற்றிநற் குணங்க ளுள்ளமன் னவனு
மேதினி நீதியாய் புரப்பன்.

இ-ள். சந்திரன், செவ்வாய், உச்சமாகி, தனுசு, மிதுனம், லக்கினமா கப் பிறந்த ஜாதகன், இராஜனும், ஜென்மலக்கினத்தில், சந்திரனோடு சனி யுஞ் செவ்வாயுங் கூடியிருக்க, (அல்லது) தனுசிலிருக்க, சூரியன் மேடவி ராசியிலிருக்க, இராஜனும், தனக்குக் கிடைக்கப்பெற்ற புராதன பூமியை இழந்துவிடுவான், ஜென்மலக்கினம் இடபமாய், அதிற்சந்திரன் சனி, குரு, சூரியன் இருக்கில், ராஜயோகமாம், ஜென்மலக்கினம் கன்னியாய், அதில், புதன்உச்சம்பெற்று நான்கில், சுக்கிரன், குரு, சந்திரனிருக்க, ஐந்தில்சனி, செவ்வாய், இருக்க, வெற்றியும், நற்குணங்களுமுள்ள, மன்னவனுகி, மேதி னியை, நீதியோடு கியாதியா யாளுபவனுமாவன்—எ-று. 315

புரக்குமே கன்னி லக்கின மதனிற்
புந்தியும் பத்தினிற் புகரும்
பொன்பிறை மூவர் கூடியே யிருக்கப்
பூபதி யாகியு மிருப்பன்
பரக்குமெய் சிங்க மாயதிற் செவ்வாய்
பரிந்துற வேழிடந் தன்னில்
பனிமதி யரச னிருக்கவே தனுசிற்
பானுவின் புத்திரன் மேவ
இரக்கமாய் மைந்தர் தானுமில் லாம
லிப்புவி புரக்குமன் னவனும்
எண்ணிய பத்திற் சசிபதி னொன்றி
லெழிற்சனி லக்கினத் தரசன்
வருக்கமா யிரண்டிற் புதன்குச னிருக்க
வாகனந் திரவிய மருவ
மாநிலம் புரக்கும் நரேந்திர னுவன்
வாளயில் போல்விழி யாளே.

இ-ள். வேலையும், சேலையும், வாளையும் ஒத்த விழியையுடைய பெண் ணே, ஜென்மலக்கினம், கன்னியாகி அதிற் புதனும், (10) ஆமிடத்திற் சுக் கிரன், குரு, சந்திரன், ஆகிய மூவர்களுங் கூடியிருக்கப்பிறந்த ஜாதகன், இராஜனும், சிம்மலக்கினமாகிச் செவ்வாயிருக்க, ஏழாமிடத்தில், ஆலோ னும், குருவுமிருக்க, தனுசுராசியிற் சனியுமிருந்தால், புத்திரனில்லாமற் புவியாளுமரசனுவன், (10) ஆமிடம்சந்திரன் (11) ஆமிடம், சனி, லக்கி

னத்திற்குரு, (2) ஆமிடத்தில் மாலோனும், வேலோனுமிருக்க, வாகனங்கள் திரவியங்களுடையமனிதர்களில் நரேந்திரனுவன்—எ-று. 316

வே று.

நாடிய கேந்திரத் தானத் ததிபனுந்
தேடிய மூலத் திரிகோணத் ததிபனும்
கூடிய கேந்திர மீக்கொள நின்றிடில்
ஊடிய துரகத் தரசனென் றேதே.

இ-ள். கேந்திராதிபதியும், திரிகோணதிபதியுங்கூடி கேந்திரத்தில், பலம்பெற்றுநின்றால், குதிரைகளுடைய, அரசனுவன்—எ-று. 317

உரைத்திடு லாப மொன்பது பத்தும்
விரித்திடு மந்த வீட்டினிற் கதிபனைப்
பொருத்திய தொகைப்படி பொருந்துமவ் வீட்டோன்
வருத்தமில் கேந்திரம் வந்துறின் மன்னும்.

இ-ள். சொல்லுமிடத்து, எல்லாலக்கினத்துக்கும், நல்லலாபம், தன்மம், கன்மம், இத்தானத்தும், அத்தானத்துக் கதிபர்களையுங் கூடியிருந்த தொகைப்படி, அவ்வீட்டதிபதிகள், கேந்திரத்தில் நின்றால் நாட்டுக்கரசனுவன்—எ-று. 318

மன்னிய லக்கினம் வருமேள் சிங்கம்
பன்னிய லாப மாமைந் தொன்பதில்
அன்னிய மூவரி லாரேனு மிருந்து
மின்னிய கேந்திர மேவிடி லரசே.

இ-ள். ஜென்மலக்கினம், சிங்கம் விருச்சிகமாக, இந்த இடங்களுக்கு, (11) (5) (9) ஆமிடங்களில், அன்னியர்கள், யாரேனும் நின்று, அந்த, (11) (5) (9) க்கு அதிபர்கள், கேந்திரத்திலிருந்தால், அரசனுவன்—எ-று. 319

மேவுமே ழொன்பதாம் வீட்டினல் லதிபன்
ஏவுமே ழொன்பான் வீட்டினி லிருக்கத்
தாவிய சுங்கன் றனுறு நன்மனை
ஆவலாய் நாலே ழாண்டினி லரசே.

இ-ள். இலக்கினத்திற்கு, ஏழு, ஒன்பதாம் வீட்டுக்கதிபர்கள், அவ்வீட்டிலேயேயிருக்கச், சுக்கிரன், தன்வீட்டிலாட்சியாயிருக்க, (28) வயதிலரசனுவன்—எ-று. 320

ஆண்டினிற் கேந்திர வானதி னல்லோன்
ஊண்டிடும் பாவர்க ளொன்றுவிட் டொன்றில்
தாண்டிய சக்கர யோகத் தனபதி
நீண்டிய ல்பர வயதினிச் சயமே.

இ-ள். கேந்திரஸ்தானத்தில், சுபர்களும், இடைகளில் பாவர்களும், ஒன்றுவிட்டொன்ருய் நிற்க, சக்கரயோகமாம், இதன்பலன், பின்வயதிற் செல்வமுள்ளவனுயிருப்பன்—எ-று. 321

வே று.

நிச்சயக் கிரக நான்மனை யுற்று
நின்றிடிற் கேதார யோகம்
இச்சையன் பைங்கூழ் வழிநடைக் கஞ்சா
னெழிலுப காரமே செய்வன்
மெச்சுமோ ரைந்து வீட்டினிற் கோள்கண்
மேவிடிற் பாசக யோகம்
விச்சைசேர் சவுக்கியன் றனபதி யழகன்
வெகுஜன முள்ளவ னுமே.

இ-ள். நவக்கிரகங்களெல்லாம், நான்குவீடுகளிற் கூடியிருந்தால், கேதார யோகமாம், இதன்பலன் வேளாண்மை உழுது பயிர்செய்யப் பிரியமுள்ளவனும், வழிநடைக்கு அஞ்சாதவனும், உபகாரஞ் செய்பவனுமாவன், ஐந்து வீட்டிற் கிரகங்கள் நிறைந்துநின்ருல், பாசயோகமாம், இதன்பலன், பாக்கியமுள்ளவன், பணமுள்ளவன், பந்துமித்திரரோடு சந்தோஷமாய்க் கூடி வாழ்பவன் அழகனுமாவன்—எ-று. 322

வே று.

ஆமே கிரக மேழுமனை
யமர்ந்தால் வீணை யோகமினித்
தாமே நிபுண னெழிலுடையன்
சப்த கீதப் பிரியமுளன்
தோமி னுலே ழொன்றிலுறச்
சொல்லுமதிக யோகபலன்
மாமே வரசன் பிரதாபி
வந்தே யாண்டு நூறிருப்பன்.

இ-ள். வல்லமைபொருந்திய, நல்லார் பொல்லார் எல்லாக்கிரகங்களும், ஏழுவீடுகளில் நிறைந்து, வாழுமாகில், வீணையோகமாம், இதன்பலன் நிபுணன், அழகுடையவன், சங்கீதப் பிரியமுள்ளவனுமாவன், சற்றுங்குற்றமற்ற லக்கினம், நாலு ஏழாமிடங்களில், கிரகங்கள் நின்ருல், அதிகயோகமாம், இதன் பலன், அரசன், பிரதாபமுடையவன் நூறுவருடம், ஜீவித்திருப்பவனுமாவன்—எ-று. 322

இருந்த பத்தி னுன்கிற்கோ
ளிருக்கப் பக்ஷி யோகபலன்

பொருந்துந் தேச சஞ்சாரம்
புகலும் ஞானி கலகமுளன்
வருந்து சசியி னிருபுரமும்
வரவே நல்லோர் துரியோகம்
திருந்து யோக னயிஸ்வரியன்
றேச ஜனத்துக் கதிபதியே.

இ-ள். இரண்டு நாலு பத்தாமிடங்களிற் கிரகங்களிருக்கப் பிறந்த ஜாதகனுக்கு, பக்ஷியோகமாம், இதன் பலன், தேசசஞ்சாரன், ஞானி, கலகஞ் செய்பவன், சந்திரனுக்கு, இருபக்கமும், நல்லோர் இருக்க, துரியோகமாம், இதன் பலன், யோகமுடையவன், ஐசுவரியவான், அரசனுமாவன்—எ-று.

என்று லொன்றேழ் சுபரிருக்க
வினிநால் பத்திற் பாவர்களும்
அன்றே யுறில்வச் சிரயோக
மாதி யந்தத் தயிச்சுவரியம்
நின்றே சூர தத்துவமு
நிகழும் வயதிற் றனபதியாம்
நன்றே மாறிக் கோள்வரினும்
நாடு மினிய வவயோகம்.

இ-ள். இலக்கினத்திலும், ஏழிலும், சுபக்கிரகங்களிருக்க, நாலிலும், பத்திலும், பாவக்கிரகங்களிருக்க, வச்சிரயோகமாம், இதன்பலன், முதலிலும், கடையிலும், செல்வமுடையவன், சூரவான், வயதுகாலத்தில், தனமுடையவனுவன், அக்கிரகங்கள், இக்கிரமம்மாறி, ஒன்று, ஏழில், பாபரும், நாலுபத்தில் சுபருமாகில், அவயோகமாம், மேற்சொன்னபலன் மாறிநடக்கும்—எ-று. 324

யோகஞ் சுபமாம் லக்கினத்துக்
கொன்றே நல்லோர் முன்னிருக்கப்
போகன் றனவான் வாழரசன்
பொருந்தும் பின்னே கிரகமுறில்
ஆகு மஸ்வ யோகமதா
மனிசன் மத்தி னிருபுறமும்
தாக முடனே சுபரிருக்கிற்
றனு மரச னெனவருமே.

இ-ள். ஜென்மலக்கினத்திற்கு முன்னுல், சுபக்கிரகங்களிருந்தால், சுபயோகமாம், அதன்பலன், போகனும், வாகனும், தியாகனும், ராஜனுமாவன், லக்கினத்திற்குப் பின்னுல் சுபர்களிருக்கில், அஸ்வயோகமாம், லக்கினத்திற்கு இருபக்கமும், சுபர்கள் இருக்கப் பூமிக்கரசனுவன்—எ-று. 325

வருமே சென்ம லக்கிஞதி
வந்து மித்திரன் றன்வீடும்
பொருமே யுச்ச மனையிரண்டிற்
புகருங்கூடிற் றனவானும்
தருமே சென்மஞ் சிங்கமது
தன்னிற் பரிதி தானிருக்க
அரிவை மனையிற் புதனிருந்தா
ஞனு னீச வரசனுமாம்.

இ-ள். லக்கிஞதிபதி, நட்புவீட்டிலாவது, உச்சவீட்டிலாவது, நிறக, அத்தோடு, சுக்கிரன் கூடியிருக்க, தனவானுவன், ஜென்மலக்கினம், சிம்மமாக, அதிற்சூரியனும் கன்னியிற்புதனுமிருக்க நீசராஜனுவன்—எ-று 327

அரசே மூன்றி லீரைந்தி
லாறி லிருக்கச் சென்மாதி
சிரசாய் நல்லோர் தனைப்பார்க்கச்
செகத்துக் கதிப ஞகுமிவன்
சரமாந் துலாத்திற் புகர்மேஷந்
தன்னிற் செவ்வாய் கடககுரு
பொரவே நிற்கத் தனபதியாய்ப்
பொருந்து மரசன் கண்டீரே.

இ-ள். மூன்றுஆறுபத்து,இவ்விடங்களில்,செவ்வையாய் லக்கிஞதிபதியிருந்து, நல்லோர்காணில், இராஜனுவன், சரவிராசியாகிய துலாத்திற் சுக்கிரன் மேஷத்திற்செவ்வாய், கற்கடகத்திற்குரு, இவர்கள் நின்றல், செல்வத்தோடுகூடிய, வல்லமையுடைய, அரசனுவன்—எ-று. 328

கண்ட ரிஷபஞ் சென்மமதாய்க்
காணு மதியந் தானிருக்கக்
கொண்டு பரிதி சிங்கத்திற்
கூறுந் தேளிற் குருவிருக்க
மண்டு கும்பச் சனிவரினும்
வந்தால் ராஜ யோகபலன்
பண்டே யுள்ள பூபதியாய்ப்
பாருக் கரசா யிருந்திடுவன்.

இ-ள். ரிஷபலக்கினமாய், லக்கினத்திற் சந்திரனும் சிங்கத்திற், சூரினும், விருச்சிகத்திற் குருவும், கும்பத்திற் சனியுமாய் வந்தால், இராஜயோகமாம், இதன்பலன், பூர்வபரம்பரையாய்ப் பூபாலனுகிப் பூமியையாளும், அரசனுவன்—எ-று. 329

திடமாஞ் சென்ம மகரமதாய்ச்
செப்புங் காரி தானிருக்க
அடைவே செவ்வாய் மதிகூடி
யான கடகந் தானுறவே
தொடர்சேர் பரிதி சிங்கத்திற்
சொல்லு மிதுனம் புந்தியுற
வடிவார் கோவிற் புகரிருக்க
வாழுந் துர்க்கத் தரசனிவன்.

இ-ள். ஜென்மலக்கினம், மகரமாய் அதிற்சனியிருக்க, செவ்வாயும், சந்திரனும், கடகத்திலிருக்கச், சூரியன், சிம்மத்திலிருக்க, மிதுனத்திற் புதனிருக்கப் பிறந்தஜாதகன், துருக்கதேசத்தையாளும், பெருக்கமுள்ள அரசனுவன்—எ-று. 330

இவனே சன்ம நான்கொன்ப
தெல்லாக் கிரக மிருந்திடவே
அவனே சாங்கி யாயோக
னதற்குப் பலன்கள் சவுரியவான்
தவமெய்ஞ் ஞானி பாக்கியவான்
றன்னிற் குணவா னமென்றே
நவமா யுரைத்தார் சோதிடத்தோர்
நறைமென் கமல முகத்திருவே.

இ-ள். வண்டுகள் கொண்டானடித்துத் தேனையுண்ணுந் தண்டாமரை போன்ற முகத்தாளே, கேட்பாயாக லக்கினம், சுகபாக்கியஸ்தானங்களில், எல்லாக்கிரகங்களும் நின்றிட சாங்கியாயோகமாம், இதன்பலன், சௌரியமுடையவன், தவத்தையுடையஞானி, பாக்கியமுடையவன், குணமுள்ளவனுமாவானென்று, நவரத்தினம்போற்சோதிட நூலாய்ந் துணர்ந்த முன்னோர்கள் சொன்னார்கள்—எ-று. 331

திருவே யிரண்டாம் வீடுமுதற்
செறியு மனைக்கொன் றென்றெழிந்து
வரவே கிரகந் தானிருக்க
வாழுஞ் சமுத்திர யோகபலன்
பொரவே சேனைக் கதிபதியாய்ப்
பொருந்தும் பாரி யநேகருளன்
தருபொன் கீர்த்திக் கதிகாரி
தனவா னரசன் வெகுபிள்ளை.

இ-ள். ஒருமையிலும், அருமையிலும், பெருமையிலும், சிறந்த திருமகளுக்கொப்பானவளே, இரண்டாமிடமுதற்கொண்டு, ஒவ்வொரு வீடுவிட்

டுக்கிரகங்களிருந்தால், சமுத்திரயோகமாம், இதன்பலன், சேனைக்கதிபதி, அநேககளத்திரமுடையவன், பொன், கீர்த்தி, இவைகளுக்கு அதிகாரி செல்வமுள்ளவன், அரசன், வெகுபுத்திரர்களுள்ளவனுமாவன்—எ-று. 332

பிள்ளை யனுஷ மசுப தியின்
பின்பா மவிட்டந் தனிற்சேயும்
துள்ளுஞ் சென்ம மொருபத்திற்
சூழ்ந்தே பரிதி யுறவதனைத்
தெள்ளு மதியங் குருநோக்கிற்
செறிமூன் றைந்திற் கிரகமிலா
தள்ளி யிருக்கிற் குபேரனைப்போற்
றனத்துக் கதிப னெனச்சொல்லாய்.

இ-ள். அனுஷம், அசுபதியின் கடைப்பாகத்திலும் அவிட்டத்திலும், செவ்வாயிருக்க, லக்கினம்பத்தாமிடங்களிற் சூரியனிருந்து, அச்சூரியனைச், சந்திரனுங் குருவும்பார்த்து, மூன்று, ஐந்தாமிடங்களில், கிரகமில்லாதிருக்கக் குபேரனைப்போல், தனமுள்ளவனென்று சொல்லவேண்டும்—எ-று.

சொல்லுஞ் சென்ம மைந்ததனிற்
றொடர்ந்தே பரிதி தானிருக்க
வெல்லு நான்கேழ் பத்ததனில்
விரும்பிச் செவ்வாய் மேவிடினும்
ஒல்லும் லாபம் பன்னிரண்டி
லுடனே பலனுப் புகர்மேவ
நல்ல விந்திர யோகமென
நவில்வர் தமிழுக் கினியோர்கள்.

இ-ள். லக்கினம், (அல்லது) ஐந்தாமிடம், இவைகளில் ஏழ்பரியோனிருக்க, மாதுருகளத்திர ஜீவனமாகிய, நாலு, எழு, பத்தாமிடங்களில், எதிலேனும், மங்களனிருக்க, லாபம், வியமாகிய, பதினொன்று, பன்னிரண்டாமிடத்திற் சுக்கிரனிருக்க, நலமான இந்திரயோகமாம், என்று நல்லதமிழ் நூலாய்ந்த வல்லவர்கள் சொல்லுவார்கள்—எ-று. 334

இனிய மகரஞ் சென்மமதா
யிருக்கச் செவ்வாய் தனிலுச்சம்
தனிலே நவத்தின் பன்னிரண்டிற்
றனித்தே புகருந் தானிருக்க
இனமா மிந்து கதிர்கூடி
யேழி னிற்கப் பிரபலமாய்த்

தனமே திரளா யார்ச்சித்துச்
சம்மா னடத்து மானபரன்.

இ-ள். ஜென்மலக்கினம், மகரமாய், அதிற் செவ்வாய், உச்சமாக,ஒன்பது, பன்னிரண்டில், சுக்கிரன் தனித்திருக்க, சூரியனும், சந்திரனுங்கூடி, ஏழிலிருக்கப் பிரபலமாய்ச் செல்வஞ்சம்பாதித்து, சிறுதோணிகப்பல், குதிரைகள், நடத்தக்கூடியவனும், பெருமையுடையவனுமாவன்—எ-று. 335

ஆன பரிதி சோமனிவ
ரமர்ந்து சுபரங் கிசமேறித்
தானே பலவா னுகியிவர்
தக்க வியத்தி லடையாமல்
ஆன வுச்ச வாங்கிசையி
லமர்ந்தே சனியை மிகநோக்கில்
ஈன மறவே திக்குபல
வியைந்தின் புறுவன் சன்யாசி.

இ-ள். சூரியன் சந்திரன்சேர்ந்து, சுபரங்கிசமேறி, அந்தவீட்டுக்குடையவர்கள், பலமுடையவர்களாய், வியத்தானத்தில், மறையாமல், உச்சநவாங்கிசம, பெற்று, சனியைப்பார்த்தால், பலவிடங்களிலும், நலம்பொருந்துஞ் சந்தோஷமடைவன், சந்நியாசியுமாவன்—எ-று. 336

சீல லக்கி னுதிபதி
செறியுஞ் சுக்கிரன் றுனுகி
நாலிற் காரி நின்றமனை
நாடிச் சுக்கிரன் றுனேக்க
வால சன்னி யாசியென
மகிழ்ந்தே விதேச சஞ்சாரம்
கோலுங் கொண்டே திரிவனெனக்
கூறுங் கணித வல்லோரே.

இ-ள். லக்கினுதிபதி சுக்கிரனுகி, நாலிற் சனியிருக்க, சனியிருந்தவீட்டைச் சுக்கிரன்பார்க்க, பால்யத்திற் சந்நியாசியுந் தண்டங்கைக்கொண்டு, மண்டலமாகிய, எண்டிசையுங்கண்டுவர தேசசஞ்சாரஞ் செய்பவனுமாவனென்று, கணிதவல்லோர்கள், மிகத்துணிவுடன், சொல்லுவார்கள்—எ-று.

வல்லோர் சென்மச் செம்பாம்பு
வரவே யதற்கேழ் சோமனுற
வெல்லுஞ் சோமற் கெட்டதனில்
வெய்யோன் சுமத்திர யோகபலன்

சொல்லுங் கிராம புரந்தரனுந்
துரையாம் வந்து ரக்ஷகனும்
நல்ல வருஷ மிருபதின்மே
னடக்கும் யோக மிருமூன்றே.

இ-ள். ஜாதகன்பிறந்த ஜென்மலக்கினத்திற் கேதுவிருக்க, அதற்கே ழிற்சந்திரனிருக்க, அச்சந்திரனுக்கு (8) ஆமிடத்தில், சூரியனிருக்கச், சுமத்திரயோகமாம், இதன்பலன், கிராமங்களையாளுகின்ற, அரசனும், பந்துரக்ஷகனும், இருபதுவருஷத்திற்குமேல், ஆறுவருடம், யோகமனுபவிப்பவனு மாவன்—எ-று. 338

நடத்தும் பத்துக் கதிபதியு
நான்கி லிருக்க நான்காதி
எடுத்த பத்தி லுடனிற்க
லக்கி னுதி யுச்சமுறில்
அடுத்த சரப யோகபல
னனேக சேனைக் கதிபதியாம்
கொடுத்த நாலா றதன்மீதிற்
கூறும் யோக மேழாண்டே.

இ-ள். ஜென்மலக்கினத்துக்குப் பத்துக்குடையவன்,நாலிலும், நாலுக்குடையவன், பத்திலும், மாறிநின்று, லக்கினுதிபதியும், உச்சமானல், சரபயோகமாம், இதன்பலன், அநேகசேனைக் கதிபதியாம், இருபத்துநான்குவயதுக்குமேல், ஏழுவருஷம், யோகமனுபவிப்பவனென்று சொல்லவேண்டும்.

ஆண்டு மூவே ழதன்மீதி
லான சக்ர யோகபலன்
நீண்ட சீவ னுள்ளளவும்
நிறைந்தே பத்திற் கருநாகம்
பூண்ட பத்தா மிடத்ததிபன்
பொருந்துஞ் சன்மந் தனிலிருக்க
வேண்டுஞ் சென்மன் பாக்கியத்தில்
விளங்கிற் றேசா பதியாவன்.

இ-ள். பத்தாமிடத்திற் பாம்பாகிய, ராகுவிருக்க, அப்பத்தாமிடத்ததிபன், லக்கினத்திலிருக்கச் சக்கரயோகமாம், இதன்பலன், இருபத்தொரு வயதின்மேல் சாமளவும் யோகமாம், லக்கினுதிபதி, பாக்கியத்தானத்தி லிருக்க, தேசாதிபதியாவன்—எ-று. 340

ஆவன் பத்தா திபனிருந்த
வங்கி சாதி சென்மத்தோன்

மேவும் பத்தை யிருவோரும்
விரும்ப நாக யோகபலன்
கோவாம் வித்தை தனவானுங்
கூறின் வயது பதினாறில்
பூவுக் கரசாய் மூவாண்டு
பொருந்தி நடக்குந் தானிதுவே.

இ-ள். பத்தாமிடத்ததிபதிநின்ற, அங்கிசாதிபதியும், ஜென்மாதிபதியு மாகிய, இருவரும், பத்தாமிடத்தைப்பார்க்க, அல்லது இருக்க, நாகயோக மாம், இதன்பலன், அரசனும், வித்தையுள்ளவனும், தனவானுமாவன், வயது, (16) க்குமேல், (3) வருஷம், அரசாட்சி செய்வான்—எ-று. 341

இதுவே குருவு மொன்பதினி
லிருக்க வொன்பா னதிபதி
துதிசே ரேழி லிருந்திடவே
சோமன் சுபரோ டெங்குறினும்
கதிசேர் நாக யோகபலன்
கண்ட வயது பதினாறில்
புதிதாய் மூன்றாண் டளவுமிகப்
பொன்னைஞ் ஞூறு தேடுவனே.

இ-ள். பொன்னவன் ஒன்பதிலும், ஒன்பதுக்குடையவன் ஏழிலுமிருக்க, சந்திரன், சுபருடனேசேர்ந்து, எந்தத்தானத்திலிருந்தாலும், நாகயோகமாம், இதன்பலன், பதினாறுவயதின்மேல், மூன்றுவருஷத்தில், ஐஞ்ஞூறு பொன் சம்பாதிப்பன்—எ-று. 342

தேடும் லாபன் றனபாவத்
திறல்சே ரதிப னுச்சனெனின்
நாடு மைந்தாம் வீட்டாதி
நண்ணுந் தனத்தைப் பார்த்திடவே
கூடும் பேரி யோகபலன்
குதிரை யானை நரர்தேரும்
ஊடு மாறா றதன்மேலே
யோங்கும் வருஷ் நாலளவே.

இ-ள். இலாபாதிபதியும், தனாதிபதியும், உச்சமாக, ஐந்தாமிடத்தோன், இரண்டாமிடத்தைப்பார்க்கப் பேரியோகமாம், இதன்பலன், ரதம், கஜம், துரகம், பதாதிகளுடன், முப்பத்தாறுவயதின்மேல், நாலுவருஷம்வரை, அரசாளுவன்—எ-று. 343

அளவே யொன்பான் றனிப்புகரு
மமர்ந்தே யொன்பா னுதிபதி
வளமா மதிக்கே யொன்பதனில்
வந்தாற் பதும யோகபலன்
தளமோ டரசர் புடைசூழத்
தானும் பாராண் டகத்திலிருந்
துளவாந் தான மைம்பதின்மே
லோங்கும் வருஷ மைந்தளவே.

இ-ள். ஒன்பதாமிடத்திற் சுக்கிரனும், அவ்வொன்பதாமிடத்தோன், சந்திரனுக்கொன்பதாமிடத்திலும் நின்றால் பதுமயோகமாம், அதன்பலன், ஐம்பது வருஷத்தின்மேல் ஐந்துவருஷமளவும், மிகச்சேனை தளம் சூழ வீட்டிலிருந்தே நாட்டையாளுவான்—எ-று. 344

ஓங்கும் லக்கி னுதிபதி
யுற்ற வீட்டிற் சதிபதிதான்
பாங்காய்க் கேந்திரந் திரிகோணம்
பற்றி மூலத் திரிகோணம்
தாங்கு முச்ச னுனுலுந்
தக்க புரத்துக் கதிகாரம்
வீங்கும் பர்வத மேழைந்தின்
மேலொன் பானு மாண்டுளதே.

இ-ள். லக்கினுதிபதியிருக்கின்ற, வீட்டுக்குடையவன், கேந்திரம் திரிகோணம், மூலத்திரிகோணம், பெற்று, இவ்விடங்களில், உச்சமாயிருந்தால், பர்வதயோகமாம், இதின்பலன், முப்பத்தைந்து வயதின்மேல், ஒன்பதுவயதளவும், ராஜாதிகாரம் செய்வன்—எ-று. 345

உளதே லக்கி னுதிபதி
யுற்ற வீடுக் குடையோனும்
அளவா மதிவீட் டதிபனுச்ச
னுகிச் சோம னுலேழிற்
களவே கேந்திர மேறிவரக்
காகள யோகந் திரவியவான்
வளவ னுகு நாலேழ்மேல்
வயதுள் ளளவும் ரசவாதி.

இ-ள். லக்கினுதிபதி யிருக்கின்ற, வீட்டுக்கதிபனும்சந்திரனிருக்கின்ற வீட்டுக்கதிபனும், உச்சமாகிசந்திரன், நாலு ஏழாமிடங்களில், கேந்திரமேறி,

யிருக்கில், காகளயோகமாம், இதன்பலன், திரவியவான், இருபத்தெட்டுவய தின்மேல், ஆயுள்வரைக்கும், ரசவாதஞ்செய்பவனுமாவன்—எ-று. 346

வாதி ரண்டா மைந்தாதி
வருமே பாக்கி யாதிபனும்
ஓதுஞ் சென்மந் தனிலுற்றே
யோங்கு மரசன் பார்வையுறில்
ஈது தாந்திரி யோகபல
னிவனே வெகுதே சாதிபதி
நீதி நடத்தும் பன்னிருமே
னேரும் வயதோ ராறளவே.

இ-ள். இரண்டு, ஐந்து, ஒன்பதாமிடத்ததிபர்கள், லக்கினத்திலிருக்க, குருபார்க்கத், தாந்திரியோகமாம், இதன்பலன், பன்னிரண்டுவயதின்மேல், ஆறுவயது வரையும், வெகுதேசங்களுக்கு, நீதிசெலுத்துகின்ற, இராஜ னுவன்—எ-று. 347

வயதா றெட்டு மேன்மூன்று
வருஷ மிருதங்க யோகபலன்
சுயலா பாதி யத்துச்சன்
சுங்கன் கூடி யிருந்தமனை
நயவீட் டுடையோன் பத்தேழி
னுன்கி லொன்பா னமர்ந்திடவே
செயமா யரசர்க் கதிபதியாஞ்
செப்பு ஞானி தனவானே.

இ-ள். லாபாதிபன், அதியுச்சமாகி, சுக்கிரனோடு சேர்ந்திருக்க, அந்த வீட்டுக்குடையவன், சுக சத்தம தன்ம கன்மாதி பதிகளாகிய, நான்கு, ஏழு, ஒன்பது, பத்தில் இருக்க, மிருதங்கயோகமாம், இதன்பலன், நாற்பத் தெட்டு வயதிற்குமேல், மூன்றுவருஷம், ஜெயமுள்ள, அரசர்க்கதிபதியாகி யும், ஞானியும், தனவானுமாவன்—எ-று. 348

செப்பும் லக்கின வர்க்கேற்றே
செறிந்தே யிருக்கச் சென்மாதி
ஒப்புஞ் சுபர்க ளுடன்கூடி
யுறுஞ்சன் மாதி சன்மத்தைத்
தப்பா முழுநோக் காகவிது
சக்கிர யோகஞ் சவுக்கியவான்
அப்பா வைம்பா னேந்தின்மே
லான வருஷ நான்கினிதே.

இ-ள். சென்மாதிலக்கினவர்க்க மேறியிருக்க, லக்கினாதிபதியுடன், சுபக்கிரகங்களுங்கூடி, லக்கினத்தை முழுப்பார்வையாகப் பார்க்கச் சக்கிர யோகமாம், இதன்பலன், ஐம்பத்தைந்து வயதின்மேல், நாலுவருஷமளவும், இன்பசுகபோகங்களை அனுபவித்துசௌக்கியமாக வாழ்ந்திருப்பன்—எ-று.

இனிதாங் கன்னி சென்மமதா
    யிரண்டோ டொன்பா னதிபதி
தனியே சுங்க னிருந்தங்கிசத்
    தோனு மரச னுடன்கூடி
மனுவாந் தனபா வத்திருக்க
    வயது பதினா றதன்மேலே
நனியார் சீவ னுள்ளளவும்
    நடக்குஞ் சாம்பிராச் சியயோகம்.

இ-ள். கன்னியாராசி ஜென்மலக்கினமாகி, இரண்டு, ஒன்பதாமிடத் தோனை, சுக்கிரன், இருந்த அங்கிசவீட்டதிபனுங்குருவுங்கூடி, இரண்டா மிடத்திலிருக்க, சாம்பிராச்சியயோகமாம், இதன்பலன், பதினாறுவயதின் மேல், உயிருள்ளவரையும், யோகமுள்ளவனாயிருப்பன்—எ-று. 350

யோக மாதி யந்தமெனு முயரா திருந்தங்கி சாதிபதி
பாகஞ் சென்மந் திரிகோணம் பத்தி லிருக்கச் சேயுச்சம்
வாகு பெறவே பத்தாதி வந்தே ழிருக்கத் துர்க்காதி
போக முடனே வனங்களுக்குந் தனியே யரசாய்ப் பொருந்திடுவன்

இ-ள். லக்கினங்கிஷாதிபதி, சென்மலக்கினம், திரிகோணம், பத்தா மிடத்திலிருக்க, செவ்வாய், உச்சம்பெற, பத்தாமிடத்ததிபன், ஏழாமிடத்தி லிருக்க, ஆதியந்தயோகமாம், அதன்பலன், மலைமேற் கோட்டைகட்டித் தலைவனாக, இனங்களுக்கும், வனங்களுக்கும், ஒப்பற்ற மன்னனாய்வாழ்ந் திருப்பன்—எ-று. 351

பொருந்தி வெய்யோன் பாக்கியத்திற் புகத்தன் னுடனான் காதிப
திருந்தி யிருக்கப் பத்தாதி சேர்ந்தோ ரிரண்டி லேழிலுற [தி
வருந்தாத் துர்க்கத் ததிபதியாய் வைய முழுது மரசாளத்
தெரிந்தே யோக பலனென்று செப்புங் கணித மாதவனே.

இ-ள். பாற்கரன் பாக்கியத்திலிருக்க, அவனோடு நான்காமதிபதிசேர்ந் திருக்க, அவனோடு பத்தாமதிபதிகூடி, இரண்டு, ஏழில் இருக்க, மலைமேற் கோட்டைகட்டி நிலமுழுதும், பூமியை, அரசாளும் யோகமுடையவ னென்று, கணிதங்களைக்கற்ற வல்லவர்கள், சொல்லுவார்கள்—எ-று. 352

மாதே நான்கா மாதிபதி வந்தே யிரண்டா மாதியுடன்
மீதே கூடிப் பாக்கியத்தில் விரைந்தே யிருக்கப் பத்தாதி

போது மிரண்டிற் பலவானுப் பொருந்து யிருக்க லாபாதி
ஓதும் லக்கி னுதிபதி யுச்சங் கோடி லயிஸ்வரியன்.

இ-ள். வஞ்சி அபாஞ்சி கிஞ்சுகமென்னுமாதே அஞ்சாமற் கேட்பா யாக, இரண்டு நான்குக்குடையவர்கள், கூடிப்பாக்கியத்திலிருக்கப் பத்துக் குடையவன் இரண்டாமிடத்தில், பலம்பெற்று நிற்க, லக்கினுதிபதியும், லாபாதிபதியும், உச்சம்பெற்றிருக்கில் ஐஸ்வரியவானுவன்—எ-று. 353

சரவே சென்மந் திரமாகச் சுங்க னிருக்கச் சென்மாதி
வரவே திரிகோணத் துற்றுன் மன்ன னுகுஞ் சிலபூமிக்
குரவோன் சேனைக் கதிபதி யாமொருமை ஞானி துரகாதி
இரப்போர் தமக்கும் வேதியர்க்கு மீவான் சீவபரியந்தம்.

இ-ள். ஜென்மலக்கினம், மகரலக்கினமாக, திராசியிற் சுக்கிரனிருக்க, லக்கினுதிபதி திரிகோணத்திலிருந்தால், அரசனுவன், நம்பின ஜனங்களுக்குச், செம்பொன் கொடுப்பன், சேனைக் கதிபதி, ஒப்பற்ற ஞானிக்கும் குதிரைப்பாகருக்கும், யாசிப்போர்களுக்கும், பிராமணர்களுக்கும், எவர்களுக்கும் தவராமல், ஜீவனுள்ளபரியந்தம், இல்லையென்னுது, தியாகங் கொடுப்பவனுமாவன்—எ-று. 354

அந்த நான்கா மிடந்தனக்கு மதிபனுச்ச னவ்வீட் டோன்
வந்து மைந்தா மதிபனுடன் மகிழ்வாய்க் கூடப் பாக்கியாதி
முந்துஞ் சமர யோகமென மொழியும் பலன்கள் சேனுதி
சொந்த வருஷ மைம்பதின்மேற் றுலங்குமரச னுவானே.

இ-ள். மெச்சக்கூடிய நான்காமிடத்தோன், உச்சனுகவும், அந்த உச்ச வீட்டோன், ஐந்தாம்வீட்டதிபனேடு, கூடிப்பாக்கியத்திலிருக்கவும், சமர யோகமாம், இதன்பலன், ஐம்பது வயதுக்குமேல், அரசனுவன்—எ-று. 355

ஆவா ரைந்தா மதிபதியு மன்பாம் லாபத் தாதிபனும்
போவா ரொன்பான் றனிலிருக்கப் பொருந்தும் பத்தா மதிபனைந் [தில்
கோவே யாகுஞ் சிவயோகங் குதிரையானை நரர் தேரும்
மேவும் வெகுதே சாதிபதி விளங்கு பரமா யுள்ளவனும்.

இ-ள். ஐந்தாமிடத்ததிபனும், பதினோராமிடத்ததிபனும், ஒன்பதாமிடத்திலிருக்க, பத்தாமிடத்ததிபன், ஐந்தாமிடத்திலிருக்க, சிவயோகமாம் இதன்பலன், யானை, குதிரை, காலாள், தேர், இவைபொருந்திய, அரசனுகி [illegible]மேன்மையாய் விளங்குபவனுமாவன்—எ-று. 356

உள்ள பத்தா மதிபதியு மொன்பா னங்கிசந் தானேறி
மெள்ள விரண்டா மிடத்திலுற விரும்பி யொன்பான் றனஞ்சேரி [ல்
கள்ள விஷ்ணு யோகபலன் கதித்த வரச ரடிதொழவே
கொள்ளும் லக்ஷம் பொன்றேடிக் குலாவி யிருப்ப னீரேழ்மேல்.

இ-ள், பத்தாமதிபதியும், ஒன்பதாமங்கிஷந்தானேறி குடும்பத்திலிருக்க, பாக்கியாதிபதியும், சிலாக்கியமாய்ச் சேர்ந்துநிற்க, விஷ்ணுயோகமாம், இதன்பலன் பதினான்கு வயதுக்குமேல் வல்லமையுள்ள அரசர்கள், எல்லோரும் தன்னைத்தொழும்படி, லக்ஷம்பொன் சம்பாதித்துச் சந்தோஷமாக வாழ்ந்திருப்பான்—எ-று. 357

மேலாம் பாக்கிய கேந்திரத்தின் மேவிக் குருவும் லாபத்திற்
கேலுங் கேந்திரச் சுக்கிரனுங் கிட்டியிருவர் மனைமாறிச்
சால விருக்க வயன்யோகந் தனவான் கீர்த்திப் பிரதாபன்
மாலாய் வளரோன் பதின்மேலும் வயதுள் ளளவு மன்னவனாம்.

இ-ள். பாக்கியகேந்திரத்தில், சிலாக்கியமான குருவும், லாபகேந்திரத்திற் பிரதாபசுக்கிரனுமிருந்து, இம்மனையதிபர்கள், கிரகம்மாறி நின்றால், பிரமயோகமாம், இதன்பலன், தனவான், கீர்த்தியுடையவன், ஒன்பதுவயதுக்குமேல் ஆயுள்பரியந்தம், யாவருக்கும் அரசனாயிருந்து வாழ்வன்.

மன்னு பத்தா திபனிருந்த வங்கி சாதி பதிபத்தில்
மின்னுமுச்ச மாயிருக்க விலக்கி னாதி யுடன்கூடச்
சொன்ன கவுரி யோகபலன் றுரையாங் கீர்த்தி யுதாரகுணன்
பொன்னு மணியு மாறாறிற் பொருந்து மாண்டு பன்னிரண்டே.

இ-ள். பத்தாமிடத்தோனிருந்த அங்கிசாதிபசதி அப் பத்தாமிடத்தில், உச்சமாக, அவனோடு, லக்கினாதிபதியுங் கூடியிருக்க, கௌரியோகமாம், இதன்பலன், முப்பத்தாறு வயதின்மேல், பன்னிரண்டு வருஷம், துரையும், கீர்த்தியும், உதாரகுணமும், பொன்னுமுடையவனாவன்—எ-று. 359

ஏய பாக்கி யாதிபதி யிருந்த வங்கிசை யோனென்ப
தூய னுச்ச னைந்தாதி தொடர்ந்தே கூடி யுறநோக்கக்
காய லக்ஷ்மி யோகபலன் கனத்த துரையாய் தனவானாய்ப்
பாயும் பரியும் நாற்பதின்மேற் படைப்பன் பத்தாண்டி வன்பாரில்.

இ-ள். நவமாதிபதியிருந்த, அங்கிஷாதிபதி நவத்திலும், அவ்வீட்டுக்கு உச்சம், பஞ்சமத்தோனைக்கூட அல்லது பார்க்க, இலட்சுமியோகமாம், இதன்பலன் நாற்பதுவயதின்மேல், பத்துவருஷம், பெருமையுள்ள அரசனும், செல்வமுள்ளவனும், குதிரைகளுள்ளவனுமாய்ப் பூமியில் வாழ்ந்திருப்பான்—எ-று. 360

பாரி லாபா திபனிருந்த வங்கி சாதி லாபத்தில்
ஊருங் கோளு முச்சமதாய்ப் பாக்கி யாதி யுடன்கூடப்
பேரும் பாரதி யோகபலன் பெரிய கண்ணன் சிற்றாணன்
நாரி வெகுவா மறுநான்மே னாடும் வயதெட் டினில்யோகம்

இ-ள். லாபாதிபனிருந்த, அங்கிஷாதிபதி லாபத்திலும், அவ்விடத்ததிபதியுச்சமாய், ஒன்பதாமிடத்தோனுடன் கூடச் சரஸ்வதியோகமாம்,

இதன்பலன், பெரிய கண்களையுடையவன் குறைந்த ஆகாரமுண்பவன், அதிகப்பெண்களைக் கல்யாணஞ்செய்பவன், இருபத்துநான்கு வயதின்மேல் எட்டுவருஷம், யோகமுள்ளவனும்—எ-று. 361

யோக மூன்று திலாபாதி யொருமித் தேழுற வேழாதி
வாகு பன்னிரண் டினினிற்க வரசன் பனிரண் டாதியிவர்
ஏக பாக்கியந் தன்னிலுற விதுவே கலாநிதி யோகபலன்
போகி யரசன் மதிமந்திரி பொருந்தும் பதினு றெட்டுளதே.

இ-ள். மூன்றுமிடத்தோனும், பதினோராமிடத்தோனும், கூடி, ஏழாமிடத்திலிருக்க, ஏழாமிடத்ததிபதி, பன்னிரண்டாமிடத்திலிருக்க, வியஸ்தானுதிபதியும், குருவுங்கூடி, பாக்கியத்திலிருக்க, கலாநிதியோகமாம், இதன்பலன், பதினாறுவயதின்மேல், எட்டுவருடம், போகமுடையவனும், அரசனும், மந்திரியுமாவன்—எ-று. 362

உள்ள சன்மா திலாபத்தி லுறவே யந்த லாபாதி
தள்ளுஞ் சன்மந் தனிலிருக்கத் தனத்தா னத்தான் பத்திலுறக்
கொள்ளும் பத்தோ னிரண்டுறவே கொண்டசன்மந் திரமாக
வள்ள லிந்திர யோகமென வழுத்தும் பலன்க ளினிதுரைப்பாம்.

இ-ள். ஜென்மாதிபதி, லாபத்திலும், லாபாதிபதி ஜென்மத்திலும், கிரகமாறியிருக்க, இரண்டாமிடத்தோன், பத்தாமிடத்திலிருக்க, பத்தாமிடத்தோன் இரண்டாமிடத்தில், கிரகமாறியிருக்க, ஜென்மலக்கினம், திரராசியாக இருக்க, இந்திரயோகமாம், இதன்பலன், சொல்லுமிடத்து-எ-று.

உரைப்பா மதுர நல்வசன முயர்ந்த துர்க்கத் ததிபதியாய்ப்
பரப்பு நிறைந்த வெகுபூமி பதியிற் கரசாய்ப் பேரிகையும்
இரைக்கு மல்லரி வாத்தியமு மினிய தனவான் ஸ்திரிலோலன்
நரைக்கு முன்னே யாறுறி னல்கும் வருஷ மெட்டாமே.

இ-ள். முப்பத்தாறு வருஷத்தின்மேல், எட்டுவருஷம் வரைக்கும், நல்வாக்குடையவனும், உயர்ந்த குதிரைகளுடையவனும், விரிவுபெற்ற, வெகுபூமிக்கதிபதியாய், பேரிகைவாத்திய கோஷ்டமுடன், அரசாளுபனும், செல்வமுடையவனும், ஸ்திரிலோலனுமாவன்—எ-று. 364

ஆமே தேளு மிலக்கினமா யரசன் சுங்க னிருவருறத்
தாமே லாபப் புதனுச்சந் தரிக்கு மதன யோகபலன்
[illegible] வனிதை யிச்சிக்குங் கருணை யுள்ள சவுந்தரியன்
தோமின் மனோகர மந்திரியாய்த் துலங்கு மிருபான் மேலெட்டே.

இ-ள். விருச்சிகலக்கினமாய், குருவும், சுக்கிரனும் கூடியிருக்க, லாபத்தில் புதன் உச்சமாக, மதனயோகமாம், இதன்பலன், இருபதுவயதின்மேல், எட்டுவருஷம்வரை, அழகுபொருந்திய, பெண்கள் விரும்பக்கூடிய

கிருபையுள்ளவனும், சௌந்தரியவானுமாவன், மனோரம்மியமான மந்திரி யாயிருப்பவனுமாவன்—எ-று. 365

எட்டு வருஷம் பதினைந்தி னிதன்மேல் யோகங் கலாநிதியாம்
மட்டே சென்மஞ் சராங்கிசத்தில் வரவே யொன்பான் சென்மமு
தொட்ட நான்கோ னரசனுடன் றுலங்க வைந்திற் பத்தாதி [றத்
ஒட்டி யிருக்க லாபத்தி லோங்கு மரசன் வெகுதேசம்.

இ-ள். ஜென்மாதிபன், சராங்கிஷமேறியிருக்க, பாக்கியாதிபதி ஜென்மத்திலும், சுகாதிபதி குருவுடன்கூடி ஐந்தாமிடத்திலிருக்க, பத்துக்குடையவன், பதினொன்றிலிருக்க, கலாநிதியோகமாம், இதன்பலன், பதினைந்து வயதின்மேல், எட்டுவருஷம்வரைக்கும், வெகுதேசத்தையாளும், வேந்தனுமாவன்—எ-று. 366

தேசக் குருவுக் கொருமூன்றிற் செரிந்தே சுங்கன் முனிருக்க
வாசஞ் சுங்கற் கொன்பதினின் மதிதானுறவே பத்தாதி
நேச நான்கி லுறத்தனவா னிருப னாகி மூவொன்பான்
போச னெனமேன் மூவாண்டு பொருந்து நகர நாட்டரசே.

இ-ள். குருவுக்கு மூன்றாமிடத்திற் சுக்கிரனிருக்க, சுக்கிரனுக்கு, ஒன்பதாமிடத்திற் சந்திரனிருக்க பத்தாமிடத்தோன், நாலாமிடத்திலிருக்க, இருபத்தேழுவயதின்மேல், மூன்றுவருஷம்வரை, போஜராஜனைப்போல், தேசங்களையாளுகின்ற ராஜனவன்—எ-று. 367

அரசே லாப மிரண்டொன்பா னுதி யவரவர் தம்மனையிற்
சிரசா யிருக்க மால்யோகஞ் சேனைக் கதிபன் பூபாலன்
பொரவே கீர்த்திக் கதிபதியும் பூமிக் கரச னமைச்சனுமாய்த்
தரைசேர் முப்பத் தாறின்மே லெட்டு வருஷந் தனஞ்செயனே.

இ-ள். பாக்கியதனலாபாதியாகிய இம்மூவரும், அவரவர்கள் சொந்த வீட்டில்வந்திருக்க, மால்யோகமாம், இதன் பலன், முப்பத்தாறுவருஷத்தின்மேல், எட்டுவருஷம்வரைக்கும், வேற்றரசரை வெற்றிகொள்ளும் பார்த்திபனைப்போலக் கீர்த்தியுடையவனும், சேனைத்தலைவனும், பூமிக்குடையவனும், அரசனும், அமைச்சனுமாகி யிருப்பவனுமாவன்—எ-று.

செயமே மேஷஞ் சென்மமதாய்ச் செங்கதி ருறவே சனிபத்தில்
தயவா யிருக்க வொன்பதனிற் குருவுமதியுந் தானுறவே
நயமே விசுவா வசுயோக நடக்குந் தனவான் றேசாதி
கயமு நடத்தும் பதினொன்மேற் கண்ட வருஷம் பதினைஞ்சே.

இ-ள். ஜென்மலக்கினம், மேடமாய், அதில், சூரியனிருக்க, சனி பத்தாமிடத்திலிருக்க, ஒன்பதாமிடத்தில், குருவும், சந்திரனும், இருக்க, விசு

வாவசுயோகமாம், இதன்பலன், பதினன்கு வயதின்மேல், பதினைந்து வருஷம்வரை, தனவான், தேசாதிபதி, யானைநடத்தக்கூடியவனுமாவன்.

அஞ்சே பாக்கி யாதிபதி யிருந்த வங்கி சாதிபதி
துஞ்சா துச்ச மவனுடனே சொல்லும் லக்கி னதியுற
விஞ்சா நாள யோகபல னெல்லார்க் கரசன் ஸ்திரிலோலன்
வஞ்ச மறவே குருபத்தி வழுத்து மாறேழ் பதினெண்ணே.

இ-ள். பாக்கியாதிபனிருந்த அங்கிஷாதிபதி, உச்சமாக அத்துடனே, லக்கினதிபதிகூட, நாளயோகமாம், இதன்பலன், நாற்பத்திரண்டு வயதுக்குமேல், பதினெட்டுவருஷம், வரையும், எல்லாருக்கும், நல்லமன்னனகவும், ஸ்திரிலோலனகவும், குருபத்தியுள்ளவனகவு மிருப்பன்—எ-று. 370

எண்ணும் லக்கி னங்கிசையில் பத்தா மிடத்தா திபனிருக்க
ஒண்ணும் பத்தா மங்கிசையி லுறச்சன்மாதி யரசனுடன்
நண்ணு மிவரை யவர்பார்க்க நாடுங் கார்முக யோகபலன்
பண்ணுஞ் ஞானி மூவொன்பான் பாரி லெட்டு வித்தையுளன்.

இ-ள். லக்கினங்கிசையில், பத்தாமிடத்ததிபன் இருக்க பத்தாமங்கிசையில், லக்கினதிபன், இருக்க, லக்கினதிபனும், குருவும், ஒருவரையொருவர், மாறிப்பார்க்க, கார்முகயோகமாம், இதன்பலன், இருபத்தேழு வயதின்மேல், எட்டுவருஷம்வரை, ஞானியும், வித்தையுள்ளவனுமாவன்.

வித்தை லாபத் ததிபனைந்தின் மேவ வைந்தா மாதிபதி
புத்தி லாபத் திருந்திடவே புகரு நான்கோன் பதியுடனே
பத்தி யிருக்க மகபதிபோற் பாரை முழுது மரசாள்வன்
உத்த போகி யேழாறில் யோக நடக்கும் பதினறே.

இ-ள். லாபாதிபதி, ஐந்தாமிடத்திலும், ஐந்தாமிடத்ததிபதி, லாபத்திலும், இருக்க, சுக்கிரனும், நாலாமிடத்ததிபனும், சந்திரனுடனே, கூடியிருக்க, தேவேந்திரன்போல, நாற்பத்திரண்டு வயதுக்குமேல், பதினறு வயதுவரை, தேசத்தை யரசாள்வன்—எ-று. 372

பதியா மரசன் மதிபுகரும் பரிந்துமூவர் தனத்துறவே
விதியாம் பாக்கி யாதிபதி விரும்பு நோக்க முற்றிடவே
[illegible]திர்சேர் யோகங் கேதாரி காணும் பதாதி யானைபரி
[illegible]திசே ரைம்பா னிரண்டாண்டு தொடங்கி யேழும் பிரபலமே.

இ-ள். குரு, சந்திரன், சுக்கிரன், இம்மூவரும், இரண்டாமிடத்திலிருக்க, ஒன்பதாமிடத்ததிபதி பார்க்க, கேதாரியோகமாம், இதன்பலன், ஐம்பத்திரண்டு வயதின்மேல் ஏழுவருடம்வரை, சதுரங்கசேனையுடன், பிரபலனவன்—எ-று. 373

பலமாம் பத்திற் கருநாகம் பத்தா மாதி சனியிருவர்
பலமாய் மூன்றி லுற்றிடவே பகருஞ் சண்ட மாருதமாம்
தலமே தோறுந் தன்மங்க டானஞ் செய்யுஞ் சாத்திரவான்
உலவி யுண்பான் பராக்கிரமன் யோகம் பதினைந் ததன்மேலே.

இ-ள். பத்தாமிடத்தில், ராகுவும், பத்தாமாதியுஞ்சனியுங்கூடி, மூன்றிலிருந்தால், சண்டமாருதயோகமாம், இதன்பலன், தலங்கடோறுந் தானதருமங்கள் செய்யக்கூடியவனும், சாஸ்திரங்கற்றவனும், சஞ்சாரஞ்செய்து உண்பவனும், பராக்கிரமசாலியுமாவன்—எ-று. 374

மேலே பாக்கி யாதிபதி மேவு மங்கிச நாதன்றன்
ஏல வெந்தாங் கிசையேறி யிருந்த வங்கிசத் தோனேனும்
தூல மந்த வங்கிசையிற் றுலங்கு முச்ச னனுலும்
சாலக் கினுதி கேந்திரத்திற் சுங்கனுடனே தானுறவே.

இ-ள். பாக்கியாதிபதியாயிருக்கின்ற, அங்கிசவீட்டாதிபன் தன்னுடைய அங்கிஷம்பெற்று, அந்தவீட்டு, அங்கிசத்தோனுனலும், அந்தவீட்டில், உச்சமானுலும், லக்கினமுதலிய கேந்திரங்களில், சுக்கிரனுடனே கூடியிருக்க—எ-று. 375

வேறு.

தானுறும் பலன்கள் பாரி சாதமாந் தனவான் யோகம்
மானனை யார்க்கு நேயன் மன்னவர் கப்பங் கட்டும்
தேனுவெண் கொடையான் காத்திரி சேயுள னல்லூண் கீர்த்தி
ஆனதோ ரிருப தின்மே லாயுளின் பரியந் தந்தான்.

இ-ள். பரிசாதயோகமாம், இதன்பலன், இருபதுவயதின்மேல், ஆயுள் பரியந்தம், தனவான், பெண்கள் சிநேகன், மன்னர்களால், கப்பங்கொள்ளப்படுபவனும், சாஸ்திரங்கற்றவனும், புத்திராளுள்ளவனும், நல்லுணவு அருந்துபவனும், கீர்த்தியுடையவனுமாவன்—எ-று. 376

வேறு.

அந்த லாப னுற்றமனைக் கோன்பா னதிபன் சோமனுடன்
வந்தே லாபந் தனிலிருக்க வருஞ்சன் மாதி நோக்கமுற
விந்தகே தார யோகபலன் மேவும் பேரி மல்லாரி
சொந்த கரிமா விருபதுமூன் றுடன்மேல் வருட மிருபதுமே.

இ-ள். லாபாதிபன், இருந்த வீட்டுக்கு, ஒன்பதாம்வீட்டதிபன், சந்திரனுடன், சேர்ந்து, லாபஸ்தானத்திருக்க, லக்கினுதிபன்பார்க்க, கேதாரயோகமாம், இதன்பலன், இருபத்துமூன்று வயதுக்குமேல், இருபதுவயதுவரை, பேரிகை, மல்லரி, குதிரை, பொருந்திவாழ்வான்—எ-று. 377

துலங்கும் பாக்கி யாதிபதி சூழ்ந்தங் கிசாதி பதியுச்சம்
இலங்கி யிரண்டி லுற்றிடவே யிரண்டா மாதி பாக்கியத்தில்
பலங்கள் கொடுக்குஞ் சுபயோகம் படிப்ப னீதி யரசாள்வன்
குலங்கள் போற்று மையொன்பான் கூறுமிருபத் தோராண்டே.

இ-ள். பாக்கியாதிபதியாயிருந்த, அங்கிசவீட்டாதிபதி, உச்சமாகி, இரண்டாமிடத்திலிருக்க, இரண்டாமிடத்ததிபன், பாக்கியத்திலிருக்க, சுபயோகமாம், இதன்பலன், நாற்பத்தைந்து வயதின்மேல், இருபத்தொரு வருஷம்வரைக்கும், கல்வியுள்ளவன், குலத்தவர் துதிக்கும்படி கோமானாக அரசாள்பவனுமாவன்—எ-று. 378

ஒன்றே யேழா மாதிபதி யொன்பா னிருக்க வொன்பஃதோன்
நன்றே யேழிற் றூரகையின் ராசிக்கதிப னிவர்களுடன்
ஒன்றி யிருக்கச் சரிதாம யோக மரசாஞ் சேனையுளன்
என்றே நீதி முப்ப தின்மே லியங்கும் வயதோ வையாறே.

இ-ள். ஏழாம்வீட்டதிபன், ஒன்பதிலும், ஒன்பதாம் வீட்டதிபன், ஏழிலும், சந்திரன் நின்றராசிக்கதிபதி, இவர்களுடன் கூடியிருக்க, சரிதாம யோகமாம், இதன்பலன், முப்பது வயதின்மேல், முப்பது வயதுவரை அநேக சேனைகளோடு கூடிவாழும் அரசனுவன்—எ-று. 379

ஐயா விரண்டிற் குருவிருக்க வமர்ந்தே நான்கிற் சுங்கனுறப்
பொய்யா தேழிற் செய்மதியும் பொருசென்மாதி சுபருடனே
நையா திருக்க விதன்பலன்க ளுடுங் காம்ய யோகமதாம்
வையம் புகுந்தீர் பத்திரண்டு வருஷமாறுஞ் சவுக்கியமே.

இ-ள். இரண்டாமிடத்திற் குருவிருக்க, நான்கிற் சுக்கிரனிருக்க, ஏழாமிடத்திற் சந்திரனும், செவ்வாயுமிருக்க, லக்கினதிபன், சுபருடன் கூடிப் பலம்பெற்றிருக்க, காமியயோகமாம், இதன்பலன் இருபத்திரண்டு வயதுக்குமேல், ஆறுவருஷம் பூமியையாண்டு சவுக்கியமாயிருப்பன்—எ-று.

மேய வைந்தா மதிபனென்பான் வீட்டி லிருக்க லாபத்தோன்
தூய மதியு மிரண்டிலுறச் சோடச தானம் பண்ணுவனே
ஆய வரசர் சன்மான மதிகம் பெறுவ னளயோகம்
காய பலன்க ளேயொன்பா னதன்மேன் மூன்றாண் டாங்காணே.

இ-ள். ஐந்தாமிடத்தோன், ஒன்பதிலிருக்க, லாபாதிபதியும், பூரண சந்திரனும், இரண்டாமிடத்திலிருக்க, நளயோகமாம், இதன்பலன், ஒன்பது வயதுக்குமேல் மூன்றுவருஷமளவும் அரசசன்மானம் பெறுபவனும், சோடசதானஞ் செய்பவனும், தேகபலமுள்ளவனுமாவன்—எ-று. 381

காணும் லாபா திபத்துச்சன் கண்ட சுங்க னுடன்கூடி
வேணுஞ்சன் மாதி கேந்திரத்தின் மேவி யிவர்க ளிருந்திடவே

நாணும் பிரபை யோகபல னடத்துந் தியாகி வெகுபோகி
தானு வரசன் சேனுதி தனிமூ வைந்தி னெட்டாண்டே.

இ-ள். லாபாதிபன், அதியுச்சம்பெற்று, சுக்கிரனுடன், கூடி லக்கினுதிபதிக்கு, கேந்திரத்திருக்கில், பிரபையோகமாம், இதன்பலன், பதினைந்து வயதுக்குமேல், எட்டு வருஷம்வரை, செப்புதற்கரிய, தியாகஞ் செய்பவனும், இப்புவியில் வெகுபோகமுடையவனும், ஒப்பற்ற சேனுதிபதியும், அரசனுமாவன்—எ-று. 382

ஆண்ட மதியுங் குருவிருவ யமர்ந்தே யொன்றி லுற்றிடவே
பூண்ட விரண்டோன் லாபத்திற் பொருந்தியிருக்கச் சன்மாதி
நீண்ட சுபர்க ளுடன்கூடி நிற்கச் சுசுபா யோகபலன்
வேண்டும் வருஷ நாற்பான்மேல் விளம்பு மூன்றுந் தேசாதி.

இ-ள். குருவுஞ் சந்திரனுங்கூடி லக்கினத்திலிருக்க தனுதிபதி லாபத்திருக்க, லக்கினுதிபதி சுபக்கிரகங்களுடன் கூடியிருக்க, சுசுபாயோகமாம், இதன்பலன் நாற்பதுவயதுக்குமேல், மூன்றுவருஷம்வரை, தேசாதிபதியாம்—எ-று. 383

சாதி லக்கி னுதிபதி யிருந்தங் கிசையோ னுடன்சசியும்
ஓது மிவரைப் பத்திடத்தோ னேங்கும் பார்வை நோக்குறவே
வாதயூப யோகபலன் மந்திரி மண்ட லாதிபதி
நீதி நடத்தும் பதினென்றில் நேரும் வருஷ மூன்றினுமே.

இ-ள். லக்கினுதிபதியிருந்த, அங்கிசவீட்டோனுடன் சந்திரனும், இருக்க, இவர்களைப் பத்தாமிடத்தோன் பார்க்க, யூபயோகமாம், இதன்பலன், பதினொரு வயதுக்குமேல், மூன்று வருஷம்வரை, கியாதியுடைய அமைச்சனும், அரசனுமாகி, நீதிநடத்துபவனுமாவன்—எ-று. 384

இனிதாம் லக்கி னத்ததிப னிருங்கி சாதி திரிகோணம்
மனுவா யுற்றே குருசுங்கன் வரவே யிவர்க டாமிருக்க
நனியார் பத்திற் சனியுச்ச மாகிற் றாம யோகபலன் [ன்
தனியே பத்தொன் பான்மேலே தரணி யாள்வ னொண்டோன்பா

இ-ள். லக்கினுதிபதியிருந்த, அங்கிசாதிபதி திரிகோணத்திலிருந்து, குரு, சுக்கிரன், கூடியிருக்கப் பத்தாமிடத்தில், சனியுச்சமாயிருக்க, தாமயோகமாம், இதன்பலன், பத்தொன்பது வயதுக்குமேல், ஒன்பது வருஷம்வரை, தரணியாளும் அரசனுவன்—எ-று.

ஆளு மைந்தா மதிபதிதா னேந்தே ழொன்பா னமர்ந்திடவே
தாளு மரசன் சன்மாதி தானுங்கூடி யங்குறினும்
நீளுஞ் சோம னென்பதினி னிற்கக் கதிரோ னுச்சமெனக் [மே.
கேளுங் காந்தர்வ யோகமெனக் கிடைக்கும் பலன்க ளுரைத்திடு

இ-ள். ஐந்தாம்வீட்டதிபதி, ஐந்து, ஏழு, ஒன்பதாமிடத்திலிருக்க, லக்கினாதிபதியும், குருவும்கூடி, மேலேசொன்ன, நவசத்தம பஞ்சமஸ்தானங்களில், நின்றாலும், சந்திரன் ஒன்பதாமிடத்தில்நிற்க, சூரியன், உச்சமாகக் காந்தர்வயோகமாம், இதன்பலன் சொல்லுமிடத்து—எ-று. 386

உரைக்கும் பலவான் பிரசித்த னெங்கும் புந்தி யுள்ளவனும்
தரைக்கு மரச னாபரணந் தானும் வெகுவாய்ப் பூண்டிடுவன்
துரைக்கும் புத்தி சொல்லிடுவன் சுகந்த கீதப் பிரியனென
விரைக்கு மறுபத் தாறதன்மேல் விளங்கும் வருட மெட்டுளதே.

இ-ள். அறுபத்தாறு வயதின்மேல், எட்டுவருஷம்வரை பலமுடையவனும், பிரசித்தமுடையவனும், புத்திசாலி அரசன், ஆபரணங்கள் பூணுபவன், அரசர்களுக்கும் யோசனைசொல்பவன், சுகந்த வஸ்துக்களிலும் சங்கீதத்திலும் பிரிய முடையவனுமாவன்—எ-று. 387

உளதே பத்தா மதிபதிதா னுற்ற வங்கிசத் தோன்பத்தில்
அளவே சுங்க னுடன்கூட வான ராசிக் கதிபதிதான்
களவா யிருந்தங் கிசநாதன் காணு முச்சம் பிரத்திமமாம்
இளகா வரசன் பூபால னீரெட் டதன்மே லேழென்ப.

இ-ள். பத்தாமிடத்தோனிருந்த, அங்கிசவீட்டதிபதி சுக்கிரனுடன் கூடி பத்தாமிடத்தில்நிற்க, லக்கினாதிபதிஇருந்த, அங்கிசவீட்டதிபன்,உச்சமாக, பிரத்திமயோகமாம், இதன்பலன், பதினாறுவயதுக்குமேல், ஏழுவருஷம்வரை, பூமியை, ஆளுகின்ற, இளவரசனாவன்—எ-று. 388

பதிசேர் பாக்கி யாதிபதி யிருந்தங் கிசாதி பதிநான்கில்
துதிசேர் நிற்க நான்காதி துலங்கு கேந்திர முச்சத்தில்
விதியா நிற்கின் முதியோக விளங்கு மரச சன்மானன்
கதிசேர் சுகவான் பாக்கியவான் காணு மிருபான் கொற்றவன்மேல்.

இ-ள். பாக்கியாதிபதி, இருந்த அங்கிசவீட்டதிபதி, நாலாமிடத்தில் நின்று, அந்த நாலாமிடத்தோன், கேந்திர உச்சத்தில்நின்றால், முதியோகமாம், இதன்பலன் இருபது வருஷத்திற்குமேல், அரசசன்மானன், சுகவான், பாக்கியவான், அரசனுமாவன்—எ-று. 389

தவமாஞ் சன்மத் துச்சனுறத் தரணி சுதனு முழுநோக்க
ந[illegible]மிடத்தோன் காரியுட னண்ணப் புலவ னிதன்பெயரோ
கவன சண்ட யோகபலன் கருணை யரசர் மதிமந்த்ரி
இவனன் வயது பன்னிரண்டா மிதன்மேன் மூன்றுந் தனபதியே.

இ-ள். ஜென்மலக்கினத்தில், உச்சனிருக்க, செவ்வாய் முழுப்பார்வை பார்க்க, ஒன்பதாமிடத்தோன், புதன் சனியோடிருக்கச் சண்டயோகமாம்,

இதன்பலன் பன்னிரண்டு வயதுக்குமேல், மூன்றுவருஷம்வரை கருணை யுள்ளவன், அரசனுக்கு மதிமந்திரி, தனமுடையவனு மாவன்—எ-று. 390

பதிசே ரோன்பா னுதிபதி பண்பாய் மூன்றி லிருந்திடவே
துதிசே ரரசன் முழுநோக்கச் சொல்லுங் கான யோகபலன்
அதிசே ரூபன் முகத்தழக னுடை பணிதி யுள்ளவனும்
கதிசேர் வயது பதினாறிற் கானு மூன்றின் முகவசியம்.

இ-ள். ஒன்பதாமிடத்ததிபதி, மூன்றாமிடத்திலிருக்கவியாழன், பார்க்க கானயோகமாம்,இதன்பலன்,பதினாறுவயதுக்குமேல்,மூன்றுவருஷம்வரைக் கும், அதிரூபன், முகத்தழகன், வஸ்திராபரணங்களையுடையவன், முகவசிய முடையவனுமாவன்—எ-று. 391

வசிய மைந்திற் குருவிருக்க வைந்தா மாதி சுபரிருவர்
நசையாய்க் கூடித் தானிருக்க நாடும் பத்திற் சனியுறவே
பொசியு மகிட யோகபலன் புடவி வனத்துக் கதிபதியாம்
முசியும் வருஷ முப்பதின்மேன் முன்னு மெட்டு மேயரசாம்.

இ-ள். ஐந்தாமிடத்திற்குருவும், ஐந்தாம்வீட்டதிபன் இருசுபருங்கூடி, நட்புப் பெற்றிருக்க, பத்தாமிடத்திற் சனியிருக்க, மகிடயோகமாம், இதன் பலன்,முப்பதுவயதுக்குமேல், எட்டுவருஷம்வரை, பூமிக்கும்வனத்துக்கும், தலைவனாகி, அரசனவன்—எ-று. 392

வேறு.

பனிரெண்டு ராசி யென்னும் பதிலக்கின மாகக் கொண்டு
இனியதாய் தந்தை புத்திர ரிசைமனை யுடன்வந் தோர்கள்
தனியுமா யுருத்தா யங்க டனலாப வாக னங்கள்
முனியும் பாக்கியகர் மங்கண் முதற்பலன் மொழிந்தி டீரே.

இ-ள். துவாதசபாகமாகிய, பன்னிரண்டு ராசிகளையும், லக்கினமாகக் கொண்டு, தாய், தகப்பன், புத்திரர், களத்திரம், சகோதரர், ஆயுள், தாயத் தார், தனம், லாபம், வாகனம், பாக்கியம், கர்மம் முதலிய பலன்களைச் சொல்லுவீர்களாக—எ-று. 393

பாக்கியத் திரையுங் கர்மத் தாதியும் லக்கினத் தோனும்
தாக்கியே கூடி னுலுந் தயவுட னென்றிற் கொன்று
நோக்கிய கண்ணுற் ருலும் நண்ணிய வறிவு கேள்வி
வாக்குகள் செலுத்துங் கோவாய் மண்ணினில் வாழ்வன் கண்டீர்.

இ-ள். ஒன்பது பத்துக்குடையவர்களும், லக்கினதிபதியும், கூடினு லும், ஒன்றுக்கொன்று பார்த்தாலும், நட்பமான, அறிவு, கேள்வி, நல்வச னம், உள்ள, அரசனுய், இவ்வுலகத்தில் வாழ்வான்—எ-று. 394

ஒன்பதற் கொன்ப தேனு மொருபத்திற் குப்பத் தேனும்
தன்பதி யைந்து மேழுந் தானந்த வீட்டோன் றன்னோ
டன்புடன் லக்கி ஞதி யணுகிட வலது நோக்கத்
துன்பமற் றன்றிச் செல்வஞ் சூழ்மன்ன ஞவன் சொல்லே.

இ-ள். ஐந்தாமிடம், ஒன்பதாமிடத்தவர்களை லக்கிஞதிபதிபார்க்க,அல்லது கூடியிருக்க, துன்பமில்லாத செல்வம், பொருந்திய அரசனுவன்-எ-று.

ஆறுட னேழா மாதி யவருடன் லக்கி ஞதி
பேறுடன் கூடி ஞலும் பெருமையாய்க் கண்ணுற் ருலும்
வீறுடன் மிக்க செல்வ மேன்மையாம் பாக்கி யங்கள்
சேறுசெய் திருந்து வாழ்வன் செகத்துக்கு மன்ன ஞவன்.

இ-ள், ஏழாறுவீட்டதிபர்களோடு, லக்கிஞதிபதி கூடிஞலும், பார்த்தாலும், செல்வம், மேன்மை பாக்கியமும்பொருந்தி பூமிக்கு, அரசனுவன்.

கேந்திரத் தானத்தா தி திரிகோணத் தோனுங் கூடிச்
சேர்ந்திட வலதொன் றுக்கொன் றிகழவே நோக்கி ஞலும்
பேர்ந்தவர் திசைக டன்னிற் பூணுமந் திரியோ கங்கள்
சார்ந்திடுஞ் சித்த மாகச் சகலபாக் கியமென் றோதே.

இ-ள். கேந்திராதிபர்கள், திரிகோணுதிபர்கள், இவர்கள், கூடிஞலும், ஒன்றுக்கொன்று பார்த்தாலும், இவர்கள் திசாபுத்தி காலங்களில், மந்திரியும், யோகவானும், சகலபாக்கியமும் பொருந்தியவனுமாமென்று சொல்ல 397
வேண்டும்—எ-று.

வாகனு தியுங்கோ ணத்தி ஞதியுங் கூட மற்றும்
தாகமா யொன்றுக் கொன்று சார்ந்துடன் பார்ப்பா ராயிட்
ஏகமாய்ப் பதுமத் துற்ற விலக்குமி யோக மென்பர்
போகவான் சகலபாக்கியம் பூணும்பூ பாலன் கண்டீர்.

இ-ள். நாலாமிடத்தோனுடன், திரிகோணுதிபதிசேர, அல்லதுபார்க்க, இலட்சுமியோகமாம், இதன்பலன், போகவானும், சகலபாக்கியங்களும் 398
நிறைந்த அரசனுவன்—எ-று.

தனபதி பாக்கி யத்தோன் லாபத்தோன் சந்திர கேந்திரம்
த[illegible]ின்மிக விவர்க ளாரே சார்ந்திடப் பதிஞென் றைந்தும்
வினவிய குருவினுட்சி வீடெனிற் செல்வ முள்ளன்
புனையிழை யாளே லட்சுமி யோகமாய்ப் புகலு வாயே.

இ-ள். பொற்பூடணத்தை, அற்புதமாயணிந்து, விற்புருவமுள்ள கற்பகக் கனியாகிய பெண்ணே, தனபாக்கிய லாபாதிதானத்தவர்கள், சந்திர

கேந்திரம்பெற்று ஐந்துபதினொன்று, குருவீடாயிருக்கில், செல்வமுள்ளவனும், லட்சுமியோக முடையனென்றும், சொல்லக்கடவாய்—எ-று. 399

ரண்டினிற் கதிபன் பாக்கியந் தன்னிலும் லாபந் தன்னில்
தண்டிடாப் பாக்கி யாதி தானுறி லிலாபத் தாதி
ஒண்டொடி யுடனின் றுலு முயராஜ யோக மூன்று
கொண்டநற் கிரகஞ் சொந்தக் கிரகமுற் றிருக்கின் மன்னும்.

இ-ள். ஒளிபொருந்திய, வளையலையணிந்தபெண்ணே, இரண்டாமிடத்தோன், ஒன்பதிலும், அவ்வொன்பதுக்கதிபன்லாபத்தில், லாபாதிபனுடன், பொருந்தியிருக்க, ராஜயோகமாம், இரண்டு, ஒன்பது பதினொன்று, இடத்ததிபர்கள், ஆட்சியாயிருக்க, ராஜனும்—எ-று. 400

யோகாதி நாமங்கள்.

அகயோகம்
அங்கிஷயோகம்
அதிகயோகம்
அனபாயோகம்
அரசகேந்திரயோகம்
அவயோகம்
அஸ்வயோகம்
ஆதியந்தயோகம்
இந்திரயோகம்
இராஜயோகம்
இலையோகம்
இலட்சுமியோகம்
உபசயயோகம்
கத்திரியோகம்
கவுளயோகம்
கலாநிதியோகம்
காகளயோகம்
கார்முகயோகம்
காமியயோகம்
காந்தர்வயோகம்
கானயோகம்
கிரகமாலிகாயோகம்
கேதாரயோகம்
கேதாரியோகம்
கேமித்திரயோகம்
கேமுத்திரயோகம்
கேசரியோகம்
கையோகம்
கோள்யோகம்
கௌளியோகம்
சகடயோகம்
சகரயோகம்
சக்கரதரயோகம்
சந்திரமங்களயோகம்
சக்கரயோகம்
சக்கிரயோகம்
சமுத்திரயோகம்
சரபயோகம்
சமரயோகம்
சரஸ்வதியோகம்
சண்டயோகம்
சண்டமாருதயோகம்
சரிதாமயோகம்
சாங்கியாயோகம்
சாம்ராச்சியயோகம்
சிங்காடவியோகம்
சிவயோகம்
சுனபாயோகம்
சுபயோகம்
சுமத்திரயோகம்
சுசுபாயோகம்
சூலயோகம்
தரித்திரயோகம்
தாந்திரியோகம்
திரியோகம்
துரியோகம்
தூமயோகம்
நளயோகம்
நாகயோகம்
நாபியோகம்
நாளயோகம்
நீசபங்கராஜயோகம்
பதுமயோகம்
பத்திரயோகம்
பர்வதயோகம்
பட்சியோகம்
பாசயோகம்
பாஸ்கரயோகம்
பாசகயோகம்
பாரிசாதயோகம்
பிரத்திமயோகம்
பிரபையோகம்
பிரமயோகம்
புதயோகம்
பேரியோகம்
மதனயோகம்
மகாராஜயோகம்
மகிடயோகம்
மாளுவயோகம்
மாலாயோகம்
மால்யோகம்
மிருதங்கயோகம்
முதியோகம்
யூபயோகம்
ருசியோகம்
வச்சிரயோகம்
வல்லகியோகம்
விசுவாசுயோகம்
விஷ்ணுயோகம்
விக்கயோகம்
வீணையோகம்
வேசியோகம்

தரித்திரயோகம்.

வேறு.

கண்ட சன்ம லக்கினங்கள் காரி மனையா யதிற்சோமன்
மண்டி யிருக்க வவன்றனக்கு வளர்பன் னொன்றி லரசனுறக்
கொண்ட தாரித் திரங்கடகம் குறிலக் கினமா யதிற்காரி
மிண்டி யிருக்கப் பன்னொன்றில் வேந்த னிருக்கத் தரித்திரமே.

இ-ள். ஜென்மலக்கினம், சனிவீடாய், அதிற் சந்திரனிருக்க, அச்சந்திரனுக்கு, பதினொன்றிற் குருவிருக்கத் தரித்திரயோகமாம், ஜென்மலக்கினம், கடகமாய், அதிற்சனியிருக்க, பதினொன்றில், குருவிருந்தாலும், தரித்திரயோகமாம்—எ-று. 401

மேவுங் குடும்பந் தனிற்பாவர் வெகுவாய்ப் பலன்க ளன்றியுறப்
பாவக் கிரகந் தான்பார்க்கப் பரவுஞ் சன்மங் குடும்பத்தின்
கோவும் பலன்க ளற்றிருக்கக் குறைவே படைத்துத் தானுண்ணத்
தூவு மன்னங் கிடையாமற் சோம்பித் தரிப்பன் சுகமில்லான்.

இ-ள். குடும்பத்தானத்திற், கொடும்பாவர்கள், பலமற்றிருக்க, அதைப் பாவர்கள் பார்க்க, ஜென்மலக்கினாதிபதியும், குடும்பாதிபதியு, பலமற்றிருக்க, சுகக்குறைவுள்ளவனாகி, உண்ண, அன்னமும், உடுத்தஆடையும், கிடையாமல், சோம்பலுடனே, சாம்பற்பூசித் தீம்பருடனே, கூடித்திரிவான்.

தரிக்குஞ் சன்ம லக்கினத்துஞ் சசிதா னிருந்த லக்கினத்தும்
பரிக்கு முபய பாரிசத்தும் பாவ ரிருக்கத் தரித்திரமாம்
விரிக்கு முன்னோர் பாரிசத்தின் மேவி னுடனே தரித்திரமாம்
தெரிக்கும் பின்னே யுறிற்பாலி யத்திற் றரித் திரஞ்சேரும்.

இ-ள். ஜென்மலக்கினத்தும், சந்திராலக்கினத்தும், முன்னும் பின்னும் பாவரிருக்கத் தரித்திரயோகமாம், இவ்விலக்கினங்களுக்கு, முன்பக்கம் பாவர்கள்நின்றால், குழந்தைவயதிலே தரித்திரமாம், பின்பக்கம் பாவர்கள் நின்றால், பாலியத்திலே தரித்திரமாம்—எ-று. 403

சேருஞ் சென்ம கேந்திரத்திற் றிரிகோ ணத்திற் குடும்பத்தில்
மேரு வியத்திற் பாவர்நிற்கின் மிகவுந் தாரித் திரயோகம்
வாருஞ் சன்ம லக்கினத்தின் மதியஞ் சனியு மருவுகினும்
நேருஞ் சன்மந் தனிற்பாவர் நிற்கிற் றரித் திரநிறையும்.

இ-ள். ஜென்மலக்கினம், கேந்திரம், திரிகோணம், குடும்பம், பன்னிரண்டா மிடமாகிய, இடங்களில், பாவக்கிரகங்கள் நிற்கில், மிகவும்,தரித்திர

யோகமாம் ஜென்மலக்கினத்தில், சந்திரனும், சனியும், நின்றாலும்,மற்றும் பாவக்கிரகங்கள் நின்றாலும், தரித்திரம் நிறைந்தவனும்—எ-று. 404

நிறையு மிரண்டா மிடத்திற்கோ ணீங்க மூன்ற தாமிடத்தில்,
உறையுங் கிரக முண்டாயி னேதுங் கேமுத் திரயோகம், குறையும்
பலனே வையங்கைக் கொண்டே யுண் ணுங் குறைவுடையோன்,
நறைசேர் குழலா யிரண்டிற்கோ ணண்ணி லில்லை நல்குரவே.

இ-ள். வாசனைதங்கிய மலர்மாலையை நேசமாய்ச் சூடுங் கூந்தலுடைய பெண்ணே, இரண்டாமிடத்திற் கிரகமில்லாமல், மூன்றாமிடத்தில், கிரக மிருந்தால் கேமுத்திரயோகமாம், இதன்பலன், குறைவுடையோன், பிச்சை யெடுத்துப் புசிப்பவனுமாம். இரண்டாமிடத்திற் கிரகமிருந்தால், தரித்திர மில்லை, என்பதாம்—எ-று. 405

குரவார் மதிக்கு முன்பின்னுங் குணமா நல்லோர் குறுகாரேல்
வரவான் மதியின் கேந்திரத்தின் மருவி னுலு மிருபுறமும்
உரவோர் தாமில் லாதிருந்தா லுண்டாங் கேமுத் திரயோகம்
திரவேற் கண்ணுய் வெகுபாவஞ் செய்தார்க் கிந்தச் செயலாமே.

இ-ள். வெற்றியுறும் வேலாயுதம் போன்ற விழியையுடையபெண்ணே, பூரணசந்திரனுக்கு முன்னும்பின்னும், நல்லகிரகங்க ளில்லாவிட்டாலும், அல்லது அச்சந்திரகேந்திரத்துக்கு, இருபுரமும், நட்புக்கோட்கள், இல்லாவிட்டாலும், கேமுத்திரயோகமாம், இந்தயோகம், வெகுபாவஞ் செய்தவர்களுக்கே யுண்டாகும்—எ-று. 406

செயலா ருடலைச் சனிநோக்கத் திகழ்மே ஷத்திற் சேய்மதியும்
இயலா யிருக்கப் பிறந்தவனு மிரந்தே யுண்ப னெந்நாளும்
பயிலார் சன்ம மெட்டிடத்தைப் பங்கு பாதன் பார்த்திடினும்
கயலார் விழியாய் சீர்கேடன் காணு மெனவே கருதிடுமே.

இ.ள். அயிலையும், கயலையும் அதன் செயலையும், மயக்குகின்ற கண்களையுடைய பெண்ணே, சரீரஸ்தானத்தைச்சனி பார்க்க, மேஷத்தில், திங்களும், மங்கலனுஞ் சேர்ந்திருக்கப் பிறந்தவன், எப்போதும், எங்குந்திரிந்து இரந்துண்பவனும், இலக்கினம், எட்டாமிடம், இவைகளைச்சனி பார்த்தால், மட்டிப்புத்தியிற் கெட்டிக்காரனுவானென்று திட்டமாய் உணர்ந்து கொள்வாய்—எ-று. 407

மேலாங் கிரக மெட்டுமொரு வீட்டி லொன்றி யிருந்திடவே
சாலுங் கோள்கள் யோகமிது சாற்று ஞானி தரித்திரனும்
மாலா யிரண்டு வீட்டிலுற வருமே தான்கை யோகங்கள்
நீலாய் மந்த னிட்டே னில்லா தவனே லச்சையிலான்.

இ-ள். எட்டுக்கிரகங்களும், விட்டுவிலகாமல், ஒரேவீட்டிற் கட்டுப்பட்டிருந்தால், கோள்யோகமாம். இதன்பலன், ஞானியம், தரித்திரனும், இரண்டு வீட்டில் எட்டு கிரகங்களுமிருந்தால், கையோகமாம், இதன்பலன், பொருளும், அருளுமில்லாதவன், போக்கிறி, பொய்யன், மந்தன்,கிட்ரேன், லச்சையில்லாதவனுமாவன்—எ-று. 408

ஆனுன் மூன்றி ராசிதனி லணுகிக் கிரக மிருந்திடவே
தானே சூல யோகமதாஞ் சரீரந் தன்னிற் காயவடு
மானே குலத்திற் பாதகந்தான் வருமே யிவன்றன் கரமதனுல்
ஊனம் படுத்துந் தரித்திரவா னுதவான் றமருக் கின்வசனம்.

இ-ள். மூன்றுராசிகளிலும், எட்டுக்கிரகங்களும் கிட்டிநின்றால், சூலயோகமாம், இதன்பலன், தேகத்தில் காயவடுவுள்ளவன், பஞ்சபாதகஞ்செய்பவன், குற்றப்படுந்தரித்திரவான், உற்றூர்பெற்றூர், உறவினருக்கு ஒருகாசுமீயாத உலோபியுமாவன்—எ-று. 409

வசமே ழெட்டோன் பதுபத்தின் மருவி யிருக்கின் றிரியோகம்
நிசமா யீனத் தொழில்புரிவன் சோம்ப னீச னடையுடையன்
தசமே லாப மொன்றுவிபந் தன்னிற் கிரகந் தாமுறவே
வசையா யீனத் தொழில்புரிந்து மன்னு செலவு கொஞ்சமதாம்.

இ-ள். கிரகங்களெல்லாம்பரவி, ஏழு, எட்டு, ஒன்பது, பத்தில்,இருக்க, திரியோகமாம், இதன்பலன், மானங்கெட்ட யீனத்தொழில் செய்பவனும், மந்தமாய், எந்தநேரமும், சோம்பலுடையவனும், மதிப்பற்ற, நீசநடையுடையவனுமாவன், ஒன்று, பத்து, பதினொன்று, பன்னிரண்டாமிடங்களில், கிரகங்களெல்லாங்கூடி நின்றால் வசைக்கிடமான, யீனத்தொழில் செய்து, செலவுக்குங் கூடவழியில்லாதவனுமாவன்—எ-று. 410

தாமே சன்மஞ் சசியுறவே தானுங் கேந்திரங் காரியுறில்
ஆமே வியத்திற் குருவிருக்கி லைய மெடுப்ப னெனப்புகல்வர்
தோமே வியமா றெட்டதனிற் றொடர்சன் மாதி தானிருக்கத்
தீமை புரியுங் கோள்கூடத் தேச மெல்லாம் நடந்திடுவன்.

இ-ள். லக்கினத்திற் சந்திரனும், கேந்திரத்திற் சனியும், வியத்திற் குருவு மிருக்கப் பிச்சையெடுப்பவனென்றும், மறைவுஸ்தானமாகிய, ஆறு எட்டுப் பன்னிரண்டில், இலக்கினுதிபதியிருந்து, பாவக்கிரகங்கள் சேர்ந்தால், தேசசஞ்சாரஞ் செய்பவனுமாவன்—எ-று. 411

நடக்குந் தனபாக் கியமெட்டைந் தெனுநால் வீட்டிற் பாவருறக்
கொடுக்கும் வெகுவாய்த் தரித்திரங்கள் கூறு மூன்று மனையாயின்

கொடுக்கு முக்கா விரண்டிலரை குலவு மொன்றிற் காலாகும்
விடுக்கு மிதனி லுறப்பாவர் விரவி யிருக்கிற் றரித்திரமே.

இ-ள். இரண்டு, ஐந்து, எட்டு, ஒன்பதாகிய, இந்நான்கிடங்களிற்பாவர்கள்நின்றால், மிகுந்ததரித்திரவான், இதில்மூன்றிடங்களிற் பாவர்கள் நின்றால், முக்கால் தரித்திரன், இரண்டிடங்களில் பாவர்கள் நின்றால் அரைத்தரித்திரன், ஒரு இடத்திற் பாவர்கள்நின்றால், கால்தரித்திரனும்—எ-று.

மேவு மொன்பா னதிபதியை விடவெட் டாதி பலவானுப்த்
தாவி யிருக்கத் தரித்திரமே தபன னீசாங் கிசந்தன்னில்
மேவி யிருக்க லாபாதி விரவத் தாரித் திரயோகம்
ஏவும் விழியாய் சோதிடத்தோ ரியம்பும் பலன்க ளிவையாமே.

இ-ள். வம்பரைவெல்லும், அம்புபோன்ற கண்களுடைய பெண்ணே, ஒன்பதாமிடத்தானைப் பார்க்கிலும், எட்டாமிடத்தான், பலம்பெற்றிருந்தால், தரித்திரயோகமாம், சூரியன், நீசாங்கிசத்திலிருக்கப், பதினோராமிடத்தோன்கூட, தரித்திரயோகமாமென்று, சோதிடநூலாய்ந்த நல்லோர்கள், சொல்லுவார்கள்—எ-று. 413

தரித்திரயோகம்

சம்பூர்ணம்.

அங்கவீனம்.

வேறு.

கண்ட பனிரண் டாம்வீட்டோன் கனத்த திரிகோண மேறிக்
கொண்ட கேந்தி ரத்தினிற்க வவனொடு கூடி ராகு
அண்டியே நிற்கப் பாவ ரவர்களைப் பார்த்தி ருக்க
எண்டிசை யுலகி லங்க வீனனு யிருப்ப னென்னே.

இ-ள். வியத்தானத்தோன், நயத்திரிகோணகேந்திரங்களில், பயத்துடன், நிற்க, அவனோடு, ராகுவுங் கூடியிருக்கப் பாவக்கிரகங்கள் பார்க்க, எண்டிசையுலகில், கண்டவரஞ்ச, அங்கவீனனுவன்—எ-று. 414

சோம னுறிற் பன்னிரண்டிற் றொடர்ந்தே நிற்க வோரிரண்டில்
ஆமே செவ்வாய் தானுறவே யவரைப் பாவர் மிகநோகப்
போமா மங்க வீனமெனப் புகல்சேர் நல்லோர் பார்வையுறில்
தீமை யில்லைத் தீர்க்காங்கஞ் செப்பாய் பலனீ சிந்தித்தே.

இ-ள். ஆறிலும், பன்னிரண்டிலும், அம்புலியிருக்க, அங்காரகன் சூடும் பத்திலிருக்க, இவர்களைப், பாவக்கிரகங்கள்பார்த்தால், அங்கவீனனும், சுபக்கிரகங்கள்பார்த்தால், குற்றமில்லாத, தீர்க்கமான, அங்கமுடையவனென்று, ஆராய்ந்து சொல்லுக—எ-று. 415

சிந்தை காரி குருபரிதி செவ்வாய் ராகு கேந்திரத்தில்
அந்த முடனே திரிகோணத் தனுகா திருக்கப் பலனில்லார்
வந்தா லங்க வீனமுறு மருவும் விதேச சஞ்சாரம்
நொந்தே புதல்வர் நாசமுறு நொய்யன் மிடியன் கண்டீரே.

இ-ள். செவ்வாய், ராகு, சனி, சூரியன், குரு, புதன், இவர்கள், திரிகோண கேந்திரங்களிற் சேராதிருக்கப் பலனில்லை, ஷெ கிரகங்கள், மேலே சொன்ன, திரிகோணகேந்திரங்களில் நின்றால், அங்கவீனமும், தேகமறுக்கஞும், அந்நியதேச சஞ்சாரமும் புத்திரநாசமுஞ் செய்யும், அற்பத்தன்மையும், மிடியனுமாவன்—எ-று. 416

வேறு.

இந்துவோ டசுபர் கூடி யீரிரண் டெய்திற் கள்ளன்
முந்திரண் டிற்சேய் மாந்தி முழுப்பாவ ருறிற்றீ நோயன்
அந்தமிற் பொய்யன் பெண்டிர் வியபிசாரி யாண்மை யில்லான்
சிந்தனை வியபிசா ரத்த னிசமிலான் றீய வூணன்.

இ-ள். திங்களோடுபாவர்கள் சேர்ந்து தங்குமிடம் நான்காகில், திருடனும், செவ்வாய் குளிகனோடு ஒவ்வாமுழுப்பாவரும் கூடியிரண்டிலிருக்க, எவ்வாறாயினும், கொடியநோயுடையவனுவன், வீரமில்லாதவன். சோரதாரமுள்ளவன், வியபிசாரமுள்ளவன், பொய்யன், தீய ஆகாரங்களைத் தினந்தோறும், அதிகமாயுண்பவனுமாவன்—எ-று. 417

வேறு.

விடுமி லக்கின மீதிற் குசனுற
உடனி ரண்டிடத் தோனுமா றுதிபன்
திடமு டனிவர் சேர்ந்திடிற் காதறும்
கொடிய பாம்பிவ ரோடுறிற் கொய்படும்.

இ-ள். வக்கிரனுகிய செவ்வாய் லக்கினத்திலிருக்க ஆறு, இரண்டாமிடத்திபர்கள், அங்காரகனோடு கூடியிருந்தால், காது, அறுபடும், இவர்களோடு ராகுவுங் கூடியிருந்தால், கத்தியா லறுபடுபவனுமாவன்—எ-று. 418

அங்கவீனம்

சம்பூர்ணம்.

நித்தியபலன்.

வேறு.

செங்கதி ருறுநட் சத்திர முதலாய்த்
திங்கணட் சத்திர மட்டும்
சேரவே யெண்ணி யிரண்டினிற் பெருக்கித்
தெரிந்தவன் சன்மநாண் முதலாய்ப்
பொங்கமா யற்றை நட்சத்திர மளவும்
பொருந்திய தொகையுடன் வாரம்
போதமூ வகையுங் கூட்டியொன் பதினிற்
பொற்புடன் கழித்தசே டங்கள்
இங்கிதஞ் செறியு மிரவிசந் திரன்சே
யிராகுபொன் சனிபுதன் கேது
இனியசுக் கிரனு மகாதிசைப் படியே
யிசைதொகை பாதிநா ழிகையாம்
அங்கது நித்திய பலனெனச் சொல்வ
ரவைதனில் வரும்பல பாவம்
அருண்மகா திசையின் பலனது போல
வறிந்துநித் தியபல னுரைமின்.

இ-ள். நித்தியபலன், பார்க்குங்கால், சூரியன்நின்ற நட்சத்திரமுதல், சந்திரன் நின்ற நட்சத்திரம் வரையும், எண்ணினதொகையை, இரண்டால், பெருக்கி வைத்துக்கொண்டு அத்துடன் ஜென்மநட்சத்திரமுதல், அன்றைய நட்சத்திரம், வரைஎண்ணினதொகையும், ஜெனனவாரமுதல் அன்றைய வாரம் வரைஎண்ணின வாரத்தொகையும்ஆகிய மூன்றுதொகைகளையும், கூட்டி ஒன்பதால்வகுத்த மிச்சம், முறைப்படியே சூரியன், (3) சந்திரன், (5) செவ்வாய், (3இ) $3\frac{1}{2}$ இராகு, (9) வியாழன், (8) சனி, (9இ) $9\frac{1}{2}$ புதன், (8இ) $8\frac{1}{2}$ கேது (3இ) $3\frac{1}{2}$ சுக்கிரன் (10), இவர்களின் திசை வருஷம், (120) க்கும், ஷூ 1, க்கு, அரைநாழிகையாக (60) நாழிகைக்கும், திசாபுத்திபோற் பலன் சொல்லுக—எ-று. 419

வேறு.

இரவி ராகு புகரொரு மூன்றதாம்
குரும திநவ மாங்குசன் பன்னிரண்

டொருபு தனைந் துறுஞ்சனி கேதுமெட்
டுருதி சைக்குறு நாழிகை யோதிடே.

இ-ள். சூரியன், இராகு, சுக்கிரன், இவர்களுக்கு, மும்மூன்றுநாழிகையும், குரு, சந்திரன், இவர்களுக்கு ஒன்பதொன்பது நாழிகையும், செவ்வாய்க்கும் (12) நாழிகையும், புதனுக்கு, (5) நாழிகையும், சனி, கேதுவுக்கு, எட்டெட்டு நாழிகையாகவும், அவர்கள் திசைகட்கு நித்தியநாழிகை சொல்லுக—எ-று. 420

நித்தியபலன்

சம்பூர்ணம்.

துவாதச பாவ பலன்கள்.

முதலாம் பாவகம்.

இலக்கின பலன்.

ஆடரி யேறில் வெய்யோ னமர்ந்திடின் மற்றக் கோள்கள்
நாடியே யுபய லக்கி னத்திலும் பலமாய் நண்ணில்
கூடிய குழவி ரண்டாங் குசனேழிற் கதிரோ னெட்டில்
நீடிடிற் சரத்தின் மற்றோர் நின்றிடிற் பலன்களில்லை.

இ-ள். மேடசிம்ம, இடப, ராசிகளில், சூரியனும், மற்றகிரகங்கள், உபயராசிகளிலும், பலம்பெற்று நின்றால், இரட்டைப்பிள்ளையாம், செவ்வாய், ஏழிலும், சூரியன், எட்டிலும், இருக்க, மற்றக்கிரகங்கள், சரவிராசியிலிருக்க, பலன்களில்லையாம்—எ-று. 421

சந்திரன் பாவ ராசி தனிற்குசன் றிரயக் காணத்
துந்திடிற் சசிக்கி ரண்டி லுறுபன்னி ரண்டி னல்லோர்
வந்துதா னிருக்கிற் பெற்ற மகவுடன் பிறக்கும் பாம்பு
செந்திரு மாதே பாம்பாய்ச் செனிக்கினுஞ் செனிக்குந் தானே.

இ-ள். செந்திருமாதாகிய, இந்திரைக்கு நிகரான, சுந்தரமுடையபெண்ணே; சந்திரன்பாவர்களின் வீட்டிலும், செவ்வாய், திரேக்காணத்திலும், கேதுவுக்கு இரண்டாமிடத்தும், பொருந்தியிருக்கப் பன்னிரண்டாமிடத்தில் நல்லோர், இருக்கப்பிள்ளையுடன் பாம்பும் கூடவேபிறக்கும், அல்லது, பாம்பாகவே, பிறந்தாலும் பிறக்குமாம்—எ-று. 422

நாவிடத் ததிபன் பாக்கி யாதிப னிலக்கி னத்தில்
சாலவே நல்லோர் பார்க்கத் தானுறில் ராச பூச்சியன்

கோலிய சனியோன் றேழிற் குசனுறச் சுங்க னிந்து
மாலிவன் வியத்து ணிற்க மருவுவன் றகப்ப னூரில்.

இ-ள். நாலு ஒன்பதுக்கு, அதிபர்கள், லக்கினத்திலிருக்க, நல்லோர் பார்வை பெற்றிருந்தால், இராஜபூசிதையுடையவன், லக்கினத்திற் சனியும், ஏழாமிடத்திற் செவ்வாயுமிருக்கச், சுக்கிரன், சந்திரன்புதன், பன்னிரண்டாமிடத்தில் நிற்க, தகப்பனூரில், தங்கியிருப்பவனும்—எ-று. 423

பண்ணும்லக் கினத்தை யிந்து பாராம லிருக்க விந்து
நண்ணிய ராசி லக்கி னஞ்சர ராசி யாக
ஒண்ணிய சுதன்ச ராங்கி சம்பெற வுதித்தா னாகில்
திண்ணமாய்த் தகப்பன் றேசாந் திரத்தினிற் றிரிவன் றானே.

இ-ள். லக்கினத்தைச் சந்திரன் பார்க்காமலும், சந்திரன்நின்ற ராசிசரமானால், செவ்வாயும், சராங்கிஷத்திலிருக்கப் பிறந்த, ஜாதகனுடைய தகப்பன் தேசாந்திரியாய்த் திரிவான்—எ-று. 424

பரிதிக்கோ ரிரண்டிற் பாவக் கிரகங்கள் பாவ ராசி
மருவிடிற் றந்தை தேசாந் திரத்துறும் மற்றும் பாவர்
உரிமையாம் பாவ ராசி புறிற்கதிர்க் கைந்தே ழொன்பான்
பெரும்பாவர் நிற்கத் தந்தை சிறைபுளான் பரதே யத்தில்.

இ-ள். சூரியனுக்கு இரண்டாமிடத்திற் பாவக்கிரகங்கள், பாவர்களுடைய வீடாயிருந்து, அதிலிருந்தால், தகப்பன் தேசாந்திரியாவன், பாவக்கிரகங்கள் பாவராசிகளில் நின்றும், சூரியனுக்கு, ஐந்து ஏழு, ஒன்பதாமிடங்களில், பெரும்பாவக்கிரகங்கள் நிற்க, தகப்பன் தேசாந்திரத்திற் போய்ச் சிறைபட்டிருப்பான்—எ-று. 425

சேய்க்குப்பன் னொன்றி லிந்து சேர்கிலோ குழவிக் கீனம்
ஆக்கிய நல்லோர் காணி லவனைமற் றோர்வ ளர்ப்பர்
வீக்கிய பாவர் காணில் வியமதாங் குழவி யேகும்
பாக்கிய ரிந்தைக் காணிற் றகப்பன்வாழ் பதியிற் சென்மம்.

இ-ள். செவ்வாய்க்குப் பதினோராமிடத்தில், தெவ்வாகிய சந்திரனிருந்தால், குவ்வாகுவ்வாவென்றெழும், குழந்தைக்குக் குற்றமாம், சுபக்கிரகங்கள் பார்த்தால் அக்குழந்தையை, அந்நியர்கள் வளர்ப்பார்கள், பாவக்கிரகங்கள் பார்த்தால், குழந்தை மரிக்கும், பாக்கியாதிபதி, சந்திரனைப்பார்த்தால், தகப்பன், குடியிருக்கிற இடத்திற் குழந்தைபிறக்கும்—எ-று. 426

நீசத்தா னத்தி னல்லோர் நின்றுசந் திரனைக் காணில்
பேசுவர் மரத்தின் கீழே பிறந்திடும் பிள்ளை யென்றே

பூசல்செய் பாபர் நீசம் பொருந்திய சசியைக் காணில்
ஏசுறு நீசர் வீட்டிற் பிறந்தசே யெனச்சொல் வாரே.

இ-ள். நீசஸ்தானத்தில், நல்லோர்கள் வசமாயிருந்து சந்திரனைப்பார்த்தால், மரத்தின்கீழ்பிறந்த பிள்ளையென்றும், பாவக்கிரகங்கள் நீசம்பெற்று சந்திரனைப் பார்த்தால், நீசர்வீட்டிற்பிறந்த பிள்ளையென்றும், சொல்லவேண்டும்—எ-று. 427

இந்துவு நல்லோ ரேக ராசியி லிருக்கிற் காண்கில்
பந்தமா மனித ரில்லாப் பதியினுற் பவிக்கப் பண்ணும்
சந்திரற் கேழிற் காரி தபனனுக் கேழிற் சேயும்
வந்திடத் தந்தை தாய்க்கு வருத்தமு மரிட்ட மாமே.

இ-ள். சந்திரனும் சுபக்கிரகங்களும், ஒரேவீட்டில் நின்றாலும், ஒன்றுக்கொன்று பார்த்தாலும், காட்டில் உற்பவமாம், சந்திரனுக்கு, எழாமிடத்திற் சனியும், சூரியனுக்கு எழாமிடத்திற் செவ்வாயும் நிற்க, தாய்தகப்பனுக்கு வருத்தமும், தோஷமும் உண்டாக்கும்—எ-று. 428

சவுரிக்கே ழிடத்திற் செவ்வாய் தானுறிற் குழவிக் கீனம்
பவுரிகொ ளிலக்கி னதி பாவரோ டிசைந்தா றெட்டில்
உவமிகு பன்னி ரண்டி னுற்றிடில் ரோக வானும்
நுவல்சென்ம லக்கி னதி பலமிலா திருக்கில் நோயாம்.

இ-ள். சனிக்கு ஏழாமிடத்திற் செவ்வாய்நின்றால் குழந்தைக்கு ஈனமாம், லக்கினதிபதி பாவர்களோடு சேர்ந்து, மறைவுஸ்தானமாகிய ஆறு எட்டு பன்னிரண்டில் நின்றால், ரோகமுள்ளவனும், லக்கினதிபதி பலமில்லாதிருக்கில், நோயுடையவனும்—எ-று. 429

ஆறுட னிரண்டி டத்தி னதிபனுங் குசனு மூன்றில்
வீறுட னிலக்கி னத்தின் மேவிற்கா தறும றாதேல்
சிறிய செவியில் ரோகஞ் சேருநற் கணக்கன் வீட்டில்
பேறுடன் காரி நிற்கி னபுஞ்சனுய்ப் பிறப்பன் காணே.

இ-ள். ஆறு, இரண்டுக்கதிபதியுடன் அங்காரகன்கூடி மூன்றாமிடத்தில், அல்லது லக்கினத்தில் நின்றால், காது அறுபடுமென்றும், இல்லாவிட்டால், செவிரோக முண்டாமென்றுஞ் சொல்லவேண்டும், புதன்வீட்டில் சனி நின்றால், பேடியாயும் பிறப்பான்—எ-று. 430

புந்திவீட் டினிற்பி றக்கப் புதனாறு மிடத்தி னிற்க
அந்தவா றாமி டத்தி னதிபன்லக் கினித்தி னிற்க
நிந்தையா மலியு மாவ னிலவுசன் மாதி யோடும்
மந்தனும் புதனுங் கூடில் வடிவினிற் குள்ள னுவன்.

இ-ள். புதனுடையவீடு லக்கினமாய், புதன் ஆருமிடத்தில் நிற்க, ஆருமிடத்ததிபன், லக்கினத்தில் நிற்க, நிந்தைசெய்யக்கூடிய, அலியாய்ப் பிறப்பான். சந்திரன் ஜென்மாதிபதியோடு, சனியும், புந்தியுங் கூடிநிற்கில், குறள் வடிவமாவன்—எ-று. 431

வடிவுள தகரிற் றேளின் மங்கல னிருக்க வேதான்
முடவன்லக் கினத்தி னிற்க மூன்றினிற் பிருகு மேவ
உடல்சிறு குள்ள னுவ னுயர்குச னோரை யாகில்
அடல்சனி திரயக் காண மாகிடிற் சிறைபி லொன்றும்.

இ-ள். மேஷத்திலும், விருச்சிகத்திலும், பூசுதனுகிய செவ்வாயிருக்க, சனி, தனியாய் லக்கினத்தில் நிற்க, மூன்ருமிடத்திற் சுக்கிரனிருக்க, சிறுத்த உடலோடுகூடிய குள்ளனுவன், குசனோரையும், சனி திரேக்காணத்திலிருக்கப் பிறந்தவன், சிறையிலடைபடுபவனுமாவன்—எ-று. 432

வே று.

ஒன்றேழெட் டொடுவியத்திற் சசிபாவ ருடனே
உத்தமர்நோக் கறநிற்கி லுயருங்கேந் திரத்தில்
நன்றியலின் றிப்பிறக்குஞ் சேய்குருடு தானே
நவில்வியமெட் டாறுதி பாவர்களே யாயின்
வென்றியோடெங் கிருக்கிலவன் றுர்ப்பலனே யாவன்
மேவியசன் மாதிபதி தான்பாவ னுகிக்
கொன்றைமுடி யோனருளா லேவியமா றெட்டிற்
கூடினன்மை யென்றென்றே கூறுவர்பா வலரே.

இ-ள். ஒன்று, ஏழு, எட்டு, பன்னிரண்டாமிடங்களில், சந்திரன்பாவருடனிருந்து, சுபர்கள் பார்க்காமலும், அந்தச் சந்திரனுக்குக் கேந்திரத்திற் சுபர்களில்லாமலும், பிறந்த குழந்தை, குருடாம், ஆறு எட்டுப் பன்னிரண்டுக்குடையவர்கள் பாவர்களாகி, எவ்விடத்திலிருந்தாலும், துர்ப்பலமுடையவனுவன், ஜென்மாதிபதி பாவனுய், ஆறு எட்டுபன்னிரண்டாமிடங்களில் நின்றுல், கொன்றைமாலையணிந்த பரமனருளால், நன்மையென்றே பெரியோர்கள்சொல்லுவார்கள்—எ-று. 433

பாவர்கள்சன் மத்தினிலுஞ் சன்மத் தாதி
பலமின்றிப் பயிலநோய் கேந்திர கோணத்
தீவர்களுற் றுற்கோபி யாவன் சென்மத்
திறைநின்ற வீட்டோனெட் டாறீ ராறில்
மேவிதுர்ப் பலன்சன்ம கன்ம னெட்டோன்
மிகைச்சனியிந் நால்வர்திசை யெய்தும் போது

மேவிடுந்துர்ப் பலர்திசைக்குட் சனிசஞ் சார
மெய்திடிலோ வரிட்டமென விளம்பு மாறே.

இ-ள். பாவக்கிரகங்கள், ஜென்மத்திலும், ஜென்மாதிபதி, பலமில்லாமலு மிருக்கப்பிறந்தவன், ரோகமுடையவனும், லக்கினதிபதி கேந்திர கோணங்களிலிருந்தால், கோபமுடையவனும், லக்கினதிபதியிருந்த வீட்டோன் மறைவுஸ்தானமாகிய, ஆறு, எட்டு, பன்னிரண்டில் இருந்தாலும், துர்ப்பலனும், லக்கினம், கர்மம், எட்டு, இவர்களுடைய திசையிலும் சனி திசையிலும், துர்ப்பலர்திசைகளில், சனிபுத்திவரும்போதும் அரிட்டமாம்.

ஆறிற்செங் கதிரதற்கேழ் சனிசெவ்வாய் நிற்கில்
அரிட்டமா குங்காரி யரவொடுசென் மத்தும்
வீறுசெவ்வாய் நான்கிற்செங் கதிரோ னேழின்
மேவியநா டனிலுடனே வியமதே யாகும்
கூறுசசிக் கிருபாலுந் தீயோரே நிற்கில்
குழவியொடன் னைக்கரிட்ட மேகூறலாகும்
சீறுகர்க்கி லக்கினமாய் மூன்றாறிற் றீயோர்
செம்மையோர் பன்னிரண்டிற் றீதென்ப ரருளோர்.

இ-ள். ஆறாமிடத்திற் சூரியனும், அதற்கேழாமிடத்தில், அங்காரகனும், சனியுமிருந்தால், அரிட்டமாம், சனி ராகுவுடன் சேர்ந்து, ஜென்ம லக்கினத்திலும், நாலிற் செவ்வாயும், ஏழிற் சூரியனும் நிற்கப் பிறந்தவன் உடனே இறந்து விடுவன். சந்திரனுக்கு இரண்டு பக்கமும், பாவக்கிரகங்கள் நிற்கில், குழந்தைக்குந் தாய்க்கும் அரிட்டமாம், கற்கடகம், ஜென்மலக்கினமாக, மூன்றாமிடத்திற் பாவர்களும், பன்னிரண்டாமிடத்திற் சுபர்களும் நின்றால், தீமையென்று நேர்மையுள்ள பெரியோர்கள் நிகழ்த்துவார்கள்—எ-று. 435

வேறு.

அருள்சன்ம லக்கி னுதி பாவனுய் வியமா றெட்டில்
மருவின்மெய் தனக்கு நன்மை வருஞ்சவுக் கியமு முண்டாம்
உருவமா மிலக்கி னுதி யுத்தமத் ததிப னுகிப்
பெருமைசே ரைந்தொன் பானிற் பலனென விரவிற் சொல்வாய்.

இ-ள். லக்கினதிபதி அக்கிரமப்பாவியாய், ஆறு, எட்டு, பன்னிரண்டாமிடத்திலிருக்கத் தேக சுகமும், யோகபாக்கியமுமுண்டாகும், லக்கினதிபதி, சுபராய், ஐந்து ஒன்பதாமிடங்களில்நின்றால் நல்லபலனென்றுசொல்ல வேண்டும்—எ-று. 436

வேறு.

விரவியதோர் சரீரகா ரகனும் வெய்யோன்
வியமாறெட் டிற்சனிதன் வீட்டி லுற்றால்

உருவுகுறைந் திடுமெங்கத் தூன மாகும்
　　ஒன்பதுபன் னொன்றிரண்டி லுற்றிட் டாலும்
பரவியவோ ரரிமேஷத் துறினு மெய்யிற்
　　பழுதறவே சவுந்தரிய பானு மாவன்
வரியுலவுங் குழற்கொவ்வை மதுரச் செவ்வாய்
　　மட்டுலவுஞ் செங்கமல மலரின் மானே.

இ-ள். வண்டுகள் மொய்க்குங் கொண்டையும், மதுரம்பொருந்திய செவ்வாயும், விண்டுவுக்குகந்த விமலைக்கொப்பாகியும்விளங்கி மண்டலத்தோர்கொண்டாடும் பெண்டுகளிற் சிறந்த பெண்ணே கேட்பாயாக, சரீரகாரகனாகிய, சூரியன், (6) (8) (12)ஆ மிடம் சனிவீடாகி, அதிலிருந்தால், அச்சாதகன், அங்கவீனனாவான், சூரியன், (2) (9) (11)ஆ மிடங்களிலும், சிம்மம், மேஷத்தில் நின்றாலும், ஆகமாகிய தேகத்திற் பழுதற்ற சவுந்தரியவானாயிருப்பன்—எ-று. 437

வேறு.

இடப மேட நண் டிம்மூன் றிராசியும்
அடரும் லக்கின மாக வதனுளே
தொடரு மாவிட ராகுறச் சூழ்ந்திடப்
படரு முத்தம மென்று பகர்வரே.

இ-ள். இடபம், மேடம், கடகம், இவை லக்கினமாகி அதில், இராகுவிருக்க, உத்தமமென்று, சித்த சுத்த முள்ளவர்கள், சொல்லுவார்கள்-எ-று.

பகரு லக்கின மன்பத்தில் ரெண்டினில்
வகையி னிற்க வலதுலா பாதியும்
இகலிற் பத்தி லிரண்டி லிருந்திடத்
துகளி னாலந்திற் றோன்றுஞ் சுகமதே.

இ-ள். லக்கினாதிபதி, முக்கியமாய், பத்து இரண்டாமிடத்தில் நிற்க, அல்லது, பதினோராமிடத்ததிபதி, இரண்டு பத்தாமிடத்தில் நிற்க, இருபது வயதிற் சௌக்கியமுண்டாகுமென்று சொல்லவேண்டும்—எ-று. 439

வேறு.

சுகந்தருஞ் சன்ம லக்கினஞ் சரமாய்த்
　　தோன்றிலா பத்தினா திபனும்
மிகுந்திடுந் திரமேற் பாக்கியா திபனும்
　　விரும்பிய உபயலக் கினமேல்
உகந்திடு மேழா மதிபதி மூவ
　　ருறு திசை வாதைசெய் விக்கும்

பகர்ந்திடு மூவர் பதியுமிம் மூவர்
பற்றிய விடங்களுந் தீதே.

இ-ள், ஜென்மலக்கினம், சரராசியாகி, பதினோராமிடத்தில், அந்த லக்கினாதிபதியும், திரவிராசியிற் பாக்கியாதிபதியும், உபயவிராசியில், ஏழாமிடத்ததிபதியும், இருந்து, இம்மூவர் திசைகள் நடக்குங்காலங்களில், துன்பமுண்டாக்கும், அன்றியும், இம்மூவர்களின், வீடுகளும், இவர்கள் இருக்கின்ற இடங்களும், தீமையைத்தானே வெகு நேர்மையாயுண்டாக்கும்.

தீதறுஞ் சென்ம காலையி லெட்டிற்
செங்கதிர் நிற்கிலோ சுரமாம்
கோதறு திங்க ளுறிற்சல கண்டங்
குசனுறி லாயுத பீடை
சோதிசேர் புந்தி வியாதிபொன் மிருத்தியு
சுக்கிர னுறிற்றரித் திரமாம்
ஓதிய சனிதா யர்க்குறுந் தோஷ
மொருவரும் நிற்கவொண் ணாதே.

இ-ள். ஜென்மலக்கினத்திலும், எட்டாமிடத்திலும், சூரியன், நிற்கில், சுரமும், சந்திரன் நிற்கில் ஜலகண்டமும், செவ்வாய் நிற்கில், ஆயுதபீடையும், புதன் நிற்கில், வியாதியும், குரு நிற்கில், அவமிருத்தும், சுக்கிரன் நிற்கில், தரித்திரமும், சனிநிற்கில், தாய்க்குத் தோஷமுமுண்டாக்குமாம், (ஆகையால்) எட்டாமிடத்தில், திட்டமாய், ஒருவரும் நிற்கக்கூடாதென்பதாம்)—எ-று. 441

தேவர்க ளமுத சந்திரன் முதலாய்ச்
செங்கதி ரளவுமட் டெண்ணி
மேவிய தொகையை மூன்றினிற் கழித்து
மீந்ததொன் றுக்கவன் பிதாவில்
ஏவிய தாழ்ச்சி யிரண்டதே யாயி
னினியதா தைக்கிணை யோகம்
பூவின்மூன் றுறிற் பிதாவினுக் கதிகம்
புத்திரற் கென்றறிந் திடுமே.

இ-ள். சந்திரன்நின்றராசிமுதல் சூரியன்நின்ற ராசிவரையுமெண்ணி, அத்தொகையை, மூன்றால் வகுத்த மிச்சம், (1) ஆனால், பிதாவுக்குக் கீழ்ப்பட்ட யோகமும், (2) ஆனால், பிதாவுக்குச் சமானமான யோகமும், (3) ஆனால், பிதாவுக்கு மேற்பட்ட யோகமுமாமென்று, அறியவேண்டும்-எ-று.

வேறு.

அறிந்த லக்கினத் தாதிப னுச்சமே
செறிந்து கேந்திரஞ் சேர்ந்துநல் லோருடன்

உறைந்து தூய ருறைமனை யுற்றிட
நிறைந்த சீவன் பெறுவது நிச்சயம்.

இ-ள். லக்கினாதிபதி, உச்சமும், கேந்திரமும், சுபரோடும், சுபர்வீடும், பெற்று நிற்கில், நிறைந்த ஆயுளுள்ளவனென்று நிச்சயமாய்ச் சொல்ல வேண்டும்—எ-று. 443

வேறு.

நிச்சயமாய்ச் சன்மாதி பதிதிரலக் கினத்தும்
நீடுதிர வங்கிசத்து மவைதான்கேந் திரமாய்
இச்சையுட னிருக்கிலவ னிருந்ததலந் தன்னில்
இனியவெகு பலன்பெறுவ னவைசுபராங் கிசமாய்
அச்சமற நிற்கிலவன் சீவபரி யந்தம்
ஆபரணத் துடன்கூடி யம்புவியில் வாழ்வன்
மெச்சியசன் மாதிபல மறக்கேந்தி ரத்தின்
மேவிற்கோ பியுமாகி வியாதியுமுற் றிடுவன்.

இ-ள். ஜென்மலக்கினாதிபதி திரலக்கினத்திலும் திரவங்கிசத்திலும், இருந்து, அந்த இடமே கேந்திரஸ்தானமாகில், சொந்த இடத்திலேயே வந்தவர் சந்தோஷிக்க, மிகமேன்மையாய், அதிக பலன்களை யடைவன், அந்த இடம், சுபாங்கிஷமாயின், சீவபரியந்தம், ஆபரணத்தோடுங்கூடி பூமியில் வாழ்வன், லக்கினாதிபன் தக்கபலமற்று மெய்க்கக் கேந்திரத்திலிருந்தால், கோபமுடையவனும், வியாதியுடையவனுமாவன்—எ-று. 444

உற்றிடுஞ்சென் மத்தாதி யீரைந்தி லிருக்க
உண்மையுடன் பத்தாதி யுறுபலவீ னனுமாய்ப்
பற்றிவிய மாறெட்டிற் சுபர்நோக்க நிற்கில்
பயில்தத்து புத்திரனும் பகருவெகு வயதே
வெற்றிகொளும் லக்கினத்தின் மிகுபாவ ரிருக்க
மேவியசன் மாதிபதி மிகுபலவா னாகக்
குற்றமுறும் பிணிகொள்வன் சுபர்சன்மங் கண்டால்
குணமாமப் பிணிவேறு கொடுமையுஞ்செய் யாதே.

இ-ள். லக்கினாதிபதி பத்தாமிடத்திலிருக்க, பத்தாமிடத்தோன், பலவீனமாய், ஆறு, எட்டு, பன்னிரண்டாமிடத்தில், சுபர்கள் பார்வைபெற்று நிற்கில், தத்துபுத்திரனாகி, வெகுவயது, ஜீவிப்பவனாவன், லக்கினத்தில், உக்கிரமாய்ப் பாபக்கிரகங்களிருக்க, அந்த லக்கினாதிபதி, அதிக பலவானாக இருந்தால், குற்றந்தாத்தக்க, கொடியநோயுடையவனும் சுபக்கிரகங்கள், ஜென்மலக்கினத்தைப் பார்த்தால், பிணிதீர்ந்து, சுகமடைவான் என்பதாம்.

செய்யபுதன் பாவராங் கிசையினின் ருலும்
செறிந்தந்த வுபயவங் கிசத்திலா னுலும்
ஐயமற வேநிற்கிற் பிள்ளையிரட் டையதாம்
ஆந்தனுவே லக்கினமாய்ப் பிற்பாதி யாகில்
பையவதில் நின்றவர்சிங் காங்கிசத்திற் ருனே
பரிந்துநிற்கப் புதன்சனியப் பதியதனைப் பார்க்கத்
துய்யகருக் கொண்டிருந்த பையுடனே கூடத்
தோன்றவே சிறுகுழவி தான்ருேன்றுந் தானே.

இ-ள். புதன் பாவாங்கிசத்தில், நின்ருலும், உபயவங்கிசத்தில் நின்ருலும், இரட்டைப்பிள்ளையாம், தனுசுலக்கினமாகி, அதிலும், பிற்பாதியாயிருந்து, அதில் நின்றவர் சிங்காங்கிச மேறியிருக்க, சனியும் புதனும், அவ்வீட்டைப்பார்க்க, கருப்பையோடு சேர்ந்து, பிள்ளையும், கூடவே வெளிப்படுமாம்—எ-று.

தோன்றுஞ்சன் மத்திரவி புதன்வெள் ளியரசன்
தொடர்ந்தேயுற் றிடில்வலப்பக் கத்தின்மறுச் சொல்லே
ஊன்றுசெவ்வாய் திங்கள்சனிக் குலவுமிட பக்கத்
துறையுமறு வென்றென்றே யுரைப்பரதைக் கேண்மின்
என்றசுடர்க் கதிபனுற்ருல் வயிற்றின்மதி சிரத்தில்
இயல்செவ்வாய்க் கிருப்பிடத்தி லெழிற்புதன்பக் கத்தில்
ஆன்றமறு வரசனுக்கு முகத்தில்வெள்ளி துடையில்
அருஞ்சனிக்குக் காலிடத்தி லாமறுவா மென்னே.

இ-ள். தோன்றும்படியாக ஜென்மலக்கினத்தில், சூரியன், புதன், சுக்கிரன், வியாழன், இவர்களிருந்தால், வலப்பக்கத்தில் மறுத்தோன்றுமாம், செவ்வாய், சந்திரன், சனி இவர்களிருந்தால், இடப்பக்கத்தில் மறுத்தோன்றுமாம், இதன் விவரம் கேட்கில், சூரியன் நின்ருல், வயற்றிலும் சந்திரன் நின்ருல், சிரசிலும், செவ்வாய்நின்ருல், இருப்பிடத்திலும், புதன் நின்ருல் பக்கத்திலும், வியாழன் நின்ருல் முகத்திலும், சுக்கிரன் நின்ருல், துடையிலும், சனிநின்ருல், காலிலும் மறுவென்று சொல்லவேண்டும்—எ-று. 447

மறுவிலாச் செங்கதிர்நின் றிடத்தனுவிற் பிறந்தான்
வார்த்தைபிர சண்டனதி சூரனுமா யிருப்பன்
உறுகலையீ னன்றனமு மில்லான்சிங் கத்தில்
உதித்தவனிராக் கணிலான்மே டத்திரவி நிற்கப்
பிறந்தவன்கண் டத்திமிராய்த் தனந்திரளார்ச் சிப்பன்
பிறைவீடே லக்கினமாய்க் கதிரிருக்கப் பிறந்த
சிறுவன்விழி யுன்னதவான் றிரவியவான் கோலே
சென்மமாய்க் கதிர்நிற்கத் திரவியங்கண் ணிலனே.

இ-ள். தனுசேயிலக்கினமாக, அதிற்சூரியன் இருக்கப்பிறந்தவன், மதுரவார்த்தைப் பிரசண்டனும், அதிசூரத்துவமுடையவனும், அத்தமில்லாதவனும், வத்திரமில்லாதவனுமாவன், சிங்கவிராசிலக்கினமாகி அதிற் சூரியனிருக்கப் பிறந்தவன், இரவிற் கண்டெரியாதவனும், மேஷலக்கினமாகி, அதிற்சூரியனிருக்கப்பிறந்தவன், பருத்தகழுத்துள்ளவனும், திரவியந்தேடிச் சேர்ப்பவனுமாவன், கடகலக்கினமாய், அதிற்சூரியனிருக்கப் பிறந்தவன், உன்னத கண்களையுடையவன், பொன்னைத் தேடுந் திறமுள்ளவன், துலாலக்கினமாய், அதிற்சூரியனிருக்கப் பிறந்தவன், திரவியமும், கண்ணுமில்லாத குருடனுமாவன்—எ-று.

வேறு.

கண்ணாரிடபத் தகர்சிங்கங் கண்டசன்ம லக்கினமாய்ப்
பண்ணார் சனிசெவ் வாய்கூடிப் பார்க்கிற் கொடிரெண் டுளதாகும்
தண்ணார் செவ்வாய்கண்பார்வை தான்செங்கொடியோன்றேசுற்றும்
எண்ணார் சவுரிபார்வைக்கே யிருக்குங்கரிய கொடியொன்றே.

இ-ள். இடபம், மேடம், சிம்மம், இவைகள் ஜென்மலக்கினமாய், அதிற் சனிசெவ்வாய்கூட அல்லது பார்க்க, இரண்டு கொடிச்சுற்றிப்பிறக்குமாம், செவ்வாய் பார்த்தால், செங்கொடியொன்றே சுற்றிப்பிறக்கும், காரிபார்க்கக் கருங்கொடியொன்றே சுற்றிப்பிறக்குமாம்—எ-று. 449

கொடிய பாம்பி னுடனிரவி கூடியிருக்கிற் கொடிதலையாம்
நெடிய சென்ம மெட்டாதி நெருங்கில்ரோக சரீரனுமாம்
படியிற் செவ்வாய் சனிசென்மம் பற்றி யிருக்கிற் கல்லெரிப்பாம்
உடனே யவன்றன் விழிதனக்கே யுறக்க மிகுதி யுண்டாமே.

இ-ள். இராகு கேதுகளுடன், சூரியனுங்கூடி நின்றால் தலையிற்கொடி சுற்றிப்பிறக்குமாம், ஜென்மாதிபனும் அஷ்டமாதிபனும், கூடியிருக்கில், வியாதியுடையவனும், செவ்வாய், சனி, சென்மத்தில்நின்றால், கல்லெரிப்பு நோயும், அதிக தூக்க முடையவனுமாவன்—எ-று. 450

உண்டாஞ் சன்மந் திரமாயி னதிலே சன்மத் தோனுமுறப்
பண்டே சனித்த கிராமத்தின் பதியா யிருப்ப னட்டமந்தான்
மிண்டார் திரமா கிச்சனித்த வீட்டின் மரிப்பன் சன்மசரம்
கண்டால் விதேச சஞ்சாரங் காணு மென்றே கருதிடுமே.

இ-ள். ஜென்மலக்கினம், திராசியாகி, அதிலே லக்கினாதிபதியிருக்க, ஜெனித்த கிராமத்திலேயே குடியிருப்பவனும், அஷ்டமம், திராசியாகிற் பிறந்த வீட்டிலேயே மரிப்பான், ஜென்மலக்கினஞ் சராசியாகில், அந்நிய தேச சஞ்சாரியாவன், என்று எண்ணவேண்டும்—எ-று. 451

கருதுஞ் சன்ம முபயமதாய்க் கண்டாற் சிலநாள் விதேசத்தில்
பரிதி சன்மா திபனுகிற் பரவுங் கிரியிற் சஞ்சாரம்
சிரரோ கஞ்சற் றுண்டென்பர் செவ்வாய் சன்மா திபனுகில்
உருவா யுதத்தா லக்கினியா லுறுநோய் காட்டு முண்மையிதே.

இ-ள். ஜென்மலக்கினம், உபயவிராசியாகில், சிலநாள், சுயதேசத்திலும், சிலநாள் அந்நியதேசத்திலும் வாசஞ்செய்வன், சூரியன் லக்கினுதிபதியாகில், மலைகளிற் சஞ்சாரஞ்செய்பவனும், தலையிற்கொஞ்ச நோயுள்ளவனுமாம், செவ்வாய் லக்கினுதிபதியாகில், ஆயுதத்தாலும், அக்கினியாலும், பொருந்திய நோயுண்டாவது உண்மையாகுமாம்—எ-று. 452

உண்மைப் புதன்சன் மாதிபனே னுளது வித்தை கணிதமுடன்
வண்மை யாபா ரத்தொழிலே வரும்பொன் வெள்ளி மனையானுல்
பண்மை சுருதி யுணர்தனவான் பாங்கிற் சனித்த பதிநீங்கான்
தண்மை பகராச் சுபகர்ம்மத் தலைவனென்றே சாற்றிடுமே.

இ-ள். புதன்ஜென்மாதிபதியாயிருந்தால், வித்தைகணிதம், வியாபாரத்தொழில், ஆகிய இவைகளுள்ளவனும், வியாழன், சுக்கிரன்வீடாகில், சங்கீதம், சாஸ்திரங்கள், கற்றவனும், தனவானும் பாங்குடையவனும், ஜெனித்த பதியைவிட்டு நீங்காதவனும், குணத்தைச்சொல்லுமிடத்து சுபகர்மங்கள் செய்யுந்தலைவனென்று சோதிடசாஸ்திரஞ் சொல்லுமாம்—எ-று. 453

சாற்று மதிசன் மாதிபனே சரீர காந்தி யுளசுகவான்
நேற்றிச் சரக்கை விற்றுண்பன் னிலவு சன்மத் தைப்பார்க்கில்
போற்றுந் தந்தை யருகிருக்கச் சனித்தா னென்றே புகல்வார்கள்
ஆற்றுஞ் சரத்தின் மதியிருக்க வந்தான் றந்தை யன்றெனவே.

இ-ள். சந்திரன், ஜென்மாதிபதியாகில், சரீரகாந்தியும் சுகமுள்ளவனும், நேர்த்தியான வியாபாரஞ்செய்து பிழைக்கிறவனுமாவன், சந்திரன், ஜென்மலக்கினத்தைப் பார்த்தால், தந்தைபக்கத்திலிருக்கப் பிறந்தவனென்றும், சரவிராசியிற் சந்திரன்நின்றால், அன்றுதினம், அயலிடத்திலிருந்து வந்தான் என்றும் சொல்லவேண்டும்—எ-று. 454

எனவும் வெள்ளி புதனடுவி லிந்து விருக்க வந்தருகே
வினவிற் றந்தை யிருந்திடுவன் வெய்யோன் சரத்தின் மதிபத்தில்
தனதா யிருக்கப் பிதாவிருக்குந் தலத்திற் சனித்தான் றனென்பர்
சினமார் சனிசன் மத்தேழிற் செவ்வா யேனும் பிதாதேசம்.

இ-ள். சுக்கிரன், புதன், இவர்களுக்கு நடுவில் சந்திரனிருக்க, பக்கத்திலிருந்து தகப்பன் வினவிக் கொண்டிருக்கப் பிறந்தவன், சூரியன், சரவிராசி

யிலும் சந்திரன், பத்தாமிடத்திலும், நிற்க, பிதாவின்சொந்தவீட்டிற் செனி த்தவன், சனிலக்கினத்திலும், செவ்வாய், ஏழாமிடத்திலும், நிற்கப்பிதா அன்னியவிடங்களில் இருக்கப்பிறந்தவனும்—எ-று. 455

தேசார் மனித லக்கினமாய்ச் செவ்வாய் பார்க்கச் சனித்தவனும்
மாசா ரீமக் கரையென்றே வழுத்த லாகுஞ் சனிசெவ்வாய்
நேசார் திரிகோ ணத்தின்மதி நிற்கப் பிறந்த நேயனையே
கூசா ளன்னை யெறிவளிந்தைக் குருநோக் கிற்கைக் கொள்வாளே.

இ-ள். மிதுனம், கன்னி, துலாம், கும்பம், லக்கினமாகச், செவ்வாய் பார்க்க, ஈமக்கரையிற் பிறந்தவனென்று சொல்லவேண்டும், சனி செவ்வா யின், திரிகோணத்தில், சந்திரன், நிற்கப்பிறந்த ஜாதகனை, கூசாமல், தாய், எறிந்து விடுவாள், சந்திரனைக் குருபார்க்கில், குழந்தையைக் கைக்கொள்வ ளென்று சொல்லவேண்டும்—எ-று. 456

கொள்ளும் பாவ மதிசன்மங் குறுகச் செவ்வாய் சனியேழில்
மெள்ள விருக்கிற் குருநோக்க விரும்பி யெடுத்தார் வளர்க்க வுய்வன்
தெள்ளும் புதன்பாம் பரசன்மதி சேர்ந்து சன்மத் திருந்திடவே
பிள்ளை பிறக்கில் வம்சத்தைக் கெடுப்ப னென்று பேசுவரே.

இ-ள். பாவச்சந்திரன், லக்கினத்தில் இருக்க, சனிசெவ்வாய், ஏழாமிட த்திலிருக்க, குருபார்வைபெற்றால் எடுத்தவர்கள் வளர்க்க வளர்வான், புதன் பாம்பு, வியாழன், சந்திரன், சேர்ந்து, ஜென்மலக்கினத்திலிருக்கப் பிறந்த வன், வம்மிசத்தைக் கெடுப்பவனுவான்—எ-று. 457

பேசும் லக்கினஞ் சசிலக்கினம் பிறங்கத் தூம னிருந்திடவே
வீசும் வாணுள் குறையும்விதி பாத னிருக்கிற் புகழ்நாசம்
மாசில் பரிவே டன்றங்க மதிபோஞ் சக்கிர சாபனுறின்
மேசின் குலங்க ணசிக்குதுசன் மேவிற் றனம்போ மெனப்பேசே.

இ-ள். ஜென்மலக்கினம், சந்திராலக்கினம், இவைகளில், தூமனிருந் தால், ஆயுட்குறைவும், விதிபாதனிருந்தால், கீர்த்திநாசமும், பரிவேட னிருந்தால், புத்திபேதமுமாம், இந்திரதனுசுநின்றால், குலங்கள், விருத்தி குறைவுறும், தூமகேதுநின்றால், தனநாசமடைவனென்று சொல்லவேண் டும்—எ-று. 458

வே று.

பேசுலக் கினமீ னண்டிற் பிறந்தவர் தங்கட் கெல்லாம்
பாசமாய் மகாதி சையின் பலன்களைப் பார்க்கும் போது
தேசுறு கரிய பாம்பின் றிசைவரிற் பாக்கி யங்கள்
தூசுபொன் சோப னம்நற் சுபபலன் பெறுவர் தாமே.

இ-ள். ஜலராசியாகிய, மீனம், கடகம், ஜென்மலக்கினமாகப் பிறந்தவர்களுக்கு, இராகு திசாபுத்தி காலங்களில், தேடவேண்டிய பாக்கியங்களும், ஆடையாபரணச் சேர்க்கையும், கூடும் மனைவி மக்கள், சுபசோபனங்களாகிய, திருக்கல்யாண வைபவங்களும், மாடாடு வாகனுதி யாளடிமை முதலிய, சுபபலனடைவார்கள்—எ-று. 459

தார்செறி மகரங் கன்னி தனிற்பிறந் தோர்கட் கெல்லாம்
பார்செறி மகாதி சையின் பலன்களைப் பார்க்கும் போது
சீர்பெறு கேது வான திசைவரும் போது செல்வம்
ஊர்திசா ரரச ராற்சன் மானமுண் டாங்கண் டீரே.

இ-ள். லக்கினம், மகரம், கன்னியாகப் பிறந்தவர்களுக்கு, கேது திசா புத்திகளில், செல்வமும், செங்கோல் செலுத்தும், அரசர்களாலும், ராஜ சன்மானங்களும், உண்டாகுமென்று, இப்புவியோர்க்குச் செப்புவார்கள்.

வேறு.

பேசுஞ் சன்மஞ் சரராசி பிரியாச் சரத்தி லாதிபனும்
பாசஞ் சரத்தி லுறத்தோன்றிற் பார்க்கிற் றூல சரீரனுமாம்
வீசு லக்கி னஞ்சரமாயவ் வீட்டுக் குடையோன் சரத்திருக்க
தேசம் விடுத்தே சஞ்சாரந் திகழத் திரிவனெனச் சொல்வாய்.

இ-ள். ஜென்மலக்கினம், சரமாகி, அவ்வதிபனும், சரவிராசியிலிருந்து, லக்கினத்தைப்பார்க்க, தூலசரீரமுள்ளவனும், லக்கினம், சரவிராசியாய், லக்கினுதிபதி சரவிராசியிலிருக்க, தேசம் விட்டுத் தேசம் சஞ்சாரஞ்செய் பவனென்று சொல்லவேண்டும்—எ-று. 461

முதல்பாவம்

சம்பூர்ணம்.

இரண்டாம் பாவகம்.

நேத்திரபலன்.

ஏழிற்கண்ணு திபன்றீக் கோளா யெட்டினிற் சனியோ டிந்தும்
பழிகொள்ளா றுமி டத்திற் பானுவேற் பூனைக் கண்ணும்
விழிகள்கோன் பாவ னுய்லக்கி னுதியை மேவி யாறெட்
டொழிவியத் துறிலோ கர்ப்பத் துறுங்குரு டாகத் தானே.

இ-ள். காத்திரங்களிற்சிறந்த, நேத்திர ஸ்தானுதிபதி பாவராய், எட்டாமிடத்தில், திட்டமாய்ச் சனியுஞ் சந்திரனும், சேர்ந்திருந்து, ஆறுமிடத்திற்

சூரியனுமிருந்தால், பூனைக்கண்ணுகும், நேத்திராதிபதி பாவராய், லக்கினுதி பதியுடன் சேர்ந்து, ஆறு, எட்டு, பன்னிரண்டாமிடங்களில், இருக்கப் பிற விக்குருடாகுமென்க—எ-று. 462

சுக்கிர னேத்தி ராதி பதியெனத் தோன்றி யெட்டில்
நிற்கவோ ராறில் வெய்யோ னிற்கிற்கண் ணேய்பிற் காலம்
தக்கவே றரிமே ஷத்திற் சனிகுசன் ருனுற் ருலும்
மிக்கதா மதரத் தூன மெழிற்கொடி சுற்றித் தோன்றும்.

இ-ள். பங்கமில்லாத, சுங்கனே பாரிலுள்ளோருக்கு நேத்திராதிபதியாயிருந்து, எட்டாமிடத்திற்போயிருக்க, ஆருமிடத்தில், ஆதவனிருக்கப் பிற் காலத்தில், சற்றுகண்ணில் நோயுண்டாகும், ரிஷபம், சிம்மம், மேடம், இவ் விடங்களில், சனி, செவ்வாய் நின்ருல், உதட்டிற் குற்றமுண்டாம், குழந் தையும் கொடி சுற்றிப்பிறக்கும்—எ-று. 463

லக்கினத் ததிப னேடு மிரண்டிடத் ததிபன் சுங்கன்
திக்கெனக் கூட மூன்றிற் செங்கதிர் நிற்கு மாயின்
ஒக்கவே கண்ணில் லாம லுதிப்பனு தித்த னல்லால்
மைக்கணுய் மதிய முற்ருன் மாலைக்கண் ணுகு மென்றே.

இ-ள். லக்கினத்ததிபனேடு, இரண்டாமிடத் ததிபனும் சுக்கிரனும், கூட மூன்ருமிடத்தில், முளரிநண்பனிருந்தால், கண்ணில்லாமற்பிறப்பான், அன்றியும், முயலின்கூடு மூன்ருமிடத்தில், நிற்க, மாலைக்கண்ணனுவா னென்க—எ-று. 464

குறைவினேத் திராதி சுங்கன் லக்கினத் தோனுங் கூடி
நிறையமூன் ருமிடத்தி னிற்கினேத் திரநோ யாகும்
நறைகுழ லக்கி னுதி யிரண்டிடத் ததிபன் வெள்ளி
அறையவோ ரிடத்தி னிற்கி லந்தக னுவன் கண்டீர்.

இ-ள். லக்கினுதிபதியோடு சுக்கிரனும், நேத்திராதிபதியுங்கூடி மூன்ரு மிடத்தில், நின்ருல், கண்ணேயுண்டாகும், மேர்சொன்ன மூவரும், வேறி டங்களில் நின்ருல், குருடனுமென்க—எ-று. 465

வே று.

நேத்திரத் தானத்தாதி சுங்க னுகி
நிறைசன்மா தியைக்கூடி மூன்றில் நின்ருல்
நேத்திரரோ கம்மந்த நேத்தி ராதி
நிலவாகிப் புகருடனே யிரண்டி னின்ருல்

நேத்திரந்தா னிசிகடொறு மொளிகொ டாது
நின்றகட கந்தனிலுற் பவித்த போதும்
நேத்திரந்தான் மதிசுங்கன் கூடி நின்றால்
நிகழ்பிறவிக் குருடனுமா கிற்பன் றனே.

இ-ள். நேத்திராதிபதியே சுக்கிரனாகி, லக்கினாதிபனோடு, சேர்ந்து, பாத்திரபண்டமாகிய, மூன்றாமிடத்தில் நின்றால், நேத்திரரோகமாம், அந்த நேத்திராதிபதி, நிசாபதியாகி, சுக்கிரனோடு கூடியிருந்தால், இரவிற் கண் தெரியாது, கற்கடகலக்கினமாக, கண்ணாதிபன், வெண்கதிரோன், வெள்ளியுடன் கூடிநின்றால் பிறவிக்குருடனாவன்—எ-று. 466

சிங்கமே நேத்திரத்தா னந்தா னாகிச்
செங்கதிர்சுங் கன்கூடிச் சிங்கத் தேற
அங்கவரோ டெந்தத்தா னாதிபதி யேனும்
அவரவர்தங் காரகரா யினும்வந்துற்றாலும்
தங்கியபேர்க் குரியர்தமக் கெய்துநேத் திரநோய்
தனதுபதி யாகிலுச்சந் தானாகி னன்மை
துங்கமதி வியத்துறிலோ விழியொன்றே யூனம்
சூரியனுங் கூடில்விழி யோவிரண்டும் போமே.

இ-ள். சிம்மவிராசி நேத்திரஸ்தானமாகி அதிற் செங்கதிரோன், சுங்கனுமேகூடிநிற்க, அவர்களோடு, எந்தத்தானாதிபதியேனும், எந்தக்காரகர்களேனும், வந்துசேர்ந்தால், சேர்ந்த ஸ்தானத்தாருக்கும், காரகர்களுக்கும், நேத்திரநோயுண்டாகும், அப்பதி, ஆட்சி, உச்சந்தானாகில், நன்மையேயாம், பூரணச்சந்திரன், புண்ணிய தியாகஸ்தானமாகிய, பன்னிரண்டாமிடத்தில் நின்றால் ஒரு கண்ணூனமாம் அச்சந்திரனோடு பானுவுங்கூடிப் பனிரண்டாமிடத்திலிருந்தால், இரண்டுகண்களும், தெரியாத குருடனாம்—எ-று. 467

வேறு.

சோதி லக்கினத் திற்குசன் சூழ்ந்திட
ஓது மட்டமத் தோன்கேந்தி ரத்துறப்
போத வட்டமத் திற்பாவர் போந்திட
ஏத நேத்திர நோயும்வந் தெய்துமே.

இ-ள். லக்கினத்தில், வக்கிரனாகிய செவ்வாயிருக்க, அட்டமத்தோன், கேந்திரத்திற்சேர, அவ்வட்டமத்திற் பாவக்கிரகங்களிருக்க, நேத்திரநோயுடையவனும்—எ-று. 468

வேறு.

சேருஞ் சுங்கன் சன்மாதி திங்கள் கூடி யாறெட்டில்
நேரும் வியத்திற் பலமற்றே நிற்கின் மாலைக் கண்ணாகும்

எருங் கதிரோன் சன்மாதி யிரண்டா மாதி வெள்ளியொன்றுய்த்
தீரும் வியமா றெட்டினுறச் செப்பும் பிறவிக் குருடனுமாம்.

இ-ள். சுக்கிரன், லக்கினதிபதி, சோமனுகிய மூவருங்கூடி, மறைவுஸ்தானமாகிய, ஆறு, எட்டு, பன்னிரண்டாமிடத்திலிருக்க, மாலைக்கண்ணுடையவனுவன், ஒள்ளியோன் எல்லியோன் உற்றசன்மாதி நேத்திராதிபதியாகிய, இந்நால்வருங்கூடி, மறைவுஸ்தானமாகிய, ஆறு, எட்டு, பன்னிரண்டாமிடங்களில் நின்றால், பிறவிக்குருடனென்று சொல்லவேண்டும்-எ-று.

ஆமே யிரவி சுக்கிரன்றெண் டாதி சென்மத் தாதியிவர்
தாமே கூடி யவரவர்க டானந் தனக்கா றெட்டுவியத்
தாமே யிருக்கி லவரவர்க டிட்டிக் கூனஞ் சார்ந்திடுமே
நாமே சொல்வம் பலபார்வை நயன பலன்கண் டெனுஞ்சொல்லாய்

இ-ள். கண்டெனுஞ் சொல்லைவிண்டுரைக்கும் பெண்ணே, அண்டயோனியாகிய, சூரியன், பெண்டுக்குருத்தாகியசுக்கிரன், தண்டமிழ்க்குரிய, இரண்டாமிடத்தோன், கொண்டாடும், லக்கினதிபதியாகிய, இவர்கள்கூடி, அவரவர்கள், தானத்திற்கு, ஆறு, எட்டு, பன்னிரண்டில், இருப்பார்களாகில், அந்தந்தஸ்தானங்களுக்குடைய வர்களின், கண்ணுக்குக்குற்றமாம், என்றுசொல்லவேண்டும்—எ-று. 470

சொல்லும் பலனேத் திரத்தானஞ் சூழ்ந்தா ரதிப ராற்பலன்கள்
எல்லோன் செவ்வாய் மேனேக்க விந்துங் குருவுஞ் சமபார்வை
வெல்லும் புதற்கும் வெள்ளிக்கும் விழிபக் கத்தே நோக்கியிடும்
நல்ல ராகு சனிதனக்கே நயனங் கீழ்நோக் காயிடுமே.

இ-ள். நேத்திரஸ்தானத்தி லிருக்கிற அதிபர்களாற்பலன் சொல்லுமிடத்து, ஷ ஸ்தானத்தில், சூரியனும், செவ்வாயும்நின்றால், மேல்பார்வை, சந்திரனுங், குருவும் நின்றால், சமபார்வை, புதனும் சுக்கிரனும், நின்றால், பக்கப்பார்வை, சனியும் ராகுவும்நின்றால், கீழ்ப்பார்வை யாகுமென்பதாம்—எ-று. 471

இடுஞ்சென் மாதி தனைச்சனி கண்டிடக்கண் ணேயா மிரண்டாதி
உடன்சூ ரியனுங் கூடிநிற்க மற்றுங் குளிக னுடன்சனிதான்
அடைந்தே நோக்கக் கண்ணேயா மவ்வீ டேசல ராசியெனில்
தொடர்ந்தே காணில் நீர்பரவித் துளிக்கு மவன்றன் விழிதனிலே.

இ-ள். லக்கினதிபதியைச் சனிபார்த்தால், கண்ணே யுடையவனும், இரண்டா மிடத்தானேடு, சூரியன்நிற்கிலும், குளிகனுடன், சனிசேர்ந்து, பார்த்தாலுங்கண்நோயாம், அந்தவீடு, சலராசியாகி, ஜலக்கிரகங்கள்காணில், நீர்பரவித் ததும்பியிருக்கின்ற, கண்களை யுடையவனும்—எ-று. 472

சோதி ரவியும் பாவருடன் சூழ்ந்து பலமற் றேவியத்தின்
மீதி லிருக்க வலக்கண்போம் விரவுஞ் செவ்வாய் பலனற்றே
ஏத வியத்தி லுறைந்திடிலோ விடக்கண் ணூன மிவரிருவர்
தீதாம் வியத்திற் கூடிநிற்கத் தெரியா திரண்டு திட்டியுமே.

இ-ள். பானுபாவருடன் கூடி, பலமில்லாமற்பனிரண்டாமிடத்திலிருக்க, வலக்கண்குருடாம் பௌமன் பலமற்று, பாவருடன்கூடிப், பனிரண்டிலிருக்க, இடக்கண் குருடாம், இவ்விருவரும்சேர்ந்து, பனிரண்டாமிடத்திலிருக்க, இரண்டு கண்ணுந்தெரியாதவனும்—எ-று. 473

திட்ட முடனே சனிசெவ்வாய் சேர்ந்தி ரண்டிற் பனிரண்டில்
கிட்டி யிருக்கில் விழிக்கூனங் கிரண ரவிசந் திரன்வியத்தில்
ஒட்டி யிருக்கில் விழிநோயு முற்றந் தகனைப் பிறக்கும்வகை
துட்ட ரவிசேய் மதியரசன் சுங்க னைவ ரெங்குறினும்.

இ-ள். காரி, செவ்வாய், கலந்து, இரண்டு, பன்னிரண்டாமிடங்களில் நின்றால், கண்ணுக்குக் குற்றமாம், பதங்கனும் பனிக்கதிரும் பனிரண்டாமிடத்தில் நின்றால், கண்ணோயுடையவனும், பிங்கலன், மங்கலன், திங்கள், புங்கவன், சுங்கனுகிய, ஐவரும், எங்கேயிருந்தாலும், அல்லது இரண்டு பன்னிரண்டாமிடத்திருந்தாலும், குருடனாய்ப் பிறப்பான்—எ-று. 474

எங்கோ னிரவி வெள்ளிபல னில்லா திருக்க வவருடனே
பொங்குஞ் சன்மா திபன்கூடிற் பொருந்திற் பிறவி யந்தகனும்
தங்கு மைந்தா மாறுதி தானுஞ் சன்மந் தனிலிருக்கச்
சுங்க னிரண்டா தியைக்கூடிற் சொல்கண் பிடுங்கப் படுங்கண்டீர்.

இ-ள். பகலும், புகரும், பலமற்றிருக்க, அவர்களோடு, சென்மாதிபன் கூடியிருக்க, அல்லதுபார்க்கப்பிறந்தவன், பிறவிக்குருடனும், ஐந்து, ஆறுக்குடையவர்கள், ஜென்மத்திலிருந்து, சுக்கிரன், இரண்டாமிடத்தோனுடன் கூடிடில், கண் பிடுங்கப்படுவனென்று சொல்லவேண்டும்—எ-று. 475

காணு நேத்திர ரோகமினிக் கதிர்சேர் மதியுங் காரியிவர்
வேணு மிரண்டி லாறெட்டி வியத்தில் னிற்க ரோகமிகத்
தேரணு மிரண்டிற் பன்னிரண்டிற் சோமன் பரிதி கூடுகினும்
பூணு மெட்டி லிரண்டதனிற் பொல்லா ரிருக்கக் கண்ணோயே.

இ-ள். சாயாபதி, நிசாபதி, சனி ஆகிய இவர்கள், இரண்டு, ஆறு, எட்டு, பன்னிரண்டில், நிற்கினும், இரவிமதி, கூடி, இரண்டு, பன்னிரண்டாமிடத்தில், நிற்கினும், இரண்டு, எட்டாமிடத்தில், பாவர்கள் பலத்துநிற்கினும், கண்ணோயுடையவனுவன்—எ-று. 476

வே று.

வேல்விழி மாதே விளம்பு வலக்கண்
சாலவி ரண்ட தாமிடங் கொண்டும்
ஏலு மிடக்கண் ணீரா றுலும்
சீல சுபாசு பங்களைத் தேர்ந்தே.

இ-ள். அயிலையும், கயலையும், போன்ற கண்ணாய், வலதுகண்ணின் பலன், இரண்டாமிடத்தாலும், இடக்கண்ணின்பலன், பன்னிரண்டாமிடத்தாலும், சுபாசுபங்களைத்தெரிந்து சொல்லவேண்டும்—எ-று. 477

வாக்கின்பலன்.

வே று.

குடும்பத்தா னுதியோடு குலவிய புதனுங் கூடி
உடன்பட வாறுந் தானத் துற்றிடி லூமை யாகும்
இடும்புறு மூன்று மாதி லக்கினத் ததிபன் றுனும்
திடம்பெறக் கூடி லூமை யாகியே திரிவன் றுனே.

இ-ள். வாக்காதிபனோடு யோக்கியநிபுணன் ஒன்றாய்க்கூடி, ஊக்கமாய் ஆறுமிடத்திலிருக்க, ஊமையாகும், மூன்றோனும், இலக்கினத்தோனும் கூடிநிற்கில், ஊமையாய்த் திரிபவனும்—எ-று. 478

வே று.

வாக்குத்தா னுதியொடு புதனுங்கூடி
வருஞ்சென்ம மூன்றுறின் மருவி லூமை
ஆக்குமவ ருடனெந்தத் தானத் தாதி
யவரவர்தங் காரகரா கிலும்வந் துற்றால்
ஊக்கமுற வவரவரு மூமை யாவ
ருற்றவர்தம் பதியாகி லுச்ச மாகில்
வாக்கூன மறமொழிவன் கண்டீர் கண்டும்
வனமுறுமுக் கனியுமென வழுத்து மாதே.

இ-ள். வனமுறும், வாழை, பலா, மாவாகிய முக்கனியுங் கற்கண்டுங் கசிந்தொழுகும்ரசமேசொற்கொண்ட அற்புதப்பெண்ணே, விற்பனவிவேகமுள்ள கண்ணே கேட்பாயாக, குடும்பாதிபதி திடம்பெறும், தேர்ப்பாகனோடு சேர்ந்து கடன்பெறும் மூன்றாறு, அல்லது ஜென்மத்திலிருக்கப் பிறந்தவன் ஊமையாவன், அவர்களுடன், எந்தத்தானத் ததிபர்களாவது, காரகர்களாவது, சேர்ந்தால், அந்தந்தத் தானுதிபர்கள், காரகர்களும், ஊமையாவார்கள், இவ்விடம், ஆட்சி, உச்சமாகில், குற்றமில்லாத சொற்திறமையுடையவனாய்ப் பேசுவான்—எ-று. 479

வே று.

மாதுல மன்ன னேடு வாக்குத்தா ஞதி கூடிக்
கோதுறு வியமா றெட்டிற் கூடினு லூமை யாவன்
ஓதிய தந்தை தாய்மற் றோர்தானந் தனக்கவ் வாறு
நீதியா யிருக்கி லூமை நிச்சய மென்று கூறே.

இ-ள். மாதுலமன்னனுகிய புதபகவானேடு வாக்குத்தாஞதிபதிகூடி, ஆறு, எட்டு, பன்னிரண்டில் இருந்தால், ஊமையாவன், தாய்தந்தை சேய், முதலிய ஸ்தானங்களுக்கும், அப்படியே கூறுக—எ-று. 480

கூறிய லக்கி னுதி சுக்கிரன் கூடி யாறெட்
டேறிய வியத்தி னிற்க வூமையா மிரண்டா மாதி
பேறுட னவரைக் கூடி லூமையாம் பின்மற் றோரும்
சீறிடா தவரைக் கூடி லூமையாய்த் திரிவன் றானே.

இ-ள். சுக்கிரனேடு லக்கினுதிபன்கூடி, மறைவுஸ்தானமாகிய, ஆறு எட்டுப் பன்னிரண்டில், இருக்க, ஊமையாம், இதுவுமன்றி யிரண்டாமிடத் தோன், சேர்ந்திருந்தாலும், ஊமையாம், மற்றக்கிரகங்கள் மழைக்கோளு டன், கூடினுலும், மூங்கையாகத்திரிவன்—எ-று. 481

வித்தியாபலன்.

வே று.

சனியலா தறுவர் தானுமே கூடிப்
புனிதரா யிருக்கப் புலவனுய்க் கவிதை
இனிதென வுரைத்தே யெண்டிசை யெங்கும்
மனுவுட னீதி மன்னனு குவனே.

இ-ள். ஆயுட்காரகனுகிய சனியல்லாது மற்ற, ஆறுகிரகங்கள், பூரண மாய், ஒன்றுகூடி யிரண்டிற் சுகமாயிருக்கில், புலவனும், கவிதைசொல்பவ னும், கீர்த்தியுடையவனும், நீதியுடைய, இராஜனுமாவன்—எ-று. 482

வே று.

பொன்புத னிரண்டின் கோவும் பொருந்திய கேந்தி ரத்தில்
பின்றிரி கோண மேறிற் பெற்றிடும் வித்தை லாபம்
இன்பமா யிவரெட் டாறி லிருந்திடி லில்லை வித்தை
அன்புசேர் கணக்க னுச்ச மாகிநல் வித்தை கூறே.

இ-ள். காண்டற்கரிய, ஆண்டளப்பானும், அனுவழியும், மீண்டும், இரண்டாமிடத்தோனுகிய, இவர்கள் கூடி, திரிகோண கேந்திரங்களில்நின் ருல், வித்தை லாபமுள்ளவனும், ஆறு, எட்டில், நின்ருல், வித்தையில்லாத

வனும், புதன், உச்சமாகில், நல்லவித்தையுடையவனென்று, சொல்ல வேண்டும்—எ-று. 483

கூறிய புதனு மேழா மதிபனுங் குருவுங் கூடிப்
பேறுடன் றிரிகோ ணங்கள் கேந்திரம் பிடித்திட் டாலும்
வீறிய தனது வீட்டும் விரும்பிய விரண்டாம் வீட்டும்
சீறிடா திருந்த போது திடவித்து வானு மாமே.

இ-ள். சொல்லுக்கு வல்லமைபெற்ற நல்ல நாயகனாகிய தூதுவனும், ஏழாமிடத்தோனும், குருவுங்கூடி, திரிகோண கேந்திரங்களில் நிற்கிலும், லக்கினம் இரண்டாமிடம், இதில், நிற்கிலும், பலம்பெற்ற வித்துவானும்.

ஆனகேந் திரத்திற் புந்தி யிருக்கரெண் டாம்வீட் டாதி
தானுமே யுச்ச மாகத் தரும்புக ருபய மேவ
ஊனமின் மூன்றி னல்லோ ருறவெள்ளி யுச்ச மாக
மானிலத் துதித்த காளை சோதிடம் வழுத்த வல்லான்.

இ-ள். உதயம், ஏழாமிடம், நான்காமிடம், பத்தாமிடமாகிய கேந்திரஸ்தானத்திற் சாந்தமாம் புதனும், உத்தேசமாகிய, இரண்டாமிடத்தோன், உச்சத்திலும், உசனன் உபயராசியிலும், மூன்றாமிடத்தில், ஆன்றோராகிய சுபக்கோளிருக்க, சுக்கிரன், உச்சமாகப் பூமியிற் பிறந்தவன், சோதிடஞ் சொல்ல நல்ல வல்லமையுள்ளவனுவன்—எ-று. 485

வே று.

வல்ல ரெண்டிடத் தோன்குரு சுக்கிரன்
செல்லு மூலத் திரிகோண முச்சமாய்
அல்ல பாவ ரணுகநோக் காவிடில்
நல்ல தர்க்கம் படிப்ப னலம்பெற.

இ-ள். வல்லமைபொருந்திய வாக்காதிபன், நல்லகுரு, சல்லியனாகிய சுக்கிரன், இவர்கள், மூலத்திரிகோணம், உச்சமாகி, பாவர்கள் சேராமலும், பார்க்காமலுமிருக்கப் பிறந்தவன், நன்மையான தர்க்கசாஸ்திரங்களைக்கற்ற வல்லவனுவன்—எ-று. 486

நலஞ்சி றந்தரெண் டாம்வீட் டதிபனுங்
குலஞ்செ றிந்த குருவும் பலமதாய்ப்
பலஞ்செ றிந்த புகர்பார்க்க நின்றிடல்
பிலஞ்செ றிந்த விலக்கணம் பேசுவான்.

இ-ள். சாஸ்திரப்பரிசயத்துக்கு நேத்திரமாகிய, இரண்டாம்வீட்டதிபனும் சந்தானகாரகனாகிய குருவும், பலம்பெற்றிருக்க, இவர்களைச் சுக்கிரன் பார்க்கப் பிறந்தவன், இலக்கணசாஸ்திரம், கலக்கமறப் பேசுவானென்க.

வே று.

பிரக்கினைசேர் திரிகோண கேந்தி ரத்தும்
பிரியமுடன் புதனிற்கிற் றமிழ்வித்தை பெருகும்
திருக்குமிலா துயர்செவ்வா யொன்றிருந்த காலைத்
தெலுங்குவித்து வானவன் கருங்கோளே நிற்கில்
கிரக்கவே துருக்கரா ரியர்பாஷை தமக்கு
நிபுணவித்து வானவன் வெள்ளிகுரு மேவில்
திரக்கனமாஞ் சாஸ்திரங்க டமக்குமதி வல்ல
திடவித்து வானென்றே செப்பிடவு மாகும்.

இ-ள். திரிகோண கேந்திரங்களில், தேர்ப்பாகனிருந்தால், செந்தமிழ் வித்தையும், செவ்வாய்நின்றால், தெலுங்குவித்தையும், கருங்கோளாகிய ராகுநின்றால், துருக்க ஆரியவித்தையில்நிபுணனும், சுக்கிரன்குருவிருந்தால், பலசாஸ்திரங்களையும், நலமாகக்கற்று, மகாவித்துவானென்று மாநிலமெங்கும் புகழ்வாழ்வானெனச் சொல்லவேண்டும்—எ-று. 488

ஆகுமிரண் டாதிபனும் புதனு முச்ச
மாயிருக்கச் சன்மத்தி லரச னிற்க
ஏகனுய்ச் சனியெட்டி லுறக்கணித வித்தை
யிவனுக்குக் கோபுராங் கிசத்தின்மந்த னிருக்க
வாகுடனங் காரகனங் கிசத்தரச னிற்க
மறையோது வானிரண்டா மாதிகதி ராகத்
தாகமுடன் செங்கதிரைத் தமணியனுங் காணத்
தர்க்கசாஸ் திரம்படிக்குந் தாஷ்டிகனுங் கண்டீர்.

இ-ள். இரண்டாமிடத்ததிபனும், புதனும், உச்சமாயிருக்க, ஜென்ம லக்கினத்தில், குருவிருக்க,சனி தனித்து, எட்டாமிடத்தில் இருக்க, கணித வித்தையுடையவன், கோபுராங்கிசத்திற்சனியிருக்கச் செவ்வாயங்கிசத்திற், குருவிருக்க, வேதமோதுகின்றவனும், இரண்டுக்குடையவன், சூரியனாய், அச்சூரியனைக்குருபார்க்கத் தர்க்க சாஸ்திரத்தில் மிக்கவல்லவனுவன்-எ-று.

கண்டசன்ம லக்கினத்திற் சுக்கிரன்பொன் னிருவர்
கலந்துநிற்க வேந்தனுநற் கதிரோன்று னும்மே
மண்டியசிங் காங்கிசத்தி லேறிநிற்க வந்த
மற்றுஞ்சுக் கிரன்கடக வங்கிசத்தின் மன்ன
அண்டியிந்தப் படியிருக்கச் சனித்தான்று னல்ல
அவனியிற்சாத் திரமாறு மறிந்திடுவா னென்றே
எண்டிசையெங் கும்பரவுங் கீர்த்திமா னுகி
இருப்பனெனக் கலைவல்லோ ரியம்பிடுவர் தாமே.

இ-ள். லக்கினத்திற் சுக்கிரன், குரு, கூடியிருக்க அல்லது, செங்கதிரோனும், புங்கவனும், சிங்காங்கிஷமேறியிருக்கச் சுக்கிரன், கடகாங்கிசமேறியிருக்கப் பூமியிற்பிறந்தவன், ஆறுசாஸ்திரங்கற்றவனும், எண்டிசையினும், கீர்த்திபெற்றவனுமாகி யிருப்பனென்று, சோதிடவல்லவர்கள்சொல்லுவார்கள்—எ-று. 490

வாரேறு முலையாய்கேள் சன்மந் தன்னின்
மதிமகன்சூ ரியன்குருவு மகிழ்ந்து நிற்கில்
சீரேறு தனம்படைத்துப் புலவ னுவன்
செங்கதிர்சுக் கிரன்புந்தி திங்கள் சுன்னும்
பாரார்பொன் னிவர்களொரு வீட்டிற் கூடில்
பரிமளிக்கும் வித்தைபிர பலனு மாகித்
தாரேறு புயவலியன் றனவா னுவன்
சாந்தகுண வானுமாய்த் தரையில் வாழ்வன்.

இ-ள். பட்சமுள்ள ஆடவர் இச்சைகொள்ளக், கச்சையிறுக்கிய தனத்தையுடைய பெண்ணே கேட்பாயாக, ஜென்மலக்கினத்தில், சிந்தைசூரியன், தினகரன், சிகிண்டிசனுகிய, இவர்கள் பலத்துநின்றால், சிறப்புப்பொருந்திய செல்வம்பெற்று, வித்துவானுமாவன், செங்கதிரோன்,சீதகன், தேர்ப்பாகன், திங்கள், பங்குபாதன், புங்கவனுகிய, அறுவரும்,ஒருவீட்டில், ஒன்றாய்நின்றால், கண்டவரெல்லாம், செண்டுபுஷ்பங்களைத் திண்டாரமாகக்கொண்டுவந்து, தோளிற்போட்டுக் கொண்டாடும், பிரசங்கவித்தையும், சாந்தபுத்தியும், வேந்தரும், பூமாந்தரும், மெச்சக்கூடிய, புயவலிமையும் புகழ், நலமையும், பொருள், பூமி, செல்வ முதலியதற்குத் தலைமையுமாகிப் பூமியில்வாழ்வன்—எ-று. 491

தனபலன்.

சென்மாதி பதிக்கிரண்டா மிடத்தி னல்லோர்
திறன்மூன்று மிடத்தீயோர் நான்கி னல்லோர்
நன்மார்க்க முடனிருந்தாற் றனவான் சன்ம
லக்கினத்தோ னுபயத்தி னண்ணினும்பொன் னுளனும்
சன்மார்க்க முடனந்தத் தனபா வத்தில்
தரும்பாக்கிய லாபாதி தரிக்கிற் பார்க்கில்
துன்மார்க்க மறவளகைக் குபேரன் போலத்
தொலைவிலாத் தனம்படைப்ப ரெனச்சொல்வர் சால.

இ-ள். லக்கினுதிபனுக்கு, இரண்டாமிடத்திற் சுபர்களும்மூன்றாமிடத்திற்பாவர்களும், நான்காமிடத்தில், நல்லோர்களும், நன்மையோடிருந்தால்,

இன்ப சுகதனவானுவன், ஜென்மாதிபதி, உபயத்திலிருந்தாலும், திரவிய முள்ளவனும், வாக்குஸ்தானத்தில், பாக்கிய லாபாதிபதி தாக்காய்ச் சுபம் பெற்றிருக்கிலும், அல்லது நோக்கிலும் அளகாபுரிக்கு அரசனுகிய குபேரனைப்போலக் குறைவற்ற செல்வமும், நிறைவுற்றவாழ்வும், பெற்று, தரையில், என்றுந் தனவந்தனுக வாழ்வானென்று, சொல்லவேண்டும்—எ-று.

சாதகன்லக் கினமுதலாய் லக்கி னுதி
தானிருந்த வீடளவு மெண்ணிக் கண்ட
ஓதுதொகை லக்கினு திபனைத் தொட்டே
உடனெண்ணிக் கண்டமனை பாவர் வீடேல்
ஏதமுறுந் தரித்திரயோ கங்களாகும்
இனிமையுள்ளோர் வீடாயிற் றனவா னுவன்
போதுசன்மந் தனக்கைந்தீ ராறிரண்டும்
புனிதர்மனை யாகிற்பொன் னுளனே யாவன்.

இ-ள். ஜாதகன் பிறந்த ஜென்மலக்கினமுதல் லக்கினுதிபதியிருக்கும் வீட்டுவரைக்கும், எண்ணி, அந்தத்தொகையை, இலக்கினுதிபதி யிருந்தவீடுமுதல், எண்ண, வரும்இடம், பாவர்வீடாயின் தரித்திரயோகமாம், சுபர்வீடாயின், தனமுள்ளவனும், ஜென்மலக்கினத்திற்கு, இரண்டு, ஐந்து, பன்னிரண்டாகிய மனை, சுபர்வீடாயின், தனமுள்ளவனுவன்—எ-று. 493

வேறு.

ஆவன் சன்மத் திற்சனியு மடுத்த நான்கி லம்புலியும்
மேவு மேழிற் செவ்வாயும் விளங்கு பத்தில் வெய்யோனும்
கோவும் புதன்சுக் கிரன்ருனுங் கூடி யொருவீட்டி லிருக்கப்
பூவுக் கரசாய்த் தனவானுய்ப் பொருந்தி வாழ்வன் கண்டீரே.

இ-ள். பிறந்தலக்கினத்திற் சிறந்தசனியும், அதற்கடுத்த நான்கில் அம்புலியும், ஏழாமிடத்திற் செவ்வாயும், பத்தாமிடத்திற் பானுவும், கோவும் பண்டிதனும், சுக்கிரனும், சேர்ந்து ஒரு வீட்டிலிருக்கப்பிறந்தவன் புவிக்கு, அரசனுகவும், கவிக்குச் சடையனுகவும், சவிக்குச் சம்பராரியாகவும், சம்பத்தில், குபேரனைப்போலவும் வாழ்வன்—எ-று. 494

கண்டு மொழியா யெட்டாறிற் கருது மூன்றிற் பன்னென்றில்
மிண்ட ரிருந்து லக்கினத்தைப் பாரா திருக்க மிகுசெல்வம்
கொண்டு வாழ்தற் கனுசாரி குலவி யிந்நால் வருசீசம்
அண்டி யிருக்கி னீசர்மனை யணுகிற் றனவா னுவானே.

இ-ள். கண்டுபோன்ற, இனியசொல்லை, விண்டுரைக்கும் பெண்டுகளிற் சிறந்தவளே, சட்டாட்டம, தைரியலாப ஸ்தானங்களில், பாவக்கிரகங்களிரு

ந்து லக்கினத்தைப் பாராதிருக்கின், மிகுந்த செல்வமுடையவனும், இந்நால் வரும் நீசம்பெற்றிருந்தாலும், அல்லது நீசவீட்டில் நேசமாய் நின்றாலும், செல்வமுள்ளவனுவன்—எ-று. 495

ஆவ ரிந்து லக்கின த்துக் கதிப னுச்ச ராசியினும்
மேவ வலது நீசர்மனை விரும்பி யிருக்கிற் றனவானும்
தேவர் தொழுஞ்சந் திரனுடனே யுச்ச நற்கோள் சேர்ந்திடினும்
தாவுங் குடும்ப னுச்சமனை தக்கோர் நிற்கத் தருஞ்செல்வம்.

இ-ள். சந்திராலக்கினத்ததிபன், வந்தே உச்சவீட்டிலிருக்க, அல்லது விந்தையாய் நீசர்கள் வீட்டிலிருக்க, அதிகப்பொருளுள்ளவனும், அச்சந்திரனுடனே, உச்சனும், சுபக்கிரகங்களுங் கூடிநின்றாலும், குடும்பத்தானுதிபன், உச்சனுகி அக்குடும்பத்திற் சுபர்கள் நின்றாலும், செல்வமுடையவனுவன்—எ-று. 496

வே று.

செல்வந்தரும் பத்தாமதி பதிசென்மா திபனும்
வல்வந்த குடும்பாதிபன் வளரங்கிசை மன்னும்
செல்வந்திக ழுங்கேந்திர மதனிற்சுபர் காணில்
நல்வஞ்சிறு வய திற்றன பதியாகவு நண்ணும்.

இ-ள். அத்தத்தைக்கொடுக்கும் பத்தாமதிபனும் ஜென்மாதிபனும், குடும்பாதிபனும், அங்கிஷாதிபனும், கேந்திரத்திலிருக்கச் சுபர்கள் நோக்கச் சிறுவயதிற்றனே செல்வமுள்ள குபேரனைப்போல வாழ்வன்—எ-று. 497

நண்ணுஞ்சென் மத்தா திப னவின்மூன்று திபனும்
ஒண்ணிப்பல மாகப்புரு ஷக்கோளுற நோக்க
வண்ணந்தரு மூன்றதிபன் மருவப்பதி காண
அண்ணன்சிறு வன்றுய்பர மாமன்பொனும் வருமே.

இ-ள். ஜென்மாதிபதியும், மூன்றுமதிபதியும் பலம்பெற்றிருக்க, புருஷக்கிரகங்கள் பொருந்த, அல்லது நோக்க, மூன்றுதிபன் சேர அல்லது பார்க்கப் பிறந்த ஜாதகனுக்கு, தமயன், தாய், மாமன், இவர்களுடைய பொருள் வந்துசேரும்—எ-று. 498

வே று.

வருஞ்சன்ம லக்கி னத்து மாமதி யிருந்த வீட்டும்
இருபுறந் தன்னி னல்லோ ரிருந்திடிற் றனவா னுவன்
ஒருமனை தன்னி லுற்று லோதிய பலனிற் பாதி
தருமொரு புறத்தி னிற்கிற் றனமுங்காற் பங்க தாமே.

இ-ள். ஜென்மலக்கினத்திற்கும், சந்திராலக்கினத்திற்கும், முன்பின், சுபக்கிரகங்களிருந்தால், தனாதிபதியாவன் (இந்த நான்கிடத்தில்) இரண்டு வீட்டிற் சுபர்கள் நின்றால், அரைப்பங்குபலனும், ஒருவீட்டிற் சுபர்கள் நின்றால், காற்பங்கு பலனும் பெறுவார்களென்பதாம்—எ-று. 499

வேறு.

பாங்க தாகுமூன் றாமிடப் பார்த்திபன்
ஓங்கு மொன்பதா மாதி யுடனுற
ஈங்கி வர்க்கு மினியசி னேகமாய்
ஆங்கு றத்தமை யன்பொன் னணுகுமே.

இ-ள். மூன்றாமிடத்தோன், ஒன்பதாமிடத்தோனுடன்கூடி, இருவரும், மித்துருவாயிருந்தால் தமையனுடைய செல்வத்தைத்தானே அடைவனாம்—எ-று. 500

வேறு.

அணுகுநிதி சேர்வகையா தவனாற்றா தையர்பொன்
அன்னைக்கம் புலிசெவ்வா யாற்றனது பொருளே
நணுகுபுத னாற்பகைஞர் பொருளரசன் றன்னால்
நல்லுறவோர் நிதிசுங்க னாற்குமனை வியரால்
பணமருவுங் காரியினா லடிமையுளோர் பொருளும்
பண்பொடுசே வித்தவர்பொன் பாங்குடன்வந் தடையும்
குணமொடுலக் கினஞ்சோமன் றனக்குப்பத் தாகும்
குடிவீட்டுக் குடையோனைக் கொண்டுபலன் கூறே.

இ-ள். செல்வஞ் சேருகின்ற விதமாவது, சூரியனானால், தகப்பன் செல்வமும், சந்திரனானால், தாய், செல்வமும், செவ்வாயானால் தனது செல்வமும், புதனானால், பகையாளிகள் செல்வமும், குருவானால், சிநேகிதர் செல்வமும், சுக்கிரனானால், மனைவியர் செல்வமும், சனியானால், அடிமைகள் சேவித்தவர்கள் செல்வமும், வந்துசேரும். (இந்தவிபாகங்களை) லக்கினம், சந்திரன், பத்தாமிடம், இரண்டாமிடம், இவர்களைக்கொண்டு பலன்களைத் தெரிந்து, பலன்சொல்லவேண்டும்—எ-று. 501

கூறியலா பாதியொன்ப தாமதிப னுடனே
கூடினாற் பழையதனங் குறுகவந்து சேரும்
பேருடன்பத் தாமாதி பாக்கியத்துற் றிடினும்
பெருமைசெறி பத்தாதி பிரபலநற் கோளாய்
வீறுடனுத் தமர்மனையி லுறத்தருமத் துடனே
விரவுபிர யாசமற வேநிதியம் படைப்பன்

ஈறில்குரு தனஞ்சேரும் பத்தாதி மெலிந்தே
யிருக்கிலொரு வரைச்சேவித் தெய்துபொரு ளற்பம்.

இ-ள். லாபாதிபதி பாக்கியாதிபதியோடு சேர்ந்திருந்தால், பழைய பொருள் வந்துசேரும், கன்மாதிபதி, தன்மாதிபதி, தானத்திலிருந்தாலும், அக்கன்மாதிபதி பிரபல சுபக்கிரகமாகி சுபர்மனைகளிலிருந்தாலும், தரும நெறியாக, வெகுபிரயாசையோடு சம்பாத்தியஞ்செய்து திரவியந்தேடுவான், குருவியத்திலிருந்து, பத்தாமிடத்தோன் பலமற்றுநின்றால், அற்பரைச் சேவித்து, சொற்பப்பொருள் சம்பாதிப்பான்—எ-று. 502

பொருள்செறிபத் தாமதிபன் பிரபலவுந் தமனுப்
பொருந்திப்பத் தினிலிருக்க யாகாதி கருமம்
அருளுடனே புரிந்துதனந் தேடியினி திருப்பன்
அமர்மூன்று மாதிபல மாகச்சன் மத்தோன்
மருளுந்துர்ப் பலனுக லாபாதி மூன்றில்
மருவிலுடன் பிறந்தவர்தன் பொருள்வந்து சேரும்
தெருள்சன்மஞ் சந்திரலக் கினத்திருந்தார் வகையில்
சேர்ந்தவரா ரோவவர்பொன் சேருமிவன் றனக்கே.

இ-ள். பத்தாமிடத்தோன், உத்தம பிரபலசுபனுய், பத்தாமிடத்தி லிருக்க, யாகாதி கர்மங்கள், அருளுடனே செய்தும், யோகாதிபதியாய்ப் பொருள் சம்பாதித்து சுகமாயிருப்பன், மூன்றாமிடத்ததிபன் பலமாக லக்கி னத்ததிபன் துர்ப்பலமாக லாபாதிபதி மூன்றாமிடத்தில் இருந்தால், உடன் பிறந்தார் பொருள்வந்துசேரும், ஜென்மலக்கினத்தும், சந்திராலக்கினத் தும், இருந்தவர்கள் வகையில், சேர்ந்த கிரகங்கள், எவ்வெவர்களோ, அவர்க ளுடைய பொருளும் இவனுக்கு வந்துசேரும்—எ-று. 503

தனஞ்சேரும் வகையொன்ப தாமதிபன் றிசையில்
தகும்பத்தா திபன்புசிப்பி லப்போகோ சரத்தில்
இனஞ்சேர்நான் காதிபன்பத் தாமிடத்தி லிருக்க
இயல்பத்தா மதிபனுக்கு நாலாம்ரா சியினும்
கனஞ்சேருங் குசனுடைய கேந்திரத்தி லேனும்
கலந்துநிற்கப் புராதனமாங் காணிமனை யதனில்
முனஞ்சேர்பத் தாமதிபன் றிக்கினிலிட் சேபம்
முதற்கொண்டு வாழ்வரென மொழிந்திடுவர் தக்கோர்.

இ-ள். தன்மாதிபதி திசையில், கன்மாதிபதி புத்தியிலும், அப்போது, கோசரத்தில், நாலாமிடத்ததிபன், பத்தாமிடத்திலும், பத்தாமிடத்ததிபன், நாலாமிடத்திலுமாகி, செவ்வாய், கேந்திரத்திலேனுங், கலந்துநிற்குங்காலத்

தில், புராதனமனையில், பத்தாமிடத்ததிபன் திக்கில், புதையல்பெற்று, சுகமாக வாழ்ந்திருப்பானென்று சொல்லுவார்கள்—எ-று. 504

தக்கரிஷ பத்தின்மதி விருச்சிகத்தி லரசன்
தானிருக்கிற் றனவானுஞ் சுக்கிரன்வீட் டரசன்
மிக்கசுறு விற்குசனு மிருக்கவளர் பிறையும்
வேந்தனுட னேகூடப் புதனரசன் கூடி
நிற்கலக்கி னந்தன்னிற் சுக்கிரனு மிருக்க
நிறைந்ததன வான்கல்வி நிபுணனுமா யிருப்பன்
சுக்கிரனுச் சம்பெறலக் கினத்தரசன் நிறைந்த
சோமனைப்பா வர்கள்காணிற் றுலங்குதனம் படைப்பன்.

இ-ள். இடபத்தில் இந்துவும், விருச்சிகத்தில் வியாழனும், இருந்தால், தனவானுவன், பிருகுவீட்டிற், குருவும், மகரத்தில், மங்கலனுமிருக்கப் பூரணச்சந்திரன், ஆரணமோதும், அந்தணருடனிருக்கப், புதனும் வியாழனும் பொருந்தியிருக்க, லக்கினத்திற் சுக்கிரனிருக்க, நிறைந்த கல்வியும், சிறந்த செல்வமுமுடையவனுவான், சுக்கிரன், உச்சம்பெற்று, லக்கினத்திற் குருவுமிருக்கப் பூரணச்சந்திரனைப் பாவர்கள்பார்க்கப் பிரகாசிக்கப்பெற்ற, செல்வமுடையவனுவன்—எ-று. 505

படைத்தவொன்ப தாமதிப னுறினினின் றிடவே
பண்புடைய மாதுலன்றன் பொன்பரிந்து சேரும்
எடுத்தவொன்ப தாமதிபன் பொன்னுகி யாறில்
இருந்தக்கா லம்மாமிக் கிசைந்தபொருள் சேரும்
தொடுத்தவைந்தா மதிபதியுஞ் சுபனுய்ப்பாக் கியத்தில்
சூழ்ந்திருக்கிற் புத்திரிக்குத் துலங்குமணஞ் சூட்டி
அடுத்திருக்கு மருமகன்றே டியதனங்க ளெல்லாம்
அடைந்துசுக வானுகி யம்புவியில் வாழ்வன்.

இ-ள். அட்டமாசித்திபெற்ற, ஒன்பதுக்குடையோன், சட்டமஸ்தானமாகிய ஆறுமிடத்திலிருக்கத் தாய் மாமன், சொத்து தானேகிடைக்கும், ஒன்பதுக்குடையவன், குருவாகி, ஆறுமிடத்திலமர்ந்திருந்தால், மாமன் மனைவி மாமியின்பொருள் வந்துசேரும், ஐந்தாமிடத்ததிபன், சுபனுய் ஒன்பதாமிடத்திலிருக்க, மகளை மணஞ்சூட்டி மகிழ்ந்திருக்கும், மருமகன் தேடிய பொருள்களையெல்லாம் பெற்றுச் சுகவானுய் வாழ்ந்திருப்பவனுமாம்—எ-று.

அம்புவியிற் குருவும்பத் தாமாதி பதியும்
அன்புறுநற் சுபனுமாய் லக்கினத்தா திக்கு
இம்புவியின் மித்துருவா யிவருடன்வெய் யோனும்
இசைந்திருக்கிற் பிதாதிதிபு மெய்துவிவன் றனக்கே

விம்பமதி யங்கூடி லன்னைசெம்பொன் மேவும்
மேதினிமைந் தன்கூடில் மேவலர்பொன் சேரும்
நம்பியமால் கூடின்மித் துருதனமா மரசன்
நண்ணியுறிற் பிராதாபொன் றுனயந்து சேரும்.

இ-ள். பிரகஸ்பதியும், பத்தாமிடத்ததிபதியும், சுபனும், லக்கினதிபதிக்கு, மிக்கமித்துருவாக, இவர்களுடன், திவாகரனுஞ் சேர்ந்திருந்தால், பிதா செல்வமிவனுக்குக் கிடைக்கும், இவர்களோடு சந்திரன் சேர்ந்திருந்தால், தாய்செல்வஞ்சேரும், செவ்வாய் சேர்ந்திருந்தால், சத்துருக்கள் சம்பாத்தியம் வந்துசேரும், புதன் சேர்ந்திருந்தால், சிநேகிதர் திரவியம், வந்து சேரும், குரு சேர்ந்திருந்தால், பிரபுக்கள் பொருளும் வந்துசேரும்—எ-று.

வே று.

சேருஞ் சுக்கிரன் கூடிற் றெரிவையர்
ஆரு மாஞ்சனி யிற்கடுத் தோர்பொருள்
கூரும் பாம்புகள் கூடிலீ னத்தொழில்
சார வேபுரி வார்தனஞ் சாருமால்.

இ-ள். சுக்கிரன் சேர்ந்திருந்தால், மனையாள் பொருள் வந்துசேரும், சனி சேர்ந்திருந்தால், தன்னையடுத்தவர்கள் பொருளும், இராகு, அல்லது, கேது சேர்ந்திருந்தால், ஈனத்தொழில் செய்பவர் தேடுந் திரவியம், வந்து சேருமாம்—எ-று. 508

வே று.

சாரும்பத் தாமதிபன் சுபக்கோ ளாகத்
தக்கோர்வீட் டிற்பிறையு மரசன்று னன்றிச்
சேரும்பொன் னவனீச மத்தமன மாகித்
தீயோர்வீட் டினிலிருக்கத் திரவியங்க ளில்லான்
நேரும்பத் தாமதிபன் னன்கிடத்தி லிருக்க
நிட்சேபங் கண்டெடுப்ப னிறைந்தகல்வி யாலும்
பாரின்மே வியதமரோ ரார்தங்க ளாலும்
பரிவுடன்பொன் சேருமென வேபரிந்து கூறே.

இ-ள். பத்தாமிடத்தோன், உத்தமச்சுபனாகவும், சுபர்வீட்டிற் சந்திரனுங் குருவும், இல்லாதிருந்தால். அவனுக்குத் தனஞ்சேரும், குரு, நீசம், அஸ்தமனமாகி பாவர்கள்வீட்டில் இருக்க, திரவியமில்லாதவனவன், பத்தாமிடத்ததிபன், நாலாமிடத்திற்சேரப் புதையலெடுப்பன், அத்துடன், செந்தமிழ்க் கல்வியாலும், சிறந்த சுற்றத்தாராலும், மிக்க திரவியஞ்சேருமென்று சொல்லவேண்டும்—எ-று. 509

வேறு.

கூறும் ரெண்டா மிடக்கேந் திரத்தினில்
வீறு மன்னவன் மேவரெண் டாதிபன்
ஊறு மாறெட் டொடுவியத் துற்றிடில்
ஏறுந் தந்தை தனஞ்சற்று மில்லையே.

இ-ள். இரண்டாமிடத்தில், கேந்திரத்தில், குருவிருந்தாலும், இரண்டாமிடத்தோன், மறைவுஸ்தானமாகிய, சட்டாட்டம வியத்தானத்திலிருந்தாலும், தகப்பன் செல்வஞ், சற்றுமில்லையாம்—எ-று. 510

வேறு.

சாலமதி தனக்கிரண்டிற் சனிதான் நிற்கில்
சந்திரனுர் தனக்குநான் காம்வீட் டாதி
மேலவர்க ளுடன்கூடிக் கேந்தி ரங்கள்
மீதிருந்தாற் றந்தைபொருள் வேற்றோர் கொள்வர்
பாலருக்குச் சேராது பாலன் றானும்
பாக்கியவா னாகிவெகு பணங்க டேடி
ஞாலமதிற் கீர்த்தியா திபனும் பூமி
ராசரைச்சே வித்திருப்பன் நலமாய்த் தாமே.

இ-ள். சந்திரனுக்கு இரண்டாமிடத்தில் சனியிருக்க அச்சந்திரனிருந்த வீட்டுக்கு, நான்காம்வீட்டதிபன், சத்துருக்களுடன், சேர்ந்து கேந்திரத்திலிருக்கத் தகப்பன் திரவியத்தை, அன்னியர்கள் கைக்கொள்வார்கள், ஜாதகன் வெகுபணங்கள் சம்பாதித்து, பாக்கியவானாகி, கீர்த்தியுடையவனாய், ராஜர்களைச் சேவித்து நன்மைபெற்றிருப்பான்—எ-று. 511

வேறு.

மேதகு நான்கா மாதி விரவுகேந் திரங்க டன்னில்
ஆதவ னிருக்க வேதா னந்தநான் காமி டத்தில்
ஓதிய நல்லோர் மேவி லுறுபிதா தனத்திற் காசு
பாதியு மிவனுக் கில்லை பரதேசத் திடையிற் செல்வன்.

இ-ள். நான்காம்வீட்டதிபன், இருக்குமிடத்திற்குக், கேந்திரத்தில் சூரியனிருந்து, அந்த நான்காமிடத்தில், சுபக்கிரகங்களிருந்தால், பிதாபாக்கியத்தில், அரைக்காசுங்கூட ஜாதகனுக்கில்லாமல், பரதேசமார்க்கமாய்ச் செல்வான்—எ-று. 512

வேறு.

ரண்டா மாதி தான்மிகவே யிருந்து கேந்திர மேறிமிகக்
கொண்டே தனத்துக் காரகனுங் குலவி யுச்ச மாகியிவர்

மிண்டா யிருக்கத் தனபதியாய் விளங்கி யிருப்ப னறிவுள்ளோன்
பண்டே சகத்திற் பொன்றேடிப் பதியி லிருப்ப னெனச்சொல்லும்.

இ-ள். இரண்டாமிடத்ததிபன், கேந்திரமாயிருக்க, தனகாரகன், உச்சமாகி, இருவருங் கூடியிருக்க, தனபதியாகித் தரணியில் வாழ்ந்திருப்பன், நடுவுநிலைமையுள்ளவன், ஜெகத்திற் பொன்னைச்சம்பாதித்து அகத்தில் வைத்துச் சுகத்திலிருப்பானென்று சொல்லவேண்டும்—எ-று. 513

சொல்லு மிரண்டா மாதிபதி சூழ்ந்து லாபத் தினிலிருக்க
வெல்லும் லாபன் பாக்கியாதி விரும்பி யிரண்டி லுற்றிடவே
நல்ல குணமுந் தருமனுமாய் நான்கு லட்சம் பொன்றேட
அல்ல லறவே வாழ்ந்துண்டே யவனி தன்னி லிருந்திடுவான்.

இ-ள். குடும்பாதிபதி லாபத்திலிருக்க, லாபாதிபதி பாக்கியாதிபதி யிருவருஞ்சேர்ந்து, இரண்டாமிடத்திலிருக்கப் பிறந்தவன், நல்ல குணமுடையவன், தருமசிந்தனையுடையவன், அருமையாய் நான்குலட்சம் பொன்னைத் திறமையாய்ச் சம்பாதிப்பவன், துன்பமற்று இன்பமுற்று, இகத்திற் சுகத்தோடிருந்து வாழ்ந்திருப்பன்—எ-று. 514

இருந்த வில்லே லக்கினமா யிதிலே குருவுந் தானுறவே
பொருந்துந் துலாத்திற் சனி யுச்சம் புகலா பாதி நான்கிடத்தில்
திருந்தி யிருக்கத் தனந்தேடித் திகழ்வ னீதி தவறாமல்
தெரிந்து பலரை ரக்ஷித்துச் செம்பொன் கோடி தேடுவனே.

இ-ள். வில்லேலக்கினமாக நல்ல குரு அவ்வில்லமதிலிருக்கச் சொல்லற்கரிய, துலாத்திற்காரி, உச்சமாக லாபாதிபன், நான்காமிடத்திற் பொருந்தியிருக்கப் பிறந்தவன், வருந்திப் பொருளைச் சம்பாதிப்பன், மேதினியதனில், நீதிதவறாதவன், பலரையும் ரட்சிக்கிறவன், கோடிபொன்னைத் தேடிவைப்பவனுமாவன்—எ-று. 515

வருமே தனுசு குடமீனம் வாழுங் கன்னி ரிஷபமுடன்
புரமேய் நவகோ ளிருந்தமனை புகுந்தாற் றேவர்க் கரிதாய
திரமே யோக நவகோடி செம்பொன் றேடி ராச்சியங்கள்
உரமே யாள்வன் லக்கினமு மோங்குந் தனுசிற் பிறந்திடவே.

இ-ள். தனுசே ஜென்மலக்கினமாகி, அத்தனுசுடன் கும்பம், மீனம், கன்னி, ரிஷபம், ஆகிய இவ்விராசிகளில் நவக்கோட்கள், தங்கியிருந்தால், தேவர்களுக்கும், அரிதாகிய ஒன்பதுகோடி திரவியம் சம்பாதித்து இராஜ்ஜியம், ஆளுகின்ற அரசனுவன்—எ-று. 516

வேறு.

ஏய திரேக்காணத் திறைபுகர் கூடிட
தூய லாபாதி சுபவர்க்க மேறிட

ஆய வுலகி லரும்பொருள் கோடிதான்
நேய மாய்த் தேடுவ னென்று மொழிந்திடே.

இ-ள். திரேக்காண லக்கினாதிபதியும், சுக்கிரன் கூடியிருக்க, லாபாதிபன், சுபர்வர்க்க மேறியிருக்க, உலகில், கோடிபொன், சம்பாதிப்பனென்று சொல்லவேண்டும்—எ-று. 517

கிரகருசி.

வேறு.

இலகு மிரண்டின் மூன்றிடத்தி
 லிரவி யுறிற்கார்ப் புடன்சுடுகை
நிலவுக் குச்சீ தளந்துவர்ப்பு
 நீடு குசற்குக் குளிர்மைகைப்பே
அலகு புதற்குச் சகலமுமே
 யாம்பொன் னுக்கு மதுரமழல்
கலகச் சனிக்கே கஷாயந்தண்
 கமர்சுக் கிரற்குப் புளிகுளிர்ச்சி.

இ-ள். இரண்டாமிடத்திலும், மூன்றாமிடத்திலும், இரவியிருந்தால், கார்ப்பிலும், சுடுகையிலும், விருப்பமுள்ளவனாயிருப்பன், சந்திரனிருந்தால், துவர்ப்பிலும், சீதளத்திலும் விருப்பமுள்ளவனாயிருப்பன், செவ்வாயிருந்தால், கைப்பிலும், குளிர்ச்சியிலும் விருப்பமுள்ளவனாயிருப்பன், புதனிருந்தால், சகலவஸ்துக்களிலும் பிரியமுள்ளவனாயிருப்பன், குருவிருந்தால் இனிப்பிலும், சுடுகையிலும், இச்சையுள்ளவனாயிருப்பன், சுக்கிரனிருந்தால், புளிப்பிலும், குளிர்ச்சியிலும், களிப்புடையவனாயிருப்பன், சனியிருந்தால், கஷாயத்திலும், குளிர்ச்சியிலும், மிகவிருப்பமுள்ளவனாயிருப்பன்—எ-று.

இரண்டாம்பாவம்

சம்பூர்ணம்.

மூன்றும்பாவம்.

சகோதர பலன்.

துலங்கு மூன்று மிடந்தன்னுற்
றுணைவர் பலனைச் சொல்லுங்கால்
இலங்கு மூன்று மதிபதியு
மிருந்தார் கண்டார் தமைக்கொண்டு
நலங்கொ ளுச்சம் பகைநீச
நட்பு மறிந்தே யுரைசெய்யப்
பலன்கொள் பெண்ணாண் கிரகங்கள்
பார்த்துத் துணைவர் பலன்சொல்லே.

இ-ள். மூன்றுமிடத்தைக்கொண்டு, தோன்றுஞ் சகோதரபலனைச் சொல்லுமிடத்து, மூன்றுமிடத்ததிபதியும் இருந்தவர்கள், கண்டவர்கள், இவர்களைக்கொண்டு ஆட்சி, உச்சம், பகை, நீசம், நட்பு, இவைகளின்பலன்களைத்தெரிந்து, ஆண், பெண், கிரகங்களைக்கவனித்து, சகோதரபலன் சொல்லவேண்டும்—எ-று. 519

சொல்லுங் குசன்மூன் றுமிடத்தி
லிருக்கிற் பார்க்கிற் றுணைவரற்பம்
வெல்லும் பதினொன் றிற்குசனு
மேவின் மூத்தோர் மிகவுண்டாம்
வல்ல விரண்டா மிடத்திற்சேய்
மருவ வுடனே வருந்துணைவர்
நல்ல மும்மூன் றுய்ப்பார்த்து
நாரி யாணித் தனையுன்னே.

இ-ள். செவ்வாய் மூன்றிலிருந்தாலும், பார்த்தாலும், சகோதரர் அற்பம், பதினோராமிடத்திற் பௌமன், இருந்தால், மூத்தசகோதரம், அதிகமுண்டாம், இரண்டாமிடத்தில், செவ்வாய் இருக்க, உடனே சகோதரர் தோற்றுவர், இதைமும்மூன்றுய்ப்பார்த்து, ஆண், பெண், இத்தனையென்று சொல்லவேண்டும்—எ-று. 520

வேறு.

உன்னு மூன்று மிடத்ததி பன்குசன்
நன்னர் நான்கா மதிபனுங் கூடினும்

தன்ன மூவரு நான்குறத் தந்துணே
அன்னர் பங்கு மனைவந்து சேருமே.

இ-ள். மூன்ரு மிடத்ததிபனும், நான்காமிடத்ததிபனும், செவ்வாயும், ஆகிய இம்மூவரும், நான்கா மிடத்திலிருக்க, தன்சகோதரருடைய பங்கு மனே, ஜாதகனுக்குவந்து சேரும்—எ-று. 521

வே று.

சேருஞ்செவ் வாய்புடத்தை வைத்துக் கொண்டு
செய்யகருங் கோள்புடத்தை யெடுக்கி லப்போ
தேருமந்த ராசியிற்பொன் மருவும் போது
நிற்குமிளை யோர்க்கரிஷ்டங் கருங்கோ டன்னைப்
பாருமந்தப் புடத்திலங்கா ரகனை வாங்கிப்
பண்பொடுநின் றிடுராசி தனிலரசன் வந்தால்
ஊருமுற்ரு ரும்மறியச் சேட்டன் பார்விட்
டுயர்பரம பதியணுகு மெனவுரைசெய் வாயே.

இ-ள். புவிக்கோளாகிய, செவ்வாய் புடத்தைவைத்துக்கொண்டு, கட்செவிக்கோளாகிய ராகுபுடத்தை யெடுக்கில், அப்பொழுதுண்டாகின்றராசியில், குருவரும்போது, இளையசகோதரர்க் கரிட்டமாம், ராகுபுடத்தைவைத்துக்கொண்டு அதில்செவ்வாய் புடத்தை எடுத்துக்கண்டராசியில், குருவரும் போது, மூத்த சகோதரர்க்கரிட்டமாமெனச் சொல்லவேண்டும்—எ-று.

உரைசெறிமூன் ருமாதி லாபாதி பதிக்கே
உறவாக மூன்ருதி யுயர்ந்தபிர பலனுய்
வரவுடன்மித் திருடனே கூடியே லாப
மதிலிருக்க வவருடனே வந்துதான் கூடித்
திரமுடனே யிருந்ததொகைப் படிதுணைவ ருண்டாந்
திரிபூமா னெனக்கிரகச் செயலறிந்து பகர்மின்
கரியகுழன் மதிவதனக் காவியங்கண் ணினிய
கனியமுதம் போலுமொழி யாங்கன்னி யாரே.

இ-ள். கரியநிறக்கூந்தலும், களங்கமில்லா மதிவதனமும், காவிமலர் போன்ற கண்களும் கனியும், அமிர்தமும் போன்ற இனியசொல்லையுமுடையபெண்ணே, மூன்றுக்குடையோன், லாபாதிபனுக்கு மித்துருவாயும், மூன்ருமிடத்தோன் பலவானுயிருந்து, மித்துருவுடன்கூடி, லாபஸ்தானத்திலிருக்க, அவருடன் கூடியதொகைப்படி, சகோதரருண்டாம், இதில், ஆண், பெண்விவரம், கிரகத்தின் செயலறிந்து சொல்லவேண்டும்.

ஆர்கடகந் தேண்மீன லக்கினத்தைக் கண்டே
அன்புடனே நவபாகம் பண்ணியைந்தாம் பங்கில்

பாரிலுதித் தான்பின்னே பிறந்தகன் னிக்குப்
பக்குவமெப் படியென்னி லக்கடக மாயின்
நாரிவெகு தூலகாய முடைய ளாவள்
நவிறேளா கிற்பேய்போற் கால்குறுகிப் பருத்துச்
சேரவுருக் குலைந்திருப்ப ளாமீன மாகில்
செய்யகான் முடமாகித் திரிந்திடுவ ளென்னே.

இ-ள். கடகலக்கினமாய், அதை ஒன்பதுபாகஞ்செய்து, ஐந்தாம்பாகத்திற்பிறந்தவனுக்குப்பின், பிறந்தபெண், பருத்ததூலதேகமுடைய[illegible]ளாவள், விருச்சிகலக்கினம், ஐந்தாம்பாகத்திற் பிறந்தவனுக்குப்பின், பிறந்தபெ[illegible] குறுங்காலுடையவளாய், உருக்குலைந்து மிருப்பாள், மீனம், ஐந்தாம்பாகத்திற்பிறந்தவனுக்குப் பின், பிறந்த, பெண், கால்முடமாகித் திரிவாளென்று சொல்லவேண்டும்—எ-று. 524

வேறு.

என்னுநன் மூன்று மதிபதி புடத்தி
லேற்றசேய் புடத்தையுங் கூட்டித்
துன்னிடு மிராசி குருவருங் காலந்
துணையுறு மிப்புடங் கூட்டி
மின்னிய ராசி யங்கிச மட்டாய்
மேஷமே முதலவா யெண்ண
மன்னிய துணைவர் தொகைவரும் பாவர்
மருவிடி லழிந்திடு மென்னே.

இ-ள். மூன்றுமதிபதி புடத்தோடு செவ்வாய், புடத்தையுங்கூட்டி, கண்டராசியில், குருவருங்காலம், சகோதரமுண்டாம், இப்புடங்கூட்டிய விராசியங்கிசம் வரைக்கும், மேஷமுதலெண்ணிக்கண்ட தொகைப்படி, சகோதரத்தின் தொகையாம், இதிற்பாவர்கள் சம்பந்தம் பெற்றால், குறைந்துவிடுமென்று சொல்லவேண்டும்—எ-று. 525

வேறு.

ஆறு மிடத்தி லாய கருங்கோள்
வீறு யிருக்க மேவு மவன்றிசை
பேறாய் வரினும் பெலமுள்ள சகோதரம்
நீறு யுயிர்விடு நேமியோ ரறிய.

இ-ள். ஆறுமிடத்தில் ராகுபலத்திருக்க, அவன்திசைவந்தால், பலத்த சகோதரம், பல்லோரறியப் பூவில்நில்லாதிறந்துபோம்—எ-று. 526

வேறு.

அறிதாதை யொன்பானுக் கொன்பானும்
அன்னைக்கோ நான்கினுக்கு நான்கி னும்
செறிகனிட்டற் கொருமூன்றின் மூன்றி னும்
சேட்டனுக்குப் பன்னொன்றின் பன்னொன் றுலும்
உறுமாமன் றனக்கும்புத் திரற்கு மைந்திற்
கோரைந்தி னுமுபயர் சகோத ரங்கள்
நறுங்குழலங் கிசராசி யாண்பெண் ணோர்ந்தே
நவிலுவா யத்தொகையி னளவே யென்று.

இ-ள். வாசனைவீசுங் கூந்தலுடைய பெண்ணே, தகப்பனுக்கு, ஒன்பதுக்கு, ஒன்பதாமிடத்தைக்கொண்டும், தாய்க்கு, நாலுக்கு, நாலாமிடத்தைக்கொண்டும், இளைய சகோதரருக்கு, மூன்றுக்கு மூன்றுமிடத்தைக்கொண்டும் மூத்தசகோதரருக்குப் பதினொன்றுக்குப் பதினொன்றுமிடத்தைக்கொண்டும் மாமனுக்கும், மக்களுக்கும், அஞ்சுக்கு, அஞ்சாமிடத்தைக்கொண்டும், சகோதரங்களின்தொகையை அங்கிசராசி, ஆண், பெண்ணறிந்து, இத்தனையென்று சொல்லவேண்டும்—எ-று. 527

கர்ன பூஷண பலன்.

வேறு.

மூன்று மிடத்திற் சுபக்கிரக
முற்றுப் பலமா யுறநோக்க
மூன்று மாதி பலவானு
யிருக்க மூன்றி லுச்சருறத்
தோன்று கர்ன பூஷணங்கள்
சூடி யிருப்பன் சுகமாக
ஆன்ற கர்ணு பரணத்தை
யளிப்பா ரிவரென் றறைவாரே.

இ-ள். மூன்றுமிடத்திற் சுபக்கிரகங்களிருக்க, அல்லது, பார்க்க, மூன்றுமிடத்ததிபன் பலவானாக, மூன்றுமிடத்தில், உச்சரிருக்க, காதில், ஆபரணம் பூண்டிருப்பன், என்று சொல்லவேண்டும்—எ-று. 528

அறையு மூன்றிற் சுக்கிரனே
யமர்ந்தான் முத்துக் கடுக்கனுறும்
இறைவ னிருக்கி லபரஞ்சி
யிரவி செவ்வாய்க் கிரத்தினங்கள்

அறையும் புதற்குச் சாமவன்ன
மணியுஞ் சேரு மிதுவல்லால்
நிறையு மதியுற் றிடிற்சகலா
பரணம் பெறுவர் நிச்சயமே.

இ-ள். மூன்றாமிடத்திற் சுக்கிரனிருந்தால், முத்துக்கடுக்கனும், குரு விருந்தால், தங்கக்கடுக்கனும், சூரியன், செவ்வாய், இருந்தால், ரத்தினக் கடுக்கனும், புதனிருந்தால், பச்சைரத்தினக்கடுக்கனும், சந்திரனிருந்தால், சகல ஆபரணமும், நிச்சயமாய் அணிபவனென்று சொல்லவேண்டும்-எ-று.

வேறு.

நிச்சயமாங் காரியுறிற் றிருமேனிக் கடுக்கன்
நீள்கருங்கோ ணீலஞ்செம் பாம்புக்குச் சிவப்பாம்
அச்சமற மூன்றாதி யிருக்கின்ற வீட்டுக்
காதிபல னுயிருந்தா லணிசெவிப்பூ ணுளதாம்
உச்சிதமா யிவையெல்லா மிடக்காதுக் கென்ப
உயரும்லா பாதிபதி யுறைந்தருளும் வீட்டோன்
இச்சையுடன் கேந்திரத்தி னல்லோர்கண் டிடவே
இருக்கில்வலச் செவிவளம்பூ ணியம்பவும்பூண் டிடுமால்.

இ-ள். மூன்றாமிடத்திற் சனியிருந்தால் திருமேனிக்கடுக்கனும்,இராகு விருந்தால், நீலக்கடுக்கனும், கேதுவிருந்தால் சிவப்புக்கடுக்கனுமாம், இவை கள், மூன்றாமதிபதியிருந்த வீட்டுக்குடையவன் பலமாயிருக்கில், அழகான, காதாபரணமுண்டாம் இஃது இடதுகாதுக்காம், பதினோராமிடத்ததிபதி இருந்த வீட்டதிபன், கேந்திரத்தில், சுபக்கிரகங்கள், பார்வைபெற்றாலும், நின்றாலும் வலச்செவிக்கு வளமான ஆபரணத்தைச் சொல்லவேண்டும்.

போசன பாத்திர பலன்.

எண்ணியரெண் டாமாதி லாபமூன் றாதி
இதமிலாப் பாவியர்கண் டிடத்தனியே நின்றால்
உண்ணவுநற் கலமில்லா னுகந்த ரெண்டாம் வீட்டில்
உயருஞ்செங் கதிரோன்பெற் றுலகிலுள்ளோர் காண
நண்ணியதோர் சனிமேவ ரெண்டாம்வீட் டாதி
நண்பொடுமூன் றாம்வீட்டி னயந்துநிற்கத் தானும்
பண்ணுடனே சுபர்பார்க்கில் வரும்வெள்ளிக் கலமே
பாவக்கோள் விழிநோக்கப் படைப்பதுவெண் கலமே.

இ-ள். இரண்டு மூன்று பதினொன்றுக்குடையவர்கள், தனித்தனியே [illegible], பாவர்கள் சேர்ந்தாலும், பார்த்தாலும், உண்ணும்பாத்திரமில்லாதவ

னுவன், இரண்டாம் வீட்டில் சூரியன் சனியிருக்க, இரண்டாமிடத்தோன், மூன்றுமிடத்தில் நிற்க, சுபர்கள் பார்வைபெற்றால், உலகோர் காணும்படி, வெள்ளிப்பாத்திரங்கள் வந்துசேரும், பாவக்கிரகங்கள் பார்த்தால், வெண்கலப்பாத்திரங்கள் மிகச்சேரும், என்க—எ-று. 531

மூன்றும் பாவம்

சம்பூர்ணம்.

நான்காம்பாவம்.

வாகன பலன்.

சசிவாக னுதி சன்மத் தாதியிம் மூவர் கூடில்
அசுவவா கனமுண் டாகு மவருடன் வெள்ளி கூடில்
வசையிலாந் தோளி யுண்டாம் வாகனத் தானத் தாதி
ஒசிவின்றி வியத்தி லின்றி யுற்றிடிற் சிவிகை யுண்டே.

இ-ள். நிசாபதி, வாகனுதிபதி, லக்கினுதிபதி, ஆகிய இம்மூவருங்கூடி னின்றால், குதிரைவாகனமுடையவனும், இம்மூவருடன் சுக்கிரன் கூடினுல், ஆந்தோளியுண்டாம், வாகனத்தானத்துக்குடையவன்,பலம்பெற்றும்,மறையாமலும் நின்றால், பல்லக்குண்டாம்—எ-று. 532

பரிவுடன் பாக்கி யாதி பதிவாக னத்தா னத்தில்
குருசுக்கிர னேடு கூடி யிருந்திடி லலது நோக்கில்
கருதிய கனக தண்டி கைவரு மிவரோ டிந்து
பிரியமாய் நிற்கிற் பூச்சக் ரக்குடை பெறுவர் தாமே.

இ-ள். குருசுக்கிரனேடு பாக்கியாதிபதி நான்காமிடத்திற் கூடியிருக்க, அல்லது நாடிநோக்கத் தங்கத்தாற்செய்ததண்டிகையுண்டாம், இவர்களோடு பிரியமாய், அரிச்சிகனுங் கூடப்பூச்சக்கிரக் குடையுடையவனுமாமென்று சொல்லவேண்டும்—எ-று. 533

பூசக்ரக் குடைதந் தானைப் பொருந்தியே மதிப் னிற்கில்
வீச்சா மரையுண் டாகு மிகுபாக்கி யத்தோ னுன்கோன்
பாசமாம் பத்தி னிற்கப் பத்தாதி பதிசன் மத்தில்
நேசமாய் நிற்கிற் சிங்கா தனமுள னிருபன் பாரில்.

இ-ள். தாழ்வில்லாப் பூரணச் சந்திரனே ஏழுக்குடையோன் கூடிநிற்கில், வீசுகின்ற சாமரையுடையவனும், சுகபாக்கியாதிபதி மிகநேசராய்ச்

சித்தமகிழ்ந்து, பத்தாமிடத்தில், ஒத்துநிற்கப் பத்துக்குடையவன், ஜென்ம லக்கினத்தில், சிநேகமாயிருக்கச் சிங்காசனம் பெற்றிருப்பவனுவன்—எ-று.

வேறு.

பரவுவா கனுதிபதி பாக்கியத்தி னிற்கப்
பாக்கியத்தா னுதிபதி கேந்திரத்தைப் பற்ற
இருவர்நிற்கு மனேநல்லோ ரிருக்குமனே யாயின்
இனியசுபக் கிரகத்தோ டிசைந்துமிகக் கூட
விரவுலக்கி னுதிபதி வாகனகேந் திரத்தில்
மேவுகினுங் கனகதண்டி கையுமிகு தனமும்
மருவுமத யானைவா கனங்களுமுண் டாக
வரங்கொடுப்பன் வாகனகா ரகனுஞ்சுக் கிரனே.

இ-ள். நாலாமிடத்தோன், ஒன்பதாமிடத்திலிருக்க, ஒன்பதாமிடத்தோன், கேந்திரத்திலிருக்க, அதுவும், சுபர்மனையாகி, அவ்விருவரையும் சுபக்கோட்கள் கூடியிருக்க, லக்கினுதிபதி, நாலாமிடத்தில்நிற்க, தங்கச்சிவிகையும், மிகுந்ததிரவியமும், யானைவாகனங்களு முண்டாகுகவென்று, வாகனகாரகனுகிய சுக்கிரன் வரங்கொடுப்பன்—எ-று. 535

சுக்கிரனுன் காதியுட னேகூடி னுலும்
துலங்குமிவ ரிருவர்கேந் திரத்தினிலுற் றுலும்
திக்கெனநான் காதிசசி யுடன்லாபத் துறினும்
திறல்பலவா கனமுண்டு தீதகல நான்கில்
தக்ககுரு விருந்திடவே வாகனத்தா னத்தான்
தன்னுடன்சுக் கிரன்கூடிற் றண்டிகையுண் டாகும்
மிக்கசுங்கன் றுன்வாக னுதியே யாகி
மேவுசன்மா தியைக்கூடில் வெறுஞ்சஞ்சா ரமேயாம்.

இ-ள். சுக்கிரன் சவுக்கியசுகமுள்ள, நாலாமிடத்தானேடு, கூடினுலும், அல்லது; இவ்விருவரும் கேந்திரத்தில் நின்றுலும், நாலாமிடத்ததிபன், சந்திரனுடன்கூடி, பதினேராமிடத்தில் நின்றுலும் பலம்பெற்ற பலவாகனமுண்டாம், சற்றுங்குற்றமில்லாது, நாலாமிடத்தில் நற்குருவிருக்க, நாலாமிடத்தோனுடன், சுக்கிரன்கூடியிருக்க, பல்லக்குண்டாம், சுக்கிரன் வாகனுதிபதியாகி, லக்கினுதிபனைக் கூடியிருந்தால், வாகனமில்லாமல் வெறுஞ் சஞ்சாரமே செய்வான்—எ-று. 536

சாரமுறுஞ் சோமனுக்கு மூன்றிற்சுக் கிரனும்
தானிருக்கச் சுக்கிரனுர் தமக்குமே மூன்றில்
வீரமுறு மதியிருக்க வன்றியே பின்னும்
வினவியொரு வரையொருவர் பார்த்துமே நிற்கப்

பாரமுறுங் குடும்பத்தா னத்தைநல்லோர் நோக்கிப்
பார்த்தாலு மிலக்கினத்தைப் பார்க்கினும்வா கனங்கள்
சேருமிக வென்றென்றே நல்லோர்கள் சொன்னார்
சிலைப்புருவக் கயலொத்த விழிதெரிவை கேளாய்.

இ-ள். விற்போன்ற புருவமும், மீன்போன்ற கண்ணையுமுடைய பெண்ணே, சோமனுக்குமூன்றில், காமனிருக்க, அல்லது, காமனுக்கு மூன்றில் சோமனிருக்க, அல்லது, இவர்கள், ஒருவரையொருவர் பார்க்க, இரண்டாமிடத்தையாவது, அல்லது லக்கினத்தையாவது சுபர்கள் பார்த்தாலும், வாகனங்கள், மென்மேலும், சேருமென்று நல்லோர்கள் சொல்வார்கள்.

வேறு.

நாலிடத் ததிபன் றானு மிலக்கினத் துறப்பல் லக்கின்
மேலுறுஞ் செல்வ மெய்தி மேதினி தன்னில் வாழ்வன்
கோலிய லக்கி னத்திற் குருவுற வவனை நல்லோர்
சாலவும் பார்க்க மேலாந் தண்டிகை மருவும் வாகாய்.

இ-ள். நாலாமிடத்ததிபன் கோலாகலமாய் இலக்கினத்தில் இருக்க, பல்லக்கு நடத்துகின்றசெல்வமுடையவனாய்ப் பூமியில் வாழ்வான், லக்கினத்தில், குருவிருக்க, அவனைச் சுபர்கள்பார்க்க, மேலான தண்டிகையுடையவனாம்—எ-று. 538

வேறு.

வாக னாதி மருவு மனைதனக்
காக வீரைந் தகத்துக் கதிபனும்
ஏக வீட்டுக் கிறைவனைக் கூடில்
போக வான்வெகு பூமிக் கரசனே.

இ-ள். நாலாமிடத்ததிபன் இருக்கின்ற, வீட்டுக்கு, பத்தாமிடத்தோனும், லக்கினாதிபதியைக் கூடியிருந்தால், போகவானாகவும், வெகுபூமிக்கு வேந்தனாகவும், இருப்பான்—எ-று. 539

வேறு.

அரசேகேள் வாகனத்தா னாதிநின்ற ராசி
அன்பொடுநல் லோர்வீடாய்ப் பணபரகேந் திரமாய்
உரைசெறியச் சனித்தசிறு குடிசையுமா டரங்காம்
உகந்தருளன் னைக்கின்ப முண்டாம்வா கனத்தோன்
வரிசையாய்ச் சனிகுருவேன் மதகயந்தண் டிகையாம்
வளர்கலைமா மதியாகிற் பூச்சக்ரக் குடையாம்

விரைசெறிசுக் கிரனுகிற் பல்லக்குண் டிரவி
மேவிமெலரு தாம்புதற்கு விசித்தபல்லக் காமே.

இ-ள். வாகனத்தானுதிபதி நின்றவ்ராசி, சுபர்வீடாயும், பணபரம் கேந்திரமாயும், இருக்கச்செனித்த, ஜாதகனது சிறுகுடிசையும், (பின்னுல்) பெரிய மாளிகையாம், தாய்க்கு, இன்பமுமுண்டாம், வாகனத்தோன், சனி குருவாகில், யானையும், பல்லக்குமுண்டாம், பூரணச்சந்திரனுகில், பூச்சரக் குடையாம், சுக்கிரனுகில், பல்லக்குண்டாம், சூரியனுகில், ரிஷபங்களையுடையவனும், புதனுகில், கணிதப்படிசெய்த விசித்திரப்பல்லக்குண்டாம்—எ-று.

வே று.

பலன்றரு வாக னுதி பண்புறு புடத்தி னேடு
கலந்துசுக் கிரன்பு டத்தைக் கூட்டியே கண்ட ராசி
தலந்தனி லரசன் வந்து தான்செறி கேந்தி ரத்தும்
நலந்திரி கோண மீது நண்ணில்வா கனமுண் டென்பார்.

இ-ள். நாலாமிடத்தோன் புடத்தோடு சுக்கிரன் புடத்தையும், கூட்டிக் கண்டராசியிற் குருநின்றாலும், அல்லது, கேந்திர திரிகோணங்களில், நின்றாலும், வாகனமுண்டாம்—எ-று. 541

வே று.

பலர்பு ...ஞ் சுக்கிரற்கு மூன்றி லேழில்
பண்புடன்சந் திரனிருக்கச் சசிக்கேழ் மூன்றில்
நலமருவுஞ் சுக்கிரன்று னிருக்க வேதான்
நண்பொடுவா கனமுண்டு நான்காமாதி
நிலவுநல்லோ ருடன்கூடிச் சந்திரகேந் திரத்தில்
நிற்கில்வா கனமுண்டு நிதியுமிகத் தேடி
உலகினெடு நாளரசன் போலவே வாழ்வன்
உணர்புத்தி மானென்றே யுரைத்தனர்நல் லோரே.

இ-ள். சுங்கனுக்கு, மூன்றில், எழில், திங்களிருக்க, அல்லது, திங்களுக்கு, மூன்றில், எழில் சுங்கனிருக்க, வாகனமுண்டு, நாலாமிடத்ததிபன், சுபர்களுடன்கூடிச் சந்திரகேந்திரத்திலிருக்க, வாகனமுண்டு, திரவியமும், சம்பாதித்து, நெடுநாள், அரசன்போல வாழ்வும்பெற்று புத்திமானுவானென்று, நல்லவர்கள் சொல்லுவார்கள்—எ-று. 542

வே று.

உரைத்திடுநான் காமாதி லக்கி னுதி
யுடன்கூடத் தீயோர்க ளுடனுங் கூடி

நிரைத்தொருவீட் டினிலிருக்கத் தானந்த வீடு
நீடுசன்மத் தாதிக்கோ ருச்சமனே யாயின்
நரைத்தபரி வாகனங்க ளுளன்புத்தி மானும்
நன்புடனே மன்னரையெந் நாளுஞ்சே விப்பன்
இரைத்திடுசன் மாதிபதி நான்காதி நல்லோர்
இவர்மூவர் கேந்திரத்தி லிருக்கிலின்ப முண்டாம்.

இ-ள். பாவரோடு, ஆவலாய்ச் சுகாதிபதியும், ஜென்மாதிபதியும், சேர்ந்து, ஒருவீட்டிலிருக்க, அந்தவீடு ஜென்மாதிபதிக்கு, உச்சவீடாகின், வெண்குதிரை வாகனங்களுள்ளவன், புத்திமான், இராஜசேவை செய்பவனுமாம், ஜென்மாதிபதி நாலாமிடத்ததிபதி, சுபர்கள், இம்மூவருங்கூடி, கேந்திரத்திலிருக்கச் சுகமுடையவனும்—எ-று. 543

ஆமிரவி மதிநல்லோர் மூவரொன்றாய்க் கூடி
அன்பொடுகேந் திரத்திருக்கின் மதயானைசேரும்
நீமமொடு சன்மாதி பத்தாமா திபனும்
நிறைந்தசுப ருடன்கூடிக் கேந்திரத்தி னிற்கில்
வாமமுறு மதகரிவா கனஞ்சேரும் பருவ
மானசவுந் தரமனையாண் மருவுமறி வினனும்
தீமையிலாச் சன்மாதி லாபாதி நல்லோர்
சேர்ந்துகேந் திரத்திருக்கிற் சிந்துரமுண் டாமே.

இ-ள். செங்கதிரோன் வெண்கதிரோன் நல்லோராகிய, இம்மூவர்கள், ஒன்றாய்க்கூடி, கேந்திரத்தில் நின்றால், மதயானையுண்டாம், லக்கினத்தோனும், பத்தாமிடத்தோனும், நிறைந்த சுபர்களோடுகூடி கேந்திரத்தில் நின்றால், மாலையையுடைய, யானைவாகனமுண்டாம், பருவமுடைய அழகிய மனையாளும், சேர்வள், அறிவுள்ளவனுமாவன், லக்கினாதிபதியுடன், லாபாதிபனும், சுபருங்கூடிக் கே!ந்திரத்திலிருந்தால், யானைவாகனமுண்டாம், (செப்புதற்கரிய விப்பிரத்துரையால் அதிகதனம் பெறுவன்.)—எ-று. 544

உண்டாம்விப் பிரதுரையா லதிகதன முடையன்
உறுசன்மத் திற்பத்தி லுத்தமர்க ளிருக்க
மிண்டாஞ்சன் மாதிபன்பத் தாமதிப னேடும்
விரும்பியே நல்லோர்தா மும்மேவி நிற்க
வண்டாருங் குழலின்மட வாயரச ராலும்
மாணிக்க வகைசேரு மன்னரைச்சே வித்தே
கொண்டாடு சந்திரசா மரைகண்மிக வுள்ள
கோமானு குவனென்றே கூறுவர்மே லோரே.

இ-ள். கொண்டலை யொத்து, வண்டுமொய்க்குங் கூந்தலையுடைய பெண்ணே, கொண்டாடும், ஜென்மலக்கினத்திலும், பத்தாமிடத்திலும், சுபக்கிரகங்களிருக்க, லக்கினுதிபன், இரண்டாமாதிபன் பத்தாமாதிபன், இவர்களோடு, சுபக்கிரகங்கள், சேர்ந்திருக்க, அரசர்களால் மாணிக்கவகை சேரும், இராஜசேவை செய்பவனும், சத்திரங்கள்கட்டி, சாமரையோடுகூடி யவிசேஷசோமானும், அறிவுடையவனும், அதிக திரவியமுள்ளவனும், அரசனுமாவனென்று, நூலாய்ந்த மேலோர்கள், கோலாகலமாய்ச் சொல்லுவார்கள்—எ-று. 545

கூறுஞ்சன் மாதிபன்பத் தாமிடத்தி லிருக்கக்
குலவுபத்தா திபன்நான்கா மிடத்திற்கூட
வீறுடனுன் காமாதி பதியுச்ச மாகில்
வேந்தனு குவன்சுகவான் வெகுலீலா விநோதன்
பேறுடன்பத் தாமாதி பதிநான்கி னிற்கப்
பெருமையுட னுன்காதி பதிபத்தி னிற்கத்
தேறுசன் மாதிபதி யுச்சமாய் மேவத்
திரசகல வாகனங்கள் சேருமன்ன னுமே.

இ-ள். ஜென்மாதிபதி கன்மத்திலும், கன்மாதிபதி சுகத்திலும், சுகாதிபதி யுச்சமுமானுல், வேந்தனும், மிகச்சாந்தனும், சுகமாந்தனும், லீலாகாந்தனுமாவன், பத்தாமிடத்தோன், நாலாமிடத்திலும், நாலாமிடத்தோன், பத்தாமிடத்திலும், நிற்க, லக்கினுதிபதி, உச்சமாக, திரமான, சகலவாகனமுடையவனுயும், அரசனுயுமிருப்பவனுவன்—எ-று. 546

மன்னியரெண் டாமதிபன் லாபத்தி லிருக்க
மற்றுமந்த லாபாதி வந்துரெண்டின் மேவ
உன்னியநான் காமாதி பதியுச்ச மாக
உயர்சகல வாகனங்க ளுளவேந்த னுவன்
சொன்னவிரண் டாமதிபன் லாபாதி யிருவர்
தொடர்ந்திரண்டா மிடத்திருக்கச் சூழ்பத்தா மதிபன்
பின்னுமுச்ச னுயிருக்க வாங்தோளி யுண்டாய்ப்
பேருலகில் வாழ்வரெனப் பேசுவர்நூல் வல்லோர்.

இ-ள். குடும்பாதிபதி, லாபத்திலும், லாபாதிபதி, குடும்பத்திலும், இருக்க சுகாதிபதி, உச்சமாக, உயர்வான சகலவாகனங்களுடைய அரசனுவன், லாபாதிபனும், குடும்பாதிபனும், இரண்டாமிடத்திலிருக்க, பத்தாமிடத்தோன் உச்சமாயிருக்க, பல்லக்குடையவனுய், உலகில் வாழ்வானென்று நூல்வல்லோர் சொல்லுவர்—எ-று. 547

மாதுர் பலன்.

வேறு.

அன்னை தன் றனத் தாதி யதியட்ட மத்திற் காரி
தன்னுடன் கூடிற் பின்கோ சரமன்னைக் கைந்தொன் பானின்
மன்னிய காரி மேவின் மாதாவுக் கரிட்டஞ் சொல்லும்
மின்னிய நற்கோ ளுச்ச மெய்திடி னன்காம் நல்லாய்.

இ-ள். அன்னைஸ்தானமாகிய நன்னிலையுள்ள நான்காமிடத்தோன் முன்னம், அஷ்டமத்திற்சனியுடன் கூடியிருக்க, கோசரத்தில், தாய்ஸ்தானத்திற்கு, ஐந்து, ஒன்பதாமிடத்தில், சனிவருங்காலம், தாய்க்குத்தோஷமாம், சுபக்கிரகங்கள் உச்சம்பெற்றால், நன்மையாம்—எ-று. 548

நாலிரண் டேழி டத்தி னதிபராய் நண்ணு மூவர்
நாலிரண் டேழி டத்திற் சனிகுச னுடனே நண்ணில்
நாலிரண் டேழிற் செவ்வாய் நண்ணிடிற் காரி பார்க்கில்
சாலவன் னைக்க ரிட்டஞ் சாற்றுவர் சனியைக் கொண்டே.

இ-ள். நாலு, இரண்டு, ஏழு, இவ்விடத்ததிபர்கள், மூவரும், அந்தந்த இடங்களில், சனி செவ்வாயுடன், சேர்ந்து நின்றாலும், அல்லது, செவ்வாய் நின்று, சனிபார்த்தாலும், தாய்க்கு அரிஷ்டமாம், சனியின்பலத்தைக்கொண்டு சொல்லவேண்டும்—எ-று. 549

சனிகுசற் கைந்தே ழொன்பான் றனிச்சசி யுறிற்றாய் நில்லாள்
இனியபொன் பார்க்கி னிற்ப ளிலக்கினத் திந்து நிற்க
முனிபவ ரிந்தை நோக்க முந்துமே ழிடத்திற் செவ்வாய்
தனியுற வந்த பிள்ளை தனைப்பிறர் வளர்ப்பர் காணாய்.

இ-ள். ஆயுட்காரகன், அங்காரகனுக்கு, ஐந்துஏழு, ஒன்பதாமிடங்களில், ஆலோனிருந்தால், மாதாஇறப்பள், அதைக் குருபார்த்தால், இறக்கமாட்டாள், லக்கினத்திற் சந்திரனிருக்க, பாவர்கள் சந்திரனைப்பார்க்க ஏழாமிடத்திற் செவ்வாயிருக்கப் பிறந்தபிள்ளையை, அன்னியர்கள் வளர்ப்பார்கள்.

கதிரவற் கிரண்டிற் பன்னி ரண்டினிற் காரி நிற்க
மதிதனக் கிரண்டிற் பன்னி ரெண்டினின் மந்த னிற்கக்
கதிர்குசன் கூடி மற்றுங் காரிசந் திரனுங் கூட
அதிபனுந் தந்தை தாய்க்கு மரிட்டமென் றுரைகள் பன்னே.

இ-ள். இரவிக்கு, இரண்டுபன்னிரண்டிலும், இந்துவுக்கு, இரண்டு பன்னிரண்டிலும், கரியவனாகிய சனியிருந்தாலும், கதிர் குஜனாகிய, சூரியன் செவ்வாய்கூடினாலும், காரிமதியாகிய சனிசந்திரன் கூடினாலும், தாய்க்

கும் தந்தைக்கும், தோஷமென்று சொல்லவேண்டும், (சூரியனுக்கு இரண்டு பன்னிரண்டில்), சனியும், சூரியனுடன் செவ்வாய் கூடத்தகப்பனுக்கும்' சந்திரனுக்கு இரண்டு, பன்னிரண்டில், சனியும், சந்திரனுஞ், சனியுங்கூடத் தாய்க்குத்தோஷமாம்—எ-று. 551

வேறு.

பன்னிரண்டி லிரண்டினிற் சன்மத்தி லிந்து
பாவருடன் கூடிநிற்கப் பயந்தவனேக் கரிட்டம்
அன்னையதி பன்றிசையில் மாதருதா னத்துக்
கைந்தொன்பா னிற்காரி யணுகிலரிட் டமதாம்
மன்னியமா துருத்தானந் தனக்கட்ட மத்தில்
மந்தனுன் காதிபனு மருவியுறி லரிட்டம்
என்னுநான் கதிபனுட னேசெவ்வா யேனும்
இரவியதா கிலுங்கூடி லிடர்நோய்புந் தியினில்.

இ-ள் பன்னிரண்டு, இரண்டு, ஜென்மலக்கினம், இவைகளில், சந்திரன், பாவர்களுடன், கூடிநிற்க, பெற்றதாய்க்கு, அவ்வதிபன்திசையில், அரிட்டமாம். மாதருத்தானத்திற்கு, ஐந்து ஒன்பதாமிடங்களில், சனியிருந்தால், தாய்க்கு அரிட்டமாம், மாதருதானத்திற்கு, அட்டமத்தில், சனியும், மாதருத்தானுதிபனுங் கூடிநிற்கில், தாய்க்கு அரிட்டமாம், நான்காமிடத்தோனுடன், செவ்வாயாவது, அல்லது, சூரியனுவது, கூடிநிற்கில் தாய்க்கு புதன் திசையில், துன்பந்தரத்தக்க, நோயுண்டாம்—எ-று. 552

புந்தியுநான் காதிபனுந் தீயோர் வீட்டிற்
புகழ்க்கோனேக் கறவருநா ளரிட்ட மாகும்
சிந்தையுட னுன்காதி யுடன்ற னுதி
சேர்ந்தெங்கே நிற்கிலும்பொன் சேத மன்னைக்
கந்தநான் காதியுடன் காரி செவ்வாய்
அணுகிலவர் திசையி லன்னைச் கரிட்டமாகும்
வந்துசெவ்வாய் நான்கிலுறிற் சனியு மிந்து
மருவியெங்கே நின்ருலு மரணமற்றந் கதமே.

இ-ள். பாங்குள்ள புலவனுகிய, புதனும், நான்குக்குள்ளவனும், பாவர் வீட்டில், சுபர்பார்க்காதிருந்தால், அப்பாவர் திசையில், தாய்க்கு, அரிட்டமாம், சுகாதிபதியுடன், தனுதிபதியுஞ்சேர்ந்து, எவ்விடத்தில் நின்ருலும், தாய்க்குப் பொருட்சேதமாம், நாலாமிடத்தோனுடன், நீலன், வேலனுகிய சனி, செவ்வாய் கூடிநின்ருலும், அவர்கள் திசையில், தாய்க்கு அரிஷ்டமாம், செவ்வாய் நாலாமிடத்திலிருக்க, சனியும், சந்திரனுங்கூடி, யெங்கே யிருந்தாலும், தாய்பழிச்சொல்லோடு மரணமடைவாள்—எ-று. 553

வே று.

அத்தங் கமதாய் மாதுருத்தா னாதி வியத்தி லுறநான்கில்
மெய்த்துங் கலைவெண் மதியிருக்க வதற்கேழ் காரி மேவுகினும்
புத்தி செறிசுக் கிரற்கேழிற் பூமி சுதனும் பொருந்திநிற்கில்
சித்த மன்னை தனக்கரிட்டஞ் சேரும் நற்கோள் செறியினன்றாம்.

இ-ள். மாதருத்தானாதிபதி, பாவம்பொருந்தி பனிரண்டாமிடத்தில் இருக்க, நாலாமிடத்தில் சந்திரனிருக்க, அதற்கேழாமிடத்தில், சனியிருக்கினும், சுக்கிரனுக்கு, ஏழாமிடத்தில் குருதியாகிய, செவ்வாய், பொருதியிருக்கினும், தாய்க்கு, அரிட்டமாம், சுபக்கோள் சேர்ந்திருந்தால் நன்மையாம்.

செறியு மிரவி யுடன்காரி சேர்ந்து குடும்பந் தனிலிருந்தே
அறியு மூன்றா மதிபனையு மன்னை பதிநான் காமிடமும்
பிறிய மறவே சனிபார்க்கப் பெலமற் றிந்தோ டரவிருக்க
மறுதீக் கோணான் காதியுச்ச மாணா லும்போம் மாதாவே.

இ-ள். தந்தையாகிய சூரியனும், அவன்மைந்தனாகிய சனியுஞ்சேர்ந்து, குடும்பத்திலிருந்து, தைரிய சுகாதிபதியையும், நான்காமிடத்தையும், சனி பார்த்தாலும், அமரச்சந்திரனோடு பாம்பிருந்தாலும், பாவர்களும், நாலாமிடத்தோனும், உச்சம்பெற்றாலும், மாதாமரிப்பள்—எ-று. 555

மாதா பதியிற் சசிவெள்ளி மாநா கம்மூன் றுறவதற்கேழ்
மீதா னைந்திற் காரியுற வெய்யோ னுடன்மூன் றாதியைந்தில்
தீதா யிருக்கச் சனியவனைத் தெரிந்து பார்க்கக் குடும்பத்தை
ஏதா னங்கா ரகன்பார்க்க வின்றாட் கரிட்டமெனச் சொல்லே.

இ-ள். சொல்லும்படியான, மாதுருத்தானத்திற் சோமனும், காமனும், ஈமனும், இம்மூவருமிருக்க, அதற்கேழாமிடம், ஐந்தாமிடம், இதிற் சனியிருந்தாலும், சூரியனுடன், மூன்றாமிடத்ததிபனுஞ்சேர்ந்து, ஐந்தாமிடத்திற் பலமற்றுநிற்க, சனி, இவர்களைப்பார்க்க, குடும்பஸ்தானத்தைச் செவ்வாய்பார்க்கத் தாய்க்கு அரிட்டமாமென்று சொல்லுக—எ-று. 556

சொல்லார் மேட லக்கினத்துக் கன்னை பதியிற் சுங்கர் புதன்
உல்லா சங்கள் பெறநிற்க வதற்கே ழரச னுறச்சசிக்குப்
பொல்லா வேழிற் சனியிருக்க வன்னைக் கன்னை போமுச்சம்
நல்ல மதியு நல்லோரு மன்னைக் கரிட்டம் நல்காரே.

இ-ள். லக்கினம் மேடமாக, அதற்கு நாலாமிடத்திற் காமனும், சாமனும், பலம்பெற்றுநிற்க அதற்கேழாமிடத்திற் குருவிருக்க, சந்திரனுக்கு ஏழாமிடத்திற் சனியிருக்கத் தாய்க்குத்தாய் (பாட்டி) இறந்துபோவள், உச்சர்களும், சுபசந்திரனும், சுபர்களும், தாய்க்குத் தோஷஞ்செய்யமாட்டார்கள்—எ-று. 557

நல்கார் சனிசெவ் வாயிரண்டு நான்கா மிடந்தன் னைப்பார்க்கில்
ஒல்கா திருக்கிற் காரகனு மொசிவாய் விரய முற்றிடவே
சொல்லா ளன்னை தனக்குறுநோய் சினத்தே யரவஞ் சேர்ந்துற்றால்
இல்லா ளன்னை பொன்னோக்கி னிற்பள் சிலநா ணிலத்தே.

இ-ள். சனி செவ்வாய் இவர்கள், நாலாமிடத்தைப்பார்த்தாலும், இருந்தாலும், காரகன் பலமற்று, பனிரண்டாமிடத்தில், இருந்தாலும்,' தாய்க்கு நோயுண்டாம், பாம்பும் சேர்ந்துநின்றால், தாய்க்குத் தோஷமாம், குருபார்த்தால், சிலநாள் பூமியிலிருப்பள்—எ-று. 558

நிலத்தில் நான்கா மிடந்தனக்கோ ரிரண்டா மிடத்தி லிருந்தவர்கள், பலத்தைக் குடும்பா திபன்பலத்தைப் பெற்ற தாயும் பலன்பெறுவள், நலத்த நான்கா மதிபனுச்ச நண்ணி யாணங்கிசத்திருந்தால், குலத்துக் கொழுநன் றண்டிப்புக் குள்ளார் காளக் கொடிதானே.

இ-ள். நாலாமிடத்திருந்தவர்கள், பலத்தையும் குடும்பாதிபன் பலத்தையும், பெற்றிருந்தால், பெற்றதாயும் பலன்பெறுவாள், நான்காமிடத்ததிபன், உச்சம்பொருந்தி, ஆணங்கிஷமேறியிருந்தால், கணவன் தண்டித்தலுக் கடங்காத தாயாவள்—எ-று. 559

கொடிய கதிரா தவன்புடத்துக் குள்ளம் புலியைத் தான்வாங்கிப்
படியு மிராசி தனிலரசன் பற்றுங் கால நிரியாணம்
கடிய மதியின் புடத்துக்குள் காரி புடத்தைத் தான்வாங்கி
நெடிய ராசி தனிற்காரி வருநாளன்னை நிரியாணம்.

இ-ள். சூரியஸ்புடத்திலிருந்து, சந்திரஸ்புடத்தைவாங்கி, மீதம்வரும்' இராசியில், குருவருங்காலமும், சந்திரஸ்புடத்திலிருந்து, சனிஸ்புடத்தை வாங்கி, மீதராசியில், சனிவருங்காலமும், தாய்க்கு அரிட்டமாம்—எ-று.

ஆணி மதியந் தனக்கேழிற் செவ்வா யுறிலன் னைக்கரிட்டம்
காணி யாமா துருத்தானங் கடக மாகப் பிறைநிற்கில்
பூணும் வயது பூரணமாம் பொல்லா ரிரண்டு புறமிருக்க
ஏணு மதிய நடுவிருக்க வன்னைக் கரிட்ட மிசைந்திடுமே.

இ-ள். திங்களுக்கு ஏழாமிடத்தில், மங்கலனிருந்தால், தாய்க்கு, அரிட்டமாம், மாதுருஸ்தானம், கடகமாக, அதிற்சந்திரனிருந்தால், தாய்க்குப் பூரணவயதாகும், இந்துவுக்கு, இரண்டுபக்கமும், முந்தப்பாவர்களிருக்க, தாய்க்குஅரிட்டமாம்—எ-று. 561

இசைந்த வன்னை பிதாத்தானத் திறைவ ரிரவி யுடன்கூடி
அசைந்தி டாதெட் டாறுவியத் துறினு நீச மாகவுமே

நிசந்தா னுறவே யிருக்கிற்ருய் நின்ற தந்தை யிருவருக்கும்
கசந்தே பிரிய மில்லாத கடின மைந்த னுங்கண்டீர்.

இ-ள். மாதுருபாக்கியத்ததிபர், சூரியனுடன்கூடி,சாதுரியமறைவுஸ்தானமாகிய, ஆறு, எட்டுப்பன்னிரண்டில், இருந்தாலும், நீசம்பெற்றிருந்தாலும், தாய்தகப்பனுக்குப் பிரியமில்லாத கசப்போடுகூடிய கடுமைபெற்ற புத்திரனுவான்—எ-று. 562

கண்ட வன்னை பிதாத்தானக் கடவு ளிசைந்தெங் கேயுறினும்
மண்டு மிரவி மதிகூடி மாதா தந்தை தானத்தில்
அண்டி யிருக்கிற் பிதாவுடனே யன்னைக் கெய்து மனுமரணம்
பண்டுநான்கொன் பதற்கிறைவர் பலத்தாற் பாலன்பரிவுசொல்வாம்

இ-ள். நாலு ஒன்பதாமிடத்ததிபர்கள்,ஒன்றுகூடி எங்கேயாயினுமிருக்கச் செங்கதிரோனும் வெண்கதிரோனும், சேர்ந்து சுகபாக்கியத்திலிருக்கப் பிதாவுடன், தாயும்மரணமடைவள், நாலு ஒன்பதாமிடத்தவர்கள், பலம் பெற்று நின்றுல், பாலரின்விசேடம் பகருவோமென்பதாம்—எ-று. 563

சொல்லு நான்கொன் பதுக்கிறைவர் தொடர்ந்து தனபாக்கியலாபத், தல்ல லறவே யிருந்தாலு மடைவே யுச்ச கேந்திரத்தும், வெல்லுந் திரிகோ ணங்களினு மேவிற்றந்தை தாய்மைந்தர், எல்லையில்லாச் சந்தோஷ மெய்தி யிருப்பா ரென்பரரே.

இ-ள். நாலு ஒன்பதாமிடத்ததிபர்கள், மேலுமொன்ருய்க்கூடி, இரண்டு, ஒன்பது, பதினேராமிடங்களில், பாபசம்பந்தங்களில்லாதிருந்தாலும், இவர்கள், உச்சகேந்திர திரிகோணங்களிலிருந்தாலும், தாய்தகப்பன் ஜாதகன், இவர்கள், அளவில்லாத சந்தோஷத்தோடிருப்பார்கள் என்றுசொல்லுவர்—எ-று. 564

என்பா ரொன்பா னதிபதி யினிய பலமாய்ச் சன்மாதி
முன்பா நான்கா மாதிபதி மூவர் பலன்க ளற்றிருக்க
அன்பா யீன்ற தாயுதரத் தணுகுங் கர்ப்பத் தங்நாளில்
வன்பாய் வருந்தி மரிப்பளென வகுத்தார் சுருதி வல்லோரே.

இ-ள். ஒன்பதாமிடத்ததிபதி, ஊக்கமாகப் பலம்பெற்றும், லக்கினம், இரண்டு, நான்காமிடத்ததிபர்கள், பலனற்றுமிருக்கத் தாய்கெர்ப்பந்தரிக்குங் காலத்திலேயே கஷ்டப்பட்டு, இறந்துவிடுவாளென்று, கூறுவர்-எ-று.

இந்து சேயா ருமாதி யிவர்களுங் கூடி நான்கில்
வந்துதா னிருக்கி லீன்ற மாதாவுஞ் சோரம் போவள்
அந்தநான் கொன்ப தொன்றிற் கதிபர்கள் கூடிக் கோணம்
நந்துகேந் திரத்தின் மேவத் தாயுடன் கட்டை நண்ணும்.

இ-ள். ஆலோன், அழலோன், ஆறாமிடத்ததிபன் இவர்கள்கூடி, நாலாமிடத்திலிருக்கில், தாய்சோரஸ்திரியாவள், அந்தநான்கு ஒன்று, ஒன்பதாமிடத்ததிபர்கள் கூடி, திரிகோணகேந்திரங்களிலிருக்கத், தாயும், சேயும், மாயும், என்க—எ-று. 566

க்ஷேத்திர பலன்.

பத்துநான் கதிபன் செவ்வா யாறெட்டிற் பன்னி ரண்டில்
உற்றநீ சத்தா னத்தி லுறிற்பங்கு மனையு மில்லை
மற்றிவர் பலமுற் றாக்கான் மனைபங்கு லாப முண்டாம்
பெற்றநான் கதிப னுச்சம் பெறின்மாட கூட முண்டாம்.

இ-ள். பத்துநான்காமிடத்ததிபன், சத்துவமுள்ள, செவ்வாய், இவர்கள், மறைவுஸ்தானமாகிய, ஆறு, எட்டு, பன்னிரண்டாமிடத்தில், நீசம் பெற்றுநின்றால், பங்குமனை, ஜாதகனுக்கில்லையாம், இவர்கள்பலம் பெற்று நிற்கில், மனையின் பங்கில் இலாபமுண்டாம், நாலாமிடத்ததிபன், உச்சம் பெற்றால், மாடமாளிகையுண்டாம்—எ-று. 567

கூடமா ளிகைசிங் காரங் கொடுப்பனான் கதிப னான்கில்
நீடிவாழ்ந் திடவன் னோனை நெருங்கிநின் றவர்க டாமே
நாடுநல் லோர்க ளாயி னன்மனை பாவ ராயின்
ஊடியே வீடு பாழாய்க் கிடக்குமென் றுரைவ ழங்கும்.

இ-ள். நாலாமிடத்ததிபன், நாலாமிடத்திற் றங்கியிருக்க, அவனோடு சுபக்கோள் சேர்ந்திருக்க, நல்லகட்டிடமுள்ளமனையாம், பாவர்கள்கூடியிருக்க, அம்மனைபாழாய்க் கிடக்குமாமென்று சாஸ்திரஞ்சொல்லும்—எ-று.

வழங்கும் நான்கா மதிபதியும் வளர்சத் துருநீ சத்திலுற
ஒழுங்கும் வியத்தா திபன்றனத்தி லுறச்சன் மாதி செங்கதிரும்
முழங்கும் நான்கா திபன்கூட நல்லோர் நோக்க முறாதிருக்கத்
தழங்கும் பங்கு மனையெல்லாந் தானும் பறிபோந் தப்பாதே.

இ-ள். நான்குக்குடையோன், தீங்குள்ளசத்துரு நீசஸ்தானங்களிலும், பன்னிரண்டா மிடத்தோன், இரண்டாமிடத்திலிருக்க, லக்கினாதிபதி, சாயாபதி, நாலாமிடத்ததிபதி, இவர்கள்கூட, சுபர்கள்பார்வையில்லாவிட்டால், ஜாதகன்பங்குமனையெல்லாம், பறிகொடுக்கப் படுவான்—எ-று. 569

தப்பா தாறா மதிபதியுந் தான்பத் தேழி லிருந்திடவே
ஒப்பாஞ் சன்மந் தனிற்செவ்வா யுறையச் சுபக்கோ ளுறப்பார்க்க
இப்பார் தன்னிற் சத்துருவா யிருப்பர் மனைபங் குள்ளதெல்லாம்
செப்பார் முலையா யிவன்றனக்குச் சேருந் திண்ணந் திரனாலே.

இ-ள். ஆறுமிடத்ததிபன், எழுபத்தா மிடத்திலிருக்க, லக்கினத்தில், வக்கிரனிருக்க, அத்துடன் சுபர்கள், இருக்க, அல்லது, நோக்கச்சத்துருக்களின், பங்குமனைகளெல்லாம், ஜாதகனுக்கு, திறமாய்வந்து சேருவதுறுதியாம்—எ-று. 570

நாலா மிடத்தி னதிபனும் லக்கி னதி யுடன்கூடி
மேலாய் நாலி லுறிலொருவன் வீட்டி லிருந்து மிகவாழ்வன்
சேலா நாலா மதிபனுடன் சேரும் பாவ ரெத்தனையோ
மாலாய் கேளத் தனைவீடு கட்டிச் சேதம் வழங்குவனே.

இ-ள். நாலுக்குடையோனும், லக்கினத்தோனும் ஒன்றுசேர்ந்து,நாலாமிடத்திலிருந்தால், ஜாதகன் இன்னொருவன், வீட்டில், பொன், நயத்துடன், நன்னயமாயிருந்து வாழ்வன், நாலாமிடத்தானோடு மேலாகச்சேர்ந்த பாவக்கோட்கள், எத்தனையுண்டோ, அத்தனைவீடுகள், ஜாதகன் கட்டிச் சேதப்படுபவனுமாம்—எ-று. 571

வேறு.

வழங்கும் லக்கின மன்பல னின்றியே
முழங்கு மாறின்முந் நாளி லுறைந்திடில்
தழங்குஞ் சன்மந் தனைப்பாவர் கண்டிடில்
பழங்க ணுமனைப் பங்குமில் லானென்னே.

இ-ள். ஜென்மாதிபன்தன், பலமற்று, ஆறுபன்னிரண்டில், வீறுடனிருக்க, லக்கினத்தை, உக்கிரமாகிய, பாவர்கள் பார்க்கப் பூர்வீகபங்குமனை இல்லாதவனென்று சொல்லவேண்டும்—எ-று. 572

வேறு.

பங்கமில் வியத்தின் மன்னன் பரிந்திரண் டாமி டத்தில்
தங்கநல் வீடு கட்டிச் சகலபாக் கியமுஞ் சேர்ப்பன்
இங்கித வியத்தோன் றன்னோ டெத்தனை கிரகங் கூடும்
சங்கையத் தனையாம் வீடு கட்டிடு சமர்த்தன் றானே.

இ-ள். பங்கமில்லாத பன்னிரண்டாமிடத்ததிபன்எங்குஞ்செல்லாமல், இரண்டாமிடத்திலிருக்க நல்லவீடுகட்டி வல்லபமாய்ச் சகலபாக்கியமுஞ் சேர்த்துவைப்பன், அன்னியதேச உத்தியோகமுள்ள, பன்னிரண்டாமிடத்ததிபன்றன்னை, எத்தனைகிரகங்கள், கூடியிருக்கின்றதோ, அத்தனைவீடுகட்டக்கூடிய, சமர்த்தனுவானென்று, சொல்லவேண்டும்—எ-று. 573

தானமாஞ் சன்ம வீடு சரமெனிற் பரதே சத்தில்
ஆனதோர் திரங்க ளாயின் மருவுவன் சுதேசந் தன்னில்
ஈனமி லுபய மாயின் பரதேசத் திடையிற் பாதி
ஊனமில் சுதேசந் தன்னிற் பாதிநா ளுறைவன் கண்டீர்.

இ-ள். ஜென்மலக்கினம், சரமானால், அன்னியதேசத்திலும், திரமானால், சொந்ததேசத்திலும், உபயமானால், பாதிநாள், சுயதேசத்திலும்,பாதி நாள், அன்னியதேசத்திலும் வசிப்பவனும்—எ-று. 574

கண்டபன் னிரண்டாம் வீடு கருதுநல் லோர்வீ டாயின்
திண்டிற னகரந் தன்னைச் சேர்ந்தரு குறவி ருப்பன்
பண்டுசூத் திரர்தம் வீடாய் லாபாதிக் குறவு மாயின்
மண்டுசூத் திரரி ருக்கு மனைக்கரு கிருந்து வாழ்வன்.

இ-ள். பன்னிரண்டாமிடம், சுபர்வீடாயின், அதிவீரம்பெற்ற சிறந்த ராஜநகரத்தைச்சேர்ந்து அதிலிருப்பவனும், அது சூத்திரர்வீடாய், லாபாதிபதிக்குநட்புவீடாயின், சூத்திரர்களின்மனையின்பக்கத்திலிருந்துவாழ்வான்.

இருந்தபன் னிரண்டா மாதி யீன்றதாய் துணைவர் தந்தை
பொருந்திய மனைவி மக்க டானத்திற் போய்நின்றாலும்
திருந்துமத் தானத் தாதி தன்னுடன் சேர்ந்துற் றாலும்
அருந்துணை யான வீடு மவரவர் தமக்கே யாகும்.

இ-ள். பன்னிரண்டாமிடத்ததிபன், அன்னை, முன்னை, பின்னை,சோதரம், தந்தை, தாரம், தநயர், ஆகிய இத்தானங்களில், இருந்தாலும், அந்தத் தானாதிபர்களோடு, கூடினாலும், ஜாதகனுடைய வீடு, அவரவர்களுக்கே, உரியதாகும்—எ-று. 576

பரவிஷயம்.

மாலாய் நாலா மிடந்தன்னை மருவிப் பாவ ரினிதிருக்க
மேலாய் நோக்கச் சன்மாதி மீண்டும் பலன்க ளற்றிருக்க
ஏலாம் பாவ ருடன்கூடி யிருக்க நல்லோர் பார்வையறப்
பாலோன் விஷயம் வேறென்றே பண்பி னுரைப்பர் பாரோரே.

இ-ள். நாலாமிடத்திற் பாவரிருக்கப்பார்க்க மேலாம், லக்கினாதிபதி, பலனற்றிருக்க, அல்லது பாவர்களுடன்கூடியிருக்கச் சுபர்கள் பார்வையில்லாவிட்டால், ஜாதகன், தரித்திரவிஷயம் வேறென்றே, பெரியோர் சொல்லுவர்—எ-று. 577

வேறு.

பாரிலுறுஞ் சன்மாதி நான்கா மாதி
பாக்கியத்தா னதியிவர் மூன்று பேருஞ்
சேரவே யாறிடத்து மலதா றுதி
செறிந்தருளு மங்கிசத்துந் திடமாய் நிற்க
வீரியகா லாதிபதி யுடன்பாம் பேனும்
மிக்கசனி தன்னுடனே மேவி னாலும்

தேரிலிது பரவிஷய மென்று சொல்வர்
சிலைப்புருவக் கயற்கணுறுந் தெரிவை யாரே.

இ-ள். கார்முகம்போன்ற புருவமும், கயல்போன்ற நயனமுமுடைய கன்னியே? லக்கினுதிபதி, சுகாதிபதி, பாக்கியாதிபதியாகிய, இம்மூவரும் யோக்கியமாக, ஆறுமிடத்தில், (அல்லது) ஆறுமிடத்தோன், நவாங்கிஷத்தி லிருக்க, நாலாமிடத்ததிபனுடன், ராகு, அல்லது, கேதுவாகிய பாம்போடு, சனிசேர்ந்தாலும், பரவிஷயமென்றே, சொல்லுவர்—எ-று. 578

வேறு.

ஆரல் நாலா மிடத்ததிப னவடன் குமரன் சன்மத்தில்
சேர விருக்க வவனுடனே திகழும் பாம்பு செறிந்திருக்கப்
பாரி லறியச் சனித்தவனும் பரவுங் குலபுத் திரனல்லன்
ஏருங் கடைசிக் குலத்துள்ளா னென்பான் றந்தை யென்றிலகும்.

இ-ள். ஆரலாகிய, செவ்வாயும், நாலாமிடத்ததிபனும், அவனுக்கு, ஐந்தாமிடமாகிய, எட்டாமிடத்ததிபனும், ஒன்றுசேர்ந்து, ஜென்மத்திலிருக்க அவர்களோடு, ராகு, அல்லது, கேது, கூடியிருக்க, உலகத்தில், ஜெனித்த வன், குலபுத்திரனல்லவாம், இவன் தகப்பன் கடைசிக்குலத்திற் பிறந்த வனும்—எ-று. 579

வேறு.

இலகியமூன் றுமிடத்திற் குசன்கருங்கோள் கூடில்
எழிற்பகினி சங்கமமா றுதிபனு னுஞ்
சலமலியெட் டாதிபனு கினுஞ்செவ்வா யுடனுஞ்
சசியுடனுங் கூடிலவள் சங்கமமே யாகும்
நலமலியு மிவருடனே கரும்பாம்பு நீசன்
நவில்சனிசூத் திரன்வெள்ளி நண்ணிடில்வை சியனுமாம்
குவவியசூ ரியன்கூடின் மறையவனு மென்றே
கூறினரிப் படித்தெரிந்து கொண்டறிய வேண்டும்.

இ-ள். இலகும்படியான, மூன்றுமிடத்தில், நிலமகனாகிய செவ்வாயும், இராகுவுங் கூடிநின்றால், தகும்நீயென்று, பகினியோடு சம்பந்தப்படுவான், ஆறு, எட்டாமிடத்ததிபர்களில், வீறுடன், யாதாமொருவர், சந்திரனுடனு வது அல்லது, செவ்வாயுடனுவது, கூடில், அவள் சங்கமமேயாகும், இவர் களுடன், இராகு கூடிநிற்கில் நீசனும், சனிகூடிநிற்கில், சூத்திரனும், சுக்கி ரன் கூடிநிற்கில், வைசியனும், சூரியன்கூடிநிற்கில், மறையவனுமாகியபர விஷயமென்று சொன்னார்கள், இதைத்தெரிந்தறியவேண்டும்—எ-று. 580

வேண்டிடுகா லாமாதி யாறுமா திபனும்
மெய்யிற்றுரப் பலராக விரைந்துடன்கூ டிடினும்

நீண்டபிறை யும்பிருகுந் துர்ப்பலரே யாக
நின்றிடுநான் காமிடத்தைப் பாவர்களேக் கிடினும்
பூண்டநா லாதிசசி யொடுகருங்கோள் கூடப்
பொருந்தியசன் மாதிநான் காறென்பா னதிபன்
ஈண்டியவே ழாமிடத்தி லிவர்நால்வர் கூடி
இருந்தக்காற் பரவிஷய மெனப்புகலு வாரே.

இ-ள். நாலு, ஆறுமிடத்ததிபர்கள், பலவீனமாகக், கூடியிருக்க, திங்களும், சுங்கனும், திறமற்றுநிற்க, நாலாமிடத்தைப்பாவர்கள்பார்க்க, அந்நான்காமிடத்ததிபனோடு, சந்திரன், இராகு, இவர்கள்கூடியிருக்க, ஜென்மம், நான்கு, ஆறு, ஒன்பதாமிடங்களுக்கு, அதிபர்களாகியநால்வருங்கூடி, மாதுருஸ்தானத்துக்கு, ஏழாமிடத்திலிருக்க, பரவிஷயமென்று சொல்லுவார்கள்—எ-று. 581

வே று.

சிறந்த மதியையுஞ் சன்ம மனையையும்
அறிந்த பார்வைக ளரசனேக் காவிடில்
உறைந்த கதிர்மதி யொன்பதி லூற்றிடில்
பிறந்த சேய்பர சாதகம் போற்றுமே.

இ-ள். பிறந்த லக்கினத்தையும், சிறந்த சந்திரனையும், அறிந்தும், ஆண்டளப்பான், நேராகப் பாராதிருந்தாலும், சந்திராதித்தர், தந்தைவீடாகிய, ஒன்பதாமிடத்தில் வந்திருந்தாலும், மைந்தன்பிறந்தஜாதகம், பரவிஷயமென்றே சாஸ்திரஞ் சொல்லும்—எ-று. 582

போற்றும் லக்கினம் பொருந்துங் கதிர்மதி
தோற்றி யிருக்கத் துரைகு ழரசனும்
சாற்றிய நீசன் சனிநவாங் கிசையினில்
ஏற்றி யிருக்க விதுபர சாதகம்.

இ-ள். சந்திராதித்தர் பிறந்தலக்கினத் தற்றாலும் நேசமாகியகுருநீசமாகி, சனி அங்கிஷம்பெற்றாலும், பரவிஷயமென்றே சொல்வதாம்-எ-று.

பரிதியின் கிழமை பண்புறு சோதி
அருகிய துதிகை அமர்ந்திடி லேனும்
பெருகிய புதனும் பெறுநா ளிரேவதி
உருகிய சத்தமி யுறும்பர சாதகம்.

இ-ள். ஆதிவாரமும், சோதிநட்சத்திரமும் அமரபட்சத்துதிகையுமாயிருந்தாலும், புதவாரமும், இரேவதி நட்சத்திரமும், கிருஷ்ணபட்சம், சத்தமி திதியுமாக விருந்தாலும், பிறந்தஜாதகம், பரவிஷயமாம்—எ-று. 584

உறுஞ்சனிக் கிழமை யுற்றபின் னவிட்டம்
நறுந்து வாதசி நாளினிற் பிறந்தோன்
அறிந்திடு மிதுபர சாதக மென்றே
சிறந்தநூ லறிந்தோர் செப்புவர் தாமே.

இ-ள். பொருந்திய சனிவாரமும், வருந்திய அவிட்ட நட்சத்திரமும், திருந்திய சுக்கில பட்சத்துவாதசியுங்கூடிய நாளிற்பிறந்தோன், பரவிஷய மாமென்று, சிறந்த சோதிட நூலுணர்ந்தவர்கள், சொல்லுவார்கள்—எ-று.

மாது ரரிட்டம்.

செங்கதி ரிருக்குஞ் செவ்வாயங் கிசையில்
தங்கியங் கிசையோன் றன்மனை லக்கினம்
மங்குரிற் சன்ம மதைச்சேய் பார்த்திடில்
பொங்கிய சிரசு பொடிபடு வாரே.

இ-ள். ஆதித்தன், அங்காரகனங்கிஷ மேறி அச்செவ்வாய், சொட் சேத்திரமாகி, லக்கினத்தில் நின்றாலும், ஜென்மத்தைச்செவ்வாய் பார்த்தாலும், சிறுவன்தாய், சிரசிலடிபட்டுப் பொடிபட்டிறப்பாள்—எ-று. 586

வெண்பா.

மூன்று மதிபதியு மூரிச் சனியுடனே
தோன்றியைந் தாமிடத்திற் சூழ்ந்திடினும்—ஆன்றகதிர்
ஆறஞ்சு நாலிடத்துற் றுலவன்றாய் போமென்றே
கூறஞ்சா மாண்டிற் குறித்து.

இ-ள். மூன்றுக்குடையவன், சனியுடன்கூடித்தோன்றும், ஐந்தாமிடத்திலிருக்க, ஆறு, ஐந்து, நாலு, இவ்விடங்களில், சூரியனிருக்கப்பிறந்த ஜாதகன், தாய், அஞ்சாமாண்டிற்றுஞ்சிடுவாள், என்க—எ-று. 587

குறித்ததாய் தந்தை குலவிற் கதிபர்
மறுத்துவர்கண் மாறி வசிக்கின்—சிறுத்தேதநல்
அத்தமன மாயிடினு மன்னை யனுமரணம்
சித்தமெனச் சொற்றிடுநீ தேர்ந்து.

இ-ள். நாலு, ஒன்பதுக்கதிபர்கள்மேலும், ஒருவர்வீட்டில், ஒருவரென, அவர்வீட்டில், இவரும், இவர்வீட்டில், அவருமாகக் கிரகமாறியிருந்தபோதிலும், அல்லது, பலங்குறைந்து, அத்தமனமாயிருந்தாலும், தாய் சீக்கிரத்திலிறந்து விடுவாளென்று சொல்லவேண்டும்—எ-று. 588

நான்காம் பாவம்

சம்பூர்ணம்.

ஐந்தாம்பாவம்.

புத்திர பலன்.

அஞ்சிற் கஞ்சிற் காரிமதி யங்கா ரகனே டிரவியுறில்
துஞ்சு மாமன் சுபர்நோக்கிற் றுன்ப மில்லைப் பூசத்தில்
விஞ்சு பாத நடுவிரண்டே லன்னைக் கன்னை வியமாகும்
வஞ்சி பிழைக்கி னேயரிட்ட மாமன் றனக்கே வருங்கண்டீர்.

இ-ள். ஒன்பதாமிடத்தில், மந்தன், கந்தன், இந்தன், இவர்களுடன், சூரியனிருந்தால், மாமன், இறந்துபோவன், சுபக்கிரகங்களிருந்தாலும், பார்த்தாலும், பூசநட்சத்திரம், நடுப்பாகம், இரண்டாம்பாதத்திற்பிறந்தால், தாயைப்பெற்றபாட்டி, இறந்துவிடுவாள், கொடுமையானசீக்கும், அரிட்டமும் மாமனுக்குண்டாகுமாம்—எ-று. 589

மருவுஞ் சன்ம லக்கினத்தில் வாழுஞ் சன்மா திபனோடும்
அருளு மைந்தா மிடத்ததிப னணுகிற் பார்க்கி லன்புடனே
ஒருவர் தமது பதியினின்மற் றொருவர் மாறு கவுறிற்கிற்
பெருமைப் புதல்வர் பிறந்திடுவர் பிறந்தா னமனுக் கஞ்சாரே.

இ-ள். ஜென்மலக்கினத்தில், ஜென்மாதிபதியோடு ஐந்தாமிடத்ததிபன், நின்றாலும், பார்த்தாலும், அல்லது கிரகமாறியிருந்தாலும், பெருமையான புத்திரர்களுண்டாம், அவர்களும், தீர்க்காயுளுடனிருப்பார்களாம்.

வேறு.

அஞ்சாகு மிடத்திலுறும் பாவராற் றோஷம்
அணுகும்வகை சனிகுழவிக் கருக்கன்றந் தைக்கே
துஞ்சாத மதிக்கன்னை புதனுலன் னைக்காம்
சுற்றமதற் கரசனுற் றந்தைசுற்ற மாகும்
நஞ்சாருங் கரியகோள் சுதற்குச்செவ் வாயேல்
நண்ணிடிலம் மானுக்குத் தோஷமதே யாகும்
மஞ்சாருங் குழன்மடவா யரசனைந்தின் மேவ
வந்திடிற்சந் தானமத் திபமுதித்த றனே.

இ-ள். மஞ்சாருங்கூந்தலையுடைய வஞ்சியரே அஞ்சாமற்கேட்பாயாக, ஐந்தாமிடத்திலிருப்பவர்களால், தோஷம், அணுகும்வகை, எப்படியெனில், பஞ்சமத்திற் சனியிருந்தால் மஞ்சனுக்கும், சூரியனிருக்கில், தகப்பனுக்கும், சந்திரனிருக்கில் தாய்க்கும், புதனிருக்கில், அன்னை சுற்றத்தாருக்கும், குரு

விருக்கில், தகப்பன் சுற்றத்தாருக்கும், இராகுவிருக்கில், புத்திரர்க்கும், செவ்வாயிருக்கில், மாமனுக்கும் தோஷமாம், புத்திரகாரகனுகிய,குரு ஐந்தி லிருந்தால், புத்திரோற்பத்தி மத்திபமாகுமாம்—எ-று. 591

வேறு.

உதித்தவொன் றைந்தா மாதி யுற்றவொன் றைந்து ருமல்
மதித்ததோர் நோக்க மின்றின் மகவில்லைச் சுபாங்கி சத்தில்
பதித்துறி லாயி னுண்டாம் பயிலைந்தா மதிபன் மூன்றில்
விதித்திடும் படியே நிற்கின் மேவுபுத் திரர்தா மற்பம்.

இ-ள். உதித்த லக்கினுதிபதி, மதித்த ஐந்தாமதிபதி, அவ்வவ்விடங்களி லிராமலும், பாராமலும், இருந்தால், புத்திரரில்லையாம், சுபாங்கிஷம்பெற்று நின்ருல், புத்திரருண்டாம், ஐந்தாமிடத்ததிபன், மூன்ருமிடத்தில் நின்ருல், புத்திராற்பமாம்—எ-று. 592

புத்திரத் தானத் தாதி யேகனுய்ப் புதன்வீ டேறில்
புத்திர ரில்லை நல்லோர் கூடிடிற் பிறந்து சாவர்
ஒத்திடும் பாவர் சேரின் மகவில்லை யெருது கும்பம்
வித்தகை யோரை யார்க்கு மகவில்லை விளம்புங் காலே.

இ-ள். புத்திராதிபன், ஒருவனுய்த்தனித்து புதன்வீட்டிலிருந்தால், புத்திரரில்லையாம், நல்லோர் கூடியிருந்தால், பிறந்து, இறந்துவிடுவார்களாம், பாவர்கள் கூடியிருந்தால், புத்திரரேயில்லை, ரிஷபம், கும்பம், ஓராலக்கின மாகவுடைய ஜாதகருக்கு, புத்திரர்களில்லையென்று சொல்லுவார்கள்—எ-று.

விளம்புமே ழாமி டத்தோன் மேவுச்ச நீசமின்றிக்
களங்கமில் லாதி ருக்கிற் கருதுமூத் தாளுக் கில்லை
இளங்கொடி யாளுக் குண்டா மேழுளோ னுச்ச நீசம்
வளம்பெரு மங்கி சத்தின் மருவிடின் மகவுண் டாமே.

இ-ள். ஏழாமிடத்ததிபன், உச்சநீசமில்லாமலும், பாவமில்லாமலுமிருந் தால், புத்திரர்கள், மூத்தாளுக்கில்லையாம், இளையமனைவிக்குண்டாம், ஏழா மிடத்ததிபன், உச்சம் நீசம், சுபாங்கிஷத்திலிருக்கில் புத்திரருண்டாம்.

வேறு.

அஞ்சா மிடத்திற் செங்கதிரோ
　　டரவுங் கூடித் தானிருக்கின்
மஞ்சார் குழலாய் தந்தைக்கும்
　　மைந்தன் றனக்கும் வரும்பகையே

செஞ்சா விகளுந் திரவியமுஞ்
சேத முண்டாந் திறமையுடன்
துஞ்சா திருந்த தலங்கள்விட்டுத்
தூரப் போவ திலக்கணமே.

இ-ள். அஞ்சாமிடத்திற் செஞ்சுடரோன், நஞ்சாராவாகிய ராகுவோடு கூடியிருக்கில் தகப்பனுக்கும், மகனுக்கும், பகையுண்டாம், தானியங்களும், திரவியங்களும், சேதமுண்டாம், பூர்வீகதலம்விட்டுத் தூரமான வேறிடங்களிற்போம்படியான தன்மையுண்டாம்—எ-று. 595

வேறு.

லக்கி னாதி பதிக்குநா லாதிபன்
ஒக்க நல்லுற வாகவுந் தானுறில்
தக்க தந்தை தனக்குப்பின் மைந்தர்கள்
மிக்க பூமியில் மேவுவர் காணுமே.

இ-ள். லக்கினாதிபதிக்கு, நாலாமிடத்ததிபன், உறவாகவிருந்து, கூடிநின்றால், தகப்பனுக்குப்பின், மைந்தர்கள், பூமியிலிருப்பார்கள்—எ-று. 596

வேறு.

காணும் லக் கினத்திற் செவ்வாய் தனக்கேழிற் காரி பின்னும்
கோணுமுந் நான்கில் வெய்யோ னிப்படிக் குலவி நின்றால்
ஆணுடன் பெண்ணு மில்லை யஞ்சாதி பவனு மேழில்
பூணேழோன் பாவ னுயைந் துற்றிடிற் புதல்வ ரில்லை.

இ-ள். ஜென்மத்திற் செவ்வாயும், சத்தமத்திற் சனியும், வியத்தில் வெய்யோனுமாகநின்றால், ஆணும், பெண்ணுமில்லையாம், (புத்திரரில்லை) ஐந்து, ஏழாமிடத்ததிபர்கள், பாவிகளாய்க் கிரகமாறியிருந்தாலும், புத்திரரில்லையாம்—எ-று. 597

புத்திரத் தானத் தாதி பொருந்துமங் கிசையைத் தொட்டு
மெய்த்துலக் கினமட் டெண்ணி மேவியே கண்ட லக்கம்
எத்தனை யோதா னந்தத் தொகைப்படி யினிய மைந்தர்
சித்தமாய்ப் பெறுவ ரென்று தெரிந்தவ ருரைசெய் வாரே.

இ-ள். புத்திரத்தானாதிபதியிருக்கும், அங்கிசைமுதல், லக்கினம்வரை, எண்ணிவந்த, தொகை, எத்தனையோ, அத்தனைமைந்தரைப் பெறுவரென்று, தெரிந்தவர்கள், சொல்லுவார்கள்—எ-று. 598

உரைசெறி யலியோ கங்க ளொண்மதிக் கேழில் வெய்யோன்
பரவியே தானின் றூலும் பயில்சனிக் கேழிற் புந்தி

திரமுட னின்ற போதுந் தீதாமி ரட்டை ராசி
இரவிமே விடச்செவ் வாய்பார்த் திடிலலி யோக மூன்றும்.

இ-ள். நிசாகரனுக்கு, எழாமிடத்தில், திவாகரன், நின்றாலும், நீலனுக்கு, எழாமிடத்தில் மாலன், பலத்துநின்றாலும், இரட்டைராசிகளிற் பிங்கலனிருந்து, மங்கலன் பார்த்தாலும், இம்மூன்றுவிதமும், அலியோகமாம்—எ-று.

மூன்றும்பின் னுதய ராசி முதலொற்றை யாய தற்குள்
நான்றயிந் துற்ற போது மிரட்டையொற் றையிலு மிந்து
தோன்றிடச் செவ்வாய் புந்தி பார்க்கினுஞ் சோமன் காரி
ஆன்றவங் கிசமும் லக்ன மாயிடி னலியு மாமே.

இ-ள். மேலேசொன்ன மூன்றும், பின்னுதயராசிமுதல், ஒற்றையாய், அதற்குள், அம்புலியுற்றபோது, * இரட்டை ஒற்றையாய், அவ்வம்புலி தோன்றிட, அதைச் செவ்வாய் புதன், பார்த்தாலும், சந்திரன், சனி, லக்கின நவாங்கிஷம்பெற்றாலும், அலியாமென்க—எ-று. 600

அலியட்ட மாதி யைந்தா மிடத்தினி லிருக்கவைந்தாம்
வலியவீட் டதிப னெட்டின் மருவவே சுபர்நோக் கின்றி
நலியபுத் திரரு மில்லை நவிலைந்தா மதிபன் றானும்
மெலிவதாய் வியமா றெட்டின் மேவினு மில்லை மைந்தர்.

இ-ள். எட்டாமிடத்தோன், ஐந்தாமிடத்திலும், ஐந்தாமிடத்தோன், எட்டாமிடத்திலும், கிரகமாறியிருக்க, அவர்களைச் சுபர் பாராமலிருந்தால், புத்திரரில்லையாம், ஐந்தாமிடத்ததிபன், பலங்குன்றி, மறைவுஸ்தானங்களிலிருந்தாலும், புத்திரரில்லையாம்—எ-று. 601

மைந்தர்தா னங்கள் காரி புந்திதன் மனைய தாக
அந்தவீ டதனைக் காரி குளிகனோ டமரிற் பார்க்கில்
சுந்தரத் தத்த னுண்டாஞ் சுபர்பல முடனே யைந்தில்
வந்திட வைந்தோ னேக்க மற்றிடிற் றத்தாய் வாழ்வன்.

இ-ள். புத்திரத்தானமாகிய, ஐந்தாம்வீடு, புந்தி, மந்தன், வீடாகவும், அந்தவீட்டிலே, சனி, குளிகனோடு, சார்ந்திருந்தாலும், அல்லது பார்த்தாலும், அழகிய தத்துப்புத்திரனுண்டாம், அந்த ஐந்தாமிடத்தில் வந்த சுபர்கள், அதிக பலத்துடனிருக்க, அதை ஐந்தாமிடத்ததிபன் பாராவிட்டால், தத்தாகவே வாழ்வான், என்பதாம்—எ-று. 602

வாழ்மீன லக்கி னத்துக் கைந்தினின் மன்ன னுச்சந்
தாழ்விலா திருக்கிற் பெண்க டன்னையே பெறுவ னைந்தோன்

---

* இரட்டை யொற்றை என்பது, மிதுனதுலாம் கும்பம்.

நீள்குச ஞரு மாதி மூவரை நேய மில்லார்
சூழவே பார்க்கிற் சத்து ருக்களாற் சுதர்க்குப் பீடை.

இ-ள். லக்கினம் மீனமாக, அதற்கைந்தாமிடத்திற் குரு உச்சமாக நிற்கில், பெண்களையேபெறுவன், ஐந்தாமிடத்தோன், செந்தீவண்ணன், ஆறுமிடத்தோன், ஆகிய, மூவர்களையும், பகைக்கோட்கள், பார்க்கஅல்லது, கூடியிருக்க, சத்துருக்களாற் புத்திரற்குப் பீடையாம்—எ-று. 603

வே று.

பீடி லைந்தா மதிபனு மைந்தினில்
நீடு பாவ ருடன்கூடி நின்றிடில்
நாடி நோக்குற நல்ல குழவியும்
வாடுந் தேவதை வஞ்சனை யாலுமே.

இ-ள். ஐந்துக்குடையோன், பாவருடன்கூடி, ஐந்தாமிடத்தில், நின்றாலும், அல்லது பார்த்தாலும், நல்லபுத்திரரும், சொல்லற்கரிய தேவதைகளின் வஞ்சனையால், வாடுவார்கள், என்பதாம்—எ-று. 604

வே று.

வஞ்சனை நாவினி லன்பிலர் வந்திட வைந்தினின் மன்னனும்
விஞ்சிய காரியோ டங்குற வியமதி லன்பிலர் மிண்டியும்
தஞ்சமெ னுஞ்சிறு மைந்தனுந் தாய்கரந் தன்னி லிறந்திடும்
அஞ்சின வந்தனில் வந்துறு மையர் வெகுண்டிட வுங்கெடும்.

இ-ள். நாலாமிடத்திற் பாவர்களும், ஐந்தாமிடத்திற்குருவும், சனியுங் கூடிநிற்கினும், பன்னிரண்டாமிடத்திற் பகைக்கிரகங்கள் பலம்பெற்றிருக்கினும், தாய்கையிற், சேயாகிய சிறுபாலகன், இறந்துபோவான், ஐந்து ஒன்பதாமிடங்களில், வந்திருக்கிற கிரகங்கள், மிகப் பகைக்கிரகங்களானாலும், சாதகன் இறந்துவிடுவான்—எ-று. 605

கேடறு புத்திர நாதனுங் கிளர்மதி சுக்கிரன் மூவருங்
கூடிம டந்தையி ராசியிற் கோதைய ரங்கிசை மீதினில்
நீடியி ருந்திடு வோர்களை நேயமி லார்விழி நோக்குறில்
நாடிய பெண்பிள்ளை யேபெறும் நாவலர் கண்டறி வார்களே.

இ-ள். புத்திரத்தானாதிபதியும், பூரணச்சந்திரனும், புகரும், ஒன்றாக நன்றாய்க்கூடி, பெண்ணிராசிகளிலாவது பெண்ணிராசியங்கிஷங்களிலாவது, தங்கியிருக்க, அதை நேயமில்லாத, சத்துருக்கிரகங்கள் பார்த்தால் (பெண்) புத்திரிகளையே பெறுவான், என்று கணிதங்கற்றவர்கள் கண்டு சொல்லுவார்கள்—எ-று. 606

வார்சடை யார்முடி மேலுறும் மாமதி மேவும‌னைக்குமே
ஏர்பெறு சன்மம‌னைக்குமே யெண்ணியொ ரைந்துத லத்தையும்
பாரினி லுத்தம ரானவர் பார்வையு றிற்சிறு பாலராம்
காரிமு தற்கொடும் பாவரே காணி விலைச்சிறு பாலனே.

, இ-ள். பாணியை வேணியிற்சூடுந் தாணுமுடிமேல் தோனுஞ் சந்திரனாகிய மதியிருக்கும், மனைக்கும், ஜென்மமனைக்கும், ஐந்தாம்மனையெண்ண, எந்தவிராசி வருகிறதோ, அந்த விராசியைச் சுபக்கிரகங்கள் பார்த்தால், புத்திருண்டாம், சனி முதலாகிய பாவிகள் பார்த்தால், புத்திரரில்லையாம்.

பாலர்பி றந்திறு மைந்திலே பாரொரு கேது பரிந்துறில்
பாலர்பி றந்திறு மைந்திலே பாழ்கரு நாக மமர்ந்துறில்
சீலசன் மாதியைந் தாமிடஞ் சேரவைந் தாதிதி டம்பெற
வாலிபந் தன்னினின் மைந்தரும் வந்து பிறந்து வளருவார்.

இ-ள். மைந்தர்கள் பிறக்கும், ஐந்தாமிடத்தில், கேதுவிருந்தாலும், இராகு விருந்தாலும், சந்தேகமில்லாமல், தநயர்கள், பிறந்து சாவார்கள், முக்கியமான லக்கினாதிபதி, தக்கசுபனாய், ஐந்தாமிடத்திலிருக்க, அவ்வைந்தாமிடத்ததிபன், திடம்பெற்றுநிற்க வாலிபத்திலே சீலபுத்திரர்கள், தாலம் பிறந்து மேலுமேலும் வளருவார்கள், என்பதாம்—எ-று. 608

வளருஞ்சன் மாதியு மேழுற மற்றுநா லாதியே ழாதியும்
கிளர மகிழ்ந்தொரு வீட்டுறக் கேடர வோரிரண் டாதியும்
தளர்வற வேசன்ம மீதுறத் தான்வரு மைந்தர்ச மர்த்தராய்
உளருமி ரண்டிறை யைந்தினி லுறமக வுண்டிறை பார்வையே.

இ-ள். ஜென்மலக்கினாதிபதி, உன்மத்தமாகிய, ஏழாமிடத்திலிருக்க, சுக சத்தமாதிபதிகள் மிகநேசமாய், ஒருவீட்டில், வாசஞ்செய்ய, இரண்டாமிடத்தோன், திரண்டபலம்பெற்று லக்கினத்திலிருக்க, சமர்த்தான பிள்ளைகளுண்டாம் இரண்டாமிடத்தோன், ஐந்தாமிடத்திலிருக்க குருபார்க்கப் புத்திருண்டாம்—எ-று. 609

பாரினி லைந்தா மதிபதி பண்புட னின்றபு டத்தையுஞ்
சூரிய தேவர்பு டத்தையுந் தொகையொடு கூட்டிய ராசியில்
தார்புனை யும்புய ராசனுந் தகைமையு டன்செறி காலமே
வீரிய வானொரு மைந்தனும் மேவுவ னம்புவி மீதிலே.

இ-ள். புடவியில், திடமுற்ற, ஐந்தாமிடத்தோன், புடத்தையும், சூரிய தேவர்புடத்தையும், கூட்டிக்கண்ட விராசியான, கோசரத்தில், சரியாய், குருவருங்காலம் வீரியமுள்ள புத்திரன் பிறப்பான்—எ-று. 610

மீதிலேந் தாதிபு டத்தினி லிரவிம கன்றனே வாங்கியே
போதுறு ராசியின் மன்னுறும் போதிறு மேசிறு புத்திரன்
கோதறு மன்னன்பு டத்தினிற் குளிகனே வாங்கிய ராசியில்
ஏதமில் சனிவரு போதிரா தேகம ரித்திடும் பாலரே.

இ-ள். ஐந்தாமிடத்தோன்புடத்தில், மந்தன் புடத்தைக் கழித்துக்கண்டவிராசியில், கோசரரீதியாய்க் குருவருங்காலம், புத்திரகிரியாணமாம், குரு புடத்திற் குளிகன்புடத்தைக் கழிக்கவந்த விராசியில், மந்தன்வருங்காலம், மைந்தர் மரணமாம்—எ-று. 611

வேறு.

அறிந்திடும் பருதி கேந்திரந் தன்னி
லம்புலி யிருந்திடப் பிதாவில்
அற்பமாம் புதல்வர் சரித்திரஞ் சசிதா
னணுகியே பணபரத் திருக்கில்
செறிந்திடுந் தந்தை தனக்கிணை சுதனுந்
திங்களா போக்கிலி யத்தில்
சேர்ந்திடிற் பிதாவி லதிகபுத் திரனுஞ்
செங்கதி ரோனுறும் பதிக்கே
நிறைந்தரு ளைந்தே ழொன்பது வியத்தி
னிலவுற நிலவுறு மனைதான்
நீடுநட் பாக்ஷி யுச்சமா யிருக்க
நிருபனு மதிதனைக் காண
உறைந்திடுந் தந்தைக் கதிகமாஞ் செல்வ
முள்ளபுத் திரனெனச் சொல்லும்
உலவுமம் மதியைச் சுக்கிரன் காணி
லுணர்வெகு போகவா னாமே.

இ-ள். பிங்கலனுக்குக் கேந்திரத்தில், திங்க ளிருந்தால், பிதாவுக்குக் குறைந்த புத்தித்தன்மையுள்ள புத்திரனும், சந்திரன் பணபரத்திலிருந்தால், தகப்பனுக் கிணையான மகப்பேறும், சந்திரன், ஆபோக்கிலியத்திலிருந்தால், தந்தைக்கும் அதிகத்தன்மையுடைய மைந்தனும், ஆதித்தனிருந்த விராசிக்கு, (5) (7) (9) (12) ஆமிடங்களில், அம்புலியிருந்து, அந்தமனை நட்பு ஆட்சி, உச்சமாயமைந்து, குருவும், சந்திரனைப்பார்த்தால், தந்தைக்குமேலான, சந்தானச் செல்வமுள்ள, புத்திரனென்றும், அந்தக் கங்குற்கிறைவனைச் சுங்கன், பார்த்தால், பிதாவைப்பார்க்கிலும், சதாசுகபோகங்களை யனுபவிப்பாரென்றும் சொல்லவேண்டும்—எ-று. 612

வே று.

போகமா மைந்தா மதிபன்லா பாதி பொருந்தியே மித்துரு வாக, வாகுசே ரைந்தா மதிபனுச் சனுமாய் வளம்பெறு சுபனு மே யாயின், மோகமாய் லாபத் தலத்தினி லிருக்க முறைதவி ராதபுத் திரர்கள், ஆகவே பலருண் டவருடன் கூடு மத்தனை புதல்வருண் டாமே.

இ-ள். அஞ்சாமிடத்ததிபதி, லாபாதிபதி, அதிநட்பாகக் கூடியிருந்தா லும், ஐந்தாமிடத்தோன், உச்சமாய், சுபனுயிருந்தாலும், லாபத்தானத்திலி ருந்தாலும், ஒழுக்கமுள்ள புத்திரராயுதிப்பார், ஐந்தாமிடத்தானோடு, எந்தக் கிரகங்கள், எத்தனைபேர்கள் சேர்ந்திருக்கின்றார்களோ அத்தொகைப்படி, புத்திரர்களுண்டாகுமென்க—எ-று. 613

ஆமெனு மைந்தா மதிபனு தித்த னணுகிலோ வெகுபிள்ளை யுளதாம், ஓமெனு மைந்தா மதிபனும் பாம்பு மொக்கவே யெட் டினிற் கூடில், தேமெனுந் தந்துப் புத்திர னுவன் றிருந்துமைந் தாதிப னுடனே, தோமெனும் பாம்பு மிரவியுங் கூடிற் றெருடர் மிரு கங்கள்போ லிருப்பன்.

இ-ள். ஐந்துக்குடையவனும், ஆதித்தனும் அணுகியிருந்தால், வெகு புத்திருண்டாம், அஞ்சாமதிபதியும், செம்பாம்பும் அல்லது கரும்பாம்பும், சேர்ந்து, எட்டாமிடத்திலிருக்கில், தத்துப்புத்திரனுண்டாம், ஐந்தாமதிபனு டன் சூரியன், இராகு, கேதுக்களுடன் கூடியிருந்தால், புத்திரனில்லாதவ னுய், மிருகங்கள் போலிருப்பவனுமாம்—எ-று. 614

இருந்திடு மிதுன லக்கின மாக யினியகோ லிடத்தினிற் கு சனும், பொருந்தியே யிருக்கி லிவனிவன் முன்னோன் புகழ்பெறு தந்தைமூ வருக்கும், வருந்திய விரோதம் விளைந்திடும் பொல்லா வஞ்சக ராவர்மா னிலத்தில், திருந்திப்படியல் லாமலே யிருக் கிற் றினமுற வாகிவாழ்ந் திருப்பர்.

இ-ள். உதயலக்கினம் மிதுனமாகி, துலாத்திற் செவ்வாயிருந்தால், இச் சாதகன், மூத்த சகோதரம், தகப்பன், இம்மூவருக்கும், ஒற்றுமையென் பது, சற்றுமிராமல், ஒன்றுக்கொன்று விரோதங்களுண்டாகிக் கொண்டே யிருக்கும், பொல்லா வஞ்சகராவர். இப்படிமீது இப்படி கிரகங்க ளில்லா விட்டால் எப்படியும் புகழச் சுகமாய் வாழ்ந்திருப்பார்கள்—எ-று. 615

வே று.

இருந்த பத்தா மிறைவனைந் தாதிபன்
பொருந்தி மித்துரு வாய்ப்புண் ணியனுமாய்ப்

பரிந்த வுத்தமர் வீட்டுறப் பாலனும்
வருந்தி டான்றனந் தேடிவ முங்குவான்.

இ-ள். பத்தாமிடத்தோனும், ஐந்தாமிடத்தோனும், மித்துருவாய், உத்தமராய், சுத்தமும், சுபர்வீட்டிலிருக்கச் சற்றும் வருத்தமில்லாமல், ஔருத்தமாய்ப் பொருள்தேடி, கருத்துடன், இல்லறதருமம், நடாத்தி வாழ்ந்திருப்பான்—எ-று. 616

வேறு.

வழங்கிய வைந் த்ராமாதி குசனுங் கூடி
மந்தனேக் குறவைந்தின் மருவி நிற்கில்
முழங்கிடவே தத்துபுத் திரனு மாவன்
முயலைந்தா மாதிகுசன் சனியம் சத்தில்
தழங்குசுன் பார்க்க நிற்கி லன்னி யர்கள்
தமரிடத்திற் போய்வளர்வன் சனியம் சத்தில்
அழுங்கிடவே யிரவிதா னேறி யைந்தில்
அருங்குழவி யிலையென்றே யறைய லாமே.

இ-ள். ஐந்தாமிடத்ததிபன், செந்தீவண்ணனுடன், கூடி, மந்தன்பார்க்க, ஐந்தாமிடத்தில் நின்றால், தத்துப்புத்திரனுவன், அங்காரகன், ஐந்தாமிடத்ததிபன், சனியங்கிஷத்தில், சனிபார்க்கநின்றால், அன்னிய சுற்றத்தாரிடத்திற்போய் வளர்வான், சனியம்சத்தில், சூரியனிருக்கப் பிறந்தவனுக்குப் புத்திரரில்லையென்று சொல்லவேண்டும்—எ-று. 617

வேறு.

நல்லதோ ரைந்தா மதிபதி யிரவி நற்சனி யங்கிசமேறி, அல்லலார் சனிகண் டிடவுமைந் திடத்தி லமர்ந்திடிற் பரவிஷயத்தால், வல்லமைப் புதல்வ னுளனென மொழிவர் மற்றுமைந் தாமிடந் தன்னில், சொல்லிய குசனுங் காரியங் கிசத்திற் சூழ்ந்திடக் கருச்சுரோ ணிதமாம்.

இ-ள். ஐந்தாமிடத்ததிபதி கிரகபதி, சனியங்கிசமேறி, சனிபார்க்கவும், அல்லது அச்சனி, ஐந்திலிருக்கவும், பரவிஷயத்தால், திறமுள்ள புத்திரனுண்டாம், என்று சொல்லுவர், ஐந்தாமிடத்திற் செவ்வாய், ஒவ்வாச்சனியங்கிஷம் பெற்றிருக்க, * கருச்சுரோணிதமாம்—எ-று. 618

ஆனலக் கினத்திற் சந்திர னிருக்க வாறினிற் சுங்கனுற் றிடவும்
தானுறும் புதல்வ னேகனு மிரவி சந்திர னிருவருங் கூடி

* சுரோணிதமென்பது, வீட்டுக்கு விலக்கம்.

ஊனமிலினிய கேந்திரத்திருக்கி லுரிமைசெய்யான் பிதாவினுக்கே
ஈனமின் மரண தகனகா லங்க ளிரண்டெனு முபயரா சிக்கே.

இ-ள். லக்கினத்திற் சோமனும், ஆறிற் காமனும், இருந்தால், ஒரே பிள்ளையாம், இரவிமதி, யிருவருங்கூடி, குற்றமில்லாமற் கேந்திரம்பெற்று, உபயவிராசிகளில் நின்றால், பிதாவுக்கு மரணதகனகாலங்களில், உரிமை, சம்க்கடன் செய்யாதவனவன்—எ-று. 619

வே று.

நல்லவர்பா ராதிருக்க வைந்தாம் வீட்டில்
நாடுமைந் தாமதிப னுடனண்ணி யேனும்
வல்லகரும் பாம்பிருக்க நாக சாப
வகையினான் மைந்தரில்லை மறுத்து நாகம்
ஒல்லையுடன் பிரதிட்டை செய்யின் மைந்தர்
உண்டாகு முயருங்கேந் திரகோ ணத்துள்
மல்லல்சுபக் கிரகத்தின் பார்வை யற்றால்
மைந்தரில்லை செபவோம வகையி னுண்டாம்.

இ-ள். ஐந்தாம் வீட்டிலும், அவ்வீட்டுக்கதிபனும், இராகுவுங்கூடிநிற்க, அதைச் சுபர்கள் பாராதிருந்தால், நாகதோஷத்தாற் புத்திரரில்லையாம், சீக்கிரத்தில், நாகப்பிரதிஷ்டைசெய்தால், புத்திராளுண்டாகும், கேந்திரகோணங்களில், நின்று சுபர்கள் பார்வையில்லாவிட்டால், புத்திரரில்லையாம், ஜெபம், ஓமம், செய்தால் மகவுண்டாம்—எ-று. 620

உண்டாமைந் தாம்வீட்டோ னாறா மாதி
உடன்கூடி நல்லோர்கண் ணுறாம னிற்க
அண்டாத சத்துருசா பத்தினாலே
ஆனதொரு மகவில்லை யைந்தாம் வீட்டில்
மிண்டாக வைந்ததி யிருக்க நல்லோர்
விழிபார்வை யறத்தீயோர் மிகவு நோக்கிக்
கண்டார்க ளெனிற்றெய்வ சாபத்தாலே
காளையர்க ளிலையோம கன்மஞ் செய்ய.

இ-ள். ஐந்தாம்வீட்டோன், ஆறாமிடத்தோனுடன்கூடி, சுபர்பார்வையில்லாதிருக்க, சத்துருசாபகாரணத்தினால், புத்திரரில்லையாம், ஐந்தாமிடத்தில், ஐந்துக்கதிபன், இருக்க, சுபர்கள் பாராதிருக்கப் பாவர்கள் பார்க்க, தெய்வசாபத்தினாலே, ஓமகர்மஞ் செய்யப் புத்திரரில்லையாம்—எ-று. 621

செய்யதொரு நாலிடத்திற் றீயோர் நிற்கச்
சேருமைந்தா மதிபனுடன் சனியுங் கூடப்

பையவே பன்னிரண்டா மிடத்திற் பாவர்
பற்றிநிற்கத் தாய்சாபம் பால ரில்லை
ஐயமற வோமங்கள் சபங்க டான
மன்புடனே செய்விக்கு மவர்த மக்குத்
துய்ய திரு மைந்தர்பல ருண்டா மென்று
சுருதிகலை யாகமங்கள் சொல்லுந் தானே.

இ-ள். நாலாமிடத்தில், தீயோர்நிற்க, ஐந்தாமிடத்ததிபனோடு, மந்தன் கூடியிருக்க, பன்னிரண்டாமிடத்திற் பாவர்கள், இருக்க, தாய்சாபத்தாற் சேய்களில்லையாம், சந்தேகமகல, ஓமங்கள், ஜெபங்கள், தானங்கள், செய்தால், பரிசுத்தமான, அழகிய பலபுத்திரர்கள், உண்டாகுமென்று, சுருதி கலையாகமங்கள், சொல்லுமாம்—எ-று. 622

வே று.

சொல்லு மிரண்டிற் பன்னிரண்டிற் சுபக்கோள் பாவர் மனையாயின்
வெல்லும் பாக்கி யாதிபதி வியத்தி லிருக்க வோரைந்தில்
நில்லும் பாவர் சன்மாதி நின்றே யத்த மனமாகி
ஒல்விற் கூடிற் குலநாச முண்டாம் புத்திரர் தானுமிலை.

இ-ள். சொல்லும் இல்லறமாகிய, இரண்டும், சல்லாப உல்லாச சயன மாகிய, பன்னிரண்டும், பாவர் வீடாய்ச் சுபக்கோட்களிருக்க, ஒன்பதா மிடத்ததிபதி பன்னிரண்டா மிடத்திலிருக்க, ஐந்தாமிடத்திற் பாவர்கள், லக்கினாதிபதியிவர்கள், அத்தமனமாய்க் கூடியிருக்கப் புத்திரரில்லாமற் குல நாசமுண்டாம்—எ-று. 623

தானுஞ் சன்ம வியமெட்டிற் சனிசேய் பாவ ருறநிற்க
மானே புதல்வர் தாமில்லை வளஞ்சேர் புந்தி சுக்கிரனும்
ஆன பத்தி லோரெட்டி லமரு மைந்தி லெட்டாதி
ஊன பாவர் சன்மாதி யுற்றே பற்றிற் புதல்வரிலை.

இ-ள். ஜென்மம், வியம், எட்டு, இவ்விடங்களிற் செவ்வாய் சனிமுத லியபாவர்கள், பொருந்தியிருக்கப்புத்திரர்களில்லையாம், சாமனும், காமனும், நேமமாய்ப்பத்து, எட்டாமிடத்திலிருக்க, ஐந்தாமிடத்தில், எட்டாமிடத்தோன், பாவர்கள், லக்கினாதிபதியிருக்கிற் புத்திரரில்லையாம்—எ-று. 624

புதல்வர் கார கன்புடத்திற் பொருந்து மைந்தா திபன்புடமாம்
இதனைக் கூட்டு மிராசிதனி லேத மற்ற குருவருங்கால்
மதலை தோன்றும் புடங்கூட்ட வருரா சியங்கி சைமட்டும்
சிதவின் மேட முதலெண்ணச் சேய்தான் பாவர் காண்சேதம்.

இ-ள். புத்திரகாரகனுகிய, பொன்னவன், புடத்தையும் ஐந்தாமிடத்ததிபன் புடத்தையும், கூட்டியவிராசியில் தாட்டிகமாய், குருவருங்காலம், புத்திரருற்பத்தியுண்டாம் மேலே கண்டபுடங்கூட்டிய விராசியங்கிசைமட்டும், மேடமுதலாயெண்ண, அவ்விராசியில், செவ்வாயாவது பாவராவது வருங்காலம், புத்திரசேதமுண்டாம்—எ-று. 625

வே று.

சேத மைந்திற் சிறந்த மதியுறில்
நீதி சேர்பிள்ளை யொன் றுறு நேமியில்
போது மற்றும் பிழைப்பது தானிலை
வேத முற்றவ ரோதின ரென்பவே.

இ-ள். ஐந்தாமிடத்திற் சந்திரனிருந்தால், நீதியுள்ளசாதுவென, ஒரே பிள்ளை தானிருக்கும், பூமியில்பெற்ற பிள்ளைகளில் மற்றபிள்ளைகள்,பிழைக்காதென்று, வேதங்கள்கற்ற பெரியோர்கள் சொல்லுவார்கள்—எ-று. 626

ஒன்ப தாம் வீட்டுக் குடையன் குருவாய்
இன்ப மாய்ச் சனி யெய்தியே நோக்கிட
அன்பு புந்தியோ டாதவ னெங்குறில்
பின்பு பிள்ளையை யன்னியர் பேணுவார்.

இ-ள். புங்கவன் தங்குமிடம், ஒன்பதாமிடமாகவும், அங்கவனைப்பங்கு பாதன் சேர்ந்திருந்தாலும், பார்த்தாலும், சண்டனும், பண்டிதனும் அண்டியெங்கேசேர்ந்திருந்தாலும், பிள்ளையை அன்னியர்கள் பேணிவளர்ப்பார்கள்.

ஐந்தின் வீட்டிற் கதிபதி பாவனுய்
வந்தா றெட்டுப் பனிரண்டின் மன்னரோ
டுந்தி னுலுஞ் சுபர்திட்டி யுற்றிடில்
நந்தும் பன்னிரண் டாண்டினி னுசமே.

இ-ள். சட்டாட்டம வியத்ததிபர்களோடு திட்டமாய், ஐந்துக்குடையவன், கெட்ட பாவனுய்ப் பொருந்தியிருந்தாலும், சுபர்பார்வை பெற்றுலும், ஆண்டு பன்னிரண்டில், அப்பிள்ளை மாண்டுபோகும்—எ-று. 628

வே று.

புத்திர* னேழா மாதி பொருந்துகேந் திரகோ ணத்தில்
உற்றிடப் பலவா னுகி யோங்குமா றதிபன் ருனுஞ்
சித்தமாய்க் கூடினுலுந் தரிசினைப் பார்வை யாலுஞ்
சுத்தமாய்ப் புதல்வ ரில்லை யெனமறை சொல்லுந் தானே.

---

* சுபர்பார்வையற்ருல், உடனே ஜாதகன் மரிப்பான் என்பதும், பொருந்தும்.

இ-ள். ஏழாமிடத்ததிபன், வாழுமிடத்திற்குக் கேந்திரதிரிகோணங்களில், ஐந்தாமிடத்தோன் பலத்திருக்க ஆறுமிடத்ததிபன்கூடினுலும், பார்த்தாலும், புத்திரரில்லையென்று, வேதங்கள் சொல்லும்—எ-று. 629

ஐந்தாம்பாவம்

சம்பூர்ணம்.

ஆறும்பாவம்.

சத்துரு பலன்.

கூறுமா றுமி டத்திற் குறித்திடும் பலன்க ளாறில்
வீறுநல் லோர்க டாமு மேவிடிற் றுயத் தார்கள்
பேறுடன் வழக்கிட் டுள்ள பெருந்தனம் பிரித்துத் தாவென்
றேறியம் பலத்தி னிற்ப ரெதிரிக்கே வலிமை யென்னும்.

இ-ள். ஆறுமிடத்துப் பலன்களைப் பூராய்ச் சொல்லுமிடத்து, ஆறுமிடத்திற் கூராய்ச் சுபர்கள் நின்றால், சோராத்தாயாதிகள், தீராவழக்கிட்டுப் பேராத்திரவியங்களைப் போராய்க் கொள்ளைகொள்ள நேராய், அம்பலமேறி வீராய்த்தெம்புடன் நிற்பார்கள், இதில் எதிரிகள் வலிமைபெற்று ஜெயிப்பார்கள்—எ-று. 630

என்னுமம் புவியி லுள்ள யாவர்க்கும் வலிய னுவன்
துன்னிய விகாத மேதான் சொல்லுவ ரெவர்கண் டாலும்
மின்னிய ஞாதி யோரை மெலியவே பண்ணி விப்பன்
கன்னியே யாறி னல்லோர் காதலிற் றிருந்தக் காலே.

இ-ள். வியாதிக்கிடமாகிய, ஆறுமிடத்தில், கியாதியுடைய சுபர்களிருந்தால், பூவிலுள்ள யாவருக்கும், வலியவனுவன், ஜாதகனைக் கண்டால் பேதகமாக, யாவரும் விவாதஞ்செய்வார்கள், ஞாதிகளை மெலியச் செய்பவனுமாவன்—எ-று. 631

காதலா றுமி டத்திற் கடினராந் தீக்கோ ணிக்கில்
ஓதுபொல் லார்க்குப் பொல்லாங் குரைத்துவே லவனைப்போல
எதிலார் தங்கட் கெல்லா மிடியென வலிய னுகிப்
பூதலத் தெவரும் வந்து புகழ்ந்திடப் பொருந்தி வாழ்வன்.

இ-ள். சட்டமத்தில், துட்டப்பாவர்களிருந்தால், கெட்டவனுக்குக் கெட்டவனும், நல்லவனுக்குநல்லவனுயுரைத்து, சூரபத்மனைவேறச்செய்த, சுப்பிரமணியக்கடவுளைப் போலச் சத்துருக்களை, வெற்றிகொள்ளும் வீரனுகிப்பூமியில் யாவரும் புகழும்படி பெ[illegible]ருந்தமுற்று வாழ்வான்—எ-று. 632

பொருந்து சிங் கத்தைக் கண்டு புடைபடு மிபமே போல
இருந்தசத் துருக்க ளெல்லா மிரந்துகை கூப்பி நிற்பர்
திருந்திய குபேரன் போலச் செல்வமுண் டாகப் பாரில்
வருந்திடா திருப்ப னறின் மருவுதீக் கோளி னாலே.

இ-ள். சத்துருத்தானமாகிய, ஆறுமிடத்தில் குத்திரமுள்ள பாவக்கிரகங்களிருந்தால், சிங்கத்தைக்கண்டு பங்கப்படும், யானையைப்போல சத்துருக்கள், யாசித்து, நேசித்து, பூசித்து, வணங்கியிருப்பார்கள், அளகாபுரியை அரசாளும் குபேரனைப்போல செல்வமுடையவனுமாய் எந்நாளும் வருத்தமில்லாதிருப்பவனுமாவன்—எ-று. 633

கோளினிற் கரிய நாகங் கூறுமா றிடத்தி னிற்கில்
தாளினிற் றளைகள் பூண்டே தடைபடுங் காவ லில்லான்
நாளுமே பலரும் போற்ற நண்ணிடுங் கீர்த்தி மானய்த்
தேள்முதல் விடங்கள் சற்றுந் தீண்டிடாத் திடவா னமே.

இ-ள். கடனுற்ற, ஆறுமிடத்தில், திடம்பெற்ற ராகுவிருந்தால், தளைபூணுதல், சிறையிருத்தல், என்னுங் கஷ்டமில்லாதவனும், பலர்களால்துதிக்குங் கீர்த்தியுடையவனும், விஷநோய் சற்றும், அணுகாத் திடகாத்திரதேகமுள்ளவனுமாவன்—எ-று. 634

திடமுறு மாறு மாதி பாவனுக் கேந்தி ரத்தில்
வடிவுறு நல்லோர் காண மருவின்மந் திரியு மாகிப்
படிமிசை யெவரும் போற்றப் பயில்பிர தாப னகிக்
கொடியவர் தமக்கு மிண்டே கூறுவன் குணவா னகும்.

இ-ள். தேகவாதைக்குப் பாகமாகிய, ஆறுக்குடையோன், சோகபாவியாய்க் கேந்திரத்தில், நல்லோர்காண நாடியிருந்தால், சொல்லுதற்கரிய வல்லபமுள்ள மந்திரியாயும், தொல்லுலகோர் துதிக்கும் பிரதாபமுள்ளவனயும், கொடியவர்களைப் படியும்படி தடியாற்றண்டித்துக் கண்டித்துக் கொண்டணைக்குங் குணவானயுமிருப்பன்—எ-று. 635

ரோக பலன்.

வேறு.

ஆறுகும் வீட்ட திபன் லக்கினத்தா திபனும்
அணிகதிரோ னுடன்கூடிற் சுரகண்ட மாகும்
பேறுயிந் துடன்கூடிற் சலகண்டங் குசன்பால்
பெருமையுடன் கூடிலா யுதவிரண கண்டம்
தூறுருஞ் சனிகூடில் நீசர்தன் னற் கண்டம்
சோரரால் வருங்கண்டஞ் சுக்ரன்கூ டிடினே

வீருகு மடவாராற் கண்டங்கண் டங்கேள்
விடவரவைக் கூடிலந்த விஷப்பாம்பா லேதான்.

இ-ள். ஆறும்வீட்டதிபதியும், சீராம்லக்கிஞதிபதியும், நேராம்பாரில், சூரியனுடன் கூடிஞல், சுரத்தாலும், சந்திரனுடன் கூடிஞல், ஜலத்தாலும், செவ்வாயுடன் கூடிஞல், ஆயுதத்தாலும், ரணத்தாலும், சனியுடன் கூடிஞல், நீசர்களாலும், சுக்கிரனுடன் கூடிஞல், சோரர்களாலும், பெண்களாலும் இராகு கேதுக்களுடன் கூடிஞல், விஷத்தாலும், பாம்பாலும் கண்டங்களுண்டாம்—எ-று. 636

அறந்திகழுஞ் சன்மநா லாதி தாமும்
அட்டமத்தா தியைக்கூடி ஞலு மாறில்
உறைந்திடினு முண்டியசி ரணத்தாற் கண்டம்
உற்றிடும்லக் கினவாக ஞதி யோடு
செறிந்துசனி யுறில்விஷபட் சணத்தாற் கண்டம்
செப்பியநா லாதியுடன் சனியுஞ் சேர்ந்து
பிறந்திடுலக் கினத்தாதி வீட்டி னிற்கப்
பெறில்விஷபட் சணகண்டம் பேசுஞ்சா தகமே.

இ-ள். லக்கினேசனும், சுகேசனும், ரந்திரேசனைக்கூடிஞலும், ஆறுமிடத்திலிருந்தாலும், அஜீரணத்தாற்கண்டமுண்டாகும், ஜென்மாதிபதி, வாகஞதிபதி யிவ்விருவருடன், சனிகூடிஞல், விஷபட்சணத்தாற் கண்டமுண்டாம், நாலாமிடத்தோனும் நீலனுஞ் சேர்ந்து, பாலன்பிறந்த லக்கினத்திலிருந்தால், தாலமதில் மேலாம் விஷபட்சணத்தாற் கண்டங்களுண்டாகும்—எ-று. 637

சாதகலக் கினத்தாதி வாக ஞதி
தம்மிருவ ருடன்பாம்புந் தானுங் கூடில்
ஓதியபந் தனமரணம் நல்லோர் வீடாய்
உதித்தலக் கினத்தாதி யோரே ழெய்த
நீதியுட னேழதிபன் லக்கி னத்துள்
நிற்கிலவன் ருதையுட னின்ருேன் ருயாம்
பேதையனு மரணம்பண் ணுவடா னென்று
பேசினர்சா தகநிபுணப் பெருமை யோரே.

இ-ள். இலக்கிஞதிபதி, வாகஞதிபதி, இவ்விருவரோடு தக்கஇராகு, (அல்லது) மிக்க கேதுகூட, அச்சாதகன் பந்தனத்தால் மரணமாம், இவர்கள் கூடிநின்றது, சுபர்வீடாய், ஜென்மலக்கிஞதிபதி, ஏழாமிடத்திலும், ஏழாமிடத்ததிபதி, ஜென்மலக்கினத்திலும், கிரகம்மாறி, நாலாமிடத்தானுடனே சேர்ந்திருக்கத் தாய்தந்தைக்கு நோய் அதிகரித்து அடுத்தடுத்து மாயுவார்களென்று, சோதிடங் கற்றவல்லவர்கள் சொல்லுவார்கள்—எ-று.

பெருமைசெறி யாறுகு மதிப னோடு
பெரும்பாவர் கூடிலக்கி னத்தி லெட்டில்
அருமையுட னுற்சித்தப் பிரமை கொண்டே
அங்கத்தி லும்விரண மாகும் பின்னும்
உரிமையுள்ள வவரவர்தா னங்க ளெட்டில்
உற்றிடிலிந் நோயென்றே யுரைக்க வேண்டும்
இருமைசெறி தந்தைதாய் பிராதா மைந்தர்
இவர்க்குமனை வியர்தமக்கு மெனச்சொல் வாரே.

இ-ள். பெருமை பொருந்திய, ஆறு மிடத்தானோடு, சிறுமை செய்யும் பெரும்பாவர்கள்கூடி, அருமையாம் லக்கினத்தில், (அல்லது) அட்டமத்தில், திட்டமாயிருக்கில், பித்தம்பிடித்த சித்தப்பிரமையும், சுத்த அங்கத்தில் மெத்த விரணமு முண்டாகும், இன்னும் இவர்கள், கூடி, எந்தெந்தத் தானங்களுக்கு, எட்டாமிடத்தில், எவரெவர்களிருக்கின்றார்களோ அவரவர்களுக்கும், இந்த நோயே உண்டாகும், (உரிமையுள்ளவர்,) தாய், தந்தை, சேய், தேவிமார், தம்பிதமயன் முதலியவர்களாம்—எ-று. 639

சொல்லியவா றுமிடத்திற் சுபக்கிரக மேவத்
துலங்கியவா றுதிபனுங் கேந்திரத்தி லிருக்க
நல்லவர்கண் டிடின்ஞாதிக் குபகாரஞ் செய்வன்
நாடுங்கா லவனுக்கோர் நலிவுகளு மில்லை
அல்லலறுந் தீக்கோளே யாயினன் மையதாம்
அடைந்திடுவ னெதிரிகளுக் கேவலிய னவன்
முல்லைமுகை தரளமணி வீமுருந்து போலும்
முறுவல்செறி கமலமலர் முகமுறுமின் னாளே.

இ-ள். முல்லையரும்பும், முத்தூரத்தினமும், புள்ளின் இறகினடிபோன்ற பல்லையும், மெல்லிய, தாமரைமலர்போன்ற முகமும், உடையபெண்ணே, ஆறுமிடத்திற் சுபக்கிரகம், மேவ, அவ்வாறுமிடத்ததிபன் கேந்திரஸ்தானங்களிலிருக்க, அதைச் சுபக்கிரகங்கள், பார்க்கப்பெற்றிருந்தால், பங்காளிகளுக்கு, உபகாரஞ்செய்பவனும், ஆய்ந்துபார்க்குமிடத்து, இச்சாதகனுக்கு துன்பங்களுமில்லையாம், ஆறுமிடத்தில், பாவக்கிரகங்களாயின், நன்மையடைந்திடுவன், எதிரிகளுக்கும், வலிமையுடையவனா யிருப்பன்—எ-று.

அலி பலன்.

வேறு.

இரவியுஞ் சசியு மொருவருக் கொருவ ரிசைந்துபார்த் திடிலலி யாகும், பரவிய சனியும் புதனுமே யந்தப் படிவிழி நோக்குறி

லவியாம், வரவிடு செவ்வா யிரட்டையொற் றையினில் வந்துசூ ரியனுடன்மருவ, விரவிய மதியா ணங்கிசத்தேற வெள்ளிவீ டாகவு மலியாம்.

இ-ள். உதயனும், உடுபதியும், ஒருவருக்கொருவர் நோக்கினாலும், மந்த னும் புந்தியும், ஒருவருக்கொருவர் பார்த்தாலும், செவ்வாய், * இரட்டை யொற்றையில் நாட, அவனுடன், ஆதித்தன் கூட, ஆதித்தன் ஆணங்கிஷ மேற, அதுவும், சுக்கிரன்வீடா யிருக்கப்பிறந்தவன், அலியாவன்—எ-று.

ஆகிய சன்மத் தினின்மதி யிருக்க ஆதவன் புதன்சசி மூவர், வாகுசே ரிரட்டை ராசியி லிருக்க மற்றுமிம் மூவர்க டமையும், மோகமா யங்கா ரகனுமே நோக்க முகின்முலை மாதரை யிகழ்ந் தே, ஏகமாங் குறியத் தண்ணர்க ளாவ ரென்பது திண்ணமென் றுரைக்கும்.

இ-ள். ஜென்மலக்கினத்திற் சந்திரனிருக்க, விண்மணி, சாமன், சோ மன், மூவர்களும், மிதுனத்திலிருக்க, இவர்களைச் செவ்வாய்பார்க்க, பெண் கள், இகழக்கூடிய, குறியின் தன்மை பொருந்தியவர்களாவார்கள், என்பது உறுதியாம்—எ-று. 642

ஆறும்பாவம்

சம்பூர்ணம்.

ஏழாம்பாவம்

களத்திர பலன்.

சாதமுறுங் காலையினிற் சுக்கிரன்றன் னோடு
தக்கபிரகஸ் பதிகூடில் விப்பிரர்கன் னியராம்
சோதிரவி குசன்கூடில் க்ஷத்திரியர் மயிலாம்
சோமனார் சுதன்கூடில் வைசியர்குலத் தோகை
பூதலமேற் சனிகூடிற் சூத்திரர்கன் னிகையாம்
பொருமிருபாம் புடன்கூடிற் புலையர்குலத் துதித்த
பேதையர்க ளுடன்கூடி யனுராகம் புரிந்து
பிரியாம லிருப்பரெனப் பெறும்வரிசை பெறவே.

இ-ள். ஜென்மலக்கினத்துக்கு, ஏழாமிடத்திற் சுங்கனோடு புங்கவன், கூடினால், பிராமணப்பெண்ணும், பிங்கலன், மங்கலன், கூடில், க்ஷத்திரியப் பெண்ணும், புதன்கூடில், வைசியகுலப்பெண்ணும், சனிகூடில், சூத்திரப்

* இரட்டை யொற்றை என்பது, மிதுனம், துலாம் கும்பம்.

பெண்ணும், ராகுகேது கூடில் புலையர்குலப்பெண்ணும், ஆகிய இவர்களு டன்கூடி, அனுராகம்புரிந்து தனவரிசைபெற்று, மனமொருமித்துப் பிரி யாமலிருப்பர்களென்பதாம்—எ-று.

643
வரிசைபெறு களத்திரத்தா னுதிபனைக் கூடி
வாழ்கிரக மெத்தனையுண் டத்தனைமின் மணப்பன்
உரியகளத் திரத்துக்கா ரகனதிபன் சுபமாய்
உற்றிடினற் கோள்காண்கி லுத்தமமற் றிவர்தாம்
அரியிடத்தும் வியமுறினும் பாவர்களே காண
அமர்ந்திடினு மத்திமமா மரவுசெவ்வா யிருவர்
பிரியமுடன் களத்திரத்துற் றிடின்மடவார்க் கானி
பெருகுசுபக் கோணோக்கம் பெற்றிடினுத் தமங்கள்.

இ-ள். களத்திரஸ்தானாதிபனைக்கூடிய கிரகம், எத்தனையோ, அத்தனை பெண்களை விவாகஞ்செய்வான், களத்திரகாரகன், களத்திராதிபன், இவர் கள், சுபர்களாக சுபக்கோள்காண, உத்தமமாம், இவர்கள், சிம்மத்திலும் பன் னிரண்டாமிடத்திலும், பாவர்கள், பார்வைபெற்றிருந்தாலும், மத்திமமாம், இராகு, கேது, செவ்வாய், களத்திரத்தானத்திருந்தால், பெண்களுக்குத் தோஷமாம், சுபக்கிரகங்கள் பார்த்தால், உத்தமமாம்—எ-று. 644

வேறு.

களத்திர லக்கி னாதி கலந்துதம் மனையி னிற்கில்
கிளர்த்தியாய்ப் பலரைக் கூடிக் கிடைப்பதொன் றேவி வாகம்
களத்திர குடும்பத் தாதி கனபாவர் வெள்ளி கூடில்
வளத்தியாய் மூன்றான் றாறின் மருவிடில் மனைவிக் கீனம்.

இ-ள். களத்திராதிபன், லக்கினாதிபன் கலந்துகூடி நாலாமிடத்தில் நாடிநிற்கில், பலபெண்களைக் கூடியிருந்தாலும், ஒரேபெண்ணைக் கல்யாணஞ் செய்வான், களத்திராதிபன், குடும்பாதிபன், இவர்களுடன், பாவர்களும், சுக்கிரனுங்கூடினாலும், மூன்றாறுலக்கினம், இவைகளிருந்தாலும் மனைவிக் குக் குற்றமுண்டாம்—எ-று.

645
ஈனமி லக்கி னாதி யேழாமா திபனுங் கூடித்
தானமாம் வியமா றெட்டிற் றானுறில் விவாக மில்லை
ஆனவே ழிடங்கள் சுத்தி யாயேழா மதிப னோடு
ஊனமில் பலர்கள்கூடி லொருத்தியென் றுரைவெள் ளிக்கே.

இ-ள். லக்கினாதிபனும், ஏழுக்குடையவனுங்கூடி மறைவுஸ்தானமா கிய, ஆறு, எட்டு, பனிரண்டாமிடங்களிலிருந்தால், விவாகமில்லையாம், ஏழா மிடம் சுத்தமாய், அவ்வதிபதியோடு, குற்றமில்லாத பலகிரகங்கள், கூடினு லும், சுக்கிரற்குமட்டும், ஒரேமனைவியென்று சொல்லவேண்டும்—எ-று.

வெள்ளிசே யேழி னிற்கில் விதவைமா தரைம ணப்பன்
ஒள்ளிய மதிசே யாறு மதிபனோ டுற்று நான்கில்
தெள்ளிதாய் நிற்கி லேனுஞ் சென்மமோன் பானு லாறும்
வள்ளலிந் நால்வர் கூடின் மற்றுமோர் விஷய முண்டாம்.

இ-ள். சுக்கிரனும் வக்கிரனும், களத்திரஸ்தானமாகிய, ஏழாமிடத்திலிருந்தால், விதவைஸ்திரீயை மணஞ்செய்துக்கொள்வான், சோமனும் பூமனும், ஆறுமிடத்ததிபனோடுகூடி, நாலாமிடத்திலிருந்தாலும், ஜென்மம், ஒன்பது, நான்கு, ஆறு இவ்விடத்ததிபர்களாகிய நால்வருங் கூடிநின்றாலும், மற்றுமோர் விஷயமுண்டாம், (மற்றுமோர் விஷயமென்பது) இன்னும் இகழ்ச்சிக்குரியதைக் காட்டுவதாம்—எ-று. 647

ஓரேழிற் பாவர் நிற்கக் களத்திர ரோக முண்டு
சூரிய னுடனே பாம்பு சூழ்ந்திரண் டிடத்தி னிற்கில்
நாரிக்கும் வெகுநோய் காட்டு நவிலிரண் டாமி டத்தைக்
கூரியர் பார்க்கி னிற்கி னேய்கொளுங் குடும்ப மேழை.

இ-ள். ஏழாமிடத்திற் பாவர்களிருந்தால், வாழாதிருக்கும், ரோககளத்திரமாம், கதிரவனோடு, கரும்பாம்பு, செம்பாம்பு, கலந்து இரண்டாமிடத்திலிருந்தால் வெகுநோயுள்ள களத்திரமாம், அவ்விரண்டாமிடத்தைப் பாவர்கள் பார்த்தாலும், இருந்தாலும், நோயுள்ளபெண்ணும், அதுவும் ஏழைக்குடும்பத்திற் பிறந்த, ஏந்திழையாம்—எ-று. 648

வேறு.

ஏழ்வீட்டி னிற்கதிபன் சரத்தி னிற்கில்
இருமனைவி திரமதனி லிருக்க நன்றே
தாழ்விலா வுபயத்தி லிருக்கின் மாதர்
சாவின்றிப் பலருளராந் தானத் தாதி
வாழிடநோக் கியகோளாற் பலன்கள் கூடும்
மற்றமிலக் கினத்தாதி சுங்கன் வீட்டில்
சூழிகினுஞ்சுங் கனைக்கூடச் சுங்கன் பார்க்கத்
தூயஸ்திரீ லோலனென வேசொல்ல லாமே.

இ-ள். ஏழிடத்ததிபன், வாழிடம், சரவிராசியாகி அதில்நின்றால், இரண்டு களத்திரமாம், திரவிராசியாகி, அதில் நின்றால், ஒரேகளத்திரமாம், உபயவிராசியாகி அதில் நின்றால், சிலதருணத்திலுதவிசெய்யும் மாணமில்லாத பலகளத்திரங்களுண்டாம், தானதிபன், இருக்கின்ற இடம், பார்க்கின்ற கோட்களின்திடம், இவைகளாற், பலன்கள், அதிகமாம், லக்கினதிபன், சுக்கிரன்வீட்டிலிருந்தாலும், அல்லது கூடினாலும், அல்லது சுக்கிரன் லக்கினதிபனைப் பார்த்தாலும், ஸ்திரிலோலனென்று சொல்லவேண்டும்.

வேறு.

சொல்லு மேழா மிடத்திந்து சுக்கிரன்
மெல்ல மேவினு மிக்க சனிகுசன்
அல்லல் தீர வுறின்மனை யாளுமே
இல்லை வந்ததே வில்லைபு தல்வரே.

இ-ள். சொல்லும் ஏழாமிடத்தில், சல்லியன் அல்லோன், வல்லபமாயிருந்தாலும், நிலமகன், முதுமகன், நின்றாலும், களத்திரமில்லையாம் ஒருக்கால் வந்திருந்தால், அக்களத்திரத்துக்குப் புத்திரரில்லையாம்—எ-று.

வேறு.

இல்லெழு மிரண்டா மாதி சுக்கிர னிவர்கண் மூவர்
பொல்லரோ டெய்தி யாறி லெட்டிற்பன் னிரண்டிற் போந்து
சல்லாப முடனின் றோர்க டம்முடன் பாவர் கூடில்
சொல்லாருந் தொகைக்கு மாலை சூட்டுவன் றோகையில் லாள்.

இ-ள். களத்திரகுடும்பஸ்தானாதிபதிகளுடன், களத்திரகாரகனாகிய, சுக்கிரன், இம்மூவரும், பாவர்களோடுகூடி, ஆறு, எட்டு, பன்னிரண்டாமிடங்களிலிருந்து ஏழு, இரண்டாமிடம், சுக்கிரன்வீடாக, அவ்வீட்டைப் பாவக்கிரகங்கள் கூடியிருந்தாலும், நிறைந்த கிரகங்களின், தொகைப்படி, அனேக தாரங்களைக் கல்யாணஞ்செய்தாலும், ஒருகளத்திரமும் ஸ்திரமில்லையாம்.

நின்றிரண் டேழா மாதி நிறைந்தகேந் திரகோ ணத்தில்
ஒன்றியே யிருக்கி லேக தாரமா முற்ற வன்னோர்
வென்றிகொள் பிருகு பாவ ருடன்கூடி மெய்யா றெட்டில்
குன்றிடா திருக்கில் வேசைக் காந்தனுங் கூறுங் காலே.

இ-ள். இரண்டேழுக்குடையவர்கள் திரண்டு கேந்திரகோணங்களிற் சேர்ந்திருந்தால் ஏகதாரமாம், அவர்கள், பாவருடனும், சுக்கிரனுடனுங்கூடி, ஆறு, எட்டில், வீறுடன், பலத்திருந்தால், வேசைகளுக்கு, ஆசைத்தாசனுவானெனச் சொல்லுவார்கள்—எ-று. 652

கூறிய வேழா மாதி குடும்பாதி பதியின் னோர்கள்
ஏறியே திரிகோ ணத்துங் கேந்திரத் தினிலும் நிற்கப்
பேறுட னவர்தம் வீட்டிற் பிரியமா யிருக்கத் தானும்
வேறுமோர் தாரம் வேண்டான் விரும்புவ னேக தாரம்.

இ-ள். களத்திராதிபதி குடும்பாதிபதி இவர்கள் கேந்திரகோணங்களில் ஏறிநிற்க, அல்லது சொட்சேத்திரமாயிருக்க, வேறுதாரங்களை விரும்பாமல், ஒரேதாரத்தை விரும்புவான்—எ-று. 653

தாரகா ரகனு மேழா மதிபனுந் தனித்துங் கூடி
ஆரவே பாவர் மத்தி யத்துற வேழிற் பாவர்
சேரவே யிவரைப் பாவர் செறியநோக் குறவி ருந்தால்
பாரியர் தனக்க ரிட்டம் பண்ணுமென் றறிந்து கொள்ளே.

இ-ள். தாரகாரனும், தாரவீட்டுக்குடைய, ஏழாமிடத்ததிபனும், தனித்தும், அல்லது, கூடியும், பாவர்களின் மத்தியில் நின்றாலும், ஏழாமிடத்திற் பாவர்கள் நின்றாலும், பாவர்கள், இவர்களைப்பார்த்தாலும், தாரங்களுக்குத் தோஷமுண்டாகுமென்று அறிந்துகொள்வாய் என்பதாம்—எ-று. 654

கொள்ளுநற் காரி வெய்யோன் கூடிக்கன் னியிலே நிற்கத்
தெள்ளிதா யந்த வீடு சன்மலக் கினமே யாக
மெள்ளவே யரசன் றானு மீனத்தின் மேவி நிற்கத்
துள்ளிய மனைவி தானுந் துன்பமுற் றரிட்ட மாவள்.

இ-ள். காரியுஞ் சூரியுங்கலந்து கூடிக்கன்னியாராசியில்நிற்க, அதுவே, ஜென்மலக்கினமாக வீரியகுரு, அதற்கேழாமிடமாகிய மீனத்திலிருக்க, மனைவி, துன்பத்தோடு தோஷமடைவாள், என்பதாம்—எ-று. 655

ஆமிலக் கினத்துக் கேழி லம்புலி தனக்கு மேழில்
பூமலி நல்லோர் பார்வை பொருந்திடி லுண்டாம் பெண்டீர்
தீமையாங் கடின பாவர் திட்டியுண் டான போது
மாமினை யார்க டம்மை மணந்திடா வஞ்ச னாமே.

இ-ள். ஜென்மலக்கினத்துக்கும், சந்திரலக்கினத்துக்கும், ஏழாமிடங்களில், சுபர்பார்வையுற்றிடினும், அங்குதங்கியிருந்திடினும், களத்திரமுண்டாம், கொடிய பாவர்கள், நெடியபார்வை யுண்டானல், பெண்களைக்கல்யாணஞ் செய்யாதவனும், வஞ்சகனுமாவன்—எ-று. 656

ஆமெழா மதிபன் தார காரக னீச மாகித்
தாமிவர் வியமா றெட்டிற் றானுற மனைவிக் கீனம்
வாமசுக் கிரன்வாழ் வீட்டின் மன்னவன் வியமா றெட்டில்
ஏமமுற் றிருக்கிற் கொண்ட மனைவியர் யார்க்கு மீறே.

இ-ள். களத்திரஸ்தானதிபனும், களத்திர காரகனும், நீசமடைந்து, மறைவுஸ்தானமாகிய, ஆறு, எட்டு, பன்னிரண்டில் நின்றால், மனைவிக்குத் தோஷமாம், சுக்கிரனிருக்கின்ற வீட்டதிபன், ஆறு, எட்டு, பன்னிரண்டாமிடத்தில், இருக்கில், தான்கொண்ட களத்திரங்களெல்லாம், மண்டலத்தில் வாழாமற் சண்டனுருக்கு, ஏகுவார்களாம்—எ-று. 657

ஈறிலா வேழா மாதி யேதமாம் பாவர் வீட்டில்
தூறதாய் நிற்கிற் பார்க்கிற் கலியாணந் தூர தேசம்

வீறதாங் களத்தி ராதி சுபாங்கிச மேவிற் கிட்டல்
பேறுடன் றிசைக ளேழா மதிபனைப் பிடித்துச் சொல்வாம்.

இ-ள். ஏழாமிடத்ததிபன், குற்றமுள்ள பாவர்கள் வீட்டில், நிற்க, அல்லது பார்க்க, தூரதேசத்திற் கல்யாணமாம், களத்திராதிபன், சுபாங்கிசமேறில், சமீபத்திலுமாம், களத்திரம் வருந்திசைகளை, ஏழாமதிபனைக்கொண்டு சொல்லவேண்டும்—எ-று. 658

வாமசூ ரியன் கிழக்கு மன்னுசுக் கிரற்கு வன்னி
பூமிசேய் தனக்குத் தெற்குப் பெரும்பாம்பு நிருதி யாகும்
தாமத சனிக்கு மேற்கு சசிக்குவா யுவின்றிக் காகும்
நேமமாம் வடக்குப் புந்தி நிருபற்கீ சான திக்கே.

இ-ள். களத்திரஸ்தானாதிபன், சூரியனாகில் கிழக்கு, சுக்கிரனாகில், தென்கிழக்கு, செவ்வாயாகில், தெற்கு, பாம்பாகில் தென்மேற்கு, சனியாகில், மேற்கு, சந்திரனாகில் வடமேற்கு, புதனாகில், வடக்கு, குருவாகில், ஈசானியதிசையாம்—எ-று. 659

வேறு.

திக்கென வேழோன் வியத்திலா றெட்டிற்
செறிந்ததி பாவனா யிருக்கத்
தக்கவன் றனைப்பார்த் தவர்களத் தனையுந்
தாரமாங் களத்திரா திபனும்
ஒக்கவே பாவ ருடனுற வேழி
லொருகரும் பாம்புற வதற்கு
மிக்ககேந் திரத்திற் பாவர்பார்த் திருக்க
விரும்புவன் நாலுகாற் பெண்ணே.

இ-ள். ஏழாமிடத்ததிபன் பாவனாய், மறைவுஸ்தானமாகிய, ஆறு, எட்டு, பன்னிரண்டாமிடத்திலிருக்க, அவனைப்பார்த்தவர்கள் தொகைப்படி களத்திரதொகையாம், களத்திராதிபன், பாவருடன்சேர, ஏழாமிடத்தில், ராகுவிருக்க, அதற்குக் கேந்திரத்தில் பாவர்கள் பார்த்துநிற்க, நாலுகாலுள்ள மிருகப்புணர்ச்சியுள்ளவனும்—எ-று. 660

பெண்ணிசைந் திடுமே ழாமிடத் ததிபன்
பேரொளிக் கதிருடன் கூடில்
எண்ணிசைந் திடுமெட் டாறினில் வியத்தி
லிருக்கில்வா லிபத்திலே மனையாள்
விண்ணிசைந் திடுவள் களத்திரா திபனு
மிக்கநற் கோளுடன் கூடில்

பண்ணிசைந் தருளு மனைவிதீக் கோளைப்
பார்த்திடிற் பாவியா யிருப்பள்.

இ-ள். ஏழாமிடத்ததிபன், சூரியனுடன்கூடில் ஆறு எட்டு, பன்னிரண்டா மிடங்களிலிருக்கில், வாலிபத்திலே கொண்டமனையாளிறந்து போவாள், களத்திராதிபன், சுபக்கிரகங்களுடனேகூடி, நாலுஎட்டாமிடத் ததிபர்களைப் பார்த்திடில், பாவகளத்திரமாம்—எ-று. 661

பாவியாஞ் சனியே ழாதிப னாகிப்
பன்னிரண் டாறிரு நான்கில்
மேவிடில் விதவை நாரியைச் சேர்வன்
மிக்கவே ழாமிடத் ததிபன்
நாவிரண் டான பாம்பொடுங் கூடி
நாடியெட் டாறினில் வியத்தில்
தாவியே யிருக்கி லீனமாங் குலத்துத்
தையலைச் சேர்வனென் றுரைக்கும்.

இ-ள். ஏழாமிடத்ததிபன் சனியாகி மறைவுஸ்தானமாகிய, ஆறு, எட்டு, பன்னிரண்டாமிடங்களில் நிற்கில், விதவைப்பெண்களைச் சேருவான், ஏழாமிடத்ததிபன் பாம்புடன் கூடி, ஆறு, எட்டு, பன்னிரண்டாமிடங்களிலிருக்கில் ஈனகுலப்பெண்களைச் சேருபவனுமாம்—எ-று. 662

உரைக்குமே ழாதி காரிவாழ் மனையி
லுற்றிடக் காரிதான் பார்க்க
இருக்கவே ழிடத்துக் கொன்பதா மதிப
னெட்டிலா யினுஞ்சனி வீட்டில்
பெருக்கவே யிருக்கி லவன்குல மனையைப்
பிறர்தமைச் சேர்ந்தவ ரவர்கள்
பொருள்களை வாங்கி வரச்சொலிப் புசிக்கும்
புண்ணிய வானெனப் புகலும்.

இ-ள். ஏழாமிடத்ததிபன், சனிவீட்டிலிருந்து சனிபார்வை பெற்றிருக்க, ஏழுக்கு ஒன்பதாமிடத் ததிபன், எட்டாமிடத்திலாவது, சனிவீட்டிலாவது, இருந்தால், ஜாதகன், மனைவியை அன்னியரிடஞ்சேர்ந்து அவரவர்களிடம், பொருள்களை வாங்கிவரும்படிசெய்து உண்ணுகின்ற புண்ணியமுடையவனென்று சொல்லுமாம்—எ-று. 663

புகலுமே ழாதி பிரபல னாகிப்
பொருந்துமித் துருக்களைக் கூடி
இசலிலா லாபத் தலத்தினி லிருக்க
விருந்தபேர் தொகைப்படி மனைவி

திகழுட னுளதே யந்தலா பந்தான்
திரமுப யங்களே யாயின்
சுகமுட னிருப்பள் சரமெனிற் சிறிது
தோகையர்க் கரிட்டமே சொல்லும்.

இ-ள். சத்தமாதிபதிமெத்தப்பலவானுகி, மித்துருக்களைக்கூடி, லாபஸ்தானத்திருந்தால், இருந்ததொகைப்படி சிறந்த மனைவியர்களுண்டாம் அந்த லாபாதிபன், திர, உபயராசிகளாயிருந்தால், சுகமுள்ளதாரமாம், சரவிராசியாயிருந்தால், சிறிதுதோஷமுள்ள தாரமாமென்று சொல்லும்—எ-று. 664

சொல்லிய கன்னி லக்கின மாகச்
சோமனுஞ் சனியுங்கேந் திரத்தில்
மெல்லவே யிருக்கச் சதமனை வியரை
மிகுமணம் புரிந்துபூ பதியாய்
வல்லவ னுவ னேழிற்சுக் கிரனும்
மருவுசன் மத்தினிற் குருவும்
அல்லலற் றிருக்கின் மனைவிய ரனேக
ரவரைரட் சிக்கவு மாட்டான்.

இ-ள். சொல்லுதற்குரிய மெல்லியராகிய, கன்னியாலக்கினமாக, அல்லோனுகிய சந்திரனும் வல்லோனுகிய சனியுங், கேந்திரத்திலிருக்க நிலையான பெண்களை மணம்புரிந்து பூபதியாகி வல்லவனுவன், ஏழாமிடத்திற் சுக்கிரனும், ஜென்மத்திற் குருவும், துன்பமற்றிருந்தால், அதிகக்களத்திரமும்பெற்று, அவர்களை ரக்ஷிக்கமாட்டாதவனுவன்—எ-று. 665

மாட்டினிற் கிறைசுக் கிரன்குசன் சோமன்
மன்னவ னிரவியோ டைவர்
ஈட்டியோ ரிடத்திற் கூடிடின் மனைவி
யிலாமலே பிணியனுய்த் திரிவன்
நாட்டுமிந் திரவி புதன்சனி வெள்ளி
நயக்துறின் மனைவிமக் களையும்
ஓட்டிவிட் டேதே சாந்தரந் தன்னி
லுறுபிணி யுடனுலேந் தலைவன்.

இ-ள். எருதுராசிக்குடைய பிருகுவாகிய காமன், பூமன், சோமன், பீதகன், ஆதவன், ஆகிய ஐவர்களும், ஓரிடத்திற் கூடியிருந்தால், மனைவியில்லாமல், பிணியாளனுய்த் திரிவான், சோமன் சூரியன், சாமன், சனி, காமன், சேர்ந்திருந்தால் மனைவிமக்களையுந் துணிவாய்த் துறத்திவிட்டு தேச தேசங்களில் வாசஞ்செய்து, பிணியோடு சங்கடப்பட்டுத் திரிவான்—எ-று.

அலைவறுஞ் சன்மத் தாதிபன் செறிந்த
வங்கிசா திபன்றன தகத்தில்
நிலைமையா மனைவி குருவருங் காலம்
நிச்சயம் மணம்புரிந் திடுவன்
குலமுறுஞ் சன்மந் தனக்குமோ ரேழாம்
ராசியங் கிசத்தினிற் குருவும்
பலமுட னேவந் தணுகிய போதும்
பாரியாய்க் கொள்வனற் பெண்ணை.

இ-ள். ஜென்மலக்கினாதிபதி யிருந்த, அங்கிஷத்துக்குடையவன், வீட்டில், குருவருங்காலம், விவாகஞ்செய்வான், லக்கினத்திற்கு, ஏழாமிராசியங்கிசத்திற் குருபலத்துநிற்கின்ற காலத்தும், நல்லபெண்ணையே களத்திரமாகக் கொள்வான்—எ-று. 667

வேறு.

பெண்கொளுங் காலஞ் சந்திர னிருந்த
பெரும்பதிக் கிறைவனற் புடமும்
பிறையுறை மனைக்கே ழாமிடத் ததிபன்
பெற்றநற் புடத்தையுங் கூட்டப்
பண்கொளு மெந்த ராசியோ வந்தப்
பதியிலப் பதிதிரி கோணம்
பற்றியே யரச னுற்றிடு காலம்
பயின்மணம் புரிவனக் குருவும்
எண்கொளு முச்சாங் கிசம்பெறின் மனைவி
யினியளீர்ங் கோதையுஞ் சிறப்பாம்
இரணியன் றனுவாங் கிசத்துறின் மனைவி
யிரண்டுமீ னங்கிச மேறில்
தண்கொண்மூன் றுமித் திராங்கிசத் தொருத்தி
சத்துரு வங்கிச மேறில்
தையனேய் நீசாங் கிசத்தினி லரசன்
றரிக்கிலீ னங்குலக் கொடிக்கே.

இ-ள். திருமணஞ்செய்யுங்காலம், செப்பும் விபரம், பெருமைபெற்ற, சந்திரனிருந்தவீட்டதிபன் புடத்தையும், அவனிருந்தவீட்டிற் கேழாமிடத்ததிபன் புடத்தையும், கூட்டவரும் இராசி எதுவோ? அவ்விடத்தும், அதற்குத் திரிகோணத்தும், குருவருங்காலம், மணம்புரிவான், அந்தக்குருவும், உச்சாங்கிஷமேறியிருக்கில் இனிமையும், சிறப்பும், பொருந்திய பெண்ணும்,

குருதனுவாங்கிஷமேறில், இரண்டுகளத்திரமாம், மீனங்கிஷமேறில், மூன்று களத்திரமாம், மித்துருவாங்கிஷமேறில், ஒரேகளத்திரமாம், சத்துருவங் கிஷமேறில், நோயுள்ள களத்திரமாம், நீசாங்கிஷமேறில், மனைவிக்குக்குற்ற முண்டாம்—எ-று. 668

கொடியிடை யாய்கே ளிரண்டிடத் ததிபன்
குணகுண காரநற் புடத்தில்
குலவிம கண்டன் புடத்தினை வாங்கிக்
குறித்தரா சியிற்குரு வருநாள்
துடியிடை மனைவிக் கரிட்டமா மின்னுஞ்
சொல்லிரண் டாதிபன் புடத்தில்
சூழ்ந்திடுங் குளிகன் புடந்தனை யெடுத்துத்
தோன்றிய ராசியிற் சனியும்
வடிவுடன் வருநாள் களத்திரந் தனக்கு
வருநிரி யாணமென் றுரைப்பர்
மத்தின மேழா மதிபதி புடத்தில்
வருகால மிருத்துவை யெடுக்கின்
பிடிபடும் ராசி யந்தரா சிக்கே
பெற்றிடு மாதாமந் நாளில்
பிறைநுதற் றிலத முகமதி கருங்கட்
பெண்ணணங் கேயெனப் பேசே.

இ-ள். இந்திரவில் நுதலும், சிந்தூரத் திலதமும், சந்திரவதனமும், அந்தகனம்புபோல், வந்தமர்விழியும் கன்னல் மொழியும், மின்னலிடையு முள்ள பெண்ணே கேட்பாயாக, இரண்டாமிடத்ததிபன், குணகுணகாரப் புடத்தில், எமகண்டன் புடத்தைக்கழித்துக் கண்டராசியில், குருவருங்கா லம், மனைவிக்குத்தோஷமாம், இன்னும், இரண்டாமிடத்ததிபன் புடத்தில் குளிகன் புடத்தைக் கழித்துக் கண்டராசியிற் சனிவருங்காலமும், மனையா ளுக்கரிட்டமாம், ஏழாமிடத்ததிபன் புடத்தில், அவமிருத்து புடத்தைக் கழித்து, வரும் இராசி எதுவோ அந்தமாதத்தில், அந்தவாரமே, மேற்சொ ன்ன களத்திரம், தோஷமாகுமென்று சொல்லவும்—எ-று. 669

பேசிய விரண்டா மிடந்தனி விரவி
பெரிதுறில் விடம்புசித் திடுவள்
பிறைகுறைந் திருக்கிற் சலத்தினுற் கண்டம்
பின்குச னுறிலனல் குளிப்பள்
பாசமாம் புந்தி பாவரைக் கூடிற்
பசிதனை பொருத்தொறுத் திருப்பள்
பாவரை யரசன் கூடிடின் மகிழ்நன்
பரிகலந் தனைவெறுத் திடுவள்.

நேசமாம் பிருகு பாவரைக் கூடி
நின்றிடில் விடம்புசித் திடுவள்
நிறைசனி யிருந்தால் வியாதியா யிருப்ப
ளீண்டதோர் பாம்பிரு வரையும்
தேசுடன் கூடிற் பாசபந் தத்தாற்
சீவனை யொழிக்கவே துணிவள்
தெரிந்தநல் லோர்கள் பார்வையுண் டாயின்
றீர்க்கசீ வன்பெறுந் திருவே.

இ-ள். பேசிடுங் குடும்பத்தானமாகிய, இரண்டாமிடத்தில், மாசில்லா மார்த்தாண்டன், நின்றால், நேசியாகிய மனையாள், விஷத்தைப்புசிப்பள், அமரபட்சத்துக்கு முதநண்பனிருக்கில், ஜலத்தினாற்கண்டம், வக்கிரன் நிற்கில் அக்கினியாற் கண்டம் பண்டிதன் பாவரைக்கூடியிருந்தால், கொண்ட மனையாள், பசிபொறுத்து, ஆகாரங்குறைத்துண்பள், பாவர்களைத்தேவகுரு கூடியிருந்தால், கணவன் எச்சிலைப் பட்சமாயுண்ணாமல், லெச்சைப்பட்டு, வெறுத்திருப்பாள், சுக்கிரன் பாவரைக்கூடியிருந்தால் விஷமருந்துவாள், சனி கூடியிருந்தால், வியாதியாயிருப்பள், ராகுகேதுக்கள் கூடியிருந்தால், சங்கடத்தால், தங்கடத்தையொழிக்கத் துணிவள், சுபர்கள் பார்வைபெற்றால், தீர்க்காயுளுடையவளாம்—எ-று. 670

திருவளர் மதிசுக் கிரனுமே ழிடத்திற்
செறிந்தஸ்த மனமதா யிருக்கில்
செலத்துயி ரிறப்ப ளேழிடந் தன்னிற்
செங்கதி ரிருக்கவந் தியதாம்
மருவுசூ ரியனுந் தூமனுங் கூடின்
மனைவியை மருவிடா வஞ்சன்
மன்னுசக் கரசா பன்னுறின் மரிப்பள்
வளர்பரி வேடமுற் றிடிலோ
சருவியே சண்டைக் காரியா யிருப்பள்
தக்கதோர் குசனுறி லவந்தி
தகைமைசேர் விதிபா தன்னுறிற் கர்ப்பந்
தரித்திடா மற்சலந் திருப்பள்
ஒருமையாய் நிறைந்த மதியுமோ ரேழி
லுற்றிடின் மைந்தருங் குணமும்
உள்ளமெல் லியலை மணந்தினி திருப்ப
னுண்மையீ தெனவுணர்ந் திடுமே.

இ-ள். இந்துவும், சுங்கனும், ஏழாமிடத்திற்கூடி, அஸ்தமனமாயிருக்க, சலத்தாலுயிரிழப்பள், மார்த்தாண்டன், ஏழாமிடத்திலிருக்க மலடியாவள்

சூரியனும், தூமனுங்கூடி, ஏழாமிடத்திருக்க, மனைவியை மருவாத வஞ்சகனும், இந்திரதனுவிருந்தால் வந்தமனைவி மரிப்பள், பரிவேடனிருந்தால், சண்டைக்காரியாய் இருப்பள், நிலமகன் நிற்கில் மலடியாம், விதிபாதன்னிற்கில், சதிகர்ப்பந்தரித்திடாமற்கலைந்திருப்பவளாம், பூரணச்சந்திரனிருக்கில், குணமும் பிள்ளைகளையுமுடைய பெண்டாய், மணம்புரிந்திருப்பான், இஃதுண்மையாம், என்று, அறிக—எ -று. 671

உணர்ந்திடும் புந்தி யேழினி லிருக்க
வுருப்பெறும் புதல்வனைப் பெறுவள்
உற்றவே ழாதி யிரவிதூ மனுமே
யுடன்செறிந் தேழினி லிருக்க
மணந்திடு மிகுதி மனைவிபத் தனையு
மரிக்குமென் றுரைப்பரே ழிடத்தில்
மன்னுதூ மாதி யைவரி லொருவர்
வந்திடிற் களத்திரர்க் கானி
அணைந்திடுஞ் சசிலக் கினத்தினுக் கேழு
மப்படிப் பலனென வறிக
ஆனதோர் மதிதன் னங்கிசத் தேறி
யன்பொடு மேழிடத் திருக்க
குணந்திக ழுந்தார்ச் சுந்தரி நீசர்
குளிர்மனை யேழிட மாகக்
கோதறு கதிரங் கிசமதி யாகிற்
கொழுநரும் பலரெனக் கூறும்.

இ-ள். வாழும்புந்தி, ஏழாமிடத்திலிருந்தால், அழகுள்ள புத்திரனைப் பெறுவாள், ஏழாமிடத்தோன், ஏழ்பரியோன், தூமன், இவர்கள்கூடி ஏழாமிடத்திலிருக்க ,விவாகஞ்செய்த பெண்ணைத்தனையும்,இறந்துவிடுமாம்,ஏழாமிடத்தில் தூமன், பரிவேடன், இந்திரதனுசு, விதிபாதன் அவமிருத்து, இவர்களில், எவர்நின்றாலும், களத்திரத்துக்குக் குற்றமாம், சந்திரலக்கினத்திற்கேழிலும் இப்படியே பலன்களாம், சந்திரன், ஆட்சியங்கிசமேறி, ஏழாமிடமாய்நிற்க, குணமுள்ள அழகிய களத்திரமாம், நீசர்வீடு ஏழாமிடமாக, சந்திரன் சூரியாங்கிச மேறியிருக்க, களத்திரத்திற்குப் பலபுருஷர்களாம்.

வேறு.

குடும்பங் களத்திர மாறுதி கூடிப் புகரும் பாவருடன்
திடமே சன்மந் தனியிருக்கச் சனித்தோன் கமன பரதாரம்
வடிவாஞ் செல்விக் கிச்சிப்பன் வாழும் பாக்கிய தானத்தில்
அடவே யிவர்க டாமுற்றா லையரு மிப்படி யாமென்பார்.

இ-ள். குடும்பாதிபன், களத்திராதிபன், ஆறுமிடத்ததிபன், கூடியும், சுக்கிரன், பாவிகளோடுகூடி ஜென்மத்திலிருக்க, பரதாரகமனம்பண்ணு வான், அன்றியும், வடிவுள்ளபெண்களை இச்சிப்பவனுமாவன், ஒன்பதாமிடத்தில், மேற்சொல்லியவர்கள், கூடிநின்றால், தகப்பனும் இப்படியேயாவன்.

ஆமே சுக்கிர னேழாதி யாறு மதிப னுடன்கூடித்
தாமே மூவ ரொருவீட்டிற் றங்கிற் போகந் தானில்லை
தீமே யிரண்டு மூன்றாதி செறிந்தா றெட்டிற் பன்னிரண்டில்
காமே கூடி யிருந்திடினே களரோ கங்கள் காட்டிடுமே.

இ-ள். சுக்கிரன், ஏழுக்குடையவன், ஆறுக்குடையவன்கூடி, இவர்கள் மூவரும், ஒருவீட்டிலிருந்தாலும், போகமில்லாதவனும், இரண்டு மூன்று மிடங்களுக்குடையவர்கள்கூடி, மறைவுஸ்தானமாகிய, ஆறு, எட்டு, பன்னிரண்டாமிடங்களில், இருந்தால், கண்டத்தில் ரோகமுடையவனும்—எ-று.

காட்டுஞ் சன்ம மேழாதி கண்ட கேந்திர கோணத்தில்
கூட்டு யிருக்க வவர்வீட்டோன் கொண்ட லக்கினந் தான்மேவி
நீட்டும் பலவா னிவனென்றே நேச மறிந்தே யவர்திசையில்
ஊட்டும் புசிப்பி லிவன்பாரி யுகந்தே யிவனோ டனுமரணம்.

இ-ள். ஜென்மலக்கினதிபன், ஏழாமிடத்ததிபன் கேந்திரகோணங்களில், கூடியிருக்க, அந்தவீட்டுக்குடையவன், லக்கினத்திலிருந்தால், அவர்கள் திசை, புத்திகளில், களத்திரமும், ஜாதகனும், சுகசன்னி முதலியவைகளா லிறப்பார்கள்—எ-று. 675

சத்தம வட்ட மாதி தன்னுடன் பாவ ரேனும்
ஒத்துட னந்தத் தானத் துறுபல பாவ ரேனும்
சித்தமாம் வியத்தின் மன்னன் சேயுடன் கூடி னாலும்
ஒத்தநல் விவாகம் ரெண்டா யுறுமணம் புரிவ னென்றே.

இ-ள். ஏழு, எட்டாமிடத் ததிபர்களோடு பாவர்களாயினும், அல்லது, அந்த, ஏழு, எட்டாமிடங்களில், பாவர்களாயினும், பன்னிரண்டாமிடத்தில், புங்கவன், மங்கலனுடன் சேர்ந்தாலும், இரண்டுகளத்திர முடையவனும்—எ-று. 676

ஏழிட மிரண்டா மாதி யிருவரி லொருவ ரேனும்
தாழ்பல வீன ராகத் தானுறி லந்த வீட்டில்
ஊழ்பெரும் பாவர் நிற்க வுறுமண மிரண்டு செய்து
வாழ்பவர் புவியி லென்று வழுத்துவர் மறைவல் லோரே.

இ-ள். இரண்டு ஏழுக்குடையோர், இருவரில் ஒருவர் பலவீனராக விருக்க, அந்த, இரண்டு, ஏழாமிடங்களில், பெரும்பாவர்கள் நிற்க, இரண்டு களத்திர முடையவனென்று சொல்லுவார்கள்—எ-று. 677

வல்ல திரண்டில் வெகுபாவர் வந்துற் றுலு மோரேழில்
சொல்லும் பாவர் தானுறினுஞ் சுகமா மந்த மனையினிலும்
வெல்லு மிந்த மனையோனை விரும்பிப் பாவர் நோக்கமுற
நல்ல மணங்க ளிரண்டென்று நவில்வர் கணித நாவலரே.

இ-ள். இரண்டா மிடத்திலாயினும், ஏழாமிடத்திலாயினும், பாவர்கள் நிற்க, அந்த, இரண்டு, ஏழாமிடங்களைப் பாவர்கள் பார்த்தாலும், அவ்வதிபர்களை நோக்கினாலும், இரண்டு களத்திரமுண்டென்று கணிதவல்லோர் சொல்லுவர்—எ-று. 678

ஏற்றிய சன்மம் ரெண்டி லேழினிற் பாவ ரேனும்
நேர்த்தியாங் களத்தி ராதி நீசரத் தமன மேனும்
வேற்றுசத் துருவீ டேனும் விரும்பியே நின்ற தாயில்
போற்றுவர் களத்தி ரங்க ளிரண்டெனப் புகல்வர் தாமே.

இ-ள். ஜென்மம், இரண்டு, ஏழாமிடங்களில், பாவர்களிருந்து, களத்திராதிபன், நீசம், அஸ்தமனம், சத்துருவீட்டிலுமிருந்தால், இரண்டுகளத்திரமாமென்று சொல்லுவார்கள்—எ-று. 679

மேவிய களத்தி ராதி விரும்புகேந் திரகோ ணத்தில்
பாவியர் க்ஷேத்திர நட்பும் பரிந்துறப் பத்தோன் கூடத்
தாவிய வேழோ னம்சை தரிப்பச்சொட் சேத்திரங் கண்டால்
தேவியு மனேக மாகத் திடமணம் புரிவன் றானே.

இ-ள். களத்திராதிபன், கேந்திரகோணங்களில் பாவியர்வீடாய் நட்புப் பொருந்தியிருக்க, பத்தாமிடத்தோன், கூடியிருக்க, ஏழாமிடத்ததிபன் சொட்சேத்திராமிசம்பெறில், அநேக களத்திரங்களைத் திடமாய் விவாகஞ் செய்வான்—எ-று. 680

ஆனதோ ரேழி டத்தி லரசனும் பலம தாகி
ஈனமில் பளிங்கு தானு மிருந்திட வலுவ தாகத்
தேனிகர் குடும்ப வாதி சினேகாம்சை யிருக்க வேதான்
தானதி ரூப முள்ள தனபதி நாரி யென்றே.

இ-ள். சத்தமத்திற் புத்திரகாரகனாகிய, வியாழபகவான், பலமாகி, சுக்கிரனோடு சேர்ந்திருக்கக்குடும்பாதிபன், திடம்பெற்று நட்பாம்சையிலிருக்கத்தனவான்புத்திரியும், குணமும், அழகும், வாய்ந்தபெண்ணை, திருமணஞ்செய்வன்—எ-று. 681

ஏயலா பாதி யேழா னிருவரும் பலமாய்க் கூடித்
தூயகோ ணத்தி ருக்கச் சுபருடைப் பார்வை யாகில்
நேயமா மனேகம் பெண்க ணிறைசீவ னுள்ள ராக
ஆயவே மணங்கள் சூட்டி யவனியி லிருப்பன் றானே.

இ-ள். இலாபாதிபதி, ஏழாமிடத்ததிபதி, இவ்விருவரும் பலமாய்க் கூடி, திரிகோணம்பெற்றிருக்கச் சுபர்பார்வையாகில், அநேகம்பெண்களை விவாகம், செய்பவன், களத்திரங்களுக்கும் தீர்க்காயுளுண்டாம்—எ-று.

இருந்திடு மிரண்டே ழாதி லக்கினகோ புராங்கி சைக்குள்
பரிந்துறும் பத்தா மாதி பண்புட னேழி லுற்றால்
தெரிந்தநற் களத்தி ரங்கள் தெசமெனக் கொள்வ ரென்றே.
புரிந்திடுங் கணித நூலின் புண்ணிய ரோதி னாரே.

இ-ள். இரண்டு, ஏழுக்குடையவர்கள், லக்கினங்கிசம், கோபுராங்கிச மேறியிருக்க, பத்தாமிடத்ததிபன், ஏழாமிடத்திலிருக்க, பத்துகளத்திரம், விவாகஞ் செய்வானென்று கணிதவல்லவர்கள் சொல்லுவார்கள்—எ-று.

ஓதிய களத்தி ராதி புயர்சுப ராசி யேறி
மீதுமங் கிசைநல் வீடாய் மேவிடப் பளிங்கு தானும்
நீதியிற் படிபோ லாக நிறையும்பத் ததிப னோடும்
ஓதிய பலவான் கூட மோகனப் பெண்கள் கொள்வான்.

இ-ள். களத்திராதிபன், சுபர்வீட்டிலும், சுபாங்கிசத்திலும், இருந்திட சுக்கிரனு மிப்படியேயிருக்க, பத்தாமதிபனோடு, பலவான்கள்கூட மோகனப் பெண்களைக் கொள்பவனாம்—எ-று. 684

கொள்ளுநற் களத்தி ராதி குருவுடன் கூடி னாலும்
தெள்ளிய பார்வை யுற்றுத் திடமுள தலனுற் றாலும்
மெள்ளவே பிருகு தானும் வெகுபல மாக வுற்றால்
ஒள்ளிய தான தர்ம முள்ளவள் வருவ டானே.

இ-ள். களத்திராதிபன், குருவோடு கூடினாலும், சுபர்கள் பார்வையுற்றாலும், சுபக்ஷேத்திரம், பெற்றாலும் சுக்கிரன் பலத்திருந்தாலும், தானதருமஞ் செய்யக்கூடிய பெண்ணை விவாகஞ்செய்வான்—எ-று. 685

வந்தலக்னந் தனு மீனம் வரவே புதனும் பாவருடன்
இந்து நீச மத்தமன மிருந்தங் கிசைகள் சத்துருவின்
சொந்த மங்கிசை யேறுகினுந் தூர்த்தர் பாவர் களத்திரத்தில்
உந்தி யிருக்க வேசியரா யுயர்ந்த குலமுந் தாழ்வாமே.

இ-ள். லக்கினம், தனுசுமீனமாக, புதன் பாவருடனும், சந்திரன், நீசம், அஸ்தமனமாகியும், சத்துருவங்கிஷமேறியிருந்தும், பாவர்கள், களத்திரஸ்தானங்களிலிருந்தாலும், வேசியராய் உயர்ந்தகுலத்தையுந் தாழ்வாகக் கூடிய களத்திரமாம்—எ-று. 986

ஆமே களத்தி ராதிபதி யரச னாகிப் பாவருடன்
தீமே பாவ ராசியிலுஞ் சிறந்தே யிருக்கப் பாவர்களும்
தாமே நோக்க மானாலுஞ் சனிசே யங்கிசை யுற்றாலும்
போமே சோரம் ரகசியமாய்ப் புறம்பு மசையா தவள்போல.

இ-ள். களத்திராபதி, குருவாய், பாவர்களுடன் சேர்ந்து, பாவர்வீட்டிலுமிருந்து, பாவர்களும் நோக்க, சனியங்கிசையிலுற்றாலும், புறமசையாதவள் போலவிருந்து, ரகசியமாய்ச் சோரஞ்செய்பவளான களத்திரமாம்.

போகுங் களத்தி ராதிபதி புகராய்ப் பாவ ருடன்கூடி
ஏகும் பாவர் பார்த்திருக்க வெழிலார் சத்துரு வங்கிசையில்
ஆகும் பாவ ரங்கிசையி லமர்ந்தே யிருக்க வன்னியர்பால்
தாக முடனே சஞ்சரித்துச் சமர்த்தாய்ச் சோரஞ் செய்திடுவள்.

இ-ள். களத்திராதிபதி, சுக்கிரனாய்ப் பாவர்களுடன் சேர்ந்தும், பாவர்கள் பார்த்தும், சத்துருபாவரங்கிசமேறியுமிருக்க, அன்னியர்பால், அநுராகம்புரிந்து, தன்னிகரில்லாச் சாகசச்சோரஞ்செய்கின்ற களத்திரமாம்.

ஏழா மிடத்தோன் பாவருட னிரண்டி லிருக்கச் சேய்பார்க்கச்
சூழும் விபசா ரத்தொழிலாற் சுதனு முண்டா மெனச்சொல்வர்
வாழு மிலக்னத் துடையோனும் வரவா றெட்டிற் பன்னிரண்டில்
தாழ்வா யிருக்கப் பெண்ணிரண்டு தானுங் கொள்வன் தப்பாதே.

இ-ள். ஏழாமிடத்தோன், பாவருடன்கூடி, இரண்டாமிடத்திலிருக்க, செவ்வாய்பார்க்க, வியபிசாரத்தால் புத்திரனுண்டாமென்று சொல்லுவர், லக்கினத்துக்குடையவன், மறைவுஸ்தானமாகிய, ஆறு, எட்டு, பன்னிரண்டாமிடத்தில் பலமற்றிருக்க, இரண்டுதாரங் கொள்பவனாகும்—எ-று. 689

கொள்ளும்லா பாதி களத்ராதி கூடி னாலும் பார்த்தாலும்
தெள்ளும் பலவா னாகியிவர் திரிகோ ணத்தி லிருந்திடினும்
உள்ள விவாக மூன்றென்றே யுரைப்பர் கணித வல்லோர்கள்
கள்ள விடம்போல் விழிமருட்டுங் கருமென் குழனற் காரிகையே.

இ-ள். விடம்போன்ற விழியும், மேகம்போன்ற கரிய கூந்தலுமுடைய பெண்ணே, லாபாதிபதி, களத்திராதிபதி, கூடினாலும், பார்த்தாலும், பலவான்களாய் லக்கின திரிகோணத்திலிருந்தாலும், மூன்று களத்திரங்களுண்டென்று கணிதவல்லவர்கள் சொல்லுவார்கள்—எ-று. 690

லக்கினந் தனக்கேழ் தன்னில் வியத்தினிற் சோமன் றானும்
புக்கவே பாவரங் கிசையிற் பொருந்தியே யிருந்த காலை

சுக்கிரன் பாவ ரோடுந் துலங்கவே யிருக்க நாரி
கைக்கொளும் புருட னுப கணவனைக் கொல்வள் கண்டீர்.

இ-ள். ஜென்மலக்கினத்திற்கேழிலும், பன்னிரண்டிலும், திங்களாகிய சந்திரனிருந்து, பாவாங்கிசமேறியிருந்தாலும், சுக்கிரன் பாவரோடுந் துலங்கியிருந்தாலும், கணவனைத் திரணமாய் எண்ணி, மரணஞ்செய்ய வழிபார்க்கும் கனத்திரமாயிருப்பாள்—எ-று. 691

ஏழாம்பாவம்

சம்பூர்ணம்.

எட்டாம்பாவம்.

ஆயுட்பலன்.

அட்டமத் ததிபன் பாக்கி யாதிப னாகி நிற்கில்
அட்டமத் ததிபன் பாவி யாகிலு மைய மில்லை
அட்டமத் ததிப னுச்ச மாகினு மான நற்கோள்
அட்டமத் ததிபன் றன்னைப் பார்க்கினூ றாண்டிருப்பன்.

இ-ள். அட்டமத்ததிபன் திட்டமாய்ப், பாக்கியாதிபதியாகி நின்றாலும், அவ்வதிபன், கொடிய பாவியாயிருந்தாலும், ஆயுள்தீர்க்கம், சந்தேகமில்லையாம், எட்டுக்குடையவன், உச்சமானாலும், சுபக்கோள்பார்த்தாலும், நூறுவயதிருப்பவனாவான்—எ-று. 692

பங்கு பாதன் செவ்வாயைப் பற்றிய புசிப்பிற் காரி
தங்கிய திசையிற் செவ்வாய் தானுகந் திடுபு சிப்பில்
அங்கவ னட்ட மாதி திசையினி லவன்பு சிப்பில்
மங்குகோ சாநன் றாயின் வருத்துநோய் மாறுந் தானே.

இ-ள். நிலமகன் திசையில், முதுமகன் புத்தியில், முதுமகன் திசையில் நிலமகன் புத்தியில், அட்டமாதிபன் திசையில், அவன்புத்தியில், நோயால், வருத்தப்படுவான், கோசரம், நன்றாயின் மாசற நோய்மாறிச் சுகமடைவான்—எ-று. 693

வேறு.

ஆறெட்டுப் பன்னிரண்டா மதிப ரோடும்
அலதிவர்சூழ வர்க்கைந்தோன் பானி லேனும்
வீறிட்ட சனிமேவிற் சரீர பீடை
மேவியவெட் டாதிபன்கேந் திரத்தி லேனும்,

பேரிட்ட சன்மாதி பதியுந்துற் பலனுய்ப்
பெறினுலெட் டாண்டென்று பேச லாகும்
கூறிட்ட சன்மாதி பலவா னுயிற்
குலவும்வெகு வயதென்றே கூற லாகும்.

இ-ள். சட்டாட்டம வியத்தானத் ததிபர்களோடும், அல்லது, இம்மூவர்க்கும், பஞ்சமபாக்கிய ஸ்தானத்திலாயினும், சனிநின்றால், சரீரபீடையாம், அட்டமாதிபன் கேந்திரத்தில்நின்றாலும், ஜென்மாதிபதி பலமற்றிருந்தாலும், (32) வருஷமாயுளென்று, ஜென்மாதிபதி பலவானுகில், வெகுவயதென்றும், சொல்லவேண்டும்—எ-று. 694

வேறு.

கூறுங் கடக முதலாறு ராசிக் குள்ளே குருவிருக்க
வீறு மகர முதலாறுக் குள்ளே காரி மேவுகினும்
பேறுங் கடக கேந்திரத்திற் பிருகும் புதனும் பெறநிற்கில்
மாறு துறுந்தீர்க் காயுளுடன் வையந் தன்னில் வாழ்வாரே.

இ-ள். சொல்லும், கடகவிராசிமுதல் செல்லும் ஆறுராசிக்குள், நல்ல வியாழனும், மகரவிராசிமுதல், ஆறுராசிக்குள், பகரும் பங்குபாதனுகிய சனியும் கடககேந்திரத்திற், காமனும், சாமனும், திடமாய்ப் பொருந்தியிருக்கில் அப்பேர்க்கொத்த ஜாதகர்கள் தீர்க்காயுளோடு பூமியில் வாழ்ந்திருப்பார்கள்.

வாழு மகர முதலாறின் மந்த னிருக்கக் கடகமுதல்
சூழும் ராசி யாறுக்குட் சோம னிருக்கக் கேந்திரத்தில்
வீழு மரச னுறிற்றீர்க்க வயதா மெட்டிற் குசனிருக்க
எழுங் கதிரோ ரைகளரச னேழிற் கேந்திர நூறுண்டே.

இ-ள். மகரம் முதல் ஆறுராசிக்குள் மந்தனிருக்க கடகம், முதல், ஆறுராசிக்குள், சந்திரனிருக்க கேந்திரத்தில், குருவிருக்கத் தீர்க்கவயதாகும், எட்டாமிடத்திற், செவ்வாயும், சூரிய ஓரைகளில் குரு, ஏழாமிடம், அல்லது, கேந்திரம், பெற்றிருந்தாலும், நூறுவயதாகுமாம்—எ-று. 696

ஆண்ட மிதுன முதலாறி லரச னிருக்கத் தனுமுதலாய்த்
தீண்டு மிராசி யோராறிற் றிரிகோ ணங்கேந் திரந்தன்னில்
நீண்ட புதனுஞ் சுக்கிரனும் நிற்கிற் றீர்க்க சீவனுமாம்
பாண்டி மகரா சன்கொடியைப் பழித்த கருங்கட் பைங்கொடியே.

இ-ள். பாண்டியன் கொடிக்கு நிகராகவேண்டும் மீனைப்பழித்த கருங்கண்களையுடைய பைங்கொடி போல்பவளே? மிதுனவிராசிமுதல் ஆறுராசிக்குள் குருவிருக்க, தனுசுமுதல், ஆறுராசிக்குள்ளும் திரிகோண கேந்திரத்தும், புதனுஞ் சுக்கிரனும் பொருந்திநிற்கில், தீர்க்கவயதாகுமாம்—எ-று.

கொடியே குருசுக் கிரனுன்கா மிடத்திற் குடிகொண் டேயிருக்க
நெடிய சன்ம லக்கினத்தி னிலவு மிருக்க விவர்க்குநடு
கடிய சனியிச் சுரனிருக்கக் கண்ட வயதா மொருநூறே
பிடியு மிளம்பேட் டன்னமுமுன் பின்னே தொடரு நடையாளே.

இ-ள். பிடியானையும், பெட்டையன்னமும், பின்னும், முன்னுந் தன்னைத் தொடரும்படியான நடையையுடைய பெண்ணே? நாலாமிடத்திற் கோலாகலக்குருவும், சுக்கிரனும், ஜென்மலக்கினத்திற் சந்திரனுமிருக்க, இவர்களுக்கிடையில் சனியிருக்க நூறுவயதாகும்—எ-று. 698

நடிக்குஞ் சன்ம முதனுன்கா மிடத்து ணடுவே நாற்கலையும்
படிக்கும் புதன்சுக் கிரனரசன் பரிந்தே யிருக்கிற் சதவருஷம்
துடிக்கும் புதனென் றேநின்றற் றொடர்முப் பத்து மூன்றாகும்
அடுக்கும் வெள்ளிக் கறுபத்தா றரச னிருந்தா னூறுமே.

இ-ள். ஜென்மலக்கினம்முதல், நான்குவிராசிக்குள் தேர்ப்பாகன், குரு, சுக்கிரன், இவர்கள் மூவருமிருந்தால் நூறுவயதாம், புதன்மட்டுமிருந்தால், முப்பத்திமூன்றுவயதும், புதனுஞ் சுக்கிரனும் பொருந்தியிருந்தால் அறுபத்தாறு வயதும், புதனும், சுக்கிரனும், குருவும் கூடியிருந்தால், நூறுவயதுமாமென்க—எ-று. 699

ஆமட் டமத்தி னுதிபனு மட்ட மத்தி லமர்ந்திருக்கச்
சோமன் பாவ ருடன்கூடி யிரண்டா றெட்டிற் சூழ்ந்திருக்கில்
தாமும் வயதைம் பத்தெட்டாந் தரும ஞானி தானுவன்
காமன் கணையைப் பழித்தயிலைக் கடிந்து மருட்டுங் கண்ணாளே.

இ-ள். காமன்கணையைப்பழித்துக் கதிர்காமன் வேலையுங்கடிந்து மருட்டுகின்ற கண்களையுடைய பெண்ணே? அட்டமாதிபன், அட்டமத்திலிருக்க, திட்டமாய்ச் சந்திரன், கெட்டவராகிய பாவருடன்கூடி, எட்டு ஆறு, இரண்டாமிடத்திற் சூழ்ந்திருக்கில், ஐம்பத்தெட்டுவயதாம், தருமஞானி தானுவான் என்க—எ-று. 700

கண்ணார் கும்ப லக்கினமே கண்ட சன்ம லக்கினமாய்ப்
பண்ணு ரதற்கெட் டாங்கிசையிற் பயிலு மரசன் பரிந்துநிற்க
எண்ணார் பாவர் கேந்திரத்தி லில்லா திருக்க விவ்வுலகில்
தண்ணார் வருஷ மறுபதுக்குந் தானுற் றிடுவர் தப்பாதே.

இ-ள். கும்பம், ஜென்மலக்கினமாய், அதற்கெட்டாமங்கிசையிற் குருவிருக்க, பாவர்கள் கேந்திரத்தி லில்லாதிருக்கப் பிறந்தவன், இப்புவியில், தப்பாமல், அறுபதுவருஷம், ஜீவித்திருப்பான்—எ-று. 701

தப்பா வில்லே லக்கினமாய்த் தன்னிற் குருவுந் தானிருக்க
இப்பார் குசனிந் தொடுகரும்பாம் பிவர்மூ வோருந் தாங்கூட

மெய்ப்பா ரெழுபத் தைந்தாகு மேவும் பாவர் கேந்திரத்தில்
ஒப்பார் சன்மத் தாதியெட்டி லுறிலாண் டிருபத் தெட்டாமே.

இ-ள். இப்பாரில், தப்பாமற் பிறந்தஜாதகன், தனுசுலக்கினமாய், அதில் ஒப்பாருமில்லாக் குருவிருக்க, அப்பாலுஞ்செவ்வாய், சந்திரன், ராகு, இவர்கள் மூவருங்கூட, எழுபத்தைந்து வயதாம், கெட்டபாவர்கள் கேந்திரத்திலும், இட்டஜன்மாதிபதி, எட்டாமிடத்திலும், நிற்கில், மட்டடங்கா வயது இருபத்தெட்டாம்—எ-று. 702

எட்டாம் பாவ ரங்கிசையி லினியோ ரிருக்கக் கேந்திரத்தில்
மட்டார் பாவர் தாமிருக்க வயது மறுபத் தாருகும்
செட்டார் சுபரங் கிசைதன்னிற் சென்மா திபனுந் தானிருக்க
எட்டா றினிலெட் டாதிபதி யிருக்கி லைம்ப தென்பாரே.

இ-ள். எட்டாம் பாவரங்கிஷத்தில், திட்டமாய்ச் சுபர்களிருக்க, கெட்ட பாவர்கள், கேந்திரத்திலிருக்கப் பிறந்தஜாதகனுக்கு, மட்டடங்காவயது அறுபத்தாறும், எட்டுநிறைந்த சுபரங்கிசையில் மட்டுலவும் லக்கினுதிபன் திட்டமாயிருக்க, எட்டுஆறு இவ்விடத்தில், எட்டாமிடத்ததிபன், கட்டோடே நிற்கில் ஐம்பது வயதாம்—எ-று. 703

என்பா ரெட்டா மதிபதியும் லக்கி னத்தி னுதிபனும்
ஒன்பா னுதி நற்கோளே லுயிர்போந் தந்தைக் கருகின்மைந்தர்
அன்பா யிருப்பர் சன்மத்தி லரவு கதிர்சந் திரனிருக்க
வன்பாம் வியத்திற் குருவிருக்கில் வயது மிருபத் தெட்டாமே.

இ-ள். அட்டமாதிபனும், லக்கினுதிபனும், ஒன்பதாமிடத் ததிபனும், சுபர்களாயின், பிள்ளைகள் அருகிருக்கத் தகப்பனிறப்பன், ஜென்மத்தில், ராகு, கேது, சூரியன், சந்திரன், இருக்க, பன்னிரண்டாமிடத்திற் பொன்னவனிருக்கில், அன்னவனுக்குவயது இருபத்தெட்டாம்—எ-று. 704

வேறு.

ஆகும் லக்கின மெட்டாதி கூடியே
வாகு கேந்திரத் தெய்தமற் றெட்டினில்
தாக மோடெவ ராயினுந் தானுறில்
ஏகு வன்பன் னிரண்டினிற் கண்டமே.

இ-ள். அட்டமாதிபனும், லக்கினுதிபனும் ஒன்றுசேர்ந்து, ஒன்று நான்கு எழுபத்தாமிடமாகிய கேந்திரத்திலிருக்க, அட்டமத்தில் யாரிருந்தாலும், அன்னோனுக்கு, இந்நிலத்தில், பன்னிரண்டு வயதிற் கண்டமுண்டாம்—எ-று. 705

வேறு.

கண்ட வேழெட் டாறிடத்திற் கதித்த நல்லோர் தாமிருக்க
அண்டின் மூன்றிற் பன்னொன்றி லசுப ருறத்தீர்க் காயுளுண்டாம்
கொண்ட வெட்டா திபனுச்சங் கொளச்சென் மாதி பன்றானும்
மிண்டி யினியோர் காணக்கேந் திரத்தி லிருக்க வெகுவயதே.

இ-ள். ஆறு, எழு, எட்டாமிடங்களில், கூறுதற்கரிய சுபர்களிருக்க, மூன்று, பதினோராமிடங்களில், தோன்றும்பாவர்களிருக்கத் தீர்க்காயுளுண்டாம், அட்டமாதிபன், உச்சமாக, லக்கினாதிபன், சுபர்கள் பார்வைபெற்றுக் கேந்திரத்திலிருக்க வெகுவயதாம்—எ-று. 706

தேரும் வயதி னளவுரைப்பக் கேண்மின் சன்மா திபன்றனக்கும்
ஊரும் பரித்தே ரோன்றனக்கு முறவா கிற்றீர்க் காயுளுண்டாம்
எருஞ்சமமேன் மத்திமமா மெட்டெட் டாண்டே யினிதிருப்பன்
நேரும் பகைய தாகிலற்பம் நிலத்தி னலெட் டாண்டிருப்பன்.

இ-ள். வையகத்திற்பிறந்த மனுக்களுக்கு, வயதினளவைப் பயிலுமிடத்து, ஒயிலான, ஜென்மாதிபனுக்கும், ஒற்றையாழியோனுக்கும், உறவாயிருந்தால் தீர்க்காயுளாம், சமமாயிருந்தால், மத்திமவயதாகிய அறுபத்து நான்கு வயதாம், பகையாயிருந்தால், அற்பவயதாகிய, முப்பத்திரண்டு வயதாம்—எ-று. 707

நட்சத்திரங்களின் அமுதகடிகையறிய.

அசுவனி	21	சுவாதி	22
பரணி	30	விசாகம்	20
கார்த்திகை	50	அனுஷம்	14
ரோகணி	14	கேட்டை	31
மிருகசீரிடம்	30	மூலம்	14
திருவாதிரை	40	பூராடம்	10
புனர்பூசம்	14	உத்திராடம்	14
பூசம்	16	திருவோணம்	20
ஆயிலியம்	40	அவிட்டம்	14
மகம்	20	சதயம்	20
பூரம்	30	பூரட்டாதி	10
உத்தரம்	33	உத்திரட்டாதி	18
அஸ்தம்	7	ரேவதி	12
சித்திரை	16		

இந்த நாழிகைக்குமேல் நாலுநாழிகை அமுதகடிகையாம்.

நட்சத்திரங்களின் விஷகடிகையறிய.

அசுவனி	50	சுவாதி	14
பரணி	24	விசாகம்	14
கார்த்திகை	30	அனுஷம்	10
ரோகணி	40	கேட்டை	14
மிருகசீரிடம்	14	மூலம்	20—56
திருவாதிரை	11—21	பூராடம்	24
புனர்பூசம்	30	உத்திராடம்	20
பூசம்	20	திருவோணம்	10
ஆயிலியம்	32	அவிட்டம்	10
மகம்	30	சதயம்	18
பூரம்	20	பூரட்டாதி	16
உத்திரம்	18	உத்திரட்டாதி	24
அஸ்தம்	22	ரேவதி	30
சித்திரை	20		

இந்த நாழிகைக்குமேல் நாலுநாழிகை விஷமிருக்கும் நட்சத்திரங்களாம்.

இருக்கு மற்ப வயதுள்ளோ னிறப்பன் விடநட் சத்திரத்தில்
வருக்க முடன் பூ ரணவயதோன் மரண வதைநட் சத்திரத்தில்
பெருக்க முடன்மத் திமவயது பிறத்திய தாரை யதுதன்னில்
தருக்கு மற்ப வயதிலற்பஞ் சாற்றக் கேண்மின் றரைமீதே.

இ-ள். அற்பவயதுள்ளவன், விஷநட்சத்திரத்திலும் பூரணவயதுடைய வன், மரணவதை நட்சத்திரத்திலும் மத்திமவயதுள்ளவன், பிரத்தியதாரை நட்சத்திரத்திலும், இறப்பார்கள், அற்பவயது, அற்பத்திலற்பவயது சொல லக்கேட்பாயாக—எ-று. 708

தருஞ்சன் மாதி பாவாங்சந் தரிக்கில் வயதற் பத்திலற்பம்
வருஞ்சன் மாதி சுபாங்கிசத்தில் வரவற் பத்தின் மத்திமமாம்
அருள்சன் மாதி தனைநல்லோர் காண வற்பத் தினிற்றீர்க்கம்
உருமத் திமர்ந்தீர்க் கந்தனக்கு முளவிப் படிக்கண் டுரைமானே.

இ-ள். ஜென்மாதிபதி, பாவரங்கிஷத்திலிருக்கில் அற்பத்திலற்பவய தாம், சுபரங்கிஷமேறின், அற்பத்தில் மத்திமவயதாம், சன்மாதிபதியைச் சுபர்கள் பார்த்தால், அற்பத்திற் றீர்க்கவயதாம்—எ-று. 709

கதிரோ னுதய முதற்சனன காலை யளவுங் கடிகைதனை
எதிரா வெண்ணி யிரண்டரையி லீந்தா லோரை லக்கினமாம்
சதிராய்ச் சன்ம வீடொற்றை தானு கிற்சூ ரியன்முதலாம்
அதிராய்ச் சன்ம வீடிரட்டை யாகிற் சன்ம முதற்சரியே.

இ-ள். சூரியோதயமுதல், ஜெனனகாலவரைக்கும், சென்றநாழிகையை, இரண்டரையில் வகுக்க, எத்தனையாவதுபங்கி லொட்டுகிறதோ, அத்தொகைப்படி, ஒற்றைராசியாகில், சூரியன் முதலாகவும், இரட்டைராசியாகில், ஜெனனமான லக்கினமுதலாகவும், எண்ணிக்கண்டவிராசி, ஓரையாகக் கொள்ளவேண்டும்—எ-று. 710

வே று.

சரமதனிற் சரந்தீர்க்கந் திரந்தான்மத் திமமாம்
தங்கியதோ ருபயங்க டானற்ப மாகும்
திரமதனிற் றிரமற்பஞ் சரந்தான்மத் திமமாம்
திரத்திலுப யம்பெறினுந் தீர்க்கவய தாகும்
வருமுபயந் தனிலுபயம் மத்திமமே யாகும்
மற்றுமதிற் சரமாகில் வயதற்ப மாமே
பெருமையுட னுபயத்திற் றிரந்தீர்க்க வயதே
பெற்றிடிற்பூ ரணவயது பெற்றிடுவர் தாமே.

இ-ள். லக்கினம், சரமாக, அஷ்டமாதிபன், சரத்தில் தீர்க்கம், திரத்தில், மத்திமம், உபயத்தில் அற்பமாம், திரத்தில், திரம் அற்பம், சரம் மத்திமம் உபயம், தீர்க்கம், உபயத்தில், உபயம் மத்திமம் கரம் அற்பம், திரம் தீர்க்கவயது பெற்றிடுவரென்பதாம்—எ-று. 711

பெறுந்திரிகோ ணங்களிற்கேந் திரத்தினல்லோர் நிற்கப்
பின்னுஞ்சன் மாதிபன்பொன் னுடனுன்கி னிற்க
உறுவதுநூ றுண்டளவு முலகில்மிக வாழ்வர்
உற்றசன்ம மோரெட்டா திபனுமுடன் கூடி
மருவுறவா றுமிடத்திற் சனிபார்க்க நிற்கில்
வாலேயிலே வரிட்டமென வேவழுத்த லாகும்
சிறுகுழவி யிலக்கினத்திற் சேயெட்டிற் றிங்கள்
செறியுமிரு வரைக்காரி தெரிசிக்க லரிட்டம்.

இ-ள். திரிகோண கேந்திரங்களிற் சுபர்நிற்க, ஜென்மாதிபன், குருவுடன், கூடி, நான்காமிடத்தில் நிற்க நூறுண்டளவும், பாராண்டுலகில் மிக வாழ்வர், லக்கினுதிபதி, அட்டமாதிபதி, இவர்கள்கூடி, ஆறுமிடத்திலிருக்கச் சனிபார்க்கில், வாலேவயதில் பாலாரிட்டமாம், லக்கினத்தில், வக்கிரனும், எட்டாமிடத்தில், வட்டநிலவுமிருக்க, இவ்விருவரையும், சவுரிபார்த்தால், இப்பாரில், அப்பாலருக்குத் தப்பாமற் பாலாரிட்டமாம்—எ-று. 712

மானிடருக் கயன்விதித்த வாண்டைமூன் றுக்கின்
வருமுப்பான் மூன்றுகு மலேதற்ப மென்ப

தானறுபத் தாறுமத் திமந்தீர்க்க மிதன்மேல்
தாழ்வறமுன் வகுத்திடுபங் கொன்றினைமூன் றாக்கில்
பான்மொழியாய் பன்னொன்றும் பங்கொன்று தனக்கே
பகர்ந்திடுவா யற்பத்தி லற்பமத்தியந் தீர்க்கம்
ஆனமத்தியந் தீர்க்கத்தை யிவ்வாறே பிரித்து
அறிந்திடுநீ யவரவர்க ளாயுளினைக் கண்டே.

இ-ள். மனிதர்களுக்குப் பிரமன்விதித்த, நூறாண்டை, மூன்றாகப் பாகிக்க, முப்பத்திமூன்றும், இது அற்பவயதாம், அறுபத்தாறாண்டு மத்திம வயதாம், நூறாண்டுவரை தீர்க்கவயதாம், ஒவ்வொன்றையும் மும்மூன்றுபங் காக்கப் பங்கொன்றுக்குப் பதினொருவயதாம், முதற்பங்கு பதினொன்றை அற்பத்திலற்பம் எனவும், இரண்டாம்பங்கு, இருபத்திரண்டை அற்பத்தில் மத்திபமெனவும், மூன்றாம்பங்கு, முப்பத்திமூன்றுவரை அற்பத்தில் உத்தமம் எனவும் சொல்லுக, அறுபத்தாறுவரை, மத்திபத்தில், அற்பம், மத்திமத்தில் மத்திமம், மத்திமத்தில் உத்தமம் எனவும், நூறுவயதுவரை, உத்தமத்திலற்பம், உத்தமத்தில் மத்திமம், உத்தமத்தில் உத்தமம், எனப்பிரித்து, அவரவர்கள் ஆயுள்தானத்தைக்கண்டு அறியக்கடவாய் என்பதாம்—எ-று.

வேறு.

அட்டமா திபனுங் குசனுமே கூடி
யாறுபன் னிரண்டிடத் திருக்கில்
துட்டரா யுதத்தான் மரணமற் றினியோர்
சூழ்ந்துகண் டிடப்படுங் காயம்
எட்டினு திபன்பாம் புடன்விய மெட்டா
றெய்திடிற் கள்ளரா லரிட்டம்
தொட்டலக் கினமெட் டாதிசேர்ந் துதகஞ்
சூழ்மனை யுறிற்சல கண்டம்.

இ-ள். எட்டுக்குடையவனும், செட்டுக்குடைய செட்டியாகிய, செவ் வாயுங்கூடி, ஆறுபன்னிரண்டாமிடங்களி லிருந்தால், துட்டராயுதத்தால் மரணமாம், மற்றச்சுபர்கள் பார்த்தால் படுங்காயமுண்டாம், அட்டமாதி பன், இராகு கேதுக்களுடன் கூடி, சட்டாட்டம வியத்திலிருக்கக் கள்ளரா லரிட்டமாம், லக்கினுதிபனும் அட்டமாதிபனுஞ்சேர்ந்து, சலராசிகளில் நிற் க்ச் சலகண்டமாம்—எ-று. 714

கண்டவெட் டாதி வாகனு திபனைக்
கலந்துபன் னிரண்டோடா றெட்டில்
மிண்டிய நீசர் சத்துரு மனையில்
மேவில்வா கனங்களான் மரணம்

மண்டியெட் டதிபன் காரியங் கிசத்தில்
வரின்மரத் தேறிவீழ்ந் திறப்பன்
அன்றியோன் றெட்டோ னீசரங் கிசம்புக்
காற்சனி வாதமாஞ் சூரும்.

இ-ள். எட்டாமிடத்ததிபன், இட்டவாகனுதிபனேடுகூடி, ஆறு, எட்டுப் பன்னிரண்டாமிடத்தில், நீசம், அல்லது சத்துருவீட்டாக இருக்கில், வாகனத்தால் மரணமாம், அட்டமாதிபன், சனியாங்கிசத்தில் வந்தால், மரத்திலேறி விழுந்திறப்பன், லக்கினுதிபன், அட்டமாதிபன், நீசரங்கிசம்பெற்ருல் சன்னிவாதத்தினுல் மரணமாம்—எ-று. 715

சூரனுங் கால மிர்த்தியோ டெட்டாந்
துறைலக்கி னுதியுங் கூடிப்
பாரமாங் கல்லா கினுமிடி யேனும்
பட்டிறந்திடுவன்மற் றின்னம்
சேரவே யட்ட மாதிநீ சத்திற்
செறிந்துபன் னிரண்டிலா றெட்டில்
வீரமாங் கருங்கோ ணேக்கவே குன்ம
வியாதியால் வியமடைந் திடுவன்.

இ-ள். காலமிருத்தியோடு, லக்கினுதிபதி, அட்டமாதிபதி கூடில், பாரக்கல்லினுலாவது, இடியினுலாவது, மரணமாம், அட்டமாதிபதி நீசமாகிச் சட்டாட்டமவியத்தில் இருந்து, இராகுபார்த்தால், குன்மவியாதியால், மரணமாம்—எ-று. 716

அடைந்திடுஞ் சன்மத் தாதிப னேனு
மட்டமத் தாதிப னேனும்
மிடைந்திடுங் குளிகன் றன்னுடன் கூடி
வியமெட்டா றிடத்தினின் மேவ
நடந்தகால் கரங்கள் பின்னமே பட்டு
நலிவனந் நோயினுன் மடிவன்
தொடர்ந்துநல் லோர்கள் பரிவுடன் காணிற்
சொல்கைகா லூனமுற் றிருப்பன்.

இ-ள். லக்கினத்தோனுகிலும், அட்டமத்தோனுகிலும், குளிகனேடு கூடிச், சட்டாட்டமவியத்தில் இருந்தால், அச்சாதகனுக்கு, கால் கைகள் குற்றபட்டு, மெலிந்து, அந்தநோயினுல், இறப்பான், சுபர்கள் பார்த்தால், கைகால், ஊனத்தோடிருப்பன்—எ-று. 717

இருந்திடுஞ் சன்மந் தனிற்சனி குளிக
னிருவருங் கூடியே நிற்க

மருவிய வியமா றெட்டிலிங் திருக்க
மன்னுதன் மரணமே யாகும்
பொருந்துமா தித்தன் புடத்திம கண்டன்
புடத்தையுங் கூட்டுமிரா சியினில்
அருந்தவ மன்னன் பொருந்தநோய் கொண்டே
யவனியிற் றுன்பமுற் றிடுவன்.

இ-ள். இருந்திடும், ஜென்மலக்கினத்திற் பொருந்திடும்படி மந்தனும், மாந்தியும், கூடியிருக்க சட்டாட்டமவியத்திற் சந்திரனிருக்க, தன்னால் மரணமாகும், சூரியன்புடத்தையும், எமகண்டன் புடத்தையும், கூட்டிக் கண்டராசியில், குருவருங்காலம், நோய்கொண்டு பூமியிற் றுன்பமுற்றிருப் பவனும்—எ-று. 718

இடும்பையா தித்தன் புடத்துடன் குளிக
னிசைந்திடும் புடத்தையுங் கூட்டி
நடந்தரா சியிற்சூ ரியன்வருங் காலம்
நலியதாஞ் சந்திரன் புடமும்
கடுந்திறற் குளிகன் புடத்தையுங் கூட்டிக்
கண்டரா சியிற்பிறை வருநாள்
அடுஞ்சரங் கடுமா வடுவரி குவளை
யயில்கய லானகண் ணளே.

இ-ள். வேலோ, கடலோ, விடமோ, கருவண்டோ, சேலோ, கணை யோவென்று செப்புதற்கரிய கண்களையுடைய பெண்ணே கேட்பாயாக, காந்தியாகிய, சூரியன் புடத்தோடு, மாந்தியாகிய, குளிகன் புடத்தையுங் கூட்டி வரும்ராசியில், சூரியன் வரும்போது நோயுண்டாம், சந்திரன்புடத் தையும் குளிகன் புடத்தையுங்கூட்டிக் கண்டராசியில், சந்திரன் சேரும் போதும், நோயுண்டாம்—எ-று. 719

நாளினிற் சன்ம லக்கினங் குளிகன்
நவிலிம கண்டகன் முதலாம்
கோளுடன் கால மிருத்துவிங் நாலுங்
கூட்டிய ராசிலக் கினத்தில்
மாளுநா ளாமிங் நால்வரைக் கூட்டும்
வகையிதிற் குளிகலக் கினத்தில்
நீளமட் டளவு மசுபதி முதலாய்
நிறைந்தநட் சத்திரங் கண்டே.

இ-ள். லக்கினம், குளிகன், எமகண்டன், காலமிருத்து; இந்நால்வர் ஸ்புடத்தையுங்கூட்டிக் கண்டராசிலக்கினத்தில், இறக்கின்றகாலமாம், இந்த

நால்வரையுங் கூட்டும்வகையாவது, குளிகன், லக்கினத்தின்வரையும், அசு பதி முதலாய்வரும், நட்சத்திரங்கண்டு, (அத்தொகையும்)—எ-று. 720

கண்டபின் குளிக னின்றலக் கினத்தின்
கடிகையிற் சென்றமட் டறிந்து
கொண்டது நக்ஷத் திரங்களைக் கண்டு
குதிரைமட் டெண்ணிமுன் னிருந்த
திண்டிறற் றொகையுங் கூட்டுதல் புடமாந்
தெரிந்துமுன் சொன்னநால் வருக்கும்
மண்டியிப் படியெண் ணியபுடங் கூட்ட
வந்திடு மரணலக் கினமே.

இ-ள். பின்குளிகன் நின்றலக்கினத்தின், நாழிகையிற் சென்றமட்டு மறிந்துகொண்டு அந்த நட்சத்திரத்தைக்கண்டு, அந்த நட்சத்திரமுதல், அசுபதிவரை, எண்ணி, அத்தொகையும், கூட்டக் கண்டதொகை, ஸ்புடமாம் இதுபோல், முன்சொன்ன நால்வருக்கும், குளிகனுக்குச்சொன்ன முறைப் படியே எண்ணிஸ்புடங்கூட்டவந்திடும் லக்கினம், மரணமாகின்ற லக்கின மாம்—எ-று. 721

வேறு.

லக்கினந் தனக்கெட் டாதிபன் குளிக
னவிலிரு பத்திரண் டான
நனிதிரை யக்கா ணாதிபன் காரி
நால்வரு மிருந்தவந் திசையோன்
தக்கதோர் பலன்க ளன்றியுந் றிடுவோன்
றன்மகா திசைவரு நாளில்
தரித்தலக் கினமிரண் டாமிட மெட்டாந்
தானமும் வியமனை தனிலும்
திக்கெனச் சனியீச் சுரன்வருங் காலஞ்
சீவனுக் கரிட்டமா மென்றே
செப்பினர் வராக மேயரே யந்நாள்
செகத்திலுள் ளோர்களு மறிய
மிக்கதோர் குளிகன் சனிகரு நாகம்
விரவுசன் மத்தினி லிருக்க
வியத்தினி லட்ட மாதிசன் மாதி
மேவினோ யான்மெலிந் திடுவன்.

இ-ள். பிறந்த லக்கினத்திற்குச் சிறந்த அட்டமாதிபன், குளிகன், இருபத்திரண்டாந் திரேக்காணத்ததிபன், சனி, இந்தநால்வரும், இருந்தவந்தி சையோர்கள் பொருந்தப் பலனற்றிருக்கின்றவர்களாகிய, இவர்கள் திசை

வருகின்ற காலத்தில், ஜென்மம், இரண்டு, எட்டுப் பன்னிரண்டாமிடங்களில், சனிவருங்காலம் சீவனுக்குத்தோஷமாம், குளிகன், சனி, இராகு, சென்மலக்கினத்திலிருக்கப் பன்னிரண்டாமிடத்தில், ஜென்மாதிபன், அட்டமாதிபனிருக்க, நோயால் மிகவருந்தி மெலிந்திடுவானுமென்று, ஜெகத்துள்ளோரறிய முன்வராகமேயர் சொன்னார்—எ-று. 722

வேறு.

இடமுறுஞ் சன்மத் தாதியெட் டதிப
னிருவருங் கூடிலா பத்தில்
திடமுடன் லாபத் தாதிமூ வருமாய்ச்
சேர்ந்திடி லவர்கடன் னுடனே
வடிவுட னெவர்பா வாதிக ளேனும்
வந்துதான் கூடினல் வருத்தத்
துடனுயிர் விடும்போ தருகினி லிருப்பர்
சொல்லும்லா பத்திசை மரணம்.

இ-ள். ஜென்மாதிபன், அட்டமாதிபன், லாபாதிபன், இம்மூவரும், சேர்ந்து பதினோராமிடத்திலிருக்க, அவர்களோடு, (தந்தைதாய்மைந்தர், மனைவி, சொந்தமாமனுகிய) எந்தப்பாவாதிகளேனும், கூடியிருக்கில், ஜாதகனுயிர்விடும்போது, அவர்கள்கூட, இருப்பவர்களாம், சொல்லும் பதினோராமிடத்ததிபன், திசையே கொல்லும், மரணதிசையேயாம்—எ-று. 723

மரணமார் கண்ட மறிவது பத்தா
மதிபதி துர்ப்பல னாகக்
கிரணமா ரகப்பேர் வருதிசை யதனிற்
கிட்டிய பொசிப்பவர் பலனும்
முரணுறு மிருவர் தமக்குமே விரோத
மூண்டிடு பகையதா யிருக்கில்
தரணிவிட் டண்டர் பதியினிற் செல்லுந்
தகமையென் றுரைக்கவேண் டிடுமால்.

இ-ள். நிரியாணம் கண்டம் தெரியவேண்டு மாயின், பத்துக்குடையவன் மெத்தத் துர்ப்பலமாக, அத்துடன் மாரகப்பேர்வருந்திசையில், பத்தாமிடத்தோன், புத்தியாய், இருவருக்கும்பகையாகவிருந்தால், ஜாதகன்மரணமாவன்—எ-று. 724

வேண்டிடு நான்கா மதிபதி யுடனு
மேவுமெட் டாதிபன் றானும்
ஈண்டியே தனது வீட்டினி லிருக்க
விறப்பது தாதைவாழ் பதியில்

தூண்டியே வியத்தி லாறினி லிருக்கிற்
றூரதே யத்தினி லிறப்பன்
நீண்டகா தளவுஞ் சென்றுகூ ரயிலை
நிகர்ந்திடுங் கருங்கணு ரணங்கே.

இ-ள். வேண்டிவருந்துங் காதளவுநீண்டிடும் வேலாயுதத்தை நிகர்த்த கருங்கண்களையுடைய பெண்ணேகேட்பாயாக, நான்காம், அதிபதியுடன், எட்டாமதிபதி தானும், தனது வீட்டிலிருக்கத் தகப்பன் பதியில்மரணமாம், ஆறுபன்னிரண்டா மிடத்திலிருக்கில், வேறுதூரதேசத்தில் இறப்பான்.

ஆரணங் கேகேள் பகலுதித் தானுக்
கடற்குளி கன்னுறை வீட்டுக்
கேரணி யைந்தொன் பதிற்சனி வருநா
ளிடுக்கணு மிரவினி லுதித்தால்
சேரணி குளிகற் கேழிடந் தனக்குத்
திரிகோண மதிற்சனி வருநாள்
தாரணி யறியக் கண்டமென் றுரைப்பர்
சாதக நிபுணமா தவரே.

இ-ள். ஆரணங்கே கேட்பாயாக, தாரணியிற் பகலிற்பிறந்த ஜாதகனுக்கு, குளிகனிருக்கின்ற வீட்டுக்குத் திரிகோணராசியிலும், இறவிற்பிறந்த ஜாதகனுக்கு, குளிகனுக்கு, எழாமிடத்துக்குத் திரிகோணராசியிலும், சனி வருங்காலம், கண்டமுண்டாமென்று விண்டுசொல்லுவர்—எ-று. 726

மாதவ மேஷ முதற்கரு நாகம்
வாழ்மனை யளவுமட் டெண்ணி
மீதிமீன் மட்டு மிருதொகை தன்னில்
விளங்கவே பெருக்கிமுந் நான்கில்
போதவே கழித்து மீந்தலக் கினத்தில்
புணர்திரி கோணரா சியினில்
ஏதமாங் காரி மருவுநாட் கண்ட
மிவையெலாங் கோசரந் தனக்கே.

இ-ள். மேஷமுதல், பாசராகு வாசஞ்செய்யும் நேசவீடுவரைக்குமெண்ணி, மிகுந்தராசியிலிருந்து, மீனவரையுமெண்ணி, இரண்டுதொகையும், பெருக்கிப் பன்னிரண்டிற்கழித்து, மீந்தராசியின், திரிகோணராசியில்,சனி வருங்காலம், கண்டமாம், இவையெல்லாம், கோசரந்தனக்கே என்பதாம்.

தனக்குமோ ரெட்டா மதிபதி யுடனுந்
தபனனுங் குசனுமே கூடி

எனக்கதிர் குசனு மெட்டினி லிருக்க
விருவரு மெட்டிடம் பார்க்கக்
கனத்துயர் வெற்பி லேறிவீழ்ந் திறப்பன்
காணிவ ரொடுபுகர் கூடில்
சினத்துறு விலங்கு பூண்டுகொண் டிருந்து
சீவனை விடுத்திடு வார்கள்.

இ-ள். அட்டமத்தோனும், அருக்கனும், அங்காரகனும், திட்டமாய், ஒன்றுகூடி, எட்டாமிடத்திலிருந்தாலும், பருதியுங் குருதியும்பொருதியாய் எட்டினிலிருந்தாலும், (அல்லது) பார்த்தாலும், மலையிலிருந்து விழுந்து இறப்பான், மேற்சொன்னபருதி குருதியோடு பிருகுவும், கூடியிருந்தால், இச்சுருதிப்படி விலங்குபூண்டிருந்து மரணமாவன்—எ-று. 728

வாருறை முலையாய் சனிமதி யிருவர்
மருவியட் டமத்தினி லிருக்கக்
காரிசந் திரனெட் டதிபனைக் கூடக்
கண்டிடக் கிணற்றில்வீழ்ந் திறப்பன்
சூரிய செவ்வாய் சனிசசி மூவர்
கூடிமுன் போலவே யிருக்கில்
பாரினிற் றன்கை யாலுயிர் மாய்ப்பன்
பலர்களும் பழித்திடும் படியே.

இ-ள். மீரிட்டதனத்தை வாரிட்டுமறைக்கும் பேதையே, இப்பாதையைக் கேட்பாயாக, மந்தன், சந்திரன், இருவரும், வந்து அட்டமத்திலிருக்க, அல்லது, அவ்விருவரும், செவ்வையாய், எட்டாமிடத்ததிபனைக்கூட, அல்லதுநோக்க, கிணற்றில் விழுந்திறப்பான். தெவ்வும், சனியும், செவ்வாயும், இம்மூவருஞ்சேர்ந்து அவ்வாறு முன்போலவேயிருந்தால், பாரிற் பலர்களும் பழித்திடும்படி, ஒவ்வாதுரிற்றன்கையா லுயிர்மாய்ப்பன்—எ-று.

படிதருஞ் செவ்வாய் சனியிவ ரெட்டிற்
பரிந்துறி லக்கினந் தன்னில்
கொடியவெய் யோனிந் தெட்டினி லிருக்கக்
கொடுமையாய்ச் சலத்தில்வீழ்ந் திறப்பன்
முடவனுங் கதிரு மெட்டினி லிருக்க
மூண்டிடு மகோதர வியாதி
அடல்சனி கதிர்தேய் பிறையுமெட் டுறையி
லக்கினி யாயுத மரணம்.

இ-ள். கந்தன், மந்தன் சந்திரன், இவர்களெட்டிலும், லக்கினத்திற் செக்கச்சிவந்த, சூரியனிருக்கப்பிறந்த ஜாதகன், ஜலத்தில்விழுந்திறப்பான்,

பிதுர்காரகனும், முதுமகனும், எட்டினிலிருக்க, மகோதரவியாதியாலும், பங்குபாதன், செங்கதிரோன், அமரபக்ஷத்திங்கள் இம்மூவருங்கூடி, அட்டமத்திலிருக்க, அக்கினியாலும், ஆயுதத்தாலும், மரணமாம்—எ-று. 730

மரணமார் வகையே மொன்பதி லிரவி
மந்தனுங் கூடியே யிருக்கக்
காரணமா றெட்டிற் குசனுற வெய்திற்
கமழ்சுரோ ணிதமெலா முலர்ந்து
திரணமா யெலும்புக் கூடதா யிறப்பன்
றேய்பிறை சனிகுச னெட்டில்
தரணியோ ரறியப் பாசபந் தத்தாற்
றன்னுயிர் மாய்ப்பனென் றுரைப்பார்.

இ-ள். ஏழு, ஒன்பதாமிடங்களில் வாழும், சூரியனும், சனியுங்கூடியும், செவ்வாயெட்டிலுமிருந்தால், உதிரம்வற்றி யுடலுமுலர்ந்து, எலும்புக்கூடுபோலிருந்து, இறப்பான், தேய்பிறைச்சந்திரன், மந்தன்,கந்தன், இவர்கள், அட்டமத்திலிருக்கத் திட்டமாய்ப் பாசபந்தத்தால், தன்னுயிரைமாய்ப்பவனுமாவன்—எ-று. 731

உரைத்திடும் பாவ ரொன்பதி லேழி
லுறைந்திட வட்டமந் தன்னில்
நிரைத்திரை யக்கா ணுதிப னிருக்க
நீடுமிம் மூன்றுவீட் டினையும்
விரைத்திடு நல்லோர் பார்வையற் றிருக்க
விலங்குட னிருந்தவன் றனது
கரத்தினுற் சீவன் றனைவிடுத் திடுவன்
காணெனச் சொல்லுவர் கண்டாய்.

இ-ள். பாவக்கோட்கள், தாவும், ஏழு, ஒன்பதாமிடத்திலிருக்கத்திரேக்காணுதிபன், அட்டமத்திலிருக்க, இம்மூன்று வீட்டையும்,!சுபர்கள் நாட்டமாய்ப் பார்க்காதிருக்க, விலங்குபூண்டிருந்து அவன்கையினுலுயிரைமாய்ப்பவனென்று சொல்லுக—எ-று. 732

கண்டலக் கினங்கள் கன்னியா யிதனிற்
கருதிடாப் பாவரு மிருக்க
எண்டிசை புகழ்மீ னத்தினிற் பாவ
ரிருந்திட வட்டமந் தன்னில்
மண்டிய பிறையுஞ் சுங்கனு மிருக்கின்
மாதர்செய் வாதையான் மடிவன்

கெண்டையம் பயின்மா வடுவிடம் போற்கட்
கிஞ்சுகம் போலுமென் மொழியாய்.

இ-ள். நஞ்சும், அஞ்சும், வேல், சேல், போன்ற விழியும், கிஞ்சுகம் போன்ற மென்மொழியுமுடைய பெண்ணே, கன்னியாலக்கினத்தில், வன்னெஞ்சுடைய, பாவிகளும், மீனத்தானத்தில், தோணப்பாவர்களும், அட்டமத்தில் வட்டச்சந்திரனும், இட்டச்சுக்கிரனுமிருந்தால் மங்கையர் செய்கின்ற சங்கடத்தால், இறப்பவனும்—எ-று. 733

மொழிகதிர் சனிதேய் பிறைகுச னுல்வர்
முயற்சியாய்க் கூடிலக் கினத்தில்
பொழிதிரி கோணந் தன்னிலே மேவப்
புண்ணியர் கண்டிடா திருக்கக்
கழிபடும் புகையாற் றீயினுற் கொள்ளிக்
கட்டையான் மருவலர் சுடவே
அழிபடு மெய்யில் வருத்தமுற் றிறப்ப
னவன்றலே நாள்விதி வசமே.

இ-ள். தினகரன், சனி, தேப்பிறைச்சந்திரன் செவ்வாய், இந்நால்வருங்கூடி, லக்கினத்திலும் திரிகோணவிராசியிலுமிருக்க, சுபர்கள் பாராதிருக்க, சத்துருக்களால், தீயாலும், புகையாலும், கொள்ளிக்கட்டையாலும்,சுடுபட்டு விடுபட்டு, வடுபட்டு, தேகங்கெட்டு, வருத்தப்பட்டு, இறப்பான். 734

வசமுட னெட்டிற் கதிர்சனி செவ்வாய்
மருவவே லக்கினந் தன்னில்
இசைபுதன் றேய்ந்த பிறைகரு நாக
மிருக்கின்மெய் புழுத்துடன் மடிவன்
புசபல காரி தேய்பிறை யெட்டிற்
பொருந்திடி லவர்தமைச் செவ்வாய்
நிசமுடன் பார்க்கி லரசனற் கிருமி
நிறைந்திடுந் துயரினு லிறப்பன்.

இ-ள். எட்டாமிடத்தில், கட்டாகச் செங்கதிரோன், சனி, செவ்வாய் சேர்ந்திருக்க, லக்கினத்தில், தேய்பிறைச் சந்திரன், தேர்ப்பாகன், இராகு, இவர்களிருந்தால், தேகம்புழுத் திறப்பான், திறமைபெற்ற சனியும், தேய்பிறைச்சந்திரனும், அட்டமத்திலிருக்க, அவர்களைச் செவ்வாய்பார்க்க, கிருமி நிறைவால் இறப்பான்—எ-று. 735

மருவிய பத்திற் சூரிய னுறின்
மங்கலன் வியத்தினிற் காரி

விரவிய விரண்டிற் கரியகோ விருக்க
மேவலர் சூனிய குணத்தால்
சருவிய குளிசக் கட்டினல் வருந்திச்
சஞ்சல முற்றிருந் தவன்றன்
கருவிகள் பிரிந்தே சோபமுற் றிறப்பன்
காசினிக் கன்றிடுங் காலே.

இ-ள். பத்தாமிடத்திற் பருதியும், ஆறுமிடத்திற் குருதியும், பன்னிரண்டாமிடத்திற் சனியும் இரண்டாமிடத்தில், மூரண்டுள்ள ராகுவுமிருந்தால், சத்துருக்கள், சூனியத்தாலும், குளிசக்கட்டினலும், காசினிக்குள் வாசியுமடங்கி தத்துவங்கெட்டு, மெத்தவருத்தப்பட்டு, இறப்பான்—எ-று.

காலேயோ ரேழிற் சூரியன் செவ்வாய்
கருதுமெட் டிற்சனி யாறில்
சாலவே குறைந்த பிறைபுறச் சன்மந்
தன்னிலே ழெட்டினிற் புதனுஞ்
சீலமா யிருக்கி லிடியினன் மடிவன்
றிரயக்கா ணதிபர் தன்னில்
மேவிரு பத்தி ரண்டுளாந் தனது
வீடுலக் கினமென விளம்பும்.

இ-ள். ஏழாமிடத்திற் பருதியும், குருதியும் எட்டாமிடத்திற்சனியும், ஆறுமிடத்தில், அமரபக்ஷச்சந்திரனும், ஜென்மம், ஏழு, எட்டாமிடத்திற் புதனும், இருந்தால், இடியினல் இறப்பான், திரேக்காணமாவது, லக்கின முதல், ராசிஒன்றுக்கு, மும்மூன்று, திரேக்காணமாக, ஏழுராசிவரையும், இருபத்தொரு திரேக்காணமும், அதன்மேல் வருவது, (22) ந்திரேக்காண லக்கினமாம், (ஒவ்வொரு கிரகங்களுக்கு மிப்படியே)—எ-று. 737

விளம்புமா றெட்டுப் பன்னிரண் டதிபன்
மேவிய பாவிதா னகில்
உளஞ்செறி யற்பா யுள்சுபர் பார்க்கி
லோதிய தீர்க்கமா மென்றே
களஞ்செறி நல்லோர் பாவரு மாகிக்
கண்டது மத்திம வயதே
இளம்பிறை நுதல்வேற் பொருகயற் கண்ணுக்
கிசைந்திடு விழியின ரணங்கே

இ-ள். சட்டாட்டமவியத் ததிபர்கள் கெட்டபாவர்களாகில், அற்பாயுளாம், சுபர்பார்த்தால், தீர்க்காயுளாம், சுபரும் பாவருங்கலந்து பார்த்தால், மத்திம ஆயுளாம்—எ-று. 738

நாளெனும் வியமா றெட்டினி லதிப
னன்றுகேந் திரத்தினி லிருக்கில்
வாள்விழி யணங்கே யற்பவா யுசுத்தான்
மத்திமம் பணபரத் திருக்கில்
தாள்செறி யணங்கே யாபோக்கி லீயந்
தானுறி லாகுநா ளுண்டே
கோளினிற் குளிகன் மனைவருங் காரி
குலவிய நாள்களுந் தீதே.

இ-ள். சட்டாட்டம வியத்ததிபர்கள் திட்டமாய்க் கேந்திரங்களிலிருந்தால், அற்பாயுள், பணபரத்திலிருந்தால், மத்திமவாயுள், ஆபோக்கிலீயத்திலிருந்தால், தீர்க்காயுளாம், கோசரத்துக்குக் குளிகனிருந்த வீட்டிற் சனி வருங்காலம் தீமைகளுண்டாம், கேந்திரமென்பது, (1) (4) (7) (10) மிடங்கள், பணபரமென்பது, (2) (5) (8) (11) மிடங்கள், ஆபோக்கிலிய மென்பது, (3) (6) (9) (12) மிடங்கள்—எ-று. 739

தீதெனும் வியமா றெட்டினி லதிபன்
னிவர்களிற் பலன்களு மில்லாப்
போதுறுந் தனக்கே யவன்மகா திசையிற்
பொருந்திய கண்டகா லமதாம்
ஈதினில் வியமா றெட்டினி லதிபன்
மேவிய திசைகளுங் கூடி
ஏதுறு நடக்கு மவர்திசை யந்தத்
தியல்புடன் கண்டகா லமுமாம்.

இ-ள். தீதென்றுசொல்லாநின்ற, ஆறு, எட்டும் பன்னிரண்டாமிடத்ததிபர்கள், பலனற்று யாதொரு பலன்களுந் தாராதபோது தனக்கே அவன் மகாதிசைகளிற் கண்டகாலங்களாகும் இதிலும், மேற்சொன்ன ஆறு எட்டுப் பன்னிரண்டாமிடத்ததிபர்கள், புத்திகள்கூடிய காலத்தின் கடைசியிலும் கண்டங்களாகு மென்பதாம்—எ-று. 740

காலமாம் பரிதி லக்கின திகளுங்
கருதுமித் துருவதே யாயின்
தூலமாந் தீர்க்க வயதென வுரைப்பர்
சொல்லிய சமமதே யாயின்
மூலமா மத்தி மம்பகை யாயி
னுறுவது முப்பத்து மூன்றே
கோலமாம் லக்கின நவாங்கிசை பதிக்குக்
கூரிய சனிவரிற் றுன்பம்.

இ-ள். சூரியனும், லக்கினாதிபனும், மித்துருவானால், தீர்க்கவயதாம், சமமாயின், மத்திமவயதாம், பகையாகில், முப்பத்திமூன்று வயதாம், லக்கின நவாங்கிஷவீட்டுக்குச் சனிவருங்காலம், துன்பமாம்—எ-று. 741

துன்பமே யில்லா வுச்சலக் கினத்தைத்
தொடர்ந்துமுப் பதுபங்க தாக்கி
வன்பொடு சூரி யன்பத்தாம் பங்கு
மதிமூன்று குசனிரு பத்தெட்
டின்பமாம் புதன்மூ வைந்துபன் னேழா
மெழிற்குரு புகரிரு பத்தேழ்
வின்சதி சனிபூ ரணவய தேழு
நீசமா மற்பமென் றுரையே.

இ-ள். துன்பத்தைப்போக்கி, இன்பத்தைத் தராநின்ற, உச்சலக்கினத்தை, முப்பதுபங்காக்கி, சந்திரன், ஒன்றுமுதல், மூன்றுபங்குவரையும், சூரியன் பத்துப்பங்குவரையும், புதன், பதினைந்துபங்குவரையும், குரு, பதினேழுபங்குவரையும், சுக்கிரன், இருபத்தேழு பங்குவரையும், செவ்வாய், இருபத்தெட்டுப் பங்குவரையும், சனி முப்பதுபங்கு வரையுமுள்ள பங்குகளிலிருக்கப் பூரணவயதாம், இது நீசமானால் அற்பவயதாம்—எ-று. 742

சென்மதா ரகைக்கா றெட்டுநட் சத்திரத்
திசையதா மாரக மதனுள்
வன்மமோ றெட்டிற் கெட்டாறு மின்னம்
வருமாறி னுக்குமா றெட்டாம்
பன்மைதா ரகையின் றிசையின்மா ரகமாம்
பார்க்கவே யிரட்டியாய் வந்தால்
தின்மைகா லமுமா மவருடை புசிப்பிற்
சேதமே யாகுங்கண் டாயே.

இ-ள். ஜென்ம நட்சத்திரத்தைத்தொட்டு, ஆறு எட்டாவது நட்சத்திரத்திசையும், எட்டாவது நட்சத்திரத்திற்கு,ஆறு,எட்டாவது, நட்சத்திரத்திசையும், ஆறாவது நட்சத்திரத்திற்கு, ஆறு, எட்டாவது, நட்சத்திரத்திசையும் மாரகமாம், இது இரட்டைநட்சத்திரத்திசையாகவரில், கெட்டபலன்களாம், மேடபுத்திவந்தால் மாரகமாம்—எ-று. 743

வேறு.

கண்ட சன்மஞ் சராராசி கருதி யாறு திபன்பார்க்கக்
கொண்ட செவ்வாய் லாபத்திற் கூறுந்திரரா சிக்குடையோன்
பண்டே யொன்ப தினிலிருக்கப் பாக்கி யாதி திரத்திலுற
உண்டாஞ் சத்துரு நாகத்தா லோமம் பண்ண வருமரணம்.

இ-ள். ஜென்மலக்கினஞ் சரவிராசியாக, அதை ஆறுக்குடையவன் பார்க்க, செவ்வாய் லாபத்திலிருக்க, திரராசிக்குடையவன், ஒன்பதிலும், ஒன்பதுக்குடையவன், திரராசியிலுமிருக்க, சத்துருக்களால், சர்ப்ப ஓமமந்திரங்கள் செய்ய அதனால் மரணம் வருமென்பதாம்—எ-று. 744

வருநா விடத்தி லக்கினத்தில் வளருங் கேது குளிகனுடன்
அருள்சேர் திருக்கச் சூனியமு மபிசா ரத்தா லுறுமரணம்
திரளாம் வியத்திற் கேதுவுறத் தேடிப் பாவர் மிகநோக்கப்
புரவே யம்மை யான்மரணம் பொன்பார்த் திடிலோ வடுவுண்டாம்.

இ-ள். ஜென்மலக்கினத்திலும், நாலாமிடத்திலும், செம்பாம்பு, வம்பாம்புடனிருந்தால், சூனியத்தாலும், யுத்தத்தாலும், மரணமாம், பன்னிரண்டாமிடத்திற் கேதுவிருக்கப் பாவர்கள்பார்க்க, வைசூரியால் மரணமாம், குருபார்க்க, அம்மைத்தழும்பு உண்டாம்—எ-று. 745

12-ராசிக்கும் சுபாசுபக்கிரக மாரகபலன்.

வே று.

சாற்றுமோர் துவா தசமாம் லக்கினந் தன்னை யோர்ந்து
நேர்த்தியாய்ச் சுபரும் பாவர் நிறையோக மார கங்கள்
போற்றியே யவர்தம் வீட்டிற் பின்பல முரைக்கு நூலின்
தேற்றமே யறிந்து கொண்டு செறிபல னுரைப்பாய் தானே.

இ-ள். பன்னிரண்டு லக்கினங்களையும், முன்னால் இன்ன லக்கினந்தானென்று நிச்சயித்து, சுபர் பாவர், யோகம், மாரகம், வீட்டின்பலம் இவைகளைச் சொல்லக்கூடிய சாஸ்திரங்களின் தெளிவுகளைத் தெரிந்துகொண்டு பின்னால், நெருங்கியபலன்களை, ஜாதகத்திற்குச் சொல்லவேண்டும்—எ-று.

தானுறு மேடத் தோற்குச் சனிபுகர் புந்தி பாவர்
வானுறும் பரிதி தேவ வான்குரு சுபனு மென்றே
கானுறு மிவர்கள் கூடக் கடினமாம் பலன்க ளற்பம்
தேனுறுஞ் சுக்கி ரன்றன் றிசையிற்றான் மார கங்கள்.

இ-ள். மேடலக்கினத்தில், ஜெனித்தவருக்குப் பங்கு, பளிங்கு, பண்டிதன், இவர்கள் பாவிகளாம், பிங்கலன், தங்கலன், சுபர்களாம், இவர்கள் கூடி நின்றால், பலன்கள், சொற்பமாம், சுக்கிரதிசையில், மாரகமாம்.

சந்திரகாவியஞ் சொன்னவர் கருத்து.

மேடலக்கின ஜாதகருக்கு, சந்திரன், சுக்கிரன், கேந்திராதிபத்தியத்தாலும், புதன் (3) (6) க்கும், சனி, (11) க்கும், உடையவராதலும், பாவிகள், சூரியன்,குரு, கோணாதிபத்தியத்தாலும், செவ்வாய் அட்டமாதிபத்தி

யம் பெற்றபோதிலும், இலக்கினுதிபத்தியத்தாலும், சுபர்கள், சனி பத்துக்குடைய ஆதிபத்தியம் பெற்றபோதிலும், பதினொன்றுக்குடைய ஆதிபத்தியம் பெற்றுப் பாவியாய்விட்டதால் அவனோடுசேர்ந்தால் வியாழன், ஒன்பதுக்குடையவனு யிருந்தாலும், யோகங்கொடாததோடு பாவியுமாவன், சுக்கிரன், இரண்டு, ஏழுக்குடைய மாரகனுயினும், இரண்டுக்குடைய ஆதிபத்தியம் பெற்றதால் கொல்லான், புதன் சனி, முறையே, மூன்று பதினொன்றுக்குடைய ஆதிபத்தியம் பெற்றதால் கொல்வர், என்பதையுணர்க—எ-று.

வே று.

களமே ரிஷபஞ் சன்மத்தோற் கரசன் புகர்சூ ரியன்மூவர்
உளவாம் பாவி கதிர்சனியு முயர்ந்த சுபனும் யோகங்கள்
வளமார் புகருந் தான்குடும்ப மாரகத்தோ னும்பாவி
புளகார் திதலே யுறுங்கொங்கை பூவைக் குரலா ரும்மானே.

இ-ள். தேமலும் புளகமும், செறிந்தகொங்கையும், வாமமுங் குயிற்குரல் வாய்ந்த வசனமுடைய மங்கையே, ரிஷபலக்கினத்தோருக்கு, சீமன், காமன், சோமன், இம்மூவரும் பாவிகள், தீமன், மீமன், சுபர்கள் இன்னுமிவர்களே யோகர்களுமாம், சுக்கிரன் குடும்ப மாரகபாவனும்.

இடபலக்கின ஜாதகருக்கு, சந்திரன், சுக்கிரன், வியாழன், (3) (6) (11)க்குடையவர்களாவதால் பாவிகள், சூரியன், புதன், சனி, கேந்திரகோணுதிபர்களாவதால், சுபர்கள், சனி, தன்மகன்மாதிபதியாவதால் இராஜயோககாரகன், சந்திரன் செவ்வாய், வியாழன், மூன்று, ஏழு, எட்டுக்குடையவர்களாதலால், மாரகர்கள், புதன், இரண்டுக்குடையவனுதலால், கொல்லான், என்று சந்திரகாவியங் கூறுகின்றது—எ-று. 748

மானே மிதுன லக்கினத்திற் கரசன் செவ்வாய் கதிர்பாவர்
தானே சுக்கிரன் சுபனுகு மதியுஞ் சனியு மற்பபலன்
வானுர் பாவர் திசைய தனின் மன்னுமார கம்மென்னே
தேனே யனேய மதுரமொழிச் செவ்வாய் முறுவல் சிறுநுதலாய்.

இ-ள். தேன்போன்ற மொழியும், மான்போன்ற விழியும், முன்னஞ் சிவந்தவாயும், சின்ன நுதலும், புன்னகையுமுடைய கன்னிகையே கேட்பாயாக, இன்னிலமதனில், நன்னடையுள்ள, மிதுனலக்கினத்திற்கு, சீமன் பூமன், மீமன், பாவிகளாம், சுக்கிரன், சுபனும் சோமனுந் தீமனும், அற்பபல முடையவர்களாம், பாவர்திசையில் மாரகமாம்.

மிதுனலக்கினஜாதகர்க்கு, புதன், குருகேந்திராதிபத்தியத்தாலும், சூரியன், மூன்றுக்கும், செவ்வாய், ஆறு, பதினொன்றுக்கும், உடையவராதலாலும், பாவிகள், சுக்கிரன், ஐந்துக்குடைய கோணுதிபத்தியத்தால், சுபன் அட்டமாதிபத்தியம்பெற்றதால், ஒன்பதுக்குடைசனி, கன்மாதிபதியாகிய,

வியாழனோடு கூடினாலும், இருவர்க்கும், இராஜயோகமில்லை, சந்திரன், இரண்டுக்குடைய, ஆதிபத்தியத்தால், மாரகங்கொடான் சூரியன், செவ்வாய், வியாழன் மூன்று, ஆறு, ஏழுக்குடைய, ஆதிபத்தியத்தால் மாரகங் கொடுப்பார், என்று சந்திரகாவியங் கூறுகின்றது—எ-று. 749

நுதலுங் கடகம் புந்திபுகர் நோய் செய் பாவர் குருசெவ்வாய்
இதமார் சுபனுஞ் சேயோக மிருக்கும் பரிதி மாரகனும்
முதலே சிங்கம் புகர்புந்தி மோதும் பாவர் சேய்சுபனும்
மதலை யோகம் பொன் வெள்ளி மழைக்கோ னுடன்மா ரகன்மாலே.

இ-ள். கருதும்படியான கடகலக்கினத்திற்கு, காமன், சாமன், பாவிகள், பூமன், பொன்னவன், சுபர்கள், உலோகிதன் யோகமுள்ளவனும், மார்த்தாண்டன், மாரகனும்.

கடகலக்கின ஜாதகர்க்கு, புதன் மூன்றுக்குடைய, ஆதிபத்தியத்தாலும், சுக்கிரன், நாலுக்குடைய கேந்திராதிபத்தியத்தோடு, பதினொன்றுக்குடைய ஆதிபத்தியத்தாலும், பாவிகள், செவ்வாய், ஐந்து, பத்துக்கும், வியாழன், ஒன்பதுக்கு முடையவர்களாதலால், சுபர்கள், வியாழன், செவ்வாய், தன்ம கன்மாதிபதியாய்க் கூடுவதால், இராஜயோகங் கொடுப்பர், சூரியன், இரண்டுக்குடையவ னாதலால், மரணத்தைக் கொடான், புதன், மூன்றுக்கும், சனி, ஏழு, எட்டுக்கு முடையவர்களாதலால், மாரகங்கொடுப்பர், என்று சந்திர காவியங்கூறுகின்றது.

சிங்கலக்கினத்திற்கு, பண்டிதன், பளிங்கு, பாவர்களாம், செந்நீவண்ணன் சுபனும், பொன்புகர்கூடயோகமாம், புகர்புந்திகூட மாரகமாம்.

சிம்மலக்கின ஜாதகர்க்கு, சனி, புதன், ஆறு, பதினொன்றுக் குடையவராகவும், சுக்கிரன் மூன்றுக்குடையவ னுவதோடு பத்துக்குடைய கேந்திராதிபதியாகவும் வருவதால், பாவிகள், சூரியன், லக்கினத்துக்கும், செவ்வாய், நாலு, ஒன்பதுக்கும், உடையவர்களாதலால், சுபர்கள், செவ்வாய், சுக்கிரன் தன்ம கன்மாதிபதியாதலால், சம்மந்திக்கில் இராஜயோககாரகராவர், புதன், இரண்டுக்குடையவ னாதலால், கொல்லான், சுக்கிரன், சனிமூன்று, ஏழுக்குடையவர்களாகலாற் கொல்லுவர்கள் என்று, சந்திர காவியங்கூறுகின்றது—எ-று. 750

மாலை கன்னி சேய்மதிபொன் மன்னும் பாவர் புதன்சுபனும்
காலை யோகம் புந்திபுகர் கனமா ரகன்சுக் கிரன்பாவி
போலாந் துலாத்திற் சேப்பரிதி குருவும் பாவர் சனிபுதனும்
மேலாஞ் சுபர்கண் மதிபுந்தி யோக மாரகன் செவ்வாயே.

இ-ள். கன்னியாலக்கினத்திற்கு, பூமன், சோமன், சீமன், இவர்கள் பாவர்களாம், சாமன், சுபனும், சாமன் காமன் யோகமுள்ளவர், சுக்கிரன், அக்கிரமமாய் மாரகஞ்செய்யும் பாவியாம்.

கன்னியாலக்கின ஜாதகர்க்கு, புதன், வியாழன், கேந்திராதிபத்திய தோஷத்தாலும், செவ்வாய், மூன்று எட்டுக்கும், சந்திரன்; பதினொன்றுக்கு முடையவர்களாகலானும், பாவிகள், சனி, சுக்கிரன், ஐந்து ஒன்பதுக்குடை யவர்களாகலாற் சுபர்கள்; சுக்கிரனும், புதனும், தன்மகன்மாதிபதி யாவதாற் சம்பந்திக்கில், இராஜயோக காரகராவர், சுக்கிரன், இரண்டுக்குடையவனாக லின், மாரகங்கொடான், செவ்வாய், மூன்று எட்டுக்கும், வியாழன் சந்திரன், ஏழுபதினொன்றுக்கு முடையவர்களாகலான், மாரகங்கொடுப்பார்கள், என்று சந்திரகாவியம், கூறுகின்றது.

துலாலக்கினத்திற்கு, பூமன், மீமன், சீமன், பாவர்கள்; தீமனுஞ் சாம னும், சுபர்கள்; சோமனும், சாமனும், யோகமுள்ளவர்கள், பூமன், மாரக னும்.

துலாலக்கின ஜாதகர்க்கு, மூன்று, ஆறுக்குடைய வியாழனும், பதி னொன்றுக்குடைய சூரியனும், கோணாதிபத்தியம், பெறாதகேந்திராதி பதிக ளான, செவ்வாயும், சந்திரனும்; பாவிகள்; இலக்கினாதிபத்தியத்தால், அஷ் டமாதிபத்தியதோஷம் நீங்கிய சுக்கிரனும், நாலு, ஐந்துக்குடைய சனியும், ஒன்பதுக்குடைய புதனும், சுபர்கள்; புதன், சந்திரன், தன்ம கன்மாதிபதிக ளாவதாற் சம்பந்திக்கில் இராஜயோக காரகராவர், செவ்வாய், ஏழுக்குடைய, ஆதிபத்தியம் பெற்றும், இரண்டுக்குடைய னானதால், கொல்லான், வியா ழன், சூரியன், மூன்றுபதினொன்றுக் குடையவர்களானதால் கொல்லுவர், என்று, சந்திரகாவியம் கூறுகின்றது—எ-று. 751

ஏய தேள்மால் சேய்பளிங்கோ யியன்ற பாவ ரிந்துசுபன்
தூய யோக மதிகதிராந் தொடர்ந்த குருவோ மாரகனும்
ஆய தனுசில் புகர்பாவி யாரல் பரிதி சுபராகும்
நேய யோக புந்திபுகர் நீண்ட சனியும் மாரகனே.

இ-ள். விருச்சிகலக்கினத்திற்கு, சாமன், பூமன், காமன், பாவிகள்; சோமன், சுபன்; சோமனும், மீமனும், யோகர்களாம், தீமன், மாரகனும்.

விருச்சிகலக்கின ஜாதகர்க்கு, சனி செவ்வாய், மூன்று ஆறுக்கும், புதன், எட்டு பதினொன்றுக்கு முடையவர்களாகலானும், சுக்கிரன், கேந்திராதிபதி யாகலானும், பாவிகள்; வியாழன், சந்திரன், சூரியன், ஐந்து, ஒன்பதுபத்துக் குடையவர்களாகலாற் சுபர்கள்; சந்திரனும், சூரியனும், தன்மகன்மாதிபதி களாகலாற்சம்பந்திக்கில், இராஜயோக காரகராவர்கள்; வியாழன், இரண்டுக் குடையவனுவதால், கொல்லான், சனி, சுக்கிரன் புதன், மூன்று, ஏழு, எட் டுக்குடையவர்களாதலாற் கொல்வர்கள், என்று, சந்திரகாவியம் கூறு கின்றது.

தனுசுலக்கினத்திற்கு, காமன், பாவி; பூமன் மீமன், சுபராம்; சாமன், காமன் யோகமுள்ளவர்கள்; தீமன் மாரகனும்.

தனுசுலக்கின ஜாதகர்க்கு; வியாழன், புதன் கேந்திராதிபத்தியத்தா லும், சனி மூன்றுக்கும் சுக்கிரன், ஆறுபதினொன்றுக்கு முடையவராகலா

னும், பாவிகள்; செவ்வாய், சூரியன், ஐந்து, ஒன்பதுக்குடையவர்களாவதால், சுபர்கள்; சூரியன், புதன், தன்ம, கன்மாதிபதியாதலாற் சம்பந்திக்கில், இராஜயோககாரகராவர்கள்; சனி, இரண்டுக்குடையவனுதலானும், சந்திரனுக்கு, அஷ்டமாதிபத்தியதோஷ மின்மையாலும், இவர்கள் கொல்லார்கள் சுக்கிரன் புதன், ஆறு, ஏழுக்குடையவர்களாதலால், கொல்லுவர்கள். என்று சந்திரகாவியம் கூறுகின்றது—எ-று. 752

மாகஞ் சுருவிற் குருசெவ்வாய் மதியும் பாவர் புகர்புந்தி
ஆகுஞ் சுபரா மாயோக மருளுஞ் சுக்கிரன் மாரகன்சுன்
பாகார் கும்பங் குருமதிசேய் பாவர் சுக்கிரன் சுபனுகும்
தாகார் யோகம் பளிங்குபுதன் றள்ளு மரசன் முன்பாவி.

இ-ள். மகாலக்கினத்திற்கு, சீமன், பூமன், சோமன், பாவர்களாம்; சாமன், காமன், சுபர்களாம்; சுக்கிரன் யோககாரகன், தீமன், தீயமாரகனும்.

மகாலக்கின ஜாதகர்க்கு, வியாழன், செவ்வாய் மூன்றுபதினொன்றுக் குடையவர்களாகலானும், சந்திரன் கேந்திராதிபனுகலானும், பாவிகள்; சுக்கிரன், ஐந்து பத்துக்கும், புதன், ஒன்பதுக்கு முடையவர்களாகலாற் சுபர்கள்; புதனும், சுக்கிரனும், தன்மகன்மாதிபதியாகலாற் சம்பந்திக்கில் இராஜயோக காரகராவர்கள்; சனி, இரண்டுக் குடையவனுவதாலும், சூரியனுக்கு, அஷ்டமாதி பத்தியதோஷ மின்மையாலும், அவ்விருவரும், கொல்லார், வியாழன், சந்திரன், மூன்று, ஏழுக்குடையவர்களாதலால் கொல்வர்கள், என்று, சந்திரகாவியம் கூறுகின்றது.

கும்பலக்கினத்திற்கு, சீமன், சோமன், பூமன், பாவர்களாம்; காமன்; சுபன்; காமனும், சாமனும், யோகமுள்ளவர்களாம்; குரு, மாரகனும்.

கும்பலக்கின ஜாதகர்க்குச் செவ்வாய், சந்திரன் வியாழன் மூன்று, ஆறு, பதினொன்றுக் குடையவர்களாவதால், பாவிகள், சனி, சூரியன், சுக்கிரன், ஒன்று, ஏழு, ஒன்பதுக் குடையவர்களாவதால், சுபர்கள்; சுக்கிரன், செவ்வாய், தன்ம கன்மாதிபதியாவதால், சம்பந்திக்கில், இராஜயோக காரகராவர்கள், வியாழன், இரண்டுக் குடையவனுவதால் மாரகன்கொடான், செவ்வாய், சந்திரன் மூன்று ஆறுக்குடையவர்க ளாவதால், மாரகங்கொடுப்பர் என்று, சந்திரகாவியம், கூறுகின்றது—எ-று. 753

ப்ாவி மீனங் காரிபுதன் பளிங்கு பதங்கன் பாவியரே
மேவுஞ் செவ்வாய் மதிசுபராம் விளங்கும் யோக குருவாரல்
தாவும் மாரகன் சேயென்றே சாற்றுந் துவாதச லக்கினத்தை
ஆவ லறிந்தே சுபாசுபங்க ளறிந்து கூறப் பண்பாமே.

இ-ள். மீனலக்கினத்திற்கு, தீமன், சாமன், காமன், மீமன், பாவிகளாம்; பூமன், சோமன், சுபராம்; சீமன், பூமன், யோகமுள்ளவர், ஆரல்,

மாரகனும், என்று சொல்லக்கூடிய துவாதசலக்கினத்தின், சுபாசுபங்களை, அறிந்து, சொல்லின், குணமான நன்மையாம்.

மீனலக்கினஜாதகர்க்கு, வியாழன், புதன், கேந்திராதிபதியாகலானும், சுக்கிரன், மூன்று, எட்டுக்கும், சூரியன், சனி, ஆறு, பதினொன்றுக்கும், உடையவர்களாகலானும், பாவிகள்; சந்திரன் செவ்வாய், ஐந்து, ஒன்பதுக் குடையவர்க ளாகலாற் சுபர்கள்; செவ்வாய், குரு, தன்ம கன்மாதிபதிபர்க ளாகலாற் சம்பந்திக்கில், இராஜயோக காரகராவர்; செவ்வாய், இரண்டுக் குடையவனாகலாற் கொல்லான்; சுக்கிரன், மூன்று எட்டுக்கும் சூரியன், புதன், சனி, ஆறு, ஏழு, பதினொன்றுக்கு முடையவர்களாகலாற் கொல்வர் கள், என்று, சந்திரகாவியம் கூறுகின்றது—எ-று. 754

பாலாரிட்டம்.

பண்பா றதிபன் லக்கினாதி பாவ னாகிப் பலமறவே
நண்பா மேழி லுற்றிருக்க நல்லோர் காணார் மாதமிரண்
டென்பார் லக்கி னாதிபதிக் கெட்டின் மிகவே பாவர்களும்
திண்பாய் நோக்க முற்றிடவே திங்க ளான்கில் வருமரணம்.

இ-ள். சட்டமாதிபனும், திட்டமான, லக்கினாதிபனும், பாவிகளாய், பலமற்று, ஏழாமிடத்திலிருக்க, சுபர்கள் பார்க்காதிருக்கின், இரண்டுமாதத் திலும், லக்கினாதிபதிக்கு, அட்டமத்தில் பாவிகளும், அவர்களின் பார்வை பெற்றிருக்கின் நாலுமாதத்திலும், மரணமாம்—எ-று. 755

இவன்றன் லக்கி னாதிபதியிதுவே பாவன் பலமறவே
சுவனே பார்வை வர்ச்சிதமாய்ச் சொல்லு மாறு திங்கடனில்
தவமா றெட்டிற் பன்னிரண்டிற் றக்க பாவர் நோக்கமுற
கவன முடனே யிருநான்கிற் காணும் மரணங் கண்டீரே.

இ-ள். ஜென்மலக்கினாதிபதி, பாவியாய்ப் பலமற்று, சுபர்கள் நோக்க மற்றிருக்கில், ஆறுமாசத்திலும், மறைவுஸ்தானமாகிய, சட்டாட்டமவியத் தில் பாவர்கள், பார்வைபெற்றிருக்கில், எட்டுமாதத்திலும், மரணமாம்.

கண்ட வமர பக்கத்திற் காணுஞ் சோம னெட்டாறில்
தொண்ட சன்ம மிதிற்பாவர் கூடி நோக்க விரைந்தே
மண்டு மெட்டிற் சென்மத்தில் வந்தே பாவர் தானிருக்க
மிண்டாய் நல்லோர் நோக்கமிலா மேவின் வருஷ மொன்றிலுமே.

இ-ள். தேய்பிறைச்சந்திரனை ஆயுங்கால், ஒன்று ஆறு, எட்டாமிடங்க ளில், இருந்து, அவனைப் பாவர்கள்கூட, அல்லது நோக்கப் பத்துமாசத்தி லும், ஒன்று, எட்டில், பாவர்களிருக்கச் சுபர்கள், பார்வையில்லாவிட்டால், ஒருவருஷத்திலும், மரணமாம்—எ-று. 757

ஒன்றே காரி வக்கிரமா யோதும் புந்தி செவ்வாயும்
அன்றே ஒருவீட் டினிலுறவே யாறைந் தெட்டுப் பன்னிரண்டில்
நின்றே சன்ம மோரிரண்டி னிற்கக் குசன்ருனுற்ருலும்
நன்றே சுபர்க ணோக்கமிலா நாளும் வருஷ மிரண்டினுமே.

இ-ள். சனி, வக்கிரம்பெற்று, சாமனும், பூமனுங்கூடி நேமமாய்,ஐந்து ஆறு, எட்டு, பன்னிரண்டில் இருக்க, லக்கினதிபதி யிரண்டில் நிற்கச் செவ்வாய் கூடினுலும், சுபர்கள் பார்வையில்லாவிடின், இரண்டுவருஷத்தில் மரணமாம்—எ-று. 758

நாளுஞ் செவ்வாய் தனக்கெட்டி னண்ணிக் குருவுந் தானிருக்கக்
கோளும் பரிதி செவ்வாயுங் கொண்ட மதியைப் பார்த்திடவே
மீளுஞ் சுங்கன் கண்ணுட்டி மேவி ணோக்க மில்லாத
ஆளும் வருஷ மூன்றெனவே யறைவர் கணித வல்லோரே.

இ-ள். மங்கலனுக்கு எட்டில், தங்கலனிருக்க, மங்கலனும், பிங்கல்னும், திங்களாகிய சங்கலனைப்பார்க்க, நங்கலன், இவர்களைக் கண், நாட்டிப்பார்க்காதிருந்தால், மூன்றுவருஷத்தில் மரணமாம்—எ-று. 759

வல்ல சன்மந் தனக்கெட்டு வாழு மதற்கோ ரெட்டதனை
நல்லோர் பார்க்கக் கோணத்தை நாடும் பாவ ரொருநான்கே
சொல்லுஞ் சன்ம ராசிக்குச் சுபக்கோ டிருஷ்டி வர்ச்சிதமாய்
ஒல்லும் பாவர் பார்வையுற வோங்கு வருஷ மைந்திற்சாம்.

இ-ள். ஜென்மலக்கினத்திற்கு, மூன்று, எட்டாமிடங்களைச் சுபர்கள் பார்க்க, திரிகோணத்தைப் பாவிகள் நோக்க, நாலுவருஷத்தில் மரணமாம். ஜென்மராசியைச் சுபக்கோட்கள் பார்க்காமல் பாவர்கள் பார்த்தால், ஐந்து வருஷத்தில் மரணமாம்—எ-று. 760

சாமே வியமா றெட்டதனிற் சனிசூழ் பரிதி ராகுமதி
ஆமே யிருக்கச் சுபர்திருஷ்டி யல்லால் வயதோ ராறுதரும்
தாமே சன்ம முன்பின்னுந் தக்க பாவ ரிருந்திடவே
போமே நல்லோர் பார்வையிலாப் போது மரண மேழ்தனிலே.

இ-ள். ஆறு, எட்டுப், பன்னிரண்டிற், பங்கயன், முங்கயன், சங்கயன், கங்கயன், இந்நால்வரும் தங்கியிருக்கச் சுபர் பார்வையில்லாவிடில் ஆறுவருஷத்திலும், ஜென்மலக்கினத்தின், முன்னும், பின்னும், பாவர்கள் நின்று, சுபர்கள் பார்வையில்லாதபோது, ஏழுவருஷத்திலும் மரணமாம்—எ-று.

தனிலே சன்மஞ் சேயுமதி தன்னி லொருவர் நின்ருலும்
இனிய நான்கிற் பாவர்களு மெட்டிற் பரிதி சேய்மதியும்

மனுசூழ்ந் திருக்க யின்னமொரு மதிவீட் டரசன் சன்மாதி
சனிசூழ் பரிதி யுறநல்லோர் தானும் பாரா தேன்மரணம்.

இ-ள். ஜென்மலக்கினத்தில், எரிச்சிகன், அரிச்சிகன், இவர்கள், இருவரில், ஒருவர் நின்றாலும், நாலாமிடத்திற் பாவர்களும், எட்டாமிடத்திற் பருதி, குருதி, இருதி, யிருந்தாலும், அவ்விருதிநின்ற, வீட்டுக்குடையவன், லக்கினதிபதி, சூரி, காரியிவர்கள், வீரியமாய்க் கூடியிருக்கச் சுபர்கள், பார்வையில்லாவிட்டாலும், எட்டுவருஷத்தில் மரணமாம்—எ-று. 762

மரணஞ் சன்ம மிதுன துலாம் வாழு மெட்டிற் குருபுகரும்
திரமாய்ப் பாவர் நோக்க முறத் தெரிந்த வயது மெட்டுளதாம்
பரிதி மதியு மட்டமஞ்சேர் பண்பாங் காரி பதினொன்றில்
வரவே யொன்ப திதுமரணம் வகையா யுலகீ ரறிந்திடுமே.

இ-ள். ஜென்மலக்கினம், மிதுனம், துலாமாக அட்டமத்தில், அசுர குருவும், தேவகுருவும், இருந்து, பாவர்கள் பார்வைபெற்றால், எட்டுவயதிலும், வட்டமதியும், பருதியும், எட்டில், இருக்கப் பதினொன்றில், சனியிருக்க, ஒன்பது வருஷத்திலும் மரணமாம்—எ-று. 763

அறிந்தே யெட்டிற் கதிர்புகரு மரசன் பார்வை தானுமிலாச்
செறிந்தே யிருக்க வின்னமொரு செப்பு நாளிற் சந்திரனைப்
பிறிந்து பார்க்குஞ் சேய்பரிதி பின்புநல்லோர் பாராதால்
இறந்தே யிருக்கு மொன்பதினி லினைய கோளின் பலனிதுவே.

இ-ள். எட்டாமிடத்தில், வேந்தனும், காந்தனும் ஏந்தன் பார்வை யில்லாதிருந்தாலும், நாலில் நின்ற சங்கலனை, மங்கலன், பிங்கலன், பார்த்தும், சுபர்கள் பார்க்காவிட்டாலும், ஒன்பது வருஷத்தில் மரணமாகும்—எ-று.

இதுவே கேந்திர மேறியிவ ரிராகு கேது யிருந்திடவே
அதிசூழ் பாவர் நோக்கமுற வான பத்தி லுறுமரணம்
மதிசேர் பரிதி கூடியொரு மனையி லிருக்கச் சன்மத்தைத்
துதிசேர் நல்லோர் பாராக்காற் சொல்லும் பதினொன் றுறுவயதே

இ-ள். கேந்திரத்திற், கரும்பாம்பு, செம்பாம்பு இருக்கப்பாவர்கள்பார்க்கப் பத்துவருஷத்தில் மரணமாம், சந்திராதித்தன், வந்தொருமனையிற் கூடியிருக்க, ஜென்மலக்கினத்தைச் சுபர் பார்க்காவிட்டால், பதினொரு வருஷத்தில் மரணமாம்—எ-று. 765

வயதே சன்மங் கேதுகதிர் மதிதா னிருக்கச் சுபர்திருஷ்டி
சயமே யில்லாப் பன்னிரண்டிற் சாருங் குழவி யுறுமரணம்
நயமா மொன்றி லெட்டாதி நண்ணி யிருக்க வோராறில்
நியமே நான்கிற் சேயுறவே நிற்பன் பதின்மூன் றெனச்சொல்லும்

இ-ள். ஜென்மலக்கினத்தில், நோமன், மீமன், சோமன், சேர்ந்திருக்கச் சுபர்கள் பார்க்காவிட்டால், பன்னிரண்டுவருஷத்தில் மரணமாம், லக்கினத்தில், அட்டமாதிபனிருக்க, ஆறு, அல்லது, நாலாமிடத்திற், பூமனிருக்கப் பதிமூன்று வயதில் மரணமாம்—எ-று. 766

சொல்லு மாறெட் டிற்பாவர் சூழ்க்தே யிருக்கச் சன்மாதி
வெல்லு மாபோக் கிலியத்தின் மேவி யிருந்தாற் பதினறும்
வல்லோ ரதிபன் சென்மாதி வரவே பரிதி யுடன்கூட
நல்லோர் பாராக் கேந்திரத்தி னண்ணும் பாவர் நாலைந்தே.

இ-ள். சட்டாட்டமஸ்தானங்களிற் கெட்டபாவிகளிருக்க, லக்கினதிபன், ஆபோக்கிலியத்தி லிருந்தால், பதினறுவருஷத்தில் மரணமாம், சுக்கிரனும், லக்கினதிபனும், சூரியனுடன் கூடியிருக்கச் சுபர்கள்பாராமல், பாவர்கள் கேந்திரத்திலிருந்தால், இருபது வயதிலும் மரணமாம்—எ-று. 767

நாலே சோமற் கிருபுறமு மிராகு செவ்வாய் சனிகேது
ஆலே யிருக்கச் சன்மாதி யாய பலன்க ளற்றிடவே
மேலாம் பாவ ருடன்கூடி வேண்டி யிருக்கு மிப்படியே
சீலா யையைந் தினின்மரணஞ் செப்புங் கணித மாதவரே.

இ-ள். பக்கிரனுக்கு, இருபுறமும், உக்கிரன், வக்கிரன், அக்கிரன், துக்கிரன், லக்கினதிபன் பலனற்று பாவர்களுடன் கூடியிருக்கில், இருபத்தைந்து வருஷத்தில் மரணமாம், என்று, சோதிடத்தில், மாதிடம் வாய்ந்த வல்லோர்கள் சொல்லுவார்கள்—எ-று. 768

மாதே கன்னி லக்கினமாய் வந்து சனியுந் தானிருக்கப்
போதே யரசன் வியமெட்டிற் போக விருபத் தாறுகும்
சாதி சன்ம மெட்டதிபன் சரியாய்ப் புடமே தானிருந்தும்
ஓதுங் கேந்திர முறவெட்டி லுற்றே கேது மூவொன்பான்.

இ-ள். மாதுஎன்று சொல்லாநின்ற கன்னியாலக்கினத்திற் சனிதனியாயிருக்க, அட்டம வியத்தில் திட்டமாய்க் குருவிருக்க, இருபத்தாறுவயதில் மரணமாம், லக்கினதிபனும், அட்டமாதிபனும் சரிபுடமாய், கேந்திரத்திலிருக்க, அட்டமத்திற் கேதுவிருக்கில், இருபத்தேழுவயதில் மரணமாம்.

பானு புதல்வன் கேதுகரும் பாம்பு செவ்வா யொன்றெட்டில்
தேனே யிருக்கப் புகர்புந்தி தேவர் குருவுங் கேந்திரமில்
லானே யுற்று விருபத்தெட் டாகு மெட்டிற் கதிர்மூன்றில்
ஊனே மதியுஞ் சனிபாவ ருடனேக் கிருபத் தொன்பானே.

இ-ள். தீமன், நோமன், அல்லது, ஈமன், பூமன் இவர்கள் ஒன்று, எட்டில், இருக்க, காமன், சாமன், சீமன் இவர்கள், கேந்திரமில்லாதிருக்

கின், இருபத்தெட்டு வயதிலும், எட்டில் மீமனும், மூன்றில், தேய்பிறைச் சோமனும், தீமனுமிருந்து, பாவர்கள் பார்வை பெற்றிருக்கின், இருபத் தொன்பது வயதில் மரணமாம்—எ-று. 770

ஒன்பான் றேய்தாய் சுபத்தான முற்றே யட்ட மாதிபதி
அன்பாய்க் கேந்திர முறவெட்டி லான பாவர் தானிருக்கப்
பின்பாம் லக்கி ஞதிபதி பெலன்க ளில்லா திருந்திடவே
துன்ப முப்ப தெனவறிந்து சுகமா யுரைத்தேன் மிகவாழும்.

இ-ள். தேய்பிறைச்சந்திரன், போயிருந்தது சுபர்வீடாகிலும், அட்ட மாதிபதி கேந்திரத்திலுமிருக்க, எட்டில்பாவர்களுமிருக்க, லக்கினதிபதி பல னற்றிருக்க முப்பதுவருஷத்தில், மரணமாம்—எ-று. 771

வாழும் நான்கிற் சுக்கிரனும் வந்தே யெட்டிற் பாவருறச்
சூழும் நல்லோர் பார்வையறத் தொடர்ந்தே நிற்க வக்கினியால்
ஊழி மனையா டன்னுலு மோங்கும் பாம்பின் கடியாலும்
ஆழி யுலகோர் தாமறிய வாகு மரணங் கண்டீரே.

இ-ள். நாலில், நங்கயனும், எட்டிற் கெட்டபாவிகளும், சுபர்கள் பார் வையில்லாதிருக்க, தீம்பு, அக்கினியாலும், வீம்பு மனையாட்டியாலும், பாம் புக்கடியாலும் மரணமாவன்—எ-று. 772

கண்ட விரண்டிற் பன்னிரண்டிற் காணுஞ் செவ்வாய் சோமனுற
பண்டே யேழி லெட்டில்கரும் பாம்பு மரச முறின்முப்பான்
கொண்ட வட்ட மாதிபதி கேந்திர மேவி லக்கனதிபதி
மண்டு பலன்கள் வர்ச்சிதமேல் வயது முப்பத் திரண்டாமே.

இ-ள். இரண்டுபன்னிரண்டில், திரண்டபூமனும், சோமனுமிருக்க, ஏழு, எட்டாமிடத்தில், பாழும்பரிச்சிகனும், புரிச்சிகனும், இருக்க, முப்பது வயதில், மரணமாம், அட்டமாதிபதி கேந்திரமேறி, லக்கினதிபதி பலன்க ளற்றிருக்கில், முப்பத்திரண்டுவயதில் மரணமாம்—எ-று. 773

ஆமே யரசன் சுக்கிரனு மணுகிக் கேந்திரந் தான்மேவ
தாமே லக்கி ஞதிபதி தானும் பாவ ருடன்கூட
தீமை சூழா போக்கிலியந் தேய்ந்த மதியுந் தானிருக்கத்
தோமே மரண மாறுறிற் சொல்வர் கணித வல்லோரே.

இ-ள். எந்தனும், காந்தனும், கேந்திரத்திலிருக்க, லக்கினதிபதி, பாவர் களுடன்கூட, ஆபோக்கிலியத்தில், அமரபட்சச்சந்திரனிருக்க முப்பத்தாறு வயதில். மரணமாம்—எ-று. 774

வல்ல மிதுன லக்கினமாய் வாழும் பரிதி தானிருக்கப்
பொல்லா ரிரண்டு பாரிசமும் புகவா றரசன் முப்பத்தேழ்

ஒல்லும் பாவர் கேந்திரத்தி லுறச்சன் மாதி பன்னிரண்டில்
வெல்லு மெட்டோன் லக்கினத்தின் மேவின் முப்பத் தெட்டாமே

இ-ள். மிதுனலக்கினமாய், அதிற்பதுமபாணியிருக்க இரண்டுபக்கமும், பாவர்களிருக்க, ஆறில் வியாழனிருக்க முப்பத்தேழுவயதில், மரணமாம், பாவர்கள் கேந்திரத்திலும், லக்கினுதிபன், பன்னிரண்டிலும், எட்டாமிடத்தோன், லக்கினத்திலுமிருக்க, முப்பத்தெட்டுவயதில் மரணமாம்—எ-று.

மேலாஞ் சன்மந் திரராசி மேவு மொன்றி லெட்டாதி
சால விருக்கச் சுபரெட்டிற் றந்தால் வயது மென்னைந்தாம்
சேலெட் டாதி கேந்திரமே செவ்வாய் லக்கினந் தானிருக்கக்
கால வாறின் மூன்றுசனி கதிர்சூ ழெண்ணைந் தாம்வயதே.

இ-ள். ஜென்மலக்கினந் திரராசியாய், அதில், அட்டமாதிபனிருக்க, சுபர்களெட்டிலிருந்தால், நாற்பதுவயதில், மரணமாம், அட்டமாதிபன், கேந்திரத்திலும், வக்கிரன், லக்கினத்திலும், மூன்று, ஆறுமிடங்களில், அக்கிரன் செக்கிரன் சேர, நாற்பதுவயதில் மரணமாம்—எ-று. 776

வயதே சோமன் லக்கினத்தில் வர்க்கோத் தமனு யுறிற்பாவர்
நியமே பார்க்கச் சுபர்திருஷ்டி நேச மில்லா வாறெட்டில்
பயமே சன்ம னெட்டாதி பதியங் கிஷையிற் பாவருடன்
சயமே நிற்க வெட்டாதி சன்மத் திருக்கி லைம்பதுமே.

இ-ள். லக்கினத்தில் * வர்க்கோத்தமனுகிய, பக்கிரன் இருக்கப்பாவர்கள் பார்க்கச் சுபர்கள் பார்க்காதிருந்தால், நாற்பத்தெட்டுவயதில்மரணமாம், லக்கினுதிபதி, அட்டமாதிபதி. அங்கிசத்தில், பாவர்கள் கூடிநிற்க, எட்டாமிடத்ததிபன், திட்டமாய் லக்கினத்திருக்க ஐம்பதுவயதில் மரணமாம்.

வே று.

அன்பா முபய ராசிக் கதிபதி
இன்பாய் லக்கின மியைந்தே யுற்றிட
பன்பா மதிசனி பனிரண் டெட்டுறில்
துன்ப மைம்பத் திரண்டினிற் சொல்லுமே.

இ-ள். உபயராசிக்கதிபன், ஜென்மலக்கினத்திலிருக்க, அரிச்சிகன், கரிச்சிகன், அட்டமவியத்தானத்தில், அமர்ந்திருக்க ஐம்பத்திரண்டுவயதில், மரணமாம்—எ-று. 778

---

* (வர்க்கோத்தமம், என்பது,) ஜென்மலக்கினம், நவாமிஷலக்கினம், ஓாலக்கினம், திரேக்காணலக்கினம், சப்தமாங்கிஷலக்கினம், தசாங்கிஷலக்கினம், திரிசாங்கிஷலக்கினம், சோடசாங்கிஷலக்கினம், சஷ்டியாங்கிஷலக்கினம், இவைகளில் பலன்பெற்றிருப்பதாம்.

சொல்லுஞ் சன்மாதி சூழ்ந்தே யெட்டுற
வல்ல சந்திரன் மனையிற் கதிபதி
வெல்லு சந்திரற் கெட்டினின் மேவிடிற்
புல்லர் கூடிற்போ மைம்பதி னலதே.

இ-ள். லக்கினாதிபன், எட்டில் இருக்க, பக்கிரனாகிய சந்திராலக்கினத் திற்கதிபதி, அதற்கெட்டில் இருக்கப் பாவர்கள்கூட, ஐம்பத்திநான்கு வய தில் மரணம்—எ-று. 779

நாலாஞ் சன்ம நாடுந் தனுசினில்
மேலா யரசன் விரும்பி யிருந்திடச்
சேலா ரிராகுவுஞ் செவ்வா யெட்டுறிற்
கால மேழெட் டிற்கன கண்டமே.

இ-ள். ஜென்மலக்கினம், வில்லாய், அதில், செல்லாநின்ற நல்ல, சு க்கிரனும், ஆறில் உக்கிரனும், எட்டில், வக்கிரனும், இருக்க ஐம்பத்தாறு வய தில், மரணமாம்—எ-று. 780

கண்ட வாறு கருதிடு மெட்டினில்
கொண்ட கோள்களே கூடி யதுதனில்
மண்டி யிருக்கில் வயதைம்பத் தெட்டினில்
அண்டர் மாதவ ரறிந்துரைத் தானரோ.

இ-ள். சொல்லாநின்ற, ஜென்மலக்கினத்திற்கு ஆறு, எட்டில், எல் லாக்கிரகங்களும், கூடியிருந்தால் ஐம்பத்தெட்டு வருஷத்தில் மரணமாம்.

உரைத்திடும் பத்தி லுறுகதி ரோனும்
திரைத்த காரி ஜென்ம மேவிடிற்
புரைத்த வெட்டினிற் புரவல னுற்றிட
நிரைத்தே யாண்டு நிற்ப னறுபதே.

இ-ள். பத்தாமிடத்தில், மித்திரனும், லக்கினத்தில் மத்திரனும், எட் டில், புத்திரகாரகனுமிருக்க, அறுபது வருஷத்தில், மரணமாம்—எ-று. 782

அறுபதி லின்ன மாண்டினிற் காரி
நறுமலர்ச் சன்ம நாலினிற் சந்திரன்
பறுவெழிற் செவ்வாய் பத்தினிற் கதிர்குரு
இறுபுகர் புந்தி யிவருடன் கூடிடில்.

இ-ள். ஜென்மலக்கினத்தில், தீமனும், நாலிற்சோமனும், ஏழிற்பூம னும், பத்தில் மீமன், சீமன், காமன், சாமன், இவர்கள் கூடிநின்றால், அறு பத்தொரு வருடத்தில் மரணமாம்—எ-று. 383

கூடிய வெட்டா மதிபதி பாவனுய்
நாடிய சந்திர னண்ணிடுங் கோணத்
தாடிய கேந்திரந் தன்னிற் கூடிடில்
ஆடிய வறுபத் தைந்தினிற் போகுமே.

இ-ள். எட்டுக்குடையவன், துட்டபாவியாய் வட்டச் சந்திரனிருக்கின்ற திரிகோணகேந்திரங்களில் கூடில் அறுபத்தைந்து வயதில் மரணமாம்—எ-று. 784

போகிடுங் காரி புகுமனை நீச
மாகிய கேந்திர கோண மாகிடில்
மேகமி லக்கின மெழின்மனை நல்லோர்
ஆகிய சுபருட னணுகி லெழுபதே.

இ-ள். சோந்தனுகிய, காரியிருக்கும்வீடு, நீசமாகியும், கேந்திரகோணமாகியும், லக்கினதிபதிசுபருடன் கூடி, சுபர்மனையிலிருந்தால் எழுபதுவயதில் மரணமாம்—எ-று. 785

எழுந்திடு லக்கினத் தெய்தநற் கோளுறத்
தழுந்திய கேந்திரஞ் சந்திரன் மேவிடில்
அழுந்திடு கோணக் காரி யமர்ந்துறி
லழுங்குபின் செல்வமோ ரெழுபதி னுலே.

இ-ள். ஜென்மலக்கினத்தில், சுபர்களிருக்க,கேந்திரத்தில், சாந்தனிருக்க, திரிகோணத்தில், சோந்தனிருந்தால், எழுபத்து நான்குவயதில் மரணமாம் —எ-று. 786

நாலாஞ் செவ்வாய் நாடி பைந்தினில்
ஏலாம் பரிதி யேழி லமர்ந்திட
நீலாங் காரி நீச முற்றிடில்
மாலா யெழுபத் தைந்தின் மரணம்.

இ-ள். ஐந்தில், எரிச்சிகனும், எழில்விரிச்சிகனும், இருக்க, கரிச்சிகன், நீசமா யிருந்தால், எழுபத்தைந்து வயதில், மரணமாம்—எ-று. 787

மரண மறியும் வகைகேந் திரத்தில்
குருவுடன் மதியுங் கூடி யிருந்திட
திரள்சுபர் நோக்கத் தேசத் தரசாய்ப்
புவியினி லெழுபத் தொன்பது பொருந்துமே.

இ-ள். கேந்திரத்தில், எந்தனும், சாந்தனும், கூடியிருக்க சுபக்கிரகங்கள் பார்க்க, ஏந்தலாயிருந்து, எழுபத்தொன்பது வயதுவரை, வாழ்ந்து மரணமாவன்—எ-று. 788

மேவிய லக்கின வீடா றளவும்
தாவிய நல்லோர் தானுற வேழ்முதல்
பாவர்க ளூறிலே பரதேசத் தரசாய்
சாவது யெண்பதிற் சாற்றிடு வாயே.

இ-ள். ஜென்மலக்கினமுதல், ஆறுவீட்டளவும், நல்லவர்களிருக்க, ஏழாம்வீடுமுதல், பாவர்கள் இருந்தால், அன்னியதேசத் தரசனாகி, எண்பதுவயதில், மரணமாம்—எ-று. 789

சாற்றிடு மின்னந் தானெண் பதனில்
ஏற்றிடு லாபத் திருந்தங் கிசாபதி
போற்றுமெவ் வீட்டினிற் புகிலதற் குடையோன்
நேர்த்திய கேந்திரத் துறினிச் சயமே.

இ-ள். லாபத்தானத்திலிருந்த அங்கிசாதிபதி, எந்தவீட்டிலிருக்கின்றானே, அந்தவீட்டுக்குடையவன், கேந்திரம்பெற்றாலும், எண்பதுவயதில் மரணமாம்—எ-று. 790

நிச்சவெட் டாறு நிலவுடன் சன்மம்
இச்சைநற் குருவும் லாப மூன்றினில்
துச்ச பாவர் தொடர்ந்தே யிருந்திடில்
அச்சமி ரெண்ணூ றுண்டினி லிறுமே.

இ-ள். எட்டு, ஆறாமிடங்களில், வட்டமதிச் சந்திரனும், லக்கினாதிபதியும், இருக்க, லாபத்திற் குருவும், மூன்றாமிடத்தில், பாவர்களும் இருக்க தொண்ணூறு வயதில் மரணமாம்—எ-று. 791

இறுஞ்சன் மாதி யிதுவே பலனாய்
நறுஞ்சுபர் நோக்க நண்ணிக் கேந்திரத்
துறினே லட்சுமி தொடர்ந்துபூ வரசாய்
தெரிந்திடு நூறெனச் செப்புமா தவனே.

இ-ள். ஜென்மாதிபதி, பலமாய், சுபர்கள் பார்க்க, கேந்திரங்களிலிருந்தால், லட்சுமிகரம் பொருந்திய இராஜனாய், நூறுவயது வரை யிருப்பவனென்று, மாதவத்தை புடையவர்கள், சொல்லுவார்கள்—எ-று. 792

எட்டாம்பாவம்

சம்பூர்ணம்.

ஒன்பதாம்பாவம்.

பிதுர்ப்பலன்.

ஓதுமைந் தொன்பா னுதி பதிகதி ருடனே கூட
ஓதிடுங் காரி பார்க்க வுறும்பிதா விற்க ரிட்டம்
ஓதுமைந் தொன்பா னுதி பதிகதி ருடனே காரி
ஓதுசே யிவர்தா மூன்றி லுறிற்றந்தை யுடனே போமே.

இ-ள். ஐந்து, ஒன்பதாமாதிபதிகள், செந்தனுடன் கூடிட, மந்தன்பார்க்க, பிதாவுக்குத் தோஷமாம். ஐந்து ஒன்பதுக் குடையவர்களுடன், செந்தன், கந்தன், மந்தன், ஆகிய, இவர்கள்கூடி மூன்றுமிடத்திலிருந்தால், தகப்பன் உடனே மரிப்பன்—எ-று. 793

உடன்சன்ம லக்கி னத்துக் கொன்பதி லைந்திற் பத்தில்
முடவன்சே யிரவி யிந்த மூவரி லொருவர் நிற்கத்
திடமுறு பிதாவுக் கீனஞ் சென்மத்திற் செவ்வா யேழில்
அடல்கதிர்க் கையம் பொன்னோர்க் காண்டுமூன் றிருப்பன் றந்தை.

இ-ள். ஜென்மலக்கினத்திற்கு, ஐந்து ஒன்பதாமிடங்களில், மந்தன் மூந்தன், கந்தன், இவர்களில் யாரேனும், ஒருவர்நிற்க, பிதாவுக்கு, குற்றமாம். கந்தன், ஜென்மலக்கினத்திலும், மூந்தன், ஏழாமிடத்திலு மிருக்கத் தாய்க்குச் சந்தேகமும், தந்தைக்கு மூன்றுண்டு, அந்தனிருந்தால், இந்தவுலகத்தில் வாழ்ந்திருப்பன்—எ-று. 794

வே று.

தந்தைபதி யிற்சவுரி நிற்கச் செவ்வாய்
தானுங்கேந் திரத்துறில ரிட்டந் தந்தைக்
கந்தவனுக் கட்டமத்துஞ் சன்மாதி யுடனும்
ஆதவன்செவ் வாய்கூடி யணுகிலையர்க் கரிட்டம்
பந்துசன்மத் துக்கைந்தொன் பானிற் பாவர்
பாம்புகேந் திரத்திலுறத் தந்தைக் கீனம்
விந்தைமலர் நண்பனுக்கேழ் சனிசேய் நிற்கில்
மேலோர்நோக் கறநிற்கில் வியமொன் பானே.

இ-ள். தந்தைபதியாகிய ஒன்பதாமிடத்தில் மந்தனும், கேந்திரத்தில் சேந்தனும், இருந்தால், தகப்பனுக்குத் தோஷமாம், ஒன்பதுக்கு அட்டமத்தில், லக்கினாதிபதி, சேந்தன், வேந்தன் கூடியிருக்கத் தகப்பனுக்குத் தோ ஷ

மாம், ஜென்மலக்கினத்திற்கு, ஐந்து ஒன்பதில், பாவர்களும், கூந்தன், கேக்தன், இவர்களில் எவரேனும், கேந்திரத்திலிருக்கில், தகப்பனுக்குக் குற்றமாம் சூரிக்கேழில், சோரி காரிநின்று, சுபர்கள் பார்வையில்லாவிட்டால், தகப்பன் இறந்துபோவான்—எ-று. 795

வே று.

ஒன்பா னிடத்திற் சனியைந்தி லிரவி யுடனே யுறுபாம்பும்
அன்பா யிருக்கத் தந்தைதனக் கரிட்ட மைந்தா மாதிபதி
இன்ப முச்ச மாயிருக்க வில்லை யரிட்டம் பிணிகாட்டும்
பொன் பார்த் தருளச் சனியிரவி நின்றுற் பிணிபோங் கண்டீரே.

இ-ள். ஒன்பதாமிடத்தில், மந்தனும், ஐந்தாமிடத்தில் முந்தனும், குந்தனுமிருந்தால், தந்தைக்குத் தோஷமாம், ஐந்தாமிடத்ததிபன், உச்சமாயிருக்கத் தோஷமில்லையாம், பிணியை உண்டாக்குமாம், சுருதிபார்வையில், பருதிமிருதி நின்றால், அறுதியாய் நோய்நீங்கித் தகப்பன் சுகமடைவான்.

கண்ட சனியுங் கதிரோனுங் கதித்த வொன்பா னுதிபனும்
அண்டி யொருவீட் டினிலிருக்க வையர்க் கரிட்ட மவரைப்பொன்
மண்டி நோக்க வைந்தாதி மனையோ னுச்ச மாயிருக்க
மிண் டாய்ச் சிலநா ளிருந்தரிட்டம் மேவும் விடம்போல் விழிமானே.

இ-ள். ஆலகாலவிடம்போன்ற நீலவிழிகளைச் சாலப்பெற்ற பெண்ணே, நீலனும், காலனும், ஒன்பதாமிடத்ததிபனுங்கூடி யொருவீட்டிலிருக்கத் தகப்பனுக்குத் தோஷமாம், இவர்களைத்தவராமற், குருபார்க்க, ஐந்தாமிடத்ததிபன் உச்சமாயிருக்கச் சிலநாளிருந்து பின்னரிட்டமுண்டாம்.

மானே பிதுர்கா ரகனென்பான் மனையா திபனுஞ் சனியாகித்
தானே பாவ ருடன்கூடித் தருமுந் நான்கெட் டாறிலுறத்
தேனே பிதுர்ஸ்தா னந்தன்னிற் செம்பாம் பிருக்க வம்மனையில்
ஊனே செறியுஞ் சனிவருநா ளுடனே தந்தைக் குறுமரிட்டம்.

இ-ள். பிங்கலனும், முங்கலனும், பிதிர்த்தானுதிபனும் ஒன்றுசேர்ந்து ஒருவீட்டிற்கூடி, ஆறு, எட்டுப் பன்னிரண்டிலிருந்து, ஒன்பதாமிடத்தில், செம்பாம்பிருந்தால், அந்தவீட்டிற்குக் கோசரத்தில், மந்தன்வருங்காலம், தந்தைக்கரிட்டமாம்—எ-று. 798

உறுஞ்சன் மத்திற் செவ்வாயு மொன்பா னிடத்திற் சனியிருக்கப்
பெறுந்தந் தைக்கு வருமரிட்டம் பிதாத்தா னுதி பதியுடனே
குறுஞ்செவ் வாயுஞ் சனிமூவர் கூடி யிருக்க நல்லோர்கள்
அறிந்தெங் கேதா னிருந்தாலு மையர்க் கரிட்ட மாமென்பார்.

இ-ள். ஜென்மலக்கினத்திற் சேந்தனும், ஒன்பதாமிடத்திற் சோந்தனும், இருக்கத் தகப்பனுக்குத் தோஷமாம், பிதிர்த்தானாதிபன், விதிரன், உதிரன், இம்மூவருங் கூடியிருக்கச் சுபர்கள், எந்த இடங்களிலிருந்த போதிலும் தகப்பனுக்குத் தோஷமாம்—எ-று. 799

என்பார் சன்மங் தனிற்காரி யிரவி சசிமூ வருமிருக்கத்
தன்பா ரைந்திற் குசனிருக்கத் தந்தைக் கரிட்டங் தான்பின்னும்
அன்பார் குசன்செம் பாம்பிரவி யாக மூவ ருடன்கூடிப்
பின்பா ராமன் மூன்றாண்டிற் பிதாவுக் கரிட்டம் பேசுவரே.

இ-ள். ஜென்மலக்கினத்தில், முங்கலன், பிங்கலன், சங்கலன், மூவரும், இருக்க, ஐந்தாமிடத்தில், மங்கலனிருக்கத் தகப்பனுக்குத் தோஷமாம்; மங்கலன், வெங்கலன், பிங்கலன், கூடியிருக்கில், மூன்றுவருஷத்தில், தகப்பன் மரணமாம்—எ-று. 800

பேசு மெட்டொன் பதுபத்திற் பெரிய பாவ ருறவொன்பான்
நேச மெட்டா றெடுவியத்தி னிற்கப் பலன்க ணீங்கியுற
ஓசை யொன்ப திற்குசனே யுலவுங் கதிரோ னுற்றிடினும்
வீசு மொன்ப தினிற்பாவர் மேவப் பிதாமெய் யுயிர்பிரியும்.

இ-ள். எட்டு, ஒன்பது, பத்தாமிடத்திற்பாவிகளும், ஒன்பதுக்கதிபன், ஆறு, எட்டு, பன்னிரண்டாமிடத்தில், பலனற்றுப் பொருந்தியிருக்க, ஒன்பதாமிடத்தில், செங்கயன், அல்லது பங்கயனிருக்க, அவரோடு, பாவர்களிருக்கத் தகப்பன் இறந்துபோவான்—எ-று. 801

வேறு.

பிரியமுடனொன்பதா மிடத்ததிபன் புடத்தில்
பெறுங்குளிகன் றனைவாங்கிப் பெற்றிடுரா சியிலே
நெறிபயிலங் தமனியனார் தாமருவுங் காலம்
நிரியாண மந்தவரு டத்தில்வரு மவர்தம்
குறிகாணும் படிவெய்யோன் புடத்தை வைத்துக் கொண்டு
குலவுமொன்ப தாமிடத்தோன் புடமதனை வாங்கிச்
செறியுமந்த ராசியே மாதங்க ளாகத்
தெள்ளிந்துபிதா நிரியாணந் தனையருளு வீரே.

இ-ள். ஒன்பதாமிடத்ததிபன் புடத்தில், அன்புள்ள, குளிகன் புடத்தைக்கழித்துக்கண்டராசியில் குருவருங்காலத்தில், அவ்வருடம் மரணமாம், திவாகரன் புடத்தை வைத்துக்கொண்டு, நவமிடத்ததிபன், புடத்தைக்கழித்துக் கண்டராசியில் சூரியன் காலமாகிய மாசத்தில் பிதா மரணகாலத்தைச் சொல்வீராக—எ-று. 802

வே று.

அருளுந் தந்தை காரகனே யறிந்தே பலன்க ளுரைசெய்ய
பரிதிக் கிருபுற மாரேனும் பாவ ரிருக்கப் பாவர்களும்
துரிதாய் நோக்க மிருந்ததனுற் சொல்லுங் குழவி கருப்பத்தில்
தெரிய விருக்கப் பிதாவரிட்டஞ் செப்புங் கணித வல்லோரே.

இ-ள். மீவனுக்கு, இரண்டுபக்கமும், பாவக்கிரகங்களிருந்து, பாவர்கள் பார்த்தாலும், குழந்தை கருப்பத்திலிருக்கும்பொழுதே, தகப்பன் மரணமாவ னென்று, தந்தை காரகனுகிய, எல்லவனைக்கொண்டு சொல்லவேண்டும்.

பாக்கிய பலன்.

வே று.

உறுமொன்ப தாமிடத்தோன் வெகுபலவா னுகி
உற்றவிடத் ததிபதிகேந் திரத்திற்பாக் கியவான்
பெறுந்தந்தை தனிலதிகன் கீர்த்திமா னரசர்
பிரியமுறச் சஞ்சரிப்பன் பிரதாப சாலி
அறிவுறுபாக் கியாதிபிதிர் காரகனைக் கூடி
ஆறிலுறப் பிதாவுரைகேட் டருள்வனென்பா னதிபன்
பிறியாம லிருந்தநவாங் கிசத்தாதி பதியைப்
பிதிர்கார கன்பார்க்கக் குருபத்திப் பிரியன்.

இ-ள். ஒன்பதாமிடத்ததிபன், அதிபலவானுகி, அவனிருந்தவீட்டதி பன் கேந்திரத்திலிருந்தால், பாக்கியவான், தகப்பனைப்பார்க்கிலுங் கீர்த்தி யுள்ளவன், அரசர்கள் பிரியப்படும்படியிருப்பவன், பிரதாபமுடையவனு வன், பாக்கியாதிபதி, பிதிர்காரகனைக்கூடி, ஆறுமிடத்திலிருக்கப் பிதா சொற்படிகேட்டு நடப்பவன், ஒன்பதாமிடத்ததிபதி யிருந்த நவாங்கிசத்ததி பதியைப் பிதிர்காரகன் பார்க்கக் குருபத்தியுள்ளவனுமாவன்—எ-று. 804

பிரியமுடன் பிறைக்கைந்தாம் வீடுசர மாகப்
பெருகியலக் கினத்துக்கைந் தாம்வீடு சரமாய்
நிரையும்பூ ரணமான வயிச்சுவரிய னென்பர்
நீள்சரமுந் திரமாகி னிகழ்த்துபலன் பாதி
அருமைபெறுஞ் சரத்துபய மாகிற்காற் பங்காம்
அயிச்சுவரிய மெனப்பகர்வ ரம்புலிக்கஞ் சானக்
குரிமனைகண் முதற்கொண்டு லக்கினத்துக் கைந்தைக்
குணமுடனே கண்டுபலன் கூறிடவே வேண்டும்.

இ-ள். ஜென்மலக்கினத்திற்கு, ஐந்தாம்வீடும், சந்திராலக்கினத்திற்கு, ஐந்தாம்வீடும், சரவிராசியாகின், பூரணமான ஐசுவரியவானும், இதில், ஒரு

ராசிசரமும், மற்றொருராசி திரமாகில் அதிற்பாதி ஐசுவரியமும், சராராசி யும், உபயராசியுமாகில், காற்பங்கு ஐசுவரியமுமாம்—எ-று. 805

வேண்டியதோ ரொன்பதா மதிபதியுங் குருவும்
விரும்பியகேந் திரத்திரிகோ ணங்களிலே மேவில்
ஆண்டகை பாக்கியவா னிவரிருவ ருடனும்
அன்புடனொன் பானிடத்தி லணுகினுமிம் மூவர்
பூண்டுவரு மகாதிசைலா பாதிபுசிப் பிலேதான்
பூரணபாக் கியஞ்சேரு மேழாமா திபனைத்
தீண்டிறலா பாதியுற வாய்க்கூடி நல்லோர்
செறியுமனை யுறிலவர் கடிசையிற்பாக் கியமே.

இ-ள். ஒன்பதாமிடத்ததிபதியும், அன்புள்ள குருவும் கேந்திரகோணங் களிலே, இருந்தால், பாக்கியமுள்ளவனும், இவ்விருவருடனும், ஒன்பதா மிடத்தில், நின்றவனும், ஆகிய இவர்கள் திசையில் பதினோராமிடத்ததிபன் புத்தியில், பூரணமான பாக்கியஞ்சேருமாம், ஏழாமிடத்ததிபனை, லாபாதி பதிகூடி, சுபர்கள் வீட்டிலிருந்தால், அந்த ஏழுபதினொன்றுக்குடையவர்கள் திசையிலும் பாக்கியமுண்டாம்—எ-று. 806

மேயலா பாதியுமே ழாதியுமித் துருவாய்
மேலோர்கள் வீட்டிலுறச் சன்மாதி பதியு
மாயுமிவர் மூவருமொன் றுய்க்கூடி யிருக்கில்
அயிஸ்வரியஞ் சீவ பரி யந்தமட்டுண் டென்னும்
நேயமுட னொன்பதா மிடத்ததிபன் சாதி
நிசமறிந்தே யவர்மரபின் னிருபர்களி னாலே
தூயசவு பாக்கியங்கள் சேருமென்றே நல்ல
சோதிடநூ லுரையுணர்ந்தோர் சொல்லுவர்கண் டீரே.

இ-ள். ஏழாமிடத்ததிபதி, லாபாதிபதியிவர்களிருவரும், மித்துருவாய், சுபர்கள் வீட்டிலிருக்க, ஜென்மாதிபதியும், அவருடன் கூடியிருந்தால், ஜீவ னுள்ளவரையும், பாக்கியவானென்றும், ஒன்பதாமிடத்ததிபன், ஜாதி உண் மையையறிந்து, அந்தக்குலத்துள்ள அரசர்களினால், சௌபாக்கியங்கள் சேருமாம், என்று, சோதிடவல்லவர்கள் சொல்லுவார்கள்—எ-று. 807

கண்டிடுலா பாதிபதி பாக்கியா திபனும்
களத்திரத்தா னத்திருக்கப் பாக்கியலா பந்தான்
மிண்டியதோர் கேந்திரமா யுச்ச வீடாக
மேவியமே ழாமதிபன் சுபக்கிரக மாகி
மண்டியபாக் கியலாபத் தானத்தி லிருக்க
வரும்பலபாக் கியமவன்றன் மனைவிக்குஞ் சுகமாம்

திண்டிறலாந் தோளியதா மிவர்களோடுஞ் சான்றோர்
செறியும்பா வாதியற்குச் செல்வமிகச் சேரும்.

இ-ள். லாபாதிபனும், பாக்கியாதிபனும், களத்திரத்தானத்திலிருக்க, பாக்கியலாபாதியாகிய இருவர்களும், கேந்திரத்தில், உச்சமாக, ஏழாமிடத்ததிபன், சுபனுய், பாக்கியலாபத்தானத்திலிருக்கப் பலபாக்கியங்களுமுண்டாம் அவன் மனைவிக்குஞ் சுகமாம், இவர்களோடு (தந்தை, தாய், சகோதரன், மனைவி, மாமன், சகோதரி) இதில் எந்தப்பாவாதிபர் கூடினர்களோ, அவர்களுக்குந் திரவியமுண்டாம்—எ-று. 808

சேருமொன்பா னிடத்திருந்த பாக்கியவா திபனும்
திறல்குருமூ வருநீச மத்தமனஞ் செறியக்
கூரியபா வியுமாய்ச்சத் துருவீட்டி லிருக்கக்
குலவுவிய மாறெட்டிற் கூடிநின் றூனும்
நேரும்பாக் கியநட்டம் பாக்கியவா திபனும்
நிருபனுநின் றிடுவீட்டோ னீசமத்த மனமாப்
பாரிலிரப் பான்பாக்கி யாதிகுரு வுடனே
பாவிகள்கூ டினும்புசிப்பன் பலிகரத்தி லெடுத்தே.

இ-ள். ஒன்பதாமிடத்திருந்தவன், அவ்வதிபதிகுருவாகிய, இவர்கள் மூவரும், நீசாஸ்தமனமாக அல்லது, பாவராய்ச் சத்துருவீட்டிலிருக்க, அல்லது, சட்டாட்டமவியத்தில், கூடியிருக்கப் பாக்கியநஷ்டமாம், பாக்கியாதிபனுங் குருவும், நின்றவீட்டதிபர்கள், நீசாஸ்தமனமாகில், காசினியில், யாசிக்கின்றவனும், அப்பாக்கியாதிபனும், சிலாக்கியம்பெற்ற, குருவும், பாவிகளுடன் கூடினும், லெச்சைகெட்டு அச்சமில்லாமல், பிச்சையைக் கையில் வாங்கிப் புசிப்பவனும்—எ-று. 80

வே று.

எடுத்த பத்தா மதிபதி யேழிறை
கடுத்த மித்திர ராகிப் பலனுடன்
கொடுத்த வுத்தமர் வீட்டினிற் சூழ்ந்திடப்
படைத்த பாரியி னுல்வரும் பாக்கியம்.

இ-ள். பத்து எழுக்குடையவர்கள், மித்திரர்களாய், பலன்பெற்று, சுபர் வீட்டிலுமிருக்க களத்திரத்தினுல், பாக்கியமுண்டாம்—எ-று. 81

வே று.

பாக்கியன்சேர் வகைபிருகு மதியரசன் கூடிப்
பத்தாகு மிடத்திருக்கும் பலன்றனவா னுவன்
மீதக்கியசத் தியவசனன் கல்விசெறி நிபுணன்
திரராஜர் வெகுமானஞ் செய்யமகிழ்ந் திருப்பன்

தாக்கியபொன் சனிபுந்தி மதிசெவ்வா யைவர்
தானொருவீட் டினிலிருக்கத் தனவானு மாகி
ஊக்கமுறு முடியரசர் சன்மானஞ் செய்ய
உலகில்வெகு பாக்கியமு முண்டாகுங் கண்டீர்.

இ-ள். பிருதி, இருதி, சுருதி, இவர்கள்கூடி பத்தாமிடத்திலிருக்க, தனவான், பொய்சொல்லாதவன், கல்விநிறைந்த வித்துவான், ராஜசன்மானம்பெற்று மகிழ்பவனுமாவன், அந்தன், மந்தன், புந்தன், இந்தன், கந்தன், ஆகிய இவ்வைவர்களும் செவ்வையாய்க்கூடி, ஒருவீட்டிலிருக்கச் செல்வவானுகிக் கிரீடம்பெற்ற ராஜசன்மானம்பெற்று, உலகில் வெகுபாக்கியமுமுண்டாகுமாம்—எ-று. 811

வே று.

கண்ட பத்தா மாதிபதி கருது முச்சர் வீட்டிருந்
தண்டிப் பத்தா மிடம்பார்க்கி லவன்பூ மியிலுண் டாஞ்செல்வம்
மிண்டி நீசர் சத்துருக்கள் வீட்டி லிருந்தே மிகநோக்க
அண்டுந் தூர தேசத்து மந்நிய ராலு மயிஸ்வரியம்.

இ-ள். பத்தாமதிபதி, உச்சவீட்டிலிருந்து, பத்தாமிடத்தைப்பார்த்தால், சொந்தஊரிற் செல்வமுடையவனும், சத்துரு நீசவீட்டிலிருந்து, பத்தாமிடத்தைப்பார்க்கத் தூரதேசத்திலும், அன்னியராலும் ஐசுவரியமுண்டாம்—எ-று. 812

ஒன்பதாம்பாவம்.

சம்பூர்ணம்.

பத்தாம்பாவம்.

கன்மபலன்.

பத்தா மிடத்தி லட்டமத்தோன் பாவ ருடனே கூடிநிற்கப்
பத்தா மாதி பலம்பெறவே பாவர் பார்க்கத் துர்க்கன்மம்
பத்தா மதிபன் பலவானுய்ச் சுபக்கோ ளுடனும் பரிந்தேழில்
ஒத்த நான்கிற் சன்மத்தி லுறினற் கரும முளனுவன்.

இ-ள். பத்தாமிடத்தில், அட்டமாதிபன் பாவருடன் கூடிநிற்கப், பத்தாமிடத்தோன், பலம்பெறவே பாவிகள் பார்க்கக் கெட்டகாரியங்கள் செய்பவனும், பத்தாமிடத்ததிபன், பலவானுய்ச் சுபர்களுடன்கூடி, ஒன்று நான்கு எழில் பொருந்திநிற்கில், நல்லகாரியங்களைச் செய்பவனும்—எ-று.

ஆவன் ஞானி சனிநாலி லமர்ந்தா லந்தச் சனிபத்தில்
மேவிற் றீர்த்த யாத்திரையை விரும்பித் தவமே விரும்பிடவே
தாவுஞ் சன்மா திபன்பத்திற் றரிக்கிற் கன்ம முளன்பத்தில்
மேவுங் கன்ம காரகனும் பலமேற் கன்மங் குறைவில்லான்.

இ-ள். நாலாமிடத்தில், நீலன், நிற்கில், ஞானியாவன், பத்தாமிடத்தில், மத்திரானிருந்தால், தீர்த்தயாத்திரை தவங்கள், முதலியன, செய்ய விருப்பமுள்ளவன், லக்கினாதிபன், பத்தாமிடத்தில், நிற்கில், * முயற்சியுடையவன், பத்தாமிடத்திற் புத்திரகாரகனும், கன்மாதிபதியும் பலத்து நிற்க, நீங்காதமுயற்சியுடையவனவன்—எ-று. 814

குறைவி லொன்ப தாமிடத்திற் கோவும் பலமாய்ச் சுபர்வீட்டில்
உறையச் சுபக்கோள் பார்க்கமதி யுகந்து சலராசியி லிருக்க
நிறைந்த கங்கா நதிதோய்வன் பின்னும் நிலவுச்சம்பெறவே
அறையும் பத்திற் சுங்கனுறத் தீர்த்தம் பலவு மாடுவனே.

இ-ள். ஒன்பதாமிடத்திற்பொன்னவன், பின்னமில்லாமற் பலமாய்ச் சுபர்வீடாய், இருக்க, சுபர்கள் பார்க்க, சந்திரன், சலராசியிலிருக்க, கங்கா தீர்த்தமாடுவன், அச்சந்திரன், உச்சமாயிருந்து, சுக்கிரனும் பத்திலிருக்கப் பலதீர்த்தங்களுமாடுபவனும்—எ-று. 815

வேறு.

ஆடும் பத்தா மதிபன் சுபருடன்
கூடி மற்றிரு பானுற்ற கொற்றவர்
நீடி நிற்க நிரந்தர மன்பொடும்
தேடி யேசிவ பூசைகள் செய்வனே.

இ-ள். கன்மாதிபதி நன்மார்க்கமுள்ள சுபருடன் கூடியிருந்தராசிக்கு, முன்னும், பின்னும் பலத்த சுபர்கள், இருக்க, அன்போடுகூடி சிவபூஜை செய்வான்—எ-று. 816

செய்ய சந்திரன் சன்மந் தனக்குமே
துய்ய பத்தா மதிபதி சூழ்ந்திடும்
மெய்யி லங்கிசை யோன்பல மேபெறில்
பொய்யி றச்சுப கன்மம் புரிவனே.

இ-ள். சவுரியம்பெற்ற பத்தாமிடத்ததிபன், இருந்த நவாங்கிசாதிபதி, சந்திராலக்கினம், ஜென்மலக்கினம், இவைகளுக்குப் பலம்பெற்றுநின்றால் சுபகாரியங்களைச்செய்வான்—எ-று. 817

* முயற்சி, என்பது, சுபராகில், நன்முயற்சியும், பாவனாகில், தாழ்மையான முயற்சியுமாம்.

புரிகு சன்சனி பொன்மால் பளிங்குமே
பரிவு டனொரு வீட்டினைப் பற்றிட
அரிய சற்குண சன்மார்க்க னாகியே
தெரிய ஞானச்சிந் தைச்சிவ யோகியாம்.

இ-ள். வக்கிரன், அக்கிரன், சொக்கிரன், சக்கிரன், சுக்கிரன், ஆகிய, ஐவருங்கூடி பெருமையாய், ஒருவீட்டிலிருக்க, சற்குணமும், சன்மார்க்கமு முள்ளவனாகி, ஞானசிந்தையையுடைய, சிவயோகியாவான்—எ-று. 818

வே று.

ஆமெனும் பத்தா மதிபனற் கோளே
யாய்த்தன லாபபாக் கியத்தில்
நீமமா யுச்ச கேந்திரங் களிலும்
நிற்கநற் கன்மமே புரிவன்
தோமுறும் பவனாய் நீசமத் தமனாய்ச்
சொல்லுமா றெட்டினில் வியத்தில்
தாமுறி னல்லோர் தம்மையும் பழித்துத்
தக்கதுர்க் கன்மமே புரிவன்.

இ-ள். சத்கருமங்களை யுத்தியாய்ச்செய்யும், பத்துக்குடையவன், சுபனாய், வாக்கியம், பாக்கியம், ஆரோக்கியமுற லாபத்திலும், அச்சமில்லாது மெச்சக்கூடிய, உச்சகேந்திரங்களிலும், நிற்க, நல்லகாரியங்களும், பாவனாய், நீசம், அஸ்தமனம், பெற்று சட்டாட்டமவியத்தில், இருக்க, நல்லவர்களைப் பழித்தலும் கெட்டகாரியங்களைச் செய்தலுமுடையவனாவன்—எ-று. 819

புரியுமீ ரைந்தா மதிபனற் கோளாய்ப்
புகழ்பல வானுமாய்ப் பத்தில்
தெரியவுற் றிடில்யா காதிகன் மங்கள்
செய்வனீ ரைந்திடத் ததிபன்
பரிவுடன் வியத்தா னதியைக் கூடிப்
பண்புறுஞ் சுபபல முடனே
அரியவே வியத்தி லுறத்தன பதியா
யானநற் கன்மமே செய்வன்.

இ-ள். பலபுண்ணியங்களைச்செய்ய எண்ணமுள்ள பத்துக்குடையவன், சுபனாய், பலம்பெற்று, பத்தில் இருக்க, யாகமுதலிய காரியங்களைச் செய்பவனும், பத்துக்குடையவன், பன்னிரண்டாமிடத்ததிபனைக்கூடி, சுபபலத்துடன், பன்னிரண்டிலிருக்கச் செல்வமுடையவனாய், சுபகாரியங்களையும் செய்பவனாவன்—எ-று. 820

செய்யகன் மாதி குருவுமா யுச்சஞ்
செறிந்தசுக் கிரனுடன் கூடில்
துய்யயா காதி கன்மமே புரிவன்
சூழ்ந்தகன் மாதியைத் தானும்
பய்யவே குருசுக்கி ரனுமே பார்க்கில்
பண்ணுவன் யாகமே பலவும்
மெய்யகன் மாதி குருவுமாய் நல்லோர்
வீட்டுற விரும்புவன் மகமே.

இ-ள். அவ்விய கவ்வியத்துக் கொவ்வியபத்துக்குடையவன், புத்திர காரகனுகி, உச்சம்பெற்ற உரிச்சிகனுடன் (மீனத்தில்) கூடில், யாகமுதலிய கிரியைகளைச் செய்வான், பத்துக்குடையவனைப் புத்திரன், நத்திரன் பார்க்கப் பற்பலயாகங்களைச் செய்பவனுவன், பத்துக்குடையவன் குருவாய், சுபர்கள் வீட்டிலிருக்க யாகத்தை விரும்புகிறவனும்—எ-று. 821

விரும்புசுக் கிரனுங் குருவுமே பலமாய்
மேவும்வீட் டதிபனற் கோளாய்
இரும்பல வானு யிருக்கமற் றவரோ
டெத்தனை சுபக்கி ரகங்கள்
பெரும்பல முடனே கூடின விலக்கம்
பெருமகம் புரிவனென் றுரைக்கும்
அரும்புகன் மாதி குருவுமாய்ப் பலமே
யாகில்வே தங்கண்மூன் றறிவன்.

இ-ள். பாலனும், லோலனும், பலமாயிருக்க இவர்களிருந்த வீட்டதிபனும், சுபனுய், பலத்திருக்க, இவர்களுடன், எத்தனைசுபர்கள் பலத்திருக்கின்றூர்களோ, அத்தனை பெரிய யாகங்களைச்செய்வான், பத்துக்குடையவன், பாலனுய், பலத்திருக்க மூன்றுவேத மறியப்படுபவனுமாம்—எ-று.

அறியுங்கன் மாதி பாவனுய் பாவ
ரகத்தினி லிருந்துகன் மத்தைக்
குறியுடன் பார்க்கிற் சூத்திர கன்மங்
கூசிடாப் பாவதுர்க் கன்மம்
நெறியுடன் புரிந்தீங் கிசைபெற விருப்ப
னிறைந்திடுங் குரூரசா கசமும்
செறிமவ் வினையாற் சுபபலஞ் சிறிதாந்
தீங்குறு பலன்திர ளாமே.

இ-ள். ஜீவனஸ்தானுதிபதியாகிய, பத்துக்குடையவன், பாவியாய், பாவர்வீட்டிலிருந்து, பத்தாமிடத்தைப்பார்க்கில், சூத்திரகன்மமும், பாவ

மாகிய கெட்டசெய்கைகளும் முறைப்படியேசெய்து, பாவகீர்த்தியுள்ளவ னுகிகெட்டசகவாசத்திற்சேர்ந்து, திரளானபாவச்செய்கைகள், செய்வான், சுபபலன், சொற்பமாம்—எ-று. 823

திரமுறு மொன்பா னதிபதி குருவாய்ச்
செய்யவொன் பதிற்குரு வுறினும்
வரமுறும் பலர்க ளிடத்துப தேச
வசனமும் வித்தையும் பெறுவன்
உரமுட னென்பா னதிபதி மரபி
லுரையுப தேசமும் பெறுவன்
பரமுறு மிவர்க ளுச்சகேந் திரத்திற்
பற்றிடில் ஞானமே பலிக்கும்.

இ-ள். ஒன்பதுக்குடையவன், குருவானாலும், அல்லது ஒன்பதாமிடத்திற் குருவிருந்தாலும், பலபேர்களிடத்திலும், உபதேசமும், கல்வியும் கற்றுக்கொள்வன், ஒன்பதாமிடத்ததிபன், மரபிலே, உபதேசமும், பெறுவான், இவர்கள் உச்சகேந்திரங்களிருந்தால், ஞானம் பலிதமுண்டாகும்—எ-று.

வே று.

பலிக்கு மேட மிடபமுடன் பகர்ந்த சிங்கம் பத்தாக
வலிக்குஞ் சுபக்கோ ளின்றிடினு மன்னு மவர்நோக் குற்றிடினும்
ஒலிக்கும் வேத மதிற்சொன்ன வுத்த மத்தன் மங்கடனைச்
சலிக்கச் செய்வ னெனச்சொல்வர் தக்க கணித வல்லோராம்.

இ-ள். ஆடு, மாடு, அரியாகிய சிங்கம்,இந்தவிராசிகள் பத்தாமிடமாகச் சுபர்கள், இருந்தாலும், பார்த்தாலும், வேதாகமமுறைப்படி சொல்லிய, உத்தம காரியங்களைப் பிரயாசையுடன், செய்வானென்று, கணிதவல்லவர்கள் சொல்லுவார்கள்—எ-று. 825

ஆகுஞ் சன்ம லக்கினத்தி லணுகும் ராகு மோரேழில்
வேக முடனே தானிருக்க வேண்டுங் கேந்திரங் காரிபுகர்
தாக முடனே புதன்மூவர் தானுங் கூடச் சண்டாள
யோக மெனவே தானுரைப்ப ருண்மை கன்ம மநாசாரம்.

இ-ள். ஜென்மலக்கினத்திற் கேதுவும், எழில் இராகுவுமிருக்க, கேந்திரங்களில், சனி, சுக்கிரன், புதன், இம்மூவர்களுங் கூடியிருக்கச் சண்டாளயோகமாம், இதின்பலன், அநாசாரமாகிய செய்கைகளுடையவனும்-எ-று.

உண்மை பாக்கி யாதிபனு முற்றே சென்மத் துறுகதிரும்
வண்மை பெறவே யோரைந்தில் வந்து சுபக்கோ ணோக்கமிலாத்

திண்மை யாறி லொருமூன்றிற் றீயோர் வந்து தானுறைக
எண்மை யுடனே நாசார மெய்து நீசக் கன்மியனே.

இ-ள். யோக்கியமான, பாக்கியாதிபன், சிலாக்கியமான, லக்கினத்திலும், மூந்தன், ஐந்தாமிடத்திலும், சுபர் பார்வையில்லாமலிருந்து, மூன்று, ஆறில் பாவர்கள் நிற்கில், இழிவாக மொழியக்கூடிய அநாசாரமும், நீசக்கிரியைகள் செய்பவனுமாவன்—எ-று. 827

சன்னியாசி யோகம்.

வேறு.

தேசுறுபத் தாமாதி நான்கிடத்தி லிருக்கச்
செப்பியகா லாதிபதி திரிகோணத் தெய்தப்
பூசலுறும் பாம்பல்லா தொருநான்கு கிரகம்
பொருந்திப்பத் தினிலிருக்கும் போதுசந்யா சியுமாம்
ஓசைகொணுன் காம்வீடு முதற்பத்தா மனேமட்
டோரேழு வீட்டினுங்கோ ளொழியாம லிருக்கில்
காசினியில் வாழ்பவர்க்குத் தேசிகனே யாகிக்
கதித்திடுசந் யாசியென வேகருதல் வேண்டும்.

இ-ள். பத்துக்குடையவன், சித்தமாய் நாலில் இருக்க, நாலாமிடத்ததிபன், திரிகோணத்திலிருக்க, ராகு, கேதுவல்லாத, ஏதாவது, நான்கு, கிரகங்கள், கூடி, பத்தில் இருக்கச் சன்னியாசியாம், லக்கினத்திற்கு, நாலாமிடமுதல், பத்தாமிடம் வரையுள்ள, ஏழுவீடுகளிலும், இடைவிடாமல், கிரகங்கள் இருந்தால், பூமியிலுள்ளவர்களுக்கு, குருவாகி, நிலைத்த சந்நியாசியென்று கருதவேண்டும்—எ-று. 828

வேண்டிடுசெவ் வாயிரவி மதிமூவர் கூடி
விரும்புபத்தா மிடத்திருக்க மின்னூர்பொன் றனக்கும்
ஈண்டியதோர் விரிவில்லாச் சந்யாசி யாவன்
இனியபுதன் கதிரோனு முச்சமா யிருக்கத்
தாண்டுவியத் தானத்திற் சுக்கிரனெய் திடவும்
சனியொருவ னுகிச்சுக் கிரன்றன்னேப் பார்க்கப்
பூண்டுவருஞ் சன்மமுத லாதியந்த மாகப்
புகழ்ந்திடுசந் நியாசியெனப் போற்றிடவீற் றிருப்பன்.

இ-ள். குத்திரன், மித்திரன், வத்திரன், இவர்கள் மூவருங்கூடிப் பத்தில், இருக்க, மண், பெண், பொன், இல்லாத சன்னியாசியாவன், பச்சையாவது, இச்செகத்தில், மெச்சக்கூடிய சூரியனுவது உச்சமாயிருக்கப் பன்னிரண்டில், தன்னெரு கண்போன சுக்கிரனிருக்கச் சனி தனியாய்நின்று

சுக்கிரனைப்பார்க்க, ஜெனனகாலமுதல், முடிவுவரை, புகழ்பெற்ற சன்னியாசியாகி பூமியிலுள்ளோர் போற்றும்படியாக விருப்பான்—எ-று. 829

பத்தாம்பாவம்

சம்பூர்ணம்.

பதினோராம்பாவம்

ஆதாய பலன்.

வியமா றெட்டா திபன்கூடி மேவி னுலுந் தனியேனும்
நயமாய்ப் பாவத் துறிற்பாவர் நண்ணிற் பார்க்கில் லாபமிலை
சுயலா பாதி யுச்சனுமாய்ச் சுபர்மத் தியிலே தானிருக்கில்
சயலா பத்திற் சுபரிருக்கச் சாரும் லாபந் திரளாக

இ-ள். லாபஸ்தானத்தில், பாவக்கிரகங்கள் கூடியிருந்தாலும், நாடிப் பார்த்தாலும், ஆறு, எட்டு, பன்னிரண்டாமிடத்ததிபர்கள்கூடியிருந்தாலும், தனித்திருந்தாலும் லாபமில்லையாம், லாபாதிபதி, உச்சமாகிலும், சுபர் மத்தியிலும், இருந்து, லாபத்திற் சுபர்கள் இருக்க, லாபம் திரளாகச்சேருமாம்.

திரலா பாதி யுச்சத்திற் செறிந்து லாபத் தினிலிருக்க
வரவாய்ச் சென்மா திபன்பலமாய் மருவ லாபம் வருஞ்சுகிப்பன்
விரவாய் லாபா திபனிருந்த வீட்டுக் கிறைகேந் திரமேவ
உரவோ ரவனைக் கூடக்கண் ணுறலா பங்க ளுண்டாமே.

இ-ள். லாபாதிபதி, லாபத்திலாகிலும், உச்சத்திலாகிலும் இருக்க, ஜென்ம லக்கினதிபதி, பலத்துடன், பதினொன்றிற்சேர்ந்திருக்க, மிகலாபம் பெற்று சுகமாய் வாழ்ந்திருப்பவனுமாவன், லாபாதிபனிருந்தவீட்டதிபன் கேந்திரத்திலிருக்க, அவனை மித்துருக் கிரகங்கள்கூட, அல்லது நோக்க, மிகுந்த லாபமுண்டாம்—எ-று. 831

உண்டாம் லாபா திபனிருந்த திக்கிற் பலன்க ளுரைசெய்வாம்
தண்டா மரைநண் பன்கிழக்குத் தருஞ்சுக் கிரற்கக் கினிமூலை
கண்டாய் குசன்றெற் கராமூலை காரி மேற்குச் சசிவாயு
கோண்டே யிருக்கும் புதன்வடக்கு குருவீ சானங் கொண்டுவரும்.

இ-ள். லாபாதிபன், இருந்த திக்கின்பலன்களைச் சொல்லின், சூரியனுகில், கிழக்கிலும், சுக்கிரனுகில் தென்கிழக்கிலும், செவ்வாயாகில், தெற்கிலும், பாம்பாகில், நிருதிமூலையிலும், சனியாகில், மேற்கிலும், சந்திரனுகில், வாயுதிக்கிலும், புதனுகில், வடக்கிலும், குருவாகில், ஈசான்யத்திக்கிலும், இருந்து லாபம் வந்துசேரும்—எ-று. 832

வேறு.

வரும்லாபா திபன்லாபத் தானத்தி லிருந்தோன்
மதியிரவி யிவர்நால்வர் மகிழ்பலமே பெற்று
பெருமையுள்ளோர் வீட்டினின்ற கிரகத்தோ டிருக்கப்
பெறும்வீட்டுக் கதிபதியு மேபலவா னுயின்
கிருஷிகனன் ருய்ப்பலிக்கு மயிஸ்வரிய னுவான்
கிட்டியிவர் மகாதிசையிற் கிளர்தனங்கள் சேரும்
தரும்லாபா திபனிரவி யாகிமதி யுடனும்
தான்கூடப் பார்க்கவெகு தனலாப முண்டாம்.

இ-ள். லாபாதிபனும், லாபத்தானத்திலிருந்தவனும் சூரியன், சந்திரன், ஆகிய நால்வரும், பலம்பெற்று, சுபர்கள் வீட்டிலிருந்த கிரகத்தோடு கூடியிருக்க, அவ்வீட்டதிபதி பலவானுகில், விபசாயங்கள், நன்ருய்ப்பலிதமுடையவனுயும், ஐஸ்வரியமுள்ளவனுயும் மேற்சொன்னவர்களுடைய, திசாபுத்திகளில், பொருள்சேருமாம், லாபாதிபதி சூரியனுகி, சந்திரனுடன் கூட, அல்லது பார்க்க, அதிகமான பொருள் லாபமுண்டாம்—எ-று. 833

உண்டான லாபாதி பதியாகுஞ் சசியை
உம்பர்கோ னுனகுரு வும்முகந்து நோக்க
மிண்டான சகலபாக் கியலாபஞ் சேரும்
மிக்கலா பாதியெவர் வீட்டிலிருந் தாலும்
கொண்டாடு மவரவர்க்கு வெகுலாப முளதாம்
குறித்தசென்மா திபன்லாபத் தானத்திற் குலவ
கண்டாய மொழியாய்லா பாதிநின்ற திசையில்
கருதியலா பங்கள்வருங் காணுமெனப் புகல்வர்.

இ-ள். லாபாதிபதி சந்திரனுகி, அச்சந்திரனை குருபார்க்க, சகலபாக்கியமும், லாபமும், சேரும், லாபாதிபன், எவர் வீட்டிலிருந்தாலும், (அந்த வீடு) (சகோதரர், தாய், தகப்பன், மாமன், கலத்திரவீடாகில்) அவரவர்களுக்கும் லாபமுண்டாம், லக்கினுதிபன், லாபத்தானத்திலிருக்க, லாபாதிபன் நின்ற வீட்டதிபன் திசை நடத்துங்காலம், லாபங்கள் வந்துசேருமென்று சொல்வார்கள்—எ-று. 834

பதினோராம் பாவம்

சம்பூர்ணம்.

பன்னிரெண்டாம் பாவம்.

சயன பலன்.

கூறிய வியத்திற காரி சசிகதிர் குருசேய் வெள்ளி
ஏறிடிற் குழவி யன்னை பிதாமகன் றுணைவ ரில்லாள்
ஆறுபே ருக்க ரிட்ட மப்பதி சரமேற் றீதாம்
மாறிலா வவர்வீ டுச்சம் நன்றென வழுத்து வாரே.

இ-ள். வியத்தானமாகிய பன்னிரண்டாமிடத்தில், கரிச்சிகன், அரிச்சிகன், விரிச்சிகன், புரிச்சிகன், எரிச்சிகன், உரிச்சிகன், கூடியிருந்தால் சேய், தாய், தந்தை, மைந்தர், சோதரம், களத்திரம் இந்த ஆறுபேருக்கும், அரிட்டமென்று தோஷங்கூறுவர், அப்பன்னிரண்டாமிடம், சரமாகில், மிகவுங்கொடுமையாம், உச்சஸ்தானமாகில் நல்லதென்று சொல்லுவார்கள்.

(பன்னிரண்டாமிடத்தில் தனித்துநின்ற சனிக்கு ஜெனித்த, சேயும், சந்திரனுக்குத் தாயும், சூரியனுக்குத் தந்தையும், குருவுக்குப் புத்திரனும், செவ்வாய்க்குச் சகோதரமும், சுக்கிரனுக்குக் களத்திரமும், தோஷமாம்.)

வர்மைசேர் வியத்தா னத்தின் மன்னவன் சுபக்கோ ளாகிச்
சீர்மைசேர் கேந்தி ரத்து முச்சத்துஞ் செறிந்து நிற்கில்
பார்மைசேர் வியத்தி னல்லோர் பரிந்துநிற் பார்க்கில் மேலாம்
கூர்மைசேர் பரியங் கத்திற் குலவுபூச் சரங்கள் சூழ.

இ-ள். பன்னிரண்டாமிடத்ததிபன், சுபனுய், உச்சமுற்றுக் கேந்திரம் பெற்றுநிற்க, அப்பன்னிரண்டாமிடத்தில், சுபர்கள், இருந்தாலும், பார்த்தாலும், மேன்மையான சப்ரமஞ்சத்தில், தொங்கலாய்க் கட்டிப் பூச்சரங்கள் சூழ்ந்திருக்கவும்—எ-று. 836

சூழுஞ்செம் பட்டு மெத்தைத் தூக்கமேற் கட்டி தூபம்
தாழுஞ்சங் கிலியிற் றெங்குஞ் சப்பிர மஞ்ச மீது
ஏழுநல் லிசையாழ் கொண்டே யேந்திழை மாரி சைப்ப
வாழுமன் னவனு மென்று வழுத்துவர் மறைவல் லோரே.

இ-ள். தவகத்தாற் செயகதோர், சப்பிரமஞ்சமீது பங்கமில்லா, அயத்தாற்செய்த சங்கிலியாற் கட்டித் தொங்கும் செம்பட்டு மெத்தையில் நித்திரையும், மேற்கட்டி, தூபங்கள், பெண்கள், ஏழ்நரம்புகொண்ட யாழ்மீட்டிக் கியானம் பாடவும், வாழ்கின்ற மன்னனுவானென்று மாதலத்துக் காதரவான வேதங்களைக்கற்ற சோதிடவல்லவர், சொல்லுவர்—எ-று. 837

வல்லதோர் வியத்தா னுதி மற்றுமெட் டாறில் நிற்கச்
சொல்லிய சனியும் பாம்புஞ் சூழ்ந்துபன் னிரண்டில் நிற்க
நல்லவர் பார்வை சற்றும் நயந்திடா திருக்கிற் பாரில்
புல்லது மெத்தை யாக விருவிழி துயில்வன் போந்தே.

இ-ள். பன்னிரண்டாமிடத்ததிபன், முன்னிலையாய் ஆறு, எட்டாமிடங்களில் இருக்க, நீலனும், ஒலனும், கூடிப் பன்னிரண்டாமிடத்திலிருக்க, நல்லவர்கள், பார்வையில்லாவிட்டால், புல்லதுவே மெத்தையாக நித்திரைசெய்வான்—எ-று. 838

விரய பலன்.

போந்த செறிபாக் கியத்தாதி பொருந்து பன்னொன் றின்மேவ
ஏந்தும் பிதிர்லா பாதிபதி யிருவர் தமக்கு முறவாக
ஆர்ந்த பிதிரின் றனம்போல வதிந்து விருணம் பொன்தேடி
வேந்த னுவன் மைந்தற்கு மியைந்தே யிருக்கும் வெகுதனங்கள்.

இ-ள். பாக்கியாதிபதி, லாபத்திலிருந்தாலும், ஒன்பது பதினொன்றுக்குடையவர்கள், நட்புக்கிரகங்களாயிருந்தாலும், தந்தை வெகுதிரவியஞ் சம்பாதித்து அரசனுவான், அன்றியும், மைந்தர்களுக்கும், வெகுதனங்கள் சேர்த்து வைப்பவனுமாவன்—எ-று. 839

வே று.

கோல லாபக் குறிசில் வியத்துற
மேல்வி யத்தனம் மேவு தனத்துற
ஆலு மேதனத் தாதி பலமறச்
சால மன்னர் தனங்கொள்வர் தண்டமாய்.

இ-ள். லாபாதிபதி வியத்தானத்திலும், வியத்தானத்ததிபதி, தனத்திலும், இருக்க, அத்தனுதிபதி பலமற்றிருக்க, மண்டலத்தரசர்கள் கண்டபணத்தைத் தண்டமாகக் கைக்கொள்வார்கள்—எ-று. 840

மாய்வி யத்தனும் வந்து தனத்துற
ஏய்த னுதி வியந்தனி லேயுற
நேய்சென் மாதி நிரிக்கண மன்றினெய்
தூய்த னங்க ளெல் லாந்துரை கொள்வரே.

இ-ள். பன்னிரண்டாமிடத்ததிபன், இரண்டாமிடத்திலிருக்க, இரண்டுக்குடையவன், பன்னிரண்டிலிருக்க, லக்கினுதிபதி திரேக்காணமில்லாதிருக்கில், பொன், பொருளை, யெல்லாம், மன்னனுகிய அரசன் கைக்கொள்வான்—எ-று. 841

வேறு.

கொள்ளுமிரண்டா மதிபதியுங் குலவு நவாங்கி சாதிபனும்
மெள்ளக் கூடிப் பலமறவு மெய்யா திபனுந் துர்ப்பலமாய்
உள்ளி யிருக்க வவன்றேடு முடமைப் பொருள்க ளுள்ளவெல்லாம்
கள்ள ரரச ரக்கினியுங் கலந்து கொள்வர் கண்டாயே.

இ-ள். தனுதிபதியும், நவாங்கிசாதிபதியும், கூடிப் பலமற்றும், உடல் காரகனாகிய சந்திரனும், திடமற்றுத் துர்ப்பலமாயிருக்க, அவன் மெள்ளத் தேடியனவும், உள்ளதுமான, பொருள்களை, எல்லாம், கள்ளர்களும், அரசாளும் வள்ளல்களும் கைக்கொள்வார்கள், அக்கினியாலும், மிக்க நட்டமாகும்.

வேறு.

கண்ட பன்னிரண் டாமிடக் காவலன்
கொண்ட லக்கின மேழிற் குடிகொள
மண்டு பொன்னணி தானிய மாறிடும்
கெண்டை போல்விழிக் கிஞ்சுக வஞ்சியே.

இ-ள். கெண்டைமீன்போன்ற, கண்ணையும், கிளிபோன்றமொழியையுமுடைய பெண்ணே? பன்னிரண்டுக்குடையவன், ஜென்மம் ஏழாமிடங்களிலிருந்தால், பொன்னாபரணங்களும் தானியங்களும், இழந்துவிடுவன்.

வஞ்சி யேபத் ததிபதி பாவனாய்
விஞ்சி யேபல னன்றிவி யத்தினில்
அஞ்சி யேயைம்ப தாம்வய தாயவன்
தஞ்ச மான தனங்கள் வழுவுமே.

இ-ள். பெண்ணே பத்தாமதிபன், மெத்தப்பாவியாய், பலமில்லாமல், பன்னிரண்டில், இருக்க, ஐம்பது வயதில், செல்வத்தை யிழப்பவனும்-எ-று.

வேறு.

வழுத்திய பன்னி ரண்டா மனைக்குமன் பாவ னாகி
அழுத்திய வவனைப் பாவ ரணுகியும் பார்த்துநிற்க
முழுப்பொலாப் பாவ சிந்தை முயற்சியா லவன்பொன் னெல்லாம்
இழுக்குறுந் தொழிலுள் ளார்க்கே யீந்தவன்கீர்த்தி யேற்பன்.

இ-ள். பன்னிரண்டாமிடத்ததிபன், பாவியாகி, அவனைப் பாவிகள் கூடியும், பார்த்துமிருந்தால், பாவசிந்தனையான, கெட்டமுயற்சியால் அவன், திரவியங்களையெல்லாம், இழிதொழிலுடையவர்களுக்கு, கொடுத்து, கீர்த்தியுள்ளவனாவான்—எ-று.

ஏற்கவே பன்னி ரண்டி லிரணியன் வெள்ளி தூய
தீர்க்கசந் திரன்போல் லாரைச் சேராத புதனிந் நால்வர்
மார்க்கமாய் கூடிற் றன்ம வகையினுற் செலவா மென்று
ஏற்கநாற் சுருதி வல்ல வேதிய ரோதி னரே.

இ-ள். பன்னிரண்டாமிடத்தில், தன்னிகரில்லாக்குரு சுக்கிரன், சுப சந்திரன், பாவர்களைச் சேராத புதன், ஆகிய நால்வருங் கூடியிருக்கில் தன் மவகையால், பொன், பொருள், செலவாகுமென்று மேதினியில், நாலுவே தங்களுங்கற்ற வேதியர்கள் சொன்னார்கள்—எ-று. 846

ஓதிய பன்னி ரண்டா மதிபனோ டுற்ற பாவர்
நீதியா நல்லோர் வீட்டி னிற்கினல் லோரைக் கூடில்
தீதறப் பலவா னகத் திகழ்வியத் ததிபன் ரெண்டில்
போதவே செம்பொன் றேடிப் புதைப்பன்மற் றொருவர்க் கீயான்.

இ-ள். பன்னிரண்டாமிடத் ததிபனோடுசேர்ந்த பாவர்கள், நல்லோர்களுடன், கூடினாலும், நல்லோர்கள் வீட்டிலிருந்தாலும், பன்னிரண்டாமிடத் ததிபன், இரண்டாமிடத்தில் திரண்டபலவானாய் நிற்கத் திரவியஞ் சம்பாதித்து, வேறொருவருக்கு மீயாமல், புதைத்துவைப்பான்—எ-று. 847

ஆனதோர் பாக்கி யாதி தனுதியைந் தாமிடத்தும்
ஊனமில் லைந்தா மாதி யொன்பதி லிரண்டி னிற்கத்
தானமிம் மூன்று பேரு மிலக்கினந் தன்னி னிற்க
ஈனமி லவன்பொன் னெல்லாங் கடன்கொடுத் திழந்துபோவன்.

இ-ள். இரண்டு ஒன்பதுக்குடையவர்கள், முரண்டாய், ஐந்திலிருந்தாலும், ஐந்தாமிடத்ததிபன் இரண்டு, அல்லது ஒன்பதில் இருக்க, அல்லாமல் தனபஞ்சமபாக்கியஸ்தானத்துக்குடையவர்கள், லக்கினத்திலுமிருக்க, குற்றமில்லாது பெற்று வளரும் உடன் சம்பாதித்த திரவியமெல்லாம், கடன் கொடுத்து, திரும்பவும் வாங்காமல் இழந்துவிடுவான்—எ-று. 848

வன்புறு மிரண்டா மாதி மார்த்தாண்ட னுடனே கூட
இன்புறு வியத்தா னதி யினியரண் டிடத்தி னிற்கத்
துன்புறு மட்ட மத்தி லாபாதி சூழ்ந்து நிற்கப்
பொன்பல வெல்லாஞ் சேதம் போய்விடும் புகழுமில்லான்.

இ-ள். இரண்டாமிடத்ததிபன், சண்டனுடன் கூடியிருக்க பன்னிரண்டாமிடத்ததிபன், இரண்டாமிடத்தில் இருக்க எட்டாமிடத்தில், பதினொன்றுக்குடையவனிருக்க, திரவியங்களெல்லாஞ் சேதமாய்விடுவதோடு கீர்த்தியில்லாதவனுமாவன்—எ-று. 849

வே று.

புகழும் வெள்ளியும் பொன்னும் பிறைதனை
மகிழ நோக்குற மந்தன்று லாத்துற
நிகழும் லோபத் தனமுடனேமியோர்
இகழ வேயொரு காசொன்று மீவிலான்.

இ-ள். லோலனும்; பாலனும், ஆலனைப்பார்க்க, நீலன் துலாத்திலிருக்க, உலோபகுணமுடையவனாய் உலகத்தார் இகழ, ஒருகாசும், வரும் யாசகருக்குக் கொடுக்கமாட்டான்—எ-று. 850

ஈத லீவ தெவர்க்கென் றுரைப்பது
ஓது மொன்பதாம் வீட்டுக் குடையவன்
சாதி வர்க்கத் தவர்தமக் கேநிதி
வாதி யாமன் மகிழ்ந்து வழங்குவன்.

இ-ள். ஒன்பதாமிடத்ததிபன், அன்புடன் தந்தை, எந்தசாதிவர்க்கம் பலம்பெற்றுளோ, அந்தவர்க்கத்தவர்களுக்குத்தன், செல்வத்தை, வாதனையன்னியில் கொடுப்பவனும்—எ-று. 851

வே று.

ஓது கதிருந் தேய்பிறையும் கூடி வியத்தி லுறத்தனத்தை
நீதி யரசர் கைக்கொள்வர் நிலவுங் குருவும் வியத்திலுறும்
போது தனங்கண் மிகத்தேடிப் பொருந்துந் தன்மம் புரிந்தருளி
மீதி சிறிது தனமிருக்க வாழ்வன் புவியில் வெகுகாலம்.

இ-ள். விரிச்சிகனும், அமரபட்சத்து அரிச்சிகனுங்கூடி, பன்னிரண்டிலிருக்க இவன் திரவியத்தை, அரசர்கள் கைக்கொள்வார்கள், அரிச்சிகனும், புரிச்சிகனும், பன்னிரண்டிலிருக்கில், பொருள் சம்பாதித்து, அற்புதமாக, உத்தமதன்மஞ்செய்து, சொற்பசெல்வத்தோடு பூமியில் வெகுகாலம் வாழ்வான்—எ-று. 852

வே று.

கால மாம்வியந் தன்னி லங்காரகன்
சால நிற்கத் தனித்துங்கண் ணேக்குறில்
ஞால மீதிற் புதைத்திடு நற்பொருள்
வாலை கேடெரி யாமன் மறக்குமே.

இ-ள். பன்னிரண்டாமிடத்தில், பரணியாகிய செவ்வாயிருக்க, அல்லது, தனிமையாய்ப்பார்க்கப் பூமியிற் புதைத்து வைத்திருந்த பொருளைத்

தாமிதமாய் வைத்த இடந்தெரியாமல், நித்தம்பார்த்தும் புரியாமல், மெத்த வருத்தமாய்த் திரும்ப எடுக்கமுடியாமல் மறந்துவிடுவான்—எ-று. 853

பன்னிரண்டாம்பாவம்

சம்பூர்ணம்.

கர்ப்பத்தானமறிய.

கர்ப்பத் தான லக்கினத்தில் கிளரும் பலன்கள் புரவலனுங்
கர்ப்பத் திரிகோ ணத்திருக்கக் கருவி லுதித்த தானுகும்
இர்ப்பச் சசிக்குஞ் சூரியற்கு மேழிற் சனி செவ் வாயிருந்தால்
பொர்ப்பு நிறையும் புருடனுக்கும் பூவை தனக்கு நோய் வருமே.

இ-ள். கர்ப்பந்தங்குகின்ற லக்கினத்தாற் சொல்லும் பலன்களாவன, புரிச்சிகன் கர்ப்பலக்கினத்திற்குத் திரிகோணங்களிலிருந்தால், கருவிலுற்பத்தி, ஆணுகும், அமரபட்சத்து அரிச்சிகனுக்கும் விரிச்சிகனுக்கும் ஏழாமிடத்திற் கரிச்சிகன், எரிச்சிகன், இருந்தால், ஸ்திரீபுருஷர்களுக்கு சிக்குண்டாம்—எ-று. 854

வருஞ்சூ ரியற்கு முந்நான்கி விரண்டின் மந்தன் செவ்வாயும்
தெரிந்தே கூடும் வேளையினற் சேர்ந்தாற் கரிட்டஞ் செழுமதிக்கும்
பரிந்தி ரண்டின் முந்நான்கிற் பங்கு பாதன் குசன்கூடி
இருந்த போது புணர்ந்திடினே யேழைக் கரிட்ட மெய்திடுமே.

இ-ள். பருதியாகிய சூரியனுக்குப் பன்னிரண்டில், இரண்டில், மிருதியாகிய சனியும், குருதியாகிய செவ்வாயும், கூடியிருக்கின்றகாலத்தில், கூடினுல் ஸ்திரீபூமான்களுக்கு, தோஷமுண்டாகும், இருதியாகிய சந்திரனுக்கு, இரண்டுபன்னிரண்டில் நீலனும் வேலனும், கூடிஇருந்தகாலத்தில் (கூடினுல்) பெண்ணுக்குத் தோஷமுண்டாகும்—எ-று. 855

எய்தி யிளைத்த மதிதனக்கு நான்கில் வியத்தி விரவிகுசன்
வைதிக் கூடி விருக்கிலந்த மாதுக் கரிட்டம் புணர்காலை
செய்தி மதிக்கோ ரிருபுறமுந் தீய ரிருக்கத் திருக்கரிட்டம்
உய்து முதயத் தாண்கிரக மாணுங் கிசையி லுறவாணும்.

இ-ள். தேய்பிறைச்சந்திரனுக்கு, நாலுபன்னிரண்டில், சேயும் ஞாயிறுங் கூடியிருக்கக் (கூடினுல்) அந்த ஸ்திரிக்கு தோஷமாம், அக்காலையில் பக்கிரணுகிய, சந்திரனுக்கு, இரண்டுபக்கமும், பாவர்களிருந்தால், பெண்ணுக்குத் தோஷமாம், கூடும் லக்கினத்தில், ஆண்கிரகமிருந்து ஆணுங்கிஷம் பெறின், உற்பத்தியாகுஞ் சிசு ஆணும்—எ-று. 856

(பெண்கிரகமிருந்து, பெண்ணுங்கிஷம்பெறின் பெண்ணும்,)

ஆன மதியின் கலைக்குப்பெண் ணுகுங் கடிகை யைந்துக்குள்
தானுங் குறையா திடிற்சீவன் றன்னிற் குறையா திருந்திடுமே
தேனின் மொழியா யிரவிகலை செல்லிற் செல்வ னப்போது
ஊனங் கடிகை சென்றபடி யுயிருண் டென்பா ருரவோரே.

இ-ள். கெர்ப்பந் தரிக்குங்காலத்தில், சந்திரகலை நாழிகை ஐந்துக்குள் உற்பத்தி பெண்ணும், குறைந்திருந்தால், ஆயுள்குறைந்த குழந்தையும், கூடியிருந்தால் ஆயுள் நிறைந்த குழந்தையும், கர்ப்பத்திலுண்டாகும். சூரியகலை ஐந்துநாழிகைக்குள், உற்பத்தியாகில், ஆணும், ஆயுளும், மேற்சொல்லிய படியாம், என்று கணிதவல்லோர்கள் சொல்லுவார்கள்—எ-று. 857

உயரும் பவன னெதிராகி லுபய மாகு மிருபுறமும்
பெயரப் பாவர் சுழிபுகுதப் பெற்ற தலியாம் பின்னுமவர்
உயர மளவே யுருக்காணு முபய ருதர முறமலத்தின்
பெயருந் தகைமை தனைப்போலிப் பிள்ளைக் குணமும் பெற்றிடுமே.

இ-ள். கெர்ப்போற்பத்தி லக்கினத்திற்கு, எழாமிடத்தில், எழ்பரியோனிருந்து, இரண்டுபக்கத்திலும், லக்கினத்திலும், பாவர்களிருக்க, அலிப் பிள்ளை பிறக்குமாம், லக்கினத்தில் நின்ற கோளின் பருவப்படி, உருவமுள்ளதாம், ஸ்திரிபூமான்களின், உதரமாகிய, ஆறுக்குடையவர்கள் கெர்ப்பதானத்திற் கூடியிருக்கில், மலத்துக்கொப்பாகிய, கெட்டகுணமுள்ள, பிள்ளை உற்பத்தியாம்—எ-று. 858

பெண்கள் ஜாதகம்.

திருவனைய மடவார்க ளம்புவியின் மீது
செனித்த பல சாதகத்தின் திறமை கூறும்
கருவுதய காலலக் கினஞ்சசிலக் கினமுங்
கண்டுவடி வுடனிறமுங் கருதியிட வேண்டும்
மருவியசத் தமராசி யாலவடன் குணமும்
மகிழ்நர்குண முந்தெரிந்து வழுத்தலுமே வேண்டும்
உருவுதய லக்கினத்திங் திருக்கிலழ குள்ளார்
ஓரேழிற் சசியுறப்பார்த் தாவழகுள் ளானே.

இ-ள். உருவத்தில், திருவனைய பருவமுள்ளபெண்கள், பூதலத்திற் பிறந்த பலன்களை, ஜாதக ரீதியாய்ச் சொல்லுமிடத்து, ஜெனனலக்கினம் சந்திராலக்கினம், இவ்விரண்டையும் தெரிந்து திரண்டவடிவுநிறம், முதலியவைகளை நிதானிக்கவேண்டும், எழாமிடத்தால், ஜாதகியின், குணமும்,

கணவன் குணமும், தெரிந்து சொல்லவேண்டும், உதயலக்கினத்தில், சுதா கரன், இருந்தால், அழகுள்ளவளாம், ஏழில், ஆலோனிருந்தால், பத்தா அழ குள்ளவனும்—எ-று. 359

உள்ளபிறை லக்கினமுஞ் சன்மலக் கினமும்
உறுமிரட்டை யாகில்வடி வுடையமயி லாகும்
தெள்ளியவம் மனையிரண்டும் நல்லோர்கள் காணில்
திரளாகப் பணியணிவள் செகத்ததிரு பியுமாம்
கொள்ளுமிரு மனையொற்றை யாகிலாண் சொரூபி
கூறுநல்லோர் கண்டிடினற் குலஞ்செல்வங் குலவும்
கள்ளமுறும் பாவரந்த ராசியிரண் டினிலே
கலந்திருக்கிற் கண்டிடிற்பொல் லாப்பாவக் கன்னி.

இ-ள். ஜென்மலக்கினமும், சந்திராலக்கினமும் இரட்டைராசியாகில், அழகுள்ளவளாம், சுபர்கள், மேற்சொல்லிய இரண்டுலக்கினங்களையும் பார்த்தால், ரதிரூபத்திலும், அதிரூபமும், திரளான ஆபரணமுடையவளுமாவள், ஒற்றைராசியாகில், ஆண்சொரூபமாம், சுபர்கள் பார்வைபெற்றால், நற்குலமும், செல்வமுமுடையவளாம், பாவர்கள், மேற்சொன்ன விராசியிரண்டிலுமிருக்கப் பாவர்கள் பார்வைபெற்றாலும், பொல்லாத பாவங்களுள்ள பெண்ணவள்—எ-று. 860

கன்னிகேள் சன்மத்திற் பிறைசுங்க னிருக்கில்
கமழ்பெருமை யுடன்சுகியாய்க் காசினியில் வாழ்வள்
உன்னுமுத யத்திலிந்தும் புதனுமே கூடில்
உணர்வள்பல கலைபோகி யோதியநற் குணத்தாள்
இன்னஞ்சன் மந்தன்னில் புதனுஞ்சுக் கிரனும்
இருந்தக்கால் ஞானியதி ரூபியினி துரைப்பள்
மின்னுமொரு மூன்றகத்திற் சுபக்கோள்க ணிற்கில்
வெகுதனநற் குணந்தயவு விரவுசுக முள்ளாள்.

இ-ள். தன்னிகரில்லாக் கன்னியேகேள், ஜென்மலக்கினத்திற் சோமனும், காமனும், இருந்தால் வாசனையும், பெருமையும் பொருந்தி, சுகியாய்ப் பூமியில்வாழ்வள், ஆலோனும், மாலோனும் இருந்தால், பலகலையறிபவளும், போகமுடையவளும், நற்குணமுள்ளவளுமாவள், சக்கிரனும், சுக்கிரனுமிருந்தால், ஞானியும், அதிரூபியும் இனிமையானவார்த்தை, பேசுபவளுமாவள். மூன்றாமிடத்தில், சுபக்கிரகங்கள் நின்றால் மிகுந்தசெல்வமும், நற்குணமும், தயவும் பொருந்தி சுகமுள்ளவளுமாவள்—எ-று. 861

உள்ளபல பாவரெட்டி லிருந்தக்கால் விதவை
உளதாவ தென்றெண்ணி லோரெட்டா மதிபன்

தெள்ளியவங் கிசைக்கிறைவ னஷ்டகவர்க் கத்தில்
சேர்வருட மெத்தனையோ வத்தனையாண் டதனில்
மெள்ளவித வையுமாவ ளிரண்டினினல் லோர்கள்
மேவிலவள் கணவனைத்தான் விட்டுமுன்போய் விடுவள்
கள்ளமுறுந் தேளிடபங் கன்னியெனு மூன்றில்
கலைமதியு மேவிற்புத் திரரற்பங் காணும்.

இ-ள். கெட்டபாவிகள், எட்டில். இருக்க, விதவையாவள், அப்படியா குங்கால மெதுவென்னில் அட்டமாதிபன், அங்கிசாதிபனுடைய, அஷ்ட வர்க்கத்திற் சேருகின்ற காலம், எத்தனையோவத்தனை வருஷத்தில் விதவை யாவள்; குடும்பத்தில் சுபர்கள்நிற்கில், கணவனைவிட்டு முன்னேயிறந்து விடு வள், விரிச்சிகம், ரிஷபம், கன்னி ஆகிய இம்மூன்றில், அருச்சிகனிருக்கில், புத்திரரற்பமாம்—எ-று. 862

காணியாஞ் சனியுமே பலத்திருக்க வேதான்
கணக்கன்மதி பிருகினக் காரரகத் திருக்க
ஆணியந்த ராசியொற்றை யாகவுமே சென்மம்
அடுக்கமற்றோ ரொற்றைகளி லன்புடனே யிருக்க
நீணிலத்திற் பிறந்தாடன் புருடனுக்கோ ரரசாய்
நிருபதியாய்ச் சுவாமியாய் நேசமுட னிருப்பள்
பேணியதோ ரேழிற்றீக் கோளுமும் மூன்றிற்
பெருமையுள்ளோ ருறச்சந்நி யாசிப்பெண் ணவள்.

இ-ள். அக்கிரனுகிய சனிபலத்திருக்கச் சக்கிரனுகிய புதன், பக்கிரனு கிய சந்திரன், சுக்கிரனுகிய சுங்கன், இவர்கள் மூவரும், பாவர்கள்வீட்டி லிருக்க, ஆண்இராசியாகிய, ஒற்றைலக்கினம், ஜெனனமாக, லக்கினுதிப னும், ஒற்றை இராசியிலிருக்க, மற்றக்கிரகங்களும், ஒற்றைராசியிலிருக்க, ஜெனனமானவள், தன்கணவனுக்கு, அரசியாகியும், தெய்வத்தன்மை பெற்று, பிரியமுடன் வாழ்வாள், ஏழாமிடத்திற் பாவர்களும், அதற்கு மும் மூன்றுமிராசிகளிற் சுபக்கோட்கள், இருக்க, சன்னியாசம், பெறுவள்.

ஆகரெட்டை ராசிதனிற் குருசெவ்வாய் புந்தி
அதிபலமா யிருந்தக்கா லவனியின்மேற் குலமும்
வாகுட்டனே பலகலைக ளறிந்திடுநற் குணமும்
மாதருக்குண் முக்கியமா மயிலுமா குவளே
சேகரமாம் பரிதிமதி கூடியே நிற்கிற்
றெரிந்துபல விதத்தொழிலே செய்துசீ விப்பள்
மோகமுடன் கதிர்செவ்வாய் கூடியுமே நிற்கில்
முழுப்பாவி யாவளென்றே மொழிந்திடுவர் பலரும்.

இ-ள். இரட்டைராசிகளில், சுருதி, குருதி, நிருதி, பலத்திருந்தால், உத்தமகுலத்தும், அழகுபெற, பலசாஸ்திரங்களறிதலும், நற்குணமும், மாதர்திலகம் போன்று மயிர்சாயலுடையவளாம், விரிச்சிகன், அரிச்சிகன், கூடிநின்றால், பலவகையான தொழிற்செய்து ஜீவிப்பவளாம், பிங்கலன், மங்கலன் நின்றால், முழுப்பாவியு மாவாளென்று, தெரிந்து பெரியோர்பலரும் அறிந்து, சொல்லுவர்—எ-று. 864

வேறு சந்தம்.

பலரும்பணி கதிர்புந்திகண் மருவும்பொழு தெழில்சேர்
பலர்சிந்தனை யறிவாள்புகழ் பரவுஞ்சுக சரீரி
அலருங்கதிர் குருவொன்றிடி லதிவஞ்சனை யான்முன்
அணுகுந்தொழி லறியாள்பிற கறிவாள்வரு கருமம்
மலரம்புய வதிபன்பிரு குடன்வந்துறின் மற்போர்
வனையுங்கொடி யவளாயுத வகையாநிதி தேடும்
சலமுண்டிடு கதிர்மந்தனை யணுகும்பொழு துலகிற்
றகுபித்தளை செம்போடுத ராவிற்றுயி ருய்வாள்.

இ-ள். இரட்டையிராசிகளில், மித்திரன், சித்திரன் கூடியிருந்தால், பலர் சிந்தனைகளையறிபவள், புகழுள்ள சுகசரீரமுடையவள், சூரியாகிய சூரியனும் பூரியாகிய குருவுங் கூடியிருந்தால், பாரில், அதிக வஞ்சனையுடையவள், காரியங்களை முன்னால் அறியாமல், பின்னால் அறிபவளாம், பங்கயனாகிய சூரியன், நங்கயனாகிய சுக்கிரன் கூடியிருந்தால், சங்கையில்லாமல், மற்போர் செய்கிறவள், எங்கும் ஆயுதவகையால், சம்பாத்தியஞ் செய்பவள், மித்திரனாகிய சூரியன், மத்திரனாகிய சனி, கூடியிருந்தால், பித்தளை, செம்பு, தரா, இவைகளைவிற்று ஜீவிப்பவளாம்—எ-று. 865

உய்யும்மெரு தொடுகோலிவை யுதயம்மதின் மதியம்
உறையக்குச திரையைத்திசை யுறுமங்கிசை யாகில்
மையுந்திய குவளைச்செழு மலர்போலிரு கண்ணாள்
வகையுந்தொகை யறிவாள்சில வழிசாலவு ரைப்பாள்
எய்யுஞ்சனி திரையைத்தச மெனுமங்கிசை யென்னில்
இருவோர்கண வோர்தாமுள ரென்னுமட வார்க்கே
மெய்யஞ்சொடு ரெண்டாமிரு வீட்டுக்கிறை யிருவர்
மிளிர்கேந்திர லாபத்துற வேவாகன முண்டாம்.

இ-ள். மைதோய்ந்திலங்கும் குவளைமலர்போன்ற இருகண்களையுடைய பெண்ணே, ஜெனனலக்கினம், இடபம், துலாமாகி, அதில், ஆலோனாகிய, சந்திரனிருக்க, வேலோனாகிய செவ்வாய் மூன்றில் பொருந்திய அங்கிஷமாகில், பிணக்கில்லாத, கணக்கு விவரங்களையறிந்து, இணக்கமாய்ச் சில ஞாயங்

களைத்தெரிந்து பேசுபவளாம், நீலனாகிய சனிபகவான், மூன்றுபத்தாமிடத்தில், அங்கிசமாய் இருக்கில், இரண்டு கணவன்களையுடையவளாம், ஐந்து இரண்டுக்குடையவர்கள் கேந்திரங்களிலாவது, லாபத்திலாவது, இருக்கில் வாகனமுடையவளுமாம்—எ-று. 866

உண்டாகிய வைந்தாமிறை யுச்சக்குரு வாகி
உணர்வாலிப யவ்வன்ன வுருவும்முள னவன்
நண்டாகிய மனையுற்றிடி னரிக்கிசை கணவன்
நரவாகன முளனாகுவ னவில்சுக்கிர னாகில்
மிண்டாகிய வெள்ளிக்கிசை பல்லக்குள வேந்தன்
விரவுஞ்சனி யாகிற்பரி வெண்சத்திர முள்ளான்
கொண்டாடிய கன்மாதிபன் குருசுக்கிர னாகில்
கூறைந்தினி லேனின்ற கொழுநன்சத சீவி.

இ-ள். ஐந்தாமிடத்ததிபன், அந்தகனாகிய, குருவாகி, முந்தக்கற்கடகத்தில், உச்சமாகியிருக்க, ஜாதகியின், கணவன், வாலிபமும், அழகும்பொருந்தியவனும், பெண்ணுக்கிசைந்தவனும், பல்லக்குடையவனுமாவன், சந்தனாகிய சுக்கிரனாகில், வெள்ளிப்பல்லக்குடைய அரசனாவான், மந்தனாகிய சனியாகில், வெண்குதிரைகளும், வாளாயுதமுமுள்ளவனாவான், பத்துக்குடையவன், புத்திரனாகிய, குரு, அல்லது, நத்திரனாகிய, சுக்கிரனாகில் ஐந்தாமிடத்தில் நின்றாலும், கணவன் நூறுவயதுள்ளவனும்—எ-று. 867

சீவித்திடு குருசுக்கிர னாறுமனை சேரில்
தெரிவைக்கிசை கணவன்பிணி செறிமெய்யின னவன்
பூவைக்குமுந் நான்கிற்குரு புரிசுக்கிரன் மேவில்
போங்தேவிடு மற்பாயசு புல்லாடன்மெய் யாவன்
பாவைக்குறு மைந்தாமிறை பரிவாயினி யவராய்ப்
பண்பாகிய வொன்பான்மனை பற்றப்பயி லொன்பான்
ஏவுற்ற மனைக்காதியி லாபத்துறி னீன்றோன்
எய்தும்பொரு ளுண்டானவை யெல்லாமிவ ளுக்காம்.

இ-ள். பூரியாகிய குருவும், மாரியாகிய சுக்கிரனும், ஆறுமிடத்திலிருந்தால், ஜாதகிக்குப் பொருத்தமான கணவனும், தேகத்திற் பிணியுமுள்ளவனுமாவன், பன்னிரண்டாமிடத்தில் மேற்கண்ட குரு சுக்கிரன் நின்றால், கணவன், அற்பாயுளுடையவனும், ஜனனலக்கினத்திற்கு, ஐந்தாமிடத்ததிபன், சுபனும், மித்துருவாயும், ஒன்பதாமிடத்திலிருக்க, ஒன்பதாமிடத்தோன், இரண்டாமிடத்துக்குடையவனாய், இலாபஸ்தானத்தில் நிற்கில், பிதிர்பாக்கியங்கள் பூராவும், ஜாதகிக்கு உண்டாம்—எ-று. 868

ஆமெட்டதி பன்காரியொ டணுகிப்பதி னொன்றெட்
டமரிற்சத வயதாமவ ரத்தங்கத மாயின்

போமற்பம தாயாயசு பொன்றும்விய மன்னன்
புரிகேந்திர லாபத்திரி கோணப்பதி புக்கி
தாமெத்தனே பேரோடுறி லாமத்தனே மனேயாள்
தரிலற்றிடு வியநற்பதி சரமேலச வூரில்
நீமத்திர மாகிற்றம தூரத்தக மணமே
நிறைவாமுப யம்மென்னிலோ நீடும்மதி தூரம்.

இ-ள். ஜாதகிஜென்மலக்கினத்திற்கு, அட்டமாதிபன், சனியோடுகூடி எட்டு பதினேராமிடத்திலிருக்க (கணவன்) நூறுவருஷம் ஜீவித்திருப்பான். இவர்கள், பகைநீசம், அத்தமனமும், பாவசம்பந்தமும் பெற்றுநிற்கில், கணவனுக்கு ஆயுள் அற்பமாம், பன்னிரண்டுக்குடையவனும், குருவும், கேந்திரம், லாபம், திரிகோணம், பெற்றுநிற்கில் அவர்களோடு கூடிய கிரகம், எத்தனேயோ அத்தனே தாரதோஷமுள்ள கணவனும், பன்னிரண்டாமிடம், சரவிராசியாகில், அயலூரிலும், திரவிராசியாகில், உள்ளூரிலும், உபயவிராசியாகில், அதிகதூரத்திலும், கல்யாணமாகும்—எ-று. 869

வே று.

தூரமுறும் பன்னிரண்டா மதிபன் ருனும்
சுபக்கோளாய்ப் பலவானுய்ச் சுகவா ளுயின்
பாரமனே மேன்மெத்தை மாடங் கூடம்
பரிவுடனே யுண்டாமப் பதியினிலே வாழ்வள்
சேருமுத யந்திரமா யேழைந்தாம் வீட்டில்
சேர்ந்தவரெத் தனேயுண்டத் தனேசேயுண் டாகும்
பாரறியச் சென்மம்வா மியமாகின் மூன்ரும்
பதியுற்ரு ரெத்தனேயப் பாலருள ராகும்.

இ-ள். பன்னிரண்டாமிடத்ததிபன், சுபனுய், பலம்பெற்று, சுகவானுமானுல், மேல்மெத்தை, மாடகூடம், உண்டாகி அதில் வாழ்பவளாம், லக்கினம், திரவிராசியாகி ஐந்து ஏழாமிடங்களிற் சேர்ந்தகிரகங்களெத்தனேயோ, அத்தனேபுத்திரர்களுற்பத்தியாகும், வாமியாகிய மூன்றில், எத்தனேகிரகங்களுளதோ, அத்தனேபுத்திரருண்டாம்—எ-று. 870

தாகமுட னேழைந்தா மூன்றதிப ருடனே
சனிகூடி லோகுழவி தனக்கற்ப வயதாம்
ஆகமகி ழொன்பதா மதிபதியா றெட்டில்
அமரிற்சூத் திரர்தமக்குற் பவித்திடுசே யாகும்
ஏகும்வியத் தினிலிருக்கில் விப்பிரர்சே யாகும்
ஏழிலொன்பான் மனேக்கதிப னிரவியுடன் கூடில்

பாகவிய மெட்டாறைப் பற்றிலொன்பான் மனையோன்
பரிந்திருந்த வீட்டோனப் படியிருக்கில் விதவை.

இ-ள். எழு, ஐந்து, மூன்றுமிடத்ததிபருடனே, நீலனுகிய சனிகூடில், குழந்தைகளுக்கு, அற்பவயதாம், ஒன்பதாமிடத்ததிபதி, ஆறு எட்டாமிடத்திலிருக்கில் சூத்திருக்கு உற்பத்தியான குழந்தையாம் பன்னிரண்டில் இருந்தால், பிராமணருக் குற்பத்தியாகிய மகவாம், ஒன்பதாமிடத்ததிபன், சூரியனுடன் கூடி ஆறு, எட்டுப் பன்னிரண்டில் இருந்தாலும், ஒன்பதாமிடத்ததிபன், நின்ற வீட்டுக்குடையவனும் மேற்சொல்லியபடி, ஆறு, எட்டுபன்னிரண்டில் இருந்தாலும் விதவையாவள்—எ-று. 871

வையகமெண் ணொன்பதா மாதிபனே நல்லோர்
மனையிலுற மத்திமையி லேவிதவை யாவள்
செய்யவொன்பா னுதியுச்ச னுகிப்பா வனுமாய்த்
தெரிவைசுமங் கலியாகித் தீர்க்கவய துள்ளாள்
துய்யசன்ம மொன்பதா மாதியிவ ரிருவர்
தொடர்ந்துமா றுகநிற்கிற் றூன்றனுட னிறப்பள்
வெய்யதோ ரெட்டினிற்சந் திரபகவா னிருக்கில்
விதவையெனப் பேர்படைத்து மேதினியிற் றிரிவள்.

இ-ள். ஒன்பதாமிடத்திற் குடையவன், சுபர்வீட்டிலிருக்க, நடுவயதிலே விதவையாவள், ஒன்பதாமிடத் ததிபன், உச்சமாகிப் பாவனுயிருக்கில் சுமங்கிலியும் தீர்க்க வயதுள்ளவளுமாவள், ஜென்மம், ஒன்பதுக் குடையவர்கள், கிரக மாறியிருந்தால், கணவனுட னிறப்பவளாம், அட்டமத்தில், சந்திரனிருந்தால் விதவையாகி, பூமியில், திரிவாள்—எ-று. 872

திரிசெவ்வா யிருமனையுஞ் சனனமதா யதனில்
திங்களுற வேசெவ்வாய் திரிங்கிசாங் கிசமாய்ப்
பரிவில்லாப் பாவிசனி திரிங்கிசாங் கிசமாய்ப்
பாலரிலா ளலதடிமைப் படுவளெனச் சொல்லும்
குருதிரிங்கிசாங் கிசமாகிற் பதிவிரதை யாகும்
குளிமேதை யங்கிசமா சாரமுள கோதை
விரிவெள்ளி யங்கிசைக்கு மெய்யதிரு பியுமாய்
வெகுவயதாய்ப் பரபோகம் விரும்புமினி யவளாம்.

இ-ள். மேடவிருச்சிகம், ஜென்மலக்கினமாய் அதில்திங்களாகிய சந்திரனிருக்க, மங்கலனுகிய செவ்வாய், முங்கலனுகியசனி, திரிங்கிசாங்கிசம் பெற்றுநிற்கில், புத்திரரில்லாதவளும், அடிமையுமாவள், தங்கலனுகியகுரு, திரிங்கி சாங்கிசம் பெற்றால், பதிவிரதையாம், புங்கலனுகிய புதன், திரிங்கி சாங்கிசம் பெற்றால், ஆசாரமுள்ளவளாவள், நங்கலனுகிய சுக்கிரன் திரிங்கி

சாங்கிசம் பெற்றால், ரூபவதியும், அதிக வயதிருப்பவளும், பரபோகம் விரு ம்புவளாயு மிருப்பவளாம்—எ-று. 873

இனியவெள்ளி யிருமனையுஞ் சென்மமாதா யதனில்
இந்திருக்கச் செவ்வாயங் கிசமாயிற் கொடியாள்
சனியினங் கிசமாகிற் கணவனையும் விட்டே
சஞ்சலமாய் வேறொருவன் றனக்குப்பா ரியுமாம்
கனிகுருவங் கிசமாகி னற்குணமே யுள்ளாள்
நாடுபுத னங்கிசத்தி னால்வகைஞா னியுமாம்
கனிமொழியாள் சுக்கிரனங் கிசமாயிற் றன்சொல்
கதித்தினிய ளாயிருப்பள் காசினியோர் போற்ற.

இ-ள். புடவியில், இடபதுலாம், ஜென்மலக்கினமாகிப் புரணியாகிய சந்திரனிருக்க, பரணியாகிய செவ்வாய், முரணியாகியசனி, அங்கிஷம்பெற் றால், கணவனைவிட்டு அன்னிய புருஷனுக்கு மனைவியாவள், இரணியாகிய குருவங்கிஷ மானால் நற்குணமுள்ளவள், சரணியாகிய, புதனங்கிஷமானால், ஞானியாவள், விரணியாகிய சுக்கிரனங்கிஷமானால் சொற்றிரமுள்ளவளும் பூமியோர் போற்றும்படியா யிருப்பவளுமாம்—எ-று. 874

போற்றுபுத னிருமனையுஞ் சன்மமதா யதனில்
புனிதமதி யேயிருக்கப் பூசுதனங் கிசமாம்
எற்றமதாய் வேலைசெய்வள் சனிதன்னங் கிசையாய்
இருப்பளவி வடிவாகக் குருவாகி லினியாள்
நாற்றிசையென் னும்புதனங் கிசைதனக்கே ஞானி
நாடுசுங்க னங்கிசைக்கு நற்குணமு முள்ளாள்
தேற்றுகட கஞ்சென்ம மாய்த்திங்க ளிருக்கச்
செவ்வாயங் கிசமாகிற் சேர்வள்பல ருடனும்.

இ-ள். மிதுனங்கன்னி லக்கினமாய், அதிற்சோமனாகிய சந்திரனிருக் கப்பூமனாகிய, செவ்வாயங்கிஷமாகில், அதிகவேலைசெய்பவளும், தீமனாகிய சனியங்கிஷமாகில், அலிவடிவாக விருப்பவளாம், சீமனாகிய குருவங்கிஷ மாகில், இனிமையாவள் சாமனாகிய புதனங்கிசமாகில், ஞானியாவள், காம னாகியசுக்கிரனங்கிஷமாகில், நற்குணமுள்ளவளாம், கடகஞ் சென்மலக்கின மாய், அதிற் சந்திரனிருக்கச் செவ்வாயங்கிஷமாகில் பலபுருஷரைச் சேர்வ ளாம்—எ-று. 875

உடன்கடகஞ் சென்மமதா யதிலிந்து மிருக்க
உயர்சனியங் கிசையாயி னுறுகணவன் றனையே
திடமுடனே கொல்வதற்குச் சினமாகி யிருப்பள்
சேர்புதனங் கிசைக்கேசிற் பத்தொழில்கள் செய்வள்

அடல்குருவங் கிசையாயிற் குணமினியள் வெள்ளி
அங்கிசையா கிற்சாது வாகியுமே யிருப்பள்
மடமயிலே கேளங்கிசையென் றுரைத்த வெல்லாம்
வருந்திரங்கி சாங்கிசையாய் மனதிற்கண் டுணர்வாய்.

இ-ள். கடகம்ஜென்மலக்கினமாய், அதில், அரிச்சிகனுகிய சந்திரனிருக்க,கரிச்சிகனுகிய சனியாங்கிஷமாகில், கணவனைக்கொல்ல நினைப்பவளும், தெரிச்சிகனுகிய புதனங்கிஷமாகில், சிறப்பாகத் தொழில் செய்பவளும், புரிச்சிகனுகிய, குருவங்கிஷமாகில், இனிமையான குணமுள்ளவள், உரிச்சிகனுகிய, சுக்கிரனங்கிஷமாகில், சாதுவாகியுமிருப்பவளாம், இங்ஙனம் சொல்லிய அங்கிஷமெல்லாம் திரிங்கிசாங்கிஷையாக மடமயிலே, திடமாக மனதிற்கண் டுணர்வாயாக—எ-று. 876

உணர்சிங்கஞ் சன்மமதா யதிலிந்து மிருக்க
உயர்செவ்வா யங்கிசையா யுரைக்கிலநா சாரி
பிணிசனிசுங் கன்னிருவ ரங்கிசமே யாயின்
பிறர்முகம்பார்ப் பாளரசன் பின்னுறுமங் கிசைக்கு
மணியரசர்க் கேதேயி தானுகி யிருப்பள்
மாட்சிபுத னங்கிசைக்கே சரீரவருத் தமதாய்
பணிபலவுஞ் செய்தொருவர்க் கேயடிமை யாகிப்
பாதவித்தே யிருப்பளெனப் பகருவர்தக் கோரே.

இ-ள். சிங்கலக்கினம் ஜெனனமாய், அதிற் சாந்தனுகிய சந்திரனிருக்க, சேந்தனுகிய, செவ்வாயங்கிஷமாகில், அநாசாரமுடையவள், காந்தனுகிய சுக்கிரன், சோந்தனுகியசனியிவ்விருவரின் அங்கிஷமாகில், பிறர்முகம் பார்ப்பாள், ஏந்தனுகிய குருவங்கிஷமாகில், அரசபாரியாயிருப்பள், பாந்தனுகிய புதனங்கிஷமாகில், சரீரபிரயாசையோடு பலவேலைகள்செய்து, ஒருவர்க்கடிமையாகிப் பரதவிப்புடையவளாகுமென்று சோதிடவல்லவர்கள் சொல்லுவார்கள்—எ-று. 877

தக்கதனு மீனமவை யேசன்ம மாகிச்
சந்திரனப் பதியிலுறத் தான்குருசெவ் வாயின்
மிக்கதிரிங் கிசாங்கிசமே யாயிடினற் குணத்தாள்
வீறுசனி யங்கிசமேல் வெகுகாமி யாவள்
சுக்கிரனங் கிசையாகி லரோசிகமாம் புருடன்
தோளணைவள் சோமனுர் சுதனுமங்கி சைக்குப்
பக்குவமெய்ஞ் ஞானியாய்ச் சுபகர் மங்கள்
பண்ணுவளென் றேயுரைப்பர் பாரினினல் லோரே.

இ-ள். அச்சத்தைத் தாத்தக்க தனுசும், மச்சம்போன்ற மீனமும், ஜென்மலக்கினமாக, அதிற்செச்சையாகிய சந்திரனிருக்க, விச்சையாகியகுரு,

கொச்சையாகிய, செவ்வாயின் அங்கிஷமாகில், நற்குணமுடையவள், முச்சையாகிய சனியங்கிஷமாகில், அதிகக்காமியாயிருப்பள், இச்சையாகிய சுக்கிரனங்கிஷமாகில், அரோசிகத்தோடு கணவனைக்கூடுபவள், பச்சையாகிய, புதனங்கிஷமாகில், பக்குவமுள்ள உண்மையான ஞானியாய் சுபகர்மங்கள் செய்பவளுமாமென்று நல்லோர்கள் சொல்லுவார்கள்—எ-று. 878

நல்லசனி வீடிரண்டும் லக்கினமா யதனில்
நாடுபுதன் றந்தையுறக் குசனுரங் கிசையேல்
அல்லலுறுந் தாதியாங் காரியினங் கிசமாய்
அவனியிற்கீழ்ச் சாதியரோ டணுகிமணந் திடுவள்
வல்லகுரு வங்கிசைக்கே பதிவிரதை யாவள்
மகிழ்வெள்ளி யங்கிசைக்கே மலடியுமே யாவள்
சொல்வரிசைப் புதனுரங் கிசமாயெப் போதும்
சுகமுடனே கணவனுடன் றேயுமனப் பரிவாள்.

இ-ள். மகாகும்பம் லக்கினமாய், அதிற் சங்கலனுகிய சந்திரனிருக்க, மங்கலனுகிய செவ்வாயங்கிஷமாகில், துன்பமுள்ள தாதியாவள், முங்கலனுகிய, சனியங்கிஷமாகில் கீழ்ச்சாதியோடு சேர்ந்து கல்யாணஞ் செய்பவளாம், தங்கலனுகிய, குருவங்கிஷமாகில் பதிவிரதையாவள் நங்கலனுகிய சுக்கிரனங்கிஷமாகில் மலடியாவள் புங்கலனுகிய புதனங்கிஷமாகில், எப்பொழுதும் சந்தோஷத்தோடு கணவனுடன் சுகமனுபவிப்பவளுமாவள்—எ-று.

பரிவாகச் சனிபுதனே ழாமிடத்தி னிற்கப்
பயில்குருவுக் கேழ்வீடு பரவுசர மாயின்
திரிவளவள் பர்த்தாவெந் நாளும்வழி நடந்தே
திரராசிக் கூரைவிட்டுச் செல்லாம லிருப்பன்
வருராசி யுபயமாய்ச் சிலநாளூ ரினிலும்
வழிநடையிற் சிலநாளும் வருந்தியுமே திரிவன்
அரியேழா மிடத்திருக்கப் பாவருமே பார்க்கில்
அவண்மீதிற் கொழுநனுக்கன் பின்றியிகழ்ந் திடுவன்.

இ-ள். மந்தன் புந்தனுகிய, சனிபுதனேழிலும், அந்தனுகிய குருவுக்கு, ஏழாமிடம், சரராசியாகில், கணவன், எக்காலமும் வழிநடைச் சஞ்சாரஞ் செய்பவனும், திரராசியாகில், ஊர்விட்டுப் போராதவனும், உபயராசியாகில்; சிலநாள் வெளியூரிலும், சிலநாள் உள்ளூரிலும் வசிப்பவனும், சந்திரன் ஏழாமிடத்திலிருக்கப் பாவர்கள் பார்த்தால், அவள்மேல் கணவனுக்கு அன்பில்லாமல் இகழ்ந்துவிடுவான்—எ-று. 880

இடுசெவ்வாய் கதிர்கூடி யெங்கேகினு ரூலும்
இவளும்வா லிபந்தன்னி லமங்கலையே யாவள்

வடுவாகுஞ் சனிகதிரைக் கூடியுமே நிற்கில்
மன்னிபதிக் கோள்பார்க்க வாலிபத்தி னரைக்கும்
கொடுமையுள்ளோர் பலரேழா மிடத்திருக்கில் பார்க்கில்
கொழுநன்வா லிபத்திறப்பன் கொடியநல்லோர் கூடில்
சடுதியின்மீண் டொருவனுக்கே பாரியுமே யாகித்
தானிருக்க வேண்டுமென வேசாற்றல் வேண்டும்.

இ-ள். சேதியாகிய செவ்வாயும், சோதியாகிய சூரியனும், கூடி, எங்கேயிருந்தாலும், வாலிபத்தில் அமங்கலையாவள், நீலனாகிய, சனி, காலனாகிய சூரியனைக் கூடிநின்று, அவர்களைப் பாவர்கள் பார்த்தால், வாலிபத்திலே, நரையுள்ளவளாம், பாவர்கள் பலரும், ஏழாமிடத்திலிருந்தாலும், பார்த்தாலும் கணவன் வாலிபத்திலிறந்துவிடுவான், சுபர்களும் கூடியிருக்கில், இன்னொரு கணவனுக்குப் பாரியாய் இருக்கக் கூடியவளென்று சொல்ல வேண்டும்—எ-று. 881

வேண்டிடும்பா வக்கிரகம் பலன்களுமே யின்றி
விரும்புமே ழிடத்திருக்க வவரையுமே நல்லோர்
ஈண்டியே தான்பார்க்கி லக்கணவன் வேண்டா
திகழ்ந்தோட்டி விட்டிடுவ னேயின்னஞ் சொல்வாம்
நீண்டகுசன் வெள்ளியுந்தன் னங்கிசத்தி னிற்க
நிகழ்த்துமிவர் மாறுகி நிற்கிலுமவ் வீடு
பூண்டிடுமே ழாமிடமே யாகிலவள் வேறோர்
புருடனையே யிச்சித்துப் போய்விடுவ ளென்றார்.

இ-ள். ஏழாமிடத்தில் பாவக்கிரகங்கள் பலமற்றிருக்கத் தாழாது சுபர் பார்வைபெற்றால், அவளைக்கணவன் வேண்டாமென்று ஓட்டிவிடுவான், வக்கிரன், சுக்கிரன், தன்னுடைய வீடே அங்கிஷமாயிருக்க அல்லது இவ்விருவரும் கிரகமாறியிருக்க, அவ்வீடு, எழாமிடமாகில், அவள் இன்னொரு கணவனை விரும்பிப்போய்விடுவாள், என்று முன்னோர்கள் சொன்னார்கள்.

என்றுமே ழாமிடத்திற் சனிசெவ்வாய் சோமன்
இந்தமூ வருங்கூடி யிருக்கிலவம் போவள்
வென்றசனி செவ்வாயின் வீடேலக் கினமாய்
விரவுகுச னங்கிசமா கச்சென்மக் தன்னில்
துன்றுமிரு ளகற்றுமதி சுக்கிரனு மிருக்கச்
சூழ்ந்துதீக் கோள்பலருந் தொடர்ந்துமே நோக்க
நின்றிடிலோ மலடியா மவளுமவ டாயும்
நேமிதனிற் பலபேரை நேசித்தே சேர்வர்.

இ-ள். ஏழாமிடத்தில், விதிரனாகிய, சனி, உதிரனாகியசெவ்வாய், மதிரனாகிய சந்திரன், இந்தமூவருங் கூடியிருக்கச் சோரம்போவாள், நீலனாகிய

சனி வேலனுகிய செவ்வாயின் வீடுலக்கினமாகி வக்கிரனங்கிஷமாய், லக்கினத்தில், பக்கிரன், சுக்கிரன், இவர்களிருக்கப் பாவக்கிரகங்கள்பார்க்க, இருந்தால் மலடியாவதுடன், அவளும், அவளைப்பெற்றதாயும், கவலையற்றுப் பூமியிற்காமியாம், பலரைச்சாமியாய்ப் பூசித்து நேசித்துச் சேர்வார்கள்.

சேருதய லக்கினவங் கிசத்துக்கோ ரேழில்
செவ்வாயுஞ் சனியிருவர் சேர்ந்துமே நிற்க
நாரிபதந் தனிற்பிணிகொண் டிருந்துபர தவிப்பள்
நாடுமிவர் நல்லோர்க ளங்கிசையி னன்றும்
பாரியதோ ரிடைதொடைகள் சோபனமுள் ளவளாய்ப்
பர்த்தாவி னிதயத்திற் பக்ஷமுற விருப்பள்
சாருதயந் தனக்கேழு சனிவீட தாகில்
தாலிதரிப் பவன்கிழவன் சற்குணமில் லானே.

இ-ள். உதயலக்கினவங்கிஷத்திற்கு இதமாகிய ஏழாமிடத்தில், உதிரனுகிய செவ்வாய், விதிரனுகிய சனிகூடியிருக்கப் பாதத்திற் சீக்குடையவளாய் பரதவித்திருப்பவளாவள். நல்லோர்கள்அங்கிஷையாகில்நன்மையான இடைதொடைகள் அழகுள்ளவளாய், கணவனையெப்போதுஞ் சிந்தித்து மறவாமலிருப்பவளாம், ஏழாம்வீடு சனிவீடாகில் கிழவனுக்கு மணம்புரிவாள், சற்குண மில்லாதவளுமாவள்—எ-று. 884

சற்குணஞ்சேர் லக்கினத்துக் கேழாகும் ராசி
தரைசுதன்வீ டாகிலவன் றன்னுடையங் கிசையால்
சிற்குணயா யவள்கணவன் ஸ்திரீலோல னுவன்
செறிபிருகு ராசியா யங்கிசமே சேரில்
நற்குணஞ்சேர் சீமானு யழகுடைய னுவன்
நாடுபுத னங்கிசையாய் ராசியுமே யாகில்
சொற்கலைஞா னியுமாவன் சோமனுமே யாகில்
தோகைபல ருடன்கூடிச் சுகித்துவாழ்ந் திருப்பன்.

இ-ள். ஜென்மலக்கினத்திற்கு, ஏழாமிடம் நன்னிலத்தானுகிய செவ்வாய்வீடும் அவனங்கிஷையுமானல், அவள்கணவன் ஸ்திரீலோலனுவான். இச்சையாகிய சுக்கிரனுடைய வீடாய் அவனங்கிஷமுமானல், அவள்கணவன், அழகுள்ளவனும், சீமானுமாயிருப்பன், பச்சையாகிய புதனுடைய வீடாய், அவனங்கிஷையுமானல், அவள்கணவன், சாஸ்திரங்கள்கற்றஞானியாவன், செச்சையாகிய சந்திரனுடையவீடு சந்திராங்கிஷையுமானல்அவள் கணவன் பல பெண்களைக்கூடிச் சுகித்திருப்பவனுமாவன்—எ-று. 885

வே று.

இந்து வசுர குருவுடனே
யேழி லிருக்கக் கிழப்புருடன்

வந்தே பொல்லா ரேழினுற
விதவை யாவள் வாலிபத்தில்
நொந்தே கும்பந் தேண்மேடம்
நுவலுஞ் சுறுமீன் லக்கினமாய்
பந்தி மதியம் புகர்கூடிப்
பாவர் பார்க்கில் விபசாரி.

இ-ள். சோமனுகிய சந்திரன், காமனுகிய சுக்கிரனுடன், நேமமுடன் ஏழாமிடத்திலிருக்கக் கிழமான புருடனை மணமாலைசூடுவள், பாவர்கள், ஏழாமிடத்திலிருக்க, வாலிபத்தில் விதவையாவள், கும்பம், விருச்சிகம், மேஷம், மகரம், மீனம், இவைகள் லக்கினமாக, உரிச்சிகனுகிய, சுக்கிரன், அரிச்சிகனுகிய சந்திரன்கூடியிருந்து பாவர்கள் பார்த்தால், வியபசாரியாவள்—எ-று. 886

சார வெட்டிற் பாவர்களுந்
தானு மிருக்க விரண்டதனில்
ஊருஞ் சுபர்க ளிருந்திடவே
யோங்கு மரணஞ் சுமங்கிலியாய்
நேரு மேழா மிடந்தானும்
நிறைந்த புகரின் மனையாயின்
பாரோ ரறிய வனுகூலப்
பாவை யாகுங் கண்டீரே.

இ-ள். எட்டாமிடத்திற் கெட்டபாவக் கிரகங்களும், இரண்டாமிடத்தில், திரண்ட சுபக்கிரகங்களுமிருந்தால், சுமங்கலையாயிறப்பள், ஏழாமிடம், லோலனுகிய சுக்கிரன்வீடாய், இருக்கில் அனுகூலஞ்செய்கின்ற பெண்ணுவள்—எ-று. 887

கண்ட வேழா மனையுரைக்குங்
கதிரோன் வீடா யிருந்திடவே
மிண்டே சொல்வா னவள்கணவன்
வினவும் பரிதி யதிலிருந்தால்
கொண்டோ னோட்டி விடுவனெனக்
கூறும் புதனின் மனையாயின்
பண்டே புலவ ராவர்குரு
பண்பா மனையிற் குணவானே.

இ-ள். ஏழாமிடம், காலனுகியசூரியன்வீடாகி அச்சூரியன், வீரியமாய், அதிலிருந்தால், கணவன் ஓட்டிவிடுவான், ஏழாமிடம் மாலனுகிய புதன் வீடாகில், கணவன் வித்துவானுவன், பாலனுகிய குருவீடாகில், கணவன் குணமுள்ளவனுவான்—எ-று. 888

குணமா மேழிற் பாவர்களும்
கூடிப் பலன்க ளற்றிடவே
மணமார் நோக்க முற்றதனுன்
மகிழ்ந னழகில் லாதவனே
இனமா ரேழே சரமனேயா
யிருக்க வதிபன் சரத்திலுறச்
சினமே சராங்கிசை யாத்திரையாந்
திரமே யாகிற் றீர்க்கமுளன்.

இ-ள். ஏழாமிடத்திற் பாவர்கள் கூடிப் பலனற்றிருக்க, அல்லது பார்க்க, கணவன் அழகில்லாதவனும் ஏழாமிடம் சரராசியாகவும், அவ்வதிபன், சரராசியிலிருக்கவும், சராங்கிஷமாகில் யாத்திரைசெய்கின்ற கணவனுவன், திரமாகில், தீர்க்கவயதுள்ளவனும் ஓரிடத்திலிருக்கிறவனுமாகிய கணவனுமாவன்—எ-று. 889

தீர்க்க மேழிற் சனிசெவ்வாய்
செறிந்தால் விதவை வாலிபத்தில்
நீர்த்த வேழிற் சுபர்பாபர்
நின்ருல் கமனம் பரபுருடன்
ஊர்த்த லக்கின முப்பாக
முறைந்தாற் றிரங்கி சாதிபதி
ஏர்த்த பலன்கள் ஸ்திரீகளுக்கு
வியல்பா யறிந்தே யுரைத்திடுமே.

இ-ள். ஏழாமிடத்தில், பாமும், சனி செவ்வாய், இருந்தால், வாலிபத்தில் விதவையாவள். சுபரும் பாவருங் கலந்துநின்ருல், பரபுருஷனைச் சேருவாள், லக்கினத்திலிருந்த அங்கிசாதிபர்களைக்கொண்டு, ஸ்திரீகளுக்குப் பலனறிந்து சொல்லும் விதமாவது—எ-று. 890

உரைக்குங் கதிர்மதி யங்கிசையா
லோங்குந் தன்னில் விபசாரி
நிரைக்குஞ் செவ்வாய் தானுகி
னீண்ட லக்கின மவ்வீடாய்
மரிக்கும் பிள்ளை யுள்ளவெல்லாம்
வாழும் புந்தி யங்கிசையில்
நரைத்த கிழவி யானுலும்
நாடுங் கமனம் பரபுருடன்.

இ-ள். சொல்லாநின்ற, எல்லோன், அல்லோன் அங்கிஷமாய் அதில் அவர்களிருக்க, விபசாரியாம், அங்கிஷம், செவ்வாயாகி, அவர் அதிலிருக்க,

பெற்றபிள்ளைகள், இறந்துவிடுமாம், புதனங்கிஷமாகி, அவர் அவ்வீட்டிவிருந்தால் கிழவியானாலும் பரபுருடவிச்சையை விடாதிருப்பவளாம்-எ-று.

புருடக் கிரகங் குருவங்கிசையிற்
பிறந்தான் மகவுந் தனமுண்டாம்
குருடப் புகரி னங்கிசையாற்
கூறும் போகந் தனமுளதே
வருடக் காரி யங்கிசையில்
வளருஞ் சனிவீ டிலக்கினமாய்
திருடிக் கமனம் பரபுருடன்
சிந்தை நோக்க வரும்பலமே.

இ-ள். புருஷக்கிரகங்கள், குருவங்கிசையில், இருக்கப்பிறந்தால், மிக்க செல்வமும், தக்கமக்களும் முக்கியமாயுள்ளவளாயிருப்பள், சுக்கிரனங்கிசையாகில் போகயோக்கியமும் தனபாக்கியமும், உள்ளவளாம், சனியங்கிசமாய் சனிலக்கினத்திலிருக்க, திருட்டுத்தனமாய் முரட்டுக்குணமாய், பரபுருஷனைச்சேரும் பலமுள்ளவளாம்—எ-று. 892

பலங்க ளுரைக்கும் ஸ்திரீகளுக்குப்
பகரு மெட்டா மிடம்விதவை
துலங்குமேழா மிடந்தன்னற்
சுகமு மகிழ்நன் பலமறியப்
பிலங்கொள் லக்கின மழகறிந்து
பேசு மொன்பான் புத்திரரும்
தலங்க ளறிந்தே மிகவுரைப்பர்
தாமுங் கணித வல்லோரே.

இ-ள். பெண்களுக்குக் கண்டுபலன் விண்டுரைக்குமிடத்து, எட்டாமிடம் கட்டிய மாங்கலியமும், ஏழாமிடம்வாழும், கணவன்பலமும், சுகமும்லக்கினத்தால், அழகும், ஒன்பதாமிடத்தால் புத்திரரும், இவைகளைத்தெரிந்து கணிதவல்லோர்கள் பலன்சொல்லுவார்கள்—எ-று. 893

வல்ல மதிய மிவள்சன்மம்
வருமே ஸ்திரீகள் மனையாயின்
நல்ல சுபரு நோக்கமுற
நாடும் வடிவு மாபரணம்
சொல்லு மிவ்வீ டிரண்டொற்றை
தோன்றப் புருடக் கிரகமிதை
ஒல்கிப் பார்க்கப் புருடவடி
வுற்றே யிருக்கு மிவள்தனக்கே.

இ-ள். ஜென்மலக்கினத்தில் வெண்கதிரோனிருக்க, அவ்விராசி, பெண்ராசியாக, சுபர்கள் பார்வைபெற்றிருந்தால், அழகும், ஆபரணமு முள்ளவளாம், ஆணிராசியாகி, புருஷக்கிரகங்கள் பார்வைபெற்ருல், புருடவடிவாயிருப்பவளாம்—எ-று. 894

தனமார் குருசுக் கிரர்சென்மந்
தன்னைச் சந்திர லக்கினத்தை
முனமே நோக்க வாலிபத்தின்
முற்றும் போகம் கன்மணமும்
தனிசூழ் மதிய லக்கினத்தைச்
சனிசேய் பாவர் நோக்கமுற
மனமே சலிக்கத் தலைநரைத்து
வாழ்க்கைப் படாளிம் மாநிலத்தே.

இ-ள். பீதகன், சீதகன், ஜென்ம லக்கினத்தையும் சந்திரலக்கினத்தையும், பார்க்க, வாலிபத்தில் கல்யாணமும், போகமுமுண்டாம், மந்தன், கந்தன் பார்த்தால், மனஞ்சலிப்புள்ளவளாய், தலைநரைத்தாலும், கல்யாணமில்லாமலிருப்பவளாம்—எ-று. 895

மானே சுங்கன் செவ்வாயின்
மனையி லிருக்க மதிதானும்
ஊனச் சனியின் வீட்டிலுற
வோங்கும் பாவர் மிகநோக்கித்
தானே யிவர்கள் லக்கினத்திற்
றரித்தா லிவளும் விபசாரி
தேனேய் மொழியாய் சுரிகுழலின்
சிந்தை யறிந்து சொல்லுகவே.

இ-ள். சுக்கிரன், வக்கிரன், வீட்டிலும், பக்கிரனுகிய சந்திரன், அக்கிரனுகிய, சனிவீட்டிலு மிருக்கப் பாவர்கள்பார்க்க அல்லது லக்கினத்திற் பாவர்களிருக்க விபசாரியாம், என்று அளகபாரத்தையுடையபெண்ணே, சொல்லவேண்டும்—எ-று. 896

சொல்லும் நவாங்கிசைக் கேழ்மனையுந்
தொடருஞ் செவ்வாய் மனையுளதாய்
வல்ல சனியு மிருந்திடவே
வருமே யோனி ரோகமுடன்
நல்ல மதியுஞ் சுக்கிரனும்
நயந்தே கூடி லக்கினத்தில்

அல்ல லறவே யிருந்ததனு
லழகுஞ் சுகமு முண்டாமே.

இ-ள். நவாங்கிசலக்கினத்திற்கு, ஏழாமிடம் செவ்வாய்வீடாக, அதிற் சனியிருக்க, யோனிரோகமுடையவளாம், பக்கிரனுகிய, சந்திரனுஞ் சுக்கிரனும் கூடி லக்கினத்திலிருக்க, அழகுஞ் சுகமுமுடையவளாம்—எ-று. 897

உண்டா மதியும் புதனிருவ
ருற்ற சென்மத் திருந்திடவே
பண்டே வித்துவத் தன்மையுள்ளா
ளென்று பகர்வர் மறைவல்லோர்
கண்டே புதனுஞ் சுக்கிரனுங்
காணும் லக்ன முற்றதனுல்
கொண்ட மகிழ்நன் பிரியமெனக்
கூறுஞ் சௌரிய முள்ளவளே.

இ-ள். அந்தரியாகிய சந்திரனும், தந்தரியாகியபுதனும், ஜென்மலக்கினத்திலிருந்தால், வித்வத்தன்மையுள்ளவளென்று பெரியோர்கள் சொல்லுவார்கள், தந்தரியாகியபுதனும், சுந்தரியாகிய சுக்கிரனும் லக்கினத்திலிருந்தால், கணவன் பெண்ணிடத்தில், பிரியமுள்ளவனென்றும், சௌரியமுள்ளவனென்றும், சோதிடவல்லவர்கள் சொல்லுவார்கள்—எ-று. 898

உள்ள சுபர்கண் மூன்றுமனை
யுற்ற சென்ம முதற்கொண்டு
மெள்ள விருக்கத் தனலாபம்
விரும்புஞ் சுகமு மழகுள்ளாள்
துள்ளும் பாவ ரெட்டிலுறச்
சூழ்ந்தே விதவை யாயிருப்பள்
கள்ள விழியி னமுதவிஷங்
கருதி நோக்குங் கண்ணுளே.

இ-ள். அமுதமும், குமுதமும், கலந்து அமைதியாய்ப்பார்க்குங்கண்ணை யுடையபெண்ணே, லக்கினமுதற்கொண்டு, மூன்றுமனைக்குள், முக்கியமாக சுபக்கிரகங்களெல்லாம் நிற்கில், தனலாபமும், சுகமும், அழகுமுள்ளவளாவள், எட்டாமிடத்திற் கெட்ட பாவர்களிருந்தால் விதவையாவள்—எ-று.

கண்ணு ரெட்டி னதிபதியுங்
காணு மொருவ ணங்கிசத்தில்
நண்ணி யிருக்க வவ்வீட்டோ
னயந்தே யெட்டி லிருந்ததனுல்

எண்ணுஞ் சுமங்கலி மரணமென
வினிதாங் கன்னி தேளிடபம்
ஒண்ணுஞ் சிங்க மிதின்மதியு
முற்ரு லற்ப புத்திரனே.

இ-ள். எட்டாமிடத்ததிபனிருந்த அங்கிசாதிபதி, எட்டாமிடத்திலிருக்கச் சுமங்கிலியாய் மரிப்பள், கன்னி, விருச்சிகம், ரிஷபம், சிங்கம்இவைகளில் அந்தரியாகிய சந்திரனிருந்தால் அற்பபுத்திருண்டாம்—எ-று. 900

பெண்கள்சாதகம்

சம்பூர்ணம்.

வியாதியறியும்படி.

பூவையே லக்கி ஞதி புதன்குசன் மிதுனங் கன்னி
மேவிடிற் புந்தி பார்க்கில் விளக்குமா சனத்தில் ரோகம்
ஏவுறு சசிக்கு மூன்ரு மதிபனே டிரவி கூடில்
பாவைபோ னேஞ்சை யாகிப் பலர்முலைப் பாலுங் கொள்வன்.

இ-ள். பாவைபோன்ற பூவையே கேட்பாயாக, லக்கினதிபன், சக்கிரனகிய புதன், வக்கிரனகிய, செவ்வாய், மிதுனங் கன்னிராசியிலிருந்து அவர்களைப் புதன் பார்க்கில் ஆசனத்தில் ரோகமுண்டாம், சந்திராலக்கினத்திற்கு மூன்ருமிடத்ததிபனேடு செக்கிரனகிய சூரியன், கூடியிருக்கப் பாவைபோல் நோஞ்சையாயிளைத்து மிகமெலிந்து பலபேர்களின் முலைப்பாலுங் குடிப்பவனவான்—எ-று. 901

பத்துமூன் றதிபன் றன்னைப் பயில்சசி பார்க்கிற் கூடி
மெத்திய வேக ராசி மேவிடின் மேவு பத்தாம்
அத்தலத் திறைதி சைக்கு ளணுகுநீ ரிழிவு ரோகம்
உத்தமர் சென்ம மெட்டோ டெட்டுறி லற்பா யுத்தான்.

இ-ள். பத்து மூன்ருமிடத்ததிபனேடு, வத்திரனகிய சந்திரன், கூடினலும், பார்த்தாலும், அவர்களுடன்கூடி, ஒருராசியிலிருந்தாலும், பத்தாமிடத்ததிபன் திசைக்குள், நீரிழிவு ரோகமுண்டாம், மூன்று எட்டாமிடங்களில் ஆன்ருேராகிய, சுபர்கள், இருக்க அற்பாயுசாம்—எ-று. 902

மூன்ருென்ரு மதிப னேடு மொழிபுதன் குசனுங் கூடில்
தோன்றுநீர் விடுத்து நின்ற துவாரமு மிரண்ட தாகும்

வேன்றிடு மிவர்க ளோடே சவுரிய மிசைந்து கூடில்
கான்றிடு சலத்து வாரங் கல்லடைப் பாகு மன்றே.

இ-ள். மூன்றுக்குடையவனோடு, லக்கினாதிபதியும் சக்கிரனாகிய புதனும், வக்கிரனாகிய குசனுங் கூடியிருக்கில், நீர்த்துவாரமிரண்டாகுமாம், இவர்களோடு, அக்கிரனாகிய சனியுங் கூடிநின்றால், நீர்த்துவாரத்தில், கல்லடைப்புண்டாகும்—எ-று. 903

மறையவன் லக்கி னாதி வாழ்கருங் கோளு மூன்றில்
உரையின்மூன் றதிப னோடு முறிலண்ட வாத ரோகம்
நறைகமழ் குசன்சன் மத்தி னண்ணிடிற் சனியும் பார்க்கில்
முறைமையாற் சிரம்பி ளந்து முந்துமந் நோயான் மாய்வன்.

இ-ள். லக்கினாதிபனும், சொக்கிரனாகிய, குருவும், உக்கிரனாகிய ராகுவுங்கூடி மூன்றாமிடத்திலாவது, அவ்வதிபனோடாவது கூடியிருந்தால், அண்டவாத ரோகமுண்டாகுமாம், வக்கிரனாகிய செவ்வாய் லக்கினத்திலிருக்க, அக்கிரனாகிய சனிபார்க்கில் தலையுடைந்து நிலைகுலைந்து, அந்தநோயினால் மடிவான்—எ-று. 904

வேறு.

மாயுஞ் சசியுந் தீயோரை மருவிப் பாவர் மத்தியத்தில்
ஏயு மிருக்கச் சென்மாதிக் கில்லைப் பலமே லெழும்பிணியாம்
தீய பாவர் மத்தியத்திற் றிகழ்சென் மாதி யுறச்சென்மம்
தாய பாவர் சசிபலமற் றமர்ந்தாற் பிணிய ராவாரே.

இ-ள். அந்தரியாகிய சந்திரன் பாவிகளோடுகூடியும், பாவர்கள் மத்தியிலிருக்க ஜென்மலக்கினாதிபதி பலமற்றிருக்கில், நோயுண்டாம், தீயபாவர்கள் மத்தியில், ஜென்மாதிபனிருக்க, பாவர்களுடன் சந்திரன் பலமற்றிருந்தாலும், பிணியுடையவனும்—எ-று. 905

வாறெட் டாதி சத்துருநீ சத்தி லிருக்க மகிழ்பாவத்
தோருஞ் சென்மத் துறச்சென்ம முடையோன் பாவருடன்கூடி
ஏர்சென் மாதி குளிகனுட னிருக்க விந்து சனிகூடிச்
சேரு மாறில் வியத்தினிற்கச் சிறுவன் பிணியா லுறுமரணம்.

இ-ள். அட்டமாதிபன் பகை நீசஸ்தானத்திலிருக்க, பாவர்கள் ஜென்மத்திலிருக்க, ஜென்மலக்கினாதிபன் பாவருடனும் குளிகனுடனும் கூடியிருக்க இந்தனாகிய சந்திரன், மந்தனாகிய சனி, கூடி, ஆறுபன்னிரண்டிலிருக்க ஜாதகன் பிணியாலிறப்பவனும்—எ-று. 906

மருவெட் டாதி சென்மத்தின் மற்று மிரண்டோ னேரெட்டில்
தருஞ்சென் மாதி சனிகூடச் சசியும் பாவ ருடன்கூட

உருவில் வாத ரோகமதா மொன்றி லெட்டி லிரவியுடன்
பெருகுஞ் சென்மத் தாதியுறிற் பித்த ரோகப் பிணிகுளிப்பன்.

இ-ள். எட்டுக்குடையவன் ஜென்மலக்கினத்திலும், இரண்டுக்குடையவன் எட்டிலுமிருக்க, லக்கினாதிபதி, அக்கிரனாகிய சனியோடு கூடியிருக்க, சோவனாகிய சந்திரன், பாவிகளோடுகூட, உருவில்லாத வாதரோகமாம், லக்கினத்திலும், எட்டிலும், லக்கினாதிபதியோடுசெக்கிரனாகிய, சூரியன்கூடியிருந்தால் பித்தரோகமாம்—எ-று. 907

குளிகன் கருங்கோள் சென்மாதி கூடிச் சென்மத் திருந்தாலும்
குளிகன் றிரிகோ ணங்களினு மெட்டா மிடத்துங் குலவுகினும்
குளிகன் செவ்வாய் நான்காதி யுடனே கூடி யிருந்தாலும்
தெளியோர் விதையிற்சிற்றண்டத் திரண்டு திரண்டு பெருத்திடுமே

இ-ள். விக்கிரனாகிய குளிகன், உக்கிரனாகிய, இராகு, இலக்கினாதிபதி, இம்மூவருங்கூடி ஜென்மத்திலிருந்தாலும் குளிகன் திரிகோணத்தில், எட்டாமிடத்தில், இருந்தாலும், பொந்தனாகிய குளிகன், கந்தனாகிய செவ்வாய் நாலாமிடத்ததிபனோடுகூடியிருந்தாலும், விரைவீக்கமுண்டாகி அண்டவாயுவென்னும் பாரிசவாயுரோகமாம்—எ-று. 908

பெருக்குஞ் சன்மாதிபனுடனே பெரும்பா வக்கோளுடன்குசனும்
இருக்கப் பார்க்கக் கல்லதனு லிடிபும் பட்டு விரணமதாம்
தரிக்கும் வகுரி தன்னாலுஞ் சரீரந் தன்னில் வடுவுண்டாம்
முருக்குங் கொவ்வைக் கனியுமென முதிரச் சிவந்த விதழ்மானே.

இ-ள். கொவ்வைக்கனிபோன்ற செவ்வாயையுடைய பெண்ணே? ஜென்மலக்கினாதியுடன் பாவர்களும் செவ்வாயும் இருந்தாலும், பார்த்தாலும், கல்லாலிடிபட்டு, பொல்லாத ரணமுண்டாகும், வைசூரியாலும், தேகத்தில் தழும்புபோல் வடுவுண்டாகும்—எ-று. 909

மானே லக்கின திபன்ராகு மதிசேய் புதனே டைவர்களும்
தானே லக்கின மாறெட்டிற் றரிக்கிற் காண விடந்தன்னில்
ஈன மாய வெண்குட்ட மிரவி சேய்மால் சென்மாதி
தேன மாறிற் சன்மமெட்டிற் சேரிற் செங்குட் டமுமாமே.

இ-ள். மங்கையே ஜென்மலக்கினாதிபன், கங்கயனாகிய, ராகு சங்கயனாகிய சந்திரன் செங்கயனாகிய செவ்வாய், தங்கயனாகிய புதன், ஆகிய ஐவர்களும், ஒன்று ஆறு, எட்டில் இருந்தால், பிரத்தியார் காணமலிருக்கு மிடங்களில், வெண்குட்டமுண்டாம், பங்கயனாகிய சூரியன், செங்கயனாகிய, செவ்வாய், தங்கயனாகிய புதன், லக்கினாதிபதியின், இந்நால்வர்கூடி, ஒன்று, ஆறு எட்டிலிருந்தால், செங்குட்டமுண்டாம்—எ-று. 910

வே று.

குட்ட மாஞ்சனி ராகுசென் மாதியும்
எட்டி லாறி விருந்து பலன்கெடில்
செட்ட தாகிய காலிற் செழுங்கருங்
குட்ட மெய்து மெனக்கண்டு கொள்கவே.

இ-ள். லக்கினாதிபன், அக்கனாகிய, சனி, உக்கனாகியராகு, இவர்கள் கூடி, ஆறு எட்டாமிடங்களிலிருந்து பலங்கெட்டு நிற்கில், கால்களில், கருங் குட்டமுண்டாகு மெனவறிக—எ-று. 911

வியாதி தோன்றுமிடம்.

கொள்ளுமாங் கிரகஞ் சென்னி ரவிமதி குளிர்ந்த திங்கள்
ஒள்ளிய கண்டத் தங்கா ரகனிடக் கரத்திற் புந்தி
வள்ளலாம் வலக்கை மன்னன் மார்பிற்சுக் கிரன்மு ழந்தாள்
தெள்ளிய சனிகால் பாம்பு செறிந்ததோ ரிடத்திற் குட்டம்.

இ-ள். ரோகஸ்தானத்தில், லக்கினாதிபதியோடு இரவிமதியாகில், சிரசிலும், மண்டலபதியாகிய செவ்வாயாகில், கண்டத்திலும், அடக்கமாகிய புதனாகில், இடக்கையிலும், கலக்கமில்லாத குருவாகில், வலக்கையிலும், மாரியாகியசுக்கிரனாகில்மார்பிலும், காரியாகிய சனியாகில், முழங்காலிலும், ஒதிபாதியாகிய ராகு கேது வாகில், பாதத்திலுங் குட்டமாம்—எ-று. 912

வே று.

குட்ட மாங்கருங் கோளுஞ்சென் மாதியும்
கிட்டி லக்கின மேழுறக் கேடிலா
எட்டி னிற்சனி யெய்தமுன் சொன்னநோய்
மட்டி லாமல் வருமென் றுரைக்குமால்.

இ-ள். உக்கிரனாகிய, ராகுவும், லக்கினாதிபதியும், லக்கினம், ஏழாமிடத்திலிருக்க, எட்டாமிடத்திற் சனியிருக்க, குட்டநோய் அதிகப்படுமென்று சொல்லவேண்டும்—எ-று. 913

வே று.

மாலர் யரசன் பாவருடன் மருவி யிரண்டா றெட்டினுறச்
சால வவரை லக்கினத்தைப் பாவர் நோக்கிற் சயரோகம்
சீல முடனே தேய்ந்தபிறை சலரா சியிற்பா வரைக்கூடிக்
காலா றெட்டி லொன்றினுறக் கயரோ கங்கள் காட்டிடுமே.

இ-ள். சீவனாகிய, குரு, பாவக்கிரகங்களோடு சேர்ந்து, இரண்டு, ஆறு, எட்டாமிடத்திலிருக்க, பாவர்கள், அவரையாவது, லக்கினத்தையாவது,

பார்த்தால், சயரோகமுண்டாம், நிலவாகிய அமரபட்சச் சந்திரன், சலராசி யிற் பாவரைக்கூடி, ஒன்று, ஆறு, எட்டிலிருக்கச் சயரோகமுண்டாம்.

காட்டுங் குசன்சன் மத்திலுறக் கணக்கன் பாவ ருடன்கூடி
சூட்டு மிரண்டெட் டினிலிருக்கச் சுரரோ கங்கள் சன்மாதி
ஈட்டும் பிருகி னுடன்கூடி யெட்டி லிருக்கச் சன்மாதி
மீட்டு நீச சத்துருத்தா னத்திலிருக்கப் பிரமிய நோய்.

இ-ள். வக்கிரனாகிய செவ்வாய் லக்கினத்திலிருக்க, சாவனாகிய, புதன் பாவரோடுகூடி, இரண்டு, எட்டாமிடங்களிலிருக்கச் சுரரோகமுண்டாம், லக்கினாதிபதி சுக்கிரனுடன்கூடி தக்க எட்டாமிடத்திலிருந்தாலும், லக்கினாதிபன் சத்துரு, நீசஸ்தானத்திலிருந்தாலும், பிரமிநோயுண்டாம்—எ-று.

நோயு மாறெட் டாதிபனும் நுவலுங் கருங்கோ ளுடன்கூடிப்
போயு மிரண்டா மிடத்திருக்கப் புகல்சன் மத்திற் குசனிருக்க
ஆயும் பாவர் சன்மத்தை யடர்ந்து நோக்கக் குருமுளைத்துச்
சேயும் வாதைப் படுமென்று சொன்னார் செகத்திற் றெரிந்தோரே.

இ-ள். சட்டாட்டமத்தானத்துக் குடையவர்கள், கெட்டராகுவுடன் கூடி, இரண்டாமிடத்திலிருக்க, லக்கினத்தில், வக்கிரனிருக்க, பாவர்கள்கூடி லக்கினத்தைப் பார்க்க, கொப்பள நோயால், ஜாதகன், வருத்தப்படுவா னென்று பெரியோர்கள் தெரிந்து சொன்னார்கள்—எ-று. 916

வே று.

தெரிந்து காரியுந் தேய்பிறை பாவரோ
டிருந்து லக்கினத் தெய்தவா றாதிபன்
பொருந்தி ரண்டா மிடத்தினிற் புக்கிட
வருந்தி டக்குன்ம ரோகமும் வந்திடும்.

இ-ள். காரியாகிய சனியும், வாரியாகிய அமரபட்சச்சந்திரனும் பாவர் களோடுகூடி லக்கினத்திலிருக்க, ஆறாமிடத்ததிபன், இரண்டாமிடத்திலிருக்க வருந்தும்படியான, குன்மநோயுண்டாம்—எ-று. 917

வே று.

வந்த வாறா மதிபதியும் மருவுஞ் சன்மம் பத்தேழில்
ஐந்தி லிருக்கச் சன்மமதி லங்கா ரகனு மமர்ந்திடவே
முந்தி நல்லோர் பாராமற் கூடா திருக்க முதலோமம்
வந்த வாபி சாரத்தா லாகம் வருந்தும் பிணியாமே.

இ-ள். ஆறாமிடத்ததிபன், ஒன்று, ஐந்து, எழு பத்தில் இருக்க, லக்கி னத்தில், வக்கிரனிருக்க சுபர்கள் பாராமலுங் கூடாமலுமிருந்தால் முதற் செய்ததாரத்தின், ஓமாபிசாரத்தன்மையால் தேகம் வருத்திப் பிணியுமுண் டாம்—எ-று. 918

வே று.

பிணிகொ ளாறு மதிபன்சன் மாதியும்
மணிசெவ் வாயுடன் கூடிச்சன் மத்தினில்
தணியு மூவருந் தங்கி யிருந்திடில்
பிணியு மாபிசா ரத்தினுற் பீடையாம்.

இ-ள். ஆறுமிடத்ததிபன், லக்கினுதிபதி, வக்கிரனுடன்கூடி, இம்மூவரும் லக்கினத்திலிருக்க, பிணியாகிய ஆபிசாரத்தினுற் பீடையுண்டாம்.

வே று.

பீடேயரும் லக்கினத்திற் கருங்கோண் மூன்றிடத்திற்
பெருகுசனி யுறவண்டம் பெருக்குமவன் றனக்கே
கூடியசன் மத்திரவி குசனுமே கூடிற்
குன்மவலி யாம்பார்க்கிற் கொடுமூச்சுண் டாகும்
நீடுசனமா திபன்செவ்வா யிருவருமே கூட
நின்றிடுதீ யோர்காணி னிறைந்துமிகக் கூடில்
கேடுபடுங் கல்லெறியுந் தலையதனிற் பட்டுக்
கிளறுநோ யாற்றுன்ப மேகிடைக்குந் தானே.

இ-ள். லக்கினத்தில், உக்கிரனுகிய ராகுவும் மூன்றில், அக்கிரனுகிய சனியுமிருக்க, அண்டம் பெருக்குமாம், பங்கமில்லா லக்கினத்திற், பிங்கலனுகிய சூரியன், மங்கலனுகிய செவ்வாய் கூடியிருக்க குன்மவலியுண்டாம், அவர்கள் ஒருவரையொருவர் பார்த்தால், பெருமூச்சுண்டாம், லக்கினுதிபனும் வக்கிரனுங்கூடப் பாவர்கள் பார்த்தாலும், கூடினுலும், கல்லெறிதலையிற்பட்டு அந்தநோயால், துன்பங்கிடைக்குமாம்—எ-று. 920

தானமெனும் லக்கினத்திற் சனிராகு நிற்கிற்
சருவியே பேய்பிடித்துச் சஞ்சலமுற் றிடுவன்
ஆனவமா வாசிதனிற் குசன்சன்மத் திருக்க
அவனைத்தீ யோர்காணி லணிவயிற்றில் வலியாம்
நானிலமெண் சனிசன்மத் திருக்கச்சூ ரியனும்
ராகுவுங்கூ டிப்பார்க்க நலன்செறியா யுதத்தால்
ஊனமுறும் வயிற்றிலத னுேயை தாகும்
உலகினிவிப் படிப்பிணிகண் டுரைபகரு வீரே.

இ-ள். லக்கினத்தில், அக்கிரனுகியசனி, உக்கிரனுகிய, ராகுநிற்கில், பேய்பிடித்துச் சஞ்சலமடைவான், அமாவாசைகாலத்தில், ஜெனனமாய் வக்கிரனுகிய, செவ்வாய்லக்கினத்திலிருக்க, அவனைப் பாவர்கள் பார்த்தால்,

வயிற்றுவலியாம், மந்தனுகிய சனி, லக்கினத்திலிருக்க அவனை முந்தனுகிய சூரியனும், குந்தனுகிய ராகுவுங் கூடிப்பார்க்க, ஆயுதத்தால் வயிற்றிலூன முண்டாம், அதனுல் நோயுமுண்டாம் இவ்வுலகில் எவ்வியாதியுண்டாகு மென்று செவ்வையாயுணர்ந்து செப்புவாயாக—எ-று. 921

உரைபகருங் கருங்கணுய் கருநாகந் தானும்
உறைந்தவீட் டதிபதியா ருகுமதி பதியும்
பெருமையுட னிவர்மூவர் தாமுங்கூ டிடிலோ
பேசியரெண் டாமாதி பதிமகா திசையில்
மருவியவன் ருன்புசிக்கு மந்தநா டன்னில்
வலியதந்த ரோகமே வருமெனவும் பகர்வர்
பரிவுடனே புதன்கூடில் ரோகசரீ ரனுமாம்
பரிந்துநல்லோர் விழிநோக்கப் பரிகார மாமே.

இ-ள். நீலவிழியும் பாலப்பருவமுள்ள பெண்ணே, ஒலனுகிய ராகு அவர், இருந்த வீட்டதிபன், ஆறுமிடத்ததிபன் ஆகிய இவர்கள், மூவர்களுங் கூடியிருக்க இரண்டாமிடத்ததிபன் திசையிலும் புத்தியிலும் தந்தரோகம் வருமென்று சொல்லுவார்கள், அவர்களோடு தவராமல் மாலனுகியபுதன் கூடியுமிருந்தால், ரோகசரீரமுள்ளவனும், அன்னவர்களை நன்னலம்பொருந்திய சுபர்கள் பார்த்தால் ரோகம் நிவர்த்தியாகும்—எ-று. 922

பரிதிசனி யுடன்கூடி யட்டமத்தி லிருக்கப்
பரவுமகோ தரநோயால் பரதவித்தே யிடுவர்
கருதியசன் மமுமேநா லாமிடங்க டம்மில்
கதிரேனுங் குசனேனுங் கவ்வியுமே நிற்கத்
திருவுறைபத் தாமிடத்திற் சவுரியுமே நிற்கத்
திகழ்தனபா வந்தன்னிற் றேய்ந்தபிறை யிருக்கத்
துரிதசிறு பாம்பர்திரி கோணத்தி லிருக்கச்
சூலேநோ யாலாவி சோருமெனச் சொல்லும்.

இ-ள். விரிச்சிகனுகிய சூரியன், கரிச்சிகனுகிய சனியுடன்கூடி அட்டமத்திலிருந்தால் அகோரமாகிய மகோதர நோயால், பரதவிப்பவனும், லக்கினம் நாலாமிடத்தில் செக்கிரனுகிய சூரியனுவது, வக்கிரனுகிய செவ்வாயாவது பற்றியிருக்கப் பத்தாமிடத்தில் மத்திரனுகிய சனியிருக்க, இரண்டாமிடத்தில் அமரபட்சச் சந்திரனிருக்க, சத்திரன், தித்திரனுகிய, ராகுகேது திரிகோணத்திலிருக்க சூலேநோயா லிறப்பவனும்—எ-று. 923

வே று.

தந்த லக்கினத் ததிபதி சனியுமே
இந்த வாறெட்டுப் பனிரண்டி சைந்திடில்

அந்த விரணஞ் சிரசினி லாமெனச்
சிந்தை மாதவர் தெளிந்துகண் டாரே.

இ-ள். சகலமுந் தரக்கூடிய லக்கினுதியும் பகலோன்மகனுகிய சனியும் சட்டாட்டமவியத்தில் இருந்தால் சிரசில் ரணமுண்டாகுமென்று சோதிடம் அறிந்தவர்கள் மாதிடமாய்ச் சொல்லுவார்கள்—எ-று. 924

வே று.

கண்ட சன்ம லக்கினமுங் காணு மைந்து மொன்பதனில்
கொண்ட பரிதி மதியிருக்கக் கூறு நாலே ழீரைந்தில்
திண்டா யரசன் சனியிருக்கச் செவ்வாய் மந்தன் வாரமதில்
அண்டிச் சனித்தோ னுன்மத்த னுகுஞ் சடவா னுவானே.

இ-ள். சோதிடம் பார்த்துச் சொல்லக்கூடிய ஜென்மலக்கினம், பஞ்சமம், பாக்கியஸ்தானங்களில் பரிதிமதியாகிய சூரிய சந்திரனிருக்க, நாலு ஏழு பத்தில் பங்கு பண்ணவனுகிய சனி குருவிருக்க, கந்தன் மந்தன் வாரமாகிய செவ்வாய், சனிக்கிழமைகளில் பிறந்த ஜாதகன், உன்மத்தனும், பருத்ததேகமுள்ளவனுமாவன்—எ-று. 925

ஆவார் சன்ம லக்கினத்துக் கணுகுங் கேந்திரஞ் சோமனுறில்
பாவாய் கிரக நோக்கமிலாப் பசாச யோக முன்மத்தம்
பூவே சன்மங் கேந்திரத்தில் புகரு மதியுந் தானிருக்க
ஈரவோர் பாவ ரைந்தெட்டி னண்ணில் முயல கண்டமுமாம்.

இ-ள். இம்மையில், நன்மையைத் தரக்கூடிய ஜென்மலக்கினத்திற்கு கேந்திரத்தில், சாந்தனுகிய சந்திரனிருந்து, பாவர்கள் பார்க்கப் பசாசயோகமாம், இதின்பலன், உன்மத்தனும், லக்கினத்திலும், கேந்திரத்திலும், சுக்கிரனும், பக்கிரனுகிய சந்திரனுமிருக்கப் பாவர்கள், ஐந்துஎட்டா மிடங்களில் வந்திருந்தால் முயலகண்டரோக முண்டாம்—எ-று. 926

கண்டவேளே பரிவேடங் காணுஞ் சன்மங் தானுறவே
செண்டா யெட்டி விருமூன்றிற் செவ்வா யொன்று தானிருக்கக்
கொண்ட சன்மங் திரிகோணங் குருவு மில்லா தேயிருந்தால்
புண்டே குமர கண்டமெனப் பகர்வாய் வலிப்புந் தான்வருமே.

இ-ள். இன்பமாய் எவரும் அன்பாகக் கொண்டாடும் ஜென்மலக்கினத்தில் பரிவேடனிருக்க, ஆறு, எட்டில் சோரியாகிய செவ்வாயிருக்க, லக்கின திரிகோணங்களில், சொக்கிரனுகிய குருவில்லாதிருந்தால், குமரகண்டமாம், இதன்பலன் வலிப்புவருமாம்—எ-று. 927

வருமே சன்மஞ் சனிசெவ்வாய் வந்தி ரண்டிற் பன்னிரண்டில்
புரவே யெட்டி லக்கினுதிபதி புகவே கேந்திரத் தினியோர்கள்

உரவோ ரில்லா தானிருக்க வுண்டா மீன ரோகமுடன்
தருமே சரீர வாதியந்தத் தானும் பிணிகொள் சாற்றிடுமே.

இ-ள். ஜென்மலக்கினத்தில் என்னவனுகிய சனியும், இரண்டுபன்னி ரண்டிற் சின்னவனுகிய செவ்வாயும், எட்டில் லக்கினதிபதியு மிருக்க, கேந் திரங்களில், பாவர்களிருக்கக்குற்றமான, ஈனரோகமும், சரீர ஆதியந்தமுங் கொள்ளுமென்று விள்ளும்—எ-று. 928

சாற்றுந் தனுமீன் மகரமுடன் ருனு மிந்த ராசியினும்
நேற்றி யங்கிசை யானுலு நின்றே பாவர் தானிருக்கப்
போற்று மதனு ளிலக்கினதி புகவே குட்ட ரோகமென
ஆற்ற லினிய நாவலர்க ளறிந்தே யுரைப்பர் பெருமையினல்.

இ-ள். வில்-மீன்-மான்-ஆகிய, தனுசு, மீனம், மகரம் லக்கினமானு லும், இந்த அங்கிஷம் எந்த அங்கிஷலக்கினமானுலும், பாவர்களிருக்க, அதில், லக்கினதிபதியுங்கூடி யிருந்தால், குட்டரோகமாமென்று, அட்டி யில்லாமற் பெரியோர்கள், திட்டமாய்ச் சொல்லுவார்கள்—எ-று. 929

பெருமை நன்று விரிச்சிகமும் பேணு மேட மிடபமுடன்
ஒருமை ராசி யானுலு முற்ற வங்கிசந் தன்னுலும்
வருமே பாவ ருடன்கூடி வந்து சன்மத் தாதிபனும்
புரவே நிற்கிற் குட்டமெனப் புகல்வா ரறிவுக் கினியோரே.

இ-ள். தே-ளாடு-மாடு-ஆகிய, விருச்சிகம், மேஷம், ரிஷபம், இவைகள் லக்கினமானுலும், இவைகள் அங்கிசமானுலும், இதில்பாவர்களும், லக்கின திபனுங் கூடியிருக்கில், குட்டரோகமுண்டாகுமென்று அறிவிற்சிறந்தபெரி யோர்கள் தெரியச்சொல்லுவார்கள்—எ-று. 930

இனிய சோமன் கிராணத்தி லியன்ற பாவர் மிகவுறவே
தனியே யொன்பத் தெட்டுவியஞ் சசிதா னிருக்கி லுன்மத்தம்
குனியே கலகப் பிரியனெனக் கொள்வன் கோபி தானுகி
நனியே சோம்பித் திரிவனிவ னுறுங் குழற்சீர் வல்லியரே.

இ-ள். சாந்துமணங்கமழுங் கூந்தலேயுடைய பெண்ணே, சாந்தனுகிய சந்திரகிரணத்தில், எட்டு, ஒன்பது பன்னிரண்டில், பாவர்களுடன், சோவ னுகிய சந்திரனிருந்தால், உன்மததமும், கலகப்பிரியமும் கோபியும், சோம் பித்திரிபவனுமாவன்—எ-று. 931

வல்லி யிரண்டினிற் சனிராகு வந்தே யிருக்க விரண்டாதி
சொல்லும் பலன்க ளற்றிருக்கச் சூழும் வீட்டிற் குடையோனும்
நல்ல விரண்டை நோக்கமுற நாடுங் காரி கருநாகம்
வெல்லுந் திசையி லிரண்டாதி மேவத் தந்த ரோகமிதே.

இ-ள். வல்லிக்கொடிபோன்ற மெல்லிய இடையை யுடைய செல்வியே சொல்லியதைக் கேட்பாயாக, இரண்டாமிடத்தில் முரண்டுள்ள நீலன், ஒலனுகிய சனிராகு விருக்க, இரண்டாமிடத்ததிபன் பலமற்றுநிற்க, அவன், நின்ற வீட்டோன், இரண்டாமிடத்தைப் பார்க்க, சனி, ராகு, திசைநடக்குங்காலத்தில், இரண்டாமிடத்தோன் புத்தியில் தந்தரோகமுண்டாம்-எ-று.

நாய்கடி யறிய.

வே று.

தக்க ரண்டா மிடித்திற் சனியுடன்
ஒக்க பாவர்கள் கூடி யுறைந்திட
மிக்க பாவர் வெகுண்டதைப் பார்த்திட
குக்கல் கண்டு பயந்து குலேவனே.

இ-ள். இரண்டாமிடத்தில் முரண்டான சனியோடுதிரண்டபாவர்கள் கூடியிருக்கப் பாவர்கள் பார்க்க நாயைக்கண்டுபயந்து ஓயாமல் வாயைத்திறந்து பேயைப்போலலறி, நடுங்குபவனும்—எ-று. 933

நேய ரெண்டா மிடத்தினி னீசனும்
தூய ரெண்டா மதிபனுஞ் சூழ்ந்திட
ஆய பாவ ரணுகிட நோக்கிட
நாயு மேகடித் திட்டிட நாணுவார்.

இ-ள். இஷ்டமான இரண்டாமிடத்தில், கஷ்டமான நீசனும், அவ்விரண்டாமிடத்தோன் முரண்டான பாவர்களோடு கூடி இரண்டிலிருக்க, அல்லது பாவர்கள் பார்க்க நாய்கடிக்க அதினுல் நோய், அதிகரித்து வருந்துவான்—எ-று. 934

பாம்பு கடியறிய.

வே று.

எட்டா மிடத்திற் கொடியவிட
ராகுவிருக்க வினிய ரெண்டில்
துட்டர் கூட நோக்கமுறத்
தொடர்ந்து விஷதிருஷ் டங்களுமாம்
மட்டார் சன்மா திபனுரு
மன்னன் கருங்கோ ளிவர்மூவர்
பட்டா யொருவீட் டினிவிருக்கப்
பாம்பா லரிட்டம் படுவாரே.

இ-ள். எட்டாமிடத்தில், கெட்டகொடிய, ராகுவிருக்க, இரண்டாமிடத்தில், திரண்டபாவர்களிருந்து பார்க்க விஷஜெந்துக்களால் அடிக்கடி பய

முண்டாம், லக்கினுதிபன் ஆறுக்குடையவன், இராகு இவர்களும் கூடி ஒரு வீட்டிலிருக்கப் பாம்பினுல் தீம்புண்டாகும்—எ-று. 935

வே று.

பார்செறி சசிகரும் பாம்பு கூடியே
ஏர்செறி யேழினி லெட்டி லுற்றிடில்
சீர்செறி தமனியன் சென்ம மேவினும்
கார்செறி விஷத்தினு லெட்டிற் கண்டமே.

இ-ள். ஆலனுகி, சந்திரனும், ஓலனுகிய ராகுவுங்கூடி, ஏழு எட்டாமிடங்களிலிருக்க, பாலனுகிய குருலக்கினத்திலிருக்க, விஷத்தினுல் எட்டாவதுவயதில், கட்டாயம், கண்டமுண்டாம்—எ-று. 936

துர்க்குண மறிய.

வே று.

இந்துடன்பா வக்கிரகங் கூடி நான்கில்
இருந்தக்காற் றிருடனு மிரண்டாம் வீட்டில்
வந்துகுளி கன்செவ்வாய் பாவர் கூடில்
வழுத்துவன்பொய் துர்ப்பலவான் மனைவிவிப சாரி
சுந்தரவிந் தவாவினுன் றுர்வியா பாரன்
துர்ப்போச னங்களைச் சுவையுடனே புசிப்பன்
சந்ததமும் நாய்போலக் கூப்பிடுவ தல்லாற்
சற்றுமிதம் பேசரியான் சினன்ரோகி தானே.

இ-ள். விதுவாகிய சந்திரனேடு பாவக்கிரகங்கூடி, சதுர்ஸ்தானமாகிய நான்கிலிருந்தால் திருடனுவான், குண்ணவானுகிய குளிகன், மண்ணவனுகிய செவ்வாய் பாவர்கள்கூடி இரண்டிலிருந்தால் பொய்பேசுபவன், துர்ப்பலமுடையவன், விபசார மனைவியையுடையவன், விந்துவிற் பிரியமுடையவன் துர்வியாபாரமுடையவன், துர்ப்போசனங்களைச் சுவையுடனே புசிப்பவன், நாய்போலக் குலைப்பதல்லால் இதவார்த்தைப்பேசத் தெரியாதவன், கோபமுடையவன், ரோகியுமாவான்—எ-று. 937

நெய்யிற் கையிடல்.

வே று.

ஏருஞ் சன்ம மிரண்டேழி லெட்டி லிரவி தானிருக்கப்
பாருஞ் செவ்வா யல்லாமன் மற்றை யோர்கள் பார்த்தருள
நேருங் கனலிற் காய்ந்திட்ட நெய்யிற் கையும் வெந்துவிடும்
பேரும் வசூரி தன்னுலும் வாதை யென்று செப்பிடுமே.

இ-ள். எண்ணுதற்கரிய எத்தனையோ ஜென்மத்தில் புண்ணியவசத்தாற் புருடவடிவங்கொண்ட ஜென்மம், இரண்டு, ஏழு, எட்டாமிடங்களில் விண்ணவனாகிய சூரியனிருக்க அவனை மண்ணவனாகிய செவ்வாய்நீங்கலாக மற்றகிரகங்கள் பார்க்க, கனலிற்காய்ந்த நெய்யிற் றோய்ந்தகையும் வெந்துவிடுமாம், வைசூரியாலும் வாதையுண்டாமென்று நீதியாய் ஓதுவாயாக.

குளிகன் செவ்வாய் தன்னுடனே கூடிச் சன்மம் வியமாறில்
அளிய நண்டிற் றனிருக்க வாதித் தன்கண் பார்வையுறில்
தெளியென் றுலகோர் பழிசுமத்தத் தெய்வச் சபையிற்செந்தழலில்
ஒளியிற் காய்ந்த நெய்யிற்கை யிடுவன் தப்பா துண்மையிதே.

இ-ள். கொந்தரியாகிய குளிகன், செந்தரியாகிய செவ்வாயுடன்கூடி முந்திய ஜென்மம், ஆறுபன்னிரண்டிலும், நண்டிலுமிருக்க, செண்டு ஆகிய சூரியன் பார்க்கில், பண்டு உலகத்தோரால் பழிசுமத்தப்பெற்று சபையிற் காய்ந்த நெய்யில் போந்த கையைவைத்துச் சத்தியஞ்செய்வான்—எ-று.

ஆயுதவிரண மறிய.

வேறு.

ஏய தேய்பிறை யேழுற வாறிடத்
தூய னும்வியத் துற்றிடப் பாவர்கள்
ஆய பேர்க ளடர்ந்துகண் ணேக்குறக்
காயம் பட்டொரு கைதுண்ட மாய்விடும்.

இ-ள். காயமாகிய ஆகாயத்தில் மாயமாய்மறையும் அமரபட்சத்தேய்பிறைச்சந்திரன், ஏழாமிடத்திலிருக்க ஆறுமிடத்ததிபன் பன்னிரண்டில் இருக்கக் கூரான பாவர்கள் இவர்களைக்கூடிட அல்லது பார்க்க, காயம் பட்டு ஒரு கைதுண்டாய்ப்போகும்—எ-று. 940

ஏற்ற லக்கின மட்டாதி யாயினும்
கூற்றன் றனக் குளிகனைக் கூடியே
போற்றப் பன்னிரண் டாறெட்டிற் புக்கிடில்
தோற்றங் காலிரு துண்டம தாகுமே.

இ-ள். இக்குவலயத்தில் மிக்க சிறப்புப்பொருந்திய லக்கினதிபதி, அட்டமாதிபதி, இவர்கள் விக்கிரனாகிய குளிகனோடுகூடி, ஆறு, எட்டு பன்னிரண்டில், இருக்க காலொடிந்து, இருதுண்டாய்விடும்—எ-று. 941

எட்டி னதிசெவ் வாயிரு வோர்களும்
முட்ட வாறின்முந் நான்கி லுறைந்திடில்
துட்டர் கையிற் சுரிகையி னலுமே
வெட்ட வாவி விடுவது திண்ணமே.

இ-ள். அட்டமாதிபன், ஆரலாகிய செவ்வாய், இவர்கள்கூடி, ஆறு, பன்னிரண்டில் இருக்க, துட்டர்கையாயுதத்தினால் வெட்டுப்பட்டு இறந்து விடுவான்—எ-று. 942

வே று.

திண்ணிய சன்மத் திற்சனி பாம்பு
தெரிவையிற் சுக்கிரன் மூனும்
நண்ணவு மம்மா வாசையிற் பிறந்தே
னடந்தகால் கரந்தறி படுமே
எண்ணிய கரும்பாம் பிரவியும் பிறையு
மிசைந்தொரு வீட்டினி லிருக்க
விண்ணினி லாவி செல்லவே சென்னி
வேறுபட் டவனியில் விழுமே.

இ-ள். அம்புவியதனில் தெம்புள்ள ஜென்மலக்கினத்தில் என்னவனாகிய சனியும் தின்னவனாகிய ராகுவும், அல்லது நன்னவனாகிய கேதுவும், கன்னியிற் பின்னவனாகிய சுக்கிரனுமிருக்க, அமாவாசையிற்பிறந்தவனுக்கு காலுங்கையுந் தரிபடுமாம், திண்ணவனாகிய ராகு தன்னவனாகிய சந்திரன், முன்னவனாகிய, சூரியன் கூடி ஒருவீட்டிலிருக்கத் தலைதுண்டாகி இறந்து விடுவான்—எ-று. 943

விழுமிய கதிர்சன் மத்துறச் செவ்வாய்
மேவியட் டமத்தினி லிருக்க
வழுவுறத் தேய்ந்த மதிகரும் பாம்பு
மருவியோர் காலினி லிருக்கச்
செழுமையிற் பிறந்தோ னுடலிரு பிளவாஞ்
சென்மமீ திற்சனி யிருக்கத்
தழுவிய சசிபாம் பிரவியுங் கூடிற்
சரீரமே பிளந்திரு கூறும்.

இ-ள். லக்கினத்திற் செக்கிரனாகிய சூரியனிருக்க வக்கிரனாகிய செவ்வாய் அட்டமத்திலிருக்க, பக்கிரனாகிய அமரபக்ஷச் சந்திரனும்உக்கிரனாகிய ராகுவுங்கூடி, ஒரேபாதத்திலிருக்க ஜெனனமானவனுடல் இருபிளவாகும், லக்கினத்தில் அக்கிரனாகிய சனியிருக்க, பக்கிரனாகிய சந்திரன், உக்கிரனாகியராகு, அல்லது துக்கிரனாகிய கேது, செக்கிரனாகிய சூரியனுங் கூடியிருக்கில், சரீரம்பிளந்து இரு கூறாகுமாம்—எ-று. 944

வே று.

கூறும் லக்கினத் தாதியெட் டாதியும்
வீறு கால மிருத்துவுங் கூடிடில்

சீறு மேகத் திரளிடி வீழ்ந்துடல்
நீற தாக நிலத்திடை மாள்வரே.

இ-ள். நேயம்பொருந்திய லக்கினாதிபதி ஆயுட்டானமாகியஅட்டமாதிபதி, சாயுங்காலமறிந்த காலமிருத்து கூடியிருந்தால் படிமீது இடிவீழ்ந்து மடிந்திடுவான்—எ-று. 945

வேறு.

கூறிய விரண்டி லரசனு மிருக்கக்
குலவுமும் மூன்றினிற் சனியும்
ஆறுபன் னிரண்டி லிரவியு மிருக்க
வறுபடுங் கரங்குச னரசன்
சீறுமெட் டேழி லுறவுவீ ரைந்திற்
சேய்புதன் சனியிரா குறமே
வீறுடன் கால்க டுணிபடு மென்றே
விளம்பினர் வேதவே தியரே.

இ-ள். திரண்டகுடும்பமாகிய இரண்டில் இரணியாகிய குருவும் மூன்றில், முரணியாகிய சனியும், ஆறுபன்னிரண்டாமிடங்களில், தரணியாகிய சூரியனு மிருந்தால் கையறுபடுபவனும், பரணியாகிய செவ்வாயும், இரணியாகிய குருவும், ஏழு, எட்டாமிடங்களிலிருக்கினும் பத்தாமிடத்தில், வத்திரனாகிய செவ்வாய் சித்திரனாகிய புதன், மத்திரனாகியசனி, சத்திரனாகிய ராகு, இருக்கினும், கால்கள் துண்டுபடுமென்று மேதினியதனில் வேதமோதிய வேதியர்கள் ஓதியுணர்ந்து சொல்லுவார்கள்—எ-று. 946

வேதனுங் குருசுக் கிரனுமோ ராறின்
மேவிடக் காரியும் பார்க்க
ஓதிய கருங்கோ ளிலக்கினத் திருக்க
வுற்றசன் மாதியா றுறவும்
தீதறு சிரம்போ முடலினிற் காரி
செறியுமற் றோர்மனை தன்னில்
ஆதவன் கருங்கோள் சந்திர னிருக்க
வணியுத ரம்மிரு பிளவாம்.

இ-ள். எங்கும்புகழ்பெற்ற புங்கலனாகிய, குருவும், நங்கலனாகிய சுக்கிரனும், ஆறிலிருக்க, முங்கலனாகிய சனிபார்க்க, கங்கலனாகிய ராகுலக்கினத்திலிருக்க, லக்கினாதிபதியும், ஆறிலிருக்கதலையறுபடுமோம், சரீரஸ்தானத்தில், கரிச்சிகனாகிய சனியும், மற்றமனைகளில், விரிச்சிகனாகிய சூரியன் பரிச்சிகனாகியராகு, அரிச்சிகனாகிய சந்திரன், இவர்களிருக்க, உதரமாகிய வயிறு இரண்டு பிளவுபடும்—எ-று. 947

வேறு.

பிளவு பட்டும் பேருடல் ரெண்டினில்
வளமை சூரியன் மற்றும் வியக்குசன்
இளவ தேய்பிறை யெட்டி லுறச்சனி
களவ தாய்ப்பிறை தன்னேயே கண்டிடில்.

இ-ள். முரண்டில்லாத மனையாளோடுவாழும் குடும்பத்தானமாகியஇரண்டாமிடத்தில் இரவியாகிய சூரியனும், பன்னிரண்டாமிடத்தில் சின்னவனுகிய செவ்வாயும் பொருந்தி வசிக்க தேய்பிறைச் சந்திரன் எட்டிலுமிருக்க, அச்சந்திரனை முச்சையாகிய சனிபார்க்க இச்சையுள்ள உடல் இரண்டு பிளவுபடுமாம்—எ-று. 948

கண்ட தேய்பிறை சூரியன் காரிசேய்
மண்டி நால்வரும் நாலெட்டில் வந்துறப்
பண்டு நல்லவர் பாரா திடிற்கைகால்
துண்ட மாகிற் றுயரின் மடிந்திடும்.

இ-ள். சங்கலனுகிய தேய்பிறைச் சந்திரன் பிங்கலனுகிய சூரியன், முங்கலனுகியசனி மங்கலனுகிய செவ்வாய் இவர்கள் நால்வரும் நாலு எட்டாமிடங்களிலிருக்க, நல்லவர்கள் பார்வையில்லாவிட்டால், கைகால் கண்ட துண்டமாய் அறுபட்டு பங்கயமாய் விடுபட்டு சங்கடத்தால் இறப்பான்.

மடிந்த தேய்பிறை வந்துசன் மத்துறப்
படிந்த வெட்டினிற் பானு குசன்சனி
தொடர்ந்து மூவருங் கூடி யுறத்துறை
கடிந்து வாளினுற் கண்டதுண் டஞ்செய்வன்.

இ-ள். அமரபக்ஷச்சந்திரன் குமரன்பிறந்தஜென்மலக்கினத்திலும்,எட்டாமிடத்தில் விரிச்சிகனுகிய சூரியன், எரிச்சிகனுகிய செவ்வாய், கரிச்சிகனுகிய சனி இம்மூவர்களுங் கூடியிருக்க, இராஜ ஆக்ஞையால் நாசமாக வாளினுற் கண்டதுண்டஞ் செய்யப்படுவான்—எ-று. 950

இலங்கை இராசி மானசங்கை.

விழுச்சாயை சரபிண்டத் துருவம்.

வேறு.

மீன மேடங் கன்னிதுலாம் விரும்பு மிருநூற் றெழுபதுடன்
ஆன வெட்டே விடைசிங்க மாகுங் குடங்தேண் முந்நூறில்
ஈன மொன்று நண்டுதனு வெழில்சேர் மிதுன மகாமிவைச்
கான முந்நூற் திருபான்மூன் ருகு மிலங்கை விஞடியென்ப.

இ-ள்· மீனுகிய மீனம், ஆடாகிய மேடம், மின்னிடையாகிய கன்னி, துலையாகிய துலாம், இவற்றின் விநாடி இருநூற்றெழுபத்தெட்டும், எருதாகிய·ரிஷபம், சீயமாகிய சிங்கம், குடமாகிய கும்பம், தெறுக்காலாகிய விருச்சிகம், இவற்றிற்கு விநாடி முந்நூற்றொன்றும், நண்டாகிய கர்க்கடகம், செண்டாகிய தனுசு, தண்டாகிய மிதுனம், துண்டாகிய மகரம், இவற்றிற்கு விநாடி முந்நூற்றிருபத்துமூன்றும், இலங்கைக்கு, இராசிமானசங்கையாம்.

என்னுந்தேச விழுச்சாயை யியன்ற மதுரைக் கொருநூறும்
மன்னு மையே ழாங்காஞ்சிக் கறைவர் நூற்றே டைம்பானேழ்
பன்னுஞ் சோழ நாட்டிற்கே பகர்வாய் நூற்று நாற்பானன்
கென்ன பெங்க ளூர்தனக்கே யிருநூற் றொருப தெனச்செப்பே.

இ-ள்· பாண்டிநாட்டில் ஆண்டிவேடம்பூண்டு தாண்டவமாடும்சொக்கநாதர் வாழும் மதுரைக்கு நூற்றிருபத்தைந்தும் தேவர்களும், மானிடர் யாவர்களும் வேண்டித்தொழும் வரதராஜப்பெருமாள் வாழும் காஞ்சிக்கு, நூற்றைம்பத்தேழும் நீர்பாய்ந்துவிளையும் நிலம்பொருந்திய சோழநாட்டிற்கு நூற்றிநாற்பத்துநான்கும் கன்னடபாஷையைக் கையாண்டுவரும் பெங்களூருக்கு, இருநூற்றுப்பத்தும் தேசவிழுச்சாயையென்று விசுவாசமாய்ச் சொல்லுக—எ-று. 952

வே று.

செப்பியதோர் சரபிண்ட முதலிருபா னுகும்
திகழிரண்டோ பதினறுஞ் செறிமூன்றி னுக்கோ
ஒப்புறுமா றேடரையே மூவீச மாகும்
உயர்துருவ மிவைமூன்றை விழுச்சாயை தன்னல்
தப்பாமற் றனித்தனியே பெருக்கிவருந் தொகையைச்
சார்மேடம் விடைமிதுனந் தன்னின்முறை யாக
இப்புவியோர் புகழிலங்கை ராசிதனிற் களைய
இயதேச ராசியள வாகுமென லாமே.

இ-ள். இப்புவியில் அற்புதமாய்ச் செப்பியதோர் முதலாம், சரபிண்டத்தொகை, இருபத்துநான்கும், இரண்டாஞ்சரபிண்டத்தொகை, பதினறும், மூன்றுஞ்சரபிண்டத்தொகை, ஆறரையோ மூன்று வீசமுமாகும்,இத்தொகைகளைத் தனித்தனியே, விழுச்சாயையாற்பெருக்கி வருந்தொகையில், மேஷம், ரிஷபம், மிதுனம் இவ்வகளுக்குரிய இலங்கைராசியான, சங்கியைக்கழித்து, நின்றது தேசராசிக்கு, அளவாமென்று கொள்ளுக—எ-று.

வே று·

ஆன பெண்ணு மரியுடன் நண்டிலும்
வான கோலுந் தேளுந்தனு வும்முறை

ஆன வாறுடன் கூட்டிடு மீன்குடம்
மானுஞ் சொன்ன முறைப்படி வாங்கிடே.

இ-ள். கன்னி சிம்மகற்கடகத்தில், (முன்பாட்டிற்சொன்ன, மேஷம் ரிஷபம், மிதுனத்தையும்) துலாம், விருச்சிகம், தனுசுடன், மீனங்கும்பம், மகரத்தையும், கூடிய இத்தொகைகளிரண்டையுங்கூட்டமொத்தராசியான சங்கையாம்—எ-று. 954

ஜீவனம்.

வேறு.

அம்புவியோர் செய்தொழிலாற் சீவனமுண் டாகும்
ஆவையறிலக் கினஞ்சோம ஞதவன்மும் மனைக்கும்
தம்பமொடு பத்தாம்வீட் டங்கிசையி விருந்தோர்
தம்மிலதி கப்பலமாய்த் தரித்தவரங் கிசைதான்
வெம்புரவித் தேரோனங் கிசத்தனையன் பலமே
மேவில்புல் வைக்கோலும் விற்றுணவே கொள்வன்
செம்பொன்விற் பதுராசிப் பலநூலுக் கோரை
திக்குபல முண்டாயிற் செய்வன்வயித் தியங்கள்.

இ-ள். பூமியிலுள்ளோர் நேமகமாய்ச் செய்கின்ற தொழிலால் ஜீவன முண்டாகும், அவையெதுவெனில், லக்கினம், சந்திரன், சூரியன், நின்ற விடங்களுக்கு, பத்தாமிடத்தங்கிசையிலிருந்தவர்கள், பலமாய், இருந்தவர்களின், அங்கிசை சூரியனுகில், புல்லும், வைக்கோலும், விற்றுண்பவனுவான், ராசியில் சூரியன்பலத்தால், பொன்விற்பவனும், ஓரையிற் பலத்தால், நூல் விற்றுண்பவனும், திசையிற் பலத்தால், வயித்தியஞ்செய் துண்பவனும்.

களங்கமில்லா வெண்டிங்க ளங்கிசமே யாகிக்
கமழுமிலக் கினத்திரையைக் காணமுத லாகில்
விளங்கியநற் பயிர்த்தொழிலே புரிந்துணவு கொள்வன்
மேவியரெண் டாந்திரையாக் காணமுமே யாயின்
வளங்கெழுகிந் துவிற்சம்பான் கப்பல்சோங் கோட்டி
வாழ்வன்மூன் ருந்திரையைக் காணமுமே யாயின்
இளம்பிடியோ திமந்தனையும் பழித்தநடை மடவார்
இணக்கத்தாற் சீவனமுண் டென்பரினி யோரே.

இ-ள். மாசற்று தேசுற்ற சந்திராங்கிசமாகி லக்கினமுதற் றிரேக்காணத்திருந்தால், பயிர்த்தொழில்செய்துண்பவனும், இரண்டாந் திரேக்காணத்திருந்தால், நதிகள் சமுத்திரங்களில் கப்பலோட்டியுண்பவனும், மூன்ருந் திரேக்காணத்திருந்தால், பெண்கள் சிநேகிதத்தால், ஜீவனமுண்டாம்-எ-று.

இனியசெவ்வா யங்கிசத்தி லக்கினமே பலமாய்
இரும்புவெள்ளி செம்பொனும்விற் றிருப்பனவாங் கிசைதான்
நனியபல மாயிடிலக் கினியிலுறு தொழிலே
நடத்திடுவன் றிரிக்கிசாங்கி சாம்பலமே யாயின்
தனியுறுமா யுதம்பிடித்துச் சேவிப்ப னேழாம்
தானமது பலனுயிற் றக்கதொழில் செய்வன்
கனிமொழியா யிரவிமுதல் சனிமட்டு மெண்ணிக்
கண்டதுசத் தாங்கிசமே ழாம்பலன்கண் டீரே.

இ-ள். கனியுங் கனியக்கூடிய இனிய மொழியையுடைய பெண்ணே? இனியிம்மையில் நன்மையைத்தரக்கூடிய செம்மையாகிய செவ்வாயாங்கிசலக்கினம் பலமாயிருந்தால் யாவரும் விரும்பக்கூடிய இரும்புவெள்ளிபொன்விற்றுண்பவன், நவாங்கிசம் பலமாயிருந்தால், அவாவுடன் அக்கினித்தொழில் செய்து ஜீவிப்பவன், திரிங்கிசாங்கிசம் பலமாயிருந்தால், ஒருங்காகிய ஆயுதம்பிடித்து சேவிப்பவன், ஏழாமிடம் பலமாயிருந்தால் தாழாத குலத்துக்குத்தக்க தொழில் செய்வான், ஏழாமிடத்துப் பலமென்பது சூரியன்முதல், சனியிருந்த ராசிவரை, எண்ணிக்கண்டது சத்தமாங்கிசம்-எ-று.

கண்டபுத னங்கிசத்தின் பலனவாங் கிசையே
காவியங்கற் பன்றுவாத சாங்கிசமே யாயின்
மிண்டுசிற்ப சாஸ்திரமே யறிந்துணவு கொள்வன்
மேவுதிரி சாங்கிசமு மேயெழுதுந் தொழிலான்
கொண்டவறு பதிலோரை யங்கிசமேற் கணிதங்
குறித்திடுவன் புதனிருந்த ராசிதனைப் பிரித்து
மண்டியறு பதுபங்கு செய்யிலொற்றைப் பங்கில்
வந்துபுத னிருக்கிலென வேவழுத்த வேண்டும்.

இ-ள். கற்கண்டுக் கொப்பாகச் சொற்கொண்டலேவும், புதன் நவாங்கிசையிற் பலத்தால் நலமாகிய பலசாஸ்திரங்கள் கற்பவன், துவாதசாங்கிசமாயின் அற்புதமாகிய சிற்பசாஸ்திரமறிந் துணவுகொள்பவன், திரிங்கிசாங்கிசமாயின் பழுதறப்பார்த்து எழுதுந் தொழில் செய்துண்பவன், அறுபது நாழிகைகொண்டதனுள், ஓரையாங்கிசமாகில் குறிப்புக்கணக்குக் குறிக்கின்றவனுமாம், புதனிருந்தராசியைப்பிரித்து, அறுபதுபங்குசெய்யில், ஒற்றைப் பங்கில் புதனிருந்தால், முன்சொன்ன ஓரைக்குரிய கணிதக்கணக்குக்குறித்தற்றொழில் ஜீவனமாம்—எ-று. 958

வேண்டுகுரு வங்கிசத்தின் முதற்றிரையக் காணம்
விப்பிராற் பலனிரண்டாந் திரையக்கா ணந்தான்
பூண்டதே வதைகளிறைற் பலன்மூன்றுங் காணம்
புண்ணியத்தாற் பயனுகுஞ் சுக்கிரனங் கிசைக்குத்

தாண்டுசுர பிகளெருமை பெருமூன்றுங் காணம்
தக்கவெள்ளி விற்பனடுத் திரையக்கா ணந்தான்
மீண்டுமுதற் றிரையக்கா ணம்மதுவே யாயின்
விரவுநவ ரத்தினமே வியாபாரஞ் செய்வன்.

இ-ள். விரும்பக்கூடிய குருவங்கிசத்தில் கரும்புங்கிர்த்த முதல் திரேக்காணமாயின் வேதமோதிய சாதுக்களாகிய பிராமணர்களால் ஜீவனமாம், இரண்டாந் திரேக்காணமாயின்முரண்டில்லாததேவதைகளால் ஜீவனமாம், மூன்றுந் திரேக்காணமாயின் ஆன்றோர்செய்யும் புண்ணியத்தால் ஜீவனமாம், சுக்கிரனங்கிசைக்கு மூன்றுந் திரேக்காணமாயின் விசுவாசமுள்ளபசு எருமைகளால் ஜீவனமாம் இரண்டாந் திரேக்காணமாயின் திரண்ட வெள்ளிவியாபாரம் விற்றுண்பவனும், முதற்றிரேக்காணமாயின் நன்மையான நவரத்தின வியாபாரஞ் செய்பவனும்—எ-று. 959

செய்யசனி யங்கிசத்திற் பலன்சிறுவன் றுனுஞ்
செப்பியமித் திராங்கிசமேற் பிரயாசத் தொழிலாம்
வெய்யபா வக்கிரகம் லக்கினத்தைப் பார்க்கில்
மெத்தவே சுமைசுமந்து மெய்க்குணவு கொள்வன்
ஐயவிலக் கினந்தன்னை நீசருங்கண் டக்கால்
ஆகாத காரியங்க ளவத்தொழிலே செய்வன்
துய்யசனி யங்கிசத்திற் சுபக்கிரகங் கூடில்
துலக்கிடவே தான்சிறபத் தொழில்செய்து வாழ்வன்.

இ-ள். ஆயுட்காரகனுன, சனியங்கிசத்துப் பலனுவது, மித்திராங்கிசம் பெற்றுல், இத்தலத்தில் கஷ்டத்தொழிலால், ஜீவனமாம், பாவக்கிரகங்கள் லக்கினத்தைப்பார்க்கில், ஆவணத்திற் சுமையெடுத்து ஜீவனஞ் செய்பவனும், லக்கினத்தை நீசர்கள் பார்த்தால் மிக்கமேலோருக்கு ஆகாத அவத்தொழில்செய்து காலங்கழிப்பவனும், சனியங்கிசத்தில் இனிய சுபக்கிரகங்கள் கூடியிருக்கில் தனியே பிரகாசிக்கும்படி சிறபத்தொழில் செய்து பிழைப்பவனும்—எ-று. 960

வேறு.

ஆதவன் சசிலக் கினமிவை மூன்றுக்
கதிபரி லதிகமாம் பலத்தோன்
அடைந்தவங் கிசந்தான் பரிதியங் கிசமா
யம்பொன்னும் வைக்கலும் விற்று
நீதியாய் வயித்தி யங்களுஞ் செய்வன்
நீள்பிறை யங்கிச மாயின்
நீரினிற் சோங்கு நடத்தியே யுய்வன்
நிலமக னங்கிசை யாயின்

ஓதுமக் கினியா லிரும்புபொன் வெள்ளி
யுருக்கலா யுதங்களி னாலும்
உணவுகொண் டிடுவன் புந்தியங் கிசமே
லுரைத்திடு கணிதமுங் கணக்கும்
தீதறு சிற்பத் தொழில்கள்கா வியத்தால்
சீவனம் வேந்தனங் கிசைக்குத்
தெய்வமா மறையோர் பெரியவ ராலும்
சீவனம் புரிந்தினி திருப்பன்.

இ-ள். ஆதவனாகிய சூரியன், சசியாகிய சந்திரன் உதயமாகியலக்கினம், இவைமூன்றுக் கதிபரில் அதிகபலம்பெற்ற அங்கிசாதிபன், பிங்கலனென்னும் சூரியனாகில், பொன்வியாபாரம், வைக்கோல் வியாபாரம், வயித்தியங்களுஞ்செய்து ஜீவிப்பன் சங்கலனாகிய சந்திரனங்கிசம் பலத்தால், ஜலத்தில் ஓர்விதத்தோணி கப்பலோட்டிப் பிழைப்பான் மங்கலனாகிய செவ்வாயங்கிசம் பலத்தால், அக்கினியில், இரும்பு, பொன் வெள்ளியுருக்கியும் விரும்பும் ஆயுதங்களினாலும், ஜீவனஞ்செய்வான், தங்கலனாகிய புதனங்கிசம் பலத்தால், கணிதம் வரைந்தும், கணக்கெழுதியும், சிற்பத்தொழிற் செய்தும், காவியமியற்றியும் ஜீவனஞ்செய்வான், புங்கலனாகிய குருவங்கிசம் பலத்தால், தெய்வம், மறையோர், பெரியவர்களால் செய்த தருமமடங்கள் சத்திரம், சாவடி இவைகளிலிருந்து ஜீவிப்பான்—எ-று. 961

வேறு.

இருந்த சுக்கிர னங்கிச மேறிலோ
தெரிந்த ரத்தினம் வெள்ளியாற் சீவனம்
பொருந்த சுன்னங்கி சம்புக வீனமாய்
வருந்தி டுந்தொழிற் செய்வன் வளமிலான்.

இ-ள். நங்கலனாகிய, சுக்கிரனங்கிசம் பலத்தால், வெள்ளிரத்தினங்களால் ஜீவனஞ்செய்வான் முங்கலனாகிய சனியங்கியம்பலத்தால் கானவர் போல ஈனமாய் வருந்துங் கஷ்டத்தொழில்செய்து வளமில்லாமற் காலங் கழிப்பான்—எ-று. 962

கேந்திரபலன்.

திக்குப்பல மாவது சேய்கதிர் பத்தில்
தொக்கக்குரு புந்தி யிலக்கினத் துற்றால்
துக்கச்சனி யேழினிற் சூழ்ந்திடின் வல்லன்
சுக்கிரன்சசி நான்கினில் வலியெனச் சொல்லே.

இ-ள். பூதலமதனில் ஆதரவான திக்குப்பலமாவது, சுருதி கிருதியாகிய குரு புதன், லக்கினத்திலும், பிருதி இருதியாகிய, சுக்கிரன் சந்திரன்

நான்கிலும் மிருதியாகிய சனியேழிலும், குருதி, பருதியாகிய, செவ்வாய், சூரியன் பத்திலுமிருந்தால் வலிமையுடையவர்களாம்—எ-று. 963

வே று.

பத்தாகு மதிபதியை யிரவிசசி பார்க்கப்
பரிந்திவர்மூ வருங்கூடப் பத்தாம்வீட் டதிபன்
மெத்திரவி சசிவீட்டி லானுலு மிருக்க
வெற்றிமுடி யரசர்பக்கன் மேவியவர் தம்மைப்
புத்தியுட னேசேர்ந்து சீவனமே செய்வன்
புகழ்பத்தா மதிபன்பூ புத்திரனைக் கூடில்
சித்தமாய்ச் சேனுதி பதிகடமைச் சேர்ந்தே
சீவனம்பண் ணுவனென்றே தெரிந்துரைசெய் வாரே.

இ-ள். பத்தாமிடத்ததிபனை, மித்திரன் வத்திரனுகிய, சூரியன் சந்திரன் பார்க்க, இவர்கள் மூவருங்கூடியிருக்க, பத்தாமிடத்ததிபன், சந்திரன் சூரியன் இவர்கள் வீட்டிலிருக்க, வெற்றியுள்ள ராஜரிடஞ்சேர்ந்து, புத்தியுடன் ஜீவனஞ் செய்வான். பத்தாமிடத்ததிபன், குத்திரனுகிய, செவ்வாயைக் கூடியிருந்தால், சேனுதிபதிகளைக்கூடி, சீவனஞ்செய்யச் சித்தமானவனென்று தெரிந்துசொல்வார்கள்—எ-று. 964

செய்யபத்தா திபன்புதனைச் சேர்ந்துமே நிற்கில்
ஸ்திரீகளினுற் புத்திரியாற் றெரிகணிதத் தாலும்
துய்யகுரு வுடன்கூடிற் புராணசாத் திரத்தால்
சுருதியா லமைச்சரா ரியர்துரைக டம்மால்
வையமெலாம் புகழ்பாக்கியத் தோடுசீ விப்பன்
மகிழுஞ்சுக் கிரனுடனே வந்துமிகக் கூடில்
பையமறை யோரமைச்சர் பரிகரியா வெருமை
படைத்துமிரத் தினக்கிரயம் பண்ணியுஞ்சீ விப்பன்.

இ-ள். பத்தாமிடத்ததிபன் சித்திரனுகிய புதனைச் சேர்ந்துநிற்கில், சித்தினியாகிய பெண்களாலும் புத்திரியாலும், கணிதத்தாலுஞ் சீவனமாம். சுருதியாகிய குருவுடன்கூடினல், புராண சாஸ்திரத்தாலும், மந்திரிகள், ஆசாரியர், அரசர்கள் இவர்களாலும், பாக்கியத்துடன் ஜீவிப்பன் பிருதியாகிய சுக்கிரனுடன் கூடியிருக்கில், மறையோர், மந்திரிகள், குதிரை, யானை, எருமை, இவைகளை, உண்டாக்கியும், இரத்தின வியாபாரஞ்செய்துஞ்சீவிப்பன்—எ-று. 965

சீவிதமார் சனியும்பத் தாதிபனுங் கூடில்
சிலம்பங்கள் படிப்பித்துந் திருடியுமே திரிந்து
பாவங்க டமையொருவர் தமக்குப்போ தித்தும்
படர்வனத்தி லிங்கிசைகள் பண்ணிமரம் வெட்டிப்

பூவுலகிற் சீவிப்பன் பத்தாதி செவ்வாய்
பொருபாம்பு மூவர்களு மேபொருந்தி நிற்கில்
தாவுகளில் விஷப்பிரயோ கங்களையே செய்துந்
தரணியிலே திருடியுமே சீவிப்பன் றானே.

இ-ள். மிருதியாகிய சனியும் பத்துக்குடையவனுஞ் சேர்ந்து இருந்தால், சிலம்பங்கள் படிப்பித்தல், திருடல் பாவப்போதனைகள் செய்தல், காடுகளில், தட்டிப்பரித்தல், மரம்வெட்டுதல் முதலிய தொழிலால் ஜீவிப்பான், பத்தாமிடத்ததிபன், குருதி கருதியாகிய செவ்வாய், ராகு, அல்லது, பொருதியாகிய கேது, இவர்கள் மூவர்களுங் கூடியிருந்தால் விஷத்தால், உயிர்வதை செய்தல், திருடியுண்ணலாகிய ஜீவனஞ் செய்வான்—எ-று. 966

தானமா மைந்தாகு மதிபதிபா வியுமாய்த்
தக்கவா ளெயிற்றரவந் தன்னையுமே கூடி
ஈனமிலா திருமூன்றி லேயிருந்தக் காலும்
எண்ணியமூன் றுமதிபன் பாவியுமே யாகி
ஊனமுறும் பாம்புடனே கூடியெங்கே யேனும்
உற்றாலு மவன்மனையா ளுடனேமற் றோரை
மானமறக் கூடியவன் கைப்பொருளை வாங்கி
வயிறுவளர்ப் பானெனவே வழுத்துவர்மா தவரே.

இ-ள். பஞ்சமஸ்தானமாகிய ஐந்தாமிடத்ததிபன், பாவியாய் கேதுவுடன்கூடி ஆறுமிடத்திலிருந்தாலும் தயிரியஸ்தானமாகிய மூன்றுமிடத்ததிபன் பாவியாய், ராகு, அல்லது, கேதுவுடன் கூடி எங்கேயிருந்தாலும் மனைவியைத் தனிமையாய், இனிமையாய் அனுபவிக்கும்படி கொடுத்து அப்பொருளைவாங்கி ஜீவனம் செய்வான்—எ-று. 967

வழுத்தியசுக் கிரன்செவ்வாய் சனிபுந்தி யரசன்
மருவவீ னத்தொழிலால் வயிறுவளர்த் திடுவன்
செழித்தபிறை சனிவெள்ளி செவ்வாய்புந் தியுமே
செறியுமரம் வெட்டிவிற்றே சீவனமே செய்வன்
இழுத்தமுட வன்வெள்ளி குருசெவ்வாய் கூடில்
ஏழைதுக்க முளன்கணக் கெழுதியுஞ்சீ விப்பன்
பழித்தசனி குருவெள்ளி பதங்கன்செவ் வாயும்
பரிந்துறின்மந் திரவித்தை பண்ணியினி திருப்பன்.

இ-ள். நங்கலனாகிய சுக்கிரன், மங்கலனாகிய செவ்வாய், முங்கலனாகிய சனி தங்கலனாகிய புதன், புங்கலனாகிய குரு, இவர்கள் சேர்ந்தால் ஈனத்தொழில்செய்து சீவிப்பன், சங்கலனாகிய சந்திரன், முங்கலனாகிய சனி, நங்கலனாகிய சுக்கிரன், மங்கலனாகிய செவ்வாய், தங்கலனாகிய புதனுங்கூடியிருக்

கில், விறகுவெட்டி, விற்று ஜீவனஞ்செய்பவனுமாவன், அக்கிரனுகிய சனி, சுக்கிரனுகிய சுங்கன், சொக்கிரனுகிய குரு, வக்கிரனுகிய செவ்வாய் கூடியிருந்தால், ஏழையும், துக்கமுள்ளவனும், கணக்கெழுதி ஜீவனஞ்செய்பவனுமாவன், தீமனுகிய சனி, சீமனுகியகுரு காமனுகிய சுக்கிரன், மீமனுகிய சூரியன், பூமனுகிய செவ்வாய் கூடியிருந்தால், தந்திரமாய் மந்திரவித்தை செய்து ஜீவிப்பான்—எ-று. 968

இருந்ததன லாபபாக் கியாதிகுச னனல்
 இயல்சேவ காவிருத்தி யினியவர்க்குச் செய்வான்
சொரிந்தபுத னயின்வித்தை வாகனங்க ளுண்டு
 சொல்லரிய குருவாயின் சகலபாக் கியவான்
அருந்தவஞ்சேர் பிருகாயின் புவிலாப மேவும்
 அரவுசனி யாயிற்சோ ரங்களினே தியினல்
வருந்துமீ னத்தொழிலே புரிந்துசீ விப்பன்
 மதிவதனத் திலதநுதல் வளர்வஞ்சி யாளே.

இ-ள். வட்டச் சந்திரன்போன்ற முகமும், பொட்டிட்ட நெற்றியுமுள்ளபெண்ணே, தனலாபம்பாக்கியமாகிய இரண்டுபதினென்று ஒன்பது இவ்விடங்களுக்கு, அதிபதி சின்னவனென்னும், செவ்வாயாகில் சேவகாவிருத்திசெய்வான், கன்னவனென்னும் புதனுகில் வித்தைவாகனங்களுண்டாம், பொன்னவனென்னும் குருவாகில் சகலபாக்கியமுள்ளவன், பின்னவனென்னும், சுக்கிரனுகில், பூமிலாபமுடையவன், தின்னவனென்னும், ராகு, அல்லது நன்னவனென்னும் கேது, என்னவனென்னும் சனியானல், திருடியும், வருத்தப்பட்டும் இழிவான அற்பத்தொழில் செய்தும் ஜீவிப்பான்.

வேறு.

வஞ்சி யேசனி செவ்வாய் மதிமகன்
செஞ்சொல் சுக்கிரன் றேவர்க டன்குரு
அஞ்சு பேருமொன் றுக வமர்ந்திடில்
துஞ்சு மீனத் தொழில்செய்து வாழ்வனே.

இ-ள். அஞ்சுகன்போன்ற வஞ்சியே, அஞ்சாமற்கேட்பாயாக, மந்தன், கந்தன், தந்தன், சந்தன், புந்தனுகிய, சனி செவ்வாய் புதன், சுக்கிரன், குரு இவர்கள், ஐவரும், ஒருவீட்டிற் கூடியிருக்கில் (மானம்போனலும் போகட்டும் வயிறுநிறைந்தாற் போதும்) என ஈனத்தொழில் செய்து பிழைப்பான்.

வேறு.

கண்ட சன்மங் கேந்திரத்திற் காணு மைந்தெட் டொன்பதனில்
பண்டே சோமன் புகரிருக்கப் பாரி தனக்கு மறுபுருடன் [குக்
கொண்டே விடுத்துச் சீவனமாய்க் கொள்வன் கூறும் புவியோர்க்
கெண்டை விழியின் பார்வையினுற் கிட்டி யணையுந் தனத்தாளே.

இ-ள். கெண்டைமீன் போன்ற வண்டுவிழியின் பார்வையால் அண்டி வரும் ஆடவர்களைக் கொண்டவளையுந் தனத்தாய் கேட்பாயாக, ஜென்மம், கேந்திரம், ஐந்து எட்டு ஒன்பதாமிடங்களில், சந்திரனும், சுக்கிரனும், இருந்தால், தன்மனையாளை யன்னியருக்கு இன்பம் அனுபவிக்கக்கொடுத்துத் துன்பமில்லாத ஜீவனம் செய்வான்—எ-று. 971

துர்ப்பிட்சகாலம்.

மந்தனு மிருபாம் பரசனிந் நால்வர்
மாறியே கூடிடில் விளைவும்
மழைபயி ரற்ப மிவரிரு வர்க்கும்
மற்றொரு பத்தினி லொருவர்
இந்தவா றிருக்கின் வெட்டைகா லமதா
மிடபந்தேள் கோல்சிங்க மீனம்
இனியகும் பத்தி லிருக்கிலிப் புவியி
லிறைபுதன் மனுஷரு மடிவர்
அந்தவீ டாறின் முன்சொன்ன நால்வ
ராதித்தன் குசனொடுங் கூடி
அமரவே குடிக ளிருந்தவூ ரெங்கு
மலகைநாய் நரிகுடி கொள்ளும்
தந்திரஞ் சுருதி மொழிப்படி புரியுந்
தக்கதோர் வேள்விக ளெல்லாம்
தான்மறுத் திடுமம் புவிகள் காடாகுந்
தானெனச் சாற்றுவர் பெரியோர்.

இ-ள். மந்தனாகிய சனி, குந்தன், கெந்தனாகிய, இராகு, கேது, புந்தனென்னும், குரு ஆகிய இந்நால்வரில் (சனி ராகு, அல்லது சனி கேது, குரு ராகு, அல்லது குருகேது) இவர்கள் மாறிமாறிச் சேர்ந்தால் விளைவும் பயிரும், மழையும், அற்பமாம், இவ்விருவர்களுக்கும், பத்தில், இப்படியிருக்கில், உயர்ந்தஉஷ்ணகாலமாகிய வெட்டைகாலமாம், ரிஷபம், விருச்சிகம், துலாம், சிம்மம், மீனம், கும்பம், இவைகளுள் ஒன்றில் புதனிருந்தால் நன்றல்ல மாநிலத்தையாளும் மன்னர்களும், மனிதர்களும் மடிவார்கள், மேற்சொன்ன ஆறுராசிகளிலும், குரு சனி, ராகு கேதுவுடன் செவ்வாய், சூரியன் கூடில், குடிகளிருந்த ஊரெங்கும், வடிவாகிய நாய் நரி பேய்போய்த் தங்கிக் குடியிருக்குமாம். சுருதிப்படி செய்கின்ற வேள்விகளெல்லாம் மாறுதலடையும், நாடுகளெங்கும் காடுகளாமென்று பெரியோர் சொல்லுவார்கள்—எ-று. 972

சாற்றிய வரச னொடுசெனி யாதல்
தரைசுத னுதல்பாம் பாதல்

தானுறக் குருவுக் கேழினின் ஞூலுந்
தகர்க்கிறை யோடுபோம் புறினும்
போற்றிய குசனேக் காரி கூடிடினும்
புலவுமீன் தேள்கடை யினிலும்
புணரிஷ பத்தின் மத்தியி லேனும்
பொருசிங்கத் தாதியி லேனும்
கூற்றமாஞ் சனிநின் ஞூன்மழை யின்றிக்
குவலயத் துளபல வுயிரும்
கொடும்பசி யாலுஞ் சமர்க்களத் தாலுங்
குறுகிமாண் டிடுமெனக் கூறே
ஏற்றமீ னிடபந் தேள்தனு சிங்க
மிவையினிற் காரிசே யாதல்
இருந்துவக் கிரந்தா ஞகிமன் னர்க்கே
யிடுக்கமுண் டெனவுரைத் திடுவர்.

இ-ள். இரணியாகிய வியாழனேடு, முரணியாகிய சனியாவது, பரணியாகிய, செவ்வாயானது, அரணியாகிய, ராகு அல்லது சிரணியாகிய கேதுவாவது, கூடினுலும், அல்லது ஏழில் இருந்தாலும், செவ்வாயோடு, ராகு, அல்லது கேது இருந்தாலும், செவ்வாயோடு சனியிருந்தாலும் மீனம், விருச்சிகம், கடைப்பாகத்திலேனும் ரிஷபத்தின் மத்தியிலேனும் சிம்மத்தின் முதற்பாகத்திலேனும், சனியிருந்தாலும் மழையில்லாமல், உலகுயிர்பலவுங் கொடியபசியால் வருந்தியும் போர்க்களத்திற்சேர்ந்தும் மடிவார்கள், மீனம், ரிஷபம், விருச்சிகம், தனுசு, சிம்மம், இந்தராசிகளில் செவ்வாயிருந்து வக்கிரம்பெற்றால் அரசர்களுக்குத் துன்பமுண்டாம், என்று இயம்புவாயாக.

இடும்பைசேர் வெள்ளிக் கேழினிற் குருவு
மிருந்திடின் மாரிபெய் யாதாம்
இரும்புதன் வெள்ளி நாப்பணி னிரவி
யிருக்கவெய் யோர்க்குமுன் சனிசேய்
உடன்கலந் திருக்க மாரியு மறுத்தே
யுலகினிற் பஞ்சமென் றுரைக்கும்
உயர்சனி தனக்கு மூன்றுபன் னென்றி
லும்பர்கோன் குருவும்வந் துறையில்
நெடும்புவி தன்னி னரர்பசு முதலாய்
நின்றநாற் காலுயிர் தனக்கும்
நேமியாள் பவர்க்குந் துன்பமே யாகும்
நின்றிடு பங்குபா தர்க்கே

திடம்பெற வைந்தாம் வீட்டினி லரசன்
சேர்ந்துற விருந்தகா லையினில்
செகமொரு மூன்றி னுளபல வுயிர்க்குந்
தீங்குறு மென்றுரை செய்வர்.

இ-ள். உரிச்சிகனுகிய சுக்கிரனுக்கு ஏழாமிடத்திற் புரிச்சிகனுகிய குரு விருந்தால், மழையில்லையாம், தெரிச்சிகனுகிய புதனுக்கும், உரிச்சிகனுகிய சுக்கிரனுக்கும், இடையில் விருச்சிகனுகிய சூரியனிருக்க, அச்சூரியனுக்கு முன், சனிசெவ்வாயுடன் கலந்திருக்க மழைபெய்யாமல் உலகத்தில் பெலமான பஞ்சமாம், சனிக்கு, மூன்று, பதினோராமிடத்திற் குருவிருக்கப் பூமியில், மனிதர்கள், பசுமுதலிய நாற்கால் ஜீவன்களுக்கும், அரசருக்குந் துன்பமாம், சனிக்கு ஐந்தாமிடத்திற் குருவிருக்கச் சந்திரனுங்கூடிய காலத்தில், மூன்றுலகத்துள்ள, ஆன்றோருக்கும் தோன்றிடும் தீம்பும் வீம்பும், சங்கடமுமுண்டாகுமென்று, சொல்லுவர்—எ-று. 974

மேற்கோள் திருவிளையாடற் புராணம்.

வெள்ளி பின்செல்ல வெண்கதிர் முன்செல்லத்
தள்ளிச் செவ்வாய் தயங்கி நடுப்படிற்
பள்ளந் தன்னிற் பயிர்பல செய்யினும்
அள்ளி நீருண்ண வாற்றிலு மில்லையே.

இஃது வெளிப்படை.

மறுமையிலடையுமிடம்.

பன்னிரண்டா மதிபனைச்சேர்ந் தவராற் சொல்லும்
பலன்குருசுக் கிரனுயிற் றெய்வ லோகம்
மின்னுகதி ருடன்கூடி விராஜ யோகம்
வெண்மதிய முடன்கூடிற் பிதிர்லோ கந்தான்
மன்னுகுச னைக்கூடில் வீர சொர்க்கம்
மந்தன்பாம் புடன்கூடின் மறலிபதி யாகும்
உன்னுபுத னுடன்கூடி லெங்கெங்கே தாம்போய்
உற்றிருக்க வேண்டுமெனி லங்குறைய லாமே.

இ-ள். இந்நிலமதனிற் பன்னிரண்டாமிடத்ததிபனைச் சேர்ந்தவர்களாற் சொன்னயமுடைய சோதிடர்கள் நன்னயமாய்ச் சொல்லும் பலன்களாவன பாலன் லோலனென்னும், குரு, சுக்கிரனுகில் தெய்வலோகமாம், காலனென்னும் சூரியனுடன் கூடியிருந்தால், இராஜலோகமாம், ஆலனென்னும், சந்திரனுடன் கூடியிருக்கில் பிதுர்லோகமாம், வேலனென்னும், செவ்வாயுடன்கூடில், வீரசொர்க்கமாம், நீலனென்னும், சனி ஓலனென்னும் இராகு வோடு கூடில், எமலோகமாம், மாலனென்னும், புதனேடு கூடியிருக்கில், எந்தலோகத்திற் செல்லவிருப்பமோ அங்கங்குபோய் சேரலுமாம்—எ-று. 975

மாரகதிசையறிய.

மாரகத்தின் றிசையறிய வருநான்காந்
திசைசனியே வந்துற் றாலும்
பார்தனக்குச் சுதன்செவ்வா யைந்தாகுந்
திசைதானே பரிந்துற் றாலும்
பேருதித்த வாறுகுந் திசையரச
ராணாலும் பின்பு ராகு
சீருதித்த வேழாகுந் திசையானு
லும்மரணந் திண்ணந் தானே.

இ-ள். நிச்சயமாக இச் செகத்தோர்க்கு ஏற்படும் மாரகதிசை விவரமெப்படியெனின், நாலாவது திசைசனியானாலும், ஐந்தாவதுதிசை செவ்வாயானாலும், ஆறாவதுதிசை குருவானாலும் ஏழாவது திசை, இராகுவானாலும் மரணமாம்—எ-று. 976

கிரகதிசையறிய.

கார்த்திகை முதலொன் பானாள்
களும்பகல் திங்கள் செவ்வாய்
கார்த்தவி ராகு பொன்சுன்
கவின்புந்தி கேது வெள்ளிச்
சீர்த்த வர்க்கிம் முறையாகச்
செப்பிய திசைக ளாகும்
ஏர்த்தமற் றையநாண் மீனு
மிவ்வாறே கொள்ளற் பால.

இ-ள். கிரகதிசைகளின் விபரமெப்படியெனின், கார்த்திகை நட்சத்திர முதல், ஒன்பது, ஒன்பது நட்சத்திரமாகப் பரணிநட்சத்திரம் முடிய சூரியன், சந்திரன், செவ்வாய் இராகு, குரு, சனி புதன், கேது, சுக்கிரன், இவர்களை இந்த வரிசைக்கிரமப்படி எண்ண, எந்த நட்சத்திரத்தில் எந்தக்கிரகமொட்டுகிறதோ, அந்தநட்சத்திரத்திற்கு, அந்தக்கிரகங்களின் திசையாம்.

கிரகதிசா வருடமறிய.

சூரியன் றிசைக்காண் டாறு
திங்கட்குப் பத்துச் செவ்வாய்க்
காறுமோ ரேழி ராகுக்
கறைபதி னெட்டுப் பொன் னுக்
கேருறீ ரெட்டு மந்தற்
கியம்புபத் தொன்ப தாகும்

சீரில்புந் திக்கோர் பானேழ்
சிகிக்கேழ்வெள் ளிக்கைந் நான்கே.

இ-ள். கிரகதிசாவருட விவரமெப்படியெனின் சூரியனுக்கு ஆறும்,சந்திரனுக்குப்பத்தும், செவ்வாய்க்கு ஏழும், ராகுவுக்கு, பதினெட்டும், குருவுக்கு பதினறும், சனிக்குப்பத்தொன்பதும், புதனுக்குப் பதினேழும் கேதுவுக்கு, ஏழும், சுக்கிரனுக்கு. இருபதும் திசாவருஷங்களாம்—எ-று. 978

அதன் விவரம்.

கார்த்திகை	உத்திரம்	உத்திராடம்	சூரியதிசை	(6)
ரோகணி	அஸ்தம்	திருவோணம்	சந்திரதிசை	(10)
மிருகசீரிடம்	சித்திரை	அவிட்டம்	செவ்வாய்திசை	(7)
திருவாதிரை	சுவாதி	சதயம்	ராகுதிசை	(18)
புனர்பூசம்	விசாகம்	பூரட்டாதி	குருதிசை	(16)
பூசம்	அனுஷம்	உத்திரட்டாதி	சனிதிசை	(19)
ஆயிலியம்	கேட்டை	ரேவதி	புதன்திசை	(17)
மகம்	மூலம்	அசுவணி	கேதுதிசை	(7)
பூரம்	பூராடம்	பரணி	சுக்கிரதிசை	(20)

புத்திபிரிக்கும் வகை.

கோள்களின் றிசையிற் புத்தி
குறித்திடிற் றிசையோ னுண்டை
நீள்புத்தி நாத னுண்டா
னேர்படப் பெருக்கிக் கண்ட
வாளமர் தொகையொன் றிற்கு
மருவுநாண் மூன்ற தாகும்
வாள்கடல் கெண்டை வண்டு
வனசமாம் விழியி னளே.

இ-ள். ஆழ்கடல், வாள்கெண்டை, மீன்வண்டு முண்டகமலர் இவைகள் போன்ற கண்களையுடைய பெண்ணே புத்திபிரிக்கும் விவரமெப்படியெனின், திசாநாதனுக்கு, ஏற்பட்டமொத்த வருஷத்தை புத்தி நாதனுக்கு ஏற்பட்டதிசாமொத்த வருஷத்தால், பெருக்கிவந்த தொகையை மீண்டும் மூன்றால் பெருக்கவந்த நாட்கள் திசையில் புத்திகாலமாம்—எ-று. 979

சித்திரம் பிரிக்கும் வகை.

அவரவ ரபகா ரத்தி னுண்டொன்றின் மூன்று நாளும்
நவிலுமா தங்கால் நாளும் நாளொன்றிற் பாதிக் கன்னல்

இவைமூன்று தொகையுங் கோட்கடிசை யாண்டாற் பெருக்கிவந்த
தவலறு தொகையைச் சேர்க்கத் தான்வருஞ் சித்தி ரந்தான்.

இ-ள். சித்திரம் பிரிக்கும் விவரமெப்படியெனில், அவரவர்களுடைய புத்தியிற்கண்ட தொகையின், வரு, (1) க்கு, (3) நாளும், மாசம் (1) க்கு, கால்நாளும், நாள் (1) க்கு பாதிக்கன்னலாகிய அரைநாழிகையுமாகச்சித்திர நாதன், திசாவருஷத்தொகையாற் பெருக்கிவந்த நாட்கள் சித்திரகாலமாம்.

உட்சித்திரம் பிரிக்கும்வகை.

வெண்பா.

ஒருநாளுக் கோரரை நாழியாத் தோற்றும்
ஒருநாழி கைக்கரைவி நாடி—துருவமாம்
எந்தத்தி சைக்கு மிவர்வருடங் கொண்டெண்ணச்
சிந்தனைக்குட் சித்திரமாச் செப்பு.

இ-ள். சித்திரம்பிரித்துக் கண்டதொகையின் நாள், (1) க்கு, அரை நாழிகையும், நாழிகை, (1) க்கு அரைவிநாடியும், துருவமாம், இத்துருவத்தை உட்சித்திர நாதன் திசாவருஷத்தொகையால் பெருக்கிவந்தநாள் உட்சித்திரகாலமாம்—எ-று. 981

போதகன் வேதகன் பாசகன் காரகனறிய.

கூறு பலனைக் கொடுவென்பான் போதகனும்
வேறுபண்ணித் தட்டுவிப்பான் வேதகனும்—தேறுபலன்
கூட்டுவிப்பான் பாசகனுங் கோல மகாதிசைக்கே
ஈட்டுபொருள் காரகனீ வான்.

இ-ள். திசாகாலங்களில், கூறும், பலனைக்கொடுவென்று சொல்லுபவன், போதகன், அப்பலனை வேறாகச்செய்ய மறுப்பவன், வேதகன், தேறுதலாகக் கூட்டிவைப்பவன், பாசகன், பொருட்கொடுப்பவன் காரகனும்.

பானு திசைக்குமந்தன் பாசகனுஞ் சுக்கிரனே
மானேகேள் வேதகனு மன்னவனும்—தேனனையாய்
காரகனுஞ் செவ்வாயுங் காசினியோர் தாமறிய
ஏரணியும் போதகனு மே.

இ-ள். பாரில்நேரில் வானிற்றோன்றிய சூரிய மகாதிசைக்கு, காரியாகிய, சனி பாசகன், மாரியாகிய சுக்கிரன், வேதகன், பூரியாகியகுரு, காரகன் சோரியாகிய செவ்வாய்போதகனும்—எ-று. 983

இந்து திசைக்குவெள்ளி யேற்றதோர் பாசகனும்
விந்தைமலர் நண்பனே வேதகனும்—மந்தனே

கங்கா நதிபுடைசூழ் காசினியிற் காரகனும்
அங்கார கன்போத கன்.

இ-ள். சந்திர மகாதிசைக்குச் சந்தனாகிய சுக்கிரன் பாசகன், முந்தனாகிய, சூரியன், வேதகன் மந்தனாகியசனி, காரகன், கந்தனாகிய செவ்வாய் போதகனும்—எ-று. 984

மங்களனார் தந்திசைக்கு மார்த்தாண்டன் பாசகனும்
திங்களிரும் போதகனுஞ் சேயிழையீர்—பொங்குபுகழ்
மேயபுதன் வேதகனா மித்தரணி யோரறிய
ஆயசனி காரகனா கும்.

இ-ள். செவ்வாய் மகாதிசைக்கு எவ்வாறென்னில் செக்கிரனாகிய சூரியன் பாசகன், பக்கிரனாகிய சந்திரன் போதகன், சக்கிரனாகிய புதன், வேதகன், அக்கிரனாகிய சனி காரகனும்—எ-று. 985

புந்தி திசைக்குப் புரவலனே போதகனும்
சந்திரனே பாசகனுந் தானவன்—இந்துநுதல்
மின்னனையீர் செவ்வாயும் வேதகனும் வெள்ளியோ
மன்னுபுகழ் காரகனு மாம்.

இ-ள். புதன்மகாதிசைக்குப் பதிரனாகிய குருபோதகன், மதிரனாகிய சந்திரன் பாசகன் உதிரனாகிய செவ்வாய் வேதகன், சுதிரனாகிய சுக்கிரன், காரகனும்—எ-று. 986

வேந்தன் மகாதிசைக்கு வெய்யவனே வேதகனும்
போந்துவருஞ் செவ்வாயே போதகனும்—காந்திசெறி
சந்திரனே காரகனுந் தையலே தாரணியில்
மந்தனே பாசகனா மே.

இ-ள். குருமகாதிசைக்கு, பருதியாகிய சூரியன்வேதகன், குருதியாகிய செவ்வாய் போதகன் இருதியாகிய சந்திரன் காரகன், மிருதியாகிய சனி பாசகனும்—எ-று. 987

வெள்ளி மகாதிசைக்கு வேந்தனே போதகனும்
தெள்ளுபுதன் பாசகனுஞ் செங்கதிரும்—மெள்ளவரும்
காரகனே தானாகுங் காரியே வேதகனும்
வாரணியுங் கொங்கை மயிலே.

இ-ள். சுக்கிரமகாதிசைக்கு, சொக்கிரனாகிய குருபோதகன், சக்கிரனாகிய புதன் பாசகன், செக்கிரனாகிய சூரியன், காரகன், அக்கிரனாகிய சனி வேதகனும்—எ-று. 988

சனியின் றிசைக்குச் சசிபோ தகனும்
இனியசெவ்வாய் வேதகனென் றேத்தும்—கனிமொழியாய்
வெள்ளியே பாசகனும் வேந்தனே காரகனும்
தெள்ளுதமி ழோருரைத்த சீர்.

இ-ள். இனியமொழியையுடைய கணிகையே கேட்பாயாக, சனிமகா திசைக்குப் பனிக்கதிராகிய சந்திரன் போதகன், உலோகிதனுகிய செவ்வாய் வேதகன், சீதகனுகிய சுக்கிரன் பாசகன், பீதகனுகிய குரு காரகனும்-எ-று.

ஒருவர் மகா திசைக்கு ளூற்றபல னுண்ண
வருவர் நவக்கிரகர் மாதே—அவரவரில்
போதகனும் பாசகனும் போற்றுபொருள் காரகனும்
வேதகனு மாகிவரு வார்.

இ-ள். பூதலத்தோர் கொண்டாடும் மாதரசே கேள், ஒருவருடைய திசைக்கு புசிப்பாய் வருகிற நவக்கிரகங்கள் போதகனும், பாசகனும், காரகனும், வேதகனுமாகி புத்திநாதர்களாய் வருவார்கள், இராகு கேதுகளுக்கு இவையில்லையாம்—எ-று. 990

இந்தப் படிநால்வ ரெய்தியொரு வர்திசைக்குள்
வந்துபல னுண்ணும் வகையறிந்தே—சிந்தித்
துரைத்தபல னொத்திருக்கு மொண்டொடியே கேளாய்
தரைத்தமிழோர் தாமறியத் தாம்.

இ-ள். ஒளிபொருந்திய வளையலையுடைய ஒண்டொடியேவிண்டுசொல்வதைக் கேட்பாயாக, மேற்சொன்னபடி நால்வரின் புத்தி விவரத்தையறிந்து யோசனைசெய்து சொன்னபலன் ஒத்திருக்குமாம், இதைப் பூமியில் கற்றவர்கள் அறியக்கடவர்—எ-று. 991

திசாபுத்தி பலனறிய.

சூரியதிசாபுத்திபலன்.

அருக்கனி லருக்கன் புத்தி யறியநா ளூற்றெட் டுக்கும்
கருக்கொடு முற்றூற் கேடு கலகமந் தணனுற் பீடை
வருத்தமாந் தலைநோ யுண்டாம் வலக்காதில் வலியுண்டாமே
பெருக்கநீ ரிழிவு மேட மாதத்திற் பீடை தானே.

இ-ள். வீரியமாகிய சூரியதிசையில் சூரியபுத்திநாள் (108) ல் மீ (3) நாள், (18) இதில் உற்றூர் கெடுதலும், மற்றோர் கலகமும், கற்றோராகிய பிராமணராற் பீடையும் சற்று தலைநோயும் சுற்றித்திரியும் வலதுகாவில் வலியும் மற்றும் நீரிழிவும் சித்திரைமாதங்களில் பீடையுமுண்டாம்—எ-று.

இரவியி லிந்து புத்தி யினிய நூற் றெண்ப துக்கும்
அரசரான் மகிழ்ச்சி லாப மதிகவா கனமு முண்டாம்
பரவிய மணமாம் பெண்ணாற் பகையிடக் கண்ணி னோயாம்
திரமெனுங் கடகத் திங்க டீவினை காணுந் தானே.

இ-ள். சூரியதிசையில் வாரியாகியசந்திரபுத்தி, (180) நாள், (6-மாதம்) இதில், மன்னரால் மகிழ்வுவரும் பொருள் லாபம், வாகனம், விவாகம், பெண்களாற் பகை, இடக்கண்ணில் நோய் உண்டாம் ஆடிமாதத்தில் தீவினை யுண்டாகும்—எ-று. 993

ஆதித்தன் றன்னிற் செவ்வாய் புத்திநூற் றிருபத் தாறும்
வாதித்த வியாதி சண்டை வழக்கநல் வரட்சி பீடை
சாதித்த வுற்றாற் கேடு தனம்பொருட் சேத மாகும்
போதித்த பொருளுஞ் சாயும் பூமியின் பலனு காதே.

இ-ள். சூரியதிசையில் சோரியாகிய செவ்வாய் புத்தி, (126) நாள், (4) மீ (6) நாள், சங்கடமுண்டாகும், வியாதி, சண்டை வரட்சியானபீடை பந்துக்களுக்குக் கெடுதல், தனம் பொருட்சேதம் பொருளுண்டாக்கும், பூமியில் பலனின்மையாம்—எ-று. 994

சூரியன் றனிலே ராகு சுகத்தையே சொல்ல வென்றால்
ஏருற்ற நாண்முந் நூற்றோ டிருபத்து நான்க தாகும்
பாரிய விடிவி ஷத்தாற் படைபயம் பிறந்தார் பின்னம்
வீரிய மைந்தன் றேசாந் திரத்தினின் மேவு வானே.

இ-ள். சூரியதிசையில் வீரியாகிய, இராகுபுத்தி, (324) நாள் (10மீ 24 நாள்) படிமீதில், இடி, விஷம், ஆயுதத்தாலும், பயம் அடியான புத்திரர் தோஷம், புத்திரன் தேசாந்திரம் போதலான பலன்களாம்—எ-று. 995

எதிருறுங் கதிரிற் பொன்னி னிருநூற்றோ டெண்பத் தெட்டும்
கதிபெறு முற்றார் நட்புங் கல்வியுஞ் செல்வ முண்டாம்
மதியுறு மிராச சேவை மக்களுஞ் சுத்த முண்டாம்
அதிகசத் துருவை வெல்லு மதிசய மிருதி யாமே.

இ-ள். சூரியதிசையில் பூரியாகிய, குருபுத்தி (288) நாள், (9மீ 18 நாள்) பந்துக்கள் சிநேகம் கல்வி, செல்வம், ராஜசேவை, மக்கள், சத்துரு ஜெயம், சந்தோஷம், இவைகளுண்டாம்—எ-று. 996

நன்கதிர் சனிமுந் நூற்று நாற்பதோ டிரண்டி னுக்கும்
மன்பய மக்கட் பீடை மனத்துயர் பகைவ ருண்டாம்
தன்பொருட் சேத முந்தி யடுப்பது சரீர பீடை
இன்பமே யில்லை மண்ணி லெவர்களும் பகைவ ராமே.

இ-ள். சூரியதிசையில், காரியாகிய சனிபுத்தி, (342) நாள், (11மீ 12 நாள்) ராஜபயம் மக்கள் பீடை, மனத்திற்றுன்பம், பகைவரால் பொருட் சேதம், உந்திக்கடுப்பு, சரீரபீடை, இன்பமில்லாதிருத்தல், எவர்களும் பகை இவைகளுண்டாம்—எ-று. 997

நற்கதிர் தன்னிற் புந்தி நாளது முற்நூற் றாறும்
வற்கமும் பகைய தாகும் மனத்திகில் சரீர பீடை
கற்கரு விநாச முந்திக் கடுப்பது வழக்க முண்டாம்
சொற்புகழ் மன்ன னாசந் துக்கமு மிகுதி யாமே.

இ-ள். சூரியதிசையில் பேரியாகிய புதன்புத்தி (306) நாள் (10மீ 6 நாள்) பந்துக்கள்பகைமனதிலுண்டாதல், சரீரபீடை, கெர்ப்பந்தரிக்கக்கெடு தல், வயிற்றுக்கடுப்பு, விவகாரங்கள் அரசனால் துக்கமுமுண்டாம்—எ-று.

ஆதித்தன் றனிலே கேது வணுகினூற் றிருபத் தாறும்
சோதித்த நினைவு குன்றுந் தூரதே சத்திற் போவர்
வாதித்த விஷமு முண்டாம் வழக்குண்டு மனைவேரு கும்
பேதிக்கு முற்றார் கேடு பிணக்குண்டு பலன்செய் யாதே.

இ-ள். சூரியதிசையில், வேரியாகிய கேதுபுத்தி, (126) நாள், (4 மீ 6 நாள்) நினைப்புக்குறைவு, (மறதி) தூரதேசப்பிரயாணம், விஷபீடை, விவ காரங்கள், மனைவேறுபடல் உற்றார் கெடுதலும் சண்டைகளுமுண்டாம்.

அருக்கனில் வெள்ளி முந்நூற் றறுபது நாளி லாபம்
திருக்கலி யாணஞ் செல்வஞ் செம்பொன்னு மிகவுமுண்டு
வருத்தமாஞ் சரீர நோயு மலர்க்கணில் வியாதி தோன்றும்
உருக்கிய பிணியுந் தீரு முண்மையாய்க் கரும நன்றே.

இ-ள். சூரியதிசையில், மாரியாகிய, சுக்கிரபுத்தி (360) நாள், (1 வரு) விவாகம், செல்வம், திரவியம் இவைகளுண்டாம், சரீரத்தில் நோயுண்டு, கண்ணில் வியாதியுண்டு, பிணியும்வந்து தணியும் நற்கருமங்க ளுண்டாம்.

சந்திர திசாபுத்தி பலன்.

சந்திரன் றன்னி லேதான் றனக்குநாள் வருமுந்நூறும்
விந்தையாங் கன்னி சேர்வள் வீரமன் னேக்க முண்டாம்
முந்திய காரி யங்க ணினைத்தது முடியு மேலும்
இந்திரன் றனைப்போன் மைந்த னினிதுட னுண்டாங் கண்டீர்.

இ-ள். சந்திரதிசையில், இந்தனாகிய, சந்திரபுத்தி, (300) நாள், (10மீ) பெண்சேர்க்கை, வெற்றி, இராஜபார்வை, நினைத்த காரியங்களை முடித்தல், புத்திரப் பேறுமுண்டாம்—எ-று. 1001

நண்புறு மதியிற் செவ்வாய் நாளிரு நூற்றுப் பத்தும்
பண்பிலா வழக்குச் சண்டை பயித்தியங் களவு நோயாம்
தன்பொருள் சேதங் குட்டந் தழற்பய மேட மாதம்
திண்பெருந் தளையே பூணு மேந்திழைக் கலகஞ் சேரும்.

இ-ள். சந்திரதிசையில் **கந்தனுகிய**, செவ்வாய் புத்தி, (210) நாள், (7மீ) வீண்வழக்கு, சண்டை பயித்தியம், களவுபோதல், நோய், பொருட் சேதம், குட்டநோய், அக்கினிபயம், சித்திரைமாதம், விலங்குபூணல், பெண் கலகங்களு முண்டாம்—எ-று. 1002

அம்புவி தனிலே ராகு வைநூற்று நாற்பதுக்குள்
செம்பொனுஞ் சேத மாகுஞ் செற்றலர் பயம்வி யாதி
நம்பியர் துன்பம் ராச நிஷ்டூர மிகவு மாகும்
வம்பலார் குழலி னுளே மதலையர் பீடை யாமே.

இ-ள். சந்திரதிசையில் குந்தனுகிய ராகுபுத்தி, (540) நாள், (1௵6மீ) அம்புவியில் ஜாதகற்குச் செம்பொன் சேதம், பகைவரால் பயம், வியாதி யால் வேதனை சிநேகத்தால் சங்கடம், ராஜரால் கோபம், புத்திரபீடை இவைகளுண்டாம்—எ-று. 1003

நன்றிசேர் மதியிற் பொன்ன னூரே டெண்ப துக்கும்
வென்றிசேர் குதிரை யானை மேன்பொரு டானி யங்கள்
குன்றெனு முலையாய் சேருங் கொற்றவ னாலே யின்பம்
கன்றுநன் காலி யுண்டாங் காளையைப் பெறுவர் தாமே.

இ-ள். நன்று நன்று எனச் சொல்லுங் குன்றைநிகர்த்த கொங்கையாளே இந்தனுகிய சந்திரதிசையில், புந்தனுகிய குருபுத்தி நாள் (480 க்கு 1௵4மீ) இதில் குதிரை யானை, பொருள், தானியம், இவைசேருதல், இராஜனுல், இன்பமும், கன்று காலிகளுண்டாம், ஆண்புத்திரப் பேறுமுண்டாம்-எ-று.

மதிதனிற் காரி புத்தி மாதம்பத் தொன்ப துக்கும்
பதிகெடுங் கன்று காலி பற்றறு மனதிற் றுக்கம்
விதியுறு மனையா ளோடு மெய்ப்பொருட் சேத மாகும்
சதிபெறு கருத்தோ னாலே கோள்வருஞ் சாற்றி னேன்கேள்.

இ-ள். சொல்லுதற்கரிய எல்லிநாதனுகிய சந்திரதிசையில் வல்லமை பெற்ற மந்தனுகிய சனிபுத்தி, நாள் (570) க்கு (1௵ - 7மீ) இதில் மனை கெடுதலும், கன்றுகாலி கெடுதலும், மனதில் துக்கமும், மனையாளும் பொருளும் சேதமுண்டாகும், வெறுப்பாகப்பேசுங் கறுப்புநிறமுள்ளவர்களால் குற்றங்களுண்டாம்—எ-று. 1005

சந்திரன் றன்னிற் புந்தி தான்பதி னேழு மாதம்
அந்தரக் கலகம் போக மழகிய மக்கட் பேறும்
சிந்தைசே ரிராச யோகஞ் சேர்ந்திடு நினைத்த தெல்லாம்
முந்திய வித்தை லாபம் புரட்டாசி முடிவிற் றூனே.

இ-ள். மதிரனாகிய சந்திரதிசையில் வதிரனாகிய புதன் புத்தி நாள் (510) (1வரு 5மீ) கலகம், போகம், அழகிய புத்திரப்பேறு, ராஜயோகமும், நினைத்த காரியஞ் சித்திவித்தைலாபம், புரட்டாசிமாசம் கடைசியில் இலாபமுமுண்டாம்—எ-று. 1006

நிலவினிற் கேது வேழு மாதமு நெருப்பாற் பீடை
தொலைவிலாச் சரீரம் வீங்குஞ் சுற்றஞ்சா மிடக்கண் ணோயாம்
மலைவது பயமு முண்டா மதிகதண் டனையு முண்டாம்
பலசனம் வெறுப்பு வந்து நாசமாம் பகையுண் டாமே.

இ-ள். இந்துவாகிய சந்திரதிசையில் கெந்தனாகிய கேதுபுத்தி, (210 நாள்) (7 மீ) இதில் நெருப்பால் பீடை சரீரவீக்கம், பந்துக்கள் நஷ்டம், இடதுகண்ணில் நோய், மலைப்பு, பயம், அதிகதண்டனை பலசனங்களால் வெறுப்பு, கெடுதலாகிய பகையுமுண்டாம்—எ-று. 1007

வட்டமா மதியில் வெள்ளி மாதங்க ளிருப துக்கும்
திட்டமாம் வியாதி யுண்டாஞ் சேர்ந்திடு விதனங் காட்டும்
நட்டமா மர்த்த நாச நாளிலே விரோத முற்றூர்
கஷ்டமாஞ் சத்துரு வாலே காரியஞ் சேத மாமே.

இ-ள். ஆலனாகிய சந்திரதிசையில் லோகனாகிய சுக்கிரபுத்தி (600) நாள் (1 வரு 8 மீ) வியாதி, விசனம், பொருள் நஷ்டம், விரோதம், பந்துக்கள் நஷ்டம், சத்துருக்களால், காரியபங்கமுமாம்—எ-று. 1008

வெண்மதி தனிலே வெய்யோன் வேண்டிய வாறு மாதம்
உண்மதி சுரமும் பித்த முருவமுங் குலைந்து வேறாய்
கண்மதி யங்கந் தன்னிற் கடுவலி நோயு முண்டாம்
பண்புறு குணத்தி னாளே பலனுண்டு பலன்செய் யாதே.

இ-ள். மேதகனாகிய சந்திரதிசையில் ஆத்கனாகிய சூரியபுத்தி, (180) நாள், (6 மீ) உட்காய்ச்சல் பித்தம், உருக்குலைதல், கண், அங்கம், இதில் வலியும், நோயும், உண்டாகும், சொற்பபலமு முண்டாம்—எ-று. 1009

செவ்வாய் திசாபுத்தி பலன்.

நன்றிசெய் சேயின் மாதம் நாலுநா ளிருபத் தேழும்
கன்றிடுங் காலி னுய்கள் கடித்திடு மேட மாதம்

வென்றிசேர் மன்ன ரச்சம் வெம்புநோய் நீச ராலே
கொன்றிடுந் தேளின் மாதத் துடன்வெட்டுங் குத்து மாமே.

இ-ள். எவ்வாருயினும் செவ்வாய்திசையில் வையகம்போற்றும் செய்ய வணுகிய செவ்வாய்புத்தி, (147)நாள், 4மீ 27 நாள்)இதில் நாய் காலில்கடித்தல், சித்திரைமாதத்தில், ராஜாராற்பயம், வெதுப்பான நோய், நீசரால், கார்த்திகைமாசத்தில் வெட்டுக்குத்துக்களான, சண்டைகளுண்டாம்—எ-று.

செவ்வாயில் ராகோ ராண்டுஞ் சேர்ந்தநாள் பதினெட்டுக்கும்
ஒவ்வாத விஷத்தாற் றேளாந் திங்களி லுற்றார் நாசம்
இவ்வாறு மேகக் கட்டி யிருந்திடுந் தலம்வே ருகும்
கொவ்வைவாய் மானே குட்டங் குரூரமாம் பீடையாமே.

இ-ள். கொவ்வைக்கனிபோன்ற செவ்வாயையுடைய பெண்ணே? வக்கிரனுகிய செவ்வாய்திசையில், உக்கிரனுகிய, ராகுபுத்தி, (378) நாள், (1வரு, 18 நாள்) கார்த்திகைமாசத்தில், விஷத்தால் பயம், உற்றார் நாசம், மேகக்கட்டி, இடம் மாறுதல் குட்டம், முதலிய, கொரே பீடைகளுண்டாம்-எ-று.

முழங்கிய சேயிற் பொன்னன் முந்நூற்று முப்பத் தாறும்
வழங்கிடு மர்த்த நாசம் மன்னராற் பகையு முண்டு
தழங்கிடுந் திசைதொ டங்கிச் சத்துரு பலரு மாவர்
அழுங்கலிங் நாளிற் செல்வ மரசரா லுறவு மாமே.

இ-ள். சேந்தனுகியசெவ்வாய் திசையில், எந்தனுகிய, குருபுத்தி, (336) நாட்கு (11மீ 6 நாள்) இதில் பொருட்சேதம் அரசராற்பகை, திசையாரம்பமுதல், பகைவர்கள் உண்டாதல், செல்வம் நாசமாம், ஆனல் அரசர்களால் உறவுமுண்டாம்—எ-று. 1012

மருவிய சேயிற் காரிமாதமீ ராறு மொன்றும்
கருதிய நாளொன் பானுங் கலகமாம் வழக்குச் சண்டை
பொருபடை யர்த்த நாசம் பொருந்திய மெய்யிற் குட்டம்
மருவிய நிலையுங் கெட்டு மனத்தினிற் கிலேச மாமே.

இ-ள். கந்தனுகிய செவ்வாய் திசையில், மந்தனுகிய சனிபுத்தி, (399) நாள்•(1 வரு 1 மீ 9 நாள்) இதில் கலகம், வழக்கு சண்டை, பொருள் நஷ்டம், தேகத்திற் குட்டம், மனைக்கேடு, மனதிற்கிலேசமுமுண்டாம்—எ-று.

முந்திய சேயிற் புந்தி முந்நூறே டைம்பத் தேழும்
செந்திரு வரிவை சேர்வள் செல்வமு மிகுதி யாகும்
வந்திடு நோயுந் தீரும் மருவிய கன்னி மாதம்
நிந்தையா மரவு தீண்டும் நீடிய பலன்செய் யாதே.

இ-ள். பூமனாகிய செவ்வாய் திசையில் சாமனாகிய புதன்புத்தி (357) நாள், (11 மா 27 நாள்) இதில் பெண்சேர்க்கை அதிகச்செல்வம், வியாதிதீர் தல், புரட்டாசி மாதம் சர்ப்பந் தீண்டுதலும் உண்டாம், ஆனால் தோஷ மில்லை—எ-று. 1014

செய்யவன் றனிலே கேது சேர்ந்திடு மாதம் நான்கு
உய்யுநா ளிருபத் தேழு முடன்பகை மாத ராலே
மெய்யிலே வியாதி தோன்றும் விஷபய மிகுதி யாகும்
தையலார் பொருட்டா னிந்தை சத்துரு மிகுதி யாமே.

இ-ள். குருதியாகிய செவ்வாய் திசையில் பொருதியாகிய, கேதுபுத்தி, (147) நாள். (4மா 27 நாள் இதில் பெண்களால் பகை, தேகத்தில் வியாதி விஷபயமிகுதி பெண்களால் நிந்தையும், சத்துருக்களுமுண்டாம்—எ-று.

நாடிய சேயிற் சுங்கன் நற்றிங்க ளீரே ழுக்கும்
நீடிய பொருளுஞ் சேரும் நேரிழை வந்து சேர்வள்
தேடிய தெய்வ பூசை செய்வன்மா தவர்கள் சேர்வர்
வாடிய சிரங்கு தேமல் வாகனம் பெறுவர் தாமே.

இ-ள். உதிரனாகிய செவ்வாய் திசையில், சுதிரனாகிய, சுக்கிரபுத்தி, (420) நாள் (1-வரு-2மா) இதில் நீடிய பொருள் சேர்க்கை, கூடிய பெண் சேர்க்கை, நாடியே தெய்வபூஜை செய்தல், தேடியே ஞானி சங்கச்சேர்க் கை, வாடிய சிரங்குதேமல், வாகனம் இவைகளுண்டாம்—எ-று. 1016

அங்கியிற் பரிதி திங்க ணுனுநா ளாறு மாகும்
மங்கிய குட்டங் கண்ட வியாதியா மனதிற் றுக்கம்
செங்கனற் பயமுண் டாகுஞ் சீர்மறை யவராற் றுன்பம்
இங்கித மனையா ளோவு மெவர்களும் பகைவ ராமே.

இ-ள். செய்யவனாகிய செவ்வாய்திசையில் வெய்யவனாகிய சூரியபுத்தி, (126) நாள் (4,மாதம் 6, நாள் இதில் மங்கலான குட்டம், அங்கத்திற்கண்ட நோய், பங்கமான மனோதுக்கம், அங்கியால் அச்சம், அந்தணரால் துன்பம், மனையாளுக்குப் பீடை, எவர்களும், பகையாவார்கள்—எ-று. 1017

நலமுறு சேயி விந்து நாடிய திங்க ளேழும்
பலமுறும் பூமி லாபம் பலித்திடுங் கன்று காலி
இலங்கிய பொன்னு முத்து மின்பமா மாடை யுண்டாம்
தலமது பேதம் பின்பு தளர்ச்சிவந் தெய்துந் தானே.

இ-ள். வேலோனாகிய செவ்வாய்திசையில், ஆலோனாகிய சந்திர புத்தி (210) நாள், (7மா) இதில் பூமிலாபம், கன்றுகாலிபலிதம் தங்கம் பொன் தாளம் ரத்தினம், வஸ்திரம் இவைகளுண்டாம் புதுமனை மாறுதல், பின் தளர்ச்சியுமுண்டாம்—எ-று. 1018

இராகு திசாபுத்தி பலன்.

இராகுவி லிராகு மாதம் நாலெட்டு நாளீ ராறும்
வாகுறு வேந்த ஞசம் மனத்துயர் விஷத்தாற் பீடை
ஏகமா மனையா டுன்ப மிருந்திடுந் தலபே தங்கள்
காகநேர் நிறத்த ஞலே கலகமுங் கோளுண் டாமே.

இ-ள். போககாரகனுகிய இராகு திசையில், யோக காரகனுகிய இராகு புத்தி, (32) மாதம், (12) நாள், (2, வரு-8மீ, 12, நாள் இதில் அரசரால் சங்கடம், மனதில் துக்கம் விஷத்தாற்பீடை, மனையாள்துன்பம், தலபேதங்கள்அதிகமாம், கறுப்புநிறமுள்ள மனிதரால்,கலகமும் கோட்களுமுண்டாம்.

பாரிய விராகின் மன்னன் பரிவுடன் புசிக்குந் திங்கள்
நாரியே யிருபத் தெட்டு நாளுமூ வெட்டி னின்பம்
ஆரிய ராலே செல்வ மரசரான் மகிழ்ச்சி யுண்டாம்
காரிய மெல்லாங் கூடுங் காரிழை மணமுண்டாமே.

இ-ள். ஏகமாயிருந்து இருகூருகிய இராகுதிசையில், யாகத்துக்குரிய மறையவனுகிய குருபுத்தி (28)மீ (24) நாள், (2, வரு, 4மீ 24 நாள் இதில் இன்பம், ஆசிரியரால் செல்வம், அரசரால் மகிழ்ச்சி, காரியாகாரியங்களை கைகூடுதல், காரிழைகல்யாணமு முண்டாம்—எ-று. 1020

வடிவுள விராகிற் காரி மாதமுப் பத்து நான்கும்
படிமிசை நாளா றுக்கும் பகைமனத் திடர்வி யாதி
முடியாத வழக்குச் சண்டை மூண்டிடும் வாத பித்தம்
இடியுறு செங்கை சோதி சதயமு மிகுதி நோயே.

இ-ள். காகநிறமுள்ள இராகுதிசையில், யூகமுள்ள பாதங்கியாகிய, சனி புத்தி, (34) மீ, (6) நாள், (2, வரு, 10மீ, 6, நாள்) இதில் பகை, மனக் கஷ்டம், வியாதி, முடியாத வழக்குள்ள சண்டையுண்டாதல், வாதபித்தமு முண்டாம், திருவாதிரை, சுவாதி, சதைய நட்சத்திரகாலங்களில், நோய், அதிகப்படுமாம்—எ-று. 1021

வந்திடு மிராகிற் புந்தி மாதமுப் பதின்மே ளுட்கள்
முந்திய மூவா றுக்கு முயற்சியாம் வாழ்வுண் டாகும்
சிந்தையிற் றெய்வ பத்தி சிலபொருள் வந்துசேரும்
விந்தையா மழலை சேரும் மேலுறு பகையுண் டாமே.

இ-ள். யோககாரகனுகிய இராகுதிசையில்,வாகுற்றதூதுவனுகிய புதன் புத்தி, (30) மீ(18) நாள், (2, வரு, 6, மீ 18 நாள்) முயற்சியும், வாழ்வு முண்டாம், தெய்வபத்தி, சிலபொருள் வந்துசேரும், புத்திரப்பேருண்டாம் பகையுமுண்டாம் —எ-று. 1022

மருவிய ராகிற் கேது மாதமீ ராறு மிக்க
கருதிய நாண்மூ வாறு கடிவிஷத் தாலே யையம்
தருமக வுக்குப் பீடை சரீரமே வீங்கி நோயாம்
அரிவையர் தமக்குத் துன்ப மரசரா லச்ச மாமே.

இ-ள். எகூணிகாரகனுகிய இராகுதிசையில் லட்சணம்பெற்ற ஞானியாகிய கேதுபுத்தி, (12) மாதம், (18) நாள், (1, வரு-18-நாள்) இதில் விஷத்தால், சந்தேகம், புத்திரபீடை, சரீரம் வீக்க நோயாம் ஸ்திரீகளுக்குத், துன்பமும் ராஜபயமுமுண்டாம்—எ-று. 1023

மன்னிய விராகில் வெள்ளி மாதமோ முப்பத் தாறும்
பொன்னுடன் பொருளுஞ் சேரும் பூஷண மிகுதி யுண்டாம்
மன்னிய மங்கை சேர்வ ளரசரான் மகிழ்ச்சி யுண்டு
பின்னும்வஞ் சனையாற் றுன்பம் பீடைவந் தகன்று போமே.

இ-ள். ஈமனுகிய இராகுதிசையில், காமனுகிய சுக்கிரபுத்தி, (36) மாதம், (3 வரு) இதில் பொன், பொருள், பூஷணம், பெண் முதலியன சேர்க்கை, அரசரால் சந்தோஷம், வஞ்சனையால், துன்பமும், பீடையும் வந்து விலகுமாம்—எ-று. 1024

இராகுவி லிரவி மாதம் பத்துடன் னுண்மூ வெட்டும்
வாகுறு குலத்தாற் சண்டை மன்னராற் றஞ்ச மாகும்
சேகுறு மனையாள் பிள்ளை பெறுதுரு சிலுக தாகும்
ஆகமூ விதத்தா லைய மிருப்பிட மகலுந் தானே.

இ-ள். பொங்கரவாகிய இராகுதிசையில் செங்கதிராகிய சூரியபுத்தி, (318) நாள், (10 மீ 18 நாள்) இதில் குலத்தவர்களால், சண்டை, மன்னராலாதரிப்பு, பெண்டுபிள்ளை சகோதரரால், சிலுகு, இந்த மூவிதத்தால், சந்தேகங்கள், இருப்பிடம் நீங்குதலுமாம்—எ-று. 1025

உதித்திடு மிராகி லிந்தி னுயர்திங்க ளீரோன் பானும்
மதித்திடும் பந்து நாசம் மனைவியாற் பொருளுஞ் சேதம்
கதித்திடு மத்த மோணத் திசையினிற் கால்க ணோவு
விதித்திடுந் தலம்விட் டேகும் விஷத்தினுற் றுன்ப மாமே.

இ-ள். இந்தரியாகிய இராகுதிசையில், அந்தரியாகிய சந்திர புத்தி, (540) நாள், (1வரு, 6மீ) இதில் பந்துக்கள் நாசம் மனைவியால் பொருள் நஷ்டம், அஸ்தம், திருவோணம் நட்சத்திரத்திற் றிசைகளில் கால்நோவு, அந்நியத்தலம் போதல், விஷத்தினுல் துன்பமுண்டாம்—எ-று. 1026

இன்புறு மிராகிற் செவ்வாய் மாதமீ ராறு மிக்க
வன்புறு நாண்மூ வாறு மக்கினி பயங்கி லேசம்

மன்பகை விஷத்தாற் பீடை மருவுசண் டாள ரின்பம்
துன்பமாங் களவு சண்டை துயர்மனை கிலேசந் தானே.

இ-ள். கங்கலனாகிய இராகுதிசையில், மங்கலனாகிய செவ்வாய்புத்தி, (378) நாள், (1வ௵ 18 நாள்) இதில் அக்கினிபயம், கிலேசம், இராஜபகை, விஷபீடை, நீசசிநேகம், துன்பமாகிய களவு, சண்டை, மனைவியால் கிலேச முமாம்—எ-று. 1027

குருதிசா புத்தி பலன்.

மருவிய பொன்னின் மன்னன் மாதமை யைந்துநாளோ
ஒருபதி னெட்டி னுக்கு முயர்பிர தாப மிக்க
பொருளுடன் றானி யங்கள் பூஷணம் பூமி லாபம்
அரிவையர் சேர்த்தி யின்ப மரசரான் மகிழ்ச்சி யாமே.

இ-ள். அரசனாகிய குருதிசையில், பிரகஸ்பதியாகிய குருபுத்தி, (25) மாதம், (18) நாள், (2வ௵ 1மீ 18 நாள்) இதில் பிரதாபம், பொருள், தானி யம், பூஷணம், பூமிலாபம், பெண்சேர்க்கை இன்பம், அரசர்களால், மகிழ்ச் சியுமுண்டாம்—எ-று. 1028

பொருந்திய குருவிற் காரி புகழ்திங்க ளாகும் பத்து
வருந்திய நாளீ ராறும் வாகனம் பொருளும் வாய்க்கும்
திருந்திய கால்கை வாதஞ் சேயிழை தனக்குத் துன்பம்
இருந்திடம் வெற்றி யில்லை யிடர்வந்து நீங்குந் தானே.

இ-ள். தேவமந்திரியாகிய குருதிசையில் சாவகனாகிய சனிபுத்தி, (30) மாசம், (12) நாள், (2வ௵ 6மீ 12 நாள்) இதில் வாகனம் பொருள், உண் டாகும், கால்கைவாதமும், மனைவிக்குத் துன்பமும், இருந்த இடத்தில் வெற்றியின்மையுந் துன்பமும் வந்து விலகுமாம்—எ-று. 1029

மருவிய குருவிற் புந்தி மாதமோ விருபத் தேழும்
அருகுறு நாளோ ராறு மாடலும் பாடல் ஞானம்
வருவது பூசை யாலும் வளமுள மாதர் மைந்தர்
பெருகிடுஞ் செல்வ மன்னாற் பெருமையும் புகழுண் டாமே.

இ-ள். சுருதியாகியகுருதிசையில், நிருதியாகிய,புதன்புத்தி (27)மாதம், (6) நாள் (2வ௵ 3மீ, 6 நாள்) இதில் ஆடல், பாடல் ஞானம், பூஜாகிரியை கள், களத்திரப்பெருமை, செல்வம், அரசரால் கீர்த்தியுமுண்டாம்—எ-று.

பரவிய குருவிற் கேது பதினொரு மதிநா ளாறும்
திரமுள மாதர் கேடு திரியுமே தேச மெங்கும்

ஊாமுள வுற்றூர் மற்றை யுறவினர் பகைய தாகும்
நிரவிய மனேயா டன்ளு னிலேவிட்டுப் போவ தாமே.

இ-ள். பொன்னவனுகிய குருதிசையில் நன்னவனுகிய கேதுபுத்தி, (11) மாதம், (6) நாள், இதில் மாதர்கேடு, தேசசஞ்சாரம், உற்றூர், உறவினர், பகை, மனைவியால், இடமாறுதலுமுண்டாம்—எ-று. 1031

மருவிய குருவில் வெள்ளி மாதமுப் பத்தி ரண்டு
நிரைபரி கட்டு வர்க்கம் நிலேமையாம் பொருளுஞ் சேரும்
பொரையுள கன்னி மாதம் பூமியும் போக முண்டாம்
குரைகடற் சுற்றத் தோடு குணமுடன் வாழ்வர் தாமே.

இ-ள். சீவனுகிய குருதிசையில், காவனுகிய சுக்கிரபுத்தி (32) மாதம், (2வரு, 8மீ) இதில் வரிசைகளான குதிரை வஸ்திரலாபம், நிலேப்பான பொருள் சேர்க்கை, புரட்டாசிமாதத்தில், பூமியும், போகமும், சமுத்திரம் போல் சுற்றத்தாருடன், குணமாகக் கூடி வாழ்தலுமாம்—எ-று. —1032

உலகுறு குருவிற் பானு வொன்பது நாண்மூ வாறும்
நலமுறு மர்த்த லாபம் நாடிய கருமங் கூடும்
பலகுறை நெருப்பிற் காற்றிற் பிணிபலர் பகையும் பீடை
கலகமா மகத்திற் பின்பு காரிய நன்மை யாகும்.

இ-ள். பீதகனுகிய குருதிசையில், ஆதகனுகிய, சூரியபுத்தி (288) நாள், (9மீ, 18 நாள்) இதில் பொருள், லாபம், நினேத்தகாரியங் கைகூடுதல், நெருப்பு காற்று, இவைகளாற் பிணி, பலபேர்களின், பகை, பீடை, வீட்டிற் சச்சரவு, பின்பு காரியநன்மையுமாம்—எ-று. 1033

நின்றதோர் குருவி லிந்து நேர்பதி ஞறுமாதம்
வென்றிநற் சிவிகை முத்து வெண்குடை பணியு முண்டாம்
அன்றநன் மனேயாண் மைந்த ரறிவுளோர் பொருளுஞ் சேரும்
என்றுநற் கரும மெல்லாந் தெய்வத்தா லெய்துந் தானே.

இ-ள். சொக்கிரனுகிய குருதிசையில், பக்கிரனுகிய சந்திரபுத்தி (480) நாள், (1வரு, 4 மாதம்) இதில் பல்லக்கு, வெண் முத்துக்குடை, ஆபரணமுண்டாம், மனைவிமைந்தர் அறிவுள்ளவர்கள் இவர்களால், பொருள் வரவு, உத்தமக்கிரியைகளெல்லாம் தெய்வத்தால்,நிறைவேறுதல்இவைகளுண்டாம்.

பாங்குள பொன்னிற் செவ்வாய் பதினென்று மதிநா ளாறு
தீங்குறு வினைக ளுண்டாந் திருடராற் றழலாற் றுன்பம்
ஆங்குறு முற்றூர் சேத மல்லது பிணியு முண்டாம்
நீங்கியே நிலேவிட் டேகும் நினேத்தது முடிந்தி டாதே.

இ-ள். புங்கலனாகிய குருதிசையில், மங்கலனாகிய செவ்வாய்புத்தி (336) நாள், (11மீ 6 நாள்) குற்றமாகிய வினைகளுண்டாம், திருடர்களாலும், அக்கினியாலும் துன்பம் உற்றார்களுக்குக்கெடுதி, பிணியுண்டாகுதல், இருப்பிடம் பெயர்தல், வினைத்தகாரியம் முடியாமையுமாம்—எ-று. 1035

மாதங்கக் குருவில் ராகு மாதமோ ரிருபத் தெட்டும்
ஓதிய நாண்மூ வெட்டு முடன்பகை சிறுவ ழக்குச்
சேதமாம் பொருள்வி ரோதஞ் சேயிழை தனக்குத் துன்பஞ்
சூதுகன் மிகவுண் டாகுந் தொடர்ந்திடுஞ் செல்வம் போமே.

இ-ள். பண்ணவனாகிய குருதிசையில் திண்ணவனாகிய ராகுபுத்தி, (28) மாதம் (24) நாள், (2வரு 4மீ 24 நாள்) இதில் பகை, சொற்ப வழக்குகள், பொருட்சேதம், விரோதம், மனைவிக்குத்துன்பம், வஞ்சனைகள், செல்வக்குறைவுமுண்டாம்—எ-று. 1036

சனிதிசா புத்தி பலன்.

காரியிற் காரி மாதங் கருதிய முப்பத் தாறும்
வீரிய மூன்று நாளும் மெய்யினில் வியாதி தோன்றும்
சீரிய வடிமை மைந்தர் செல்வமுங் குறையும் பின்னும்
கூரிய வுறவு தன்னாற் கொடும்பகை தானுண் டாமே.

இ-ள். அந்தகனாகிய சனிதிசையில், சந்திலாகிய சனிபுத்தி (36) மாசம், (3) நாள், (3வரு 3 நாள் இதில் சரீரத்தில்நோய், அடிமை, புத்திரர், செல்வக்குறைவு பந்துக்களினாற் பெரும்பகையுமுண்டாம்—எ-று. 1037

பங்கினிற் புந்தி மாதம் நாலெட்டு நாளொன் பானும்
இங்கித கல்வி ஞான மெழிலுடைப் பொருளுஞ் செல்வம்
மங்கையர் மருவிக் கூடும் மைந்தருஞ் சுற்ற முண்டாம்
பொங்கமாய் மன்ன ராலே புகழ்ந்துவாழ்ந் திருப்பர் தாமே.

இ-ள். நீலனாகிய சனிதிசையில், மாலனாகிய, புதன்புத்தி (32) மாதம், (9) நாள், (2, வரு.8-மீ-9-நாள்) இதில் இங்கிதமான, கல்விஞானம், பொருள், செல்வம், மங்கையர் சேர்க்கை, புத்திராள், பந்துக்கள், உண்டாதல், அரசர்களால், புகழ்ந்து வாழ்தலுமுண்டாம்—எ-று- 1038

படிமிசை சனியிற் கேது பதின் மூன்று மதிநா ளொன்பான்
கடியதோர் வலக்கால் வாதங் காணுமே பித்த ரோகம்
மிடியது மைந்த னாலே விஷபய மத்த நாசம்
கொடியிடை யவராற் றுன்பங் கோளினாற் கலக மாமே.

இ-ள். முரணியாகிய சனிதிசையில், சிரணியாகிய கேதுபுத்தி, (399) நாள், (1வரு 1மா 9 நாள்) வலதுபாதம், வாதம், மெத்தப் பித்தமயக்க ரோகம், பிள்ளையினுலே சள்ளைப்படுதல் தரித்திரம் விஷபயம், பொருளழிவு பெண்களால் துன்பம், கோள்வார்த்தைகளால், கலகமுமுண்டாகும்—எ-று.

முனிவுறு சனியில் வெள்ளி மாதமோ முப்பத் தெட்டு
இனியதோர் பணிநல் லார்த மின்பமும் வெற்றி யுண்டாம்
வனிதையர் சேர்வர் லாபம் மக்களுஞ் சுற்ற முண்டாம்
தனியொரு பகையு முண்டாந் தன்னையும் வெல்ல லாமே.

இ-ள். முனிவுறும் முடவனுகிய சனிதிசையில், வனிதையர்க்கேற்ற வல்லமையுள்ள, விரணி யென்னும், சுக்கிரபுத்தி (38) மாதம், (3வரு 2மா) இதில் நல்ல ஆபரணம், பெண்கள் சுகம்வெற்றி, விவாஹம், லாபம், மக்கள் சுற்றம், உண்டாதல், தனியான பகையுமுண்டு அப்பகையையும் வெல்லலுமாம்—எ-று. 1040

பரவிய சனியிற் பானு பதினொன்று நாளீ ராறும்
உரமுள ரத்த மேக முதரத்திற் சூலே கண்ணோய்
திரமுள மனையாண் மக்கள் சிறுத்திடு நோயி னுலே
கரமது வெரிவாங் காலுங் கடுவலி வாத மாமே.

இ-ள். சோந்தனுகிய சனிதிசையில், வேந்தனுகிய சூரியபுத்தி, (342) நாள், (11மா, 12 நாள்) இதில் ரத்தமேகம், வயிற்றிற்சூலே, கண்ணோவு, மனைவி, மக்கள் நோயினுல்மெலிவு, கைகாலெரிவு, வலிப்புவாதமுமுண்டாம்.

மதமுறு சனியி லிந்து மாதம்பத் தொன்ப துக்கும்
விதமதாங் கலகம் பீடை வீட்டினில் வழக்குச் சண்டை
பதனமாம் பணிபூ ணாரம் பல்வளம் பொருளுஞ் சேதம்
அதனமாந் தலங்கள் விட்டே யவதியான் மீள்வர் தாமே.

இ-ள். முதுமகனுகிய சனிதிசையில் விதுவென்னும், சந்திரபுத்தி, (19) மாதம், (1வரு 7மா) பலவிதகலகம், பீடை, வீட்டுவழக்கு, சண்டை, ஆபரணம், பலசெல்வம், பொருள், இவைகள் சேதம், சங்கடத்தால் தலமாறுதலுமாம்—எ-று. 1042

பலனிலாச் சனியிற் செவ்வாய் பதின்மூன்று நாளொன் பானும்
குலங்களி லீன மிக்க கொடும்பகை பழியுங் காட்டும்
அலேந்திடுந் தேச மெங்கு மனைவரும் விரோத மாவர்
தலங்களிற் பொன்னுற் சோரந் தலம்விட்டுப் பிரியுந்தானே.

இ-ள். எண்ணவனுகிய சனிதிசையில், மண்ணவனுகிய, செவ்வாய் புத்தி, (13) மாதம், (9) நாள், (1வரு 1மா 9 நாள்) இதில் குலங்களில் ஈனம்,

கொடுமையானபகை, பழிச்சொல், தேசசஞ்சாரம், யாவரும்பகையாதல், பூமி, பொன், சோரம், இடமாறுதலுமாம்—எ-று. 1043

முன்னமே சனியில் ராகு முப்பது மதிநா ளாறும்
சொர்ன்னமுஞ் சேத மாகும் விஷமது தாத்தித் தீண்டும்
இன்னமுஞ் சரீரமெங்கு மேறுத வியாதி யுண்டாம்
அன்னியர் பகைய தாகு மல்லலு மிகுதி யாமே.

இ-ள். மந்தரியாகிய சனிதிசையில், இந்தரியாகிய ராகுபுத்தி (34) மாதம், (6) நாள், (2, வரு 10 மீ 6நாள்) இதில் பொன்பொருட்சேதம், சர்ப்பம் தறத்தித் தீண்டுதல், சரீரமெங்கும் பொல்லாவியாதி, அந்நியர் பகை, சங்கடம், அதிகமுமாம்—எ-று. 1044

முன்புறு சனியின் மன்னன் முப்பது நாளீ ராறும்
அன்புறு மடியார் சேர்வ ராடையா பரண முண்டாம்
இன்பமா மரச ராலே யெண்ணிய கரும மாகும்
மின்கொடி யுடனே சுற்றம் மிகுதியாம் பலனுண் டாமே.

இ-ள். பேதகனுகிய சனிதிசையில் பீதகனுகிய குருபுத்தி, (30) மாசம், (12) நாள், (2, வரு 6 மீ 12நாள்) இதில் அடிமைகள் சேர்க்கை, ஆடை ஆபரணமுண்டாதல், இன்பமும், அரசால், எண்ணிய காரியமுடிதல், பெண்ணுண்டாதல், பந்துக்கள், அதிகமும், உண்டாம்—எ-று. 1045

புததிசா புத்தி பலன்.

வலம்புரி புதனிற் புந்தி மாதமோ ரிருபத் தெட்டும்
துலங்குநாண் மூவொன் பானுஞ் சுற்றமுந் துணையு முண்டாம்
பலந்தரு மர்த்த லாபம் பாக்கிய மிகவு முண்டு
நலம்பெறு ஞானங் கல்வி நாடிய கரும மாமே.

இ-ள். மதிமகனுகிய புதன்திசையில், வதிரனுகிய புதன்புத்தி (28) மாதம், (27) நாள், (2வரு 4மீ 27 நாள்) இதில் பந்துக்கள் சகாயம், திரவிய லாபம், பாக்கியமுண்டாதல், நன்மைத்தாத்தக்கசெம்மையான அறிவுகல்வி, நினைத்தகாரிய முடிதலுமாம்—எ-று. 1046

பரிந்திடும் புதனிற் கேது பதினொரு மாதம் பின்னும்
வருந்துநாண் மூவொன் பானு மாதலந் தனைவிட் டேகும்
பொருந்திடும் வியாதி பீடை பொருட்சேத முற்றார் கேடு
மருந்திடு குணத்தாற் றுன்பம் மனமது கிலேசந் தானே.

இ-ள். வதிரனுகிய புதன்திசையில், எதிரனுகிய, கேதுபுத்தி, (357) நாள், (11மீ 27 நாள்) இதில் இடமாறுதல், வியாதி, பீடை, பொருட்சேதம், உற்றார் நாசம் மருந்திட்டால் துன்பம், மனக்கிலேசமுமாம்—எ-று.

வாசமாம் புதனில் வெள்ளி மாதமுப் பதுமே ளுன்கு
நேசமா மக்கட் பேறு நேரிழை யுடனே யின்பம்
பாசமாஞ் சுற்றம் வித்தை பலவணி மற்று முண்டாம்
தேசமே போனுர் மீள்வர் சேயிழை மணமு மாமே.

இ-ள். சாமனுகிய புதன் திசையில், காமனுகிய, சுக்கிரபுத்தி (34) மாதம், (2வரு 10மீ) இதில் நல்லசிநேகம், மக்கட்செல்வம், மனையாளுடனின்பம், பாசமான சுற்றங்கள், வித்தை, பலஆபரணங்கள், உண்டாதல், தேசாந்திரம் போனவர்கள், திரும்பிவருதல், விவாகமுமுண்டாம்—எ-று.

நேருற்ற புதனிற் பானு நீடிய மாதம் பத்தும்
சீருற்ற நாட்க ளாறுஞ் செந்தழற் பயங்கி லேசம்
பாருற்ற மனையாள் பீடை பகைவரு மிடையூ றுண்டாம்
வாருற்ற கொங்கை யாளே மன்னராற் றுன்ப மாமே.

இ-ள். வாரிட்டு விம்மிப்புடைத்தெழுந்த கொங்கையாளே கேட்பாயாக தங்கலனுகிய புதன்திசையில், பிங்கலனுகிய, சூரியபுத்தி (306) நாள், (10மீ 6 நாள்) இதில் அக்கினிபயம், கிலேசம் மனையாள் பீடை) பகைவர்களால், இடையூறுண்டாம், அரசரால் துன்பமுமுண்டாம்—எ-று. 1049

வாரணப் புதனிற் சோமன் மாதமே பதினே ழுக்கும்
பூரண மான சோகை கண்டபின் புறங்கால் வீங்கும்
காரணக் கலகம் பெண்ணுற் கனபீடை சிலுகு முண்டு
தாரணி தன்னின் மாந்தர் தமக்கெலாம் பகைய தாமே.

இ-ள். மாலோனுகியபுதன்திசையில் ஆலோனுகிய, சந்திரபுத்தி,(510) நாள், (1வரு 5மீ) இதில் சோகை, புறங்கால்வீக்கம், கலகம், பெண்ணுற்கனபீடை, சிலுகு, பூமியிலுள்ளவர்களுக்கெல்லாம் பகையுமாம்—எ-று. 1060

பன்னிய புதனிற் செவ்வாய் பதினொன்று நாண்மூ வொன்பான்
தன்னிலே பித்த ரோகங் காமாலை தலைநோக் காடு
அன்னியர் பகைவி ரோதம் ஆயுதத் தாலே பீடை
முன்னொரு பகையு முண்டு முடியவே கலகந் தானே.

இ-ள். சக்கிரனுகிய புதன்திசையில், வக்கிரனுகிய செவ்வாய் புத்தி, (357) நாள், (11 மாதம், 27 நாள்) இதில் பித்தரோகம், காமாலை, தலைநோவு, அந்நியர்பகை, விரோதம், ஆயுதத்தாற்பீடை, பழம்பகை, உண்டாகி, கலகமுமுண்டாம்—எ-று. 1051

நற்புதன் றனிலே ராகு முப்பது நாண்மூ வாறும்
நிற்பதோர் நிலைவிட் டேகும் நீசரால் விஷத்தா லயம்

மற்பொரு பூச லுண்டாம் மனத்திட ரர்த்த வானி
சொற்பனந் தலைநோய் பித்தஞ் சூட்சமா மன்னனந் தானே.

இ-ள். நிருதியாகிய புதன்திசையில், கருதியாகிய இராகு புத்தி (30) மாதம், (18) நாள் (2௵ 6 மாதம் 18 நாள்) இதில் இருந்த இடம் விட்டு மாறுதல், நீசர்களாலும், விஷத்தாலும், பயம், சண்டை, மனதில் துயரம், பொருள்நாசம், சொற்பனவஸ்தை, தலைநோவு பித்தரோகம், ஆகாரக்குறைவுமாம்—எ-று. 1052

புந்தியிற் பொன்னன் மாதம் புகழ்பெற விருபத் தேழும்
வந்தநா ளாறு மின்பம் மன்னரான் மகிழ்ச்சி யாகும்
சிந்தையிற் கிலேச மில்லை சிறுவருஞ் சுற்ற முண்டாம்
பைந்தொடி மணம தாகும் பாக்கிய மிகவுண் டாமே.

இ-ள். தங்கலனாகிய புதன்திசையில், புங்கலனாகிய, குருபுத்தி, (27) மாதம், (6)நாள், 2௵ 3௴ 6நாள்) இதில் இன்பமும், மன்னரால், மகிழ்ச்சியும், மனச்சந்தோஷமும், பிள்ளைகள், சுற்றம், இவைகளுண்டாம், பெண்ணுக்கு விவாகம், நடத்தல் பாக்கியமு முண்டாம்—எ-று. 1053

நன்றிசேர் புதனிற் காரி நாலெட்டு மதிநா ளொன்பான்
இன்றிடு நன்மை நாளு மெதிர்த்திடும் பகையு முண்டாம்
சென்றிடும் வலக்கா லேயாந் திசையுத்தி ராடந் துன்பம்
மன்றிடு முற்றார் கேடு மனமதிற் கிலேச மாமே.

இ-ள். பச்சையாகிய புதன்திசையில், முச்சையாகிய சனிபுத்தி, (32) மாதம், (9) நாள், (2௵ 8 ௴ 9 நாள்) இதில் நன்மைக்குறைவு, எதிர்த்த பகை, வலதுகாலில் நோய், உத்திராட நட்சத்திரதிசையில், துன்பம், உற்றாருக்குக் கஷ்டம், மனக்கிலேசமுமுண்டாம்—எ-று. 1054

கேதுதிசா புத்தி பலன்.

ஈண்டிய கேதிற் கேது நாலுநா ளிருபத் தேழும்
வேண்டிய மனையாண் மக்கட் சகோதர வெறுப் புண்டாகும்
பூண்டிடும் விலங்கு காலில் புரட்டாதி யுள்ளே தேறும்
ஆண்டது வருஷத் தார்க்குத் திசையது வவதி தானே.

இ-ள். எதிரனாகிய கேதுதிசையில் கதிருணியாகிய கேதுபுத்தி (147) நாள், (4, ௴ 27 நாள்) இதில் மனைவிமக்கள் சகோதரர்பேரில் வெறுப்பு, விலங்கு காலிற்பூணுதல், பூரட்டாதி நட்சத்திர திசையுடையவருக்கு இக்கேது திசைகஷ்டமாம்—எ-று. 1055

பூரிய கேதில் வெள்ளி புத்தியீ ரேழு மாதம்
பாரியு மக்கட் பேரு பலித்திடுங் கன்று காலி

காரிய மெல்லாங் கூடுங் கடைசியிற் பீடையுண்டு
வீரிய மனையா ளோயா மீளவு மகன்று போமே.

இ-ள். கேதகனுகிய கேதுதிசையில் சீதகனுகிய சுக்கிரபுத்தி (420) நாள், (1, வரு 2 மீ) இதில் மனை, மக்கள், உண்டாம், கன்றுகாலு விருத்தி, காரியங் கைகூடுதல், கடைசியில் பீடையுண்டு, மனைவிக்கு நோய்வந்து விலகுமாம்—எ-று. 1056

அந்தமாங் கேதிற் பானு நாற்றிங்க ளாறு நாளும்
சிந்திடும் பூமி விட்டுத் தேசம்போய் வருவன் பின்பு
சுந்தரமேனி யெங்குஞ் சுரந்தலை நோயுண்டாகும்
மந்தர முலையி னுளே மனமதிற் கிலேசந் தானே.

இ-ள். மந்தரமலைக்கு நிகரான சுந்தரமுள்ள தனத்தாளே கேட்பாயாக, பாதியாகிய கேதுதிசையில், சோதியாகிய சூரியபுத்தி, (126) நாள், 4 மீ 6 நாள், இதில் சுயதேசம் விட்டு, அயல் தேசம் சென்றுவருதல், தேகத்தில், சுரம், தலைநோவு, மனதிற் கிலேசங்களுமுண்டாம்—எ-று. 1057

சாதக கேதி லிந்து தன்புத்தி யேழு மாதம்
மாதரால் வழக்குச் சண்டை மைந்தர்க்குப் பீடை யுண்டாம்
போதவே கன்று காலி பொன்னுமா பரணமுண்டாம்
சீதள முகத்தி னுளே தீங்குவந் தகன்று போமே.

இ-ள். கண்டவர் விண்டுரைக்கலாகா, முண்டகமுகத்தையுடைய ஒண்டொடியே கேட்பாயாக பாதியாகிய கேதுதிசையில், தேதியாகிய சந்திரபுத்தி. (210) நாள் (7 மீ) இதில் பெண்களால் வழக்குச்சண்டை, புத்திரபீடையுண்டு, கன்றுகாலி ஆபரணமுண்டாம், நஷ்டம்வந்து விலகுமாம்.

கடையர வதனிற் செவ்வாய் கலந்திடு மாதம் நாலு
இடையுறு மிருபா னேழ்நா ளிடர்பய மர்த்த வானி
படையுறு வழக்குச் சண்டை பலபல விரோத மாகும்
தடையுறும் பெண்ணுற் கேடு தழல்பய மிகவுண்டாமே.

இ-ள். மூலனுகிய கேதுதிசையில், வேலனுகிய செவ்வாய்புத்தி (147) நாள், (4 மீ 27 நாள் இதில் தடுமாறிவிழுதலான பயம், பொருட்சேதம், அடிபிடிகலகம், வழக்கு பற்பல, விரோதங்கள், பெண்ணுல், கெடுதலும் அக்கினி பயமுமுண்டாம்—எ-று. 1056

கேதுவி லிராகு புத்தி கேள்பன்னி ரண்டு மாதம்
மீதியீ ரொன்பா நாளும் விஷபயம் வந்துதீரும்
மாதர்க டமக்குப்பீடை மன்னவ னுச மாவான்
போதவே யர்த்த நாசம் புகழ்நிலை நின்றி டாதே.

இ-ள். துக்கிரனாகிய கேதுதிசையில், உக்கிரனாகிய, இராகு புத்தி (378) நாள், (1 வரு 18 நாள்) இதில் விஷத்தாற்பயம், பெண்களுக்குப் பீடை, அரசன்கேடு, பொருட்சேதம் புகழ்நிலையாது, (அவமானமுண்டாம்)-எ-று.

பரிவுள கேது வுக்குள் பாயகுல்ள மன்னன் புத்தி
ஒருபதி னொன்று நாட்க ளோராறு மர்த்த லாபம்
மருவிய மன்னர் சேர்த்தி விஷபயம் வந்து தீரும்
திருவென மனையாள் சேர்வள் செல்வமு மிகுதி யாமே.

இ-ள். வெங்கயனாகிய கேதுதிசையில் புங்கயனாகிய, குருபுத்தி (336) நாள், (11மீ 6 நாள்) இதில் திரவியலாபம், ராஜசேர்க்கை, விஷபயம், வந்து விலகும், மனைவிசேர்க்கை செல்வமு மிகவுமுண்டாம்—எ-று. 1061

சதியுறு கேது வுக்குட் சனிபுத்தி யான மாதம்
பதின்மூன்று நாளொன் பானும் பலபொருட் சேத மாகும்
அதிதலம் பேத மாகு மங்கத்திற் சொறி சிரங்கு
மதிமுகத் தரிவை பீடை மனமது கிலேச மாமே.

இ-ள். பொருதியாகிய கேதுதிசையில் மிருதியாகிய, சனிபுத்தி, (399) நாள், (1வரு 1மாதம் 9நாள்) இதில் பலவகையானபொருட்சேதம், தலபேதம், தேகத்திற் சொறிசிரங்கு, மனைவி பீடை, மனக்கிலேசம், உண்டாம்.

குலமுள கேதிற் புந்தி குறித்திடும் புத்தி மாதம்
நலமுறு பத்து மொன்று நாளிரு பத்தே ழுக்கும்
தலமது விட்டுப் போகுந் தமரினாற் பயமுண்டாகும்
நிலைமையாய்ப் புத்திர சோபம் நினைத்தது முடிந்திடாதே.

இ-ள். நோமனாகிய கேதுதிசையில், சாமனாகிய, புதன் புத்தி (357) நாள், (11 மாதம் 27நாள்) தலம்விட்டுப்போதல் சுற்றத்தாரால்பயம், புத்திரரால் சோபம், நினைத்த காரியம் முடியாது—எ-று. 1063

சுக்கிர திசாபுத்தி பலன்.

வண்மையாம் புகரில் வெள்ளி மாதங்க ளாறப் துக்கும்
உண்மையாம் பணிகண் முத்து முயர்குடை புரவி யானை
தண்மையாம் புன்மை நீங்கி நாளிலே தனமுஞ் சேரும்
எண்மையங் கிசத்திற் றுக்க மெய்துமைப் பசியிற்றுனே.

இ-ள். ஒள்ளியோனாகிய சுக்கிரதிசையில், வெள்ளியோனாகிய சுக்கிர புத்தி, (1200) நாள், (3 வரு 4 மீ) இதில் ஆபரணங்கள், முத்துக்குடை, குதிரை, யானை, பெருந்தகைமை பொருட்சேர்க்கை, ஐப்பசிமாதங்களில் களத்திரவழித்துக்கங்களுண்டாம்—எ-று. 1064

சிறந்திடும் புகரிற் பானு திங்களீ ராறுந் துன்பம்
குறைந்திடுந் தனமும் நாளிற் கொடும்பகை யரச ராலே
பறந்திடு மனையாண் மக்கள் பலருடன் வழக்கா மென்க
உறைந்திடு தெய்வ முள்ளு முறவது பகைய தாமே.

இ-ள். பிருதியாகிய சுக்கிரதிசையில், பருதியாகிய, சூரியபுத்தி, (360) நாள், (1 ௵) இதில்துன்பம் தனக்குறைவு, அரசாற் கொடுமையான பகை, மனையாள், மக்களுடன், வழக்கு தெய்வங்கள், சுற்றத்தார்களுக்கும் பகையுமாம்—எ-று. 1065

மருவிய புகரிற் சோமன் மாதமோ ரிருப தூக்கும்
கருதிய கரும நாளில் வந்துகை கூடு மென்க
அருகுறு மனையா ளாலே யடர்பகை வந்து தீரும்
சருவிய வின்ப மாதர் தம்மொடு மிணக்க மாமே.

இ-ள். நங்கயனாகிய சுக்கிரதிசையில் சங்கயனாகிய சந்திர புத்தி (600) நாள், (1 ௵ 8 ௴) இதில் நினைத்த காரியம் கைகூடும், மனைவியாலே பகை வந்து விலகும் இன்பமும், மாதரிணக்கமு முண்டாம்—எ-று. 1066

புண்ணிய புகரிற் செவ்வாய் புகறிங்க ளீரே ழுக்கும்
நண்ணிய பூமி யுண்டாம் நாரியாற் கரும நாசம்
எண்ணிய தேவர் சேவை யிருவராற் பகையுண் டென்னும்
கண்ணினோய் மெய்யிற் குட்டங் கண்டது தீருந் தானே.

இ-ள். காமனாகிய சுக்கிரதிசையில், பூமனாகிய செவ்வாய்புத்தி (420) நாள், (1௵ 2மாதம்) இதில் நல்லபூமியுண்டாதல் பெண்களாற் காரியக் கெடுதி, ஆலய தெரிசனம், (ஸ்திரீ பூமான்கள்) இருவருக்கும் பகை, கண்ணில்நோய், தேகத்திற் குட்டங்கண்டு விலகும்—எ-று. 1067

திருந்திய புகரில் ராகு திங்களோர் முப்பத் தாறும்
பொருந்திய முனியைப் போலே பூமியிற் றவசு செய்வன்
வருந்தியே மைந்த ராலே வருங்கல கங்கண் மெத்த
அருந்திய மருந்தி னாலே விஷமதா யலைவன் றானே.

இ-ள். காந்தனாகிய சுக்கிரதிசையில் கூந்தனாகிய, இராகுபுத்தி (1080) நாள், (3௵) இதில் முனியைப்போல் தனியாய்த் தபசுசெய்தல், கனிவாக இருந்த மைந்தரால் கலகங்களுண்டாம், இனிவாயருந்திய மருந்து அனியாய விஷமதாயலைபவனுமாம்—எ-று. 1068

முன்புறு புகரின் மன்னன் முப்பத்தி ரண்டு மாதம்
இன்புறு தானி யங்க ளெய்துமே யர்த்த லாபம்

அன்புறு மறையோ ராலே யதிசய மிகவு முண்டாம்
மன்புகழ் தோணி விட்டத் திசையினில் வருத்த மாமே.

இ-ள். உரிச்சிகனுகிய சுக்கிரதிசையில் புரிச்சிகனுகிய வியாழபுத்தி (960 நாள் (2வூ 8 மாதம்) இதில் தானியங்கிடைக்கும், பொருள் லாபம், மறையவர்களால், விசேடம், ரேவதி, அவிட்டத்திசையில் சங்கடமாம்—எ-று.

சாலவே வெள்ளி தன்னிற் சனிமாதம் முப்பத் தெட்டும்
மூலமாம் நோயி னலே முயங்கியே மீளுங் கைகால்
வேலெனும் விழியாய் துன்ப மெய்யினில் ரோக முண்டு
ஆலமாம் விஷம்போ லன்ன மரோசிக மாகுந் தானே.

இ-ள். சுந்தரியாகிய சுக்கிரதிசையில், மந்தர்யாகிய சனிபுத்தி (1140) நாள் (3வூ 2மாதம்) இதில் மூலநோய் கைகால் முடக்கப்பட்டு மீளுதல், துன்பங்கள் தேகத்தில் ரோகம், அன்னமரோசிப்பும் உண்டாம்—எ-று.

வெள்ளியிற் புந்தி மாதம் விரும்புமுப் பத்து நான்கும்
தெள்ளிய மனையாண் மக்கள் சீருடன் பொருளுண் டாகும்
வள்ளிய கல்வி ஞானம் வாக்கினுற் பாட லாகும்
நள்ளிய சிவப்பனலே நன்மைகள் பலவுண் டாமே.

இ-ள். சுக்கிரதிசையில், சக்கிரனுகிய புதன்புத்தி (1200) நாள் (2வூ 10மாதம்) இதில் மனைவிமக்கள் செல்வம் பொருள் இவைகளுண்டாம், கல்விஞானம், சங்கீதம்பாடல், சிவப்புநிறமுடையவர்களால் பல நன்மைகளுண்டாகும்—எ-று. 1071

இட்டமாம் வெள்ளி தன்னிற் கேதுவீ ரேழு மாதம்
துட்டமா மிருகத் தாலே துன்பமு மிகவுண் டாகும்
அட்டமா மனையா டன்னி னனுபோகத் தாலே நோயாம்
திட்டமாய் விஷந்தான் வீட்டிற் றீண்டியே மீளுந் தானே.

இ-ள். சுக்கனுகிய சுக்கிரதிசையில், துக்கனுகிய கேதுபுத்தி (420) நாள் (1வூ 2மாதம்) இதில் துட்டமிருகத்தால் துன்பம், மனையாளனுபோகத்தால் தணியாத நோயாம் வீட்டில் விஷந்தீண்டி மீளுதலுமுண்டாம்—எ-று.

புத்தியின் பலன்க டம்மைப் பொதுமையா யுரைத்தா ரேனும்
சித்தமாய்க் கோள்க ணின்ற திரிகோணங் கேந்திர முச்சம்
தத்திய வியமா றெட்டுப் பகைநீசந் தான்சே ரம்சம்
ஒத்தநல் லாதி பத்தியம் வர்க்கமோ டவஸ்தை வக்கிரம்.

இ-ள். புத்தியின் விவரங்களைப் பிரித்துப்பொதுப் பலனுகச்சொன்னூர் ஆயினும், கிரகங்கள்நின்ற, (1) (5) (9) ஆனதிரிகோணம், (1) (4) (7) (10)

ஆனகேந்திரம், (2) (5) (8) (11) பணபரம், (3) (6) (9) (12) ஆபோக்கி லீயம், உச்சம், (அதியுச்சம்) (6) (8) (12) ஆமிடங்கள், மறைவு, பகைக்ஷேத் திரம், நீசம், (அதிநீசம்) சேர்ந்த அம்சங்கள், (நவாங்கிஷம் ஓராங்கிஷம், திரேக்காணம் சத்தமாங்கிஷம் தசாங்கிஷம், சோடசாங்கிஷம், சஷ்டியாங் கிஷம்) ஆதிபத்தியம், வர்க்கோத்தமங்கள், அவஸ்தை வக்கிரம்—எ-று.

பாவத்திற் கண்ட யோக மவயோகந் தன்னைப் பார்த்துப்
பூவரு மானே நல்ல பலன்களைப் புகல வேண்டும்
தாவறு சித்திர முட்சித் திரத்திற்கும் புத்தி போல
ஓவறப் பலன்கள் சொல்வ ருயர்மதி வல்லோர் தாமே.

இ-ள். தேவரும், மற்றமூவரும், கற்றயாவருங்கண்டு மயங்கும் பூவரு மானே கேட்பாயாக? பாவத்திற் கண்டயோகம், அவயோகம், இவைகளைப் பார்த்துப்பலன் சொல்லுமிடத்து, சித்திரம், உட்சித்திரம், புத்திபிரித்தது போற்பிரித்து, குற்ற மறப்பலன்களை, உயர்ந்த மதியூகிகள் கவனித்துச் சொல்லுவார்கள்—எ-று. 1074

மகாதிசைப்பல னறிய.

வெண்பா.

சீரார் திசைபலனைத் தேர்ந்துபின்சொல் வெண்பாவாய்
பாரோர்முன் னுபேனும் பாடவே—மோராருங்
கையா னளித்தமலர்க் கையானைக் காய்ந்தமழுக்
கையான் சுதன்முன்னோன் காப்பு.

இ-ள். பூவிலுள்ளோர் முன்னே, அடியேன் சிறப்புற்ற திசைப்பலன் களை வெண்பாவாகப் பாடுவதற்கு பஞ்சபாணத்தையுடைய மன்மதனை எரித்த, மழுக்கையினையுடைய பரமனது புத்திரனும், முதல்வனான வனுமாகிய விநாயகமூர்த்தி விக்கினமின்றி காப்பாற்றுவாராக—எ-று. 1075

சூரியமகாதிசைப்பலன்.

அக்கினியால் பீடை யமைவிருத்தி பொன்சேதம்
மிக்கபயஞ் சத்துருவால் மேவுபகை—யொக்கவே
கண்ணோய் சிரரோகங் காதற் பிதாமிருத்தி
யெண்ணு மிரவிதிசைக் கே.

இ-ள். இக்குவலயத்தோர்க்கு முக்கியமாகிய சூரியதிசையின்பலனாவது, அக்கினியாற்பீடை, அம்மைவார்த்தல் தக்க பொன்சேதம், சத்துருவாற் பயம், பகை கண்களில் நோய், சிரசுநோய், பிதாமாரகமும் உண்டாம்-எ-று.

சந்திரமகா திசைப் பலன்.

ஆரோக்கி யங்களுநல் லர்த்தலா பம்பிரியஞ்
சீரார் புவிலாபஞ் செல்வருண்டாம்—பாராளப்
பாக்கியமு மின்பம் பரவுவிவா கங்களுடன்
றேக்கு சசியின் றிசை.

இ-ள். இந்த மண்டலத்தோர் சந்தோஷிக்க அந்தரத்தில் வந்துலவும் சந்திரதிசையில், சௌக்கியம், பொருள் லாபம் பிரியம் பூமிலாபம், புத்திரப் பேறு, அதிகாரபாக்கியம், இன்பம் பரவிய விவாகங்களுமுண்டாம்—எ-று.

செவ்வாய் மகா திசைப் பலன்.

சித்தப் பிரமைவருஞ் செங்கோலால் சோரரால்
மெத்தப் பயமிருத்தி வெண்குட்டம்—மத்தப்
பிரமியமா மீளைப் பெருகிவருஞ் செவ்வாய்
பரவு கதிர் பொசிக்கில் பார்.

இ-ள். செய்யும் பயிர்களுக்கு ஆதாரமான பூமிதேவிக்குப்புத்திரனுகிய செவ்வாய் திசையில், சித்தப்பிரமை அரசர், திருடர்களால் பயம், அவமிருத்து வெண்குட்டம், பிரமியம், ஈளைநோய், சூரியபுத்தியில் உண்டாகும்.

இராகு மகா திசைப் பலன்.

துச்சேட்டை பீடைநட்டங் துக்கங் துருவிருத்தி
யச்சமன்னர் தன்சோப மக்கினியால்—செச்சையுட்
காசுவிநா சந்தான் தலமாறல் பாக்கியமாந்
தேசுகரும் பாம்பின் றிசை.

இ-ள். காகநிறம்போன்ற இராகுதிசையில், கெட்டசெய்கை, பீடை, நட்டம், துக்கம், துட்டகாரியங்கள் மன்னர்சோபம், அக்கினியாற்சோபம், வீட்டின் மேற்பக்கம், பணச்செலவு, தலமாறுதலால்பாக்கியம், உண்டாதலு 1079
மாம்—எ-று.

குருமகா திசைப் பலன்.

வித்தைசெயம் புத்திரசம் பத்தி மிகுமரசர்
சித்தமகிழ் சன்மானஞ் சேருமே—மெத்தும்
அபிடேக பூடணமு மாதிபத்தி யங்கள்
பவுசாங் குருதிசைக்குப் பார்.

இ-ள். பூவுலகதனில் தேவகுருவான குருமகாதிசையில்கல்வி, வித்தை, ஞானம், ஜெயம், புத்திரசம்பத்து, ராஜசன்மானம், உண்டாகும், ஸ்நானபிஷேகம், ஆபரணங்கள், இடங்கள், சுதந்தரப் பெருமையுமுண்டாம்—எ-று.

சனிமகா திசைப் பலன்.

சோகம் பயமிலங்குந் துக்க மகோதரமுண்
டாகுமபி மான மது கெடுமே—வாகான
மாட்டுக்குஞ் சேதம் வருமுயிர்த்த முண்டாகுந்
தீட்டுஞ் சனியின் றிசை.

இ-ள். கனிவுசற்றுமில்லாத சனிமகாதிசையில், சோம்பலாகிய சோகம், அச்சமென்னும் பயம், துக்கம், மகோதரம், அபிமானக்கேடு, மாடுகன்று சேதம், ஜீவகஷ்டமு முண்டாம்—எ-று. 1081

புதமகா திசைப் பலன்.

பண்ணியதோர் செட்டும் பயிர்ச்செலவுந் தான்பொசிக்கும்
நண்ணும் விரகம்பூ லாபமாம்—எண்ணுந்
தனலாபம் பங்குகொள்ளத் தானுமதி லாபங்
கனமாம் புதன்றிசைக்குள் காண்.

இ-ள். மதிமகனுகிய புதன்மகாதிசையில், பண்ணிய வியாபாரத்தொழிற்செட்டும், பயிருண்டுபண்ண அதிகச்செலவும், காமமும், பூமிலாபமும், பொருள் லாபமும் பங்குத்தொழிற் செய்யப் பணம் வெகுலாபமும் உண்டாகும்—எ-று. 1082

கேதுமகா திசைப் பலன்.

பித்தஞ் சயரோகம் பெண்மருந்தி னுலிளைப்பன்
சுத்தந் தரித்திரமுஞ் சூனியமும்—மெத்த
வருபாடு மாயுமே வாய்த்ததிறல் கேது
உருவாய் மருவுதிசைக் குள்.

இ-ள். பூதலமதனிற் கேதகனுகிய கேதுமகாதிசையில் மயக்கமாகிய பித்தம், ஓர்வித சயரோகம், பெண் மருந்துகளால் மெலிதல், தரித்திரம், அதிகமான வஞ்சனைகள், களத்திரதோஷமும் உண்டாம்—எ-று. 1083

சுக்கிரமகா திசைப் பலன்.

மன்னர்மறை யோர்தமிழோர் வாஞ்சிப்பர் வாகனமு
முன்னுசத்ர சாமரைபொன் னுண்டாகு—மின்னும்
விவாகஞ் சுபம்பிரிய மெய்தும் பிணிபோஞ்
சுவாகப் புவிலாபச் சுங்கன்.

இ-ள். தக்கபொருள்களைத் தரக்கூடிய சுக்கிரமகாதிசையில், அரசர், பிராமணர், தமிழர், இவர்களால்வாஞ்சையும், வாகனங்கள், அடிமைப்பெண்

கள், சாமரங்கள், திரவியங்கள், உண்டாகும், விவாகம்,சுபகாரியங்கள், இன்பம், இவைகளுண்டாம், வியாதிநீங்கும், பூமிலாபமுமுண்டாம்—எ-று.

கோசார பலன்.

வேறு.

ஓதியகோ சரந்திசைசக் கரங்கடம்மில்
  உதித்தநவக் கிரகத்தா லுண்டாகும் பலன்கள்
ஆதவன்செவ் வாயிருவர்க் காதியிலே பலன்கள்
  அம்புலிக்கும் புதனுக்கும் அனுதினமும் பலனே
பீதகன்சுக் கிரன்பலன்கண் மத்தியத்திற் றருவர்
  பெருகுசனி பாம்பிரண்டும் பிற்பலனே தருவர்
சூதுமதக் கரிக்கோட்டைக் கமலமா முகையைச்
  சுந்தரப்பொற் கிரியைவென்ற துணைமுலைமா மயிலே.

இ-ள். சொக்கட்டான்காயும், மதகரிக்கொம்பும், கமலமலர் முகையும் பொற்கிரியையும் வென்ற தனத்தையுடைய பெண்ணே? கேட்பாயாக. கோசரதிசைச் சக்கரத்தில் இருக்கும் நவக்கிரகங்களின் பலன்களைச் சொல்லுமிடத்து, சூரியன், செவ்வாய், ஆதியிலும், சந்திரன், புதன், எப்போதும் குரு, சுக்கிரன் மத்தியிலும், சனி, ராகு கேது, கடைசியிலும் பலன் தருவராம்—எ-று- 1085

கோசார வேதை.

வேறு.

இரவி யைந்தின் மதியெட்டி னேழிற்சேய்
பரவு மூன்றிற் பொன் பார்க்கவ னாறினும்
விரவு புந்திநான் கொன்பானில் ராகுசுன்
உரவு சென்ம முறிற்கடுங் கேடுறும்.

இ-ள். சந்திரலக்கினத்திற்குச் சூரியன், ஐந்திலும், சந்திரனெட்டிலும், செவ்வாய் ஏழிலும், குரு மூன்றிலும், சுக்கிரன் ஆறிலும், புதன் நாலிலும், ராகு ஒன்பதிலும், சனி சென்மத்திலுமிருக்கின், கொடுமையான துன்பங்களுண்டாம்—எ-று. 1086

கோசார நற்பல ஸ்தானம்.

வேறு.

கதிர்பதி னொன்று மூன்று கருதுபத் தாறில் நல்லன்
மதியொன்று மூன்றே ழாறு மன்னுமேழ் பதுபன் னொன்றும்
பதிபுகழ் சேய்சுன் ராகு பதினொன்று மூன்றா றாகும்
மதிமகற் கிரண்டோ டாறு மன்னெட்டுப் பதுபன் னொன்றே.

இ-ள். அந்தரியென்னும் சந்திரலக்கினத்திற்கு முந்தரியாகிய சூரியன் (3-6-10-11-) லும், சந்திரன், (1-3-6-7-10-11-) லும், செவ்வாய் சனி ராகு, இவர்கள், (3-6-11-லும், புதன் (2, 6-8-10-11-) லும் இருந்தால், நன்மையான பலனும்—எ-று. 1087

பொன்னவன் பதினொன் றொன்பான் பொருந்துமே லைழந்தி ரண்டாம், துன்னுசுக் கிரற்கோன் றாதி யைந்துமோ ரெட்டொன்பானும், பன்னொன்றீ ராறு தன்னிற் பற்றிடில் நல்ல ராவர், அன்னமே வேதைக் கோட்க ளுறிற்றீய ராவ ரென்னே.

இ-ள். இந்தனுகிய சந்திரலக்கினத்திற்கு, புந்தனுகிய குரு, (2-5-7-9-11-லும், சுக்கிரன், (1-5-8-9-11-12-) லும், இருந்தால், நல்லபலன்களைக் கொடுப்பவர்களாம் வேதைக்கோட்கள் நின்றால் இவர்களுந் தீயபலன்களைக் கொடுப்பவர்களாம்—எ-று. 1088

வேதை ஸ்தானம்.

சூரியற் குரைத்த வீட்டிற் கேழினிற் கோள்நின் றாலும்
கூரிய மதிக்கைந் தொன்பான் குலவுமீ ராறி ரண்டும்
ஏர்பெறு மொருநான் கெட்டு மிராகுசன் சேய்த மக்குக்
கார்பெறுங் குழலா யைந்தீ ராறொன்பா னெனுங்க ணக்கும்.

இ-ள். முன் கோசாரத்திற்சொன்ன இடங்களில் கிரகங்கள் நிற்க, சூரியனுக்கு (7) லும், சந்திரனுக்கு, (2-4-5-8-9-12-) லும், ராகு சனி செவ்வாய்க்கு (5-9-12- லும்—எ-று. 1089

புந்திக்கைந் தொன்பா னொன்றெட் டீராறிற் புனிதப்பொன்னுக்
கந்தமா மெட்டுப் பத்து மூன்றுநான் கீரா றாகும்
சந்தமார் புகருக் கெட்டே ழொன்றுபத் தொன்ப தைந்தும்
உந்துபன் னொன்று மூன்றோ ராறுமுன் முறைக்கு வேதை.

இ-ள். புதனுக்கு, (1-5-8-9-12-) லும், குருவுக்கு (-3-4-8-10-12-) லும், சுக்கிரனுக்கு, (1-3-5-6-7-8-9-10-11-) லும், கிரகங்கள்நிற்கில் வேதையாம்.

அஷ்டவர்க்கம்.

ஆதித்தன் றனக்கா றெட்டா மம்புலிக் கதன்மே லொன்றும்
வாதிக்குஞ் செவ்வாய் மந்தன் றனக்குமா முப்பத் தொன்பான்
போதிக்கும் புதற்கைம் பானே டொருநான்கு பொன்னேழெட்
கோதற்ற புதர்க்கைம் பானே ரிரண்டட்ட வர்க்கங் கூறே. [டாம்

இ-ள். சூரியனுக்கு, (48) சந்திரனுக்கு, (49) செவ்வாய்க்கு, (39) புதனுக்கு (54) குருவுக்கு, (56) சுக்கிரனுக்கு, (52) சனிக்கு, (39) மாக, அஷ்டவர்க்கப் பரலாகுமென்று சொல்லுவாயாக—எ-று. 1091

வேறு.

கூறிய விரவி தனிலரி சேய்சுன்
குலவுமொன் றிரண்டுநான் கோரேழ்
கூடிரு நான்கொன் பான்பது பன்னொன்
றுமதிக் கோவொரு மூன்றும்
ஆறுபத் துடன்பன் னொன்றதாம் புந்திக்
கானமூன் றைந்துட னாறும்
அடுத்திடு மொன்பான் பத்துபன் னொன்றீ
ராறுபொன் னைந்துமோ ராறு
வீறுறு மொன்பா னேடுபன் னொன்றே
விளங்கிய புகரினுக் காறு
மேவுமே ழீராறு கும்லக் கினமோ
விரும்புமூன் றும்வரு நான்கும்
ஆறுமீ ரைந்தும் பத்துட னொன்றீ
ராரிரண் டாகுமொன் றறைவாய்
அனநடை மயிலின் சாயன்மான் விழியு
மமைநிகர் தோளுடை யணங்கே.

இ-ள். சூரியனட்டவர்க்கப்பரல் 48 க்கு விவரம்.

சூரியன், 1 - 2 - 4 - 7 - 8 - 9 - 10 - 11,	ஆ	8 - ம்.
சந்திரன், 3 - 6 - 10 - 11,	ஆ	4 - ம்.
செவ்வாய், 1 - 2 - 4 - 7 - 8 - 9 - 10 - 11,	ஆ	8 - ம்.
புதன், 3 - 5 - 6 - 9 - 10 - 11 - 12,	ஆ	7 - ம்.
குரு, 5 - 6 - 9 - 11,	ஆ	4 - ம்.
சுக்கிரன், 6 - 7 - 12,	ஆ	3 - ம்.
சனி, 1 - 2 - 4 - 7 - 8 - 9 - 10 - 11,	ஆ	8 - ம்.
லக்கினம், 3 - 4 - 6 - 10 - 11 - 12,	ஆ	6 - ம்.

ஆ - 48 - ஆம். 1092

மதியினி விரவி மூன்றுட னாறேழ்
வருமெட்டு பத்துபன் னொன்றும்
மதியொன்று மூன்று மாருட னேழு
மன்னுபத் துடன்பதி னொன்றும்
துதிகுச னிரண்டு மூன்றுட னைந்தா
றென்பதீ ரைந்துபன் னொன்றும்
சொல்லுமாற் கொன்று மூன்றுநான் கைந்துந்
தொடருமே ழெட்டுமீ ரைந்தும்

பதினொன்றும் பொன்னிற் கொன்றிரண் டொருநான்
காகுமே யெட்டுபத் துடனே
பகருபன் னொன்றும் புகர்க்குமூன் றொருநான்
கைந்துட னேழுமொன் பானும்
அதிகமாம் பதுமன் னொன்றுசுன் மூன்று
மைந்திரு மூன்றுபன் னொன்றும்
அமருலக் கினமூன் றுறுமீ ரைந்து மாம்பதி
னொன்றென வறைவாய்.

இ-ள். சந்திரனட்டவர்க்கப் பரல் 49-க்கு, விவரம்.

சூரியன், 3 - 6 - 7 - 8 - 10 - 11,	ஆக	6 - ம்.
சந்திரன், 1 - 3 - 6 - 7 - 10 - 11,	ஆக	6 - ம்.
செவ்வாய், 2 - 3 - 5 - 6 - 9 - 10 - 11,	ஆக	7 - ம்.
புதன், 1 - 3 - 4 - 5 - 7 - 8 - 10 - 11,	ஆக	8 - ம்.
குரு, 1 - 2 - 4 - 7 - 8 - 10 - 11,	ஆக	7 - ம்.
சுக்கிரன், 3 - 4 - 5 - 7 - 9 - 10 - 11,	ஆக	7 - ம்.
சனி, 3 - 5 - 6 - 11,	ஆக	4 - ம்.
லக்கினம், 3 - 6 - 10 - 11,	ஆக	4 - ம்.

ஆக - 49 - ஆம். 1093

சேயினி லிரவி மூன்றைந் திருமூன்று
செப்பிய பத்துபன் னொன்றும்
செழுமதி யொருமூன் றுறுபன் னொன்றுஞ்
சேர்குச னொன்றிரண் டொருநான்
காயவே ழிருநான் கொருபது பன்னொன்
றுகுநற் புலவன்மூ வைந்தே
அழகுறு மிருமூன் றொருபதி னொன்று
மணிகொள்பொன் மூவிரண் டீரைந்
தேயபன் னொன்றீ ராறுசுக் கிரற்கோ
வியலிரு மூன்றெட்டுப் பதினொன்
றேகமற் றிடுமீ ராறுமந் தனுக்கொன்
றீரிரண் டேழ்முத லைந்தெண்
தூயலக் கினத்திற் கொன்றுமூன் றுறு
சொலத்தகு பத்துபன் னொன்றும்
தோடிவர் செவியைத் தாவிமீண் டிகலுந்
துணைவிழிப் பணைமுலை மயிலே.

இ-ள். செவ்வாயட்டவர்க்கப் பரல் 39 - க்கு விவரம்.

சூரியன், 3 - 5 - 6 - 10 - 11,	ஆ	5 - ம்.
சந்திரன், 3 - 6 - 11,	ஆ	3 - ம்
செவ்வாய், 1 - 2 - 4 - 7 - 8 - 10 - 11,	ஆ	7 - ம்.
புதன், 3 - 5 - 6 - 11,	ஆ	4 - ம்.
குரு, 6 - 10 - 11 - 12,	ஆ	4 - ம்.
சுக்கிரன், 6 - 8 - 11 - 12,	ஆ	4 - ம்.
சனி, 1 - 4 - 7 - 8 - 9 - 10 - 11,	ஆ	7 - ம்.
லக்கினம், 1 - 3 - 6 - 10 - 11,	ஆ	5 - ம்.

ஆ 39 - ஆம். 1094

புந்தியி விரவிக் கைந்திரு மூன்றோன்
பான்பதி னொன்றுபன் னிரண்டாம்
புகழ்மதி யிரண்டீ ரிரண்டிரு மூன்றெட்
டொருபது புகல்பதி னொன்றும்
உந்துசேய் மந்தற் கொன்றிரண் டொருநான்
கொளிருமே ழாதியைந் தெண்ணும்
உயர்புதற் கொன்றோர் மூன்றுநல் லைந்தா
றோன்பஃ தாதிநான் கெண்ணும்
சந்தமார் பொன்னுக் காறிரு நான்கு
சாற்றுபன் னொன்றுபன் னிரண்டே
தருபுகர் தனக்கொன் றாதியைந் தெண்ணுந்
தானெட்டோன் பதுபதி னொன்றும்
தந்தலக் கினத்திற் கொன்றிரண் டொருநான்
காறிரு நான்குசார் பத்துத்
தகுபதி னொன்றுந் தண்மல ருறைபொன்
றன்னைநேர் தார்குழ லாளே.

இ-ள். புதனட்டவர்க்கப் பரல்!54 - க்கு விவரம்.

சூரியன், 5 - 6 - 9 - 11 - 12,	ஆ	5 - ம்.
சந்திரன், 2 - 4 - 6 - 8 - 10 - 11,	ஆ	6 - ம்.
செவ்வாய், 1 - 2 - 4 - 7 - 8 - 9 - 10 - 11.	ஆ	8 - ம்.
புதன், 1 - 3 - 5 - 6 - 9 - 10 - 11 - 12,	ஆ	8 - ம்.
குரு, 6 - 8 - 11 - 12,	ஆ	4 - ம்.
சுக்கிரன், 1 - 2 - 3 - 4 - 5 - 8 - 9 - 11,	ஆ	8 - ம்.
சனி, 1 - 2 - 4 - 7 - 8 - 9 - 10 - 11,	ஆ	8 - ம்.
லக்கினம், 1 - 2 - 4 - 6 - 8 - 10 - 11,	ஆ	7 - ம்,

ஆ 54 - ஆம். 1095

பொன்னினி விரவிக் கொன்றுதி நான்கெண்
புகலுமே ழாதியைந் தெண்ணும்
புதுமதிக் கிரண்டே ழைந்தொன்பான் பதினொன்
றுய்ப்புகல் சேய்தனக் கொன்று
துன்னிரண் டொருநான் கேழிரு நான்கீ
ரைந்துபன் னொன்றுபுந் திக்கோ
சொல்லுமொன் றிரண்டு நான்குநல் லைந்தோ
ராறென்ப தாதிமூன் றெண்ணும்
நன்னயப் பொன்னுக் கொன்றுதி நான்கெண்
ணவிலுமே ழெட்டொரு பஃது
நாட்டுபன் னொன்றும் புகர்க்கிரண் டைந்தா
றென்பஃ தாதிமூன் றெண்ணும்
சுன்னினுக் கொருமூன் றைந்திரு மூன்றீ
ராறுலக் கினத்தினுக் கொன்று
துய்யரண் டொருநான் கைந்திரு மூன்றே
ழொன்பஃ தாதிமூன் றெண்ணும்.

இ-ள். குரு அட்டவர்க்கப் பரல் 56 - க்கு விவரம்.

சூரியன், 1 - 2 - 3 - 4 - 7 - 8 - 9 - 10 - 11, ஆக
சந்திரன், 2 - 5 - 7 - 9 - 11, ஆக
செவ்வாய், 1 - 2 - 4 - 7 - 8 - 10 - 11, ஆக
புதன், 1 - 2 - 4 - 5 - 6 - 9 - 10 - 11, ஆக
குரு, 1 - 2 - 3 - 4 - 7 - 8 - 10 - 11, ஆக
சுக்கிரன், 2 - 5 - 6 - 9 - 10 - 11, ஆக
சனி, 3 - 5 - 6 - 12, ஆக
லக்கினம், 1 - 2 - 4 - 5 - 6 - 7 - 9 - 10 - 11, ஆக
ஆக 56 - ஆம்

புகரினி விரவிக் கெட்டுபன் னொன்றீ
ராறுதிங் கட்கொன்று முதலாப்
புகலுமைந் தெண்ணு மெட்டுமொன் பான்பன்
னொன்றுபன் னிரண்ட தாஞ் சேய்க்குத்
தகவுறு மூன்று நான்கிரு மூன்றொன்
பான்பதி னொன்றுபன் னிரண்டாம்
சார்புதன் மூன்றைந் தாறுநல் லொன்பான்
றங்குபன் னொன்றுபொன் னவர்க்கு

இகலறு மைந்தெட் டொன்பஃ தாதி
யேற்றமூன் றெண்ண தாம் புகருக்
கியலுமொன் றாதி யானவைந் தெண்ணு
மெட்டுமுன் னானநான் கெண்ணும்
நகருமந் தற்கு மூன்றுநான் கைந்தும்
நவிலுமெட் டாதிநான் கெண்ணும்
நாட்டுலக் கினமொன் றாதியைந் தெண்ணும்
நாலிரண் டொன்பான் பன்னொன்றே.

இ-ள். சுக்கிரனட்டவர்க்கப்பால் 52-க்கு, விவரம்.

சூரியன், 8 - 11 - 12,	ஆ	3 - ம்.
சந்திரன், 1 - 2 - 3 - 4 - 5 - 8 - 9 - 11 - 12,	ஆ	9 - ம்.
செவ்வாய், 3 - 4 - 6 - 9 - 11 - 12,	ஆ	6 - ம்.
புதன், 3 - 5 - 6 - 9 - 11,	ஆ	5 - ம்.
குரு, 5 - 8 - 9 - 10 - 11,	ஆ	5 - ம்.
சுக்கிரன், 1 - 2 - 3 - 4 - 5 - 8 - 9 - 10 - 11,	ஆ	9 - ம்.
சனி, 3 - 4 - 5 - 8 - 9 - 10 - 11,	ஆ	7 - ம்.
லக்கினம், 1 - 2 - 3 - 4 - 5 - 8 - 9 - 11,	ஆ	8 - ம்.
	ஆ - 52 - ஆம்.	1097

சனியினி லிரவிக் கொன்றிரண் டொருநான்
கேழுட னெட்டுநற் பத்து
தங்குபன் னொன்றா மம்புலி மூன்றா
றாம்பதி னொன்றுசேய் தனக்கே
இனியமூன் றைந்தா றீரைந்து பதினொன்
றீராற தாகும்புக் திக்கோ
இயலுறு மாறு மெட்டாதி யைந்தெண்
ணிமையவர் குருவினுக் கைந்து
நணியுமோ ராறு பதினொன் றீ ராறுங்
கவிக்குநல் லாறுபன் னொன்று
நாட்டுமீ ராறாங் கனவரை வனச
மாமுகை நேர்முலை யாளே
புனைகரு மேனிச் சனியொரு மூன்றைந்
தாறுபன் னொன்றெனப் புகல்வர்
போற்றுமலக் கினத்திற் கொன்றுமூன் னொருநான்
காறுபத் துப்பதி னொன்றே.

இ-ள். சனி அட்டவர்க்கப்பால் 39 - க்கு விவரம்.

சூரியன், 1 - 2 - 4 - 7 - 8 - 10 - 11,	ஆ	7 - ம்.
சந்திரன், 3 - 6 - 11,	ஆ	3 - ம்.

செவ்வாய், 3 - 5 - 6 - 10 - 11 - 12,	ஆ	6 - ம்.
புதன், 6 - 8 - 9 - 10 - 11 - 12,	ஆ	6 - ம்.
குரு, 5 - 6 - 11 - 12,	ஆ	4 - ம்.
சுக்கிரன், 6 - 11 - 12,	ஆ	3 - ம்.
சனி, 3 - 5 - 6 - 11,	ஆ	4 - ம்.
லக்கினம், 1 - 3 - 4 - 6 - 10 - 11,	ஆ	6 - ம்.

ஆ - 39 - ஆம். 1098

திரிகோண சோதனை.

வேறு.

கோணம் மூன்றிற் பரல்சரியாக் குலவின் மூன்று மெடுத்திடுக
கோணந் தனிலொன் றிற்குறையிற் குறைந்தபடியே குறையிரண்டும்
கோணந் தனிலென் றிற்பரலே கூடா திருக்கிற் சோதனையக்
கோணந் தனக்கு மில்லையெனக் கூறு வனச மலர்மானே.

இ-ள். வனசமலரில் வசிக்கும் இலக்ஷிமிபோல் பவளே? திரிகோணராசிகள் மூன்றிலும், பால் சரியாயிருந்தால், மூன்றையும், எடுத்துவிடவும் ஒரு ராசியிற் குறைந்திருந்தால், அப்படியே மற்றைய விராசிப்பரலையும் குறைத்துவிடவும், ஒருராசியில், பரலில்லாதிருந்தால், திரிகோண சோதனையில்லையாம், திரிகோண மென்பது, 1—5—9 அதாவது மேடசிம்ம-தனுசு ரிஷப-கன்னியா-மகரம் மிதுன-துலா-கும்பம் கற்கே விருச்சிகமீனம்—எ-று. 1099

ஏகாதிபத்திய சோதனை.

மானே யிரண்டு மனிதனிலும் மருவிக் கோள்க ணின்றாலும்
தேனே கோணின் றிடுமனையிற் பரலுற் றென்றி னிலதெனினும்
வானு ரிரண்டிற் கோளின்றி மன்னு மொன்றிற் பரலுறினும்
கானர் சிங்க கடகத்திற் கனமே சோதித் திடுதலிலை.

இ-ள். மானையொத்த சாயலையுடைய பெண்ணே? இரண்டு மனைகளிலும், கிரகங்கள் நின்றாலும், கிரகங்கள் நின்றமனையிற் பாலிருந்து, இன்னொன்றிலில்லையானாலும், இரண்டு மனையிலும், கிரகமில்லாமல் ஒன்றிற் பரலிருந்தாலும், கர்க்கடகம், சிம்மத்திற்கும், சோதனையில்லையாம், (மேடவிருச்சிகம், ரிஷபதுலாம், மிதுனங்கன்னி, தனுசுமீனம், மகாகும்பம், இவை, ஏகாதிபத்தியமாம்,)—எ-று. 1100

இல்லா திரண்டு ராசியிற்கோ ளியலும் பரல்கள் சரியுறினும்
வல்லாக் கோளுற் றிடுமனைபா ழாகி மற்றென் றுற்றிடினும்
வில்லாக் கோளுற் றிடும்பரற்கு மேவு மெதிரிற் சமன்குறையேல்
அல்லார் குழலா யப்பரலை யகற்று மென்பா ரறிவோரே.

இ-ள். இரண்டு ராசிகளிலும், கிரகமில்லாதிருந்து, பரல்கள் சரியாயிருந்தாலும், கிரகமிருந்தாராசியில், பரலில்லாமல், மற்றராசியில் பரலிருந்தாலும்

கிரகங்கள் நின்ற பரலுக்கு, எதிரில் பரல் சமனுயிருந்தாலும், குறைவாயிருந்தாலும், அப்பரலையும் எடுத்துவிடவும்—எ-று. 1101

ஓராய் கோளோர் மனையுறமற் றொன்றி லதிகப் பரலுறினும்
சீரார் கோளின் றிப்பரல்கள் சேர்ந்தோன் றிற்கொன் றதிகமதேல்
வாரார் கொங்கை மதிவதன மானேர் விழிநன் மடமாதே
ஏரார் பரலை நேராக விருக்கச் செய்வா யென வுரைத்தார்.

இ-ள். கச்சையணியுங் கொங்கையும், இச்சைதரு முகத்திங்களும், மச்சமும், மானும், போன்ற கண்களுமுடைய பெண்ணே கேட்பாயாக, ஒருராசியிற் கிரகமிருக்க, மற்றராசியில், அதிகப்பரலிருந்தாலும், இரண்டு ராசிகளிலும், கிரகமில்லாமல், ஒன்றுக்கொன்று பரல், ஏற்றக்குறைச்சலாயிருந்தாலும், குறைந்தபடி சரிசெய்துகொள்ளவும்—எ-று. 1102

வேறு.

உரைத்த கோள்க ளுறுஞ்சமு தாயமாய்
விரைத்த வார்குழ லவ்வவ் விராசியில்
நிரைத்த பிந்தையொன் றுச்செறித் திட்டதே
திரைத்த நற்சரு வாட்டகஞ் சேருமே.

இ-ள். காசினியதனில் வாசனைகமழும் கூந்தலையுடைய, மாசற்ற பெண்ணே? கேட்பாயாக, கிரகங்களின் வரிசைக்கிரமமாய், (12) இராசிகளிலும் நிரம்பிய பிந்துகளையெல்லாம், அந்தந்தக் கிரமப்படி, அந்தந்த ராசிகளில், ஒன்றுகச்சேர்த்தது, சருவாங்க அட்டவர்க்கமாம், இதை (12) ராசிகளிலுங்கூட்ட (337) ஆகும்—எ-று. 1103

வேறு.

இலக்கின மாதி நந்நான்கு வீட்டி
விருந்திடு பரல்களைக் கூட்டி
உலப்புறு மூன்று தொகையினின் முறையே
யுயர்பர லைக்கொடு பலன்கள்
நலப்பறு வயதை மூன்றுகூ றிட்டே
நயம்பெற மொழிந்திட வேண்டும்
சிலைப்புரு வத்தண் மதிநுதற் கருங்கட்
செய்யவாய்ப் பைந்தொடி யாளே.

இ-ள். வில்லைப்போன்ற புருவமும், வல்லைப்போன்ற நுதலும், கொவ்வைக்கனிபோன்ற செவ்வாயுமுடைய பெண்ணே கேட்பாயாக? சர்வாங்க அட்டவர்க்கத்தின் விவரம், லக்கினமுதல், நன்நான்கு, ராசியாகக்கூட்டி, மூன்று தொகையாகவைத்து, பங்கென்பது, மேடம் முதல், கர்க்கடகம் வரை முதலாம் பங்கு சிங்கம் முதல், விருச்சிகம் வரை, இரண்டாம்பங்கு, தனுசுமுதல் மீனம்வரை மூன்றும்பங்கு, இதுபோல் ஆயுளையும் மூன்று பங்குவைத்து, எந்தப்பங்கில், தொகை அதிகப்படுகிறதோ, அந்தப்பங்கு வய

தில், நற்பலனும், எந்தப்பங்கில், தொகை குறைவுபடுகிறதோ, அந்தப்பங்கு வயதிற் பலன் குறைந்தும், எந்தப்பங்கில், சமமாகிறதோ, அந்தப்பங்கு வயதில் சமமான பலனுமுண்டாமென்று சொல்லுக, (சிலர் இலக்கினமுதற் கொண்டும் பார்ப்பர்,)—எ-று. 1104

வே று.

இரவிக்கொன் பான்ம திக்கும் புந்திக்கு மீரி ரண்டாம்
குருவினுக் கைந்து சேய்க்கு மூன்றுசுக் கிரனுக் கோரேழ்
வருசனிக் கிருநான் காகு மிராசியின் சமுதா யத்தை
விரவுசோத் தியத்தாற் ருக்கி மேவுமூ வொன்பாற் கீந்தே.

இ-ள். சூரியனுக்கு, (9) ம், சந்திரனுக்கு, (4) ம், செவ்வாய்க்கு, (3) ம், புதனுக்கு, (4) ம், குருவுக்கு, (5) ம், சுக்கிரனுக்கு, (7) ம், சனிக்கு, (8) ம், ஆமிராசியின், சமுதாயத்தை, சோத்தியப்பராலாற் (சுத்தபிண்டம்) பெருக்கி, அத்தொகையை, (27) க்கு கொடுத்து—எ-று. 1105

(இராசி குணகாரம், கிரககுணகாரம் இவ்விரண்டையும் சேர்த்து, சோத்தியம், அல்லது சுத்தபிண்டமாம்.)

வருபலன் வளர்பி றைக்கோ மகிழசு பதிமுன் னாகத்
திருவறு தேய்பி றைக்கே சேரவிட் டம்முன் னாக
விரவுட னெண்ணிக் கண்ட நாள்குரு மேவுங் காலம்
பரவுநற் பலன்சுன் கூடிற் பகர்கார கர்க்குக் கண்டம்.

இ-ள். மீதம் வருவதை, பூர்வபக்ஷமானல், அசுபதிமுதலும், அமரபக்ஷமானல், அவிட்டமுதலும், எண்ண, எந்தராசி வருகிறதோ, அந்தராசியில் குருவருங்காலம், !அந்தக்காரகர்களுக்கு நற்பலனும் சனிவரும்காலம், துர்ப்பலனுமுண்டாம்—எ-று. 1106

தான்சமு தாய முப்பான் மேலுறிற் பூர்ணஞ் சாற்றும்
ஆனவை யைந்தின் மீதி லடித்திடின் மத்தி மந்தான்
ஈனமா மிதன்கீ ழற்ப மாம்பலம் வியமீ ரைந்தில்
வான்பரல் குறைந்தி லாபம் வருஞ்சன்ம முயரில் யோகம்.

இ-ள். ஒவ்வொரு ராசிகளின், சமுதாயம், (30) க்குமேலானல், பூரணபலனும், (25) க்குமேலானல் மத்திமபலனும், அதற்குக்கீழ்ப்பட்டால், அற்பபலனுமாம், (10) (12) ல், பரல் குறைந்தால், லாபமும், லக்கினத்தில் பரல் கூடியிருந்தால், யோகமுமுண்டாம்—எ-று. 1107

பதினொன்றில் வியமி குந்தாற் பகர்ந்திடு செலவு மேலாம்
துதிபெறு பத்தின் மேலாம் வியமெனிற் சகடந் தோற்றும்
வதியுமா றெட்டீ ராறின் மன்பரற் றொகைக்கு மேலாய்ப்
பதிபுக ழிரண்டோன் பான்பன் றொன்றுறிற் பகர்வர் யோகம்.

இ-ள். (11)ல் பரல்குறைந்து, (12)ல் பரல் அதிகமாயின், செலவு அதிகமாம், (10)மிடப்பரலுக்கு (12) ஆ மிடப்பரல்அதிகமாயின், சகடமாம்6-8-12ஆ மிடப் பரலுக்குமேல், (2-9-11) ஆ மிடப்பரல் அதிகமாயின் யோகமாம்-எ-று.

இராசி குணகாரம்.

இடபஞ் சிங்கமீ ரைந்தா மியன்மேடங் கோலீ ரேழாம்
கடகமோர் நான்கும் மீனங் கருதுமீ ராறே யாகும்
மடஞ்சேர் கன்னி சுறுவைந்தா மன்னுந் தனுவொன் பானாகும்
குடம்பன் னொன் று மிதுனந்தே ளெட்டாம் ராசிகுண காரம்.

இ-ள். ரிஷபமும், சிம்மமும், (10) மேடமும் துலாமும், (7) கடகம், (4) மீனம், (12) கன்னியும், மகரமும், (5) தனுசு, (9) கும்பம், (11) மிதுனம், விருச்சிகம், (8) ஆகிய இத்தொகைகளால் தனித்தனியே பெருக்கிக் கண்டது ராசி குணகாரமாம்—எ-று. 1109

கிரக குணகாரம்.

வே று.

நற்ற வக்குரு பத்து சேய்
உற்ற வெட்டுநற் சுக்கிரன்
முற்ற வேழுமோ ரைந்துமே
மற்றை யோர்குண காரகம்.

இ-ள். குருவிருந்த ராசிப்பரலை (10) லும் செவ்வாயிருந்த ராசிப்பரலை, (8) லும், சுக்கிரனிருந்த ராசிப்பரலை, (7) லும், மற்ற கிரகங்களாகிய சூரியன், புதன், சந்திரன், சனி, இருந்த ராசிப்பரல்களை, (5) லும், பெருக்கிக்கண்டது கிரக குணகாரமாம்—எ-று. 1110

மாதங்கலப்தம்.

குணகாரத் தொகையிரண்டை யொன்றாய்க் கூட்டிக்
குலமுந்நூற் றிருபானுன் கதனிற் றாக்கும்
கணமதனை முந்நூற்றே டறுபானைந்தில்
கழித்துவருஞ் சேடத்தை மூவொன் பானில்
உணக்கமற வேகழித்த பலனுண் டாகும்
உயர்சேடந் தனையீரா றதனிற் றாக்கி
இணக்கமுடன் முன்போல வியற்றிக் கொண்ட
வீவுமதி சேடமுப்பா னேயத் தாக்கே.

இ-ள். இராசி கிரககுணகாரத்தொகைக ளிரண்டையுங் கூட்டி, (324) ஆல் பெருக்கி வந்ததொகையை (365) க்குக்கொடுத்து, மீந்ததொகையை (27)க்குக்கொடுக்க வருவது, வருஷமாம், மீதத்தை (12) பெருக்கி, (27)க்குக் கொடுக்க வருவதுமாதமாம், அம்மீதத்தை (30) ஆல் பெருக்கி—எ-று. 1111

தாக்குதொகை தனைமுன்போ லீந்த பேறு
தானாளாஞ் சேடத்தை யறுபான் றன்னில்

தாக்கிவரும் பேறுகன்ன லாமிவ் வாறே
தான்காணு வாய்மற்றை விநாடி பாதி
போக்கருமவ் வவர்வருட மாத மாதி
புறம்பாக வைத்ததனை யரணஞ் செய்யும்
தாக்கணங்கே வகையதனை விரித்துச் சொல்வர்
சாதகநூ லுணர்ந்தபெரி யோர்க டாமே.

இ-ள். (27) க்குக்கொடுக்க வருவது நாளாம், அதில்மீந்த தொகையை (60) ஆல்பெருக்கி (27)க்குக்கொடுக்கவருவது,நாழிகையாம்,இம்முறைப்படி, விநாடி,கலை, விகலையாக்குக இப்படியாகக்கிடைத்த வ௵ மீ௨ நாள் நாழிகை முதலியதை புறம்பாகவைத்து, இதை அரணஞ்செய்யும் விவரத்தை சோதிடங்கற்ற பெரியோர் விரித்துச் சொல்வர்—எ-று. 1112

வேறு.

ஓர்மனை தனிலி ரண்டு கோள்கள்நின் றிடினும் நீசம்
ஏரறு மத்த மானம் பகையினுங் கடகத் தேனும்
ஆர்மதி கூடி னாலு மலதுநேர் நோக்கி னாலும்
தார்குழ லாளே யக்கோ ளாயுளிற் பாதி தள்ளே.

இ-ள். ஒருவீட்டில், இருகிரகமிருந்தாலும் நீசம், அஸ்தமனம், பகைபெற்றாலும், கடகத்தில் சந்திரனிருந்தாலும், பார்த்தாலும், பாதிவருஷமாசங்களைத்தள்ளுக—எ-று. 1113

தள்ளுநண் டதிற்சு பக்கோ டங்கிடின் மூன்றி லொன்று
தள்ளுநட் பதனி னின்ற கோளுக்கு நான்கி லொன்று
தள்ளுபா பக்கோ ணீசம் பகையுறி லெட்டி லொன்று
தள்ளுபா பக்கோ ணட்புத் தானுறி னான்கி லொன்றே.

இ-ள். கர்க்கடகத்தில், சற்கோளாகிய சுபர் தங்கிடில், மூன்றிலொன்று தள்ளவும், நட்புக்கோள் நின்றிடில், நான்கிலொன்று தள்ளவும், பாவக்கிரகங்கள் பகைநீசம் பெற்றிருந்தால், எட்டிலொன்று தள்ளவும், பாவக்கிரகங்கள், நட்புப்பெற்றால், நான்கிலொன்று தள்ளவுமாம்—எ-று. 1114

ஒன்றிய கோள்க ணின்ற வோரைக்கு வியத்திற் பாவர்
நின்றிடி லவர்கொ டுத்த வாயுள்க ளெல்லாம் நீங்கும்
துன்றுபன் னொன்றிற் பாதி சொல்பத்தில் நான்கி லொன்று
நன்றுபாக் கியமெட் டொன்று நவிலெட்டிற் பதினா றாமே.

இ-ள். கிரகங்கள்நின்றராசிக்கு (12)ல் பாவர்கள்நிற்கில், ஆயுள்பூராவையுந் தள்ளவும், (11) ல் பாவர்கள் நின்றால், அரைவாசி தள்ளவும், (10) ல் பாவர்கள், நிற்கில்நான்கில் ஒன்றுதள்ளவும், (9)ல், பாவர்களிருந்தால் எட்டிலொன்றுதள்ளவும், (8)ல், பாவர்கள்நிற்கில், பதினாறிலொன்று தள்ளவும்.

ஆம்வகை சுபக்கோ ளாயின் பாபருக் கறைந்த வெண்ணில்
தாமதிற் பாதி நீங்குஞ் சார்பாப ராட்சி யுச்சம்

எழுறி லரண மில்லை விரும்புகோ ளாட்சி யுச்சம்
வாமமார் குழலாய் பத்தி னென்றுமேற் கூட்டு வாயே.

இ-ள். முன்பாட்டிற்சொன்ன கோட்கள் சுபக்கோளாகில், பாவக் கோளுக்குச்சொன்ன, தொகையில் பாதிதள்ளவும், பாபக்கிரகங்கள், ஆட்சி உச்சம் பெற்றால், அரணமில்லை, உள்ளபடிதொகையும், சுபக்கிரகங்கள், ஆட்சி, உச்சம்பெற்றால் பத்திலொன்று ஏற்பட்ட வை, மூ த்தொகையுடன் கூட்டிக்கொள்ளவுமாம்—எ-று. 1116

கா ல ச க் க ர தி சை.

கீழேகாட்டியிருக்கும் காலச்சக்கிர திசாபுத்திகள் பிராக்கெட்டிற் போட்டிருக்கும் எண்களின், வரிசைக்கிரமமும், அந்தக் கிரகங்கள் சஞ்சரிக்குங் காலமுங் காட்டப்பட்டிருக்கிறது.

அதின்படி காலச்சக்கர திசாபுத்திகளைக் குறித்துச் சொல்லவும்.



காலசக்கரம்.

வெண்பா.

சேய்க்கேழு பொன்பத்துச் சேரிரவிக் கைந்தாகும்
வாய்த்தபுகர்க் கீரெட்டாம் மாலுக்கோ—ஏய்த்தொன்பான்
சந்திரற்கு மூவேழாஞ் சாற்றுஞ் சனிக்கொருநான்
கிந்தமுறை ராசிகளுக் கெண்.

இ-ள். செவ்வாய்க்கு, (7) குருவுக்கு, (10) சூரியனுக்கு (5) சுக்கிரனுக்கு (16) புதனுக்கு, (9) சந்திரனுக்கு (21) சனிக்கு (4) இப்படியே அவரவர் ஆட்சி ராசிகளுக்கு ஆண்டாகிய வருஷங்களாம்—எ-று. 1117

கேள்சகடு மான்றலையாழ் கேடின் மக மூன்றும்
நீள்சுளகு தேள்கேட்டை நேரோணம்—வாளவிட்டம்
செக்கு மிட வோட்டாகுஞ் சேராப் பதினைந்தும்
இக்குமொழி யாய் வலவோட்டே.

இ-ள். விரும்பியகரும்பினும் மேன்மைபொருந்திய மொழியையுடைய பெண்ணே? கேட்பாயாக, உரோகணி மிருகசீரிடம், திருவாதிரை, மகம், பூரம், உத்திரம், விசாகம், அனுஷம், கேட்டை, திருவோணம், அவிட்டம், சதயம், ஆகிய, இப்பன்னிரண்டு நட்சத்திரங்களும், இடவோட்டாம், அசுபதி, பரணி, கார்த்திகை, புனர்பூசம், பூசம், ஆயிலியம், அத்தம், சித்திரை சுவாதி, மூலம், பூராடம், உத்திராடம் பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி, இப்பதினைந்தும் வலவோட்டு நட்சத்திரங்களாம்—எ-று. 1118

ஏயபரி யாரலெரி யேதமறு சோதியா
வாயவத்த மூலமுத்தி ராடமுடன்—தூயகடை
நாள்புரட்டை யீரைந்தி னன்முதற்காற் காடாதி
நீள்தனுவீ ருகவரு நேர்.

இ-ள். அசுபதி, கார்த்திகை, புனர்பூசம், ஆயிலியம், அஸ்தம், சுவாதி, மூலம், உத்திராடம் பூரட்டாதி, ரேவதி, இந்த (10) நட்சத்திரங்களின் முதற்காலுக்கு, மேடமுதல் தனுசுவரையுள்ள, (9) இராசிகளாம், (மேடச்செவ்வாய் முதல், தனுசுவியாழன் வரையுள்ள (100) ஞூமாம்)—எ-று. 1119

நேரிரண்டாங் காலுக்கு ரீண்மகரங் கும்பஞ்சேல்
சீரறுதேள் கோலரிவை தேர்கடகம்—வார்சியம்
தண்டாகு மூன்றுங்கா ருனிடப மேடமீன்
கொண்ட கும்ப மான்றனுசு கூறு.

இ-ள். இரண்டாங்காலுக்கு, மகரம்,கும்பம்மீனம், விருச்சிகம்,துலாம், கன்னி, கர்க்கடகம் சிம்மம், மிதுனமுமாம், (இவைக்கேற்பட்டகிரகங்களின்

௵-85) மூன்றாங்காலுக்கு, இடபம், மேடம், மீனம், கும்பம், மகரம், தனுசு, (மேடம், இடபம்) மிதுனமும் (இவைக்கேற்பட்ட கிரகங்களின் ௵83)

கூறுமே டம்மிடபங் கோல மிதுனமாம்
வீறுநாற் காலுக்கு மேலலவன்—நாறுமலர்க்
கோதாய் முதலாகக் கொண்மீன ராசிவரை
ஏதமறு புத்திக் கினம்.

இ-ள். நாலாங்காலுக்கு, கர்க்கடகமுதல், மீனம்வரையும், உள்ளராசியும், (அவைக்கேற்பட்ட கிரகங்களின் ௵, 86) 1121

இனமார் பரணி யெழிற்பூசஞ் சித்திரையோ
டனமேநா ளுத்திரட் டாதி—யெனுமைந்தின்
முற்காறேள் கோலரிவை முன்னுகட கஞ்சியம்
மிக்கதண்டே றுடமீ னம்.

இ-ள். பரணி, பூசம், சித்திரை, பூராடம் உத்திரட்டாதி, ஆகிய, (5) நட்சத்திரங்களின் முதற்கால், விருச்சிகம், துலாம், கன்னி, சிம்மம், கர்க்கடகம், மிதுனம், ரிஷபம், மேஷம், மீனமாம், (இவைக்கேற்பட்ட கிரகங்களின் ௵-100) 1122

மீயிரண்டோ கும்பமான் வின்மேடந் தொட்டரிவை
ஆயாறுமூன் றிற்கோல் தொட்டாறும்—ஏயதேள்
கோலரிவை யாகுங் குளிர்சீயந் தண்டுமுதல்
ஏலவின்மட் டாமிடமா யீறு.

இ-ள். இரண்டாங்காலுக்கு, கும்பம், மகரம், தனுசு, மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னியாம், (இவைக்கேற்பட்ட கிரகங்களின்- ௵-85) மூன்றாங்காலுக்கு துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம் மீனம், (விருச்சிகம், துலாம்) கன்னியாம்) இவைக்கேற்பட்ட கிரகங்களின், ௵, 83, நாலாங்காலுக்கு, சிம்மம், கர்க்கடகம், மிதுனம், ரிஷபம், மேஷம், மீனம், கும்பம், மகரம், தனுசுமாம், (இவைக்கேற்பட்ட கிரகங்களின், 1123
௵-86)

ஈறுமு ரோணிமக மேர்சுளகோ ணம்மிவற்றின்
வீறுமுற் காற்குவில் லாதிதண்டும்—கூறுசிங்கம்
நண்டிரண்டாங் கால்கன்னி நற்கோறேண் மீன்கும்பம்
அண்டுசுறு விற்றேள்கோ லாம்.

இ-ள். உரோகணி, மகம், விசாகம், திருவோணம், ஆகிய (4) நட்சத்திரங்களின், முதற்காலுக்கு தனுசு, மகரம், கும்பம், மீனம், மேஷம், ரிஷபம் மிதுனம், சிம்மம், கர்க்கடகமாம், (இவைக்கேற்பட்ட கிரகங்களின் ௵

86,) இரண்டாங்காலுக்கு, கன்னி, துலாம், (விருச்சிகம்,) மீனம், கும்பம், மகரம், தனுசு, விருச்சிகம், துலாமாம் (இவைக்கேற்பட்ட கிரகங்களின் ஞு, 83.) 1124

ஆமூன்றுங் காலுக் கரிவையரி நண்டுதண்டும்
வாமிடப மாடுதனு மான்குடமாம்—தேமொழிகேள்
மீனு டெருதுமிது னஞ்சிங்கம் நண்டரிவை
தானுங்கோ றேள்கடைக்கால் சாற்று.

இ-ள். மூன்றுங்காலுக்கு, கன்னி, சிம்மம், கர்க்கடகம், மிதுனம், இடபம், மேடம், தனுசு, மகரம், கும்பமாம். (இவைக்கேற்பட்ட கிரகங்களின், ஞு-85.) நாலாங்காலுக்கு, மீனம், மேஷம், இடபம், மிதுனம், கர்க்கடகம், சிம்மம், கன்னி துலாம், விருச்சிகமாம், (இவைக்கேற்பட்ட கிரகங்களின் ஞு-100.) 1125

சாற்று மகசிரம்யாழ் சார்பூர முத்திரமும்
போற்றுமனு டங்கேட்டை போரவிட்டம்—எற்றமுதற்
காலுக் கிடமாக் கயலாதி ஞெண்டுவரை
கோலக் குவிமுலையாய் கூறு.

இ-ள். மிருகசீரிடம், திருவாதிரை, பூரம், உத்திரம், அனுஷம், கேட்டை, அவிட்டம், சதயம், ஆகிய, (8) நட்சத்திரங்களின் முதல்காலுக்கு, மீனம், கும்பம், மகரம், தனுசு, விருச்சிகம், துலாம், கன்னி, சிம்மம், கர்க்கடகமாம், (இவற்றின் கிரகங்களின் ஞு-86. 1126

கூறுதண்டு குண்டைமறி கூன்சிலைதொட் டேறளவும்
வீறுமிரு காற்காமே லாங்காற்கு—மீறும்
அரிமதியாம் பெண்கோறே ளாமீன் குடமாம்
சுரிகுழலா யாமெனவே சொல்.

இ-ள். இரண்டாங்காலுக்கு, மிதுனம், ரிஷபம் மேஷம், தனுசு, மகரம், கும்பம், மீனம், மேடம், ரிஷபமாம், (இவற்றின் கிரகங்களின்ஞு83.) மூன்றுங்காலுக்கு, மிதுனம், சிம்மம், கர்க்கடகம், கன்னி, துலாம், விருச்சிகம், மீனம், கும்பம், மகரமாம், (இவற்றின் கிரகங்களின், ஞு 85.) 1127

சொல்லும்நா லாங்காற்குத் தூயதனு வாதியாய்
வல்லதக ரொன்பான் மனைவரையும்—நல்லாய்
இடவோட்டாக் கொள்வரீ ராறுகா லுக்கும்
விடமார்தே ளாதிவின்மட் டே.

இ-ள். நாலாங்காலுக்கு, தனுசு, விருச்சிகம், துலாம், கன்னி, சிம்மம், கர்க்கடகம், மிதுனம், ரிஷபம், மேடமாம், (இவற்றின் கிரகங்களின், ஞு

100.) விருச்சிகம்முதல், தனுசுவரை, உள்ள, (12) இராசியும், இடவோட் டாம்—எ-று. 1128

மட்டாருஞ் சக்கரத்தின் வானுண்டிற் கும்புத்தி
தொட்டாரு மாண்டிற்குந் தோகாய்கேள்—நட்டார்
தொகைதம்மை மாறிச் சொலுந்திசையாண் டுக்கி
மிகைவரும்பே றேபுத்தி மேல்.

இ-ள். காலசக்கரத்தின், திசைநாதனுக்கும், புத்திநாதனுக்கும், உள்ள வருஷத்தொகைக ளிரண்டையும், பெருக்கி, காலசக்கரமொத்த வருஷத் தொகையில், வகுக்கவரும், ஈவேபுத்திகாலமாம்—எ-று. 1129

மேடந் தனுமீனம் விர்ச்சிகஞ்சிங் கக்கதியாம்
நாடரிவை நண்டுசிங்கம் நற்றண்டு—கூடும்
தவளைக் கதிவலநேர் தான்சர்ப்ப வோட்டம்
திவளிடமே மர்க்கடமாச் செப்பு.

இ-ள். மேஷம், தனுசு, மீனம், விருச்சிகம், இவைசிங்கக்கதியாம், கன்னி, கர்க்கடகம், சிங்கம், மிதுனம், இவை, தவளைக்கதியாம், இவைவலப் பக்கமாறினல், சர்ப்பவோட்டமாம், இடப்பக்க மாறினல், வானரகதியாம்.

செப்புவல வோட்டுக்குச் சேர்தொட்ட லக்கினமெய்
ஒப்பரிய சீவன்விடு மோரையே—தப்புமிட
ஓட்டிற்கு மாறு யுரைவயிற்றி லேசுபர்கள்
கூட்டமுறின் நற்பலனே கூறு.

இ-ள். வலவோட்டு நட்சத்திரங்களுக்கு ஆரம்பராசி, உடலாம், கடைசி ராசி, உயிராம், இடவோட்டு நட்சத்திரங்களுக்கு, ஆருமிடத்திற் சுபர்கள் கூடி நின்ருல், நல்லபலனுண்டாம்—எ-று. 1131

ஆக செய்யுள் பாயிரமுட்பட 1146.

சாதகாலங்காரம் மூலமும் விசேட உரையும்

முற்றிற்று.

உ

நவக்கிரகங்களின் நாமதேயங்கள்.

சூரியன் பெயர்.

அகர்பதி
அசிதகரன்
அண்டயோனி
அரி
அரியமா
அருக்கன்
அருணன்
அலரி
அழலோன்
அனலி
ஆதகன்
ஆதவன்
ஆதி
ஆதித்தன்
ஆத்மன்
ஆயிரஞ்சோதி
இரவி
இருள்வலி
இனன்
உதயகாரகன்
எயிறிலி
எல்
எல்லவன்
எல்லி
எல்லை
எல்லோன்
என்று
என்றூழ்
எழ்பரியோன்
ஒளி
ஒளியோன்
ககன்
கதிரவன்
கதிரன்
கதிரோன்
கதிர்
கனலி
காய்
காலன்
கிரகபதி
கிரணமாலி
சண்டன்
சவிதா
சாயாபதி
சான்றோன்
சித்திரபானு
சுடரோன்
சுடர்
சூரன்
சூரி
செக்கன்
செக்கிரன்
செங்கதிரோன்
செஞ்சுடர்
சோதி
ஞாயிறு
தபனன்
தரணி
தமிராரி
திவாகரன்
தினகரன்
தினமணி
நபமணி
பகலோன்
பகல்
பங்கயன்
பதங்கன்
பதுமபாணி
பயித்தியக்காரகன்
பரிதி
பருதி
பர்க்கன்
பவனன்
பனிப்பகை
பாற்கரன்
பானு
பிங்கலன்
பிதுர்காரகன்
பிரபாகரன்
பொச்சை
மணிமான்
மார்த்தாண்டன்
மித்திரன்
மீமன்
மீவன்
முந்தரி
முந்தன்
முளரிநண்பன்
முன்னவன்
விகர்த்தனன்
விண்ணவன்
விண்மணி
விரிச்சிகன்
விரோசனன்
வெஞ்சுடர்
வெய்யோன்
வெய்யவன்
வெயில்
வேந்தன்

சந்திரன் பெயர்.

அந்தரி
அரிச்சிகன்
அமுதகிரணன்
அம்புலி
அலவன்
அல்லோன்
ஆலன்
ஆலோன்
இந்தன்
இந்து
இமகரன்
இமகிரணன்
இராக்கதிர்
இருதி
இனன்
உடுபதி
உடுவின்வேந்தன்
எல்லிநாதன்
கங்குற்கிறைவன்
கலாநிதி
கலையினன்
களங்கன்
குபேரன்
குமுதசகாயன்
குமுதநண்பன்
குமுதபதி
குரங்கி
சங்கயன்
சங்கலன்
சசி
சாந்தன்
சீதன்
சுதாகரன்
செச்சை
சோமன்
சோவ்ன்
தண்சுடர்
தண்ணவன்
தன்னவன்
தாய்
தாராபதி
தானவன்
திங்கள்
தெவ்வு
தேதி
நிசாகரன்
நிசாபதி
நிலவு
பக்கன்
பக்கிரன்
பசுங்கதிர்த்தே
பனிக்கதிர்
பிறை
புரணி
மதி
மதியம்
மதிரன்
மாதுர்காரகன்
மானேந்தி
முயலின்கூடு
மேதகன்
ராமன்
வத்திரன்
வாரி
விது
வீபத்து
வெண்கதிரோன்

செவ்வாயின் பெயர்.

அங்காரகன்
அரத்தன்
அழலவன்
அழலோன்
அழல்
அறியவன்
ஆரல்
உலோகிதன்
உதிரன்
எரிச்சிகன்
கந்தன்
குஜன்
குத்திரன்
குருதி
கொச்சை
சகோதரகாரன்
சின்னவன்
சூதகன்
செங்கயன்
செந்தரி
செந்தீவண்ணன்
செய்யவன்
சேதி
சேந்தன்
சேய்
சோரி
நிலமகன்
பரணி
பூசுதன்
பூமகன்
பூமன்
பூவன்
பௌமன்
மங்கலன்
மண்ணவன்
வக்கன்
வக்கிரன்
வேலன்

புதன் பெயர்.

அருணன்
அறிஞன்
அனுவழி
கணக்கன்
கண்ணவன்
கன்னவன்
சக்கன்
சக்கிரன்
சரணி
சவுமன்
சாமன்
சாய்
சாவன்
சித்திரன்
சிந்தை
சௌமியன்
தங்கயன்
தஙகலன்
தந்தரி
தந்தன்
தாதுவன்
தெரிச்சிகன்
தேர்ப்பாகன்
நட்சத்திரநேமி
நிபுணன்
நிருதி
நீதகன்
பச்சை
பண்டிதன்
பாந்தன்
புங்கயன்
புங்கலன்
புந்தி
புலவன்
பேரி
போதி
மதிமகன்
மாதுலகாரகன்
மாலவன்
மாலன்
மால்
மேதை
வதிரன்

வியாழன் பெயர்.

அந்தணன்
அமைச்சன்
அரசன்
ஆண்டளப்பான்
இரணி
எந்தன்
குரு
சிகண்டிசன்
சீமன்
சீவன்
சுரர்குரு
சுருதி
சொக்கன்
சொக்கிரன்
தேசிகன்
தேவகுரு
தேவமந்திரி
பண்ணவன்
பதிரன்
பாலன்
பிரகஸ்பதி
பீதகன்
புங்கயன்
புங்கலன்
புங்கவன்
புத்திரன்
புத்திரகாரகன்
புந்தரி
புந்தன்
புரிச்சிகன்.
பூரி
பொன்
பொன்னவன்
மந்திரி
மறையவன்
விச்சை
வியாழன்
வேதி
வேய்

சுக்கிரன் பெயர்.

அசுரகுரு
அநாவிலன்
ஆசனன்
இச்சை
உசனன்
உரிச்சிகன்
ஒள்ளியோன்
கவி
களத்திரகாரகன்
காந்தன்
காப்பியன்
காமன்
காவன்
சந்தன்
சல்லியன்
சிதன்
சீதகன்
சுக்கன்
சுக்ரகின்
சுங்கன்
சுதிரன்
சுந்தரி
தயித்தியமந்திரி
நங்கயன்
நங்கலன்
நத்திரன்
பளிங்கு
பாய்
பார்க்கவன்
பிரசுரன்
பிருகு
பிருதி
பின்னவன்
புகர்
புயல்
பெண்ணவன்
மழைக்கோள்
மாதி
மாரி
லோலன்
விரணி
வெள்ளி

சனியின் பெயர்.

அக்கன்	காரி	நீலன்	மந்தன்
அக்கிரன்	கீழ்மகன்	நோய்	பிருதி
அஞ்சனன்	சந்தில்	நோய்முகன்	முங்கயன்
அந்தகன்	சவுரி	பங்கு	முங்கலன்
ஆயுட்காரகன்	சாவகன்	பங்குபாதன்	முச்சை
எண்ணவன்	சுன்	பாதங்கி	முடவன்
என்னவன்	சோந்தன்	பீதி	முதுமகன்
கதிர்மகன்	தமனியன்	பேதகன்	முரணி
கரிச்சிகன்	தீமன்	மத்திரன்	மேற்கோள்
கரியவன்	தீவன்	மந்தரி	விதிரன்

இராகுவின் பெயர்.

அகி	உக்ரகின்	கரும்பாம்பு	பரிச்சிகன்
அதிரன்	எக்ஷணிகாரகன்	குந்தன்	பிதாமககாரகன்
அரணி	ஓதி	கூந்தன்	போககாரகன்
இந்தரி	ஓலன்	சத்திரன்	மதிப்பகை
இராகு	கங்கயன்	சீய்	யோககாரகன்
ஈமன்	கங்கலன்	தமம்	ராதகன்
ஈவன்	கருங்கோள்	திண்ணவன்	வச்சை
உக்கன்	கருதி	தின்னவன்	வீரி

கேதுவின் பெயர்.

எதிரன்	சிகி	துச்சை	பொருதி
கதிருணி	சிரணி	நண்ணவன்	மாதாமககாரகன்
கதிர்ப்பகை	செம்பாம்பு	நந்தரி	மிருத்தியுபுத்திரன்
கெந்தன்	ஞானி	நன்னவன்	முரணி
கேதகன்	தித்திரன்	நோமன்	மூலன்
கேது	திரிச்சிகன்	நோவன்	வெங்கயன்
கேந்தன்	துக்கன்	பாதி	வெங்கலன்
கொடியன்	துக்கிரன்	பேய்	வேரி

குளிகன் பெயர்.

காதகன்	கோதி	போந்தன்	வங்கயன்
காரிசுதன்	சதிரன்	மச்சை	வங்கலன்
குண்ணவன்	சனிமகன்	மரணி	வாலன்
குந்தன்	சுரிச்சிகன்	மருதி	விக்கன்
குன்னவன்	திரவியகாரகன்	மாந்தி	விக்கிரன்
கேய்	பத்திரன்	மூரி	வீமன்
கொந்தரி	பொந்தன்	வம்பாம்பு	வீவன்

நவக்கிரக நாம சூட்சம சூசிகை.

சூரியன்.	சந்திரன்.	செவ்வாய்.	புதன்.	வியாழன்.
ஆதகன்	மேதகன்	சூதகன்	நீதகன்	பீதகன்
கதிரன்	மதிரன்	உதிரன்	வதிரன்	பதிரன்
காய்	தாய்	சேய்	சாய்	வேய்
காலன்	ஆலன்	வேலன்	மாலன்	பாலன்
சூரி	வாரி	சோரி	பேரி	பூரி
செக்கன்	பக்கன்	வக்கன்	சக்கன்	சொக்கன்
செக்கிரன்	பக்கிரன்	வக்கிரன்	சக்கிரன்	சொக்கிரன்
செண்டு	தேதி	சேதி	போதி	வேதி
கோதி	கண்டு	குண்டு	விண்டு	தொண்டு
தரணி	புரணி	பரணி	சரணி	இரணி
பங்கயன்	சங்கயன்	செங்கயன்	தங்கயன்	புங்கயன்
பருதி	இருதி	குருதி	நிருதி	சுருதி
பிங்கலன்	சங்கலன்	மங்கலன்	தங்கலன்	புங்கலன்
பொச்சை	செச்சை	கொச்சை	பச்சை	விச்சை
மித்திரன்	வத்திரன்	குத்திரன்	சித்திரன்	புத்திரன்
மீமன்	சோமன்	பூமன்	சாமன்	சீமன்
மீவன்	சோவன்	பூவன்	சாவன்	சீவன்
முந்தரி	அந்தரி	செந்தரி	தந்தரி	புந்தரி
முந்தன்	இந்தன்	கந்தன்	தந்தன்	புந்தன்
முன்னவன்	தன்னவன்	சின்னவன்	கன்னவன்	பொன்னவன்
விண்ணவன்	தண்ணவன்	மண்ணவன்	கண்ணவன்	பண்ணவன்
விரிச்சிகன்	அரிச்சிகன்	எரிச்சிகன்	தெரிச்சிகன்	புரிச்சிகன்
வேந்தன்	சாந்தன்	சேந்தன்	பாந்தன்	எந்தன்

நவக்கிரக நாம சூட்சம சூசிகை.

சுக்கிரன்.	சனி.	இராகு.	கேது.	குளிகன்.
சீதகன்	பேதகன்	ராதகன்	கேதகன்	காதகன்
சுதிரன்	விதிரன்	அதிரன்	எதிரன்	சதிரன்
பாய்	நோய்	சீய்	பேய்	கேய்
லோலன்	நீலன்	ஓலன்	மூலன்	வாலன்
மாரி	காரி	வீரி	வேரி	மூரி
சுக்கன்	அக்கன்	உக்கன்	துக்கன்	விக்கன்
சுக்கிரன்	அக்கிரன்	உக்கிரன்	துக்கிரன்	விக்கிரன்
மாதி	பீதி	ஓதி	பாதி	கோதி
பெண்டு	இண்டு	தண்டு	துண்டு	மண்டு
விரணி	மூரணி	அரணி	சிரணி	மரணி
நங்கயன்	முங்கயன்	கங்கயன்	வெங்கபான்	வங்கயன்
பிருதி	மிருதி	கருதி	பொருதி	மருதி
நங்கலன்	முங்கலன்	கங்கலன்	வெங்கலன்	வங்கலன்
இச்சை	முச்சை	வச்சை	துச்சை	மச்சை
நத்திரன்	மத்திரன்	சத்திரன்	தித்திரன்	பத்திரன்
காமன்	தீமன்	ஈமன்	நோமன்	வீமன்
காவன்	தீவன்	ஈவன்	நோவன்	வீவன்
சுந்தரி	மந்தரி	இந்தரி	நந்தரி	கொந்தரி
சந்தன்	மந்தன்	குந்தன்	கெந்தன்	பொந்தன்
பின்னவன்	என்னவன்	தின்னவன்	நன்னவன்	குன்னவன்
பெண்ணவன்	எண்ணவன்	திண்ணவன்	நண்ணவன்	குண்ணவன்
உரிச்சிகன்	கரிச்சிகன்	பரிச்சிகன்	திரிச்சிகன்	சுரிச்சிகன்
காந்தன்	சோந்தன்	கூந்தன்	கேந்தன்	போந்தன்

உ

சோமசுந்தரர் துணை.

சாதகாலங்கார

பொருள் விளக்க அகராதி.

பொருள்.	பக்கம்.
அங்கிஷபலன்	96
அங்கவீனம்	184
அஷ்டகவர்க்கம்	396
அலியபலன்	255
அவையடக்கம்	6
ஆக்கியோன்பெயர்	8
ஆசிரியர்வணக்கம்	3
ஆண்பெண்அறிய	27
அண்பெண்நாட்களின்விபரம்	29
ஆதாயபலன்	317
ஆயுட்பலன்	272
ஆயுதவிரணமறிய	353
ஆறாம்பாவம்	252
ஆறாவதுபாவகம்	11
இடபவிராசிக்கு	21
இரண்டாம்பாவகம்	199
இரண்டாவதுபாவகம்	9
இராகுதிசாபுத்திபலன்	379
இராகுமகாதிசைபலன்	393
இராசிகளிற்சந்திரனின்றபலன்	85
இராசிகளிற்சனிநின்றபலன்	90
இராசிகுணகாரம்	405
இராசிமானசங்கியை	35
இராசிவடிவுநிறம்முதலியன	31
இராசிவிழிப்பு	32
இலக்கினத்தியாச்சியம்	35
இலக்கினத்திற் கிரகங்கள் நின்றபலன்	109
இலக்கினநிச்சயம்	30
இலக்கினபலன்	100
இலங்கைராசிமானசங்கை	356
இன்னகிரகத்துக்கு இன்ன கிரகம் வலிவுடையதென	17
இன்னதானங்கள் இவ்வளவு பலமெனல்	17
உச்சபலன்	129
உட்சித்திரம்பிரிக்கும்வகை	370

பொருள்.	பக்கம்.
எட்டாம்பாவம்	272
எட்டாவதுபாவகம்	12
ஏழாம்பாவம்	256
ஏழாவதுபாவகம்	11
ஐந்தாம்பாவம்	240
ஐந்தாம்பாவகம்	11
ஒன்பதாம்பாவம்	305
ஒன்பதாவதுபாவகம்	12
கடகவிராசிக்கு	22
கரணபலன்	112
கர்ப்பதானமறிய	324
கர்னபூஷணபலன்	231
களத்திரபலன்	256
கன்மபலன்	311
கன்னிராசிக்கு	22
காரககிரகங்கள்	15
கால்களில்வலிவுடையகிரகங்	18
காலசக்கிரம்	408
காலவோரை	118
கிரகங்களின் சாதிநிறம் கதிர் முதலியன	32
கிரகங்களுக்குஸ்தானபலம்	17
கிரககுணகாரம்	405
கிரகசமத்துவம்	19
கிரகசுபாசுபங்கள்	18
கிரகதிசாவருடமறிய	368
கிரகதிசையறிய	”
கிரகதேவதை	15
கிரகநட்பு	19
கிரகபகை	20
கிரகமாலிகாயோகபலன்	132
கிரகருசி	217
கிரகவலிவு	16
கும்பவிராசிக்கு	24
குருதிசாபுத்திபலன்	381
குருமகாதிசைபலன்	393
குளிகனுக்கு	25

பொருள்.	பக்கம்.
கேதுதிசாபுத்திபலன்	387
கேதுமகாதிசைபலன்	394
கேந்திரபலன்	361
கோசாரநற்பலஸ்தானம்	395
கோசாரபலன்	,,
கோசாரவேதை	,,
சகடயோகபலன்	135
சகோதரபலன்	218
சத்துருபலன்	252
சந்திரதிசாபுத்திபலன்	374
சந்திரமகாதிசைபலன்	393
சந்யாசியோகம்	316
சந்திரனைகிரகங்கள்பார்த்தப	92
சனிதிசாபுத்திபலன்	383
சனிமகாதிசைபலன்	394
சாதகமென்பதின்னதெனல்	6
சிங்கவிராசிக்கு	22
சித்திரம்பிரிக்கவகை	369
சீவனம்	358
சுக்கிரதிசாபுத்திபலன்	389
சுக்கிரமகாதிசைபலன்	394
சூரியதிசாபுத்திபலன்	372
சூரியமகாதிசைபலன்	392
செவ்வாய்திசாபுத்திபலன்	376
செவ்வாய்மகாதிசைபலன்	393
க்ஷேத்திரபலன்	234
தரித்திரயோகம்	181
தனபலன்	208
தனுசுவிராசிக்கு	23
திசாபுத்திபலனறிய	372
திதித்தியாச்சியம்	119
திரிம்சாங்கிஷம்	128
திரேக்காணம்	125
துர்க்குணமறிய	352
துர்ப்பிட்சகாலம்	365
துலாவிராசிக்கு	23
துவாதசபாவபலன்கள்	187
நடராஜர்துதி	2
துவாதஷாங்கிஷம்	128
நட்சத்திரத்தியாச்சியம்	120
நட்சேத்திரபலன்	51
நட்சத்திரபாதபலன்	64
நட்பாட்சி யுச்சம் பகை நீசம் இவைகளறிய	21
நவக்கிரகதேசம்	26
நவாங்கிஷலக்கினமறிய	128
நாட்கண்டம்	122
நாய்கடியறிய	351
நால்வர்துதி	2
நான்காம்பாவம்	223
நான்காவதுபாவகம்	10
நித்தியபலன்	186
நூலின்பெயர்	5
நூல்வரலாறு	3
நெய்யிற்கையிடல்	352
நேத்திரபலன்	199
பஞ்சபூதக்கிரகம்	34
பதினோராம்பாவம்	317
பதினோராவதுபாவகம்	13
பத்தாம்பாவம்	311
பத்தாவதுபாவகம்	13
பாவிஷயம்	236
பன்னிரண்டாம்பாவம்	319
பன்னிரண்டாம்பாவகம்	14
பன்னிரண்டு ராசிக்கும் சுபா சுபக்கிரகம்மாரகபல	291
பாக்கியபலன்	308
பாம்புகடியறிய	351
பாலாரிட்டம்	41
பாலாரிட்டமாதங்கள்	296
பாவகவிபரம்	9
பிதுர்பலன்	305
பிரசவவிதி	36
பிறந்தநட்சத்திரவாரதுர்ப்பல	42
புததிசாபுத்திபலன்	385
புதமகாதிசைபலன்	394
புதனுக்குசிறப்புவிதி	18
புத்திபிரிக்கும்வகை	369
புத்திரபலன்	240
பெண்கள்ஜாதகம்	325
பொதுவிலட்சணம் பாவகவிவ	9
போஜனபாத்திரபலன்	222
போதகன்வேதகன்பாசகன்காரகன்அறிய	370
மகரவிராசிக்கு	24
மகாதிசைபலனறிய	392
மறுமையிலடையுமிடம்	367
மாணுக்கன்விதி	7
மாதங்கலப்தம்	405
மாதுருபலன்	229

பொருள்.	பக்கம்.	பொருள்.	பக்கம்.
மாதுர்அரிட்டம்	239	வாகனபலன்	223
மாரகதிசையறிய	368	வாக்கின்பலன்	204
மிதுனத்திற்கு	102	வாரத்தியாச்சியம்	122
மீனவிராசிக்கு	24	வித்தியாபலன்	205
முக்குணவேளையறிய	116	விநாயகர்துதி	1
முதலாம்பாவகம்	187	வியாதிதோன்றுமிடம்	345
முதலாவதுபாவகம்	9	வியாதியறியும்படி	342
மூலத்திரிகோணம்	26	விருச்சிகவிராசிற்கு	23
மூன்றும்பாவகம்	218	விரையபலன்	320
மூன்றுவதுபாவகம்	10	விழுச்சாயைசரபிண்டத்துருவம்	356
மேடம்	100	வேதைஸ்தானம்	396
யோகபலன்	135	வேலர்கணபதிதுதி	1
ரோகபலன்	253		

பொருள்விளக்க அகராதி

முற்றுப்பெற்றது.

உ

மீனாக்ஷி துணை.

சாதகாலங்கார செய்யுளகராதி.

செய்யுள்.	பக்கம்.
அ	
அகடின்	135
அக்கினியால்	392
அங்கிசையறியும்	96
அங்கியிற்	378
அஞ்சாகுமிடத்	240
அஞ்சாமிடத்திற்	241
அஞ்சிடான்	112
அஞ்சிற்கஞ்சிற்	240
அஞ்சேபாக்கி	173
அடறக்கணய	16
அடைந்திடுஞ்சன்ம	280
அடைவொடுசிங்	103
அட்டமத்ததிபன்	272
அட்டமாதிபனுங்	279
அணுகுநிதி	211
அத்தங்கமதாய்	231
அந்தணனுற	22
அந்தநான்கா	169
அந்தமாங்கேதிற்	388
அந்தமுறுமீன	108
அந்தலாபனுற்ற	174
அமைத்திடு	75
அம்புலிதனிலே	375
அம்புலியின்குரு	213
அம்புலியோர்	358
அரசராற்பிரிய	112
அரசனுரேழிற்	148
அரசேகேள்	225
அரசேயெட்டொன்	136
அரசேமூன்றிலீரை	160
அரசேலாப	172
அரவொடு	24
அருக்கன்	118
அருக்கனிலருக்கன்	374
அருக்கனில்வெள்ளி	372
அருளுந்தந்தை	308
அருள்சன்மலக்	191

செய்யுள்.	பக்கம்.
அலியட்ட	243
அலைவறுஞ்சன்மத்	264
அல்லல்சேரங்க	114
அளவேயொன்பான்	166
அறந்திகழுஞ்	254
அறிதாதை	221
அறிந்தலக்கினத்	193
அறிந்திடாய்	74
அறிந்திடும்பரிதி	246
அறிந்தேயெட்டிற்	298
அறியுங்கன்மாதி	314
அறுபதிலின்ன	302
அறையுந்தகர்	46
அறையும்மூன்றிற்	221
அவரவரபகார	369
அவனிமீதெட்	43
அன்பாமுபய	301
அளவேயொன்பான்	166
அன்பிராசத	116
அன்புருவாங்	2
அன்றவனுதித்த	45
அன்னைதன்றனத்	229
அன்னைபிதாவுக்	52
ஆ	
ஆகரெட்டைராசி	327
ஆகியசன்மத்தினி	256
ஆகியநல்வித்தை	98
ஆகியமகத்தின்	150
ஆகுஞ்சன்மலக்	315
ஆகுஞ்செவ்வாய்	130
ஆகுமிரண்டாதிப	207
ஆகும்லக்கினம்	275
ஆகுவாகனத்தோன்	151
ஆடரியேறில்	187
ஆடும்பத்தா	312
ஆட்டில்வேள்	92
ஆணிமதியந்	232

செய்யுள்.	பக்கம்.
ஆணியெனுங்	106
ஆண்டமதியும்	176
ஆண்டமிதுனம்	273
ஆண்டிடுமிடப	101
ஆண்டினிற்கேந்தி	157
ஆண்டுமூவேழதன்	164
ஆதவனுக்குறவு	19
ஆதவன்சசிலக்	360
ஆதவன்பவள	32
ஆதவன்புங்க	3
ஆதித்தன்றனக்கா	396
ஆதித்தன்றனிலே	374
ஆதித்தன்றன்னி	373
ஆந்தனுவிசாமன்	95
ஆமட்டமத்தினுதி	274
ஆமரசனுச்ச	130
ஆமாம்வெள்ளி	136
ஆமிரவிமதிநல்	227
ஆமிலக்கினத்துக்	260
ஆமூன்றுங்	410
ஆமூன்றிற்	144
ஆமெட்டதிபன்	329
ஆமெனுந்தீர	72
ஆமெனுமைந்தா	247
ஆமெனும்பத்தா	313
ஆமேகளத்திரா	271
ஆமேகிரகமேழு	158
ஆமேசுக்கிர	268
ஆமேடமெருது	147
ஆமேதேளுமிலக்	171
ஆமேயரசன்	300
ஆமேயிரவிசுக்கிர	202
ஆமேழாமதிபன்	160
ஆம்வகை	406
ஆயசித்திரை	42
ஆயவோரைக்	18
ஆரணங்கேகேள்	284
ஆரணுலாமிடத்	237

செய்யுள்.	பக்கம்.
ஆரேனுமூவ	131
ஆரோக்கியங்	393
ஆர்கடகந்தேண்	219
ஆவணிமுற்பக்	102
ஆவரிந்து	210
ஆவன்கோலிட	94
ஆவன்சன்மத்தி	209
ஆவன்ஞானி	312
ஆவன்பத்தாதி	164
ஆவார்சன்ம	349
ஆவாரைந்தாமதி	169
ஆளுங்கர்க்கடக	145
ஆளுமைந்தா	176
ஆளும்லக்கின	143
ஆள்சன்ம	134
ஆறதாமரவுக்கேழு	123
ஆறுகும்வீட்டதிப	253
ஆறுமிடத்திலாய	220
ஆறிற்செங்கதிர	191
ஆறுடனிரண்டி	189
ஆறுடனேழேமாதி	179
ஆறெட்டுபன்னிர	272
ஆனகேந்திரத்திற்	206
ஆனதோர்சரீர	15
ஆனதோர்பணபர	149
ஆனதோர்பாக்கியா	322
ஆனதோர்மிதுனங்	91
ஆனதோரேழிடத்	269
ஆனபரிதீ	163
ஆனபுந்திசுப	18
ஆனபுந்தியங்கிஷ	98
ஆனபெண்ணு	357
ஆனமதியின்	325
ஆனலக்கினத்திற்	248
ஆனவெள்ளி	15
ஆனன்மூன்றி	183
இ	
இசைந்தவன்னே	232
இடபஞ்சிங்கம்	405
இடபமேடாண்டிம்	192
இடமுறுஞ்சன்மத்	283
இடுசெவ்வாய்	334
இடுஞ்சென்	202

செய்யுள்.	பக்கம்.
இடும்பைசேர்	366
இடும்பையாதித்தன்	281
இட்டமாம்வெள்ளி	391
இதமானவசன	56
இதுவேகுரு	165
இதுவேகேந்திர	298
இந்தப்படி	372
இந்திரகோப	112
இந்துசேயாறு	233
இந்துதிசைக்கு	370
இந்துவுக்கிரண்டா	142
இந்துவுநல்லோ	189
இந்துவோடசுபர்கூ	185
இந்துவசுரகுரு	336
இந்துடன்பாவ	352
இந்துதிசைக்கு	370
இயம்புசன்மமனே	40
இரவிக்குப்பன்னி	140
இரவிக்கோன்பான்	404
இரவிசேயிருந்த	122
இரவிராகு	186
இரவியிலிந்து	373
இரவியுஞ்சசியு	255
இரவியைந்தின்	395
இராகுவிலிராகு	380
இருக்குமற்பவயது	277
இருந்தகதிர்	137
இருந்தசுக்கிரன்	361
இருந்ததனலாப	364
இருந்தபத்தினன்	158
இருந்தபத்தாமிறை	247
இருந்தபன்னிரண்	236
இருந்தவில்லே	216
இருந்திடுஞ்சன்ம	280
இருந்திடுமிதுன	247
இருந்திடுமிரண்	270
இருந்துசாத்	117
இருமைசேர்	154
இரும்பையாதி	281
இலகியமூன்று	237
இலகுமிரண்டின்	217
இலக்கினமாதி	403
இலவுமுருக்கலர்	55
இல்லாதிரண்டு	402
இல்லேழுமிரண்டா	259

செய்யுள்.	பக்கம்.
இவனேசன்ம	161
இவன்றன்	296
இறுஞ்சன்மாதி	304
இறுமாந்துறு	46
இறுமேபாவக்	50
இனமார்பரணி	409
இனிதாங்கன்னி	168
இனிதாம்லக்	176
இனியசிங்கமெருதா	32
இனியசெவ்வாய்	359
இனியசோமன்	350
இனியதோர்மிதுன	102
இனியநல்வசன	68
இனியமகரஞ்	162
இனியவெள்ளி	332
இன்புறுமிராகிற்	380
ஈ	
ஈண்டியகேதிற்	387
ஈதலீவதேவர்	323
ஈரறுமுரோணி	409
ஈறிலாவணக்க	78
ஈறிலாவேழாமாதி	260
ஈறுதாமதத்திற்	117
ஈனமிலக்கினுதி	257
ஈனமில்லாநற்	59
உ	
உக்கிரகுணத்தா	113
உச்சமுச்சாங்கி	17
உச்சமென	129
உச்சமோன்	17
உடன்கடகஞ்	332
உடன்சனி	305
உடன்சன்மலக்	258
உணர்சிங்கம்	333
உணர்ந்திடும்புந்தி	267
உண்டாகியவைந்தா	329
உண்டாஞ்சென்ம	196
உண்டாமதியும்	341
உண்டாமைந்தாம்	249
உண்டாம்லாதிப	317
உண்டாம்விப்	227

செய்யுள்.	பக்கம்.
உண்டானலாபாதி	318
உண்மைபாக்கியாதி	315
உண்மைப்புதன்	197
உதயாதிகடிகைதனை	30
உதித்தருளுஞ்சென்	146
உதித்தவொன்றைந்	241
உதித்திடுநற்சன்ம	128
உதித்திடுமிராகி	380
உயரும்பவன	325
உய்யரியிந்	93
உய்யுமிரவி	43
உய்யும்மெரு	328
உரைக்குங்கதிர்	338
உரைக்குமேழாதி	262
உரைக்கும்பலவான்	177
உரைசெறிகடக	103
உரைசெறிகிரக	40
உரைசெறிகுரு	152
உரைத்தகோள்	403
உரைசெறிமூன்று	219
உரைசெறியலி	242
உரைத்திடிலாப	157
உரைத்திடுஞ்சவு	9
உரைத்திடுதனவான்	67
உரைத்திடுநான்கா	226
உரைத்திடுமிராகு	380
உரைத்திடும்பத்தி	302
உரைத்திடும்பாவ	286
உரைத்திடுவேர்தசமி	119
உரைபகருங்	348
உரைப்பாமதுர	171
உலகுறுகுரு	382
உளதேபத்தா	177
உளதேலக்கினுதி	166
உள்ளசன்மாதி	171
உள்ளசுபர்கள்	341
உள்ளபடிகலே	111
உள்ளதொரு	131
உள்ளதோர்கடக	152
உள்ளதோர்மூன்று	134
உள்ளபத்தாமதி	129
உள்ளபல	326
உள்ளபிறை	326
உள்ளயகிழ்ந்	85
உள்ளமதிவித்தை	97

செய்யுள்.	பக்கம்.
உள்ளமீனத்	95
உள்ளலக்கினமே	45
உறுஞ்சனிக்கிழமை	239
உறுஞ்சன்மத்தார	141
உறுஞ்சன்மத்திற்	306
உறுஞ்சன்மலக்	44
உறுமொன்பதா	308
உற்றதொகை	6
உற்றமெய்	154
உற்றிடுஞ்சென்	194
உன்னுமூன்று	218
எ	
எங்கோனிரவி	203
எடுத்தபத்தா	310
எட்டினுதி	353
எட்டாமிடத்திற்	351
எட்டாம்பாவரங்கி	257
எட்டுவருஷம்	172
எண்ணியலக்கினத்	43
எண்ணியலக்கினங்	132
எண்ணியரெண்டா	222
எண்ணும்லங்கி	173
எதிருறுங்கதிர்	373
எய்தியிளைத்த	324
எழிற்கண்	199
எழுந்திடுலக்	303
எனவும்வெள்ளி	197
என்பாரெட்டா	275
என்பாரொன்பா	233
என்பார்சன்மங்	307
என்றுலொன்றேழ்	159
என்றுமெய்தூல	69
என்றுமேழா	335
என்றுழாய்புத	24
என்னரன்விடை	93
என்னுந்தேச	357
என்னுமம்புவியி	252
என்னுமூத்தவர்	13
என்னுமூன்றுமதிப	220
ஏ	
ஏந்துசெவ்வாய்	18

செய்யுள்.	பக்கம்.
ஏயதிரேக்காணத்	216
ஏயதேய்பிறை	353
ஏயதேள்புதன்	294
ஏயபரியார	408
ஏயபாக்கியாதி	170
ஏயலக்கினமீன	148
ஏயலாபாதியே	269
ஏருஞ்சன்ம	352
ஏர்பெறுநல்ல	79
ஏழாமிடத்தோன்	271
ஏழிடமிரண்டாமா	268
ஏழ்வீட்டினிற்	258
ஏற்கவேபன்னி	322
ஏற்றலக்கின	353
ஏற்றியசன்ம	269
ஐ	
ஐந்தின்வீட்டிற்	251
ஐயாவிரண்டிற்	175
ஒ	
ஒருநாளுக்	370
ஒருவர்மகா	372
ஒன்பதற்கொன்ப	179
ஒன்பதாம்வீட்டுக்	251
ஒன்பானிடத்திற்	306
ஒன்பான்றேய்	300
ஒன்றியகோள்	406
ஒன்றேகாரி	297
ஒன்றேயேழா	175
ஒன்றேழெட்டொடு	190
ஓ	
ஓங்குமலக்	166
ஓதியகளத்தி	270
ஓதியகோசரந்	395
ஓதியபன்னிரண்டா	322
ஓதுகதிருந்தேய்	323
ஓதுமைந்தொன்பா	305
ஓதுமக்கினியா	361
ஓராசாரஞ்	5
ஓராய்கோளோர்	403

செய்யுள்.	பக்கம்.
ஓராலக்கினம்	142
ஓரேழிற்பாவர்	258
ஓர்மனைதனி	406

க

செய்யுள்.	பக்கம்.
கடியசன்மந்	49
கடையரவதனிற்	388
கண்டசனியுங்	306
கண்டசன்மலக்	181
கண்டலக்கின	286
கண்டசன்மலக்கின	349
கண்டசன்மங்கேந்	364
கண்டசன்மஞ்சர	290
கண்டசுரு	107
கண்டசெவ்வாய்	97
கண்டதேய்பிறை	356
கண்டபஞ்ச	34
கண்டபத்தாமாதி	311
கண்டபலன்	236
கண்டபனிரண்	184
கண்டபன்னிரண்	321
கண்டபாக்கியாதி	137
கண்டபின்குளிக	282
கண்டபுதனங்	359
கண்டபத்தா	311
கண்டரிஷபஞ்	160
கண்டருளுநீசபங்க	146
கண்டலக்கினங்கள்	286
கண்டவமரபக்க	296
கண்டவன்னைபிதா	233
கண்டவாறு	302
கண்டவிரண்டிற்	300
கண்டவெட்டாதி	279
கண்டவேழாமனை	337
கண்டவேழெட்	276
கண்டவேளை	349
கண்டிடுமகரத்	95
கண்டிடுலாபாதி	309
கண்டிலக்கின	133
கண்டீர்	88
கண்டுமொழிமாதா	38
கண்டுமொழியா	209
கண்டெனமிருது	72
கண்ணுரெட்டி	341
கண்ணுரிட	196
கண்ணுர்க்கும்ப	274
கதிரவற்கிரண்டிற்	229
கதிரோனுதய	277
கதிர்பதியென்று	395
கருதுஞ்சன்ம	197
கருதுபன்னி	128
கர்ப்பத்தான	324
கலகவான்கடிய	114
களத்திரலக்கினுதி	257
களங்கமில்லா	358
களமேரிஷபஞ்	292
களிப்பான	25
கனமிகவுடைய	114
கன்னிகேள்	326

கா

செய்யுள்.	பக்கம்.
காசம்பொதிந்த	136
காட்டுங்குசன்	346
காட்டுஞ்சன்ம	268
காணியாஞ்சனி	327
காணுங்கேதுங்	49
காணுநேத்திர	203
காணும்லக்கின	242
காணும்லாபாதி	175
காதலாருமிடத்திற்	252
காரியிற்காரி	383
கார்த்திகைமுத	368
காலமாம்பரிதி	289
காலமாம்வியங்	323
காலமாஞ்சிவப்	65
காலனைப்போல	71
காலேகோவிடத்	87
காலைமாப்ப	323
காலைமுழுக்	53
காலையோரேழிற்	288

கு

செய்யுள்.	பக்கம்.
குசனுறிற்பித்த	109
குடும்பங்களத்திர	267
குடும்பத்தானுதி	204
குட்டமாங்கருப்	345
குட்டமாஞ்சனி	345
குணகாரத்தொகை	405
குணமாமேழிற்	338
குணமார்தன்மகன்	138
குரவார்	182
குலமுளகேதிற்	389
குலவியமூலத்திரி	26
குலவுமிரண்டாம்	143
குளிகன்கருங்கோ	344
குளிகன்செவ்வாய்	353
குறித்ததாய்தந்தை	239
குறித்திடுங்கமன	11
குறித்திடுசாதக	6
குறைவிலொன்ப	312
குறைவினேத்திரா	200

கூ

செய்யுள்.	பக்கம்.
கூடமாளிகை	234
கூடியவெட்டா	303
கூறறிமதிசே	155
கூறியதோரிரவி	96
கூறியபுதனுமேழா	206
கூறியலக்கினுதி	205
கூறியலாபாதி	211
கூறியவியத்திற்கா	319
கூறியவிரண்டி	397
கூறியவிரவி	355
கூறியவேழாமா	259
கூறுங்கடக	273
கூறுஞ்சன்மாதி	228
கூறுதண்டு	410
கூறுதனுராசி	88
கூறுபலனைக்	370
கூறுமாருமிடத்திற்	152
கூறுமேட	409
கூறும்ரெண்டா	215
கூறும்லக்கின	354

கே

செய்யுள்.	பக்கம்.
கேடறுபுத்திர	244
கேதுவிலிராகு	388

செய்யுள். பக்கம்.

கேந்திரத்தானத் 179
கேள்சகடு 408

கை

கையாதவுரை 56

கொ

கொடியகதிராதவன் 232
கொடியபாம்புனுட 196
கொடியனுங்காரிக் 105
கொடியிடையாய் 265
கொடியேகுரு 274
கொண்டதோர் 11
கொண்டுதமிழ் 5
கொள்ளுநற்களத்தி 270
கொள்ளுநற்காரி 260
கொள்ளுமாங்கிரக 345
கொள்ளுமிரண்டா 321
கொள்ளும்பாவ 198
கொள்ளும்ரச 52
கொள்ளும்லாபாதி 271

கோ

கோணமூன்றிற் 402
கோலலாபக் 320
கோலினிற்கரிய 253
கோலேலக்கினமா 146
கோள்களின் 369

ச

சசிவாகனுதி 223
சதியுறுகேது 389
சத்தமவட்டமாதி 268
சந்திரலக்கின 110
சந்திரனிருந்தவீடு 111
சந்திரன்சனி 21
சந்திரன்செவ் 139
சந்திரன்பாவராசி 187
சந்திரன் றன்னிலே 374
சந்திரன் றன்னிற் 376
சரமதிற்சரங் 278
சவுரிக்கேழிடத் 189
சற்குணஞ்சேர் 336
சனிகுசற்கு 229
சனியலாதறுவர் 205
சனியினிலிரவி 401
சனியின் றிசைக் 372

சா

சாதகவாரி 7
சாதககேதிலிந்து 388
சாசகநற்பலன் 6
சாதகவாரிதி 7
சாதகன்லக்கின 209
சாதகலக்கினத்தாதி 254
சாதமுறுங்காலேயி 256
சாதிலக்கினுதி 176
சாமேவியமாறெட் 297
சாரமுறுஞ் 224
சாரவெட்டிற் 337
சாரும்பத்தாமதிப 214
சாலமதிதனக் 215
சாலவேவெள்ளி 391
சாற்றிடுமின்னர் 304
சாற்றுமேர்துவா 291
சாற்றியபிதுர் 15
சாற்றியவரச 365
சாற்றுந்தனுமீன் 350
சாற்றுமகசிரம் 410
சாற்றுமதிசன்மாதி 197

சி

சிங்கமதிமுத் 102
சிங்கமேநேத்திர 201
சித்தப்பிரமை 393
சிந்துவாழ்மகா 92
சிந்தைகாரி 185
சிறந்தமதியையுஞ் 238
சிறந்திடும்புகரிற் 390
சிறுவனுதித்த 47

சீ

சீரார்திசாபலனே 393
சீர்பெறுகோளன் 64
சீர்பெறுஞ்சன்ம 9
சீலலக்கினுதிபதி 163
சீவிதமார்சனி 362
சீவித்திடு 329

சு

சுகந்தருஞ் 192
சுக்கிரனுன்காதி 224
சுக்கிரனிற்கிற் 110
சுக்கிரனேத்திராதி 200
சுரவேசென்மங் 169

சூ

சூரனுங்காலமிர்த்தி 280
சூரியன்குறைத்த 396
சூரியன் றனிலே 373
சூரியன் றிசை 368
சூழும்செம்பட்டு 319

செ

செங்கதிரிருக்குஞ் 239
செங்கதிருறுநட் 186
செஞ்சொற்சாது 55
செப்பரியதோர் 39
செப்பிடுமேடம் 35
செப்பியதிரிகோண 148
செப்பியதோர்பல 7
செப்பியதோர்சாபி 357
செப்பியராசி 31
செப்புதிதி 119
செப்பும்லக்கின 167
செப்புவல 411
செயமேமேஷம் 172
செயலாருடலே 182
செய்கருமம் 51
செய்யகன்மாதி 314
செய்யகும்பச் 89
செய்யசந்திரன் 312
செய்யசனியங்கி 360
செய்யதொரு 249
செய்யபத்தாதி 362
செய்யபுதன் 195
செய்யலக்கி 128

செய்யுள்.	பக்கம்.
செய்யவன் றனிலே	378
செய்யுமட்டமத்திற்	42
செய்யும்பரிதி	50
செய்யும்புந்தி	17
செல்வந்தரு	210
செவ்வாயில்ராகோ	377
செறியுமிரவி	231
சென்மதாரகைக்கா	290
சென்மாதிபதி	208
சே	
சேதமைந்திற்	251
சேயினிலிரவி	398
சேயுதிக்குமனே	36
சேய்க்குப்பன்	188
சேய்க்கேழு	408
சேய்சனிபுதன்	21
சேருஞ்சன்ம	181
சேருஞ்சுக்கிர	214
சேருஞ்சுங்கன்	201
சேருஞ்செவ்வாய்	219
சேருதயலக்	336
சேருமொன்பா	310
சொ	
சொல்லார்மேட	231
சொல்லியகன்னி	263
சொல்லியசென்ம	148
சொல்லிரவிக்குரு	20
சொல்லியரவிக்கு	33
சொல்லியவாறுமிட	255
சொல்லியவித்தை	10
சொல்லுங்கன்னி	87
சொல்லுங்குசன்	218
சொல்லுஞ்சன்மா	302
சொல்லுஞ்சென்ம	162
சொல்லும்நவாங்கி	140
சொல்லுநாலாங்	410
சொல்லுநான்கொ	233
சொல்லுபுதன்	38
சொல்லுமாசா	65
சொல்லுமாறெட்டி	299
சொல்லுமிரண்டா	250
சொல்லுமிரண்டிற்	216
சொல்முகத்தின்	58
சொல்லுமூன்று	137
சொல்லுமேடந்	32
சொல்லுமேழா	259
சொல்லும்பலனேத்	202
சொல்லும்விசால	138
சோ	
சோகம்பயமிலங்	349
சோதிரவியம்	203
சோதிலக்கினத்	201
சோமனூர்தனக்	140
சோமனுறிற்பன்	184
சோமனுக்காறேழ்	142
த	
தக்கதனுமீன்	333
தக்கதோர்கல்வி	61
தக்கரண்டா	351
தக்காரசதத்தில்	117
தக்கரிஷபத்தின்	213
தங்கியநண்டி	93
தத்தைமார்க்கினி	61
தந்தலக்கினத்	348
தந்தைப்பதியிற்	305
தப்பாதாறுமதி	234
தப்பாவில்லே	274
தரிக்குஞ்சன்ம	181
தருஞ்சன்மாதி	277
தவமாஞ்சன்மத்	177
தள்ளுநண்டதிற்	406
தனக்குமோரெட்	284
தனக்கோடிமாதே	69
தனஞ்சேரும்வதை	212
தனபதிபாக்கியத்	179
தனமார்குருசுக்	340
தனிலேசன்ம	297
தா	
தாகமுடனேழைந்	330
தாக்குதொகை	405
தாட்டிகன்	59
தாமேசன்மஞ்	183
தாரகாரகனு	260
தார்செறிமகர	199
தானசபதப	4
தானருகேயிருந்த	37
தானமாஞ்சென்ம	235
தானமாமைந்தா	363
தானமெனுமாறு	147
தானமெனும்லக்	344
தானுஞ்சென்ம	250
தானுறுமுணவிற்	78
தானுறுமேடத்	291
தானுறும்பலன்	174
தான்சமுதாயமுப்	404
தி	
திக்குப்பலமாவது	361
திக்கெனவேழோன்	261
திங்களோடரவு	22
திடமாஞ்சென்ம	161
திடமிகுமிராச	113
திடமுறுமாறுமாதி	253
திட்டமுடனேசனி	203
திண்ணியசன்மத்	354
திரசராசியிற்	38
திரமிகுபாவி	113
திரமுறுமொன்பா	315
திரலாபாதி	317
திரிசெவ்வாயிரு	331
திருந்தியசொற்	54
திருந்தியபுகரில்	390
திருவளர்மதி	266
திருவனையமடவார்	325
திருவேயிரண்டா	161
தீ	
தீதறுஞ்சென்ம	193
தீதெனும்வியமா	289
தீர்க்கமாம்வேசை	113
தீர்க்கமேழிற்சனி	338
தீர்ந்துகுற்றமில்லா	111

செய்யுள்.	பக்கம்.
து	
துரையாஞ்சனிக்கு	145
துலங்கும்பாக்கியா	175
துலங்குமூன்றுமிட	218
துச்சேட்டைபீடை	393
துன்பமேயில்லா	290
தூ	
தூரமுறும்பன்னி	330
தெ	
தெரிந்துகாரியுங்	346
தெரிந்துதானெழுத	77
தெரிவைக்குந்துன்ப	36
தே	
தேசக்குருவுக்	172
தேசார்மனிதலக்கி	198
தேசுறுபத்தாமதி	316
தேடும்லாபன்	165
தேயுமதிலக்கின	41
தேரும்வயதினளவு	276
தேவர்களமுதசந்தி	193
தேன்மொழிகலக	84
தொ	
தொட்டநற்குணவா	81
தோ	
தோன்றுஞ்சன்மத்	195
ந	
நடக்குந்தனபாக்	183
நடத்தும்பத்துக்	164
நடிக்குஞ்சன்ம	274
நண்ணுஞ்சென்ம	210
நண்புறுமதியிற்	375
நலஞ்சிறந்த	206
நயமுறுசேயி	378
நலிவுசெய்யட்ட	45
நல்கார்சனி	232
நல்லசனியங்கிச	199
நல்லசனிவீடிரண்டு	334
நல்லதோரைந்தா	248
நல்லதோர்கன்னி	144
நல்லவர்பாரா	249
நவ்விவிழியாய்	121
நற்கதிர்தன்னிற்	374
நற்புதன்றனிலே	386
நற்றவக்குரு	405
நனிதிரயமுதற்	125
நன்கதிர்சனி	373
நன்றிசெய்	376
நன்றிசேர்மதி	387
நன்றிசேர்புத	375
நா	
நாசமிலாக்	86
நாடியகேந்	157
நாடியசேயிற்	378
நாடியமேட	100
நாடொறுங்கோபி	83
நாலாஞ்சன்ம	302
நாலாஞ்செவ்வாய்	303
நாலாமிடத்திறுதி	235
நாலிடத்ததிபன்	225
நாலிடத்ததி	187
நாலிரண்டேழிடத்	229
நாலேசோமற்	299
நாளினிற்சன்ம	281
நாளுஞ்செவ்வாய்	297
நாளெனும்வியமா	289
நி	
நிச்சயக்கிரக	158
நிச்சமாங்காரி	222
நிச்சமாய்ச்சன்	194
நிச்சவெட்டாறு	404
நித்தநீராடி	63
நிலத்திறுன்கா	232
நிலவினிற்கேது	376
நிறைந்தபெண்ணும்	36
நிறைமதியுந்	13
நிறையுமிரண்டா	182
நிற்கின்றவைந்தே	28
நிற்குமோரிடபஞ்	91
நின்றதோர்குருவி	382
நின்றிடுமூன்று	10
நின்றிரண்டேழா	259
நீ	
நீங்கருந்தேளவம்	106
நீசத்தானத்தி	188
நீண்டமகரச்	89
நீரதிகதாக	53
நீருலவுபுவி	1
நு	
நுதலுங்கடகம்	293
நெ	
நெறிபெருங்கரும	61
நே	
நேத்திரத்தானத்தா	200
நேயரெண்டா	351
நேரிரண்டாங்கா	408
நேருற்றபுத	386
நோ	
நோயுமாறெட்டா	346
ப	
பகருமந்தனுக்கு	144
பகருலக்கின	192
பகலவன்புகரோ	23
பங்கமில்விய	235
பங்கினிற்புந்தி	383
பங்குபாதன்	272
படிதருஞ்செவ்	285

செய்யுள்.	பக்கம்.
படிமிசைசனி	383
படைத்தவொன்ப	213
பண்டிதனோடு	24
பண்டிதன்பொன்	23
பண்ணியதோர்	394
பண்ணுஞ்சன்ம	42
பண்ணும்லக்கி	188
பண்பாறதிபன்	296
பண்புடன்புந்தி	109
பதமுளனீதி	76
பதிசேரொன்பா	178
பதிசேர்பாக்கி	177
பதியாமரசன்	173
பதினொன்றில்	404
பத்தாகுமதிபதியை	362
பத்தாமிடத்தி	311
பத்தியில்லாமல்	62
பத்துநான்கதிபன்	234
பத்துமூன்றதிபன்	342
பரவியகுருவிற்	381
பரவியசனியிற்	384
பரவுசாத்திக	116
பரவுதிரேக்காண	125
பரவுவாகனாதி	224
பரிதிக்கோரிரண்	188
பரிதிசனியுடன்	348
பரிதியின்கிழமை	238
பரிந்தகும்பலக்	108
பரிந்திடும்புத	385
பரிவாகச்சனி	834
பரிவுடன்பாக்	223
பரிவுளகேது	389
பலங்களுரைக்கும்	339
பலமாம்பத்திற்கரு	174
பலமானசரீரவான்	57
பலரும்பணி	328
பலர்புகழுஞ்	226
பல்லவற்கு	58
பலனிலாச்சனி	384
பலன்றருவாகனாதி	226
பலிக்குமேடமிட	315
பனிமகன்சுங்க	23
பன்னியபுதனிற்	386
பன்னிரண்டாமதி	367
பன்னிரண்டிலிரண்	230

செய்யுள்.	பக்கம்.
பனிரெண்டுராசி	178
பன்னிருராசி	85
பா	
பாக்கியஞ்சேர்	310
பாக்கியத்திறையுங்	178
பாங்கதாகுமூன்று	211
பாங்குளபொன்	382
பாரியவிராகின்	370
பாரிலாபாதி	170
பாரிலுறுஞ்சன்	236
பாரினிலைந்தாமதிப	245
பாரின்மந்தன்	27
பாரெலாஞ்சசி	26
பார்க்கில்லக்	134
பார்செறிசசி	352
பாலவெள்ளை	47
பாலர்பிறந்திறு	245
பாவத்திற்கண்ட	392
பாவமங்கியதேச	14
பாவமற்றிடு	143
பாவர்கள்சன்மதி	190
பாவிமீனங்	205
பாவியாஞ்சனி	262
பானுதிசைக்	370
பானுபுதல்வன்	299
பி	
பிணிகொளாறுமதி	346
பிணியாறேழிற்	47
பித்தஞ்சயரோக	394
பிரக்கினைசேர்	207
பிரபலனாகிய	99
பிரியமுடனொன்	307
பிரியமுடன்பிறை	308
பிளவுபட்டிடும்	356
பிள்ளைமதிவெள்ளி	27
பிள்ளையனுஷ	162
பீ	
பீடிலைந்தாமதிபனு	244
பீடெயரும்லக்கினத்	347

செய்யுள்.	பக்கம்.
பு	
புகரினிலிரவி	400
புகலுமேழாதி	262
புகலுவர்பூராட	120
புகல்சனனகாலை	131
புகழும்வெள்ளியும்	323
புண்ணியபுகரிற்	390
புதல்வர்காரகன்	250
புத்தியின்பலன்	391
புத்திரத்தாதி	241
புத்திரத்தானத்	242
புத்திரனேழா	251
புந்திக்கைந்	396
புந்திதிசைக்கு	371
புந்தியிலிரவி	379
புந்தியிற்பொன்	387
புந்திவீட்டினிற்	189
புந்தியுநான்காதிப	230
புரக்குமேகன்னி	156
புரக்கும்புதனும்	145
புரக்கும்வாயு	138
புரிகுசன்சனி	313
புரியுமீரைந்தா	313
புருடக்கிரகங்	339
புலவுறும்படை	12
பூ	
பூசக்ரகுடைதந்தா	223
பூசமாதங்குறை	107
பூரட்டாதிபொ	62
பூராடமுற்காலும்	51
பூரியகேதில்	387
பூவையேலக்கினாதி	342
பெ	
பெண்கொளுங்	264
பெண்ணிசைந்திடு	261
பெரிதுளகிழமை	29
பெரியதோர்கலக	73
பெருக்குஞ்சன்மா	344
பெருமைசெறி	45
பெருமைசெறியா	255

செய்யுள்.	பக்கம்.
பெருமைமனன்று	350
பெறுந்திரிகோணங்	278
பெற்றிடுந்தந்தை	12
பெற்றிடுதீரன்	75
பே	
பேசியவிரண்டா	265
பேசுஞ்சன்மஞ்	199
பேசுமொட்டொன்	307
பேசும்பெண்புருஷ	28
பேசும்லக்கினஞ்சசி	198
பேசும்லக்கினமீன	198
பொ	
பொய்புரைசொல்வ	53
பொருந்தியகுரு	381
பொருந்திவெய்யோ	168
பொருந்துசிங்கத்	253
பொருளழகுள்ள	66
பொருள்செறி	212
பொன்புதனிரண்	205
பொன்னவன்பதி	396
பொன்ணினிலிரவி	400
பொன்னும்புதனும்	16
போ	
போகமாமைந்தா	247
போகிடுங்காரி	303
போகுங்களத்	271
போந்தசெறி	320
போமேயாரு	48
போலுந்தேளிந்தை	94
போற்றியசெங்	19
போற்றுபுதனிரு	332
போற்றும்லக்கின	238
ம	
மங்களனூர்தன்றி	371
மடிந்ததேய்பிறை	356
மட்டாரும்	411
மண்டியநித்திரை	60
மதமுறுசனி	384
மதிதனிற்காரி	375
மதியினிலிரவி	397
மந்தனுமிருபாம்	365
மரணஞ்சன்ம	298
மரணமறியும்வகை	303
மரணமார்கண்ட	283
மரணமார்வகையே	286
மரணமைந்திற்	50
மரியாதியுடனிரண்	132
மருவியகுருவில்	382
மருவியகுருவிற்	381
மருவியசேயிற்	377
மருவியராகிற்	380
மருவியபத்திற்	287
மருவியபுகரிற்	390
மருவியபொன்னி	381
மருவுஞ்சன்ம	240
மருவெட்டாதி	343
மறுவிலாச்செங்	195
மறையவன்பாந்த	343
மறையவன்லக்கி	82
மன்னர்மறையோர்	394
மன்னியசன்மமுன்	149
மன்னியரெண்டா	228
மன்னியலக்கினம்	157
மன்னியவிராகில்	380
மன்னுபத்தாதி	170
மா	
மாகஞ்சுரு	295
மாட்டினிற்கிறை	263
மாதங்கக்குரு	383
மாதவமேஷ	284
மாதாபதியிற்	231
மாதுகேண்மாலா	153
மாதுகேள்வியாதி	11
மாதுலமன்னனோடு	205
மாதெனுங்கன்னி	104
மாதேகன்னி	299
மாதேகேடன்ம	149
மாதேநான்காமாதி	168
மாயுஞ்சசியுந்தீ	343
மாய்வியத்தனும்	320
மாரகத்தின்றிசை	368
மார்கழிபூரணை	101
மாலாய்நாலாமிடந்	286
மாலாயரசன்	345
மாலேகன்னி	293
மானிடருக்கயன்	278
மானேகேள்குதி	44
மானேசுங்கன்	340
மானேபிதுர்	306
மானேமிதுன	292
மானேயிரண்டு	402
மானேலக்கினுதி	344
மி	
மின்னியதனமும்	70
மின்னுகலைநிறைந்த	27
மீ	
மீதிலைந்தாதி	246
மீயிரண்டோ	409
மீனமேடம்கன்னி	356
மு	
முந்தியசேயிற்	377
முழங்கியசேயிற்	,,
முனிவுறுசனி	384
முன்பறுசனி	385
முன்புறுபுகரின்	390
முன்னமேசனி	385
மூ	
மூலமாஞ்சிங்க	91
மூன்றுமதிபதியு	239
மூன்றுமிடத்திற்	221
மூன்றும்பின்னுதய	243
மூன்றொன்றுமதி	342
மே	
மெய்ந்நெடியன்	60
மெல்லியரிடத்திற்	63

செய்யுள்.	பக்கம்.
மே	
மேடத்திற்காரி	90
மேடந்தனுமீனம்	411
மேதகுநான்கா	215
மேதையேநட்பு	22
மேயலாபாதியுமே	309
மேயவைந்தாமதி	175
மேலாங்கிரக	182
மேலாஞ்சன்மங்	301
மேலாம்பாக்கிய	170
மேலேபாக்கியாதி	174
மேவியகளத்திராதி	269
மேவியலக்கின	304
மேவுங்குடும்பங்	181
மேவுமேழொன்ப	157
மேவுமொன்பா	184
மை	
மைந்தர்தானங்கள்	243
மோ	
மொழிகதிர்சனி	287
மொழிசுருதியாகம	4
மொழிந்திடுஞ்சிங்க	150
மொழிந்திடும்பல	13
யோ	
யோகஞ்சுபமாம்	159
யோகமாங்கவுள	134
யோகமாதியந்த	168
யோகமாமிலக்கி	149
யோகமூன்றுதி	171
ர	
ரண்டமாதிதான்	215
ரண்டினிற்கதிபன்	180
ல	
லக்கினத்ததிபனே	200
லக்கினத்திரவிநிற்க	109
லக்கினந்தனக்கேட்	282
லக்கினந்தனக்கேழ்	271
லக்கினந்தேண்மூன்	41
லக்கினாதிபதிக்கு	242
வ	
வகுத்திடும்வார	29
வகையிலான்காமி	81
வசமுடனெட்டிற்	287
வசமேழெட்டொன்	183
வசியமைந்திற்குரு	178
வடிவிலார்சிரத்	127
வடிவுடன்கர்க்கடக	141
வடிவுளதகரிற்	190
வடிவுளவிராகிற்	379
வட்டமாமதியில்	376
வஞ்சமற்றபுத	139
வஞ்சனைநாலினி	234
வஞ்சியேசனி	364
வஞ்சியேபத்ததி	321
வஞ்சியேயொற்றை	39
வண்மையாம்புகரி	389
வந்தலக்கினம்	270
வந்தவாறுமதிபதி	346
வந்திடுமிராகிற்	379
வந்திடும்புத்திமான்	80
வயதாறெட்டுமேன்	167
வயதேசென்மங்	298
வயதேசோமன்	301
வரிசைபெறு	257
வருமேதனுசுகுட	261
வருச்சிகேந்திரத்	140
வருஞ்சன்மலக்	210
வருஞ்சூரியற்கு	324
வருகாவிடத்தி	291
வருபலன்வளர்	404
வருமேசென்ம	160
வருமேசென்மஞ்ச	349
வருமைதனுசுகுடம்	216
வரும்லாபாதிபன்	318
வலம்புரிபுதனிற்	385
வலியதாமதவேளை	116
வல்லசன்மந்தனக்	297
வல்லதிரண்டில்	269
வல்லதோர்வியத்	320
வல்லமதியமிவன்	339
வல்லமிதுனலக்	300
வல்லரெண்டிடத்	206
வல்லியிரண்டிற்	350
வல்லோர்சென்மச்	163
வழங்கியவைந்தா	248
வழங்குநான்கா	234
வழங்கும்லக்கின	235
வழுத்தியசுக்கிரன்	363
வழுத்தியசெங்கதி	129
வழுத்தியபன்னி	321
வளருஞ்சன்மாதி	245
வன்புறுதாமதன்	57
வன்புறுமிரண்டா	322
வா	
வாகனாதிமருவு	225
வாகனாதியுங்கோண	179
வாக்குத்தானாதி	204
வாசமாம்புத	386
வாசமுறுமூன்று	39
வாசியுடையவன்	54
வாதிரண்டாமைக்	167
வாமசூரியன்கிழக்கு	261
வாமமுதற்பலசமய	3
வாரணப்புதனிற்	386
வாரார்முலையாய்	48
வாருலவுமுலையாய்	133
வாருறைமுலையாய்	285
வாரெட்டாதி	343
வாரேறுமுலையாய்	208
வார்சடையார்முடி	245
வார்த்தையோகிலே	114
வார்மைசேர்வியத்	319
வாழுநான்கிற்சுக்	300
வாழுமகாமுத	273
வாழ்கும்பச்சசி	95
வாழ்மீனலக்கின	243
வான்மிதுனசசி	86
வான்றண்டலோனை	93

செய்யுள்.	பக்கம்.
வி	
விடுமிலக்கினமீதிற்	166
விஞ்சுபுந்திகுரு	142
வித்தைசெயம்புத்தி	393
வித்தைலாபத்ததி	173
வியமாறெட்டதிப	317
விரவியதோர்	191
விரும்புசுக்கிரனும்	314
விழிமீனதனுவிற்	91
விழுமியகதிர்சன்ம	345
விளங்கியதோர்	8
விளம்பியமீனச்	90
விளம்புமாறெட்டும்	289
விளம்புமேழாமிடத்	241
விளையும்புதனும்	135
விற்பனமடந்தை	94
வீ	
வீரமுறுங்கதிரிருந்த	126
வெ	
வெண்மதிதனிலே	376
வெய்யவனுலெட்	122
வெள்ளிசேயேழி	258
வெள்ளிமகாதிசை	371
வெள்ளியிற்புந்தி	391
வெள்ளியும்புதனும்	21
வே	
வேண்டிடுசெவ்வா	316
வேண்டிடுஞ்சிங்க	87
வேண்டிடுநாலாமா	237
வேண்டிடுநான்கா	283
வேண்டிடும்பாவக்	335
வேண்டியதோரோ	309
வேண்டியமேடம்	36
வேண்டுகுருவங்கி	359
வேதனுங்குருசுக்	355
வேந்தன்மகாதிசை	371
வேய்த்தனுபுருட	21
வேல்விழிமாதே	204
வேளைகளறிய	116
வை	
வைத்தபலபூத	2
வையகமென்	331

சாதகாலங்கார செய்யுளகராதி

முற்றிற்று.

அயக்காந்த திராவகம்.

மித்திரர்களே! இந்த அபூர்வ மருந்தானது அநேக கொடிய வியாதிகளை ஆச்சரியமாய் கண்டிக்கக்கூடியது. இதை அநேக ஆயிரக்கணக்கான ஜனங்கள் உபயோகித்துச் சந்தோஷிக்கின்றனர். வியாதியினாலாவது கெட்ட சகவாசத்தினாலாவது இளைத்துப்போயிருக்கும் தேகத்தைப் புஷ்டியாக்கி பலவிர்த்திதருவதில் இதுநிகரற்ற மருந்தாகும். ஆங்கிலமுறைப்படி தயாரிக்கப்பட்ட அருமையான மருந்து. இதை உட்கொண்ட இரண்டேவேளையில் ஆச்சரியமான சுகத்தையடைவார்கள். இத்திராவகத்தால் தீரும் வியாதிகளில் முக்கியமான சிலவற்றை இங்கே குறிப்பிடுகிறோம்.

நரைத்தமயிரைக் கறுப்பாக்கும் உஷ்ணத்தினாலாவது புழுவெட்டினாலாவது மயிர் உதிர்வதை நிறுத்தும் நீர்வியாதிகள் தீரும் கண்ணெரிச்சல் கைகால்காந்தல் இவைதீரும் முகவசீகரத்தை உண்டாக்கும் தேக அசதியையோட்டும் ஜீரணசக்தியையும் நல்ல பசியையும் உண்டாக்கும் மனதை அதிகஉற்சாகப்படுத்தும் நரம்புகளுக்கு அதிகவலுவைத்தரும் தேகத்தில் நல்ல ரத்தத்தைச் சுரப்பிக்கும் க்ஷயரோகத்தைத்தீர்க்கும் வாத பித்த சிலேத்துமத்தாலுண்டாகும் ரோகங்களை நிவர்த்திக்கும் சத்ததாதுகளுக்கும் நல்ல பலத்தைத் தரும் மூலச்சூடு மூலவாய்வு மலச்சிக்கல் இவைகள்தீரும்.

இந்தச் சஞ்சீவியை நல்லபோஜனத்துடன் 20-நாள் சாப்பிட்டால் இணையில்லாத ஆனந்தத்தைத்தரும். இழந்துபோன தேகதிடத்தைப் பழையபடி யடைவதற்கு இதைவிட வேறு மருந்தே கிடையாது 40-நாள்மருந்து உட்கொள்ளும்பக்ஷத்தில் வியாதி என்பதே அம்மனிதனின் நிழலைக்கூட அணுகாது தேகம் வஜ்ஜிரமே யாகும் இதற்கு யாதொரு பத்தியமுங் கிடையாது.

இந்த திராவகத்தை உட்கொள்ளவேண்டிய முறையும் இதைப்பற்றிய விவரங்கள் பார்சலோடு வைத்துவரும்.

அரைமண்டலம் 20-நாளைய மருந்தின் விலை ரூ. 1-4-0
டஜன் 1-க்கு ரூபா. 12-0-0
ஒருமண்டலம் 40-நாளைய மருந்தின் விலை ரூ. 2-0-0
டஜன் 1-க்கு ரூபா. 21-0-0.

SARASWATI

பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்,
பிரப்பூர்பாரெக்ஸ் போஸ்டு, மதராஸ்.